
சக்தி வழிபாடு



ரா. சீனிவாசன். எம். ஏ.,

சக்தி வழிபாடு

இரா. சீனிவாசன், எம். ஏ.
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக் கழகம்

வெளியீட்டாளர்:
ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்
கோர்ட் ரோடு,
நாகர்கோவில் — 629001.

SAKTHI VAZHIPADU

(TAMIL)

By **R. SRINIVASAN**, M.A.
Department of Tamil
University of Kerala
Kariavattom — 695581.
Trivandrum.

First Published: 1975
All rights reserved.

Publishers:
Jayakumari Stores,
Court Road,
Nagercoil.

First Edition: 1975
Price: ***Rs*** **20** **$ 12-00** **£ 4-00**

Printed at:
Star Press, Palayamkottai, Tirunelveli - 2.

காணிக்கை

தீந்தமிழின் பணிசெய்யத் தமிழரசார்
சிரந்தாழ்த்திக் கரங்கூப்பி அழைத்த நிலவு!
வந்திருந்து கேரளத்துச் சேரமண்ணில்
வளமார் தமிழை வளர்த்த ஐய!
செந்தமிழைக் கற்கஇங்கு வந்தஎன்னைச்
சிராட்டிப் பாராட்டிச் செழிக்க வைத்தாய்!
அந்தநன்றி மறவாமல் அகமகிழ்ந்து
அம்மை வழிபாட்டு நூலிதனைப் படைக்கலுற்றேன்.

இரா. சீனிவாசன்

உண்மை உழைப்பு உயர்வு



டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார், எம். ஏ., பி. எச்.டி.
பேராசிரியர், முதன்மை அலுவல் ஆட்சியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-20.

பதிப்புரை

K. Sivasubramania Pillai,
JAYAKUMARI STORES
COURT ROAD, NAGERCOIL-1. *Date: 23-12-1975.*

'சக்தி வழிபாடு' என்னும் இவ்வரிய ஆய்வு நூலினை வெளியிடுவதில் பெருமையும் மகிழ்வும் எய்துகின்றேன். இந்நூல் அறிஞர் களின் ஆராய்ச்சிக்கு மேலும் வழிவகுப்பதோடு வழிபடுவோருக்குப் பக்தி உணர்வைத் தந்து நிற்கும் சிறப்பைப் பெற்றுத் திகழ்கின்றது. ஆசிரியர் **இரா. சீனிவாசன்** அவர்களின் உழைப்பும் புலமையும் இந்நூலால் வெளிக் கொணரப்படுகின்றன. அரிய செய்திகள் பலவற்றை இந்நூலில் கூறியுள்ளார். தமிழன் பர் ஒவ்வொருவரும் இப்பெருநூலைப் படித்தல் அவசியம். இப்பெருநூலைத் தமிழறிஞர் பெரு மக்கள் ஆதரித்து இது போன்ற ஆய்வுநூற் கள் பல வெளியிட எமக்கு ஊக்கமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

K. சிவசுப்பிரமணிய பிள்ளை

அணிந்துரை

R. Nagaswamy, M.A.,
Director of Archaeology
Govt. of Tamilnadu

3/4, South Bank Rd.,
MADRAS-600028
Phone: 73325

கேரளப் பல்கலைக் கழக முதுகலைத் தேர்வின் ஒரு பகுதியாக **சக்தி வழிபாடு** என்ற தலைப்பில் **இரா. சீனிவாசன்** அவர்கள் தொகுத்துள்ள இந்நூல் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் ஆக்கப்பட்டுள்ளது. அன்னை வழிபாட்டின் தோற்றத்திலிருந்து சக்தி தத்துவம் எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்து எவ்வளவு வேறு பாடுகளுடன் மலர்ந்துள்ளது என்பதை இந்நூலில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். பல்வேறு தலைப்புக் களும் பாங்குறத் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்புக்கும் ஏற்ப செய்திகளை இவர் திரட்டியுள்ளது பிரமிப்பை ஊட்டுகிறது. கடுமையான உழைப்பை ஒவ் வொரு பகுதியிலும் காண்கிறோம். இவ்வளவு உழைப்பு முதுகலைப் படிக்கும் ஒரு மாணவரிடம் இருக்குமே ஆனால், நமது உயர்நிலைக் கல்வி உண்மையிலேயே உயர்நிலைக் கல்வியாகவே அமையும் என்றே என எண்ணத் தோன்று கிறது. உழைப்பால் உயரும் உன்னைக் கல்வியாளர் ஒருவர் தமிழுக்குக் கிடைத்துள்ளமைக்கு இது சான்று.

சங்க இலக்கியங்களில் சக்தி வழிபாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறார். கண்ணகி வழிபாடு, கொற்றவை வழிபாட்டுடன் தொடர்பு கொண்டுள்ளதைக் சுட்டிக் காட்டுகிறார்.

சக்தி வழிபாடு கேரளத்தில் மிகவும் சிறந்து விளங் கும் ஒன்று. பல்வேறு நிலைகளில் உள்ள மக்களும் அவரவர் களுக்கு ஏற்ப சக்தியை வழிபடும் முறையையும், மரபுகளை யும் தொகுத்துக் கூறியுள்ளது இந்நூலில் ஒரு சிறப்பாகும்.

அச்சில் வராத காளி நாடகம் போன்ற பல பாடல்களை இணைத்துள்ளது. இந்நூலை மேலும் சிறக்கச் செய்கிறது.

பரணி இலக்கியங்களில் தேவி வழிபாடு அமைந்துள்ள போக்கை நன்கு ஆய்ந்துள்ளார். பெரியபுராணம் அபிராமி அந்தாதி ஆகிய இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் சாஸனங்களிலும் உள்ள தேவி வழிபாட்டை எடுத்துரைத்துள்ளது நன்கு அமைந்துள்ளது. அண்மைக்கால கவிஞர்களில் ஒப்புயர்வற்ற புலவன் பாரதி, சக்தித் தத்துவத்தில் அவனுக்கிருந்த ஈடுபாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மக்களிடையே நாடோடிப் பாடல்களாக இன்றும் வாழ்ந்துவரும் பாடல்களில் உயிர்த் துடிப்புஉண்டு;உள்ளத்தைத் தொடும் அமைப்பு உண்டு; எளிமையும், தேர்மையும் உண்டு. இவற்றை எடுத்துக் கூறும் பாக்கள் பலப்பல. அவற்றை இவர் கொடுத்துள்ளது இந்நூலுக்கு ஒரு முழுமையை அளிக்கிறது. தமிழகத்தில் உள்ள தேவி கோயில்களை ஒரு விரிவான பட்டியலில் கொடுத்துள்ளது வரவேற்கத்தக்க அம்சம்.

சக்தி வழிபாட்டைப் பற்றி மொத்தத்தில் நன்கு எடுத்துரைக்கும் இந்நூலை ஆக்கிய மாணவரை தமிழகம் வரவேற்று, மேலும் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமே இல்லை.

சென்னை-28
4—12—'75.

இரா. நாகசாமி

மு. அருணாசலம் எம். ஏ.,
இயக்குநர்.

சென்னை - 28.
19—12—1975

தமிழ்-சமஸ்கிருதம் ஆராய்ச்சி நிறுவனம்.

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் கேரளப் பல்கலைக் கழகத்தில் தம்மிடம் முதுகலைப் பயிலும் தமிழ் மாணாக்கர் ஒவ்வொருவரையும் அவரவர் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பொருளை ஒரு நூலாக வெளியிடும்படி ஊக்கி வந்திருக்கிறார்கள். அந்த ஊக்கத்தினால் திரு. இரா. சீனிவாசன், தாம் மேற்கொண்ட பொருளை நன்கு ஆராய்ந்து சக்தி வழிபாடு என்ற இந்த நூலை இப் பொழுது எழுதியிருக்கிறார். இது அறுநூறுக்கும் மேற்பட்ட பக்கங்களுடைய பெரு நூலாக அமைந்திருக்கிறது. மூன்று பகுதிகளாக உள்ள இந்த நூலில், முதல் பகுதி, சக்தி வழிபாட்டைப் பல நிலைகளில் ஆய்கிறது; இரண்டாம் பகுதி, தமிழிலக்கியப் பாடல் வழியாக சக்தியின் நிலையை ஆய்கிறது. மூன்றும் பகுதி, தமிழ் நாட்டில் மாவட்டந்தோறும் உள்ள சிற்றூர்களில் அம்மன் பெயரில் காணப்படும் சிறு தெய்வக் கோயில்களையும் பூசகரையும் குறிப்பிடுவதோடு, சில தோத்திரப் பாடல்களையும் தொகுத்துத்தருகிறது. பல்கலைக் கழக மாணாக்கரொருவர் தம் படிப்புக் காலத்தில் இத்துணை விரிவாகிய பொருளை ஆராய்ந்து எடுத்துத் தந்துள்ள அருஞ்செயல் நமக்குப் பெரு வியப்பூட்டுகிறது. இதன் பொருட்டு அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

தமிழ் நாட்டில் அறுவகைச் சமயம் என்பது ஒரு மரபு. இது சிவவழிபாடு, சக்தி வழிபாடு, திருமால் வழிபாடு முருக வழிபாடு, கணபதி வழிபாடு, சூரிய வழிபாடு, எனப் படும். இவற்றுள் இறுதி இரண்டும், சிவாலயத்தில் செய்யப் பெறும் சில வழிபாட்டின் அங்கமாகச் சேர்ந்தே இன்று செய்யப் பெறுகின்றன; தனி நிலையில் இல்லை. முருக வழிபாடு கௌமாரம் எனப்படும். தனியான சிறப்புடைய

கோயில்கள் முருகனுக்கென்று பல இருந்தும், இது சிவ
வழிபாட்டின் அங்கமே, தனி முருகனை வழிபடும்போது
முருகனை ஒரு தேவதையாக வழிபடுவதில்லை. பரம்பொரு
ளின் வடிவமாக, பரம்பொருளாகவே வழிபடுகிறோம்.
கௌமார வழிபாட்டுக்கென்று பிற்கால நூல்கள் சில
செய்யப் பெற்றிருந்த போதிலும், இதற்கான ஆகம நூல்
குமார தந்திரம் என்பதொன்றே. சிவாலயங்களில் முருக
வழிபாடு, கணபதி வழிபாடு போல, சிவ வழிபாட்டின்
அங்கமாகி விட்டது.

சிவம் சக்தி விஷ்ணு மூவர் வழிபாட்டுக்காகவும்
தனியான கிரியா சாத்திரங்கள் (ஆகமங்கள்) வடமொழி
யில் உள்ளன. சிவ வழிபாட்டுக்குரிய நூல்கள் ஆகமம்
எனவும் சக்தி வழிபாட்டுக்குரிய நூல்கள் தந்திரம் எனவும்
விஷ்ணு வழிபாட்டுக்குரிய நூல்கள் தந்திரம் எனவும்
சொல்லப் பெறும். அபூர்வமாய் ஏனைய பெயர்களும்
வழங்குவதுண்டு. இந்த நூல்கள் அந்தந்த தெய்வத்தைப்
பரம்பொருளாகவே சொல்லும். தந்திரங்கள் சக்தியைப்
பரம்பொருளாகவே சொல்லும் சிலப்பதிகாரத்தில் காணப்
படும் கொற்றவை வணக்கம் இந்தப் பரம்பொருள் நிலை
யையே காட்டும். இன்று ஊர்கள் தோறும் காணப்படும்
காளி, பிடாரி, மாரி, திரௌபதி, இசக்கி, மோடி, ரேணுகா
அங்காளம்மை, செல்லியம்மன் முதலான சிறு தெய்வ வழி
பாட்டுக்கும் பரம் பொருளாகிய சக்தி வழிபாட்டுக்கும்
சம்பந்தமில்லை. சிறு தெய்வ வழிபாடு வெறும்
அச்சத்தால் விளைவது. பரம்பொருளாகிய சக்தி வழிபாடு
உண்மையான மெய்யுணர்வு காரணமாக விளைவது.
மேலை நாட்டார் பரம்பொருளென்ற கருத்தை உணர
மல், தாய்த் தெய்வமென்ற ஒரு தொடரைப் படைத்துக்
கொண்டிருக்கிறார்கள். அது பொருத்தமுடையதன்று.
சமய வழிபாடென்று கருதும்போது மெய்யுணர்வு நிலையில்
நின்றே பேசவேண்டும். அந்த நிலையில் தாய்த் தெய்வமும்
இல்லை. தகப்பன் தெய்வமுமில்லை. எந்தத் தெய்வமுமே
யில்லை பரம்பொருள் ஒன்றே உண்டு. அந்த பரம்பொருளை
இங்கு சக்தியெனப்படுகிறது. மேலை நாட்டாரைத் தழுவ

நாமும் தாய்த் தெய்வமென்று சொல்வது சரியாகாது. இக்கருத்துக்கள் வழிபாடு பற்றிப் பேசும்போது நம் நினைவி லிருக்க வேண்டும்.

இனி இந்த நூலில் ஆசிரியர் படிப்போருக்கு விருந் தாய் எண்ணற்ற செய்திகளைப் படைத்திருக்கிறார். இங்கு ஆராய்ச்சிக்கான பல செய்திகளுள்ளன, மலையாளத்தில் ஒரு நாட்டுப் பாடலில் காட்டப்படும் கண்ணகிக் குறிப்பு சிந்தித்தற்குரியது. தெய்யாட்டம் என்ற தலைப்பில் தரப் பட்டுள்ள ஒரு நீண்ட பாட்டும் சுவைத்தற்குரியது. இது ஒரு வகை அம்மானைப் பாட்டாகும். இலக்கியத் துறை யில் சக்தி வழிபாடு காணப்படும் இடங்கள் பலவற்றை ஆசிரியர் ஒன்பது தலைப்புகளில் ஆய்ந்திருக்கிறார். தமிழில் இங்குக் கூறப்பட்டன அன்றி, சிறப்பான சக்தி வழிபாட்டு நூல்களும் வேறு சில உள்ளன. அபிராமி அந்தாதியை இவர் போற்றிக் கூறுகிறார். இந்நூல் தனியான சாக்த நிலையைக் காட்டுவது. இதுபோலவே சங்கரர் நூலின் மொழி பெயர்ப்பாகிய தமிழ்ச் சௌந்தரிய லகரி, கலை ஞான தீபம், சௌந்தரியந்தாதி போன்ற நூல்களும் சிறப் பான சாக்தமாகிய சக்தி வழிபாட்டைக் காட்டும். இங்கு சக்தி என்பது பரம்பொருளே. இந்த நிலை அபூர்வம். அல்லாமல், தனித் தெய்வங்களாக வழிபடும் நிலையில் பல இலக்குமி தோத்திரங்களையும் சரசுவதி தோத்திரங்களையும் தமிழில் காண்கிறோம்.

இவ்வாறுக, சக்தி வழிபாடு என்ற பொருள் பல்வேறு பிரிவுகளில் வளர்ந்தும் விரிந்தும் செல்லும் தன்மை வங்காளத்தில் நாக வழிபாடு கூட ஒருவகையில் சக்தி வாய்ந்தது. வழிபாட்டின் விளைபுலமாக வளர்ந்திருக்கிறது. இவ்வகை வளர்ச்சிகளையும் மாறுபாடுகளையும் பல கோணங்களில் அறிந்து சுவைப்பதற்கு இந்நூல் நல்ல துணையாகும். திரு. இரா. சினிவாசனுடைய முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது.

மு. அருணாசலம்.

என்னுரை

கேரளப் பல்கலைக் கழகம் தமிழ் முதுகலைப் பட்டத் தேர்வின் ஒரு பகுதியாகச் செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரையே நூல் வடிவில் உங்களின் கரங்களில் தவழ்வது.

'சக்தி வழிபாடு' என்ற தலைப்பில் ஆய்வு செய்ய எனக்கு மன மகிழ்வுடன் இசைவு தந்து, அவ்வாய்வுக் கட்டுரையினை நூலாக உருவாக்க வேண்டுமென்று வித்திட்டு அப்பயிரை அன்பால் வளர்த்ததோடு, ஆய்வுக் கட்டுரையினை எழுதுங்கால் ஊக்கமும் ஆக்கமும் அளித்ததுடன் நூல்வடிவில் வெளிக்கொணர்வதன் பொருட்டுப் பல்வகைகளில் துணை நின்றவரும் உண்மை, உழைப்பு, உயர்வு என்ற மூன்றினையும் தன் வாழ்க்கையில் முக்கொள்கைகளாகக் கொண்டு தமிழ்க் கல்வித் துறையில் ஓய்வின்றி உழைத்து வருபவரும், பேரறிவுப் பெட்டகமாகவும் பார் புகழும் பண்பாளராகவும், என் ஞானத் தந்தையாகவும் திகழ்கின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியரும் முதன்மை அலுவல் ஆட்சியருமாகிய பெருமகனார் டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார். எம் ஏ., பி. எச். டி., அவர்கட்கு என் பணிவார்ந்த வணக்கத்தினையும் நன்றியினையும் உரித்தாக்குகிறேன்.

தம் பல்வேறு அலுவல்களிடையே என் வேண்டுகோளிற்கினையந்து அணிந்துரை நல்கி இந்நூலைச் சிறப்பித்தமைக்காகத் தொல்லியல் வல்லுநர் திரு. இரா. நாகசாமி, எம். ஏ., அவர்கட்கு என் மனங்கனிந்த நன்றி.

சைவ சமயக் கொள்கைகளை நன்கு கற்றுத் தேர்ந்தவரும் சைவ சமயத்தின் ஆணி வேராகவும் திகழ்கின்ற திரு. மு. அருணாசலம் எம். ஏ. அவர்கள் முகவுரை அளித்து இந்நூலின் தகுதியினை உயர்த்தியமைக்காக அவர்கட்கு என் அன்பு கலந்த நன்றி உரித்ததாகுக.

ஆய்வுக் கட்டுரை எழுதுங்கால் ஊக்கமும் ஆக்கமும் அளித்து ஆய்வுக் கட்டுரையினைத் திறம்பட எழுத அற வுறைகள் கூறிநின்ற தமிழ்த்துறைத் தலைவர் திரு. மா. இராய பெருமாள், எம். ஏ., எம். லிட். அவர்கட்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

ஆய்வுக் கட்டுரையின் ஆரம்பம் முதல் இறுதி வரை முடிநிலைக் கருத்துக்களை நல்கி, இவ்வாய்வு நூல் நன் முறை யில் அமையச் செம்மையுற என்னை ஆற்றுப் படுத்தி உத வியவரும், இளைஞர் நலன், தமிழ்ப்பணி என்ற இரண்டினை யும் தம்மிரு கண்களாகக் கருதி செயலாற்றி வருபவரும் என் உடன் பிறவா அண்ணனுமாகிய டாக்டர் கு. நாச்சி முத்து, எம். ஏ., பி. எச். டி. அவர்கட்கு என் நன்றியினை யாங்ஙனம் புலப்படுத்துவன்?

ஆய்வுக் கட்டுரை செம்மையுற அமைவதன் பொருட்டு ஆய்விற்குத் துணைபுரியும் நூற்களை நன்கு கற்குமாறு அறி வுறுத்தியும் ஆய்விற்குப் பல நற்கருத்துக்களை நல்கியும் அமைபவருமான சிவத்திரு சி. சத்தியமூர்த்தி எம். ஏ, பி. ஓ. எல். அவர்கள் தந்த அன்பையும் ஆதரவையும் எண்ணுங்கால் என் நெஞ்சமெல்லாம் நெகிழ்கின்றது.

'கேரளத்தில் சக்தி வழிபாடு' என்ற கட்டுரையை உரு வாக்க விழைந்த எனக்கு அக்கட்டுரை உருவாக்கத்திற்குப் பல்லாற்றானும் துணைபுரிந்த திரு. எம். உமாதாணு (சிவராசு பிள்ளை) அவர்கட்கு என் பணிவார்ந்த நன்றியும் வணக்க மும் உரித்து.

'தமிழகத்தில் அமைந்துள்ள சக்தி கோவில்கள்' என்ற பகுதியினை உருவாக்குவதற்குத் துணை புரிகின்ற வகையில் பல்வேறு அலுவல்கட்கிடையேயும் சிரமம் கருதாது தமிழக கோவில்கள் பற்றிய அறிக்கைகளைத் தலைமைச் செயலக நூலகத்திலிருந்து அவ்வப்பொழுது பெற்றுத் தந்த கேரள அரசுத் தலைமைச் செயலகத் துணைச் செயலர்களுள் ஒருவ ராக இலங்கும் திரு. எஸ். பெருமாள் பி. ஏ., அவர்களின் உதவி மறக்கற்பாலதன்று.

'பெரிய புராணத்தில் சக்தி' என்ற கட்டுரையின் உரு வாக்கத்திற்குத் துணை புரிகின்ற வகையில், பெரிய புரா ணத்தில் சக்தி பற்றிய குறிப்புக்கள் காணப்படும் இடங் களைத் தொகுத்து நல்கியதுடன், ஆசிரியரடைவு, பொரு ளடைவு அமைப்பதற்குத் துணை நின்றும் இந்நூல் செம்மை யுற அமைதல் வேண்டும் என்ற கருத்தினைத் தன்னுள்ளத் தில் கொண்டு செயல்பட்ட உடன் பயிலும் தோழி செல்வி அ. சங்கரி, எம். ஏ., அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றி யுடையேன்.

அறுநூறு பக்கத்திற்கு மேல் உள்ள ஆய்வு நூலை எழு துங்கால் ஏற்படும் இன்னல்களைக் கற்றறிந்த சான்றோர் நன்கு உணர்வர். எழுதுங்கால் ஏற்பட்ட இன்னல்களையும் பொருட்படுத்தாது எழுதி முடித்த எனக்கு மறுமுறை எடுத் தெழுத நேரம் இல்லை. அத்தகைய நிலையில் இரவு பகல் என்று பாராது எடுத்தெழுதும் பணியைச் செவ்வனே செய்து தந்த செல்வியர் உ. பூங்கோதை, அ. விஜயலட்சுமி, எஸ். ஜெயலட்சுமி, இரா. அமிர்தம் எம். ஏ., ஹீதா பெஸ்டஸ் பி. ஏ, ஆகிய அனைவர்க்கும் நன்றிகூறும் கடப்பாட்டுடை யேன்.

நூற்பொருளில் அறிவும் அச்சுப்படித் திருத்துக் கலை யில் தெளிவும் பெற்றுத் திகழும் திரு மா. நயினார், எம். ஏ. அவர்கள் இரவென்றும் பகலென்றும் பாராது, கண் துயி லாது, தம் நூலிற்கு ஆற்றுவது போன்று அச்சுப்படி திருத்து கின்ற பணியினைச் செவ்வனே செய்து முடித்ததை மறப் பேனாகில் செய்ந்நன்றி கொன்றவனாவேன்.

நூல் அழகுற அமையத் துணைபுரிந்ததோடு நூலிற்கு அட்டைப்படம் அமைத்துத் தந்த திரு. ப. பத்மனுபன் தம்பி, எம். ஏ., படத்தினை அழகுற வரைந்து அளித்த ஓவியர் திரு அண்டக்குலம், அச்சுக்கட்டை அழகுற அமைத்துத் தந்த பிரின்டார்ஸ் பிளாக்ஸ் உரிமையாளர் ஆகிய அனை வர்க்கும் நன்றியுடையேன்.

இந்நூல் நன்முறையில் அமைய வேண்டும் எனக் கண்ணுங் கருத்துமாக இருந்து அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்டார் அச்சக மேலாளர் ஜனுப் செ. மு. மு. ஜெய்லானி அவர்கட்கும் அன்புகொண்ட அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றி உரியவாகுக.

தாள் விலை சூருவழி வேகத்தில் சென்றுகொண்டிருக்கும் இச்சூழலில் ஒரு நூலை வெளியிடுவதென்பது எளிதன்று என்பதை நன்கு உணர்ந்தும் ஆய்வு நூலினை வெளியிடுவதில் தன்னை முதன் முதலாக இந்நூலின் வாயிலாக அறிமுகப்படுத்திக் கொள்பவரும், என்பால் பேரன்பு கொண்டு அமைபவருமான திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை அவர்கட்கு என் மனங்கனிந்த நன்றியினை, வெளிப்படுத்துவதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

என் முயற்சிகள் அனைத்திற்கும் தோன்றும் துணையாக இருந்தவரும் என் பெற்றோராகிய திரு. ரகு. ராமச்சந்திரன் திருமதி. செண்பகவல்லிராமச்சந்திரன் ஆகியோரின் திருவடிகளை வழுத்துகின்றேன்.

என்னைப் பொறுத்த வரையில் சக்தி வழிபாட்டினைப் பற்றிய ஆய்வில் இது தொடக்கமே ஒழிய முடிவன்று. இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அறிஞர் உலகம் ஏற்றுக் கொள்ளளவும் மறுக்கவும் செய்யும் என்பதால் இந்நூலைப் பயில்வோர், அடுத்த பதிப்பில் குற்றம் குறைகளைந்து வெளியிடுகின்றமைக்குத் துணைபுரிகின்ற வகையில் அவரவர் கருத்துக்களை எனக்கு அறிவிப்பீராகில் மிக்க நன்றியுடையவனாக அமைவேன்.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்,

அன்பன்

இரா. சீனிவாசன்.

நுழைவாயில்

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பயின்ற மாணவர்கள் சிவலிங்க வழிபாடு, விநாயகர் வழிபாடு, அனுமன் வழிபாடு ஆகியவற்றைச் செவ்வனே ஆய்வு செய்து நூல் வடிவில் அமைத்துள்ளமையைக் கண்ணுற்ற எனக்கு, அகில உலகமீன்ற தாய்த் தெய்வமாகிய சக்தி பற்றிய வழிபாட்டாராய்ச்சியை ஏன் இதுகாறும் எவரும் செய்யவில்லை என்ற எண்ணம் எழ, நாம் ஏன் செய்யக்கூடாது என்ற வினாவினையும் என்னுள் எழுப்பி, அதற்கு விடையிறுக்கும் வகையில் சக்தி வழிபாடு பற்றி நாம்தாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினை என் உள்ளத்தில் நிலை நிறுத்தினேன். சங்க இலக்கியங்கள் முதல் தற்காலக் கவிஞர்களாகத் திகழ்ந்த பாரதி, புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் வரை சக்தி ! சக்தி ! என்றவாருகத் தாய்த் தெய்வத்திற்குச் சிறப்பிடம் அளித்துள்ளதை இலக்கியங்களின் வாயிலாக உணர்ந்த நான், எவ்வாற்றானும் சக்தி வழிபாட்டினைப் பற்றிய ஆராய்ச்சியினைச் சக்தியின் அருளால்செய்து முடிக்க வேண்டும் என்ற கொள்கையினை என் உள்ளத்தில் விதைக்க, பேராசிரியர், டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார் அன்புப் பயிரிட்டு வளர்க்க, டாக்டர் கி. நாச்சிமுத்து, திரு. சி. சத்தியமூர்த்தி ஆகியோர் அப்பயிர் நன்குவளர்வதன் பொருட்டு எருவிட, அப்பயிர் வளர்ச்சியுற்று உங்கள் முன் பூத்துக் குலுக்கிக் காட்சியளிக்கிறது.

சக்தி வழிபாடு தோன்றி வளர்ச்சியுற்ற நிலையினை அறிய வேண்டும் என்ற ஆவல் எழுந்ததற்கேற்ப, வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, வழிபாட்டு முறைகள், மற்றும் சக்தி வழிபாட்டின் தோற்றம் முதல் தற்காலத்தில் சக்தி வழிபாடு அமைந்த முறை ஈருகக் கால வரிசைக் கேற்ப (chronological) ஆய்வு செய்யப்பட்டு முதற்பகுதியில்

அமைந்துள்ள முதற்கட்டுரை உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சக்தியின் கூறுகளையும் வழிபாட்டு முறைகளையும் சக்திமந்திரம் பற்றியும் சக்தியுடன் தொடர்புடைய திருவிழாக்கள் பற்றியும், தெளிவுற ஆராய்ந்து அடுத்த கட்டுரை அமைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்துவரும் கட்டுரை, தாய்த் தெய்வமாகக் கருதி வழிபடப்படும் பகவதியையும் பத்தினி தெய்வமாகிய கண்ணகியையும் தொடர்புபடுத்தியும், நாக வழிபாடு மாரியம்மன் வழிபாட்டுடன் கலந்தமையும் கூறும் வண்ணம் அமைகின்றது. சக்தியினையும் பாவை நோன்பினையும் தொடர்புபடுத்திச் சக்தி, பாவை நோன்பில் பெறுகின்ற முக்கிய இடத்தைப் பற்றி தொடர்ந்து வரும் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. சாக்த மதத்தோற்றம், அதன் பிரிவுகள், சாக்த ஆகமங்கள், சாக்த நூல்கள், சாக்த சமயக்கொள்கை, சாக்தர்கள் சக்தியை வழிபடும் முறைகள் ஆகியவை அடுத்து ஆராயப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, சக்தியைத் தத்துவ நோக்கில் எவ்வெவ்வகையில் நோக்கலாம் என்பது தத்துவக் கருத்துக்களுடன் விளக்கப்பட்டுள்ளது. சக்தி, சிற்பங்களில் எவ்வாறுன நிலைகளில் அமைந்துள்ளாள் என்பதையும் அகழ்ந்தெடுக்கப்பட்ட சில சக்தி சிற்பங்களின் அமைப்பினையும் அடுத்தக்கட்டுரை விளக்குகின்றது. தொடர்ந்து வரும் கட்டுரையில் தாய்த் தெய்வமாய சக்தியைக் காளி வடிவில் வழிபடுகின்ற கேரளத்தில் அமைந்துள்ள காளி வழிபாட்டு முறைகள், காளி நாடகம், வெளிச்சப்பாட்டின் வலம்வரும்பொழுது அமையும்பாடல் ஆகியவை செவ்வனே வரையப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதி இலக்கியங்கள் கூறும் 'சக்தி' என்ற பெயரினைப் பெற்று இலங்குகின்றது. சங்க இலக்கியங்களில் சக்தியின் கூருகிய கொற்றவை பற்றிக் கூறப்பட்டுள்ளதைத் தெளிவுற வரையறுத்துக் கூறுகின்றது. இரண்டாம் பகுதியில் உள்ள முதற் கட்டுரை, அதனைத் தொடர்ந்துவரும் கட்டுரையில் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சக்தியின் கூருகிய கொற்றவை வழிபாடு பற்றித்

தெளிவுற விளக்கப் பட்டதோடு, கொற்றவையையும் கண்ணகியையும் தொடர்பு படுத்திப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. மறைந்துபோன வஞ்ஞாபதி, குண்டலகேசி என்ற காப்பியங்களில் சக்தி பற்றி குறிப்புக் காணப்படாமையால், ஐம்பெருங் காப்பியங்களில் எஞ்சி நிற்கும் காப்பியங்களாகிய மணிமேகலை சிந்தாமணி ஆகிய வற்றில் கூறப்பட்டுள்ள சக்தி, சக்தியின் கூறுகள் பற்றிய செய்திகள் அடுத்த கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து பரணி இலக்கியங்களாகிய கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள சக்திபற்றிய செய்திகள் தொகுத்து அளிக்கப் பட்டுள்ளன. சைவசமயத் திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படும் பெரிய புராணத்தில் அமைந்துள்ள சக்தி பற்றிய செய்திகளை விரிவாகத் தொகுத்துத் தருகின்றது மற்றொரு கட்டுரை. பின்னால் வரும் பிறிதொரு கட்டுரை, பராசக்தி உலகத்து நாயகியா? பராசக்தி பாரதியின் காதலியா? போன்ற வினாக்களை எழுப்பி விடையிறுக்கும் வகையில் அமைகின்றது. அடுத்த கட்டுரை உமை மற்றும் சக்தியின் கூறுகளாகக் கருதப்படும் காளி, அம்மன், ஏனைய பெண் தெய்வங்கள் பற்றி நாட்டில் வழங்கும் பழமொழிகளைத் தொகுத்துத் தருகின்றது. இதனைத் தொடர்ந்து, இன்றைய ஆய்வாளர்கள் இடையில் புத்துணர்வையும் உயிர்த்துடிப்பையும் உள்ளத்தைத் தொடும் அமைப்பையும் எழுச்சியையும் ஊட்டி அமையும் நாடோடிப் பாடல்களில் சக்தி பற்றிக் கூறப்பட்டுள்ள பாடல்களைத் தொகுத்துக் கட்டுரை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது பகுதியில் தமிழகத்தில் அமைந்துள்ள சக்தி கோவில்களில் உள்ள சக்தியின் பெயர்கள், கோயில் அமைந்துள்ள கிராமத்தின் பெயர்கள், மக்கள் தொகைக் கணக்கீட்டாளரால் குறிப்பிடப்படும் எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ளன, அர்ச்சகர், விழாக்கள் மற்றும் சக்தியின்

வாகனங்கள் ஆகிய செய்திகள் பாங்குறப் பட்டியலிட்டு அமைக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து சக்தியை வழிபடுவோருக்குத் துணை புரிகின்ற வகையில், சக்தி வணக்கப் பாடல்களில் முக்கியமான சில பாடல்கள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

தமிழ், மலையாளம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் அமைந்த துணை புரிந்த நூற்கள், கட்டுரைகள் ஆகியவை அகர வரிசைக் கேற்ப அமைக்கப்பட்டுள்ளன.

நூலின் இறுதியில் நூலினை ஆய்வோருக்கும் பயில் வோருக்கும் பயனுறுகின்ற வகையில் ஆசிரியரடைவு, பொருளடைவு என்ற இரண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியன்.

பொருளடக்கம்

பகுதி ஒன்று

சக்தி வழிபாடு

1. சக்தி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

வழிபாடு — சொல்லாராய்ச்சி — வழிபாட்டின் தோற்றம் — வழிபாட்டு முறைகள் — ஆவி வழிபாடு — ஆவி வழிபாடு — நடுகல் வழிபாடு தொடர்பு — பேய்வழிபாடு — அன்னை வழிபாடு — இரண்டிற்குமுள்ள தொடர்பு — இயற்கை வழிபாடு — மரவழிபாடு — குலக்குறி வழிபாடு — மனித உருவமைத்து இறைவனை வழிபடுதல் — தாய்த் தெய்வ வழிபாடு — உலகத்தில் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றிய நிலை — இந்தியாவில் தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றம் — வேதகாலச் சக்தி வழிபாடு — இலக்கணம் கூறும் சக்தி வழிபாடு — தமிழிலக்கியத்தில் சக்தி வழிபாடு — பல்லவர் காலத்தில் சக்தி வழிபாடு — சோழர் காலத்தில் சக்தி வழிபாடு — நாயக்கர் காலச் சக்தி வழிபாடு — தற்காலத்தில் சக்தி வழிபாடு. 1—44.

2. சக்தியின் கூறுகளும் சக்தி வழிபாட்டு முறைகளும்

சக்தியின் கூறுகள் — உமை — கொற்றவை — காளியும் துர்க்கையும் — சுதந்திர சக்தி — கௌரி — பரமேசுவரி — மனோன்மணி — சாமுண்டேசுவரி — மகாமாரி — மகாலக்குமி — மகா சரசுவதி — தேவர்கள் — சக்தி உறவு முறை — சக்தியின் உறைவிடங்கள் — சக்தியின் பீடங்கள் — சக்திகளின் தோற்றமும் வடிவ மாற்றமும் — கிராம தேவதைகள் — சப்த மாதர்கள் — பிராமி — மகேசுவரி — கௌமாரி — நாராயணி — வராகி — இந்திராணி — காளி — வழிபாட்டு முறைகள் — வழிபட்டோர் எய்தும் பயன் — சக்தி வழிபாடு — ஆகம முறை — தந்திர முறை — நோன்பு முறை — கோவில்கள் — சக்தி மந்திரம் — திருவிழாக்கள். 45—90

3. பகவதியும் பத்தினித் தெய்வழும்

விஷாரிகாவிலுள்ள பகவதி — கொடுங்களூர் பகவதி— விஷஹரி என்ற பெயர் விஷாரிகாவாக மாற்றம் — விஷாரிகா பகவதி — விஷாரி என்ற பத்மாவதி தேவதையுடன் தொடர்பு — நாக வழிபாட்டில் மாரியம்மான் வழிபாடு கலப்பு — பகவதி வழிபாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு கலப்பு — பகவதி வழிபாடு — தாராதேவி வணக்கம் இணைதல் — கண்ணகிக்குப் பகவதி என்ற பெயர் வழங்கிய நிலை — பகவதி வழிபாடு — தாய்த்தெய்வங்களின் வழிபாடு கலந்தநிலை. 91—103

4. சக்தியும் பாவை நோன்பும்

பாவை — ஒரு விளக்கம் — சங்ககாலப் பாவை நோன்பு — சைவ சமயத் தொடர்புடையது — பாவை நோன்பு செய்ய வேண்டிய முறை — பவை நோன்பு நோற்பதன் பயன் — திருவாதிரை விழாவும் கார்த்தியாயினி விரதமும் பாவை நோன்புடன் தொடர்பு உடையது — சக்தி — (சிவனின் மனைவி — திருமாலின் தங்கை) — சைவ வைணவ சமயங்களிரண்டிலும் பாவை நோன்பின் வாயிலாக வெளிப்படல். 104—118

5. சாக்த சமயம்

சாக்த மதத்தின் தோற்றம் — பிரிவுகள் — சாக்த ஆகமங்கள் - சாக்த நூல்கள் — சாக்த சமயக்கொள்கை — சாக்தர்கள் சக்தியை வழிபடும் முறைகள். 114—119

6. தத்துவ நோக்கில் சக்தி

சிவன் சக்தியுடன் இணையும் பொழுதுதான் படைப்பு ஏற்படும் என்ற தத்துவம் — கேனோபநிஷதம் — பிருகதாரணியாக உபநிஷதம், சுவேதாச்வதர உபநிஷதம் கூறும் சக்தி தத்துவம் — காசுமீர சைவர்கள் பார்வையில் சக்தி தத்துவம் — இலிங்காயதம் சக்தியை விமரிச தத்துவமாகக் கருதுதல் — சிவாத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றின் சக்தி பற்றிய தத்துவக்கொள்கை சித்தாந்த சைவ

சக்தியின் கூறுகளாகிய மூன்று சக்திகள். (இச்சா சக்தி, ஞான சக்தி — கிரியா சக்தி) சிவபெருமானின் முக்கண்கள் என்ற தத்துவம் — சுவாமி சித்பவானந்தரின் சக்தி தத்துவம் — சக்தி அன்னையாகவும் கன்னியாகவும் மிளிர்கின்ற நிலை. 120—127

7. சிற்ப நோக்கில் சக்தி :

இசக்கி அம்மன் - தாய்த் தெய்வச் சிற்பத்தின் அடிப்படையில் வளர்ந்த நிலை – பல்லவர் காலச்சக்திசிற்பங்கள்– கடப்பை மாவட்டம் புத்தமுடியம் என்ற ஊரில் உள்ள மகிடாசுரவர்த்தினி சிற்பம் – ஏழாயிரம் ஆண்டுகட்கு முன் பீங்கானுல் செய்யப்பட்ட வன துர்க்கையின் சிற்பம் – சோழர் காலக் காளி சிற்பம். 128 – 135

8. சாசனங்களில் சக்தி :

சக்தி பற்றி சாசனங்களில் கூறப்பட்டுள்ள நிலை – சக்தி கோயில், வழிபாடு, பலிக்கொடை ஆகியவை பற்றிச் சாசனங்களில் கூறப்பட்டுள்ள பாங்கு. 136 – 142

9. கேரளத்தில் சக்தி வழிபாடு :

சக்தியின் கூருகிய காளியைக் கேரளத்தில் வழிபடுவோரும் வழிபடும் முறைகளும் – காளியும் காவும் – காவின் பழைய வடிவமும் புதிய வடிவமும் – காவுகளின் வளர்ச்சியின் இறுதி நிலையாகிய ஸ்ரீ கோவில்–காவு வட்டம் அல்லது தட்டகம் – கோவில் நிர்வாகமும் ஊராட்சியும் – காவுகளின் பழங்கால வரலாறு – காவுகள் நாயன்மார்களின் ஆட்சி பீடம் – பூரங்களும் அதனையொட்டி நடக்கும் நடவடிக்கைகளும் – உயிர்ப் – ஆபாச வசனம் – அம்மனை வழிபடும் முறைகள் – 'பான' – குருதி – களம் பாட்டு – கள மெழுத்து – முடியேற்று – தாலப்பொலி – சிற்று விளக்கு – வெள்ளாட்டும் திர – தெய்யாட்டம் – பானத் தோற்றம் அல்லது காளி நாடகம் – களத்தில் பாடும் பாட்டுக்கள் – பந்து வராளி – வெளிச்சப்பாடின் வலம் வரும்போது அமையும் பாடல். 143 – 186

பகுதி இரண்டு

இலக்கியங்கள் கூறும் சக்தி

10. சங்க இலக்கியங்களில் சக்தி

நிலப் பாகுபாட்டின் வழியில் சக்தியின் கூருகிய கொற்றவை - நடுகல் - கொற்றவை தொடர்பு - கொற்றவையின் பெயர்கள் - கொற்றவை கோவில் - உறைவிடம் - ஆயுதங்கள் - பலிக்கொடை - துர்க்கையாகிய விந்தையும் விந்தைக்காடும் - கொற்றவையின் கொடைதிறம் - கொற்றவையும் சக்தியும் - அம்மையப்பன் - அன்னை தெய்வமும் அழகு தெய்வமும் - கொற்றவையை வழிபட்டோர் - மன்னர் - அரசி - போர்வீரர்கள் - பெண்டிர் - வழிப்பறி செய்வோர் - பேய்கள் - விலங்குகள். 187 -207

11. சிலம்பில் சக்தி

சக்தியின் கூருகிய கொற்றவை - சொல்லாராய்ச்சி - கொற்றவையின் பெயர்கள் - வடிவம் - நிறம் - ஆடை - அணிகலன்கள் - மலர்கள் - படை - கொடி - பீடம் - ஊர்தி - குணம் தெய்வக்கூறு - உறவுமுறை - புராண வரலாறு - கொற்றவை கோயில் - வழிபடுவோர் - வழிபட்ட பயன் - போர்த் தெய்வம் கொற்றவை - காப்பியத் தலைவி கண்ணகியும் பாலைத் தெய்வம் கொற்றவையும். 208 - 227

12. பிற காப்பியங்களில் சக்தி

மணிமேகலையில் சக்தி

கலைமகள் - காளி - கொற்றவையின் சீற்றம் வழிபட்ட பயன் - புராண வரலாறு - சிறப்புக் கூறுகள் - மணிமேகலையும் கொற்றவையும் - ஆதிரையும் சக்தியின் கூருகிய திருமகளும்.

சீவக சிந்தாமணியில் சக்தி

திருமகள் - திருமகளும் காந்தர்வதத்தையும் - திருமகளும் விதையத்தரசன் மகள் விசையையும் - நாமகள் - காந்தரு

வதத்தையும் மகிமகளும் - நிலமகள் - துர்க்கைக்குக் கள வேள்வி-வன தேவதை-காளி-கொல்லிப்பாவை-கொல்லிப் பாவையும் தத்தையும் – இசக்கியம்மனுகிய இயக்கி - இயக்கியின் இயல்பு - இயக்கியும் சித்திரமும் - இயக்கியை வழிபட்ட பயன் - இயக்கியின் செயல் - இயக்கியும் கனக மாலையும் — மகளிர் — உமை ஒப்புமை — அமிர்தனுள் உமைக்கு ஒப்புமை - சீவகனும் குணமாலையும் இருந்த நிலையை உருத்திரனும் உமையும் இருந்த நிலைக்கு ஒப்புமை கூறல். 228 - 243

13. பரணி இலக்கியங்களில் சக்தி

பரணியின் இலக்கணம் - பரணியின் பெயர்க்காரணம் காளியுடன் தொடர்பு பெற்று அமையும் தன்மை - பரணியில் வரும் புறத்துறைகள் - பரணி நூற்களின் பெயர்கள் - கலிங்கத்துப் பரணியில் சக்தியின் கூருகிய காளி உறையும் இடமாகிய பாலை நில வருணனை - கோயிலின் இயல்பு - வழிபாட்டியல்பு - காளி தேவியின் வடிவம் - கொலு இருக்கை - காளியும் கலிங்கத்துப் போரும் – தக்கயாகப் பரணியில் காளி கோவிலைச் சூழ்ந்த சோலை - திருகோவி லின் வருணனை - வழிபாட்டு நிலை - தேவியின் வடிவம் தேவி யின் தன்மை - ஆடை - கோவில் அமைப்பு - தேவியின் உறைவிடமாகிய ஆலமரத்தின் வருணனை - அமளி விற் றிருக்கை - ஆயுதங்கள் - பாசவதைப் பரணி கூறும் சக்தி - அஞ்ஞவதைப் பரணியின் நோக்கில் சக்தி - மோக வதைப் பரணியின் நோக்கில் சக்தி - இரணியன் வதைப் பரணி அறிவுறுத்தும் சக்தி- 244 - 279

14. அபிராமி அந்தாதியில் சக்தி

சக்தியின் பெயர்கள் – உறைவிடங்கள் – இருக்கை – வடிவ வருணனை – திருமுடி – கூந்தல் – நெற்றி – கண் – முகம் – காது – வாய் – பல் – கை – தோள் – நகில் – வயிறு – இடை – அல்குல் – திருவடி – உருவ அமைப்பு – மேனி – நிறம் – பண்பு – சக்தி பற்றிய கருத்து – புராண

வரலாறு - வழிப்படுவோர் – வழிபடாதோர் எய்தும் நிலை – வழிபட்டோர் பயன். 280 – 301

15, பெரிய புராணத்தில் சக்தி

சக்தியின் பல்வேறு பெயர்கள் – சக்தியால் ஆகிய சிவன் என்ற நிலை – சக்தியும் சிவனும் – சக்தியின் அருள் – சக்தி கோவில் – அம்மையும் ஆளுடைய பிள்ளையாரும் – சக்தியும் சுந்தரரும் – சக்தி முற்றம் – உவமை நோக்கில் சக்தி – உமையும் காவிரியும் ஒப்புமை கூறல் – தத்துவ நோக்கில் உமை – பெண்ணடியார்களைச் சக்தியின் கூறுகளாகிய நிலமகள், திருமகள் ஆகியோருக்கு ஒப்பிடும் நிலை. 302 – 338

16. பாரதி பார்வையில் சக்தி

பாரதியும் இயற்கைச் சக்தியும் – பராசக்தி உலகத்து நாயகியா? – பாரத மாதாவும் பரா சக்தியும் – பாரதியும் பராசக்தி உருவகமும்–பராசக்திநிலையும் வழிபடும் முறையும் வழிபாட்டின் பயனையும் பாரதி கூறுகின்றமை – பாரதி சக்தியிடம் இரங்கும் நிலை – உவமை நோக்கில் பாரதியின் சக்தி– சமுதாயக் கண்ணோட்டத்தில் பாரதியின் சக்தி – பாரதியும் இருண்மைக் காட்சியும் – பாரதி சக்திப்பாட்டில் வலியுறுத்தும் கருத்துக்கள் – பாரதியின் சக்திப்பாட்டில் புனைவியல் கற்பனை - பாரதியும் பராசக்திப் பிள்ளைத் தமிழும் – புதுமைப் பெண்ணைக்கப் பாரதியின் நன்றிக்கடன் – பராசக்தி பாரதியின் காதலியா? 339 – 351

பழமொழி நோக்கில் சக்தி

சக்தியின் கூருகக் கருதப்படும் பிடாரி — சீதேவி — மூதேவி — சீதேவியும் மூதேவியும் — காளி — அம்மன் — பெண் தெய்வங்கள் — உமை 352—358

நாடோடிப் பாடல்களில் சக்தி

நாடோடிப் பாடல்கள் பற்றி ஒரு விளக்கம் — சிறு தெய்வமாகிய மாரியம்மன் பாட்டு — கரகப் பாட்டு —

பூசாரிப் பாட்டு — விளக்கு வேள்விப் பாடல்களில் பகவதி, மாரியம்மா, உலகம்மன், கண்ணுத்தா என்ற பெண் தெய்வங்களில் பாடப்படுகின்ற நிலை — சக்தி பற்றிய அம்மானைப் பாடல் — சக்தி பற்றிய நாட்டுப் பாடல்களும் நாடோடிப் பாடல்களும் — மாரியம்மன் பற்றிய நாடோடிப் பாடல்கள் காளியைப் பற்றிய நாடோடிப் பாடல் — மாரியம்மன் தாலாட்டு. 359—380

பகுதி மூன்று

தமிழகத்தில் அமைந்துள்ள சக்தி கோவில்கள்

சக்தியின் பெயர்கள் — அமைந்துள்ள கிராமத்தின் பெயர்கள் — ஏனைய செய்திகள் — அர்ச்சகர் மற்றும் விழாக்கள் பற்றிய ஒரு விளக்கவியல் பட்டியல் 381—550

சக்தி வணக்கப் பாடல்கள்

ஆதி சக்தி வாழ்கவே — அஷ்டலெக்ஷ்மி ஸ்தோத்திரம் — துர்க்காதேவியின் திருநாமங்கள் — துக்க நிவாரண அஷ்டகம் — ஸ்ரீ காமாக்ஷி அஷ்டகம் — தேவி வணக்கம் — கருணை நீ செய்திடுவாய்! 551—560

துணை புரிந்த நூல்கள் 561—612

ஆசிரியரடைவு 613—616

பொருளடைவு 617—626

பிழைத் திருத்தம் 627—628

பகுதி ஒன்று

1

சக்தி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

வழிபாடு — சொல்லாராய்ச்சி: வழிபடு என்ற வேர்ச் சொல்லினின்று பிறந்த வழிபாடு என்னும் சொல் "வழியிற் செல்லுகை" (Proceeding on the way) "பின் பற்றுகை" (following) வணக்கம் (Reverence adoration) பூசனை (Ritual worship) என்ற பொருள்களினைத் தருகின்றது.[1] பூசனை என்ற பொருளினைப் பகருகின்றது பிங்கல நிகண்டு.[2] வணக்கம் என்ற பொருளினைக் கூறுகின்றது செந்தமிழ் அகராதி[3] 'வணக்கம்' 'கோட்பாடு' என இரு பொருள்களைத் தருகின்றது தற்காலத் தமிழ் அகராதி[4] வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு என்ற பொருள்களை நவில்கின்றது கழகத் தமிழ் அகராதி.[5] சமயத்தில் வழிபாடு என்ற சொல் கௌரவம், கண்ணியம், வணக்கம், மதிப்பு என்ற பொருட்களைப் பெற்று இலங்குகின்றது. கடவுளினையோ — கடவுளர்களையோ, உயிர் உள்ளவற்றையோ — உயிர் இல்லாதவற்றையோ வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு வழிபடுவதை வழிபாடு எனலாம்.[6]

'இரு மொழியும் வழிப்படுத்தார்' எனக் காஞ்சி புராணத்தில் வருமிடத்தில் வழிப்படுத்தல் என்பதற்குச் சீர்திருத்தம் எனப் பொருள் கொள்ளலாம்,[7] 'அமரர் கோன் வழிபட்டால்' எனத் திருவாய்மொழி நூற்றந் தாதியில் இச்சொல் நேர் செல்லுதல் என்ப் பொருள் தருகிறது.[8] திருக்கோவையாரில் 'மதி நுதலியை வழி படுத்து' என்ற இடத்தில் பயணமாதல் எனப் பொருள் தருகின்றது.[9] வழிபாடு வல்லுதலால் என்ற நாலடி

யார்ப் பாடலில் வழிபாடு என்பதற்குப் 'பின்பற்றுதல்' எனப் பொருள் கொள்ளப்படுகிறது.[10] வந்தனை செய்து வழிபடுதலைக் கோல்,[11] கோட்டம் வழிபாடு கொண்டிருப்பான்[12] எனவும், இச்சொல் சிலப்பதிகாரத்தில் பயின்று வருகிறது. 'வழிபடுவோரை வல்லறிதியே' என வரும் புறநானூற்றுப் பாடலில், வழிபடுதல் என்பது வணங்குதல் என்ற பொருளையே தருகின்றது.[13] 'வழிபடல் சூழ்ந்திசின் அவருடைய நாட்டே, என வரும் குறுந்தொகைப் பாட்டில், வழிபடல் என்பதற்குச் செல்லுதல் எனப் பொருள் கொள்கிறார் டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்.[14] இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வழிபாடு மறுத்தல்,[15] வழிபடு தெய்வம்,[16] வழிபடு கிழமை[17] என்றவாறுக இச் சொற்கள் பயின்று வருகின்றன. மேற்கூறிய சான்றுகளின் துணை கொண்டு 'வழிபாடு' என்னும் சொல் வணங்குதல், பின்பற்றுதல், செல்லுதல், சேர்திருத்தல், கோட்பாடு என்ற பொருள்களினைப் பெற்று இலங்குகின்றதை உணரலாம். "வழிபாடு" ஆற்றுப்படை இரண்டும் ஒரே பொருளுடைய சொற்கள். வழிப்படுத்துதல் வழிபாடு. ஒருவன் தன்னையோ, பிறரையோ இறைவனிடம் வழிப்படுத்துதல். இது அடியாரை முருகனிடம் ஆற்றுப்படுத்தும் (வழிமடுத்தும்) நிலையில் முருகாற்றுப்படையாக அமைந்தது. இனிது தெய்வமேறி ஆடும் ஆவேச நிலையாகிய வெறியாட்டில் இறைவனை மனிதன் மேல் வழிப்படுத்தி வரச் செய்வது மற்றது. "முருகாற்றுப்படுத்த உருகெழு வியநகர்" என்ற முருகாற்றுப்படைத் தொடரே இதையும் குறிக்கும்.[18]

வழிபாட்டின் தோற்றம் : வழிபாடு. மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும், குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாகியிருப்பதாக சிக்மண்டு பிராய்டு கருதுகிறார்.[19] மனிதன் இவ்வுலகத் துன்பத்தினின்று விடுதலை பெற்று

நல்வாழ்வு வாழ விருப்புகின்றான். அதற்கு உறுதுணையாக ஓர் ஆற்றல் வேண்டுமென விழைகிறான். கடவுள் என்ற ஆற்றலே பிறர் தரமுடியாததைத் தனக்கு அளிக்குமெனக் கருதி அவ்வாற்றலை வழிபடுகின்றான் எனப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுகின்றார்.[20] புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும், பயிர் வளத்தையும் (Fertility) ஒருங்கே பெறுவதற்காகவே மந்திரங்களைக் கையாண்டனர். அதன் தருக்க ரீதியான முடிவாக வழிபாடு தோன்றியிருக்கலாமெனக் கருதுகின்றார் டாக்டர். க. கைலாசபதி.[21]

வழிபாட்டு முறைகள் : இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் ஆற்றலும் உயிரும் உடையனவாகக் கருதி வழிபடுவது ஒரு முறை (Animism). இதை ஆவி வழிபாடு எனலாம். தம்மைச் சுற்றிலும் கண்ணுக்குப் புலனாகாத ஆவிகள் இருந்து தம்மைக் கட்டுப்படுத்துவதாக எண்ணி, அவற்றை வழிபடும் இன்னொரு முறை (Spiritism) ஆவி வழிபாட்டின் மற்றொரு பிரிவு எனலாம். சில குறிப்பிட்ட பொருள்களை-கல்லையோ, மரக்கட்டையையோ புனிதமாகக் கருதி வழிபடுவது பிறிதொருமுறை (Fetishism). இறந்துபோன முன்னோர்களின் ஆவிகளை வழிபடுவது மற்றொரு முறை (Ancestor worship). இதனை முன்னோர் வழிபாடு எனலாம். ஏதேனுமொரு மரத்தையோ விலங்கையோ தம் இனத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கொண்டு அதை வணங்குவது அடுத்தமுறை (Totemism) இதனைக் குலகுறி வழிபாடு எனலாம். கடவுள் என்ற உயர்ந்த பொருளை வணங்குவதிலும், பன்மைக் கொள்கையும் ஒருமைக் கொள்கையும் இடம்பெறுகின்றன. பல கடவுளரை வழிபடும் முறையும் (Polytheism) வழிபாட்டு முறையில் இடம் பெறுவது போன்று, கடவுள் ஒன்றே என்று கருதி வழிபடும் முறையும் (Mono theism) இடம் பெறுகின்றது. பல கடவுளரை வழிபடும் நிலையில்

இருந்து மாறிக் கடவுள் ஒன்றே என்று கருதும் நிலை எய்துமுன் அமையும் இடைப்பட்ட நிலையில் குறித்த நோக்கத்திற்காக மட்டும் ஒவ்வொரு கடவுளுக்கும் ஏற்றம் தந்து வழிபடும் முறையும் (Henotheism) வழி பாட்டு முறையாக அமைந்துள்ளது.[22] இயற்கை வழி பாடு முதலில் தோன்றியதா? விலங்கு வழிபாடு முதலில் தோன்றியதா? என்பதில் ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு உடையவராகக் காணப்படுகின்றனர். ஒரு பிரிவினர், இயற்கை வழிபாடே முதலில் தோன்றியது என்றும், அதிலிருந்து விலங்கு வழிபாடு வந்தது என்றும் கூறுகின்றனர். மற்றொரு பிரிவினர் முற் கூறியதை மறுத்து விலங்கு வழிபாடே முதன்மையானது என்றும் அதிலிருந்து தோன்றியதே இயற்கை வழிபாடு என்றும் கூறுகின்றனர்.[23]

ஆவி வழிபாடு (Animism): பத்தொன்பதாம் நூற் றாண்டைச் சார்ந்த மானிடவியல் ஆராய்ச்சி நிபுணர் சர். எட்வர்ட் பர்னட் டெய்லர்[24] ஆவி வழிபாடு என் பது ஆவி இனங்களின் மேல் உள்ள நம்பிக்கையில் தோன்றியதாகும் எனக் கூறுகின்றார். தாவரம் மற்றும் மிருகங்களின் ஆவிகள் (Plant and animal spirits) ஆத் மாக்கள் (souls) பேய்கள் (ghosts) துஷ்ட பூதங்கள் (goblins) துர் தேவதைகள் (poltergeists) அராபியக் கதைகளில் கூறப்பட்டுள்ள விநோதமான சக்தியுடைய பூதங்கள் (genies) ஸ்காண்டிநேவியன் புராணக் கதை களில் கூறப்பட்டுள்ள குறும் பூதங்கள் (trolls) தேவதை கள் (sprites) சிறு தேவதைகள் (elves) மிகச் சிறிய தேவதைகள் (pixies) ஐரிஷ் மரபுக் கதைகளில் கூறப்பட் டுள்ள தேவதைகள் (leprechauns) தேவதைகள் (fairies) பூதங்கள் (demons) பேய்கள் (devils) தேவதைகள் (angels) கடவுளர் (gods) ஆகியவை ஆவி இனங்கள் என் பது அறியற்பாலது.[25]

பழங்காலத் தமிழர்கள் இறந்தவர்களைப் பெரிய தாழியில் வைத்துப் பூமியில் புதைத்து விடுவார்கள் சமாதிகளின் கீழ் இறந்தோரின் ஆவி நிலை பெற்றிருக்கும் என்று நம்பிய தமிழர் அந்த ஆவிக்கு பூசை போட்டனர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்ருங்கு
ஐம்புலத்தா ரோம்பல் தலை" [குறள் 43]

இறந்தவருக்கு கல்லை நட்டு அதனை வழிபடுவது பண்டைத் தமிழர் முறை. இம்முறை இன்னும் கருமாதியிற் காணப் படுவதைக் குறிப்பிடலாம்.[26] முன்னோர் வழிபாடு இன்றும் மலைக்குடி மக்களிடையே காணப்படுகிறது. இறந்தவர்களின் நற்செய்கையால் அவரிடத்தே தோன்றும் அன்பும் அவர்களின் ஆற்றலிடத்தே தோன்றும் நம்பிக்கையும் அவர்களை வழிபடக் காரணமாக அமைந்துடன் இவ்வாறு வழிபடப்படும் முன்னோர் ஒரு குடும்பத்தாரால் மட்டும் வழிபடப்படலாம். சிலர், ஒரு சமூகத்திற்கே தெய்வமாகவும் மாறலாம்.[27]

* ஆவி வழிபாடு—நடுகல் வழிபாடு தொடர்பு: நடுகல் வழிபாடு தொல்காப்பியத்தில் கடவுள் வழிபாட்டின்றும் வேறுகவே காணப்படுகின்றது. மறவர்கள் கொற்றவையை வணங்கிப் போருக்குப் போதல் சுட்டப்பட்டுள்ளது (தொல். புறத்திணை இயல் 4). நச்சினார்க்கினியர் கொற்றவையை வணங்கி, வீரர்கட்குக் கல் நாட்டும் வழக்கத்தைக் குறிப்பிடுவதிலிருந்து : கடவுள் வணக்கம் வேறு; வீரர் வணக்கம் வேறு என்று அறியலாம். மேலும் புறம் 335-ம் பாடல் நடுகல் வழிபாட்டினின்றும் கடவுள் வழிபாட்டை வேறுகச் சுட்டுகின்றது. ஆலல் பறையறையும் தொழிலை உடைய இரவலன் ஒருவன் நீ செல்லும் வழியில்

"பல்லாத் திரள் நிரை பெயர் தரப் பெயர் தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல் புனல் சிறையின் விலங்கியோன் கல்லே"
(புறம் 263)

வணங்காமல் போகவேண்டாமெனவும் வணங்கிச் செல்வாயாஞல் "நீ செல்லும் வழி மழை பெய்து குளிர்ச்சியாகி உன் செலவிற்கு இன்பம் தரும்" எனவும் நவில்கின்றான். புறங் கொடாது பொருது வீழ்ந்தமையால் தேவருலகம் சென்று தேவனைவன் பொருட்டு நட்டகல்லைத் தெய்வமாகத் தொழ, நன்மையுண்டாகும் என்ற நம்பிக்கை முதன் முதல் வெளிப்படுவது ஈண்டேயாகும். [28]

வீரவணக்கம் என்பது பண்டைய தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்று என்பதும் அது பழந்தமிழரின் இழவு வினைகள், பிரேத அடக்க முறை முதலியவற்றுடன் தொடர்புடையது என்பதும், போரிலே வீழ்ந்துபட்டவரை வணங்கும் வழக்கம் காலகதியில் சிறு தெய்வ வணக்கமாக மாறியது என்பதும் இவண் கருதத்தக்கன. [29]

நடுகல்லிற்கு நாட்காலையில் நன்னீராட்டிப் பலியூட்டி நெய்ந்நறைக் கொளுவுதலாகிய தூபம் போடுதல் மரபாம் என்ற செய்தியைப் புலப்படுத்துகின்றது புறம் 329. அதனால் மருத நிலத்துப் பெருங் கோயில்களில் தெய்வங்களுக்கு நீராட்டிப் பலியூட்டிதீ தூபம் போடுதல் போலவே நடுகல்லைத் தெய்வமாகக் கொண்டு அவ்வாறு மறவர் செய்யத் தலைப்பட்டனர் எனலாம். [30] சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதல் தொல்காப்பியர் கூறிய இலக்கணத்திற்கு ஏற்பவும் நச்சினார்க்கினியர் கூறிய பொருளுக்கு ஏற்பவும் காட்சி முதலிய அறுவகைச் செய்தியும் விளங்கக் காணப்படுதலை அறியலாம். கண்ணகிக்கு நடுகல்நாட்டிப் பத்தினிக் கடவுள் வழிபாடு நிகழ்ந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. சிலப்பதிகார

காலத்திற்குமுன் கற்புடை மகளிருக்கு கல்நட்டுக் கோயி லெடுத்துக் கல்லோதி தெய்வமாகக் கொண்ட மரபு இருந்த தாக அறியப்படவில்லை. கடவுளுக்கே கோயிலும், கடவுளுக்கே வழிபாடும் என்பதே அக்காலத்தில் கொள்ளப்பட்டிருந்ததால் நடுகல்லைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கு ஆண்டுத் தலையெடுக்கவில்லை எனலாம்.[31] நடுகல், முற்பட நிலைவுக் குறியாக அமைந்த நிலைமை வளர்சியுற்றுப் பிற்பட்டதி தெய்வமாக்கி வாழ்த்தும் நிலைமை பெற்றதாம் என்பது தெளிவாக அறியப்படுவதுடன் தெய்வமாக்கி வாழ்த்துதல் எனப் படுதலால் தெய்வம் வேறு என்பதும் தெளிவாக உணர முடிகின்றது.[32]

பேய் வழிபாடு — அன்னை வழிபாடு — இரண்டிற்குமுள்ள தொடர்பு: தியாமட் என்ற பாபிலோனியப் பேயும் இரினேம் என்னும் கிரேக்கப் பேயும் தாய்த் தெய்வங் களாகவும் உலகைப் படைத்த மூலத் தாயாராகவும் பண்டைய மக்களால் கருதப்பட்டன. இவைகள் இவ் வாறு கருதப்பட்டதற்கு அன்றையச் சமூகச் சூழ்நிலையே காரணம் எனலாம். காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து (Savagery) நாகரித முற்கால (Barbarism) விவசாயதி திற்குச் சமுதாயம் மாறும் பொழுது உலகெங்கும் பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றியது. பெண்கள் விவசாயத் தில் முன்னணியில் இருந்தவர்கள். எனவே அவர்கள் தலைவியராக இருந்தனர். இக்காலத்தில் பெண் தெய்வங் கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு மிகுதியான செழிப் பைத் தரும் சக்திகளையும், ஆற்றல் வாய்ந்த இயற்கைக் கூறுகளையும் அக்கால மனிதன் பெண்ணின் சக்தியாகவே கருதினான். எனவே அச்சக்திகளைப் பெண்ணுகவே உருவகம் செய்தான். இவ்வாறே தனக்கு அச்சத்தை விளைவிக்கும் இனம் காணவியலாச் சக்திகளையும் பெண் ணின் அம்சமாகக் கண்டான். இவ்வாறு பேய் மகவிர் என்னும் எண்ணம் தோன்றியது.[33] பெண்களுக்கே

முதன் முதலில் மந்திர சக்தி அளிக்கப்பட்டதாக அங்கு வாழ்ந்த மக்கள், குலங்கள் நம்பியதாகத் தெரிகின்றது,[34] புராதன மங்கோலியப் புராணக் கதைகளிலிருந்தும் பெண்களே நோய் தீர்க்கும் மாந்திரிகராக இருந்தனரெனத் தெரியவந்துள்ளது.[35] வேறு பல மக்கட் கூட்டத்தினரிடையே ஆண்கள் மாந்திரிகராகக் கடமை ஆற்றும் பொழுது பெண்ணுடையை அணிந்து பெண்களைப் போல நடந்து கொண்டதாகவும் அறியலாம்.[36] இதன் வாயிலாகப் பேய் மகளிரோடு தொடர்பு கொண்ட பெண்ணுருக்கச் சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டமையை உணரலாம்.

இயற்கை வழிபாடு:- நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், நாண்மீன், தாவரங்கள், மலை, ஞாயிறு, சந்திரன் போன்ற இயற்கைப் பொருட்களை வழிபடும் தன்மையே இயற்கை வழிபாடாகும். இவ்வழிபாட்டு முறை பழங்கால மக்களிடையே காணப்பட்டது. இம் மக்களிடையே முதலில் தோன்றியது ஆவி வழிபாடா? இயற்கை வழிபாடா? என்ற தருக்கம் மானிடவியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் மத்தியில் எழுந்துள்ளது. மாயமான சக்திகளாலும், இயற்கையைக் கடந்த ஆத்மா அல்லது ஆவிகளாலும் இயற்கையின் சக்திகள் உயிருண்டாக்கப்படுகின்றன என நம்பப்படுவதால் ஆவி வழிபாடே தோற்றத்தில் முந்தியது என்ற நியாயமான முடிவிற்கு வர இயலுகின்றது.[37]

பழங்காலத்தில் நெருப்பு கண்டுபிடிக்கப் படாமையால் மனிதன் இரவு நேரங்களில் கண் தெரியாது குகைக்குள் கிடந்து, நச்சுயிர்கட்கும், விலங்குகட்கும் அஞ்சி வாழ்ந்து இரவெல்லாம் துன்புற்று காலையில் ஞாயிற்றின் ஒளி கண்டு மகிழ்வுற்றான். சில நேரங்களில் தண்ணொளி நல்கும் சந்திரனையும் கண்டு பரவசமுற்று மகிழ்ச்சி அடைந்தான். இதன் பொருட்டு ஞாயிறும் திங்களும்

அவனுக்கு வணக்கப் பொருள்களாயின எனலாம். சிலப் பதிகாரமும் இதைக் கருதித்தானே.

"ஞாயிறு போற்றதும் .....திங்களைப் போற்று தும்....." என்ற வாழ்க மங்கல வாழ்த்துப் பாடலில் வாழ்த்தி நிற்கின்றது என எண்ணவும் அடி கோலுகின் றது. மேலும் சிலப்பதிகாரத்திலேயே, உச்சிக்கிழான் கோட்டம் நிலாக் கோட்டம் (9 : 11, 13) என ஞாயிறு, திங்களை வழிபடும் கோவில்கள் குறிப்பிடப்படுகின்றன.

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சில முத் திரைகளில் சக்கரங்களும், சுவஸ்திகா போன்ற ஓவியங் களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் ஞாயிற் றின் அடையாளங்களாகையால் சிந்துவெளி மக்கள் ஞாயிற்றை வழிபட்டனர் என்பதை அறியலாம்.

காட்டின் நடுவில் மனிதன் வாழ்ந்தபொழுது, காட் டுத் தீயானது திடீர் திடீரென்று தோன்றி அவனை அச் சுறுத்தியது. காட்டுத் தியினைப் புறம் 349; அகம் 47, 39, மதுரைக் காஞ்சி 302 ஆகியவைகள் பாடுகின்றன. அச்சம் தரும் தீயைக் கண்டு அஞ்சி மனிதன் அதனையும் வழிபட்டான். பின்னர் தீயின் உதவியால் ~~உதவியால்~~ பச்சை இறைச்சிகளைச் சுட்டுப் புதப்படுத்தி உண்ணத் தொடங்கினன். இரண்டு கோல்கள் கொண்டு தீ மூட்டும் வகையைப் பெரும்பாணாற்றுப்படை 177—179 கூறுகின் றது. தியினால் இரவைப் பகலாக்கியதுடன், தன்னைச் சுற்றியுள்ள காட்டினைத் தான் மூட்டிய நெருப்பால் எரித் துக் காட்டுத் தியால் தனக்கு ஏற்படும் தீமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டான். எந்தத் தியினைக் கண்டு அஞ்சி வழிபட்டானோ அதே தியானது நன்மை செய்வதைக் கண்டு அன்பால் வழிபட்டான் என்பதை யும் உணரலாம்.[32] தியினை வழிபட வேண்டும் என்று கரு தியே இன்றும் திருவண்ணாமலையின் மேல் மூட்டிய தீபம்

வழிபடுகின்றனர். கார்த்திகைத் தீபத்தன்று பிறகோவில்களில் சொக்கப்பனை (Burning pole) ஒன்று கோவில்முன் நடப்பட்டு எரிக்கப்படுகின்றது. கொடிநிலை, கந்தழி வள்ளி என்ற தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பா 33-ன் வாயிலாகத் தீ, திங்கள் வழிபாடு தமிழரிடம் இருந்ததை உணரலாம். தனக்குச் சேய்மையில் உள்ள ஞாயிறு திங்கள் ஆகியவற்றை வழிபடுவதைவிட அண்மையில் இருக்கும் தீயை வழிபடுவதையே மனிதன் பெரிதும் விரும்பியதால் தான் தற்காலத்தில் சொக்கப்பனை எரித்து அதனை வழிபடுகின்ற அளவுக்குத் தீ வழிபாடு வளர்ச்சியுற்றதெனலாம். ஒளி வழிபாட்டிற்கு ஆதரவாக சங்க இலக்கியங்களான நற்றிணை 202, அகநானூறு 11, 17, 141 185 ஆகிய பாடல்கள் கார்த்திகை ஒளிவிழாவினைக் கூறுகின்றன. திருஞானசம்பந்தரும் இதனைத் 'தொல் கார்த்திகை நாள் எனப்படுவதை அறியலாம். (திரு மயிலாப் பூர்ப் பதிகம்: 3) பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் இறைவன் ஒளி வடிவில் தென்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது மேலும் 'மூன் கண்' என்ற சொல் மொகஞ்சோதாராவில் காணப்படுகின்றது. இயற்கை வழிபாட்டிலிருந்து இறை வழிபாட்டிற்கு வந்த மனிதன் ஞாயிறு, திங்கள், தீ என்ற மூன்றையும் இறைவனுக்கும் சக்திக்கும் முக்கண் ஆக்கினமையாலேயே மொகஞ்சோதாராவில் 'மூன்கண்' என்ற சொல் காணப்படுகின்றது என எண்ணலாம்.

மர வழிபாடு:- மர வழிபாடு பற்றிப் பரி பாடல் (17:3-4) கலித்தொகை (101:13-14) கூறுகின்றன. திருஞான சம்பந்தரும் இறைவனை

'வெண் நாவல் அமர்ந்துறை வேதியன்' என்றும்

'வெண் நாவலுளே நின்றாய்' என்றும் பாடுகின்றார். இராமலிங்க வள்ளலார்,

'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை
கிடைத்த குளிர் தருவே' எனப் பாடுகின்றார்.

வழிபாட்டிற்குரிய மரங்கள் சங்க காலத்தில் இறைவன் உறையும் இடங்களாக வழிபடப்பட்டன.

'கடவுள் ஆலத்து'	(நற் 343; புறம் 199)
'கடவுள் சேர்ந்த பராரை மன்றப் பெண்ணை'	(நற் 303)
'கடவுள் மாத்த'	(அகம் 270)
'தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பு'	(அகம் 309)
'கள்ளி நீழற் கடவுள்'	(புறம் 260 : 5)
'ஆல்கெழு கடவுள்'	(திரு முருகு 256)
'கடம்பமா நெடு வேள்'	(பெரும் 75)
'கடவுள் வாகை'	(பதிற்று 66)

சிலப்பதிகாரத்திலும் 'ஆலமர் செல்வன்' என்ற குறிப்பு காணப்படுகின்றது.

புத்தர் காலத்தில் சேனனி ஊரைச் சேர்ந்த சுஜாதை என்னும் பெண் பிள்ளைப் பேறு வேண்டி அரச மரத்தை வணங்கிப் பாற்சோறு படைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. தற்காலத்திலும் பிள்ளைவரம் வேண்டி அரச மரத்தைச் சுற்றிவந்து வழிபடுவதைக் காணலாம். கடவுள் உறையும் இடங்களாகக் கருதப்பட்ட மரங்கள் பட்டு அழிந்துவிட அதன் அடி மரம் மட்டும் எஞ்சி நிற்கும். அதனைக் காக்கும் பொருட்டுச் சுற்றி மேடை அமைத்துத் தற்காலத்தில் வழிபடுவதையும் காணலாம். மரங்களை வழிபடும் வழக்கம் கிரீஸ், பிரான்சு, ஸோலந்து முதலிய நாடுகளில் நிலவியிருந்ததென அறிஞர் கூறுகின்றனர். ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் பழங்குடி மக்களிடையே மரத்தை வழிபடும் நிலை இன்றும் நிலவுகின்றது.[39]

பிற்காலத்தில் சைவ சமய தத்துவ அடிப்படைகளிலே முக்கியதத்துவம் பெறுவிட்டாலும் மரங்களை வழிபடுவதும் சிந்துவெளி நாகரிகச் சமய முறைகளில் ஒன்றாக இருந்திருக்கிறது. எண்ணற்ற சிந்துவெளி முத்திரைகளில்

அரசமரம் இடம்பெற்றுள்ளது.[40] மர வழிபாடு பூர்விக மனிதனுக்குப் பொதுவான சொத்தாகவே இருந்து வந்திருக்கிறது. மெசப்படோமியாவிலும் மரக்கிளைகள் தெய்வப் பண்புடன் முத்திரைகளிலே பொறிக்கப் பட்டுள்ளன. இன்னும் இந்து சமயத்தினரால் வழி பாட்டிற்குரியதாகக் கொள்ளப்படும் மரங்களில் ஒன்றான அரசமரம் சிந்துவெளி முத்திரைகளிற் காணப்படுவதால் அது ஐயாயிரம் ஆண்டுகளாக மக்கள் நெஞ்சில் வழி பாட்டுச் சின்னமாக இடம் பெற்றிருக்க வேண்டும் எனலாம்.[41]

மரத்தின் அடிப்பாகமாகிய கந்து வழிபடப்பட்ட செய்தி பட்டினப் பாலையில் (246--249) காணப்படுகின்றது. பட்டினப் பாலையில் கரிகாலன் வென்ற பலகையரசர் ஊரில் உள்ள கந்துடைப் பொதியிலில் கொண்டி மகளிர் பணி செய்ய விடப்பட்டிருந்தனர்.[42] அந்த மகளிர் நீராடிய பின் கந்துடைப் பொதியிலே மெழுகியும் கந்திற்கு மலர் சூட்டியும் மாலைக்காலத்தில் அதனருகில் நந்தாவிளக்கு ஏரிதீத்தும் வழிபடப்பட்ட செய்தி காணப்படுகிறது.

அம்மையும் அப்பனும் பிரிவில்லாதவர்கள் எனச் சங்க இலக்கியங்கள் (திருமுருகு 256, 258, பெரும் பாண் 458—459) கூறுகின்றன.

> "பெண்ணுரு ஒரு திற ணாகின் கவ்வுருத்
> தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்"

என்பது பாரதம் பாடிய பெருந்தேவனாரின் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து ஆகும். அப்படிப்பட்ட பிரிவிலா அம்மையும் கந்தழி என அழைக்கப்பட்டாள். இடைக் காலத்தின் கல்வெட்டுக்களிலிருந்து வணிகர் குழாங்கள் அன்னையைக் கந்தளி (ழி) என்று போற்றி னார்கள் என்பதை அறியலாம். சிந்துவெளியிற் காண் டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் இரு அரச மரக்கிளை களுக்கிடையே ஆடைகளின்றிப் பெண் தெய்வமொன்று

காணப்படுகின்றமையை இவண் கருத்தில் கொள்ளலாம். இத்தெய்வத்தை மக்களும் விலங்குகளும் வழிபட்டு நிற்பது மோன்றும் காணப்படுவதால் 'கந்துவழிபாடு' சிந்துவெளி நாகரிகத்தின் மொழுது நடைபெற்றுள்ளது என்பது புலனுகின்றது. மொகஞ்சோதாரோவில் கிடைத்த மற்றொரு முத்திரை ஒன்றில் இரண்டு கிளைகளுக்கிடையில் ஆடையின்றிப் பெண் உருவம் ஒன்று அவிழ்ந்த கூந்தலுடன் நிற்கின்றது. அம்மரத்தின் முன்பு சிறிய பாவாடை கட்டிய பெண்ணுருவங்கள் ஏழு வரிசையாக நிற்கின்றன. மண்டியிட்டு வணங்கும் பெண்ணுருவிற்குப் பின்புறம் மனிதத் தலையுடன் உடலின் மேற்பகுதி ஆடாகவும், கீழ்ப்பகுதி எருதாகவும் உள்ள விலங்கு உருவம் ஒன்று காணப்படுகிறது. இதனை 'மினோட்டார்' (Minotaur) என்பர் மார்ட்டிமர் வில்லர். மரக்கிளைகளில் காணப்படும் பெண் மரத்தில் வாழும் தெய்வமாகவும், அந்த விலங்கு அவளுடைய ஊர்தியாகவும் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[34 43]

குலக்குறி வழிபாடு (Totemism): மக்களினம் எந்த மிருகங்களிலிருந்து தோன்றியதோ அந்த இன மரபுச் சின்னமாக உள்ள மிருகங்களை வழிபடுவது குலக்குறி வழிபாடாகும்.

"A tribe has a social organisation, usually of the sib pattern, which is associated with a form of supernaturalism consisting of certain typical attitudes towards species of animals or plants or classes of natural objects" என்றவாறுகக் குலக் குறி வழிபாட்டிற்கு விளக்கம் கூறுகின்றார் கோல்டன் ஒய்சர்.[44] ஒரு மனிதன் இறந்ததும் அவனுடைய ஆவி சில குறிப்பிட்ட மிருகங்களிடத்தோ, தாவரங்களிடத்தோ சென்று இடம் பெறுகின்றது. ஆகையால் மிருகங்களும் தாவரங்களும் ஆபத்து வராவண்ணம் பேணி வளர்த்து வழிபடப்படு

ன்றன என்று மானிடவியல் ஆராய்ச்சியாளர் டெய்லர் கருதுகின்றார். அவர் தம் கருதீதுப்படி, இவ்வழிபாடு சமய வழிபாட்டின் ஒரு வடிவமாகக் காட்சியளிக்கின்றது.[45] சில அறிஞர்கள் முன்னோர் வழிபாட்டின் ஒரு புதிய வடிவு இவ்வழிபாடு என்றும், சில அறிஞர்கள் இது இயற்கை வழிபாட்டினின்றும் தோன்றியது என்றும் கருதுகின்றனர். முதலை, மான், பறவைகள், புலி போன்றவை குலச்குறியீட்டுச் சின்னங்களாக கருதப்படுகின்றன. சேர, சோழ, பாண்டியர்களின் கொடிகளில் அமைந்துள்ள வில், புலி, கயல் போன்றவைகளும் குலக் குறியீட்டுச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.[46]

சங்க இலக்கியத்தில் குலக்குறியீட்டின் சின்னம் 'பொறி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[47] வீரர்கள் அணிந்திருந்த கழல்களும், இளம் பெண்கள் அணிந்திருந்த வேலைப்பாடமைந்திருந்த சிலம்புகளும் குலக் குறியீட்டுச் சின்னமாகக் கருதப்பட்டு வந்தன.[48] குலக் குறியீட்டு முத்திரைகள் கொடிகளிலும் வரையப்பட்டுள்ளன.[49] இவ்வாறு அமைந்துள்ள குலக் குறியீட்டுச் சின்னங்களே வழிபடுவதால் தீமை செய்யும் ஆவிகளால் மக்களினத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாது என்ற நம்பிக்கை நிலவியிருந்தது.

திராவிட மக்களால் நாகம் போன்ற ஊர்வனவும், கருடன் போன்ற பறப்பனவும் வழிபடு பொருள்களாகப் போற்றப்பட்டு வந்தன. அவை இன்று தெய்வங்களின் வாகனங்கள என்ற முறையில் கருதப்பட்டு இந்து சமய வழிபாட்டின் ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது.[50] ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் அந்நாட்டுப் பெரும் பறவையையும்(Emu) பாம்பையும், புழுக்களையும் பயபக்தியுடன் வணங்கி வந்தனர். ஆதிகால எகிப்தியர் முதலை, பாம்பு ஆகியவற்றைத் தெய்வமாக வழிபட்டனர். நியூ கினியன் அஸ்மர் பிரிவினர் கும்பிடுப் பூச்சிகளைத் தம்

மோடு தொடர்புடையனவாகக் கருதுகின்றனர். மிருகங்களின் குணநிசயங்கள், பயன்கள் அவை உணர்த்தும் தத்துவங்கள், அம்மிருகங்களைப் பற்றிய புராண இதிகாசக் கருத்துக்கள் ஆகிய காரணங்களைக் கருதிதிற் கொண்டே மிருகங்களை வணங்குகின்றார்கள் எனலாம்[51] தொடக்க காலத்தில் மனிதன் வழிபாட்டிற்கு குலக்குறியீட்டுச் சின்னங்களாகிய மரத்தையோ அல்லது கல்லையோ நட்டு வழிபட்டிருப்பான் என்ற ந. சி. கந்தையா பிள்ளையின் கருத்தும் எண்ணத்தக்கது[52]

மனித உருவமைத்து இறைவனை வழிபடுதல் (Anthropomorphism) : மனித இயல்புகளுடன் விளங்கிய வேதகாலத் தெய்வங்களுக்கு உருவம் அமைத்து வழிபடப்பட்டதாகக் கி. மு. 600-ஐச் சார்ந்த 'யாஸ்கா' என்பவர் கருதுகின்றார் அதற்குப் பிறகே எல்லாக் கடவுளுக்கும் உருவம் கொடுத்து வழிபடுகின்ற தன்மையும், ஓழுங்குறச் சிற்பங்கள் அமைத்து வழிபடுகின்ற தன்மையும் வளர்ச்சியுற்றிருக்கவேண்டும்.[53] கடவுளை வணங்குவதற்காகக் குறியீட்டுடன் (Symbolism) உருவங்கள் அமைக்கப்பட்டன. உலகத்தைக் கடவுளின் பாதமாகவும் உலகத்திற்கு அப்பாற்பட்ட ஆகாயத்தைக் கடவுளின் உடம்பாகவும், திசைகளைக் கைகளாகவும், ஆகாயத்துக்கு அப்பால் அவருடைய முகம் இருப்பதாகவும் சூரிய சந்திரர் அவருடைய கண்களாகவும் பெரியோர்கள் கற்பித்துக் கொண்டார்கள். மனித உருவம்போல் கடவுள் உருவத்தையும் அமைத்துக் கொண்ட போதிலும் கடவுள் மனிதனுக்கும் மேம்பட்ட ஆற்றலுடையவராய் உலகத்தையே கடந்து இருக்கிறார் என்பதைக் காட்டுவதற்காகவே சக்தியின் கூறிய காளிபோன்ற தெய்வங்கள் பல கைகள் உடையனவாகக் கற்பிக்கப்பட்டனை என்பது அறியற்பாலது.[54]

" மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும் "

என்றதனால் நால்வகை நிலத்திலும் மேவிய எனப்

பொருளாயிற்று. 'சிறப்பின் ஏனோர்' என்றதனால் சிறப்பு உடையார் மக்களும் தேவரும் ஆதலின், மக்கள் அல்லாதாரே தேவர் எனப் பொருளாயிற்று. 'படிமம்' என்பது 'பிரதிமா' என்னும் வடமொழித்திரிபு. அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின் கண் செய்து அமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன: பூசையும் விழாவும் முதலாயின என்று நேரே பொருள் கூறினார் இளம்பூரணவடிகள். இவ்வுரையால் பண்டைக் காலத்துத் தமிழ்நாட்டில் திருக்கோவில்கள் அமைத்து அக்கோயில்களில் இறைவனைப்போன்ற ஒரு படிவம் அமைத்து அதில் இறைவனைப் பிரதிட்டை செய்து வணங்கிவந்த உருவ வழிபாடு புலனாகும். திருவள்ளுவரும்

'வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்'
'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்'
'அறவாழி யந்தணன் தாள சேர்ந்தார்'
'இறைவன அடி சேராதார்' என்றவாறுகக் கடவுள் வாழ்த்தில் கூறியுள்ளமை, இறை வழிபாட்டினை உருவ வழிபாடாகவே கொண்டனர் என்றமைத்துச் சான்று களாக அமைகின்றன.[55] தற்காலத்தில் மக்கள் அவரவர் வண்ணத்திற்கேற்ப இறைவனைக் கற்பித்துக் கொண்டு பல்வேறு உருவங்களில் வழிபடுகின்றனர்.

தாய்த் தெய்வ வழிபாடு :

'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே'
'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
'தாயினும் சிறந்ததொரு கோயிலுமில்லை'

என்றெல்லாம் தாய்மையினைச் சிறப்பிக்கின்றோம். தந்தையினிடத்து தனயன் மிகநெருங்கி உறவாடுவதில்லை. வயது முதிர முதிரத் தந்தைக்கும் பிள்ளைக்குமிடையே உறவு ஒப்பற்றதாக மாறுது காட்சியளிக்கின்றது. எனவேதான் தாயின் தன்மையுடைய தெய்வத்தை

வழிபடுவது மிக எளிதாக அமைந்து விடுகின்றது.[56] பக்திவழிகள்-தாயாக பாவித்து வழிபடுதல், தோழனாக வழிபடுதல், குழந்தையாக வழிபடுதல், அடிமையாக (தாசன்) வழிபடுதல், நாயகனாக வழிபடுதல் என்ற ஐந்து விதமான நிலையில் அமைகின்றன. எல்லா வழிகளும் முடிவில்லாத பரம்பொருளை அடைய வழியே ஆனாலும் தாயாக வழிபடுவதில் சுலபமாக இறைவனை நெருக்கத் துடன் உரிமையுடன் கொண்டாட முடிகின்றது.[57]

தாய்த் தெய்வத்தை இரு வகையாக உருவகப் படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே நிலவி வருகின்றது. ஒன்று அவளை, எல்லாரையும் பெற்ற தாயாராகக் கருதுவது. மற்றொன்று என்றும் அழியாத கன்னியாகக் கருதுவது. முதல் உருவகம் 'மோடி' என்ற தாய்த் தெய்வப் பெயரில் காணப்படுகிறது. 'மோடு' என்றால் வயிறு என்று பொருள்.* எல்லோரையும் பெற்ற வயிறு பெரிதாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பெரிய வயிற்றை உடையதி தாய்த் தெய்வத்தைப் புதிய கற்கால மனிதன் (Neolithic man) சுட்ட மண்ணில் உருவாக்கி னான். இந்தச் சுடுமண் சிற்பங்கள் (Terracotta figurines) இந்தியாவிலும் பிற நாடுகளிலும் நிறையக் கிடைத்துள் ளன. இந்தத் தாய் தெய்வதிற்குப் பெரிய வயிறும் (Sterophygy), பெரிய கொங்கைகளும் காட்டப்பட்டுள் ளன. பெரிய புட்ட பாகமும் அமைந்துள்ளது இவை யெல்லாம் தாய்மையின் அடையாளத்தை மிகுத்துக் காட்டவே செய்யப்பட்டுள்ளன.

கன்னித் தெய்வம் என்ற கருத்தும் பழங்காலத்தது என்பதை அறியலாம். கன்னித் தெய்வம் பற்றிக் கி. மு.

---

* பெரும் பாணாற்றுப் படை அடி 458க்கு நச்சினார்க்கினியர் கூறிய விளக்கம். பெருங்கதையிலும் 'மோடேந்தரிகை' (இலா வண காண்டம் 106) என்று அழைக்கப்படுகிறாள். பிற்காலத்தில் மோடி என்பதற்குக் காளி, மந்திர தந்திரம் என்ற பொருள்கள் உண்டாயின.

ஆரும் நூற்றாண்டில் தோன்றிய ஐதித்திரிய ஆரண்யகத்தில் குறிப்பு வருகின்றமையால் கிறித்துவுக்கு முன் வட இந்தியாவிலும் கன்னியாகுமரித் தெய்வம் அறியப்பட்டிருந்தமை புலனாகும். முதல் நூற்றாண்டில் 'பெரிப்புளூஸ்' குமரி முனையிலிருந்த குகையையும் துறையையும் கூறும்பொழுது அங்கு வாழ்ந்த கன்னித் தெய்வத்தைப் பற்றியும் கூறியுள்ளார். எனவே கன்னித் தெய்வ வணக்கம் மிகப் பழமையானது என்பதை அறியலாம்.[58] மறைவு தோற்றத்தின் வாயிலாக உலகத்தைப் பற்றிய உண்மையை விளக்கும் தாய்த் தெய்வமாகிய சக்தி சான்றோர்க்கு இன்ப நுகர்ச்சியும் வீடு பேறும் அளிக்கின்றாள். புல்லாகி, பூண்டாகி, பறவையாகி, விலங்காகி, மனிதராய், தேவராய் இவ்வாறு விரும்பிய பிறவிகளையெல்லாம் எடுத்து வேண்டிய இன்பங்களையெல்லாம் அனுபவித்து விட்டு முக்தி வேண்டுபவர்களுக்கு வேண்டியாங்கு வகுத்தளிக்கின்றமையால் அகில உலகங்களுக்கும் அவள் அன்னையாக இலங்குகின்றாள். இயற்கையின் சக்திக்கு அழிவில்லை என்பதை பௌதிக நூல் வல்லுநர்கள் 'conservation of energy' என்பர். எல்லா உலகங்களையும் ஈன்ற பிறகும் நிறை குறையாது எந்நாளும் தன் மயமாயிருக்கின்றமையால் அவள் ஒரே காலத்தில் அன்னையாகவும் கன்னியாகவும் விளிர்கின்றாள்.[59]

இன்று தந்தை குடும்பத்திற்கு தலைவனாயிருப்பது போல் தாய் தலைவியாக ஒரு காலத்தில் இருந்தாள். அக் காலத்தில் தந்தையின் முதன்மை உண்டாகாமையால் பிள்ளைகள் தாய்வழி அறியப்பட்டனர். தாயே சொத்துக்களுக்கு உரியவளாக இருந்தமையால், சொத்து தாய் வழியாகப் பிள்ளைகள் அடைந்தது. தாயே எல்லா வல்லமையும் உடையவள் என நினைத்தமையால் அவர்கள் கடவுளைத் தாய் வழியில் வழிபட்டார்கள்.[60] தாய்த் தெய்வ வணக்கம், வேட்டைச் சமுதாயத்திலிருந்து

புராதன கால உழவுத் தொழில் தோன்றியதென்று மானிடவியலார் கருதுவதாக வானமாமலை கூறுகின்றார்.[61]

உலகத்தில் தாய்தெய்வ வழிபாடு தோன்றிய நிலை:

ஆஸ்திரேலியா, ஆடு மாடு மேய்க்கும் சமுதாயத்திலும், கலப்பை விவசாய சமுதாயத்திலும் தோன்றும் என சமூகவியலாரின் ஆய்வு முடிவுகள் தெளிவாக்குகின்றன.[62] ஈட்டி கண்டுபிடிக்கப்பட்ட பின் வேட்டையாடுதல் ஆண்களின் தொழிலாயிற்று. பெண்கள் உணவு சேகரிக்கும் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு ஆண்—பெண் பாலரிடையே வேலைப் பிரிவினை இருந்து வருவது எல்லா வேட்டைச் சமுதாயத்தினரிடையேயும் இன்றும் காணப்படுகிறது. பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் அலைய முடியாததால்தான் இயற்கையிலேயே இத்தகைய வேலைப் பிரிவினை ஏற்பட்டது. வேட்டையிலிருந்து விலங்குகளைப் பழக்கி வளர்க்கும் தொழில் தோன்றியது. வேட்டையில் கொல்வதற்குப் பதில் விலங்குகளைப்பிடித்துக்கொணர்ந்து வளர்த்தார்கள். ஆடு மாடு வளர்த்தல் வேட்டையாடிய ஆண்களின் தொழிலாகவே இருந்தது. உணவு தேடுவதிலிருந்து, குடியிருப்பின் அருகில் வைத்துப் பயிரிடும் தொழில் தோன்றியமையால் தோட்டம் பயிர் செய்தலும் பெண்களின் வேலையாகவே இருந்தது. கலப்பையை உழுவதற்குப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து விவசாயம் ஆண்களின் தொழிலாயிற்று. ஆப்பிரிக்காவில் கலப்பையைப் பயன்படுத்தியுள்ள இனக்குழுச் சமுதாயங்களில் இன்றும் இம்மாறுதல் நிகழ்ந்து வருவது உணரத்தக்கது. ஆண் பெண் சமூக உறவுகள் உற்பத்தி முறை மாற்றங்களுக்கேற்ப மாறுகின்ற பொழுது தந்தை வழி உரிமை முறை வலுப்படுகிறது. இச்செயல்பாட்டு முறை வேட்டையாடுதலோடு தொடங்குகிறது. ஆடு, மாடு

வளர்த்தலோடு வலுப்பட்டாலும் ஆரம்ப காலத்து விவசாயத்தோடு தாய் வழிக்கே திரும்புவது கருதத்தக்கது. ஆரம்ப காலத்தில் தாய்வழி உரிமை முறை இருந்ததென்றால் மிகவும் பின்தங்கிய மக்கள் தாய்வழி முறையையும் அவர்களைவிட முன்னேறிய மக்கள் தந்தை வழி முறையையும் பின்பற்றுகிறார்களென எண்ணவும் தோன்றும். வேட்டைப் பொருளாதாரம் தந்தை யுரிமையை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தது எனவும், வரலாற்று முற்காலத்தில் விரைவாக வேட்டைச் சமுதாயத்திலிருந்து விவசாய சமுதாயத்திற்கு மாறிய குழுக்களின் தாய்வழி உரிமை, அச்சமுதாயம் மாற்றமடைந்து பின்னும் தொடர்ந்து நீடித்தது எனவும் கூறலாம்.[63] ஆண்-பெண் உயர்வு தாழ்வுக்குக் காரணம் பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சியாகும். வேட்டைக்கு ஈட்டியைப் பயன்படுத்திய முற்காலச் சமுதாயத்தில் தாயுரிமை இருந்தது. வேட்டை வளர்ச்சிபெற்றபொழுது ஆண்களுக்குச் சமூகத்தில் உயர்வு ஏற்பட்டது. வேட்டைச் சமுதாயம் ஆடு, மாடு வளர்க்கும் சமுதாயமாக மாறிய பின் பெண்ணுக்குச் சமூகத்தில் உயர்வு ஏற்பட்டமையால் தாய்வழி உரிமை மீண்டும் அவர்களிடையே தோன்றியது என நவில்கின்றார் தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா.[64]

தேவர்களும் தேவிகளும் மனித உருவில் மனித சிந்தனையால் படைக்கப்பட்டவர்களே. ஆரம்ப கால விவசாய சமுதாயங்களில் பெண் தெய்வங்களே வழிபாட்டிற்குரியவையாக அமைந்தன.[65] மேற் கூறிய அனைத்துச் சான்றுகளின் துணை கொண்டு தாயாதிக்கச் சமுதாயமே முதலில் தோன்றியது என்பதையும் தாய்த் தெய்வ வழிபாடே உலகமெங்கும் முதலில் தோன்றியது என்பதையும் உணரலாம்.

புதியதொரு மனிதப் பிறவியை உலகிற்குத் தருபவனாகக் காணப்பட்டதாயும் அசாதாரணமான சக்தி

படைத்தவளாக இருந்தமையால் பெண்ணிடமே மந்திர சக்தி இயல்பாகக் குடிகொண்டது. சக்தி வழிபாடு அல்லது மோரன்னே வழிபாடு உலகமெங்கும் ஒரு காலத்தில் தோன்றியதற்குக் காரணமே, பெண்களோதி தெய்வாய மாந்திரீகராகவும் ஆக்கிவைத்தது. உயிர் போற்றும் புராதன மந்திரச் சடங்குகளிலிருந்தே பெண்களுடன் நெருங்கிய தொடர்புள்ள நம்பிக்கை, அன்னை வழி பாடாக பரிணமித்தது என்பதில் ஐயமில்லை. பின்னர் பிறப்புடன் மட்டுமன்றி இறப்புடனும் அன்னை வழிபாடு தொடர்பு பெற்றது. மனித உயிரை மட்டுமன்றி காலப்போக்கில் மனிதனுக்குத் தேவையான விலங்கு களையும் அவற்றின் வளத்தையும் பெருக்கவும் அன்னை வழிபாட்டு முறை பயன்பட்டது எனலாம். [66]

'தியாமத்' என்பவளே உலகத்தாய் என்று கருதப்படு கின்றாள். பாபிலோனியாவில் வணங்கப்பட்ட தியாமத் மிகப் பழங்கால தெய்வமாதலால் அதற்குப் போர்க் கருவிகள் எதுவுமில்லை. அதுவே ஆளுகிற ஆண்களை நியமித்தது என்றால் அது சரிவ வல்லமை உடையது என்பதை உணரலாம். மாரோடோக்கும் அவனுடைய முன்னோரிகளும் தியாமத்தின் வழித்தோன்றல்கள் என்று கதை கூறுகின்றது. தியாமத்தின் உடலிலிருந்து பூமி யையும் ஆகாயத்தையும் மாரோடோக் படைத்தான். இதிலிருந்து பூமியும் வானமும் தாயின் உடலிலிருந்து தோன்றியவை என்பது மாரோடோக்கை வணங்கியவர்களது கருத்து என்று எண்ணச் செய்கின்றது. [67]

சுமேரியர்களின் தாய்த் தெய்வமாக 'யூரிணேம்' கருதப்பட்டாள். இவளுடைய சுமேரியப் பெயர் இயாஹி. அம்மொழியில் இச்சொல்லுக்குப் புரு என்பது பொருள். யூதர்களின் படைப்புத் தெய்வமான 'யஹோவா' என்ற பெயர் இச்சொல்லிலிருந்துதான்

தோன்றியது எனவும் கருதுகின்றர் ஆராய்ச்சி யாளர்கள்.[68]

எகிப்தில் ஐஸிஸ்(Isis)தாய்த் தெய்வமாகக்கருதி வழி படப்பட்டது. பினீசியர், அசீரியர், கிரேக்கர், உரோமர், தூயதீதானியர், மெசுசிகர், பெருவியர் — முழுமுதற் கடவுளை அம்மையப்பர் வடிவாகவே வைத்து வழிபாடு செய்துவந்தனர். சாலடியர் தாய்த் தெய்வமாக இஸ்தர் (Istar) என்ற தெய்வத்தை வழிபட்டனர்.

'வீனஸ்' என்ற உரோம நாட்டுக்கிறிதீதுவ முற்காலத் தெய்வம் செழிப்பைத் தருவதற்காக வழிபடப்பட்டது. இது போலவே 'செரஸ்' என்ற தெய்வம் கிரேக்க இனக் குழுக்களால் வழிபடப்பட்டது.[69] வீனஸ் என்ற தெய்வம் தாய்தீ தெய்வத்தின் வளர்ச்சியே. தாய்தீ தெய்வம், குழு மக்களின் விவசாயத்தைக் கையாண்டு வாழ்ந்த மக்களின் தெய்வமாகவும் இனம் பெருக உதவு பவளாகவும் விளங்குகின்றமையால், இத்தெய்வம் குழுவின் சந்தான அபிவிருத்தித் தெய்வமாக, குழந்தைகளை அருளுவதற்காக வழிபடப்பட்டது. அதே தெய்வம் விவசாயத்தில் செழிப்பை அருளுவதற்கும் வழிபடப்பட்டது. அத்தெய்வத்தின் உருவங்கள் காலக் கிரமப்படி அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கிடைத்துள்ளன. மிகப் பழைய உருவங்களின் சில உறுப்புக்கள் மிகவும் மிகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. சில உருவங்கள் இயற்கைத் தராதர அளவிற்கும் குறைந்து செதுக்கப் பட்டுள்ளன. தலையில் முகம் தெரியாதபடி கூந்தல் சுருள் சுருளாயும் கைகள், கால்கள் சும்பியும் மார்புகள் உடலில் பாதி அளவிற்கு மேலிருக்கும். உடல் தடித் திருக்கும். இவ்வாறுகத் தாய்த் தெய்வமாக இருந்து செழிப்புத் தெய்வமான வீனஸின் உருவ அமைப்பைத் தற்காலக் கலைஞர்கள் நவீனக் கலைப்பாணி (Modern art) என்று கூறலாம். உண்மை அதுவல்ல என்பது தெளிவு

ஏனெனில் கிரேக்க வைத்தியர்கள் கருவுறுவது, குழந்தை வளரும் உறுப்பு இவற்றைக் கண்டறிந்து சொல்வதற்கு முன் கிரேக்கர்களும் உரோமரீகளும், குழந்தைப் பேற்றிற்கும் பெண்களின் மார்புகளுக்கும் தொடர்பு இருப்பதாக எண்ணியமையாலே அவ்வுறுப்புக்களை மிகைப்படுத்தி அமைத்தார்கள். செழிப்புத் தெய்வம் குழந்தை பெறும் சக்தியைப் பெண்களுக்கு அளிக்க அந்த சக்தி அதனிடம் இருக்க வேண்டும். அந்த சக்தி மார்பில் இருப்பதாக நம்பியதால் இவ்வுறுப்பு மிகைப்படுத்தப் பட்டது. இதன் வாயிலாக வீனஸ் என்ற கிரேக்கத் தாய்த் தெய்வம் உலகத்தில் தோன்றி அமைந்த நிலையினை உணரலாம்.

இந்தியாவில் பூ—தேவி என்றும் ஸ்ரீ என்றும் பூமியும் கலப்பையால் வரையப்பட்ட கோடும் பெண் தெய்வங்களாக வணங்கப்பட்டமையும் கருதத்தக்கது.[10]

மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த நாடுகளிலும் இத் தாய்த் தெய்வ வழிபாடு பரவியிருந்ததைக் கிரீத்து, எகிப்து, மொசப்படோமியா, ஆசியா மைனர் முதலிய நாடுகளில் சிங்க வாகினியாய் ஆயுதந் தாங்கிய தாய்க் கடவுளின் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆசியாமைனரில் இடபத்திலிருக்கும் தந்தைக் கடவுளும், தந்தைக் கடவுளுக்கு பக்கத்தில் சிங்க வாகனத்தின் மேல் அமர்ந்திருக்கும் தாய்க் கடவுளும் பொறிக்கப்பட்டுள்ள நாணயம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.[11]

இந்தியாவில் தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றம் :

இந்தியாவில் தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றத்தை 'மொகஞ்சதாரோ' நாகரிகத்தின் வாயிலாக உணரலாம். இந்நாகரிகம் திராவிடப் பண்பாட்டில் அரும்பிய தறுமலரே. புதை பொருள் ஆராய்ச்சியாளர்

சர். ஜான்மார்ஷல், மொகஞ்சதாரோ நாகரிகம் ஆரியரல் லாத திராவிடருடையது என்று கூறுகின்றார். திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகள் ஆதலின் அவற்றிற்கும் சுமேரியருடைய ஒட்டு நிலை மொழிக்கும் உள்ள தொடர்பை நன்கு ஆராய்ந்து உணரலாம் என்ற சர். ஜான்மார்ஷல் சிந்து வெளி மக்கள் பேசிய மொழி திரா விட மொழியாக இருந்திருக்க வேண்டும் என்பதற்குரிய சான்றுகள் தந்து விளக்கியுள்ளார்.[72] மொகஞ்சதாரோ, ஹரப்பாக் குகைகளில் கிடைத்த கல்வெட்டுக்கள் திரா விட மொழி அமைப்பு கொண்டவை என்று கூறுகின்றார் உருசியக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் ஜார்ஜ் ஹாரிட்.[73]

சிந்து வெளியில் கிடைத்த முத்திரைகளில், வேல் வேளாளன், வேளான் ஊர் என்னும் பொருள் தரும் வகையில் குறிப்புக்கள் அமைந்திருப்பதுடன், நாய், வேலூர் முதலிய சொற்களுக்குரிய குறிப்புக்களும் அம் முத்திரைகளில் அமைந்துள்ளன. இவற்றைவிடச் சிறப் பானது இங்கு காணப்படும் மீன் உருவம். பிற்காலத்திய ஆரிய நாகரிகம் மீனை இழிவாகக் கருதிய நிலை வேத கால வரலாற்றைச் சிறிதளவு அறிந்தவர்களுக்கும் விளங்கும். ஆனால் திராவிட நாகரிகத்தில் முற்றிலும் நேர் மாறான நிலையினைக் காண்கின்றோம். தமிழ் நாட்டில் காணப்படும் பல கோயில்களிலும் இந்த மீன் உருவம் மிகப் பலவாகப் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பாண்டிய மன்னர்கள் மீனையே தங்கள் இலச்சினையாகக் கொண் டிருந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆகவே சிறப்புறப் பொறிக்கப்பட்ட இந்த மீன் உருவம் சிந்து வெளி நாகரிகத்தையும் தொடர்புபடுத்துகிறது என்றால் அது மிகையாகாது என்று திருத்தந்தை ஈராசுப் பெருந்தகை பல சான்றுகள் தந்து நிறுவியுள்ளார்.[74]

இந்திரனும் அவனுடைய ஆரியர்களுமே இந்து வெளிப் பேரழிவிற்குக் காரணமான குற்றவாளிகளாக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. இருக்கு வேதத்தில் குறிக்கப் பெற்றுள்ள சிந்துவெளி நகரங்கள் ஆரியப் படையெடுப்பாளர்களால் கி. மு. 15-ஆம் நூற்றாண்டு அளவில் அழிக்கப்பட்டன என்பது இப் பொழுது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது என்று 'ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாகிஸ்தான்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார் மார்ட்டிமர் வீலர்.[75] பின்னிஷ் அறிவியல் அறிஞர்கள் மொகஞ்சதாரோ எழுத்துக்களை கப்பியூட்டரின் உதவியுடன் படித்துள்ளனர். அவர்கள் சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.[76] மேற்கூறிய ஐந்து சான்றுகளின் துணைகொண்டு மொகஞ்சதாரோ நாகரிகம் திராவிடருடையது என்பதை நிறுவலாம். எனவே அந்த காணப்படும் சக்தி வழிபாடும் திராவிடருடையது என்பது தெளிவாகின்றது. சிந்துவெளி நாகரிகத்திலே முதலிடம் பெற்று விளங்கியது தாய்த் தெய்வ வழிபாடே என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை முக்கியத்துவத்தின்படி வரிசைப்படுத்திய மார்ஷல், முதலில் அன்னைத் தெய்வத்தையே கூறியுள்ளார். பண்டைய திராவிட மக்களிற் பெரும் பகுதியினர் தாய் வழி உரிமை, தாயமுறை முதலியவற்றைக் கடைப் பிடித்தனர். இதன் காரணமாகப் பெண் தெய்வ வழி பாடு திராவிட மக்களிடையே பெருவழக்கமாயிருந்தது என்ச் சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.[77] சிந்து வெளி நாகரிகத்தை வளர்த்த மக்கள், பெண்தெய்வ வழிபாட்டை உடையவராய் அமைந்திருந்தனர். சிந்து வெளி நாகரிகத்திற்குச் சம காலத்தனவாகிய சிரிய, சின்ஞரிய, எகிப்திய நாகரிகங்களிலும் பெண்தெய்வங்கள் முக்கியமானவைகளாக விளங்கின என்று கூறப்படுவது

மேற்கூறப்பட்ட கருத்திற்கு ஆதரவாக அமைகின்றது. "சிரியாவிலே 'அசுதாத்' என்னும் தத்துவமும் சின்னஞ்சி யாவிலே சிவெலேயும் எகிப்திலே இசிஸ் கோட்பாடும் தோன்றிய அதே சமுதாய நிலையிலேதான் இந்தியாவில் சக்தி வழிபாடு தோன்றியிருத்தல் வேண்டும்" என ஆர். பி. சந்தா கருதுகின்றார்.

மழைய நாகரிகத்திலே அம்பா தேவியின் (Mother Goddess) வழிபாடு பிரபலமாக இருந்தது. அந்த அன்னை வழிபாடு பாரசீகத்திலிருந்து கிரீஸ் வரையிலும் பரவியிருந்ததாம். அம்பா வழிபாடாகிய 'அம்மா வழிபாட்டிலிருந்து' காளி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் ஊகம். அம்பா தேவிக்கு வாகனம் சிங்கத்தான். அவளும் போரின் ஆதி தெய்வமாகவும் வெற்றித் தெய்வமாகவும் கருதப் படுகின்றாள் என்பது கருததத்தக்கது.

மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் கிடைத்த பெண் வடிவங்கள் அனைத்தும் சிறப்புமிக்க 'சக்தி' அல்லது இயற்கை அன்னையின் (நிலமகள்) உருவங் களாக இருக்கவேண்டும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அச்சிலைகளைக் கூர்ந்து கவனித்த அறிஞர்கள் அவற்றை மூன்று வகை களாகப் பிரித்துள்ளனர். குழந்தையை அணைத்த வண்ணம் முகத்தில் அன்பு ஒளிவீசும் சிலைகள் அன்னையின் அன்பு நிலையையும், அமைதியும் அருளும் பொங்கி வழியும் அருள் நோக்கமுடைய சிலைகள் அன்னையின் அருள் நிலையையும், காண்போர் அஞ்சத்தக்க சினம் கொண்ட முகத் தோற்றமுடைய சிலைகள் அன்னையின் ரௌத்திரத்தையும் புலப்படுத்துகின்றன. அவை முறையே ஆக்கல், அளித்தல், அழித்தல் தொழில்களைக் குறிப்பிடு கின்றன. தொல் பழங்காலத்திலேயே இந்தியாவில் அன்னை வழிபாடு இருந்ததாகச் சிந்து வெளியில் கண்

டெடுக்கப்பட்ட அன்னையின் சிலைகள் அறிவுறுத்து கின்றன. பிற்காலத்தில் இந்து சமயத்தில் திராவிடப் பண்பாக விளங்கும் சக்தி வழிபாட்டின் மூலக் கரு முதலாகச் சிந்துவெளி அன்னை வழிபாடு விளங்குகின்றது என 'மோனியர் வில்லியம்ஸ்' கருதுகின்றார். [79]

சிந்து வெளியிற் கண்டெடுக்கப்பட்ட ஓர் இலச்சினையில் ஆடைகளின்றி பெண் தெய்வம் ஒன்று காணப்படுகின் றது. நீண்ட கூந்தலும் கைகளில் காப்புகளும் காணப்பட அவ்வன்னைத் தெய்வத்திற்கு மக்கள் உருவங்களும் விலங்கு உருவங்களும் அடிபணிந்து அஞ்சலி செய்து நிற்கின்றன. [80] சிந்து வெளியில் கிடைத்துள்ள மற் றொரு இலச்சினையில் நிலமகளைத் தாயாக உருவகப்படுத்தி அவள் உலக மக்களுக்குத் தேவைப்படும் இயற்கைப் பொருள்களை ஈன்றெடுப்பதைக் காட்டும் சித்திரம் ஒன்று செதுக்கப்பட்டிருக்கிறது. பெண் ஒருத்தி தலைகீழாக நிற்கிறாள்; அவள் கருவிலிருந்து செடி ஒன்று வெளிப் படுவதைப் போன்ற சித்திரம் காணப்படுகிறது. இதனால் சிந்துவெளி மக்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருள் களை, நிலமகள் தந்துதவுகிறாள் என்பதனை அறிந்து, நில மகளைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர் என்பதை உணரலாம். [81]

சிந்து வெளிப் பெண் தெய்வத்திற்கும் சக்தியின் கூறுகிய கொற்றவைக்கும் (பழந்தமிழ் மக்களின் வெற்றித் தெய்வம்) உள்ள உண்மையான தொடர்பினை இன்றைய ஆராய்ச்சி நிலையில் தெளிவாகக் கூறுவதற்கு இல்லையெனி னும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு என அறிஞர் மார்ஷல் கூறியிருப்பது கருதத் தக்கது. [82] ஆரியருக்கு முற்பட வாழ்ந்த பூர்வீகக் குடி மக்களிற் சிலர் இந்து சமயத்தை ஏற்கவில்லை. அத்தகைய மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு மறைந்து விட வில்லை என்பதை நினைவுறுத்துகின்றது. இதனையொட்டி,

இந்தியாவிலுள்ள ஆதிவாசிகளிடையே நிலவும் பிலிமக்கா புடுபுடிகி, தார்ஜு, டொம், கூவா, கங்க நதிக்கரை, ஒக்கரை, கங்கை கொல்லா, அத்தி, ஏலவை, இதிகை என்ற பெண் தெய்வங்களின் நீண்ட பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளார் ஏரன்பெல்சு.[83]

வேத கால சக்தி வழிபாடு :

இருக்கு வேதத்தில் அன்னை வழிபாட்டைப் பற்றிய குறிப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை. உருத்திரனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'அம்பகம்' என்னும் சொல்லை இருக்கு வேதம் பயன்படுத்துகின்றது. ஆனால் பிற்காலத்திய அன்னை வழிபாட்டோடு அஃது எத்தகைய தொடர்பும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. யஜுர் வேதத்தில்தான் 'அம்பிகை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. தைத்திரீய ஆரணியகத்தில் முதன் முதலாக உருத்திரன், உமை எனப்படும் அம்பிகையின் கணவராகக் குறிப்பிடப்படுகிறார்.[84] தைத்திரிய ஆரணியகம், கேன உபநிடதங்களில் உமை, பார்வதி முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. வட இந்தியாவில் குவிச்சு (Huvishka) அரசன் காலத்தில் சிவனோடும் சிவன் இல்லாமலும் உமையின் வடிவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வழங்கின. அசெஸ் (Azos) என்னும் இந்து சித்திய அரசனின் நாணயங்களில் சிங்க வாகனத்திலிருக்கும் துர்க்கை வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.[85] 'உமா' என்ற பெயரைப் பற்றி ஆராய்ந்த வட மொழி அறிஞர்கள் 'விதியா' என்னும் பொருளிலேயே அச்சொல் யஜுர் வேதத்திலும் உபநிடதங்களிலும் கையாளப்பட்டதாகக் கூறுகின்றனர். எனவே 'அம்மா' என்னும் திராவிட மொழிச் சொல்லின் சமஸ்கிருத ஆக்கமாகவே 'உமா' என்னும் வடமொழிப் பெயர் அமைந்திருக்கக் கூடும் என எண்ணலும் தகும். ஆரிய வேதமாகிய இருக்கு வேதத்தில் பிருதிவியாகிய பூதேவிக்குப் பூசை செய்ததாக இரண்டு இடங்களில்

குறிப்பு வருகிறதேயொழிய சக்தி பற்றிய குறிப்பு காணப்படவில்லை.[86]

இலக்கணம் கூறும் சக்தி வழிபாடு:

வேந்தன் ஏவலால் ஆகோடற்குச் செல்லும் வெட்சி மறவர் தாய்த் தெய்வமாகிய கொற்றவையை வணங்கிச் செல்வர் என்பது புறத்திணை இயலில் நூற்பா நான்கில் தொல்காப்பியரால் உணர்த்தப்பட்டுள்ளது.

'மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

(தொல்: புறத்திணையியல்: 4)

என்றவாறுகப் போர்த் தெய்வமாகிய கொற்றவையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"கொடி நிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

(தொல்: புறத்திணை: 33)

என்ற நூற்பாவில் அமைந்துள்ள 'வள்ளி' என்பதைச் சக்தி வழிபாட்டிற்குரியதாகக் காட்டி விளக்கம் தருவர் உரையாசிரியர்கள் எனக் குறிப்பிடுகின்றார் அ. மு. பரமசிவானந்தம்.[87]

புறப்பொருள் வெண்பா மாலையில் வெட்சிப் படலத்தில் கொற்றவை நிலை என்னும் துறையில் கொற்றவை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

"ஒளியினீங்கா விறற் படையோள்
அளியினீங்கா அருளுரைத் தன்று"

(வெட்சிப் படலம்: 19)

ஆனிரைகளைக் கவர்ந்து வருவதற்காகச் செல்லும் பகை வீரர்கள் கொற்றவையின் இரக்கத்தினின்றும் நீங்காத அருட் சிறப்பை வியந்து கூறியது என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும்

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி பலிபடைக் கொற்றவை — மீளி
அரண் முருங்க ஆகோள் கருதினடையார்
முரண் முரங்கத் தான் முந்துறும்" (வெட்சிப்படலம்: 19)

கொற்றவையின் கொடி, அரிமா எழுதப்பட்ட அழகிய கொடியென்பது இவண் கூறப்பட்டுள்ளது. கொற்றவை பசிய நிறமுடைய கிளியையும், பாய்கின்ற கலையாகிய வரியினையும், பேய்கள் மிகுந்த படையினையும் உடையவள் என்பதையும் அறியலாம்.

ஒரு தலைவர் பகைவருடைய அரண்கள் அழியும்படி அவர்தம் பசுக் கூட்டங்களைக் கைப்பற்றக் கருதிய விடத்தே, அப்பகைவருடைய மாறுபாடு கெடும்படி அத் தலைவன் படை எழு முன்பே எழுந்தருளும் தன்மை படைத்தவள் கொற்றவை என்பதும் கூறப்பட்டுள்ளது. இதன் வாயிலாகக் கொற்றவையினை அக்காலத்தில் மக்கள் வழிபட்டனர் என்பதும் அதன் பொருட்டுக் கொற்றவை அருள் செய்கின்ற தன்மையும் புலனாகின்றது.

வஞ்சிப் படலத்திலும் கொற்றவை நிலை என்ற துறையில் கொற்றவையைப் பற்றிக் கூறுகின்றார் புறப் பொருள் வெண்பா மாலை ஆசிரியர்.

"நீடோளான் வென்றி கொள்கென நிறைமண்டை
வலனுயரிக்
கூடாரைப் புறங்காணுங் கொற்றவை நிலையுரைத்தன்று"
(வஞ்சிப்படலம்: 5, கொற்றவை நிலை)

வஞ்சி வேந்தனுக்கு வெற்றியருளுகின்ற கொற்றவை யினது அருளுடைமையைப் பாராட்டியது கொற்றவை நிலை என்னும் துறையாம் என்றவாறுகக் கூறியுள்ளார் இலக்கண ஆசிரியர். கொற்றவைநிலை என்றது அவளது திருவருள் மாண்பினையே யாகும்.

"அணங்குடை நோகிலை பொரி புழுக்கல் பிண்டி
இணங்குடர் நெய்த் தோர் நிறைத்துக் — கணம் புகலக்
கையிரிய மண்டைக் கண்மோடி காவலற்கு
மெய்யிரியத் தான் முந்துறும்"

(வஞ்சிப்படலம்: 5, கொற்றவை நிலை)

எள்ளுருண்டையும் நெற்பொரியும் அவரை துவரையும் அவலும் நிணரும் குடரும், குருதியும் ஆகிய இவை யிற்றால் நிறைவித்துத் தனது பூதத்திரள்கள் விரும்பித் தனது கையிலே இருத்திய மண்டையையும் பூதக்கணங் களையும் உடையவளாகக் கொற்றவையைப் படம் பிடித் துக் காட்டுகின்றார் புறப்பொருள் வெண்பாமாலையார். இத்தகைய கொற்றவை அரசனுக்குப் பகை கெட்டோ டும்படி தானே முற்பட எழுந்தருளும் தன்மையுடைய வள் என்றும் உணரலாம். போர் மறவரின் செயலைச் சிறப்பித்தோதலும் கொற்றவை நிலை என்னும் துறையே யாம் என்பதை,

"மைந்துடை யாடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுவென மொழிப"

என்ற நூற்பாவினால் கூறுகின்றார் புறப்பொருள்வெண்பா மாலையாசிரியர். இவ்வாறு இலக்கண நூல்களாகியத் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பா மாலையும் சக்தியின் கூறுகிய கொற்றவை பற்றிக் கூறுகின்றன.

தமிழிலக்கியத்தில் சக்தி வழிபாடு

சங்க இலக்கியத்திலும் மணிமேகலை, சிலப்பதிகாரத் திலும் சில முக்கிய குறிப்புக்கள் சக்தியைப் பற்றி உள் ளன. நிகண்டுகளிலும் தாய்த் தெய்வத்தின் கூறுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இச்செய்திகளை ஆராய்ந் தால் மூன்று வகையான தாய்த் தெய்வங்களின் கருத்துக் கள் இலக்கியத்தில் காணப்படுவதைக் குறிப்பிடலாம். பழந்தமிழரிகளின் தாய்த் தெய்வம் கொற்றவை என்பது தெளிவாகின்றது. இந்திய ஆரியரது கலப்பால் தோன்றிய சக்தியின் கூறுகிய காளி பற்றிய செய்திகளையும் இலக்கி

யத்திலும் காணலாம். இவை மட்டுமன்றி திராவிடருக்கும் முற்பட்ட இந்தியாவில் குடியிருந்த பழங்குடி மக்களான ஆஸ்டிரிக் (Austric) இனத்தாரிடையே வழங்கிய தாய்த்தெய்வத்தைப் பற்றியும் அறியலாம். பெருங்கதை ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள சக்தி பற்றிய குறிப்புக்களைப் பின்னர் வரும் கட்டுரைகளில் ஆராய்வோம். மற்றும் பக்திக் காலமாகிய பெரிய புராண காலத்தில் அமைந்துள்ள சக்தி பற்றிய நிலையினையும் பாவை நோன்பு பற்றிய செய்திகளையும் பிறகு விரிவாக காண்போம்.

பல்லவர் காலத்தில் சக்தி வழிபாடு:

முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தலைவராகப் பணியாற்றி வாதாபியை முற்றுகையிட்டு இரண்டாம் புலிகேசியின் மேல் மாபெரும் வெற்றி கொண்ட சிறுத்தொண்ட நாயனார் காலத்தில் காபாலிகர், காளாமுகர், பாசுபதர் என்னும் சமயத்தைச் சார்ந்த வைராகிகள் தமிழகத்தில் உலவி வந்தனர் என்று அறியலாம். அவர்கள் சக்தி வழிபாடு செய்வதுடன் தேவிக்கு நரபலி கொடுக்கவும் தம் உயிரையே அவளுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கவும் அஞ்சாதவர்கள். அத்தகைய வைராகி வேடத்திலே சிவபெருமான் வந்து சிறுத்தொண்டரை அண்மித் தமக்குப் பிள்ளைக்கறிச் சமைத்துப்போடவேண்டுமெனக் கேட்டதாகவும் பெரியபுராணத்தின் வாயிலாக அறியலாம்.[88]

காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் துர்க்கை, காளி முதலிய பல வடிவங்களைக் காணலாம். இவ்வடிவங்களைக் கண்ட டாக்டர் ஓகெல என்பவர் "ஒவ்வொரு சிற்பமும் காளிக்குத் தலையை அறுத்துக் காணிக்கையாகத் தரு தலையே குறிக்கிறது இச்செயல் பக்தர்தம் மன உறுதியை நன்கு காட்டுகிறது" என்று கூறுகின்றார்.[88*] எனவே காளிக்குத் தலையை அறுத்துக் காணிக்கையாகத்தருகின்ற அளவு வீரவழிபாடாகச் சக்தி வழிபாடு பல்லவர் காலத்தில் அமைந்துள்ளது.

குடவரைக் கோயில்களில் பல்லவர்கள் கொற்ற வையை (துர்க்கை) எருமைத் தலைமேல் நின்ற தேவியாக, நான்கு கைகளுடன் ஆழியும் சங்கமும் அபயமளிக்கும் கையும், துடைமீதமர்த்திய கையுமாகக் காட்சியளிப்பது போல அமைத்துள்ளனர். சக்தியின் சிறு தெய்வமாகக் கருதப்படும் திரௌபதி இரதம் என்ற கோவிலில் தேவி யாகிய கொற்றவையின் சிலை அமைத்துள்ளனர். ஊரின் வடபுறத்தே தாய்மார் எழுவருக்குக் கோயிலெடுப்பிக்க வேண்டுமென்று 'வாஸ்து' நூற்கள் கூறுவதனைக் கருத்தில் கொண்டு பல்லவர்கள் தாய்மார் எழுவரின் கோயிலையும் அமைத்துள்ளனர். எனவே பல்லவர்கள் காலத்தில் இறைவிக்கென தனிக்கோயில்கள் ஏற்படாவிட்டாலும் வழிபாடு சிறப்புற்று விளங்கியது என்பது அவர்கள் அமைத்துள்ள சிற்பங்களிலிருந்தே விளங்கும்.[89]

சோழர் காலத்தில் சக்தி வழிபாடு:

பல்லவர் காலத்தும் பிற்காலச் சோழர்காலத்து முற் பகுதியிலும் சிவன்கோவிலில் அம்மனுக்கென்று தனிக் கோவில் ஏற்படவில்லை. இறைவன் கருவறையிலேயே 'போக சக்தி அம்மன்' எனத் தனித்திருமேனி வைத்து வழிபடப்பட்டது. கி. பி. 11-ம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரனது எண்ணாயிரம் கல்வெட்டே முதன் முத லாக அம்மன் தனிக்கோவிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அதன்பிறகே அம்பிகைக்குத் தனிக் கோயில்கள் எடுக்கப் பட்டன என நவில்கின்றார். மா. இராசமாணிக்கனார்.[90] தஞ்சையிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் பிற் காலத்தில் அம்மன்கோவில்கள் தோன்றின. ஏழு கன்னி யரிக்கும் 'ஜேட்டா தேவிக்கும்' பிறகு கோயில் இல்லை என்று கூறுகின்றார் திரு. அ. தட்சிணாமூர்த்தி.[91] விசயா லய சோழன் (கி. பி. 850-71) தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின் சின்னமாக 'நிசும்பசூதினி' என்ற கோயிலை எழுப்பியது மேற்கூறிய இருவர் கூற்றையும்

மறுக்கும் வண்ணம் அமைந்துள்ளது.[92] ஆனால் விசயாலய சோழன் நிசும்பசூதினி என்ற கோயிலை எழுப்பியதைக் கல்வெட்டு சாசனம் கூறுகின்றது.[93] முதலாம் இராசராசனுக்குப் பதினேந்து மனைவியர் இருப்பினும் தந்தி சக்தி விடங்கி என்பவளே பட்டத்தரசியாகத் திகழ்ந்தாள் என்பதும் இவளுக்கு லோகமகாதேவி யென்று ஒரு பெயர் உண்டு என்பதும் கருததீதக்கது.[9], வளஞ்சியர் என்ற வாணிகக் குழுவினைப் பற்றி முதலாம் இராசேந்திர சோழன் காலத்துக் காட்டூர்க் கல்வெட்டு ஒன்று விரிவான செய்திகளைக் கூறுகின்றது. வீரவளஞ்சிய சமயத்தைப் பாதுகாப்பவர்கள் இவர்களே என்றும் இவர்கள் வாசுதேவன், கந்தழி, வீரபத்திரன் ஆகிய கடவுளரிடம் தோன்றியவர்கள் என்றும் 'பட்டாரகி' (துர்க்கை)யை வழிபடுபவர்கள் என்றும் அக் கல்வெட்டு கூறுகிறது.[95] இதன் வாயிலாக வளஞ்சியர் என்ற வணிகக் குழுவினரும் சக்தியின் கூறுகிய துர்க்கையினை வழிபட்ட செய்தியை உணரலாம். சோழ மன்னர்கள் கோயில்களில் உள்ள அம்மன் மடிவங்களுக்கு முத்தாலும், பவழத்தாலும், மணிகளாலும் பொன் தகைகள் இழைத்து அணிவித்தமையையும் அறியலாம்.[96] காளி, பிடாரி, சப்த மாதர்கள், துர்க்கை ஆகிய தெய்வங்களின் வழிபாடும் சோழர் காலத்தில் பெருகியதை உணரலாம்.[97]

நாயக்கர் காலச் சக்தி வழிபாடு

மதுரையை ஆண்ட நாயக்கர்களும் கோபுரங்கள் அமைத்தும் சிற்பங்கள் அமைத்தும் ஓவியம் தீட்டியும் தொண்டுபுரிந்தனர். சக்தி கோவிலாகிய மீனாட்சியம்மன் கோயிற் சிற்பங்களும் அங்கு கட்டிய ஆயிரக்கால் மண்டபச் சிற்பங்களும் போற்றத்தக்கன. மீனாட்சி கோயிலில் அவர்கள் அமைத்த காளி நடனம் ஆடுவது போன்று அமைத்த சிற்பம் உயிரோட்டம் உள்ளதாக அமைந்துள்ளது.[98] நாயக்கர் காலத்தில்தான் சக்தி வழிபாட்டைச்

சிறப்பிக்கும் நவராத்திரித் திருவிழா புதியதாக நாட்டில் நுழைந்தது. சக்தி வழிபாட்டினைச் சிறப்பிக்கும் வகையில் மீனாட்சியம்மன் திருக்கலியாண விழாவும் தேரோட்ட விழாவும் சிறப்புற நடக்கத் திருமலை நாயக்கர் பல ஏற்பாடுகளைச் செய்தார் என்பதும் உணரத்தக்கது.[99]

திருமலை பூபதி சில காலமாக மண்டைச்சளி நோயால் துன்புற்று நலிந்திருந்தார். பலவகை மருந்துகளை அருந்தியும், திருவரங்கம், திருவானைக்கா கோயிலில் பல நேர்த்திக் கடன்கள் செய்தும் அந்நோய் நீங்கவில்லை. மதுரை மீனாட்சியின் அருளால் மண்டைச்சளி நோய் முற்றும் நீங்கியது. அன்று முதல் சக்தி வழிபாட்டில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். பின்னர் தினமும் மதுரை மீனாட்சியை வழிபட வேண்டும் என்பதற்காக கி. பி. 1634-ல் தலை நகரைத் திருசிரபுரத்திலிருந்து மதுரைக்கு மாற்றியதாகக் கூறப்படுகின்றது. நாட்டு வருவாயில் இலட்சம் பொன்னிற்கு ஆயிரம் பொன் வீதம் சக்தி வழிபாட்டிற்கும் நாற்பதினாயிரம் பொன் விழாக்களுக்கும் எழுதி வைத்தார்.

"நன்னுதல் அங்கயற்கண்ணி
தனக்கு நலம் பெறவே
உன்னத மாகுங் கொடிக்கம்பம்
மாபலிபீடமுடன்
சொன்னம் அளித்துப் பொன் பூசுவித்
தான் சுகபோகன் எங்கள்
மன்னன் திருமலை பூபன்
மதுரை வரோத யனே"

என்னும் செய்யுளால் பலிபீடம், கொடிக் கம்பங்கள் அமைத்துப் பொன் தகட்டுக் கவசம் இட்டு அழகுபடுத்தியை செய்தியும் அறிகிறோம்.

திருசிரபுரத்திலிருந்து மதுரைக்கு மாற்றி அங்கே நிலையாக வசிக்கத் தொடங்கியதும் மதுரை மீனாட்சி

யம்மை கோயிலின் உண்மை நிலையை அறிந்து கொண்டார். அங்கயற்கண்ணியம்மை ஒரு நாள் நாயக்கர் கனவில் தோன்றி 'திருமலையே என்னை ஒருவரும் கவனிக்கவில்லையே' என்று, சொன்னதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. உடனே திருமலைநாயக்கர் கோயில் ஆட்சியைத் தானே ஏற்று, சக்திக்குச் சிறப்புடன் வழிபாட்டினைச் செய்து வந்தாரெனவும் கூறப்படுகிறது. மீனாட்சி அம்மன் கோவிலுக்கு இரு பெரும் தேவர்களைத் திருமலை நாயக்கர் செய்து வைத்தமை, இவர்தம் சக்தி வழிபாட்டினை நன்குணர்த்தும். எனவே திருமலைநாயக்கர் காலத்தில் சக்தி வழிபாடு உச்சநிலையை அடைந்திருந்தது எனவும் கருதலாம்.[100]

தற்காலத்தில் சக்தி வழிபாடு

சிந்துவெளி நாகரிகப் பெண் தெய்வம் பிற்கால இந்து சமயத்தில் சக்தியாக மிளிர்ந்தாள். இச்சக்தியையே தற்காலத்தில் பல உருவங்களுடன், பல பெயர்களுடன் அவரவர் சமயத்திற்கேற்ற வகையிலும் பண்பாட்டிற்கேற்ற வகையிலும் வழிபட்டு வருகின்றனர். இராமகிருஷ்ண பரமஹம்சர், "ஒரு மனைவி தன் கணவனிடம் காட்டும் அன்புபோல் ஒரு பக்தன் தான் இட்ட தெய்வத்திடம் அன்பு காட்டுவதாகவும், ஒரு பெண் தாய், தந்தை, சகோதரன், சகோதரி போன்ற உறவினர்களிடம் காட்டும் மதிப்பு போல் பிற மூர்த்திகளிடம் மதிப்புக் காட்டலாமென்றும், ஆயின் கணவனே ஒரு பெண்ணிற்கு எல்லாமாகி விளங்குவது போல் இட்ட தெய்வமே பக்தனுக்கு எல்லாம் என்றும் கூறுவர்." இவ்வாறு கூறியதோடு சக்தியின் கூறுகிய காளிதேவியினை இட்ட தெய்வமாகக் கொண்டு வழிபடவும் செய்தார்.[101] காளிகாதேவி என்னும் சக்தியே பிரமம்: பிரமமே காளிகாதேவி, கிரியா முகிதமாயிருக்கும் பொழுது சக்திதேவி" என்றும் கூறுகின்றார்.[102] இங்கு கிரியை வெளிப்பட்டு

நிற்கும் பொழுது பிரமம் என்பதே கருத்து. காளிதாசர் போன்ற காளி பக்தர்களும் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தனர் என்பது கருதத்தக்கது.

அருணகிரிநாதரின் காலத்தில் சாக்தரின் இயக்கம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது. அப்பொழுது சக்தி வழிபாட்டினரான சம்பந்தாண்டார் என்பவர் வாழ்ந்ததையும் அறியலாம். பாரதியார், பாரதிதாசன், ச. து. சு. யோகி போன்றோரும் சக்தி உபாசகர்களாக இருந்தனர் என்பது உணரத்தக்கது. அவரிகளின் கண்ணோட்டத்தில் அமைந்த சக்தியின் நிலையைப் பின்னர் அமையும் கட்டுரையில் காணலாம்.

தற்காலத்தில் சக்தியினை வழிபடும் பொழுது பொங்கலிட்டுப் படைத்து வழிபடுவர் ஒரு சாரார். பழங்காலத்தைப்போலக் குருதிப் பலி கொடுத்து வழிபடுவோர் மற்றொரு சாரார். இரு சாரரும் தாய்த் தெய்வத்தை வழிபட்டாலும் குலமுறைகட்கேற்ப மாறுபட்ட வழிபாட்டு முறைகளைக் கொண்டு இலங்குகின்றனர். தற்காலத்தில் வாழ்ந்து வரும் நரிக்குறவர்கள் சக்தி வழிபாட்டில் வகிக்கும் இடத்தைக் ஆராய்வோம். நரிக்குறவர்களிடையே எருமை மாடு பலி கொடுப்பவர்கள், ஆடு பலி கொடுப்பவர்கள் என இரு பெரும் முக்கிய பிரிவுகள் உள்ளன. ஆடுபலி கொடுக்கும் பிரிவினரிடையே குஜராத்தி, மேவாடு, தாபி, சாலியோ என நான்கு வகைச் சாதிகள் உள்ளன. குஜராத்திகள் பார்வதம்மாள் (பார்வதி)யும், மேவாடுகள் பரதமீனாட்சி அல்லது மதுரை மீனாட்சியையும், தாபி குழுவினர் காளியையும், சாலியோ குழுவினர் கன்னியம்மாவையும் வழிபடுகின்றனர். மணமுள்ள பொழுது குலதெய்வங்களுக்குப் பூசை போடுகின்றனர். காளிக்காயினும் தூக்கைக்காயினும் ஓர் ஆடு பலியிடப்படும். காளி, கள் அல்லது சாராயத்தையே விரும்புவதால் ஆலயத்தில் இரண்டு பாட்டில்

கள் அவளுக்குப் படைக்கப்படுகிறது. பூசாரி தனது சிறிய உருண்டை வடிவமான மணிகளுடன் கூடிய இரத்தம் தோய்ந்த ஆடையையே அணிந்து கொள்கிறார். அதன் பின் ஆட்டைப் பலிகொடுத்து அதன் இரத்தத்தைத் தேவதைக்குப் படைக்கின்றார். பின்பு தானும் அதனைக் குடிக்கின்றார். இம்முறையில் தற்காலத்தில் நாகரிகத்தின் கீழ் நிலைகளில் உள்ள நரிக்குறவர்கள் சக்தியை வழிபடுகின்றனர்.[103] இவர்களுடைய சக்தி வழிபாட்டு முறை பண்டைக்கால மக்களுடைய பூசை முறைகளை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



சான்று விளக்கம்

1. Tamil Lexicon. Page 308
2. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர்
3. செந்தமிழ் அகராதி — தொகுப்பாசிரியர்
   ந. சி. கந்தையா பிள்ளை, பக்கம் 669
4. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி
   —ச. பவானந்தம்பிள்ளை, பக்கம் 348
5. கழகத்தமிழ் அகராதி — கழகப்புலவர் குழுவினர், பக்கம் 754
6. Encyclopaedia Britannica — Volume No. 23, Page 809
7. காஞ்சிபுராணம் பாடல் எண் 249
8. நாலாயிரத் திவ்யபிரபந்தம் - திருவாய்மொழி நூற்றந்தாதி
   பாடல் எண் 29
9. திருக்கோவையார். கொளு 214
10. காலடியார். பாடல் எண் 309
11. சிலப்பதிகாரம். 3 : 120
12. ibid. 9 : 40
13. புறநானூறு. பாடல் எண் 10
14. குறுந்தொகை. பாடல் எண் 9
15. தொல்காப்பியம் மூலம். 1057 : 3
16. ibid 1106 : 3
17. ibid 1361 : 1
18. Journal Vol. IV — S. Sathiyamoorthy, Page 39
19. கலைக்களஞ்சியம் — பக்கம் 451
20. Prof. Sundaram Pillai Commemoration Volume
    [Religion and Philosophy]
    —Subramonya Sastri, Page 39
21. 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்'
    — கலாநிதி க. கைலாசபதி, பக்கம் 80

22. கலைக்களஞ்சியம் — பக்கம் (452—53)

23. Elementary forms of Religious life
—Emile Durkheim, Page 48

24. Primitive Culture — E. B. Tylor, Volume I Page 424

25. Anthropology : The study of Man —Hoebel, Page 574

26. தமிழர் பண்டிகைகளும் பண்பாடும்
— எஸ். நடராஜன், பக்கம் 45

27. விளையுகர் வழிபாடு — P. ஜெயா, எம்.ஏ., பக்கம் 4

28. நடுகல்லிலிருந்தோ தெய்வமும் கோயிலும் ?
— டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர்
பக்கம் 274

29. 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்'
— கலாநிதி க. கைலாசபதி, பக்கம் 59

30. நடுகல்லிலிருந்தோ தெய்வமும் கோவிலும் ?
— டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர்
பக்கம் 274

31. ibid. பக்கம் 276

32. ibid. பக்கம் 270

33. பண்டைத்தமிழரின் பேய்கள் பற்றிய கருத்து — தமிழவன்,
ஆராய்ச்சி, டிசம்பர் 1971. பக்கம் 440

34. Aboriginal Siberia — Marie A. Czaplica. Page 243

35. ibid. Page 244

36. Webster. Ibid. Page 191

37. A social History of the Tamils — K. K. Pillai

38. சிவலிங்க வழிபாடு — சி. சத்தியமூர்த்தி, பக்கம் 9

39. Tree Worship and ophiolatory
— G. Subramania Pillai, Page 1

40. New light on the Indus Civilization
— K. N. Sastri, Page 38

41. An introduction to the study of Indian History
— D. D. Kosambi

42. Tree worship and Ophiolatory
G. Subramania Pillai, Page 84

43. சிந்துவெளிதரும் ஒளி — க. த. திருநாவுக்கரசு

44. An introduction to Social Anthropology
— D. N. Majumdar and T. N. Madan, Page 122

45. Primitive Culture. Volume I Page 402 — Tylor

46, புறநானூறு. 99 : 7—8

47. புறநானூறு 39 : 14—16, 58 : 29—31

48. ibid 281 : 9; 341 : 3

49. ibid 56 : 4—6; திருமுருகு : 389, 219, 227

50. ஆரியர் வாழ்வியலில் திராவிடப் பண்புகள்
— பெ. திருஞானசம்பந்தன்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பொன்விழா மலர் (1970)
பக்கம் 89

51. மிருகங்களும் தமிழர் வழிபாட்டு முறையும்
— கலாநிதி வி. கே. கணேசலிங்கம்

52. "சிவன்" — ந. சி. கந்தையாபிள்ளை

53. Development of Religion in South India
— K. A. Neelakanta Sastri, Page 27

54. சிவன் திருமால் உருவ அமைப்பு
— மயிலை சீனி. வேங்கடசாமி,
A Glimpse of Tamilology — Editor V. Sp. Manickam,
பக்கம் 45

55. இறைவழிபாடு — திரு. பி. ஆர். புருஷோத்தம நாயுடு,
பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா
மலர். பக்கம் 291

56. கடவுளின் வடிவங்கள் — சுவாமி சிதபவானந்தர்

57. சாக்தம் — செந்தில் துறவி, பக்கம் 1

58. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு
— பி. எல். சுவாமி, 'ஆராய்ச்சி' மலர் : 3, பிரிவு : 2

59. கடவுளின் வடிவங்கள் — சுவாமி சித்பவானந்தர்

60. சைவசமய வரலாறு — ந. சி. கந்தையாபிள்ளை, பக்கம் 13—16

61. முருகவணக்கம் இரு பண்பாடுகளின் இணைப்பே — நா. வானமாமலை, ஆராய்ச்சி, ஜூலை '70. பக்கம் 459

62. Quoted in Lokayata Chapter on Gowri — Thomson, Page 108

63. ibid. Page 241

64. 'Lokayata' — Devi. Prasad Chattopadya, Page 242

65. ibid. Page 243

66. 'The cult of the Mother Goddess' — E O. James

67. Greek Myths — Comment on 1st myth Graves, Page 28

68. Social Evoluation — Gorden Child, Page 124—127

69. Buddhist Art — P. R. Ramachandra Rao

70. கலைகளின் தோற்றம் — நா. வானமாமலை, ஆராய்ச்சி, ஜூலை 1971. பக்கம் 289

71. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையா பிள்ளை, பக்கம் 13—16

72. Mohenjo-Daro and Indus Civilization — Sir. John Marshall, Vol. I. Page 12

73. தமிழும் வடமொழியும் — கட்டுரை பக்கம் 74—75 மஞ்சரி, டிசம்பர், 1968

74. Studies in Proto - Indo-Mediterranean Culture, Page 210 'Rev. Father Heros'

75. 'Five Thousand Years of Pakistan' — Martimar Wheeler, Page 24

76. 'Indus Script Deciphered' — Indian Express, 27—2—1969, page 8, Kerala Morning Edition.

77. 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' — க. கைலாசபதி, பக்கம் 32

78. Indo-Aryan Race — R. P. Chanda, Page 150

79. The Original Inhabitants of India, — Monier William, Page 574

80. Tree Worship and Ophiolatory — G. Subramania Pillai, Page 48

81. சிந்துவெளி தரும் ஒளி — க. த. திருநாவுக்கரசு, பக்கம் 90

82. Mohenjo-Doro and the Indus Civilization — J. Marshall, Volume I, Page 51

83. Mother Right in India — O. R. Ehrenfels, Page 79—80

84. இந்திய நாகரிகத்தின் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் — க. த. திருநாவுக்கரசு, உலகத் தமிழ் மாநாட்டு மலர்

85. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையாபிள்ளை, பக்கம் 91—98

86. எல்லோரும் வாழ வேண்டும் — அ. மு. பரமசிவானந்தம், பக்கம் 50

87. ibid.

88. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் — கே. கே. பிள்ளை, பக்கம் 211

88*. K. A. Neelakanta Sastry's article in Kalaimagal April, 1932

89. மாமல்லை — இரா. நாகசாமி, பக்கம் 136

90. சைவசமயம் — மா. இராசமாணிக்கனார், பக்கம் 62

91. தமிழர் நாகரிகமும் பண்பாடும் — அ. தட்சிணாமூர்த்தி, பக்கம் 169

92. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் — கே. கே. பிள்ளை, பக்கம் 234

93. South Indian Inscriptions III. No. 205

94. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்
— கே. கே. பிள்ளை, பக்கம் 246

95. Ep. Rep. 256/12.

96. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்
— கே. கே. பிள்ளை, பக்கம் 328–29

97. *ibid.* பக்கம் 343

98. தமிழர் காகரிகமும் பண்பாடும்
— அ. தட்சிணாமூர்த்தி, பக்கம் 153

99. *ibid.* பக்கம் 196

100. நாயக்கர் வரலாறு — அ. மு. பரமசிவானந்தம்

101. பக்தி இலக்கியம் — டாக்டர் ப. அருணாசலம், பக்கம் 158

102. இராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரி, பக்கம் 133

103. *நரிக்குறவர் வாழ்க்கையில் சடங்குகளும் பூசைகளும்*
— கே. ஆர். ராசகோபாலன், கே. பி. விசயதிலகன்
ஆராய்ச்சி, மலர் 3, இதழ் 2, பக்கம் (194—196)

2

சக்தியின் கூறுகளும் சக்தி வழிபாட்டு முறைகளும்

முன்னுரை:- இயற்கையாகிய அன்னை பல சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழவைக்கின்றாள். உலகில் ஏற்படும் தீமைகளைப் போக்கும் பொருட்டுச் சக்தியான வள் பல உருவங்கள் எடுத்துச் செயல்படுகின்றாள். சக்தி களைத் தனக்கு நல்வாழ்வு மலருவதன் பொருட்டு மனிதன் வணங்கி வழிபட்டான். அவ்வாறு வழிபடுவதற்காகச் சக்தியினைப் பல்வேறு உருவங்களில் அமைத்து அவற் றிற்குக் கோயில் எழுப்பி நாள்தோறும் வணங்கினான். இத்தகைய சக்தியின் கூறுகளைப் பற்றியும் வழிபாட்டு முறைகளைப் பற்றியும் இக்கட்டுரையின் கண் ஆராய்குவம்.

சக்தியின் கூறுகள்:

'நிர்க்குணப் பிரமத்தின் சகுணநிலை சக்தி' என்பது சாக்த மதத்தினர் கருத்து.[1] 'மகாசண்டியம்' என்னும் நூல் சக்தியைப் படைப்பு, காப்பு, அழிவு என்னும் முத் தொழில்களைப் பெற்றுப் பழமை தொட்டு இயக்கும் ஆற்றலுடையவள் என்றும் நீரின் மென் சாயலள் என்றும் போற்றுகின்றது.[2] தாய்த் தெய்வத்தின் உச்ச நிலையில் கொள்கின்ற தன்மையினைச் சகதி என்று கருதலாமென்று கூறுகின்றார் லாயிஸ்ரேனுவ்.[3] உயரிய நிலையில் கூறப்படும் சக்தி மகாதிரிபுர சுந்தரி, பராபட்டாரிகை எனப் பெயர் களைப் பெறுகின்றாள். எங்கும் நிறை பொருளாகக் காணப்படும் பொழுது அவளுக்குப் பராசக்தி என்று பெயரிடப்படுகின்றது. கலித்தொகை 93-வது பாடலில் உள்ள (21-24) அடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரை நயில்

கின்ற பொழுது 'பராசக்தி' என்ற வார்த்தையை உபயோகிப்பது எண்ணத் தக்கது.

இத்தகைய சக்தியைப் பெயரில் பெற்றுச் சோழநாட்டில் கும்பகோணத்திற்த அருகே 'சக்திமுற்றம்' என்ற ஊர் அமைந்துள்ளமை உணரத்தக்கது. 'திருச்சத்திமுற்றத் துறையும் சிவக்கொழுந்தே' என்று திருநாவுக்கரசரால் போற்றப்பட்ட அவ்வூர்ப் பெயர் சத்திமுத்தம் என மருவி வழங்கலாயிற்று. பராசக்தியாகிய பார்வதியம்மை பரமசிவனை முத்தமிடக் கண்ட பெருமை அவ்வூருக்கு உரியதென்று புராணம் கூறுகின்றது. அதற்கேற்ற வாறு அங்குள்ள திருக்கோயிலில் சத்தி, சிவனுக்கு முத்தமிடும் கோலத்தில் ஒரு திருவுருவமும் பிற்காலத்தில் அமைவதாயிற்று.[4] அந்த தோன்றிய புலவர் ஒருவர் நாரையைக் குறித்து நல்லதொரு பாட்டிசைத்துத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றார். அவரைச் சத்திமுற்றப் புலவர் எனத் தமிழகம் பாராட்டுகின்றது.[5] அறுபத்து மூன்று நாயன்மார்களுள் சத்திநாயனார் என்ற பெயருடன் ஒரு சிவனடியார் காவிரி நாட்டு வஞ்சியூரில் வாழ்ந்ததாகப் பெரிய புராணம் கூறுகின்றது.[6]

சக்தியானவள் அர்த்த நாரீசுவர வடிவில் இறைவனுடலில் பாதியினைக் கொள்கின்றாள். இது சைவமும் சாக்தமும் ஒன்றிக் கலக்கும் நிலையினைக் காட்டுகின்றது எனலாம்.[7] சக்தியின் உருவம் சிவனைவிட்டுப் பிரியா ஒன்று என்பதையும் அவ்வாறு பிரியின் உலக இயக்கம் ஒன்றுமில்லை என்பதையும் கந்தபுராணம் வலியுறுத்துகின்றது.[8] சக்தி சிவன் என்ற இரு ஆற்றல்களை மின் ஆற்றலுக்கு ஒப்பிடலாம். மின் ஆற்றலுக்கு இரு சக்திகளின் இணைப்பே தேவை. இருவேறுத் தனிக் கம்பிகளில் ஊடுருவிச் செல்லும் இரு வேறு சக்திகள் அவ்வாறே தனித்தனியாக இருப்பின் அவை ஆற்றலற்றவையாக அமைகின்றன. இரண்டும் இணையின் உலகையே

அழிக்கவும் ஆக்கவும் வல்ல திறனைப்பெற்று விடுகின்றன. சிவசக்தி வடிவமும் அத்தகையதே என்றும் அவை பிரியின் உலகம் இயக்கமில்லாது அழியும் என்றும் கூறலாம். ஆனால் அவை இணையின் உலகில் எவ்வா வற்றையும் செய்து முடிக்க இயலும் என்று காண் கின்றோம். எனவே தொல்காப்பியர் கோலம் தொட்டங்கி இன்றுவரையில் சத்தியாகிய அன்னை பல்வேறு கோலங் களில் காட்சியளிக்கின்றாள். கம்பர் சக்தியைச் சரசுவதி யாகக் கண்டு சரசுவதி அந்தாதிபாட, பின்வந்த குமர குருபரரோ சகலகலாவல்லி மாலையைப் பாடினார்.

மண்கண்ட வெண்குடைக் கீழா மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவில் பணியச் செய்வாய் படைப்போன்
முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளியபில்
உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே '

என்று அவளை அன்றி வேறு தெய்வம் உண்டோ எனக் கேட்பது கருதத்தக்கது.

திருவிளையாடல் புராணத்தில் செய்யத்தகாத கொடுஞ் செயலைச் செய்த ஒருவனுக்கு கொடுமை நீங்க அன்னை புரியும அருளே முதலில் நிற்கின்றது.

" நெய்தற் போதனைய வுண்கண் நேரிழை நீயொன்று
செய்தற்கும் செய்யாமைக்கும் வேறொன்று செயற்கும்
ஆற்றல்
மெய்தக்க கருணை வள்ளல் வேண்டினை
எவ்வினைஞ்சினும்
உய்தக்கோராதல் செய்கை உன்னருள்
விளையாட்டன்றே '
(மாபாத — 36)

என்று இறைவனது அருட்டிறனைச் சக்தியின் வாக்கால் காட்டிப் பரஞ்சோதியார் நம்மைப் பரவசப்படுத்து கின்றார்.

"நம்பினோர் கெடுவதில்லை நான்மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரணடைந்தால் அனைத்து வரம்
பெறலாம்"

எனப் பாரதியார் சக்தியின் தாய்மை உள்ளத்தையும் அவள் பேசும் நிலையையும் விளக்கமாகக் கூறுகின்றார். எனவே சத்தியாகிய அன்னை, வேண்டுவோர் வேண்டும் வகையில் காலத்துற்கேற்ற வகையில் கோலங்கொண்டு உலகை ஆளுகின்றாள் என அறுதியிட்டுக் கூறலாம்.

உமை :

மலைமகளான இவள் இளம்பிராயத்தில் தவஞ் செய்யச் சென்றபொழுது பெற்றோர்கள் "உ[அம்மா]மா [வேண்டா]" என்று கூறியது பற்றி இவளுக்கு இப்பெயர் வந்ததென வை. மு. கோ. கருதுகிறார்.[9] நந்திக்கலம் பகதியில் 'பொருப்பரையன் மடப்பாவை' (3 : 1) என்று கூறப்பட்டுள்ளது உமையே என்பதும் உணரத்தக்கது.[10] இமயமலை அரசன் சிவசக்தி தனக்கு மகளாகப் பிறக்க வேண்டுமெனத் தவஞ்செய்தான். அப்படி அவன் தவம் செய்துகொண்டிருக்கையில், இமயமலைச் சாரலில் உள்ள ஒரு பொய்கையில் மலர்ந்த தாமரை மலர் ஒன்றின்மேல் அம்பிகை குழந்தையாக அமர்ந்திருந்தாள். இமயமலை அரசன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வந்து தன் துணைவியாகிய மேனையிடம் கொடுத்து வளர்த்துப் பிறகு அப்பெண்ணைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது பிருங்கி என்னும் முனிவர் நாடோறும் சிவபெருமானையே வழிபட்டு வந்தார். அவர் ஒரு நாள் சிவபெருமானும் உமையுமாக வீற்றிருக்கையில் அவ்விருவருக்கும் இடையே புகுந்து சிவபெருமானை மட்டும் வலஞ்செய்து சென்றார். அது கண்டு உமை வருந்திச் சிவபெருமானை நோக்கி, "நாம் இருவரும் ஒன்று என்பதை அறியாது இப்பக்தன் இவ்வாறு செய்தானே? நாம் ஒருருவமாக இருந்தால் அவன் இவ்வாறு

செய்யான்; ஆகையால் :உமது உடம்பில் ஒரு பாதியை எனக்குத் தரவேண்டும் என வேண்டச் சிவபெருமானும் அதற்கிசைந்து தமது திருமேனியின் இடப்பாதியைக் கொடுத்தார். மறுநாள் சிவதரிசனத்திற்கு வந்த பிருங்கி முனிவர் அவ்வுருவத்தைப் பார்த்து என் செய்வது என எண்ணி, வண்டுருவங் கொண்டு அவ்வுடலின் நடுவே வயிற்றிற்றுளைத்துச் சிவபெருமானே மட்டும் வலமாகச் சுற்றிவந்தார். அதுகண்டு பார்வதி கோபமுற்று, முனிவரது உடம்பில் தனது பாகமான சதைப் பற்றுக்களை நீக்கியதாகக் கூறப்படுகிறது. அரிக்கும் உமைக்கும் வேறுபாடு இல்லாத நிலையினை

'அரியலால் தேவையில்லை ஐயன் ஐயாறனுர்க்கே' [4556]

'சீரேறு திருமாலோர் பாகத்தான் காண்' [6489]

'நாரணனை இடப்பாகத் தடைத்தார் போலும்' [6774]

'காவியங் கண்ணளாகிக் கடல் வண்ணனுகி நின்ற தேவியைப் பாகம் வைத்தார்' [4476 [

என்ற தேவாரப் பாடலடிகள் வாயிலாக உணரலாம். சுந்தரர் காலத்தில் உமையொருபாகனுகவும் சங்கர நாராயணனுகவும் வழிபட்டு வந்த மூர்த்திகளையே,

'மங்கை பாகமும் மாலொர் பாகமும் தாமுடையவர்' [8110]

எனச் சுந்தரரும்

'பரிதியோர் மாதர் மால்மோர் பாகர் பங்கயத் தயனுமோர் பாலர்' [4684]

எனச் சம்பந்தரும் பாடுவது இவண் கருதத்தக்கது.[11] சுதிரவனிலிருந்து ஒளியையோ வெப்பத்தையோ எவ்வாறு பிரிக்க இயலாதோ அவ்வாறே சக்தியைச் சிவனிடமிருந்து பிரிக்கமுடியாது என்பது உணரத்தக்கது.[12]

இந்து மக்களின் பல்வேறு பழக்க வழக்கங்களையும் அவர்கள் வணங்கும் தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றையும் நுணுகி ஆராய்ந்து விரிவான வரலு

டைய தென்னிந்தியக் கடவுள்களின் கால்வழி என்ற நூலைச் செருமானிய மொழியில் சீகன் பால்கு என்பவர் கி. பி. 1713-ல் எழுதினர். அந்நூலில் உமைக்கு இருபத் தேழு பெயர்கள் இருப்பதாகப் பட்டியல் போட்டுத் தரு கின்றார். அவற்றில் 'அரனிடத்தவள்' 'காமக்கோட் டத்தி' போன்ற சில பெயர்கள் சிறப்பாக அமைந்துள் ளமை எண்ணத்தக்கது.[13]

உமை கச்சி ஏகம்பம் [5696, 7848, 7856] கச்சிக்காமக் கோட்டம் (7271), தெளிச்சேரி என்ற திருப்பதிகளில் இறைவனே வழிபட்டதாகத் தேவாரம் கூறுகின்றது.

ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சத்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச்செல்வி, மலைமகள் சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, வாரிப்பதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேத முதல்வி, விமலை முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மணி, சிவை, உமையம்மை, அரனிடத் தவள், சுகமீன்றவள், பவானி, அன்னை, புண்ணியமுதல்வி என முப்பத்தெட்டு பெயர்களை உமைக்குக் கூறுகின்றது பிங்கல நிகண்டு.[14] காமக்கோட்டி, அம்பிகை, கௌரி, ஆரியை, சக்தி, அயிராணி, பார்வதி, உமை, இமயவள்ளி எனத் திவாகர நிகண்டு எட்டுப் பெயர்களைக் கூறுகிறது.[15] மலைமடந்தை, அரனிடத்தவள், காமக்கோட்டத்தி, அம் பிகை, மாதா, தருமத்தின் செல்வி, தேவி, சாம்பவி, வரை, சிவை, கௌரி, பார்ப்பதி, பவானிசத்தி, நாரி என்று பதினைந்து பெயர்களைக் கூறுகின்றது சூடாமணி நிகண்டு.[16]

உமை தக்கனின் புத்திரி எனப்பட்டமையால் தாட் சாயணி என்னும் பெயர் பெற்றாள். பிரமனின் கட்ட ளைக்கமையத் தக்கன் தன் புதல்வியைச் சிவனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தான். பின்னொருகால் தக்கன் சிவனை மதிக்காது தான் நிகழ்த்தும் வேள்வியில் சிவ

னுக்கு அவி கொடுக்க மறுத்தான். தந்தை கணவனை நிந்திக்கும் நிலையினைப் பொறுக்கும் ஆற்றலற்றவளாய்த் தாட்சாயணி யோகாக்கினியால் தன்னுடலைத் தகித்தழித்துப் பர்வதராசன் புதல்வியாகத் திரு அவதாரஞ் செய்து பார்வதி என்னும் பெயருடன் விளங்கினாள். சிறு பிராயம் முதலே கடுந்தவம் இயற்றி உரிய காலத்தில் சிவ பெருமானைப் பதியாகப் பெற்றாள் என்றும் கூறுவர்.[17] மக்களின் அறிவு பண்பட்ட காலத்தில் தாய்க்கடவுள் அன்பு மயமான கடவுளாகக் கொள்ளப்பட்டுக் காடு கிழாள் உமா தேவியார் என்னும் தெய்வமாகக் கருதப் பட்டதாக இரு. ந. சி. கந்தையா பிள்ளை கருதுகின்றார்.[18]

கொற்றவை:-

'காடு' என்ற சொல் சமசுகிருதத்தில் 'ஆரண்யம்' என்று கூறப்படுகின்றது. ரிக் வேதமும் கொடுமை மிக்க காட்டினை மிகத் திறம்பட வருணிக்கின்றது. ரிக் வேதத்தை மொழிபெயர்த்த மேலைநாட்டு அறிஞர் ஜெல்டுனர் "Fraudes waldes" எனக் காட்டினைக் கூறுகிறார்.[19] 'Vedic Mythology" என்ற நூல் பாலை நிலத் தெய்வத்தைக் காட்டினை ஆளுகின்ற பெண் தெய்வமாகக் கூறுகின்றது.[20] காட்டிற்கும் பாலைக்கும் உள்ள தொடர்பினைத் தென்னிந்தியாவின் மேற்குப்பாகத்தில் உள்ள பாலக்காடு என்ற ஊர்ப்பெயரில் காணலாம். பாலையும் காடும் இணைந்து தமிழில் பாலைக்காடு என்று அமைந்து நாளடைவில் பாலக்காடு என மருவி அமைந்திருக்கலாம் என்று கருதுகின்றார் டெய்கில்.[21]

தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா உரையில் நச்சினார்க்கினியர் கொற்றந்தை எனக் குறிப்பிட்டுள்ளார்.[22] கொற்றந்தை என்பதைக் கொற்றன் + தந்தை எனப் பிரிக்கலாம். அதுபோல 'கொற்றவை' என்றசொல் 'கொல்' என்ற வேர்ச் சொல்லை அடியொற்றிய 'கொற்றம்' என்னும் சொல்லினின்று பிறந்திருக்கலாம். (கொல் > கொற்றம் > கொற்றம் + அவ்வை – கொற்றவை). கொற்றவை என்

பதைக் கொற்றம் + அவ்வை எனப் பிரித்து வெற்றியை உடைய தாயெனப் பொருள் கூறலாம்.[23] கொற்றவை என்பதை கொல் + தவ்வை எனவும் பாகுபடுத்திப் பொருள் கொள்ளலாம்.

கொற்றவையின் பெயர்களாக மோடி, காரிதாய் கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்ற ஏழு பெயர்களைக் கூறுகின்றது பிங்கலம்.[24] வடுகன்ரூய், மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி என்ற ஏழு பெயர்களைக் கூறுகின்றது சூடாமணி.[25] காடுகாள், மோடி, காரிதாய், கொற்றி, மாரிசூரி, வடுகி மூதணங்கு என்ற ஏழு பெயர்களைக் கூறுகின்றது திவாகரம். பெருங்கதை தவிர ஏனைய இலக்கியங்கள் கொற்றவையை வருணிப்பதை "இலக்கியங்களில் சக்தி" என்ற பிரிவில் காணலாம்.

கொற்றவையின் உருவ வருணனை பெருங்கதையில் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மதி போன்ற திருமுகம், எட்டு வகைப்பட்ட படைக்கலம் *எட்டு கைகள், கச்சுப் பொருந்திய அழகிய முலைகள், கண்மணியாலாகிய வளைந்த அணிகலன்கள் ஆகியவற்றை உடையவளாக வருணிக்கப்படுகிறாள். பால்பருகும் பச்சை நிறமுடைய கிளியைப் போல்பவளமும் பவழம் போன்ற சிவந்த வாயினையும் முத்துப் போன்ற பற்களையும் ஒன்றையொன்று எதிர்ந்து முயங்கா நின்ற கயல் மீன்கள் போன்ற பெரிய கண்களையும் வில்லை ஒத்த புருவங்களை உடையவளும், செங்கட் செல்வியும், கலைமான் ஊர்தியை விரும்புபவளும் ஆகிய கொற்றவை என பெருங்கதை வருணிக்கின்றது.[26]

---

* "பட்டய மெடுத்தொருகை பத்திர மெடுத்தொருகை பற்று மழுவும்
சொட்டையு மெடுத் திருகை சக்கரமெடுத்தொருகை சுற்று மயிலும்
வட்டமு மெடுத்திருகை வச்சிரமெடுத்தொருகை மற்கரதலம்
எட்டினும் விதிர்ப்பன சுழற்றுவன வெந்தழலெழுந் தெரியவே"
(அரிச்சந்திரபுராணம் விவாக : 117)

சிவபெருமானுக்குக் கொற்றன் என்ற பெயர் கொற்றவையினுலேயே வந்திருக்கலாமெனக் கருதுகின்றார் மறைமலையடிகள்.[27] கொற்றவைக்கு அயிரை என்ற மற்றொரு பெயரும் உண்டு. பழனி மலைக்கு அருகே அயிரை மலையென்று ஒரு மலை உள்ளது. அம்மலையில் கொற்றவை என்னும் தெய்வத்தை அமைத்துப் பழந் தமிழ் மன்னர்கள் வழிபட்டனர். நாளடைவில் அயிரை மலையென்பது ஐவர் மலையெனத் திரிந்து நின்றது. ஐவராகிய பாண்டவர் அம்மலையில் தங்கிருந்தனர் என்னும் கதை எழுந்தது. அங்குக் கோயில் கொண்டிருந்த கொற்றவை 'ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி' என்று போற்றப்படும் பாஞ்சாலி ஆனாள் என்பதும் உணரத் தக்கது.[28]

காளியும் துர்க்கையும்:-

கத்தி, சக்கரம், கதாயுதம், அம்பு, வில், கேடயம், சூலம், குத்தீட்டி, மண்டை ஓடு, சங்கு என்ற இவைகளைத் தாங்குகின்ற பத்துக் கைகளையும், பத்துதலைகளையும் பத்து கால்களையும் ஞாயிறு, திங்கள், தீ என்ற முக்கண்களையும் எல்லா உறுப்புக்களிலும் அலங்கரிக்கப்பட்ட அணிகளையும் நீலமணி போன்ற காந்தியையும் உடையவள் மகா காளி.[29]

'காளி' என்பது கள் — கள்ளம் — காளம் — காளி. களம் — களங்கம் = கரும்பு என்று அமைந்திருக்கலாம் என திரு. தேவநேயன் கருதுகின்றார்.[30] பெறற்கருமையான காலத்தையே அவள் எடுத்து விழுங்கித் தன்னகத்து அடக்குகின்றமையால் அவள் வடமொழியில் காலீ என்றும் காலிகா என்றும் அழைக்கப்படுகிறாள். காலி என்ற சொல் நாளடைவில் தென் மொழியில் காளி யெனத் திரிவுற்றது.[31]

காளியின் (துர்க்கை) லட்சணங்கள் ஒன்பது வடிவாகக் கவசத்தில் கூறப்படுகின்றது. சைல புத்ரீ, பிரஹ்ம

சாரினி, சுந்தர கண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயினி, காலராத்ரீ, மகா கௌரி, சித்திப்ரதா என்ற வாறு அமைந்துள்ள ஒன்பது பெயர்களைப் பிரமதேவன் வைத்ததாகக் கூறப்படுகின்றது [32] துர்க்கையின் உபா சனை கல்பத்ருமம் என்ற நூலில் ஜயா, விஜயா, பத்ரா, பத்ரகாளி, ஸுமுகி, துர்முகி, ப்ரக்ஞா, வ்யாக்ரமுகி, சிம்ஷமுகி என்றும் வன, ஜல, வன்னி, ஸ்தூல, விஷ்ணு, பிரஹ்ம, ருத்ர, மஹா, சூலினி, துர்க்கை என்றும் கூறப் பட்டுள்ளது. அரிவம்சம் அவள் விந்திய மலையில் இருப்ப தாகக் கூறுகின்றது. குமரி, காளி, கபாலி, மாகாளி, சண்டி, விசையி, காராளி, கௌசிகி, காந்தர்வாசினி முத லிய பெயர்கள் துர்க்கைக்குப் பிற்காலத்தில்வழங்கியதாக ந. சி. கந்தையா பிள்ளை கருதுகின்றார். துர்க்கையி னைச் சிவதுர்க்கை, விஷ்ணு துர்க்கை எனவும் பாகுபடுத்து வர். சிவதுர்க்கையின் இடக்கையில் மானும் வலக்கை யில் மழுவும் இருக்கும். விஷ்ணு துர்க்கையின் இடக்கை யில் சங்கும் வலக்கையில் சக்கரமும் இருக்கும். சில சிவன் கோவில்களில் விஷ்ணு துர்க்கையும் இருப்பதுண்டு என்று கூறுகிறார் மு. அருணாசலம்.[34] துர்க்கையின் விக்கிரகம் பிரதிட்டைக்காக உருவாக்கப்படவேண்டியது என மட் டும் கூறிக் காரணாகமம் இது சிலையிலும் கல்லிலும் அமை யலாம் எனக் குறிப்பிடுகின்றது.[35] விக்கிரக லட்சணங் களும் ஏனைய பிரமாணங்களும் துர்க்கைக்குக் கூறப்பட வில்லை என்பது இங்கு கருதத்தக்கது.

மாகாளியின் பெயர்களாக குமரி, சண்டிகை, குண் டலி, நீலி, வலாவை, பைரவி, கௌமாரி, மாதரி, மாயை, வீரி, மாதங்கி, யாமளை, சூரி, வேதாளி, கங்காளி, யோகினி, சூலி, சாமுண்டி, தாரகாரி, ஆரியை, தேவி, வல்லணங்கு, ஐயை, அலகைக் கொடியாள், மாலினி, முக் கண்ணி, பதுமை, எண்டோளி, பத்திரி, ஆரணி, யாளி யூதி என்ற முப்பத்தொன்று பெயர்களைக் கூறுகின்றது பிங்கலம்.[36] மாகாளியின் வாகனம் சிங்கமென்றும், கொடி

அலகை யென்றும், படை சூலமென்றும் பிங்கல முனிவர் கூறுவது உணரற்பாலது. சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி, கங்காளி, வேதாளி, மாதங்கி, தாரகற் செற்ற தையலி, பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி, வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி என இருபது பெயர்களைக் கூறுகின்றது சூடாமணி.[37] சூலி, எண்டோளி, தாருக விதாசனி, மாதரி, வீரி, கௌரி, முக்கண்ணி, பைரவி, குமாரி, சாமுண்டி, சண்டிகை, யோகினி, வேதாளி, யாமளை, மாகாளி என்று காளியின் பெயர்களாகப் பதினெண்கு பெயர்களைக் கூறுகின்றது திவாகரம்.[38] துர்க்கையின் பெயர்களாக அமரி, எண்டோளி, வெற்றி. அந்தரி, அம்பணத்தி, சமரி, பாலைக்கிழத்தி, சயமகள், வீரச் செல்வி, குமரி, மகிடற்செற்றாள், கொற்றவை, சக்கிர பாணி, விமலை, கலையானத்தி, விசையை, நாரணி, விந்தை, நீலி, கார்த்தியாயினி, மேதிச் சென்னி, மிதித்த மெல்லியல், கௌரி, பகவதி, கௌரி, ஐயை, மாலினுக் கிளையநங்கை, வாள் கைக்கொண்டாள், சூலி, சண்டிகை, கன்னி, சுந்தரி என்ற முப்பது பெயர்கள் சூடாமணியில் கூறப்பட்டுள்ளன.[39] கொற்றவை, ஐயை, கார்த்திகை, கௌரி, துர்க்கை, சூலி, மகிடற்காய்ந்தாள், நீலி, எண்டோளி, விந்தை, சயமகள், இருங்கலியூரி, எழிலி யேறி, மேதித்தலைமிசை விசையை, அந்தரி, மாலுக் கிளையாள், சக்கராயுதி, பாலைக்கிழத்தி, பணைம்பணைத்தி, நாராயணி, கன்னி, குமரி, சீர்சால்பகவதி என்று இருபதி ரண்டு பெயர்கள் துர்க்கைக்கு அமைந்துள்ளன.[40] வீரச்செல்வி, வாட்படையாள் போன்ற சிறப்புப் பெயர் களுடன் இருபத்தொன்பது பெயர்களைத் துர்கைக்குக் கூறுகின்றார் பிங்கல முனிவர்.[41] அவரே துர்க்கையின் படையாகக் கைவாளினையும், ஊர்தியாகக் கலைமானையும் குறிப்பிடுவது கருதத்தக்கது. சக்தி கால செரூபிணி யாகக்கருதப்படும்பொழுது காளியாகவும், சகுணபிரமமும்

அல்லது சிவனுக்கு ஒப்பாகும்பொழுது துர்க்கையாகவும் அமைகின்றாள்.

நீல நிறத்தையுடைய காளிதேவி வெட்டிய தலைகளை மாலையாகக் கோத்து அவள் அணிந்து கொண்டுள்ள மையால் முண்ட மாலினி என்னும் பெயரைப் பெற்றாள். குழவிப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம்வரை உடைய பலதரப்பட்ட தலைகளைக் கொண்டு தொடுக்கப்பட்ட மாலை, உயிர்வாழ்ப் பிராணிகளனைத்தும் மூலப் பிரகிருதியி னின்றும் தோன்றி மீண்டும் அவளோடு சென்று மறை வதற்கு அறிகுறியாக இலங்குகின்றது. பிறந்த உயிர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இறக்கும் என்பதை அத்தலைகள் விளக்குகின்றன எனலாம். துண்டித்த கைகளைச் சரமாகக் கோர்த்துக் காளிகாதேவி தன் அரையில் அசைத்திருக்கிறாள். (மக்கள் செய்யும் வினை யனைத்திற்கும் சக்தியாய் இருப்பவள் அவள் ஒருத்தியே என்பதைக் கைகளால் ஆக்கப்பட்ட சரம் காட்டுகின்றது. தேவி பெரிதும் சம்ஹாரமூர்த்தியாக இலங்குபவள் என்பதை அவள் நாவினின்றும் சொட்டும் குருதி விளக்கு கின்றது. உலகனைத்தையும் ஆட்சி புரிந்தாலும் மனி தனது துன்பத்திற்கு முடிவே இல்லை என்பதை ஞாலம் மூட்டுவதற்காகக் காளி தன் இடது கரங்களொன்றில் வாளை ஏந்திக்கொண்டிருக்கின்றாள். அது மனிதனுக்குத் துன்ப வாளேயன்றி வேறல்ல என்பதையும், துன்பவாள் ஓயாது வேலை செய்துகொண்டிருப்பதையும் அதில் படிந் திருக்கும் குருதி காட்டுகிறது. இயற்கை நடைமுறைக்கு விரோதமான எதைச் செய்தாலும் பலிக்காது என் பதையும் அவ்வாறு முயலும் மனிதனே இயற்கைத் தாயின் வாளுக்குப் பலியாகின்றான் என்பதைக் காளி மற்றொரு கையில் வெட்டிய தலையைப் பற்றிப் பிடித்துக் காட்டுகிறாள் எனலாம். அவளது வலது கரங்களில் அபயமும் வரமும் மிளிர்கின்றன.[43] வினையாபதியில்

காளி தாய்த் தெய்வமாகக் கூறப்பட்டுள்ளாள். வைசிய புராணம், நீலகேசி ஆகியவற்றிலும் காளி பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. காளியெனப்படுகின்ற சந்தனுவின் மனைவி இரண்டாம் பராசர முனிவருடன் கூடி வியாச முனிவர் பிறந்ததாக மகாபாரதம் கூறுகின்றது.[44] கேரள வாய்மொழி இலக்கியத்தில் கண்ணகி பத்ர காளியாகக் குறிப்பிடப்படுகின்றாள். இச் செய்தியைக் கேரள நாட்டறிஞர் இந்துசூடன் ஆராய்ந்துள்ளார்.[45] காளி அம்பர் மாகாளம் என்ற திருப்பதியில் இறைவனை வழிபட்டதாகத் தேவாரம் கூறுகின்றது.[46]

காளியினைப் பெயராகக் கொண்டு இயங்கும் மாகாளம் என்னும் பெயர் பெற்ற திருக்கோயில் மூன்று உண்டு. அரிசலாற்றங்கரையில் உள்ள அம்பர் மாகாளம் ஒன்று. இதனை 'மல்கு தண்துறை அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்' என்று ஞானசம்பந்தர் கூறுகின்றார். தொண்டை நாட்டிலுள்ள திருப்பாச மாகாளம் மற்றொன்று. "எண்ண திசையும் புகழ்போய் விளங்கும் இரும்பை தன்னுள் வண்டு கீதம் முரல் பொழில் சூலாய் நின்ற மாகாளமே' என்னும் தேவாரத் திருப்பாட்டால் விளங்கும். உஞ்சேனை மாகாளம் என்னும் தேவாரத் திருப்பாட்டால் விளங்கும். உஞ்சேனை மாகாளம் என்னும் பெயருடைய பிறிதொரு திருக்கோயில் வைப்புத் தலங்களுள் ஒன்றாக வைத்து எண்ணப்படுகிறது.[47]

காளி ஆரியர்களுடைய தெய்வம் அல்ல என்று பேராறிஞர் பி. டி. சீனிவாச ஐயங்கார் கருதுகின்றார்.[48] இந்து சமயத்தில் 'ஆரியர் நெறி, திராவிடர் நெறி இவற்றைக் கண்டு கூறிவிட முடியாது என்பது பொருளன்று. இன்று உருவாகியுள்ள கலப்புப் பண்பாட்டினை ஒரு இரசாயனக் கலவை எனக் கூறுவராயினும் வரலாற்று நிலையினை ஆராயும் பொழுது இவ்வாறு சிந்திப்பதும் வேண்டிய ஒன்றும். இச் சிந்தனையின் அடிப்படையில் காளியென்ற

தெய்வங்கள் இந்தியப் பழங்குடி மக்களின் தெய்வங்களாகக் கருதப்படுகின்றன எனக் கூறுகின்றார் 'கெய்தி'.[49]

சுதந்திர சக்தி:

பாசம், அங்குசம், வில், அம்பு ஆகிய நான்கினையும் நான்கு கரங்களில் ஏந்தி நிற்பவள். காஞ்சீபுரம் காமாட்சி யம்மை ஆலயத்தில் சுதந்திர சக்தியைக் காணலாம்.

இனி ஆகமங்கள் குறிப்பிடும் தேவியின் திருவுருவங்களை ஆராய்குவம்.

கௌரி:

கரிய நிறம் பெற்றிருந்த காளி, பின்னர் பிரமனை நோக்கித் தவம் புரிந்து கரிய நிறம் நீங்கி வெண்ணிறம் அடைந்தாள். இதனால் இவளுக்கு கௌரி என்ற பெயர் உண்டாயிற்று. அரக்கர்கள் பலரை இவள் அழித்த வைபவத்தினைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. சக்தி கௌரியாக விளங்கும் பொழுது தனது இருகைகளுள் ஒன்றில் தாமரையைத் தாங்கி நிற்க இடக்கரம் தொங்கியவாறு இருக்கும். இவ்வாறு தொங்கும் கையைச் சிற்ப நூல்கள் 'லம்ப ஹஸ்தம்' எனக் கூறுகின்றன. இவள் தலையிற் கரண்ட மகுடம் சூடி விளங்குகின்றாள்.

பரமேசுவரி-:

கரிய நிறத்தினை உடைய பரமேசுவரி வலக்கையில் செந்தாமரையினைப் பெற்று இடக்கரமானது தொங்குகின்ற நிலையில் காட்சியளிக்கின்றாள். இவள் திரிபங்க நிலையில் நிற்பாள். இவளே வலதுகால் பத்மாசனத்தின் மீது நிமிர்ந்தவாறு நேரே நிற்கின்ற கோலத்திலும் காட்சியளிக்கின்றாள். இடது கால் சிறிது வளைந்து திரிபங்கம் ஏற்பட அழகுகோலமாக நிற்கின்றது. இவளது பிரபாவளைகளும் பொற்கலசங்களை நிகர்த்துப் பருத்து விளங்குகின்றன.

மனோன்மணி:

மனோன்மணி சந்திரனின் நிறம் வாய்ந்தவள். இவளுக்கு மூன்று கண்கள் உண்டு. தலையைச் சடாமகுடம் அலங்கரிக்கும் வண்ணம் இலங்கும் இவளுடைய நான்கு திருக்கரங்களுள் பின் வலக்கரம் தாமரையைத் தாங்கும். பின் இடக்கரம் தொங்கிநிற்கும். முன்னுள்ள வலக்கரமும் இடக்கரமும் அபய வரத கரங்களாக அமைகின்றன. இவ்வுருவங்கள் இவள், பரதந்திர சக்தியாக இறைவனைப் பரிவார தெய்வமாக விளங்கும் நிலையினைச் சுட்டுகின்றன.

சாமுண்டேசுவரி:

இவள் மண்டையோடுகளாலான மாலை தரித்திருப்பாள். இவளது கழுத்தைச் சுற்றிப் பாம்புகள் வளையம் போன்று அமைந்திருக்கும். இவளது இடதுகால் கீழே கிடக்கும் ரத்த பீஜன் அரக்கன் மீது ஊன்றியவாறு அமையும். தலையில் பிறை உண்டு. கருமை படர்ந்த முகமும் பயம் தோற்றுவிக்கும் கண்களும் இவளுக்குரிய கூறுகள். விகிரகத்தைச் சுற்றிப் பிரபாமண்டலம் உண்டு. சாமுண்டியின் விக்கிரகம் நின்ற நிலையிலும் வீற்றிருக்கும் நிலையிலும் அமையலாம். இவளுக்கு நான்கு கரங்கள் உண்டு. பாசம், உடுக்கை, சூலம், கபாலம் என்பன இவற்றில் விளங்கும் படைக்கலங்கள்.

மகாமாரி:

மாராசுரனைச் சங்கரித்ததனால் மகாமாரி என்ற பெயர் சக்திக்கு உண்டாயிற்று எனக் காரணாகமம் கூறுகின்றது. மூன்று கண்களினையும் நான்கு கரங்களினையும் பெற்றுச் சாந்தமான தோற்றத்துடன் இலங்குகின்றாள். எனினும் தலையைச் சுற்றிலும் அக்கினி கவாலங்கள் வீசும். இவள் கபாலம், கத்தி, பாசம், உடுக்கு என்ற நான்கு ஆயுதங்களையும் ஏந்தி ஆசனத்தில் வீற்றிருக்கும் நிலையிலேயே இவள் உருக்கொண்டிருக்கின்றாள். இடக்காலை குத்திட்டவாறு ஆசனத்தின் மீது இருக்க வலதுகால் கீழே

தொங்கியவாறு அமையும். தோளிற் பூணூலும் காது களிற் காதணிகளும் தாடகங்களும் உண்டு. இவளைச் சுற்றி பிரபா மண்டலம் விளங்கும்.

மகா இலக்குமி:

ஜபமாலை, கோடரி, கதை, அம்பு, வஜ்ராயுதம், தாமரை, வில் கமண்டலு, தண்டாயுதம், சக்தி, ஆயுதம், கத்தி, கேடயம், சங்கு, மணி, மதுக்கலயம், சூலம், பாசம், சக்கரம் இவைகளைத் தாங்கி நிற்பவளும் பவழம் போல் சிவந்த நிறம் உடையவளும், மகிஷன் என்னும் அசுரனை அழித்தவளும் ஆன மகா இலக்குமி என்று கூறப் படுகின்றாள். இத் தேவி பதினெட்டுக்கைகளையும் பதி னெட்டு கருவிகளையும் பெற்று இலங்குகின்றாள்.

மகா சரசுவதி:

கண்டா (மணி), சூலம், கலப்பை, சங்கு, உலக்கை, சக்கரம், வில், அம்பு என்று கூறப்பட்டுள்ள கருவிகள் எட் டிலை எட்டு கைகளாலே கம்பீரமாகத் தூக்கிய வண்ணம் நிற்கின்ற இவள் சந்திரனைப் போன்ற ஒளியை உடைய வள். மூவுலகிற்கும் காரணமானவள். சும்பன் முதலான அசுரரிகளை அழித்தவள். இத்தகைய பெருமை படைத்த வளுடைய வாகனம் சிம்மமாகும். இவள் வெள்ளை நிறத்தை உடையவளாகக் காட்சியளிக்கின்றாள்.

தேவர்கள் — சக்தி உறவு:-

உமை, முருகன், பிள்ளையார் ஆகிய இருவர்க்குத் தாயாகவும் சிவனுக்கு மனைவியாகவும் மாலிற்குத் தங்கை யாகவும் இலங்குகின்றாள். இக்குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் இரு சக்திகள் உண்டு. சிவபெருமா னுக்கு உமையும் கங்கையும் சக்திகளாகவும், திருமாலிற்கு நிலமகளும், திருமகளும் சக்திகளாகவும், முருகனுக்கு வள்ளியும் தெய்வயானையும் சக்திகளாகவும், பிள்ளை யாருக்குச் சித்தியும் புத்தியும் சக்திகளாகவும் அமைந்துள்

ளனர். வீரபத்திரரின் சக்தியாகக் காளியும், நான்முகனின் சக்தியாக கலைமகளும், சூரியனின் சக்தியாக உஷையும் சாயையும், சந்திரனின் சக்தியாக உரோகினி உட்பட இருபத்தேழு நட்சத்திரங்களும், இந்திரனின் சக்தியாக அயிராணியும், சண்டேசுவரனின் சக்தியாக ரதியும் கருதப்படுகின்றனர். சிவனுடைய சக்தி உடலில் ஒரு பாகத்திலும், பிரமனுடைய சக்தி நாவிலும், மாலின்சக்தி மார்பில் மறுவாயிலும் உறைகின்றனர்.

சக்தியின் உறைவிடங்கள்:-

கோலாப்பூரில் மகா இலக்குமியும் கன்னடத்தில் சந்தரலாவும், ஸ்ரீநகரில் ஜம்புநாதேஸ்வரியும், நேபாலில் குஹ்ய காளியும், வேதாரண்யத்தில் சுந்தரியும் காஞ்சிபுரத்தில் காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும் புவனேசுவரத்தில் பராசக்தியும், சீனாவில் நீல சரசுவதியும் உறைகின்றனர். தேவியென்கின்ற சக்தியின் உறைவிடங்கள் பல்லாற்றான் அமைந்திருப்பினும் மேற்கூறியவையே சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

சக்தியின் பீடங்கள்:-

சித்திஅய நினைத்தபொழுதே நமக்கு அருள்செய்ய வல்லதும் முக்திக்கு வழிகாட்டக் கூடியதுமாக 108 தேவியின் பீடங்களைக் கூறுவர் சான்றோர். அவற்றில் மிக முக்கியமானவைகளாகக் காசி விசாலாட்சி பீடமும் நைமிசாரண்யம் லிங்கதாரிணி பீடமும் பிரயாகை லலிதா பீடமும், அதிதிபுரம் ஜயந்தி பீடமும், கன்னியா குப்சம் கௌரி பீடமும், தானேசுவரம் பவானி பீடமும், சீசைலம் மாதவி பீடமும், சாலக்கிராமம் மகாதேவி பீடமும், கயா மங்களா பீடமும் ஜலந்தர் விஸ்வமுகி பீடமும் கருதப்படுகின்றன.

சக்திகளின் தோற்றமும் வடிவ மாற்றமும்:-

பிரமா, சிவன் என்ற இரு கடவுளுடைய தினமும் அதிகமாகிவிடவே சக்கரக் கையனான விஷ்ணுவின் முகத்தி

லிருந்து பெரிய ஒளி உண்டாயிற்று. சிவனிடமிருந்தும் சக்தி ஒளி வந்தது. பிரமனிடமிருந்தும் சக்தி கிளம்பிய வுடன் மற்றுள்ள எல்லாத் தேவர்களின் அம்சங்களிலிருந்தும் ஒரு சக்தி தோன்றியது. இவ்வாறுக அந்தந்தத் தேவர்களின் மூலம் உண்டான சக்திகளின் ஒளிகள் எல்லாம் ஒன்றுயின. தீப்பிழம்பைக் கக்கும் எரிமலைபோல ஒரே ஒளிச்சேர்க்கையின் கூட்டம் திசைகளில் சூழ்ந்து விலங்குவதைத் தேவர்களே நேரில் கண்டு நிற்க, அவ் வொளி தனது பொலிவினுலே பெண் உருவாயும், மூவு லகையும் பரந்து நிற்கின்ற தாயாகவும் காணப்பட்டது. சிவனது ஒளியினுலே அவள் முகம் உண்டாயிற்று. எம னது ஒளியாலே கூந்தல் முளைத்தது. விஷ்ணுவின் மூலம் கைகள் வந்தன. சநதிரன ஒளியால் இரு கொங்கைகள் வர, இந்திரனின் ஒளியால் இடையும், வருணனின் சக்தி முழங்காலாகவும் தொடையாகவும் ஆயிற்று. பூமியின் தன்மையால் நிதம்பம் என்னும் புறப்பாகம் ஏற்பட்டது. பிரமனது நிலையால் கால்கள் வரப்பெற்றன. சூரியன் தன்மையால் கால் விரல்களும் தென்பட்டன, எட்டு வசுக் களால் கைவிரல்கள் எழுந்தன. குபேரனின் வழியாக மூக் கும், பிரசாபதியினுல் பற்களும், அக்னியினுல் மூன்று கண் களும் வரப்பெற்றுள். சந்தியா நிலை புருவங்களை உண் டாக்கியது. காற்றுக் காதுகளைக்கொடுத்தது. இன்னும் பல தேவரிகளது உதவியும் சக்தியும் கிடைக்கப்பெற்றுச் சக்தி தெய்வீகமாகத் திகழ்ந்தாள்.

கிராம தேவதைகள் :

மதக் கோட்பாட்டில் இன்று இந்தியாவில் பெரு நெறி, சிறுநெறி என்ற இரண்டுவிதமான மரபுகளைக் கூறு கின்றார் மில்டன் சிங்கர். பெரும்பாலும் கிராமத் தேவ தைகள் வழிபாடு சிறுதெறியில் அடங்கும். [10] சக்தியின் கூறுகளாகிய அறியாத அம்மன், பொங்காளி அம்மன், காடுகாத்த அம்மன், அங்காளம்மன், மாரியம்மன்,

இசக்கியம்மன், ரேணுகாதேவி போன்ற பல சிறு தெய்வங்களை மக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர். அங்காளம்மனை அவளுடைய உண்மையான உருவில் வழிபட்டு வருகின்றனர் என்றும் கே. கே. பிள்ளை கருதுகின்றார். [51] அங்காளம்மன் சுடலைமாடனின் பெண் கூறாக இருக்கலாமென்றும் அங்காளம்மனை வழிபடுபவர்களுக்குப் பாம்பிலால் தீங்கு இல்லையென்றும் அவரே கூறுகின்றார். [52] காட்டேரி என்ற சிறு தெய்வமும் வணங்கப்பட்டு வருகின்றது. அகராதி காட்டேரியினை ஒரு துர்தேவதை என்றே கூறுகின்றது. [53] மாரியம்மன் என்கின்ற கிராம தேவதை கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வணங்கப்பட்டு வந்ததாகத் திரு. ஆரோக்கியசாமி கருதுகின்றார். [54] வஞ்சியம்மன் என்று அழைக்கப்படுவது கண்ணகியம்மன்தான் எனவும் அறுதியிட்டுக் கூறுகின்றார் அவர். தற்காலத்தில் அம்மை நோயினின்று விடுபடுவதன் பொருட்டு மாரியம்மனை மக்கள் வழிபடுவதுபோல, ஆயியம்மன் என்ற அம்மனையும் மக்கள் காங்கேயம் என்ற இடத்தில் வழிபட்டதையும் உணரலாம். மாரியம்மன் வழிபாட்டிற்குச் சிறந்த இடங்களாகத் திருச்சி சமயபுரமும், கோபிச்செட்டிப்பாளையத்திற்கு அருகில் பாரியூரும், மைசூருக்கு அருகில் பன்னரையும் கருதப்படுகின்றன. தமிழ்நாட்டில் மாரியம்மன் வழிபாடு என்று நடத்தப்படுவது சிறுநெறியாகும் (Little tradition) எனக் கருதுகின்றார் டாக்டர். முத்துச் சண்முகம். [55]

ரேணுகாதேவி அம்மனைச் சங்க இலக்கிய நன்னனுடன் தொடர்பு படுத்துவோருமுளர். சங்க காலத்தில் வாழ்ந்த நன்னன் ஒருவன், ஒரு சிறுமி அவனுடைய தோட்டத்திலுள்ள ஒரு மாங்காயினைப் பறித்து உண்டமைக்காக அவளுக்கு மரணதண்டனை விதித்தான். மாங்காய் பறித்த குற்றத்திற்காக எண்பதிதொன்று யானைகளையும் அவனுடைய எல்லையளவு பொன்னும்

தருவதாக அச்சிறுமியின் தந்தை நன்னனிடம் கூறியும் நன்னன் மறுத்து அவளைக் கொலைபுரிந்தான். ஆகையால் அவ்வூர் மக்கள் வடஆர்காடு மாவட்டத்தில் போளூர் தாலுகாவிலுள்ள ரேணுகாதேவி அம்மனிடம் சென்று கண்ணீர் வடித்து முறையிட்டனர். அம்மனும் மக்களின் முறையீட்டிற்குச் செவிமடுத்து அம்மன்னனின் அரசினை அழித்து அம்மக்களைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகின்றது.[56] மலைபடுகடாத்தில் பாடப்பெற்ற நன்னனது தந்தையே பெண் கொலை செய்தவன் என்று டாக்டர். உ. வே. சா. அவர்களின் கருத்து.[57]

திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி என்ற கிராமத்தில் குளந்தாளம்மன் என்ற சிறு தெய்வம் கடன் தீர்க்கும் நீதி சபை நடத்தி வந்தது. கடன் கொடுத்தவரி கடன் வாங்கியவரைக் குறித்து புகார் செய்து பனையோலையில் எழுதி, ஈட்டியில் கோர்த்து அம்மன் கோவில் முன் வைக்கவேண்டும். கடன் வாங்கியவரும் கடன் வாங்கியதை ஒப்புக்கொண்டு அம்மாதிரியே எழுதி வைக்க வேண்டும். அவ்வாறின்றி கடன் வாங்கியவர் ஏமாற்ற முற்பட்டால், அவருக்கு உடல்நலம் மிகவும் குன்றிவிடும். இருவரில் யார் பொய் கூறினாலும் அம்மன் அவர்களைத் தண்டித்து நீதி வழங்குவாள் என்று கூறப்படுகின்றது.[58] எனவே கிராமங்களில் வழங்கி வருகின்ற சக்தியின் பல்வேறு கூறுகளாகிய கிராம தேவதைகள் மக்களுக்கு வேண்டுவனவற்றை நல்குவதுடன், அவர்களை நோய் போன்றவற்றினின்றும் காப்பாற்றுகின்றன என்பதையும், தீமை செய்து வாழ்கின்ற தீயவர்களைத் தண்டிக்கின்றன என்பதையும் உணரலாம்.

சப்த மாதர்கள்:-

ஒவ்வொரு சத்திக்கும் பெயரும் எழுத்தும் மக்கள் அமைத்தனர். இச்சத்திகள் இணைபாடுவதாயும் இவ் இணையினின்றே உலகம் படைக்கப்படுகின்றதென்றும்

கண்டனர். இவ்வாறு இறைவனேடு ஒன்றியே நிற்கும் சக்தியை "ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ" என்ற ஏழு குறியீடுகளாக அமைத்து இவை ஏழிசையையும் குறிப்பதாகக் கருதியதுமன்றி, ஏழு சத்திகளையும் ஏழு கன்னிகைகளாகவும் (சத்தமாதர்) திருக்கோயில்களில் சிலை அமைத்து வழங்கினர். இம்மரபினின்றே வானத்தில் தோன்றும் விண்மீன் நாகுநி ஒன்றுக்கு சப்தரிஷி மண்டலம் என்று அமைத்தனரோவென்று எண்ணலும் தகும். ஒரு வாரத்திற்கு ஏழு கிழமைகள் என்று உலகம் முழுவதும் அமைந்திருப்பதையும் இவண் கருதலாம். "ச, ரி, க, ம, ப, த, நி" என்ற ஏழு சுரங்கள் அமைந்துள்ளன. எங்கு நோக்கினும் ஏழாக அமைந்திருப்பது சப்த மாதர்களைக் கருதித்தானே என எண்ணவும் தோன்றுகிறது.[59]

சப்த மாதர்களாக பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி முதலியோர் கூறப்படுகின்றனர்.

பிராமி:— சதுர்ப்புஜம், விசாலாக்ஷம், ஒளிக்கும் பொன்மேனி, வரதம், அபயம், கமண்டலம், அட்சமாலிகை, அம்சத்வஜம், ஜடாமகுடம், பத்மாசனம் உள்ளவளாய் அன்ன வாகனை ஊர்ந்திருப்பவளாய் பிரம்மரூபினியாய் காட்சியளிக்கின்றாள்.

மகேசுவரி:— வெள்ளை நிறம், திரிநேத்ரம், சூலம், அபயம், வரதம், ருட்சமாலை, விருட்ச பத்வஜம், ஜடாமகுடம், உரக பூஷணம் உள்ளவளாய், விருஷப வாகனம் உடையவளாய் மகேசுவரியாய்க் காட்சியளிக்கின்றாள்.

கௌமாரி:- கௌமார வடிவத்தைக் கொண்ட கன்னிகையாய், இரத்ன மகுடம் அணிந்தவளாய், அங்குசம், வேல், அபயம், வரதம், செம்பட்டாடை, அரகேயூர பூஷணம், குங்கும நிறங்கொண்டு மகாவீரியம் உள்ளவளாய் மயில் துவஜம் மயில் வாகனம் ஊர்ந்திருப்பவள்.

நாராயணி:– பத்மபதீர விசாலாட்சியாய் சியாமள வர்ணமுள்ளவளாய், மகாபலங் கொண்டவளாய்ச் சங்கு, சக்கரம், அபயம், வரதமாகிய நான்கு கரங்களைக் கொண்டவளாய்க் கருடதீவஜம் கொண்டு கருடவாகனம் ஊர்ந்திருப்பவள்.

வராகி:– கறுப்புப் பட்டாடை உடையவளாய் வராக முகதீதவளாய்ச் சம்பதி கரியாய், பவித்ராலங்கிருபதீதினை உடையவளாய்க் கலப்பை, அபயம் கொண்டு கறுப்பு அணிந்திருப்பவள்.

இந்திராணி:– வஜ்ரபாணியாய் இரண்டு கண்களுடன், அழகுள்ள ஆடை அணிந்தவளாய், வரதம், அபயம் என்ற சக்தி கொண்டு கஜதீவஜம் உள்ளவளாய் யானை வாகனம் ஊர்ந்திருப்பவள்.

காளி:– திரிசேதீரம், சூலம், கட்கம், அம்பு, சக்கரம் ஓர் புறதீதிலும், பாசம், பலகை, சாரிங்கம், சங்கம் மற்றக் கரங்களிலும் கொண்டு எட்டு கைகளை உடைய்வளாய்ச் சடா மகுடம் கொண்டு மகிட வாகனம் ஊர்ந்திருப்பவளாகக் காட்சியளிக்கின்றாள்.[60]

சப்த மாதர்களின் படைகளாக, பிரமாணிக்கு வேதமும், மகேசுவரிக்கு பிறைகமும், கௌமாரிக்கு வேலும், நாராயணிக்குச் சக்கரமும், வராகிக்குத் தண்டும், இந்திராணிக்கு வச்சிராயுதமும் காளிக்குச் சூலமும் கூறப்பட்டுள்ளன.[61]

ஏழு கன்னிகளின் சிலைகள் திருக்கோவில்களில் மட்டும் அல்லாது, காடும், காவற், கவின்பெறு துருத்தியும், யாறும் குளனும் வேறு பல்வளப்பும், சுடுகாட்டுச் சந்தியும் புதுப்பூங் கடம்பும், மன்றமும் பிறவும் ஆகிய நிலைகளிலும் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருக்குற்றாலத்திற்கு அருகேயுள்ள திதன் காட்டில் கன்னியார் அம்மன் கோவில் என்று அழைக்

கப்படும் வீதி ஒன்றுள்ளது. அவ்வீதியின் நடுவிலுள்ள கன்னிமார் அம்மன் கோவிலில் ஏழு கன்னிகைச் சிலைகள் தான் இன்றும் காணப்படுகின்றன.[62]

தமிழ் நூல்களில் சத்தமாதர் வழிபாட்டினைக் காணலாம். குமரகுருபர அடிகள் ஈந்தருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் முதலிய திருப்பாடல்களில் சத்தமாதர், முப்பதீது மூவர் வணக்கங்கள் அமைந்துள்ளன. கலிங்கத்துப்பரணி என்ற பரணி இலக்கியத்தில் கடவுள் வாழ்த்தில் ஏழு கன்னிகைகளுக்கு வணக்கம் தனித்தனியே அமைக்கப்படுவதுடன் அவர்களுக்குரிய கொடியும் சுட்டப்பட்டுள்ளன. ஏழு கன்னிகைகள் முப்பத்து மூன்று தேவர்களில் ஒரு பகுதியார் என்று எண்ணுவதற்குத் தக்க சான்றுகள் காணப்படுகின்றன.[63] பகவதி ஸ்தோத்திர மாலையில் சப்தமாதர்களான மகேசுவரி, அம்பிகா முதலிய பெயர்களும்காணப்படுகின்றன[64] மொகஞ்சதாரோ முத்திரையில் காணப்படும் சப்த மாதர்கள் எனப்படும் ஏழு பெண்களின் தலையில் சிகை அலங்காரத்தைக் குறிக்கும் அடையாளங்கள் காணப்படுகின்றன. அவ்வேழு பெண்டிரும் வேளிர் மக்களின் ஏழு பிரிவினரைக் குறிக்கும் வண்ணம் அமைந்துள்ளனர். ஏனெனில் வேளிர்குலம் தாய்வழிச் சமுதாய அமைப்பைக் கொண்டதாகும். வாதாபியை ஆண்ட சாளுக்கிய மன்னர்கள் சப்தமாதர்களை வணங்கினர். இவர்கள் வேளிர் குலத்தைச் சேர்ந்தவர்கள் மகாசேனன் என்ற கார்த்திகேயன் சப்தமாதாகளின் அடியில் அமர்ந்து வணங்குவதாகக் காட்டும் சிற்பங்கள் உள்ளன. வேளிர்கள் பற்றிய ஆரம்ப காலக் கல்வெட்டுகளில் அவர்கள் சப்தமாதர்களை வணங்கியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.[65] சாளுக்கியரி வணங்கி வந்த சப்தமாதர்களின் சிற்பங்கள் பாண்டியர் குகைக் கோயில்களில் காணப்படுகின்றன என ஆராய்ச்சி அறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றார்.[66] சிலப்பதிகாரத்திலும் சப்த மாதர் வழிபாடுகூறப்

படுகிறது. ஊரின் வடபுறத்தில் சப்த மாதர் எழுவருக்குக் கோயில் எடுப்பிக்க வேண்டும் என்று நம வாஸ்து நூல்கள் கூறுகின்றன. இதன் அடிப்படையில் சப்த மாதர் கோயில் ஒன்று பல்லவர் காலத்திலே இருந்திருக்க வேண்டுமென திரு. இரா. நாகசாமி கருதுகின்றார்.[67]

வழிபாட்டு முறைகளும் வழிபட்டோர் எய்தும் பயனும்

கடவுள் வழிபாட்டு முறை இவ்வாறு தான் நிகழ வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறுவதன் பொருட்டுத் தொல்காப்பியர்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடு நீங்கு சிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

எனக் கூறியுள்ளார்.[68]

மேலும்,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு"

எனக் கூறுவதால், கோயில் முதலான இடங்களில் அரிச்சையாக எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குச் செய்யப்படும் பூசை திருவிழாக்களும் வள்ளுவர் காலத்திற்கு முன்னரே நாட்டில் இருந்தமையை உணரலாம்.

பொதுவாக வழிபாட்டு முறையினைக் கூறும்போது முதலில் ஒரு மண்டபம் அமைத்து அதில் ஒரு மேடை கட்டி, அதைச் சுத்தம் செய்து, சிம்மாதனம் வைத்து எல்லா மறைகளையும் ஓதுதல் வேண்டும். பின்னர் அம் மேடையில் வைக்கப்பட்ட சிம்மாதனத்தில் பட்டாடையை வைக்கவேண்டும். பின்னர் வழிபடுகின்ற சக்தியின் திருவுருவத்தை வைக்கவேண்டும். பதுமையை அமைக்க இயலாவிடின் நவாரண மந்திரத்தோடு கூடிய எந்திரத் தகடை வைத்திட வேண்டும் நல்ல மணமுள்ள மலர்களாலும் வில்வ இதழ்களாலும் சக்தியை வழிபட வேண்டும்.

வழிபாட்டு முறைகளும் வழிபட்டோர் பயன்பற்றியும் பின்னுள், அமைந்துள்ள 'இலக்கியங்கள் கூறும் சக்தி' என்ற பகுதியில் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனினும் இங்கும் அவை பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சாக்தர்கள், கோரிக்கை வெற்றி பெறுவதன் பொருட்டுப் பலவிதமான ஹோமம், ஜபம், தர்ப்பணம், பலி முதலிய கிரியைகளைக் கையாண்டு வருகின்றனர். மந்திரங்களை இரவும் பகலும் ஒருமுகப்படுத்திய மனத்துடன் கூறுகின்றனர். மதங்யம், மத்யம், மாமிசம், முத்திரை, மைதுனம் என்ற மகாரத்தையும் கொண்ட ஐந்து பொருள்களையும் புனிதமானவையாகக் கொண்டு சாக்தர்கள் சக்தியை வழிபடுகின்றனர். காளாமுகர், பாசுபதர், ஆதிவாசிகள் போன்றோர் வழிபட்ட முறையினைப் பின்வரும் கட்டுரைகள் தெள்ளிதின் விளக்குகின்றன.

பகைவனை வெல்லக் காளியையும் செல்வத்தைப் பெற சண்டியையும் அரசர்களை மயக்க சாம்பவியையும் இன்னல், எளிமை அகன்று போரில் வெற்றி பெறுவதற்கும் கொடும் பகைவனை அழிக்கவும் மறுமையில் நன்மை பெறவும் துர்க்கையையும், மனவிருப்பம் நிறைவேற சுபதிரையையும், நோய் விலக ரோகிணியையும் வழிபடவேண்டுமென திரு. சீ. சு. ராகவன் கூறுகின்றார்.[71] இதன் வாயிலாகச் சக்திகளை வழிபடுவோர் எய்தும் பயன் பற்றி அறியலாம்.

படைக்கலம் பொருந்திய கொற்றவை மகிழுமாறு பலிப்பொருட்களை வகுத்து வைத்து வணங்கிய பின்னரே பிரச்சோதனை மன்னன் மக்கள் பயின்ற போரி நிகழ்ச்சிகளை காட்டுமாறு அரங்கேற்றத்தை ஆரம்பித்ததாகப் பெருங்கதை கூறுகின்றது.[72] போர்ப் பயிற்சிகளை அரங்கேற்றுவதற்கு முன்னுள் கொற்றவைக்கு வழிபாடு செய்த நிகழ்ச்சியினைக் கொங்குவேளிர் கூறுகின்றார்[73]. கொற்றவை போரித் தெய்வமானதையால், பிரச்சோதனன் போரிக்

பயிற்சிகளை ஆரம்பிக்குமுன் கொற்றவையை வழி பட்டான் என்பது பொருந்தும்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் நாகன், தன் மகன் கன்னி வேட்டைக்குப் போகும்பொழுது அவன் வெற்றி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு தேவராட்டி மூலம் கொற்றவையை வழிபட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.[73]

குமரகுருபரர் மதுரை மீனாட்சியை மகவாகக் கொண்டு பிள்ளைத் தமிழைப் பெரிய தமிழாகப் பாடி வழி பட்டார் என்றும் அவர் பாடிய பாட்டுக்கு இரங்கி அம்மை நேரில் வந்து பரிசளித்தார் என்பதும் அறியற் பாலது.[74]

மகாபாரதத்தில் வீட்டும பருவத்தில் அருச்சுனன் தூக்கையை வழிபட்ட செய்தி காணப்படுகிறது.[75] மாரி யம்மன் வந்து கரகமாடல் போன்ற விநோதக் கூத்துகள் வேட்டுவராகிய பாமர மக்களின் விநோதத்திற்கென வகுக்கப்பட்டது என பி. கோதண்டராமன் கருதுகின் றார்.[76] இதன் வாயிலாகத் தற்காலச் சக்தி வழிபாட்டு முறை தெளிவாக விளங்குகின்றது.

மாசாதிக்கல் வழிபாடு சக்திவழிபாட்டு முறையின் ஒரு பிரிவாகக் கருதப்பட்டது. கணவன் இறந்துபட்ட தும் பெண்டிர் தீப் பாய்ந்து இறந்தனர். அவ்வாறு இறந்தவர்களைத் தீப்பாய்ந்த அம்மன் எனக் கருதி கோயில்களும் அமைத்து வழிபட்டனர். பல கிராமங் களில் அவ்வாறு இறந்தவர்களுக்குத் தனிக் கற்களும் அமைத்தனர். அவைகளே மாசாதிக்கல் என்பர். இப் பொழுது மாஸ்திக்கல் என்று மருவிற்று. பெண் மக்கள் இப்பெயரைத் தமக்கு இட்டுக்கொள்ளும் வழக்கமும் இப்பொழுது இருக்கின்றது. தொங்கு நாட்டில் மாஸ்தி யக்காள், மாஸ்தியம்மாள் என்ற பெயர்கள் வழங்கி வரு வதை கருதத்தக்கது. சதி என்பது உடன்கட்டை ஏறுதல்

பெண்ணின் சிறப்புப் பெயர். அது தாட்சாயணியின் பெயரிலிருந்து வந்ததாகும். மாசாதிக் கற்களில் கணவன் இறக்க, அவன் உடலுடன் ஒரு பெண் உடன் கட்டை ஏறுவதும் பிறகு இருவரும் மேலுலகத்திற்குச் செல்லுவது மாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். சில கற்களில் உடன் கட்டை ஏறிய பெண்களின் பெயர், காலம் முதலியவை யும் குறிக்கபபட்டிருக்கும். இவ்வித உருவக் கற்கள் கரு நாடகநாட்டில் மிகவும் உண்டு. இவைகளை நாட்டு மக்கள் வழிபட்டனர். இவ்வாறு மாசாதிக்கல் வழிபாட்டு முறை சக்தி வழிபாட்டு முறையின் ஒரு கூறாக இலங்குகின்றது.[77]

பகவதியாகிய கொற்றவையைப் பூசிப்பவள் சாலினி எனப்பட்டாள். கண்ணகி கோட்டத்தின் நித்திய பூசை புரிதற்கு, தேவந்தி என்ற பார்ப்பன மாது நியமிக்கப்பட் டிருந்தனள். இதனால் பெண் தெய்வங்களைப் பூசிப்ப தற்குப் பெண் பாலரையே நியமிப்பது பண்டை வழக்க மென்பது அறியலாம். இதுவே வடநாட்டு மரபாக இன் றும் உள்ளது என மு. இராகவையங்கார் கருதுகின்றார்.[78]

தற்காலத்தில் திருவானைக்காக் கோவிலில் ஆண் ஐயர் பெண் வேடம் போட்டுச் சென்று அகிலாண்டேசு வரிக்குப் பூசை செய்வதும் கருதத்தக்கது. பெண் வேட மிட்டு ஆண் ஐயர் பூசை செய்வதைப் பற்றி திரு. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியும் குறிப்பிடுகின்றார்.[79] மேலும் சாதி இன வேறுபாடின்றி அனைத்துச் சாதியினரும் சக்தியைப் பூசிப்பதைத் தமிழக அனைத்து மாவட்டக் கோயில்கள் பற்றிய பின்வரும் கட்டுரையின் வாயிலாக உணரலாம். சக்தியை வழிபடுவோர் பெயரின் இறுதியில் ஆனந்த நாதர் என்ற பெயரும் இணைந்து காணப்படும் என ஸ்டெயின் கோனோவ் கருதுவது உணரத்தக்கது.[80]

சக்தி வழிபாடு: ஆகமமுறை - தந்திர முறை:

ஆதிகால மதங்கள் எல்லாம் செயல்வழி, அறிவு வழி என இரு வழிகளை வகுத்துக்கொண்டன. அறிவு குறைந்

தவரிகளுக்கு இறை வழிபாடு என்னும் எளிதான உபா யத்தை எடுத்துக்கூறி அவர்களை உய்யவைப்பது செயல் வழி. அறிவு வழியே வெனில், சைவ சித்தாந்தம் என்னும் மெய்யறிவை உணரத் தருகின்றது. இவ்விரண்டனுள் செயல்வழி பரம்பரையாகப் பேணப்பட்டு வரும் மரபு ஆகமம் எனப்படும். இது பற்றியே இச்செயல் வழியினை யும் இது சேர்ப்பிக்கும் அறிவு வழியினையும் எடுத்துக் கூறும நூல்கள் ஆகம நூல்கள் எனப் பெயர்பெறுகின்றன. சக்தி வழிபாட்டினைப் பற்றிக் கூறும் ஆகம நூல்களும் உள்ளன.[81] பரிவார தெய்வங்களுள் ஒன்றான சக்திவழி பாட்டை எடுத்துக்கூறும் நூல்கள் தந்திரங்கள் எனப்படு வன. இவை தேவி சூக்தம், ருத்ர யாமளம், மேருதந்தி ரம், டமார தந்திரம், காத்யாயனி தந்திரம் முதலியன வாகும் [82]

இதிகாச புராணங்கள், வேள்வி, தபம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை, எனப் பல்வேறு கிரியைகளைக் கூறுகின்றன. புராணங்களில் தவம் செய் தோருள் உமை சிறப்பிக்கப்படுகின்றாள். 'உமா' என்னும் பெயர் "குழந்தாய் வேண்டாம். நீ மேற்கொள்ளும் தவம் உன் சக்திக்கு மீறியது" என அவளன்னை மேனை கூறித் தடுத்ததனால் ஏற்பட்டதென்று "மத்ஸ்ய புராணம்" கூறுகின்றது. உமை தவஞ் செய்து பிரமனிடமிருந்து தன் கரிய நிறத்தைத பொன்நிறமாய் மாற்றினாள் என் பது குறத்தக்கது. [83]

யாகம், தவம், தீர்த்தம் ஆகிய மூன்று வழிகளையும் கடைப்பிடிக்க இயலாதோர் தோத்திரத்தால் வழிபடும் முறையை மேற்கொள்கின்றனர். அல்லனுற்ற நிலையில் தலை வணங்கிக் கை கூப்பி மெய்யருப்பல் முதலிய மெய்ப் பாடுகள் தோன்றப் பாடும் வகையில் சக்தியை வழிபடு வோர் தோத்திரங்கள் கூறி வணங்குகின்றனர். [84]

தூய்மையான சூழ்நிலையில் பக்தியை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படும் விரதம் ஒரு தனிக் கிரியையாக இலங்குகின்றது. உமையைக் குறித்துக் கடைப்பிடிக்கப்படுவது நவராத்திரி, மகாநவமி முதலிய விரதங்களாகும். உமா மகேசுவர விரதம், கோதார கௌரி விரதம் சிவனையும் உமையையும் குறித்துக் கொள்ளப்படுவன.[85]

யாகம் முதலிய வழிபடும் முறைகளில் சிறந்த அம்சங்களை உறுப்புக்களாகக் கொண்டு பூசை என்னும் வழிபாட்டு முறை தோன்றியது. இம்முறை சக்தி வழிபாட்டில் கடைபிடிக்கப்படுகிறது.

பூசை செய்வதற்கு ஒரு கோவில் தேவை. பசுவினுடைய உடம்பெங்கணும் பரந்தோடும் குருதி பக்குவமடைந்து பாலாகப் பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்ற முலைகள் அமைந்து விளங்குவதைப்போன்று உலகெங்கணும் பரந்து விளங்கும் பரமன் ஆன்ம ஈடேற்றங் கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்கும் இடம் கோவில். கருப்பக்கிரகத்திற்கு இடப்பக்கத்தில் அதற்கு நேர்க்கியவாறு தேவியின் ஆலயம் அமையும் மிகப்பழைய கோவில்களில் கருவறையில் ஒரு பக்கத்தில் இடம் பெறுவாள். காஞ்சியில் காமாட்சியம்மன் ஆலயம் இறைவன் ஆலயத்தைக் காட்டிலும் தொலைவில் புறப்பாகக் காணப்பட்டது என்று கருத இடமுண்டு. ஆலயங்கள் தேவாலயம், மிச்ராலயம், சங்கீர்ணாலயம் என மூவகைப்படும். இறைவனுக்குமட்டும் கோயில் அமைவது கேவாலயம். இறைவனுக்கும் தேவிக்கும் சேர்ந்து கோயில் அமைவது மிச்ராலயம். பரிவாரங்களுக்கும் இறைவனுக்கும், தேவிக்கும் இணைந்து காணப்படுவது சங்கீர்ணாலயம். தென்னாட்டில் இத்தகைய கோவில்கள் காணப்படுகின்றன.[86] சக்தி கோயில்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு அமைந்துள்ளன என்பதைத் தமிழ்நாட்

டில் அமைந்துள்ள சக்தி கோயில்கள் என்ற பிரிவும் பட்டியலில் காணலாம்.

சக்தியை விக்கிரகமாக வைத்து வழிபடும் மரபும் உள்ளது. விக்கிரகம் பற்றிய நேரடியான குறிப்பு முதன் முதலில் பாணினி இயற்றிய 'அஷ்டாத்தியாயி'யில் வருகின்றது. ஆங்காங்கு தமிழகத்தில் மட்டுமன்றி அனேகமாக இடங்களிலும் சக்தியை விக்கிரகமாக வைத்து வழிபடுகின்றனர் [87]

யந்திர வழிபாடு இந்தியாவிலும் இலங்கையிலும் வழங்கிவருகின்றது. இவ்வியந்திரங்களனைத்திலும் பிரசித்திபெற்று விளங்குவது ஸ்ரீ சக்கிரம். ஸ்ரீ சக்கரத்தை வழிபடுவது சக்திவழிபாட்டின் ஒரு முறை. ஸ்ரீசக்கரத்துள் 43 முக்கோணங்கள் உண்டு. இவ்வியந்திரத்தை மேரு, கைலாசம், பூ என்ற மூன்று நிலைகளாகப் பகுப்பர். இந் நிலைகளை ஒட்டியே மேருப்ரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம் என்றும் கைலாசப்பிரஸ்தார ஸ்ரீ சக்கரயந்திரம் என்றும் பூப்பிரஸ்தார ஸ்ரீ சக்ரயந்திரம் என்றும் மூவகை யந்திரங்கள் அமைகின்றன. யந்திரத்தின் உள்ளமைப்பினை முழுவதும் காட்டுவது மேருப்ரஸ்தாரம். இதன் உச்சியில் விளங்குவது பிந்து. இதன் பீடமாக அடியில்உள்ளது முக்கோணம். இதன் கீழ் இருப்பது எண்கோணம். எண்கோணத்தின் கீழ்ப் பத்துக்கோணமும், இப்பத்துக் கோணத்தின் கீழ் இன்னொரு பத்துக் கோணமும், அதன்கீழ் பதினெண்டு கோணமும், இதன்கீழ் எட்டுத் தளங்களும், எட்டுத் தளங்களைத் தாங்கி நிற்கும் பதினாறு தளங்களும் உண்டு. இவற்றைத தாங்குவன மூன்று வட்டங்கள். இவ்வட்டங்களின் அடியில் தாங்கும் பக்கங்களிலும் மருவிநிற்பது பூபுரங்கள். பிந்து என்பது தேவியின் உறைவிடமாகும். ஏனைய முக்கோணங்கள் பரிவாரத் தெய்வங்களுக்குரியன. வேதங்களில் யந்திர வழிபாட்டைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுவதாகச்

சிலர் கூறுகின்றனர். பெரும்பாலான யந்திரங்கள் பொன்னாலாவது, வெள்ளியாலாவது, செம்பினாலாவது அமைந்த தகடுகளில் வரையப்பட்டுள்ளன. சக்தி தேவாலயத்தில் திருவுருவம் நிறுவுவதற்கு முன் பீடத்தில் உரிய யந்திரம் முதலில் நிறுவப்படும் பின்னரே விக்ரகத்தை பிரதிஷ்டை செய்வார்கள். யந்திரங்களையும் ஒரு வகையில் உருவம் பெற்ற விக்கிரங்கள் எனலாம். [88]

சக்தி திருக்கோவில்களில் நிகழும் கிரியை, பூசை யென மக்களிடம் பெரிதளவில் வழங்கின்றது. கிரியை நூல்கள், உஷக்கால பூசை, காலை சந்தி பூசை, உக்கிர காலப் பூசை, சாயரட்சை பூசை, இரண்டாங்கால பூசை, அர்த்தயாம பூசை ஆகியவை பற்றிக் கூறுகின்றன. முதலில் ஆதார சக்தியை அருச்சித்தல் நடைபெறும். பிறகு அம்மையை உரியவாறு பூசிப்பர். அதன்பிறகு போக சக்தியைப் பூசித்தல் நிகழும். நித்திய பல சக்தி பூசையின் இறுதி அம்சமாகக் கருதப்படுகிறது. எனவே சக்தி வழிபாட்டு முறை ஆகமங்கள், தந்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வாறு வளர்ச்சி அடைந்தது எனலாம். [89]

பலிக்கொடை :

சக்திக்கும் அதன் கூறுகளுக்கும் பலிக்கொடை அளிப்பது பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. இதுபற்றி 'இலக்கியங்கள் கூறும் சக்தி' என்ற கட்டுரைப் பகுதியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சிவந்த தலை, குருதி, பசிய நிணம், கொழுவிய குடர், கண்கள் இவற்றுடன் மான் தோலையும், மயில் தோகையையும் இணைத்து மூங்கில் கோல்களில் கட்டி கொடிகளில் தொங்கவிடுவதாகப் பெருங்கதையில் கொற்றவைக்குப் பலிகொடுக்கும் முறைபற்றி கூறப் பட்டுள்ளது. [90] வழங்காலம் முதல் தற்காலம்வரை

சக்திக்கு எவ்வாறு பலிகொடுத்தார்கள் போன்ற செய்திகள் பிறகட்டுரைகளில் கூறப்பட்டுள்ளன.

பாரதப் போரில் வீரதெய்வமாகிய தாய்க் கடவுளுக்குக் களப்பலி கொடுக்கப்பட்டதாக மகாபாரதம் கூறுகின்றது.[91] பாலைநிலத் தெய்வமாம் காடுகிழாளிற்கு நரபலி, விலங்குபலி மக்கள் மிகத் தாழ்ந்த நிலையில் வேட்டுவர்களாக அலைந்து கொண்டிருந்தபொழுது கொடுக்கப்பட்டதும் கருதத்தக்கது.[92] வீரர்களும், தேவி உபாசகர்களும் தங்கள் தலையினைப் பலியாக அளித்துத் தம் பிரார்த்தனைக் கடமைகளைச் செலுத்தி வந்த அருஞ் செயலை மகாபலிபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங் களில் உள்ள பல்லவ சிற்பங்கள் பலவற்றால் அறியலாம். அன்றியும் நெல்லூர் மாவட்டம் கருர்த் தாலுக்கா திரு வாண்மூர் என்றபகுதியில் அமைந்துள்ள கிராமத்தில் கம்ப வரிமன் என்ற பல்லவ வேந்தனது ஆட்சியில் அமைந்தது பத்தாம் நூற்றாண்டுச் சாசனமொன்று மேற்கூறியதை உறுதிப்படுத்தி நிற்கின்றது. வீரனொருவன் தன் தலையை ஒரே வாள் வீச்சில் அறுத்துக்கொண்டு தேவியின் பலி பீடத்தில் அதனைத் தன் கையாலே வைத்தமாதிரியின் உள்ளஉருவமும், அவ்வாறு பலியிட்ட அருஞ்செயலுக் காக அவ்வூரார் அமைத்த அறப்புறமும் அச்சிலையில் பொறிக்கப்பட்டுள்ளன.[93]

நோன்பு முறை:

பிரிந்தவரி மீண்டும் வந்துசேர்ந்தால் பின்பு பிரியாது உறைதல் வேண்டும் என்று மக்கள் கொற்றவையை வரம் வேண்டல் மரபு. கையில் காப்பு நூல் கட்டி நோன்பு நோற்றலும் வழக்கமாகக் கருதப்பட்டது.[94] சக்திக்குரிய பாலை நோன்பினைப் பற்றிச் 'சக்தியும் பாலை நோன் பும்' என்ற தலைப்பின் கீழ் விளக்கமாகக் காணலாம். நவ ராத்திரி, கார்த்தியாயினி விரதம், மகாநவமி, ஔவை யார் நோன்பு போன்றவை சக்தியைக் குறித்து நோற்கும்

படும் நோன்புகளாகும். தேவிக்குரிய பரணி நாளில் விசேடமாகக் கொண்டாடப்படுவது பரணி நோன்பு. இதனை நோற்று வந்தவருள் மகளிருமுண்டு என்பதனைத் திருக்கோவலூர்ப் பகுதியில் அகப்பட்ட கற்றூண்கள் பல வற்றால் அறியமுடிகிறது. "இன்னன் மனைவியும் இன்னன் மகளுமான இவள், பரணி நோற்ற தறி இது" என்ற கருத்தில் இத்தூண்களில் எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன. பிரார்த்தனையாகத் தன் உடம்பை அரிந்தோ பிறவாறாகவோ மகளிராலும் இப்பரணி நோன்பு கையாளப்பட்டதாகவே தோன்றுகின்றது. பரணிப் பிரபந்தம் உண்டானதற்கு ஆதாரமானவற்றுள் இத்தகைய நோன்பும் ஒன்றாகவே கொள்ளத்தகும்.[95]

கோயில்கள்:

'சக்தி வழிபாடு : ஆகமமுறை - தந்திரமுறை' என்ற உட் தலைப்பில் சக்தி கோவில்கள் பற்றி ஒரு முன்னுரை கொடுக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத்தும் பிற்காலச் சோழர் காலத்து முதற் பகுதியிலும் சிவன் கோயிலில் அம்மனுக்கு என்று தனிக் கோவில்கள் ஏற்பட வில்லை. இறைவன் கருவறையிலேயே 'போக சக்தி அம்மன்' எனத் தனித் திருமேனி வைத்து வழிபடப்பட்டது. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரனது எண்ணூயிரங் கல்வெட்டே முதன் முதலாக அம்மன் தனிக் கோவிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. கொற்றவையை கோவிலுக்கு கொண்டு சென்றது சோழர் மரபு. அதன் பிறகே அம்பிகைக்குத் தனிக் கோவில்கள் எடுக்கப்பட்டுள்ளன. பின்னரே அம்மன் கோவில்கள் சிவன் கோவில்களில் புதியனவாக ஏற்பட்டன என்பதைப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[96] தற்காலத்தில் தமிழகத்தில் மட்டும் ஆயிரத்திற்கு மேற்பட்ட அம்மன் கோயில்கள் அமைந்துள்ளன.

மந்திரம்:

இருக்கு, யசூர் முதலிய மூலப் பகுதிகளான வேதங் களைக் குறிக்க வரும் மந்திரம் என்னும் சொல் நாளடை வில் மந்திர சக்தி வாய்ந்த ஒலிகளைக் குறிப்பதாயிற்று. இவற்றைப் பீஜாட்சரங்கள் எனச் சைவக் கிரியை நூல் கள் கூறுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் சிகரம்போல் விளங்குவது 'ஓம்' என்பது. இதற்குப் பிரணவம் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. இந்தியாவில் உள்ள ஆறு மதங்களைக் கடைபிடிப்போர் அனைவரும் இதைத் தாரக மந்திரம் எனப் போற்றுவர்.[17] சிவனை வழிபடும்பொழுது 'சிவாய நம'வென்ற மந்திரத்தையும், முருகனை வழிபடும் பொழுது 'நமக்குமாராய' என்ற மந்திரத்தையும் திரு மாலை வழிபடும்பொழுது 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தையும் கூறுவர்.

'க ஏ ஈ ல ஹ்ரீம்
ஹ ஸ க ஹ ல ஹ்ரீம்
ஸ க ல ஹ்ரீம்' என்பது சக்திக்குரிய சோட சாட்ச மந்திரமாகும். ககாரம், ஏகாரம், ஈகாரம், லகாரம் என்ற நான்கு அட்சரங்களும் சேர்ந்து முதல் பாகமாகும். ஹகாரம், ஸகாரம், ககாரம், ஹகாரம், லகாரம் என்ற ஐந்து அட்சரங்களும் சேர்ந்து இரண்டா வது பாகமாகும். ஸகாரம், ககாரம், லகாரம் என்ற மூன்று அட்சரங்களும் சேர்ந்து மூன்றாவது பாகமாகும். இந்த மூன்று பாகங்களின் முடிவுகளில் 'ஹ்ரீம்' என்ற பீஜாட்சரங்களைச் சேர்த்துக் கொண்டால் பதினைந்து எழுத்துக்களாக ஆகிவிடுகின்றன. இதை ஸ்ரீமத் பஞ்ச தசாக்ஷரீ என்ற மகாவித்தையாகக் கருதுவர். முதல் பாகத்தை அக்நி கண்டம் என்றும் இரண்டாவது பாகத்தைச் சூரிய கண்டமென்றும் கூறுவர்.[18]

கேரளத்து விசாரிகா பகவதி கோவிலில் பாடப்படும் மலையாள மந்திரம், பொருள் அறியாமல் பாடப்படுகின் றது.

'ஆதிமுதல் காவேரிப் பூம்பட்டினத்து ஆயிரவர் வங்கிசத்தில்
அரிய கண்ணகை அம்மன் ஆகாவதான் பிறந்து அதிரூபமான
பொழுது
தீதிலா கோவிலருடன் பாரியாளாகவும் சிறிது காலம்
சென்றபின்
திங்கள் முகமாய் வந்து தனிக்காக மதுரையில் சிலம்பு
கூறினுளில்
கீதியர செண்ருன் பாண்டியன் வாசலில் நிகரற்ற
மழுவரசனும்
நிந்தின புறக்கவே பாண்டினுடைத்தி நீ நீருயெரித்த
சோதி
ஆதி காலத்திலும் மகிமையாய் நீ வந்த அதிசயமும்
ஆறிவரோ
ஆனைக்குளம் வளர் பகவதி அம்மையே ஆனந்த
மகமாயே'

இது கண்ணகியின் வரலாற்றைக் கூறுகின்ற நல்ல தமிழ்ப் பாட்டாக இருப்பினும் பொருள் புரியாமல் பாடப் படுவதால் மலையாள மந்திரம் என்றழைக்கப்படுகிறது. கேரளத்தில் எல்லா ஊரிகளிலும் பகவதி வழிபாடு இருந்த போதிலும் விசாரிகா என்ற ஊரில் மட்டும் இந்த மந்திரம் சொல்லப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.[99]

திருவிழாக்கள் :

இவ்வுலகில் வாழ்கின்ற மக்கள் இம்மையின்பமும் மறுமையின்பமும் எளிதில் பெற்று, தமக்கு இறைவன் அளித்த அரிய மக்கட் பிறவியைத் தூயதாக்கிக் கொள் வதற்காகவே இறையோடு தொடர்பு கொண்ட திருவிழாக்கள் நிகழ்த்தப்பட்டன. இன்றைக்கு இரண் டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நம்நாட்டில் விழாக்கள் நடந்துவந்தமையை இறையனரகப் பொருள் முதலும் நூற்பா உரையாகி அறியலாம். சக்தி க்குகந்த திருவிழாக்கள் சிலவற்றினை மட்டும் இங்கு ஆராய்வோம்.

திதன்னுடைய நவராத்திரி என்றும் வடஇந்தியா வில் துர்க்கா பூஜை என்றும் மைசூரில் தசரா என்றும் சக்தி பூஜை புரட்டாசி மாதத்தில் கொண்டாடப்

படுகின்றன. பராசக்தியாகிய அம்பிகையை முக்கிய மாகக் கொண்டும் மற்ற தேவதைகளைத் துணைத் தேவதை களாகக் கொண்டும் ஒன்பது நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. அந்த ஒன்பது நாட்களில் தேவியர் வரிசை இவ்வாறு வகுக்கப்படுகிறது. (1) மகேசு வரி (2) கௌமாரி (3) வாராகி (4) மகாலட்சுமி (5) வைணவி (6) இந்திராணி (7) மகாசரசுவதி (8) நார சிம்மி (9) சாமுண்டி என்பனவாகும். இப்படி வகுத்த லர்கள் ஒன்பது நாட்களுக்குரியவர்கள். இவர்களில் ஒவ் வொருவராக ஒவ்வொரு நாளில் சிறப்பிடத்தைப் பெறு கின்றார்கள். மகா துர்க்கையும் அவள் அம்சங்களையும் முதல் மூன்று நாட்களிலும் மகாலட்சுமியையும் அவள் அம்சங்களையும் இரண்டாம் மூன்று நாட்களிலும் பூசை செய்து முடித்த பின் ஏழாம் நாள் மகா சரசுவதியினை வழிபடுகின்றோம். இச்சரசுவதியை வழிபட்டதனால் பிருகு வியாசர், சுக்கிரர், வால்மீகி போன்றோர் நன்மை அடைந் ததாகக் கூறப்படுகின்றது. வடநாட்டினர் இராம லீலையும் நவராத்திரியையும் சம்பந்தப்படுத்தி விழா எடுக்கின்றனர். இராம லீலா என்ற நாடகம் போட்டு இராவணனின் உருவம் போலச் செய்து அதைக் கடைசி நாளாகிய விசயதசமி அன்று எரிப்பர். தமிழ்நாட்டிலே நவராத்திரிக்குக் கொலு வைக்கப்படுகின்றது. நவராத் திரி விரதத்தைச் செய்யாது விட்டவர்கள் நோயினாலும் ஏழ்மையினாலும் வாடுவதுடன் அவர்கட்கு மகப்பேறும் கிடைக்காது என்று கூறப்படுகிறது.[100] தேவியின் கையில் காப்புக்கட்டி, துர்க்கை, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவரை யும் பூசித்தல் நவராத்திரி கிரியையின் முக்கிய அம்சமா கும்.[101]

நவராத்திரியைப் பற்றி யாமள தந்திரம்,

"தசன்ச கன்னி யாமா சேது பூர்வ பக்ஷே விசேஷத
பிரதமாயாம் சமாரப்ய நவம் யந்தம் பிரபூஜையேது"

என்று கூறுகின்றது. கன்னியா மாதத்தில் பூர்வபட்சத்

தில் சிறப்பாகப் பிரதமையில் ஆரம்பித்து நவமி முடிய பூசை செய்ய வேண்டுமென்பது மேற்கூறிய அடிகளின் பொருளாகும்.

காமிகாமகம்,

"உமா மகேச்வர விரதம் கன்னியா சதுர்த்தசி
சிதப் பிரதம மாராப்ய நவப்யந்தம் உமாவிரதம்"

என்ற பிரமாணத்தைக் கூறுகின்றது. கன்னியா சதுர்த் தசியில் உமா மகேச்வர விரதம் செய்யத்தக்கது என்றும் அம்மாதத்தில் சுக்கில பிரதமையில் ஆரம்பித்து நவமி முடிய உமா விரதம் செய்யதீதக்கது என்றும் பொருள் கொள்ளலாம்.

தேவி பிரதிஷ்டாவிதி என்ற நூலில்,

"மாஸி பாத்திரபதே பக்ஷே சுக்லே பிரதி பதாதிகம்
நவம் யந்தம் விசேஷண பூஜயித்வா மஹேஸ்வரீம்"

என்று மகாநவமி பூசா விதி கூறப்பட்டுள்ளது. புரட் டாசி மாதத்தில் சுக்கில பிரதமை முதல் நவமி முடிய உமா தேவியாரை வழிபட வேண்டும் என்பது இதன் பொருள்.

மேற்கூறிய பிரமாணங்களை ஆராயுங்கால் நவராத்திரி என்பது கன்னியா மாதம் என்றும் பத்திரபத மாதம் என்றும் பெயர் பெறும் என்பதை அறியலாம். நவராத்திரி, புரட்டாசி மாதத்தில் கடைப்பிடிக்கதீதக்கது என்றும் நவமியே முக்கியமானதென்றும் இவ்வழி பாட்டினைச் சிறப்பாகப் பிரதமை முதல் ஆரம்பிக்க வேண்டுமெனவும் அறியலாம். இவ்விரதத்தைப் பற்றிப் பூர்வகாரணாகமம் 127-வது படலத்தில்,

"அதாத்ஸ் சம்பிரவக்ஷ யாமி நவராத்திரி விதிக்கிரமம்
ஆஸ்வாயுக் சுக்லாமி பிரதிபந் நயம் யந்தகே"

என்று கூறப்பட்டுள்ளது. இதில் ஆஸ்வயுக் என்பது சாந்திரமானப் பெயராக இருப்பினும் பெரும்பாலும் புரட்டாசி மாதத்தையே உணர்த்தும்.

"ஆகமங்களில் சாந்திரமான மாகக் சொல்லப்படும் மாதங்களெல்லாம் சௌரமானமாகவே கொள்ளவேண்டும்"[102] என விதி இயற்றப்பட்டுள்ளது.

"சௌர மாநே விரதம்சூர் யாத் சாந்திர மாநே நகாரயேத்

... ...

மேஷாதி ராசி மக நம் சௌரமா நம்பிரஸ்யதே"

என்று கூறப்பட்டுள்ளது.[103] இதே ஆகமம் நவராத்திரி வையக் குறித்து கூறுமிடத்து,

சௌரமாநே நகர்த்தவ்யம் நவராத்திரிம் விசேஷத

சாந்திரமாநே நகர்த்தவ்யம் கிருதஞ்சேது ராஷ்டிர நாசனம்'

என்று கூறுகின்றது.

நவராத்திரி சாந்திரமானத்தில் செய்யாது சௌரமானத்திற் சிறப்பாய்ச் செய்ய வேண்டுமென்பதும், சாந்திரமானத்தில் செய்வதால் தேசத்திற்கு நாசம் உண்டாகுமென்பதும் இதன் பொருளாகும். மேற்காட்டிய சான்றுகளின் வாயிலாக நவராத்திரி விரதம் எவ்வாவற்றுளும் புரட்டாசி மாதத்தில் மேற்கொள்ளப்படுவது என்ற கருத்து நிலைநாட்டப் பெற்றுவிட்டது. ஐப்பசி மாதத்தில் மேற்கொள்வது தேசத்திற்கு அழிவினை உண்டாக்கும் என்பதும் எண்ணத்தக்கது.[104]

மலையாள நாட்டினரின் வருடப் பிறப்பாகக் கருதப்படும் நாள் 'விசு' ஆகும். விசு பண்டிகையினைச் சக்தியுடன் தொடர்பு படுத்திக் கூறுவர். தட்சனின் மகளாகிய சதி, தந்தையின் விருப்பத்திற்கு எதிராகச் சிவபெருமானைத் திருமணம் செய்து கொண்டாள். எனவே தட்சன் தான் நடத்திய யாகத்திற்கு அவளை அழைக்கவில்லை. இருப்பினும் சதி அங்கு செல்ல, அவளை எல்லோரும் அவமானப்படுத்தினர்கள். இதைக் கேள்வியுற்ற சிவன் கோபமுற்றுத் தன் கணங்களுடன் சென்று தட்சனை அழித்தான். அப்பொழுது சிவபெருமானின் ஏவலாகிய வீரபத்திரன் தட்சனின் மருமகனாகிய சந்திரன

லுக்கு ஒரு அடி கொடுக்க, கதிரவனின் பற்கள் அனைத்தும் விழுந்து விட்டன. 'விசு' அன்று காலையில் முதன் முதலில் பார்ப்பதன் வினையே அவ்வாண்டு முழுவதும் இருக்கு மென்ற பழங்கால நம்பிக்கைக் கேற்ப, விசு அன்று காலை யில் ஒருவரும் பற்கள் கொட்டப்பட்டு அபசகுனமாகக் காணப்படும் கதிரவனைக் காணமாட்டார்கள். பச்சை அரிசி, பலவகைத் தானியங்கள், தங்க நகைகள், நம் முகத் தைப் பார்க்க உதவும் கண்ணாடி, நாணயங்கள், புனிதத் தன்மையுள்ள புத்தகங்கள், புத்தாடை, வெள்ளரிக்காய், மாம்பழம், பலாப்பழம், கொன்னை மரப் பூக்கள், திரி ஏற் பட்ட தேங்காய் ஆகியவற்றை முதல் நாள் இரவே ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு, நன்கு எரிகின்ற குத்து விளக்கின் முன்னால் வைத்திருப்பார்கள். வீட்டில் உள்ள எல்லோரும் கதிரவனைக் காலையில் பார்ப்பதற்குப் பதிலாக முதன் முதலில் அப்பாத்திரத்திலேயே காணுவர். இதற்கு 'விசுக்கணி' என்று பெயர். இவ்வாறு அமைக்கப்பட் டுள்ள விசுக்கணி, வீட்டில் உள்ள கால் நடை மிருகங்களுக் கும் காட்டப்படும். இவ்வாறு விசு பண்டிகையைச் சக்தி யுடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றனர்.[105]

சித்திரா பௌர்ணமி என்ற திருவிழா சித்திரை மாதத்தில் பௌர்ணமியன்று சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. சித்திரா பௌர்ணமியன்று சக்தியானவள் உலகத்திற்கு (பூமிக்கு) வருகை புரிந்து, அவளை வழிபட்டு வந்த சன்னியாசிகளுக்கும் முனிவர்களுக்கும் தன் விவக் கத்தக்க சக்திகளால் அருள் புரிகின்றாள் என்று பொது வான நம்பிக்கை நிலவுகின்றது. ஆதி சங்கராச்சாரியார், சித்திரா பௌர்ணமியன்று தேவியை வழிபட்டு அவ ளுடைய அருளைப் பெற்றுத் தத்துவச் செல்வத்தினை இவ்வுலகுக்கு அளித்ததாக நம்பப்படுகின்றது.[106]

தீபாவளிப் பண்டிகையன்று மகாலட்சுமி பூமிக்கு வருகை தந்து, ஒவ்வொரு வீட்டிற்கும் விஜயம் செய்து

தாக மக்கள் நம்பிக்கை கொண்டு மகாலட்சுமியை வர வேற்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. தீபாவளியன்று தலையில் தேய்க்கும் எண்ணெயில் லட்சுமி உறைவதாகவும் நம்பப்படுகின்றது. எனவே தீபாவளிப் பண்டிகையையும் சக்தியின் கூறுகளுடன் தொடர்பு படுத்திக் கூறப் படுகின்றது.[107]

மகாலட்சுமி என்று அழைக்கப்படுகின்ற வரலட்சுமி விரதம் ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமியைத் தொடர்ந்து அமைகின்ற வெள்ளிக்கிழமையன்று கொண்டாடப்படுகின்றது. கந்த புராணத்தில் சிவபெருமான், தன் சக்திக்கு வரலட்சுமி விரததின் சிறப்பினை எடுத்துக் கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த விழா மணமான பெண்டிர், தங்களுடைய மாங்கல்யம் நீடுழி காலம் இருக்க வேண்டுமென்பதன் பொருட்டும் குடும்பத்தில் செல்வம், புகழ், சமாதானம் ஓங்கி வளரவேண்டும் என்பதன் பொருட்டும் சிறப்புறக் கொண்டாடப்படுகின்றது.

சௌபாக்கியவதியாகக் கருதப்படும் பெண்டிர் காலையில் நீராடிப் புத்தாடை அணிந்து, அதன் பிறகு ஒரு பாத்திரத்தில் அரிசி, மாவிலைகள், ஒரு தேங்காய், புதிய ஆடை ஆகியவற்றை ஒரு மண்டலத்தில் வைக்கின்றனர். மகாலட்சுமி அதில் உறைவதாக அப்பெண்டிர் நம்புகின்றனர். அப்பாத்திரத்தில் வழிபாட்டிற்காக வைக்கப் படும் தானியங்கள் செல்வத்தினைக் காட்டுகின்ற அளவில் அமைகின்றன. பாத்திரத்தை வழிபட்டதும் கணேசரை வழிபடுகின்றனர். 'ரக்சா' எனப்படும் ஒரு வகை நூலும் லட்சுமி பூஜை முடிந்தவுடன் வழிபடப்படுகின்றது. பிறகு 'ரக்சா' எனப்படும் அந்நூலினை, வழிபடுவோர் தங்களுடைய வலக்கையில் கட்டிக் கொள்கின்றனர். இத்துடன் வழிபாடு முடிவெய்துகின்றது. பெண்களால் நோற்கப் படும் நோன்புடன் தொடர்புபடுத்திக் காணப்படுகின்ற இவ்விழா, சக்தியின் கூறிய மகாலக்குமியுடன் தொடர்புற அமைந்துள்ளது என்பது வெள்ளிடைமலை.[108]

சான்று விளக்கம்

1. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
— கலாநிதி கா. கைலாச நாதக் குருக்கள், பக்கம் 263

2. சாக்தம் — செந்தில் துறவி, பக்கம் : 1—16

3. Hinduism — Louis Renov, Page 38

4. ஊரும் பேரும் — ரா. பி. சேதுப்பிள்ளை, பக்கம் 285, 286

5. ibid. பக்கம் 58

6. பெரியபுராணம் — பதிப்பாசிரியர்
— தி. பட்டுச்சாமி ஓதுவார், பக்கம் 632

7. சைவத் திருக்கோவிற் கிரியை தெறி
— கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பக்கம் 263

8. எல்லோரும் வாழவேண்டும் — அ. மு. பரமசிவானந்தம், பக்கம் 52

9. கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் II
— வை. மு. கோ. பக்கம் 88

10. நந்திக்கலம்பகம் விளக்கவுரை
— சோ. அருணாசல தேசிகர், பக்கம் 3

11. பக்திஇலக்கியம் — டாக்டர் ப. அருணாசலம், பக்கம் 159

12. Saivism in Tamilnad — A Glimpses of Tamilology
— V. Sp. Manickam

13. தென்னிந்தியக்கடவுள்களின் கால்வழி — சீகன்பால்கு, செந்தமிழ்ச்செல்வி, சூலை 1974, சிலம்பு 48, பக்கம் 588

14. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர், பக்கம் 28

15. சேந்தன் திவாகரம் — திவாகர முனிவர், பக்கம் 6

16. சூடாமணி நிகண்டு (மூலமும் உரையும்)
— ஆறுமுக நாவலர், பக்கம் 1—12

17. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
— கலாநிதி கா. கைலாச நாதக் குருக்கள், பக்கம் 263

18. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையாபிள்ளை, பக்கம் 13—16

19. Der. Rig Veda. Ubersetzt. von. K. F. Geldner (III) Harvard Oriental Series, Vol. 35, 1951, 379.

20. Vedic Mythology — A. A. Macdonell, Page 154

21. The Goddess of Forests in Tamil Literature — C. G. Diehl, Page 308, 309

22. தொல்காப்பியம் (எழுத்து) — நச்சிஞர்க்கினியர் உரை, பக்கம் 75

23. சிலம்பில் கொற்றவை — இரா. சீனிவாசன், இளவேனில் தொகுதி (III) பக்கம் 75

24. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர், பக்கம் 25

25. சூடாமணி நிகண்டு (மூலமும் உரையும்) — ஆறுமுக நாவலர், பக்கம் 16

26. பெருங்கதை (பாலை நிலங்கடந்தது) — கொங்குவேளிர், வரி 18—25

27. தமிழர் மதம் — மறை மலையடிகள், பக்கம் 124

28. சேரன் செங்குட்டுவன் — மு. இராகவையங்கார்,

29. கவுரூத்திரி — சீ. சு. இராகவன்.

30. வடமொழிச்சென்ற தென்சொற்கள் — மு. தேவநேசன், செந்தழிழ்ச்செல்வி. சிலம்பு-9, பக்கம் 1931, 1932

31. கடவுளின் வடிவங்கள் — சுவாமி சித்பவானந்தர்,

32. சாக்தம் — செந்தில் துறவி, பக்கம் 1—61

33. சைவசமயவரலாறு — ந. சி. கந்தையாபின்னை,

34. திரு. மு. அருணாசலம் அவர்கள் என்னிடம் கேரில் கூறியது

35. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி — கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பக்கம் 269

36. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர், பக்கம் 23

37. சூடாமணி நிகண்டு (மூலமும் உரையும்) — ஆறுமுகநாவலர், பக்கம் 17

38. திவாகர நிகண்டு — திவாகர முனிவர், பக்கம் 7

39. சூடாமணி நிகண்டு — ஆறுமுக நாவலர், பக்கம் 17

40. திவாகரம் — திவாகர முனிவர், பக்கம் 7

41. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர், பக்கம் 23

42. "கைவாள்பஞ்ச வாகனங் கலியாகும்"
— பிங்கல நிகண்டு, பக்கம் 25

43. கடவுளின் வடிவங்கள் — சுவாமி சித்பவானந்தர்

44. மகாபாரதம் — வில்லிப்புத்தூரார், (1 : 1 : 91)

45. இலக்கிய வரலாற்றில் காட்டிலக்கியத்தின் பங்கு
— பா. ரா. சுப்பிரமணியன்,
ஆராய்ச்சி, அக்டோபர் 1970, பக்கம் 45

46. தேவாரம் — 3804

47. தமிழகம் ஊரும் பேரும்
— ரா. பி. சேதுப்பிள்ளை, பக்கம் 238, 239

48. Early Indian Religious thought — P. D. Metha

49. The religion and Philosophy of the
Vedas and Upanishad — Keith

50 The great tradition in a Metropolitan Centre — Singer

51. A Social History of the Tamils
— K. K. Pillay, Page 479

52. ibid. Page 478

53. The Goddess of Forests in Tamil literature
— C. G. Diehl, P, 312

54. The cult of Mariamma or the Goddess of the Rain
— M. Arokyasami
Tamil Culture, April 1953, Page 161

55. தமிழிலக்கியக் கோட்பாடுகள்
— டாக்டர் முத்து சண்முகன், பக்கம் 58

56. Census of India, 1961.
Temples of Tamilnad, North Arcot Dt.

57. பாடப்பட்டோர் வரலாறு — புறநானூறு ஏழாம் பதிப்பு
— உ. வே. சா., பக்கம் 76

58. Development of Religion in South India
— K. A. Neelakanta Sastri

59. ஏழிசையும் ஏழு கன்னிகளும்
— டாக்டர் அண்ணாமலைப்பிள்ளை,
செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 26, பக்கம் 101

60. அபிதான சிந்தாமணி — சிங்காரவேலு முதலியார்,
பக்கம் 561

61. பிங்கல நிகண்டு — பிங்கல முனிவர், பக்கம் 24

62. தமிழ் நெடுங்கணக்கு — டாக்டர் அண்ணாமலைப்பிள்ளை
பக்கம் 139

63. ஏழிசையும் ஏழு கன்னிகளும்
— டாக்டர் அண்ணாமலைப்பிள்ளை, பக்கம் 101

64. கண்ணகியும் பகவதி வழிபாடும் — பி. எல். சாமி
ஆராய்ச்சி, டிசம்பர்–1971

65. வேலன் வழிபாடு — பி. எல். சாமி,
ஆராய்ச்சி, ஜூலை 1971, பக்கம் 301

66. Development of Religion in South India
—K. A. Neelakanta Sastri, Page 60

67. மாமல்லை — இரா. நாகசாமி, பக்கம் 136

68. ரா. பி. சேதுப்பிள்ளை மலர், பக்கம் 278

69. ibid. Page 292

70. நவராத்திரி — சீ. சு. இராகவன்

71. ibid.

72. பெருங்கதை (விழாக்கொண்டது) வரி: 25—26

73. கண்ணப்பரும் கடவுளரும் — உ. மீனாட்சிசுந்தரம்,
ஆராய்ச்சி, டிசம்பர் 1971, பக்கம் 430

74. எல்லோரும் வாழ வேண்டும்
— அ. மு. பரமசிவானந்தம், பக்கம் 50

75. இந்து சமய வரலாறு — ந. சி. கந்தையாபிள்ளை,
பக்கம் 42

76. பண்டைத்தமிழரின் வெளியாட்டு —
கோபாலகிருஷ்ணமாச்சாரியார் அறுபதாண்டு நிறைவுவிழா
மாலை, பக்கம் 3

77. உடன்கட்டை ஏறுதல் — C. M. இராமச்சந்திரசெட்டியார்,
செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 17, பக்கம் 365

78. சிலப்பதிகாரம் கூறும் வழக்கவொழுக்கங்கள்
மு. இராகவையங்கார், பக்கம் 122

79. Development of Religion in South India —
K. A. Neelakanta Sastri, P. 22

80. *Hinduism — Louis Renov, P. 38*

81. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி
— கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பக்கம் 3

82. Ibid, பக். 8

83. Ibid, பக். 52

84. Ibid, பக். 56

85. Ibid, பக். 62

86. Ibid, பக். 75

87. Ibid, பக். 110

88. Ibid, பக். 114

89. Ibid, பக். 167

90. பெருங்கதை (பாலிலிலங்கடந்தது) வரி: 9—14

91. சைவசமய வரலாறு — ந. சி. கந்தையாபிள்ளை,
பக். 13-16

92. Ibid. பக். 13-16

93. ஆன்மத்தியாகம் — ஸ்ரீ இலக்கியக் கட்டுரைகள்
பக். 167-169

94. சைவ சமயம் — மா. இராசமாணிக்கனார் பக். 26

95. ஆன்மத்தியாகம் — ஸ்ரீ இலக்கியக் கட்டுரைகள்
பக். 167-169

96. சைவ சமயம் — மா. இராசமாணிக்கனார், பக். 62-63

97. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி — கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் பக். 25

98. சௌந்தர்ய லஹரி — ஸ்ரீ சங்கரர், பக். 106

99. கண்ணகியும் பகவதி வழிபாடும் கொங்கு, மே 1972, பக். 130

100. நவராத்திரி — சீ. சு. இராகவன்

101. சைவத் திருக்கோவிற் கிரியை நெறி — கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், பக். 177

102. சைவகால விவேகம் — ஞானசிவாச்சாரிய சுவாமிகள்

103. உத்தர காரணாகமம் — 33-வது படலம்

104. நவராத்திரி விரதம் — செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு-9

105. Fairs and Festivals — P. K. Nambiar & K. C. Narayana Kurup B. A., Census of India 1961, Vol. IX, Madras.

106. Ibid. Page 48

107. Ibid. Page 41

108. Ibid. Page 68

3

பகவதியும் பத்தினி தெய்வமும்

தாய்த் தெய்வமாகக் கருதி வழிபடப்படும் பகவதி வழிபாட்டில், தாய்வழிபாடு (Mother-Worship) கொற்றவை, காளி வழிபாடு, சக்திவழிபாடு, நாகவழிபாடு, மாரியம்மன் வழிபாடு, சைனர்களின் பத்மாவதி தேவதை வழிபாடு, புத்தர்களின் தாராதேவி வழிபாடு ஆகிய வழிபாடுகளின் கலப்பும் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலேயே கண்ணகி காளியாகக் கருதப்பட்டதையும் பாலைத் தெய்வமென கொற்றவையும் காளியையும் இணைக்கப்பட்டதைச் சங்க காலத்திற்குப் பின்னரும் காண்கின்றோம். நாடு செழிப்பாவதற்குக் கண்ணகியைத் தமிழ் நாட்டு மன்னர்களும் இலங்கை மன்னன் கயபாகுவும் வழிபட்டதையும் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள உரைபெறு கட்டுரை கூறுகின்றது வெப்பு நோயும் குருவும் போகக் கண்ணகியை வழிபட்டதும் அங்கு கூறப்பட்டுள்ளது. இவைகளில் கண்ணகியைச் சக்தி தேவதையென்று கருதிய எண்ணமும் மாரியம்மன் போன்று அம்மை நோயைத் தடுக்கவும் தரவும் கூடிய சக்தி படைத்தவள் என்ற கருத்தும் சிலப்பதிகாரத்திலேயே இருந்தது என்பதை அறியலாம். பத்தினி தெய்வமாகிய கண்ணகி வழிபாட்டிலிருந்து பகவதி வழிபாடு தோன்றியபொழுது அதனுடன் சேர்ந்த சக்திவழிபாடு (செழிப்புத்தெய்வம்), காளி வழிபாடு, ஆகியவைகளும் பகவதி வழிபாட்டில் இணைந்தன. கொடுங்கலூரில் என்ற ஊரில் (கொல்லம்) உள்ள விஷ்ணு காவு கோயிலும் கொடுங்களூர் கோயிலும் இரு பகவதி கோவில்களாகக் கருதப்படுகின்றன. கொடுங்க

ஸ்ரீ பகவதி வழிபாட்டில் கண்ணகியின் கதை பெரும்பா லும் மறைந்து காணப்படுவதாகக் கருத, விஷாரிகாவு பக வதிக் கோவில் வழிபாட்டில் கண்ணகியின் கதை இன்னும் மறையாதிருப்பது மிகவும் வியப்பாகும்.

விஷாரி காவிலுள்ள பகவதி இளைய பகவதி என்றும் கொடுங்களூரில் உள்ள பகவதி மூத்த பகவதி என்றும் அழைக்கப்படுகின்றனர். இளைய பகவதியே கூடுதலான சக்தி வாய்ந்த தெய்வம் என்று கருதப்படுகின்றாள். பொதுவாக காளியின் சிலை கிழக்குநோக்கியிருக்க, விஷாரி காவிலுள்ள இளையபகவதியின் சிலை வடக்கு நோக்கி யமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள பகவதி உருவம் காளியின் உருவத்தை ஒத்து காணப்படுகின்றது. இங்கு நடக்கும் மரணி உற்சவத்தைக் காளியாட்டம் என்றழைக் கின்றனர். இக்கோயிலுக்கு முன்னால் உள்ள ஏழிலைப் பாலைமரம் பகவதி வழிபாட்டில் முக்கிய இடத்தை வகிக் கின்றது. கடும்பாலை கூறுதலைக் காளி வழிபாட்டிற்கு ஒரு அங்கமாக இலக்கண விளக்கம் கூறியுள்ளது. கேர ளத்தில் வழங்கும் நாவேறு பாட்டுக்களில் 'முற்றத்தில் உள்ள தெய்வப்பாலை வெட்டி' என்ற வரி காணப்படுகின் றது. விஷாரிகாவு கோயிலில் காவு தீண்டல் நடந்ததாக வரலாறு இல்லை. ஆனால் கொடுங்களூர் முதலிய முக்கிய கோயில்களில் "காவு தீண்டல்" என்ற சடங்கு சில ஆண்டு கட்கு முன் வரையில் நடந்து வந்தது. (கோயில் களில் முக்குவர், ஈழவர், வேட்டுவர், வண்ணார், தட் டார் போன்ற தாழ்ந்த இனத்தவர் போக இயலாததால் அவர்கட்கு முதலில் கோவிலிற்கு சென்று தொழ அனு மதி கொடுத்தது காவு தீண்டல் எனப்படும்)

செட்டியார்கள் என்ற சாதியினர் செய்யும் சடங்கு விஷாரிகாவில் மிக முக்கியமும் வியப்பிற்குரியதுமாகக் காணப்படுகின்றது. தமிழ் சிறிதும் அறியாத இந்தச் செட்டியார்கள் மலையாள மொழியில் தமிழ் மந்திரத்தை

எழுதி வைத்து, அதை விஷாரிகாவு உற்சவ ஊர்வலத்தில் கூறுகின்றனர். இந்த மந்திரப் பாட்டில் கண்ணகியின் கதை வழங்குவது மிகவும் வியக்கத்தக்க செய்தியாகும். இப்பாட்டில் கண்ணகி காளியாகக் கருதப்பட்டதால் மகமாயி என்று அழைக்கப்படுகிறாள். மற்றொரு பாட்டில் கண்ணகியைத் தேவியாகவும், கவுரியாகவும் அபிராமியாகவும் வருணித்திருப்பதைக் காண்கிறோம். இச்செட்டியார்கள் கண்ணகிக் கதையையே மாற்றிக் கூறுகின்றார்கள். சிலப்பதிகாரத்தில் உள்ள முற்பிறப்பும், கதையே உருமாறித் தலைகீழாக வழங்குகின்றது. சிலப்பதிகாரத்தில் கொற்றவையின் வாளும், கோவலன் கொல்லப்பட்ட வாளும் 'வெள்வாள்' என்று ஒரே பெயரால் அழைக்கப்படுகின்றது. மலையாள மொழியில் கண்ணகி கதையைக் கொண்ட நாட்டுப் பாடல்கள் சில வழங்குகின்றன. ஆனால் பகவதியுடன் தொடர்புபடுத்திக் கோயிலில் பாடப்படும் கண்ணகிக் கதைப்பாட்டு விஷாரிகாவில்தான் காணப்படுகின்றது. பகவதியைப்பற்றி வழங்கும் பழைய நாட்டுப் பாடல்கள் பதிரகாளி பாட்டு ஆகியவற்றில் கண்ணகிக் கதை கூறப்படாதிருக்க, கொடுங்களூர் பகவதிக்குப் பாடப்படும் ஸ்தோத்திராஞ்சலியில் சில வரிகள் மறைமுகமாகக் கண்ணகியைக் குறிப்பிடுகின்றன.

''விதவாருடையாம் தாமவதியை நான் தொழுன்னேன்''
''திங்கள் சூடும் பகவன்டே பத்தினியை நான்
தொழுன்னேன்''

என்று எடுத்தாளப்பட்டுள்ள அடிகளின்கண் கண்ணகியை விதவையென்றும் பத்தினியென்றும் மறைமுகமாகக் குறிப்பிடுவதை உணரலாம். இதைத் தவிர கண்ணகியைக் குறிப்பிடும் மந்திரங்களோ, கதைகளோ, கொடுங்களூர்க் கோவில் வழிபாட்டில் காணப்படவில்லை. மலபார்மாநிலத்தையே கண்ணகிப் பாட்டென்று வழங்குகின்றது. நல்லம்மை தோற்றம் என்ற பாட்டு கண்ணகியைப் பற்றி நாட்டுப் பாடலாகும். வாலக்காட்டுப்

பகுதியில் வழங்குகின்றது. ஆனால் இப்பாட்டுகள் ஒன்றும் இதுவரை எழுத்து மூலமாகப் பதிவு பெறவில்லை. பாலக்காட்டில் சித்தூரில் உள்ள பகவதி கோயிலுள் ஆண்கள் செல்லக்கூடாது என்ற ஐதீகம் உள்ளது. இந்தப் பகவதியை கண்ணகி அம்மன் என்றும் கருதுகின்றனர்.

வடமலபாரில் உள்ள மற்றொரு முக்கியமான பகவதி கோயில் கண்ணனூருக்கு அருகில் உள்ள ஸ்ரீ குறுப்பக் காவில் அமைந்துள்ளது. இந்த மூலஸ்தானத்தில் பகவதி சிலை அமைக்கப்பெறவில்லை. பகவதி இருக்கும் பீடத்தை பள்ளியறை என்று அழைக்கின்றனர். பகவதி இருக்கவேண்டிய பீடத்தில் ஒரு கொடுவாள் உள்ளது. கொடுவாளையே பகவதியென்று கருதி வழிபடுவது எண்ணத்தக்கது. மாகியில் உள்ள பகவதி கோயிலில் வெண்கலத்தில் ஆன கொடுவாளே வழிபாட்டிற்குப் பயன்பட, விஷாரிகாவில் கொடுவாளானது பகவதி உற்சவ ஊர்வலத்தில் கொண்டு வரப்படுவதை உணரலாம். சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் தெய்வங்களின் அடையாளங்களையே தொழும் வழக்கம் இருந்தது இந்திரனின் படையாகிய வச்சிராயுதமும் முருகனின் படையாகிய வேலும் கோட்டத்தில் வணங்கப்பட்டதை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் கொற்றவையின் அடையாளமாக வானை ஏந்திச் செல்பவளை வெள்வாளுழத்தி என்று அழைப்பது இவண் எண்ணத்தக்கது.

வாழ்த்துக்காதையில் கண்ணகியே தான் ஆண்டிய அரசனின் மகளாகவும் கூறிக்கொள்வதைக் காணலாம். ஆனால் கட்டுரைக்காதையில் கண்ணகி முற்பிறப்பில் சிங்கபுரத்தில் கொலைப்பட்ட சங்கமன் மனைவி நீலியாகக் கூறப்படுகின்றாள். எனவே கண்ணகி பாண்டியனின் மகளானது மற்றொரு பிறப்பில் என்று கொள்ளவேண்டும். மலையாளர்கள் கண்ணகியின் முற்பிறப்புப் பெயராகிய

நீலியை வணங்குவதை அறியலாம். நீலியென்ற பெயர் காளிக்கும் பகவதிக்கும் பெயராக நிகண்டுகள் கூறுகின்றன என்பதைச் சக்தியின் கூறுகளும் சக்தி வழிபாட்டு முறைகளும் என்ற கட்டுரையின் வாயிலாக உணரலாம்.

பல்லவ மகேந்திரவர்மன் காலத்தில் திருச்சியில் உள்ள குகைக் கோயில் கற்ப கிரகத்தின் சுவரில் சிவபெரு மானைக் குறிக்கும் செதுக்கப்பட்ட படைப்புச் சித்திரமோ அல்லது ஓவியமோ வழிபடப்பட்டது என்று புதை பொருளாராய்ச்சியாளர் கே. ஆர். சீனிவாசன் அவர்கள் கூறியிருக்கின்றார். இம்மரபில் கொற்றவைக்குரிய கொடுவாள், பகவதியாக வழிபடப்பட்டு வருவதை இன்னும் மலையாள நாட்டில் காணலாம். ஸ்ரீகுறும்ப பகவதி தோன்றிய வரலாற்றில் கொடுங்களூர் பகவதியைத் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர்.

"தோற்றமல்லது நோய்க்கு மருந்தாகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி"

— குறுந்தொகை: 263

தோற்றம் என்பது தெய்வத்தின் தோற்ற வரலாற்றைக் கூறுவன. கண்ணகி வரலாற்று மந்திரமும் (விஷாரிகாவில் செட்டியார்கள் பாடும்) இது போன்றே தோற்றப்பாட்டே என்று கருதலாம். இதே பகவதிக் கோட்டத்தில் பூதகணங்களைச் சாந்தி செய்ய. 'பெலின்' என்றழைக்கப்படும் சடங்கு செய்யப்படுகின்றது. 'பலி' என்பதே பெலின் என்று உச்சரிக்கப்படுகின்றது. குறும்பர் இனத்தாரிடையே பகவதி வழிபாடு முதலில் புகழ்பெற்றுப் பின்னர் அவர்கள் கேரளத்தில் இதைப் பரப்பி இருக்கலாம் என்று கருதலாம். மாலைக்குதி தெய்வம் பகவதி என்று இறையனாரகப் பொருள் உரையாசிரியர் கூறியுள்ளார். அவரே மாலைக்குரிய ஊர்களின் பெயராக கொல் குறும்பு என்று கூறியுள்ளார். ஆதலின் பகவதி வழிபாடு இந்த உரையாசிரியர் காலமாகிய 13-ம்

நூற்றாண்டில் தமிழகத்தில் கொல் குறும்பர்களிடையே நன்றாகப் பரவி இருக்கவேண்டும். பாலைத் தெய்வமான கொற்றவைபோடு இணைக்கப்பட்ட பகவதி, கொற்றவைக்குப் பதிலாகப் பாலைதெய்வமாக்கப்பட்டாள். மலையர்கள் பகவதியை நீலி என்றழைக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் கொற்றவையை நீலி என்று கூறுகின்றார் இளங்கோ அடிகள்.

பகவதி ஆட்டங்களிலும் பிற தெய்வ ஆட்டங்களிலும் "என்னுடைய கொடுங்களூர் நேர் முத்தாச்சி ஆக்ஞை உண்டாயிட்டு" என்று ஆட்டக்காரன் தன் அதிகாரத்தைக் கூறுவதன் வாயிலாகப் பகவதியின் வணக்கம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணரலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகி, தான் சோழ நாட்டுக்குக் கற்புடைப் பெண்டிரின் மரபு வழியில் வந்ததாகக் கூறிக் கொள்வது போல் ஆதி பகவதியான கொடுங்களூர் பகவதியின் வழியாக வந்த பிற பகவதிகளும் வணங்கப் படுகிறார்கள். வட மலபாரில் வாணியர்க்குச் சொந்தமான மச்சில்லு பகவதி அல்லது முச்சிலோட்டு பகவதிக்கு வேறு விதமான கதை ஒன்று இருக்க, இப்பகவதிக்கு 12 ஆண்டுகட்கு ஒரு முறை பெருங்களியாட்டம் நிறைய செலவு செய்து நடைபெறுகின்றது. இவர்கள் பாடும் பாட்டில் பகவதியின் வர்ணனை காளி தேவியின் வர்ணனையாகவே உள்ளது. கேரளத்தில் பெரும்பாலான பகவதிப் பாட்டுக்களில் காளியின் வர்ணனையும் வணக்கமுமே இருக்கின்றன. பகவதி தப்பியனால் ஏமாற்றப்பட்டதால் 'தட்டாம்மா' என்ற சொல்லில் ஏமாற்றுவது என்ற சொல்லே ஏமாற்றுவது என்ற பொருள் பெற்றது. ஆதலின் களியாட்டங்களில் பகவதி ஆட்டம் ஆடப்படுவதில் கண்ணகிக் கதை மறைந்து காணப்படுகின்றது என்பது அறியலாம். வடமலபாரில் ஊர்களின் பெயரோடு தூர்க்கா பகவதி, உச்சிஷ்ட பகவதி, நாக பகவதி என்று பல பெயர்களுடன் பகவதிகள் அழைக்கப்படுகின்றார்கள்.

கேரளத்தில் பகவதியைத் தமிழ்நாட்டில் மாரியம்மன் போலக் கருதி வழிபடுவது வழக்கமாகும். ஆந்திர நாட்டில் பிடுகு என்ற மகரிஷியுடைய மனைவியாகிய நாகவலியின் இரண்டாம் பிறப்பு மாரியம்மா என்ற நம்பிக்கை உள்ளது தமிழ்நாட்டில் ஜமதக்னி முனிவரின் மனைவியாகிய ரேணுகாதேவியோடு தொடர்புபடுத்தி மாரியம்மனைக் கூறுவர். கொடுங்களூரில் மூத்த பகவதி கோயிலுக்கில் தனியாக வசூரிமாரி என்ற அம்மனுக்குக் கோயிலுண்டு. இது ஒரு பாம்புப் புற்றுடன் உள்ளது. நாக வழிபாட்டில் மாரியம்மன் வழிபாடு கலந்திருப்பதை இது உணர்த்துகின்றது. வேட்டுவ வரியில் கண்ணகியை "ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" என்று வருணித்திருப்பதைக் காணலாம். மு. இராகவய்யங்கார் அவர்கள் தாமரை பொருட்டில் வீற்றிருப்பவள் என்ற பொருளில் மாமணி என்று அழைக்கப்பட்டாளென்றும் கூறியுள்ளதைக் காணலாம். கண்ணகி கர்ணகை என்ற பெயர்க் காரணம் இதுவேயாகலாம். மற்றும் திருமணி என்ற பெயர் சங்க காலத்திலேயே நாகத்தின் தலையில் இருந்த இரத்தினத்திற்குப் பெயராக வழங்கியுள்ளது. கண்ணகியைத் தாமரைப் பொருட்டில் வீற்றிருப்பவள் என்றும் நாக இரத்தினம் போன்றவள் என்றும் ஒப்பிடுவதிலிருந்து, கண்ணகி சைனரின் பத்மாவதி தெய்வத்தோடு மிகவும் நெருங்கிய ஒப்புமை பெறுகிறாள். பத்மாவதி தேவதை (நாகதேவதை) இந்துக்களின் லட்சுமி அல்லது திருமாலோடு செல்வச் செழிப்பைக் குறிக்கும் கடவுளாகவும் கருதப்பட்டது உண்டு. சைனர்களின் நாக தேவதையாகக் கருதப்பட்டபொழுது இந்த தேவதையை 'விஷஹரி' என்றழைத்தனர் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த விஷஹரி என்ற பெயரே விஷாரி என்று விஷாரிகாவுப் பெயரில் மாறியது என்பது தெளிவாகும். விஷாரிகாவில் உள்ள பகவதி, விஷாரி என்ற பத்மாவதி தேவதையுடன் தொடர்புடையவள் என்பதில் ஐயமில்லை.

மங்களூரில் உள்ள மங்களா தேவியை சைனர்களின் வாரிசுகள் நாதருடனும் பத்மாவதியுடனும் தொடர்பு படுத்தி மங்களூரில் கூறி வருகின்றனர். சைனர்களின் பத்மாவதியை ஆதிமாதாவென்றும், மகாகௌரி, காளி என்றும் பத்மாவதி ஸ்தோத்திரம் கூறுகின்றது. திவாகர நிகண்டில் பகவதியின் பெயர்களுள் ஒன்றாக "பண்ணம் பணத்தி" என்ற பெயர் காணப்படுகின்றது. பிங்கலந் தையில் துர்க்கையின் பெயராக அம்பணத்தி, பகவதி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பகவதி வழி பாட்டில் தாய்வழிபாடு (Mother-worship) இரண்டறக் கலந்துள்ளது. மூத்ததாய் என்ற பொருளில்தான் கொடுங்களூர் பகவதி "மூலத்தாயே" என்றும் 'முத்தச்சி' என்றும் தெய்யாட்டக்காரர்களும் கண்ணகியைத் தாய்தெய்வமாகக் கருதும் குறிப்புள்ளது.

'இவளோ கொங்குச் செல்வி குடமலையாட்டி' என்ற வேட்டுவ வரிப்பாடல் வரிக்கு உரையெழுதிய இடத்தில் இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்று எழுதி யிருப்பதைக் காணலாம். 'கானமர் செல்வி' (அகம் : 345) நன்னனுடைய கொண்கானத்தில் அமர்ந்த செல்வி யாக அதாவது துர்க்கையாக சங்க இலக்கியத்திலேயே கூறப்படுகிறாள். இப்பொழுது அவள் கானதுர்க்கையாக கானங்காட்டில் தொழப்படுகிறாள். அதுபோலவே கண்ணகியை துர்க்கையாகக் கருதினபொழுது கொங்கு நாட்டுத் துர்க்கையாகவும் குடமலை நாட்டுத் துர்க்கை யாகவும் கருதப்பட்டாள். பதிற்றுப் பத்தில் விந்தாடவி யென்கிற விந்தியமலைத் துர்க்கையைக் குறித்துப் பாடி யிருப்பதையும் காணலாம். துர்க்கை காட்டிலும் மலையிலும் வாழ்பவளாக, இருப்பவளாகக் கருதுவது வழக்கம். கொடுங்களூர் பகவதியின் ஸ்தோத்திர மாலையில் காளியென்று முதலில் விளிக்கப்பட்டுப் பின்னர் ஸ்ரீ குறும்ப பகவதி, கொடுங்களூர் பகவதி, பத்திர

காளி என்ற பெயர்கள் வருகின்றன. ஸ்ரீ குறும்ப பகவதி என்றபெயர் கொடுங்களூர் பகவதிப் பெயருக்கு முன்னால் வருவதைக் கவனிக்க வேண்டும். இந்த ஸ்தோத்திர மாலையில் தாய்த்தெய்வமாகிய கார்த்தி யாயினியின் பெயரும் மற்றும் சப்த மாதர்களான மகேஷ்வரி, அம்பிகா முதலிய பெயரிகளும் காணப்படு கின்றன. இதிலிருந்து பகவதி வழிபாட்டில் தாய்த் தெய்வவழிபாடு கலந்துள்ளது தெரிகின்றது. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதும் திவாகர நிகண்டில் பகவதியின் பெயர்களாகத் துர்க்கை, கொற்றவை, ஐயை, நீலி, விந்தை, சயமகள், பாலைக்கிழத்தி, கன்னி, குமரி நாராயணி என்ற பெயரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பெயரிகளெல்லாம் தாய்த் தெய்வத்தைக் குறிப்பன. கொற்றவை காளியானபோது பகவதியும் கொற்றவையாகக் கருதப்பட்டாள் கொற்றவையை வெற்றியைத் தரும் தெய்வம் என்று தமிழர் கருதினர். ஆனால் துர்க்கை, நெருப்பு, நீர், பாம்பு, ஆறலைக்கள்வர் முதலிய அபாயங்களிலிருந்து தடுப்பவள் என்று வட நூலார் கருதினர்.

ஆறலைக்கள்வர் தங்களுக்குக் கொள்ளை தரும்படி கொற்றவையைத் தொழுதனர். ஆனால் ஆறலைக் கள்வ சின் கொள்ளையிலிருந்து காப்பாற்றும்படி துர்க்கையை வழிபட்டதாக வடநூல்கள் கூறும். ஆதலின் கொற்றவை யும், துர்க்கையும் தொடக்கத்தில் வெவ்வேறு தெய்வங்களா கும். கன்னியாகும் குமரியாகவும், தாய்த் தெய்வத் தைக் கருதுவது மிகப்பழமையான கருத்தாகும். பெரிப் ளூஸ் என்ற கிரேக்கன் கி. பி. முதல் நூற்றாண்டில் கன் னியாகுமரித்துறையில் குமரித்தெய்வம் இருந்ததையும் அவளைத் தொழுவதற்குத் துறையில் குளிப்பதைப் பற்றி யும் எழுதியுள்ளான். தைத்திரிய ஆரண்யகம் என்ற வட நூலில் (கி. மு. 7ம் நூற்றாண்டு) கன்னியாகுமரி என்ற பெயரில் தாய்த்தெய்வம் குறிப்பிடப்பட்டுள்

னான். தேவ்வழக் கொடுபடாத தாய்த்தெய்வத்தை ஆரியரிகளும் வணங்கினர். கன்னியாகுமரித் தெய்வம் காளியாகவும் பின்னர் பகவதியாகவும் கருதப்பட்டான். திவாகர நிகண்டு எழுதப்பட்ட காலத்திற்கு முன்னர் எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் பகவதி வழிபாடு தமிழகத்தில் தொடங்கியிருக்கலாம். தாய்த் தெய்வமாக வழிபடப்பட்டபொழுது பகவதி என்ற பெயர் சூட்டப் பட்டிருக்கலாம். பகவதி என்ற பெயர் தாரா என்ற பௌத்தர்களின் தாய்த் தெய்வத்திற்கு கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வழங்கியதைக் காண்கின்றோம். (Infomation from the article. "The Tara of Chandrawipa by Prof. D. C. Sircar in the publication" The Sakti cult and Tara" - edited by prof. D. C. Sircar University, of Calcutta — 1968) இந்தத் தாராதேவியின் வணக்கம் வங்காளத்தில் ஆறும் ஏழாம் நூற்றாண்டில் தொடங்கின தாக அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த தெய்வத்தை வங்காளத்தில் பால அரசர்கள் போற்றி வழிபட்டபோது 'பகவதிக்காரா' என்ற பெயருடன் அழைத்தனர். 'D. C. Sarkar' என்ற வரலாற்று அறிஞர் வங்காளத்தில் சந்திர தீவத்தில் இருந்த பகவதித்தாரா என்ற தேவதையின் வழிபாடு பற்றி விளக்கியுள்ளார். பால அரசர்களின் (Palka Kings) கொடியில் பகவதி தாராவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் தாரா வழிபாடு பரவியிருந்ததைப் பற்றி ஹூவன்சாங் என்ற யாத்திரிகன் குறிப்பிட்டுள்ளான். தாராதேவியின்வணக் கம் பௌத்தர்களின் தாய்த் தெய்வ வணக்கம் மட்டு மாக அமையாது தாராதேவியை நாகதேவதையாகவும் கருதுகின்றனர்.

கொடுங்களூர் பகவதியின் ஸ்தோத்திர மாலையில் தாராதேவியின் பெயரும் காணப்படுகிறது. ஆகையால் பகவதியின் வழிபாட்டில் பௌத்தர்களின் தாய்தெய்வ மான நாகதேவதையான தாராதேவியின் வணக்கமும்

இணைந்திருக்கின்றன என்பதை அறியலாம். தாரை என்று தெய்வம் கடலில் விழுந்தோரைக் காப்பாற்றும் தெய்வமாகப் பௌத்தர்களால் முதலில்வணங்கப்பட்டது. மணிமேகலா தெய்வமும் இதேபோன்ற கடல் தெய்வம் என்பது சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலின் தாரையும் மணிமேகலையும் ஒரே வகையான தெய்வங்கள். மாதவியின் முற்பிறப்புப் பெயர் தாரை யென்று மணிமேகலை கூறுகின்றது. பௌத்தர்களின் தாய்த்தெய்வங்களான தாரையும் பத்மாவதியும் கண்ணகி தெய்வத்துடன் சக்தி தெய்வங்களாகவும் தேவதை யாகவும் கருதப்பட்டு இணைக்கப்பட்டபொழுது கண்ண கிக்குப் பகவதி என்ற பெயர் வழங்கியிருக்க வேண்டும். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் கி. பி ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் தோன்றியதாக வரலாற்றுசிரி யர்களால் கூறப்படும் தாந்திரிக வழிபாடுதோன்றிய பின்னர்தான் பகவதி வழிபாடு தோன்றி இருக்க வேண்டும். வங்காளத்தில் உள்ள சந்திராத் தீவு பகவதி, கன்னித் தெய்வமாகவும் தென்கடல் ஓரத்தில் மலையில் வீற்றிருப்பவளாகவும் கருதப்படுகின்றாள். இக் கன்னித் தெய்வதீதின் வரலாறும் கன்னியாகுமரியில் அமைந்துள்ள கன்னித்தெய்வத்தின் வரலாறும் ஒப்புமை யுடையதாகக் காணப்படுகின்றது.

கண்ணகி வேங்கை மரத்தடியில் தெய்வமானதாகக் கருதும் கற்பனை, தாய்த்தெய்வக் கருத்துடன் தொடர் புடையது. மரத்தடியில் நிற்கும் பெண் தெய்வங்களின் (Tree goddess) சிற்பங்களைக் கி.மு. இரண்டாம் நூற்றாண் டிலேயே காணலாம். நற்றிணை 219-ம் பாடலில் ஒரு முலை குறைந்த திருமாவுண்ணி, எரிபோன்ற பூவுடைய வேங்கை மரத்தில் கட்டுப்பரணுக்கருகில் நின்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த திருமாவுண்ணி கண்ணகியாக இருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறு கின்றனர். கேரளத்தில் மலையன்மாரிடையேயும் பிறி

இனத்தாரிடையேயும் அச்சத்துடன் வணங்கப்படும் தெய்வமாக உள்ள ஒற்றை முலைச்சியை யகஷி தேவதை யென்றும் மலையில் வாழ்பவள் என்றும் பாலைமரத்தடியில் நிற்பவள் என்றும் மலையர்கள் கூறுகின்றனர்.

நற்றிணையில் வரும் வேங்கை மரத்தினடியில் நின்ற திருமாவுண்ணி, சிலப்பதிகாரத்தில் வரும் வேங்கை மரத்தின் அடியில் நின்ற கண்ணகி, கோங்க மரத்தினடியில் நின்ற இயக்கி, மலையர்கள் சொல்லும் பாலை மரத்தடியில் நிற்கும் தெய்வமாகிய ஒற்றை முலைச்சி ஆகிய தேவதைகள் எல்லாம் மலர் மரத்தடியே நிற்கும் யகஷித் தெய்வத்தைத் (Tree Goddess) தழுவியே கற்பிக்கப்பட்ட பெண் தெய்வங்கள் என்று கொள்ளவேண்டும். எனவே கண்ணகி வேங்கை மரத்தினடியில் தெய்வமாக மாறியது சைனர்களின் யகஷித் தெய்வத்தோடு தொடர்புடையது என்று கருத வேண்டும். பார்சுவநாதர், பத்மாவதி ஆகிய சைனரின் தெய்வங்கள் எட்டு, ஒன்பது, பத்தாம் நூற்றாண்டு சிற்பங்களில் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன. கல்வெட்டிலும் இந்த தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சோழபாண்டியரும் கண்டராதித்தன் காலத்துக் கல்வெட்டு (10-ம் நூற்றாண்டு) பத்மாவதிக்கு கோயில் எழுப்பியதைக் குறிப்பிடுகின்றது. குப்தர்கள சிற்பத்தில் இயக்கித் தெய்வத்தைப் பாக்கு மரக் குலையின் அடியில் காட்டும் வழக்கம் உண்டு. எனவே பகவதியான கண்ணகி, ஒரு வகையில் இயக்கி தெய்வமாகும். பகவதி வழிபாடும் தமிழர் என்று கருதப்படும் மலையரால் மலைவாணரால் முதலில் மலைநிலத்தில் பரப்பப்பட்டதே பின்னர் முல்லை நிலத்துக் குறும்பர்களால் பிற இனத்தாரிடம் பரப்பப்பட்டிருக்கலாம். எனவேதான் எல்லா பகவதிக்கும் முந்தினை பகவதி முதல் பகவதி குறும்ப பகவதி என்ற கருத்து கேரளத்தில் நிலவுகின்றது. இனக்குழு மக்களால் (Tribal groups) தொடங்கப்பட்ட கண்ணகியாகிய பகவதியின் வழிபாடு பின்னர் மற்ற சாதியினராலும் கடைபிடிக்கப்பட்டு

மதத்தைச் சேர்ந்த நம்பூதிரிகளாலும் ஏற்றுக்கொள்ளக் காரணமாம். இறுதியாக இப்பொழுது உள்ள பகவதித் தெய்வ வழிபாட்டில் ஆரியர்க்கு முற்பட்ட பழங்கற் காலத்தைத் தாய்த் தெய்வ வணக்கமும், பழந்தமிழரின் கொற்றவை வணக்கமும், இந்து மதத்தின் சக்தி, காளி வணக்கமும் சைனரின் பத்மாவதி வணக்கமும், புத்த மதத்தினரின் தாராதேவி வணக்கமும் கலந்து அமைந்துள்ளன என்று அறுதியிட்டுக் கூறலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. The Tara of Chandrawipa. — Prof. D. C. Sircar. "The Sakti cult and Tara" (1968)
2. அகநானூறு
3. 'கண்ணகியும் பகவதி வழிபாடும்' — பி. எல். சாமி ஆராய்ச்சி. டிசம்பர் 1971
4. இலக்கண விளக்கம்
5. இறையனார் அகப்பொருள் உரை
6. சிலப்பதிகாரம்
7. பதிற்றுப் பத்து
8. குறுந்தொகை
9. தைத்திரிய ஆரணிகம்
10. நற்றிணை
11. கோவலன் கதை
12. திவாகரம்
13. பிங்கல நிகண்டு
14. பத்மாவதி ஸ்தோத்திர மாலை
15. கொடுங்களூர் பகவதி ஸ்தோத்திரமாலை.

4
சக்தியும் பாவை நோன்பும்

பக்தி இலக்கியம் என்னும் பூஞ்சோலையில் தனக் கென ஒரு தனியிடம் பெற்று, அழிவில்லாத சிறப் பொடும் புகழொடும் இலங்கும் செந்தமிழ்ப் பைங்கொடி ஆண்டாளின் படைப்பாக முப்பது பாடல்கள் கொண்ட திருப்பாவை அமைகின்றது. அனைவரது உள்ளத்தையும் உருகச் செய்யும் ஆற்றல் பெற்ற பாடல்களைப் படைத்த ளித்த மாணிக்கவாசகரின் படைப்பாக இருபது பாடல் கள் கொண்ட திருவெம்பாவையும் திகழ்கின்றது. 'திருப் பாவை' என்ற சொல்லில் திரு என்பது அடையாக வரு கின்றது. இதற்குச் செல்வம், இலக்குமி, அழகு, மேன்மை போன்ற பல பொருள்கள் உண்டு. 'பாவை' என்பது மனுமை அல்லது உருவத்தைக் குறிக்கிறது. திருவெம் பாவை என்பதில் திரு என்பது மேன்மையையும் 'எம்' என்பது உயிரையும் பாவை என்பது வழிபாட்டிற்கு அமைந்த திருவுருவையும் சுட்டின. திருப்பாவை என் பது மேன்மை பொருந்திய பாவை என்ற பொருளில் வந்து, பாவை என்பது உவமையாகு பெயராய் பெண்களை உணர்த்தி, பின் அது பொருளாகு பெயராய்ப் பெண் களால் நோற்கப்படும் நோன்பினை உணர்த்தி, பின் அது காரியவாகு பெயராய் அந்நோன்பினைத் தெரிவிக்கும் நூலை உணர்த்தியது என்பதும் இவண் கருதத்தக்கது.[1] பாட்டு வரையறை திருப்பாவை, திருவெம்பாவை பாடல் களுக்கு இல்லை. யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோளாக வந்த பாட்டொன்றினிருந்து அவை திகதெறியினரும் இசைசெய்யுள் வகையில் பாடியுள்ளனர் என்பது புலனு கிறது. எனவே இப்பாட்டிற்குக் காரிகையினி விர

தத்தை (பாலை நோன்பு) காரணமாகக் கூறல் பொருந்தாது என்று டாக்டர் ப. அருணாசலம் கருதுகின்றார்.[2] பாலை நோன்பு என்னுஞ் சொல் நோன்பு என்ற பொருளில் திருப்பாலையில் வந்துள்ளது.

'நாமும் நம் பாலைக்குச் செய்யும் கிரிகைகள்'
[திருப்பாலை 2 : 2]

என்ற அடியில் பாலை என்பது நோன்பினையே சுட்டி நிற்கின்றது. பாலை முதலில் கொற்றவை அல்லது கண்ணகி தெய்வத்தைக் குறித்து வழங்கியிருக்கலாம். பாலைக்கு நோன்பு இருப்பது போலக் கொற்றவைக்கு நோன்பு இருந்து துறை மூழ்கியதாகப் பெரிப்புளுஸ் கி. பி. முதலாம் நூற்றாண்டிலேயே கூறியுள்ளதை அறியலாம். பாலை நோன்பே கொற்றவை தெய்வமான தாய்த் தெய்வ நோன்பிலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதுகின்றார் பி. எல். சுவாமி.[3] தொல்காப்பியத்தில் "பாலைப் பாட்டு" பற்றிய குறிப்புக்கள் இல்லை. சங்க இலக்கியங்களில் தைந்நீராடல் பற்றிய குறிப்புக்கள் உள. தைந்நீராடலையே பிற்காலத்தில் மார்கழி நீராடல் என அழைத்தனர். இதனடிப்படையில் எழுந்தனவே இப் பாலைப் பாடல்கள்.

சங்க காலத்தில் பாலை நோன்பு சைவ சமயத் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. பாலை நீராடல் பற்றிக் கூறும் பரிபாடல் பதினேராம் பாடலில் நீராடும்பொழுது, ஒரு பெண் மற்றொரு பெண்ணின் நிறத்தியில் சிவந்த பொட்டிட்டு அவளைக் கொற்றவை போலத் தோற்றமளிக்குமாறு செய்தாள் என்ற குறிப்புக் காணப்படுகிறது.[4] மார்கழி மாதத் திருவாதிரை முழு மதியில் சக்தியின் கணவனாகிய சிவபெருமானுக்கு விழா நிகழும்பொழுது பாலை நீராடல் நிகழ்வதாக அதே பரிபாடல் கூறுகின்றது.[5] மூக்கண்ணை உடைய சிவபிரானது ஆலமுற்றம் என்னும் தலத்தில் உள்ள பொய்கை சூழ்ந்த

பொழின்கண் கன்னிகள் பாவை இயற்றியது மற்றிய குறிப்பை அகநானூறு குறிப்பிடுகின்றது.[6] பாவை நோன்பு இருந்து தைத் திங்களில் நீர்த்துறையில் மூழ்கும் வழக்கத்தை நற்றிணை –22ம் பாடலும் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியத்தில் மகளிர் பைஞ்சாய் என்ற கோரைப் புல்லைக் கொண்டு பாவை செய்து விளையாடுவது பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இந்த பைஞ்சாயப் பாவை தாய்த்தெய்வமான கன்னித் தெய்வத்தின் உருவ மென்று கொள்ளலாம். இன்று கோரைப் புல்லில் பாவை செய்யும் வழக்கம் தமிழ்நாட்டில் காணப்படவில்லை. ஆனால் கோரைப் புல்லில் இத்தகைய பாவை செய்யும் வழக்கத்தைப் பீகார் மாநிலத்தின் வடக்குப்பாகத்தில் மைதிலிப் பிராமணப் பெண்கள் செய்து வருகின்றார்கள். இதைத் தாய்த் தெய்வமாகவும் லட்சுமியாகவும் கருது கின்றார்கள்.[7]

சக்திக்குப் பாவை நோன்பு இயற்றும்பொழுது ஈர வெண் மணலால் சக்தியின் பாவை வடிவம் செய்து அதற்குக் கிரியைகளும் செய்து கன்னியர் வழிபடுவர்.

> " வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்
> செய்யும் கிரியைகள் கேளீரே " [திருப்பாவை 2: 1–1]

என்ற பாடலடிகள் கிரியைகள் செய்து வழிபடும் தன்மை யினைக் கூறுகின்றன.

> " மணிநிலாக்கதிர் பரப்பிய முத்தவெண் மணலால்
> பணிவ ரைக்கொடி திருவுருப் பாற்பட வகுத்தும் "
> [10 : 9 : 7]

என்றவாறுசுச் செவ்வைவச் சூடுவார் வரைய பாகவதப் பாடலின் அடிகளும் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்து கின்றன. இந்நோன்பு செய்யவேண்டிய முறைபற்றி திருப்பாவை இரண்டாவது பாடல் குறிப்பிடுகின்றது.

" மையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேள்ீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளே சென்று ஓதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்து ஏல் ஓர் எம்பாவாய் "
[திருப்பாவை : 2]

தாய்மார்கள் அருகில் நின்று கன்னியர் இந்நோன்பில் நீராடுவர் என்பதை,

'தாயருகா நின்று தவத்தை ரோடுதல்'

என்ற அடியின் வாயிலாகப் பரிபாடல் சுட்டுகின்றது.[8] முதன் முதலாகப் பரிபாடலிலேயே நீராடலு மையத் தொடர்பு பெற்றுத் 'தவம்' என அழைக்கப்படுகிறது. மணமாகாத பெண்களே நீராடினர் என்பதும் இப்பாடலால் அறியப்படுகிறது. பரிபாடலில் இந்நீராடலை 'அம்பாவாய்' என அழைக்கின்றனர். இதற்கு விளக்கம் தரும் பொழுது பரிமேலழகர் போன்றோர் 'அம்பா' என்பதற்குத் தாய் எனப் பொருள் கொண்டு 'கன்னிப் பெண்கள் தத்தம் தாயின் துணை கொண்டு நீராடியதை அம்பாவாடல்' என்று கூறுகின்றனர். அம்பா என்பது தேவியைக் குறிக்கும் எனவும் கருத இடமுண்டு. நீர்த்துறையில் பாவை அமைத்துப் பெண்கள் நீராடுவதால் அங்கு சுட்டப்படும் பாவை இறையிலது பாவையாகவே அமைந்திருக்கலாமென எண்ணவும் தகும். வீட்டு வாழ்விற்கு நல்ல கணவரைப் பெறுவதற்கும் நாட்டுச் செழிப்பிற்கு நல்ல மழையைப் பொழிவிப்பதற்கும் இந்நோன்பில் சக்தியைக் கன்னியர் வழிபடுவர். கன்னிப் பருவத்தில் நல்ல கணவரை விரும்பி இந்நோன்பை நோற்பது பற்றிப் பரிபாடல் பதினேராம் பாடலின் அடியில் காணப்படும் குறிப்புக் கூறுகின்றது.[9]

மண்டைக்காலச் சாண்ரோர் ஒருவர் திருவாசகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அதன் பொருள் புலப்படத் தலைக் குறிப்புகள் வரைந்துள்ளார். அவர் திருவெம்பாவைக்குச் 'சக்தியை வியந்தது' என்ற தலைப்பைத் தந்துள்ளார். எனவே திருவெம்பாவை, திருப்பாவை என்பன தேவியின் விரதத்தை, அன்று மணமே காத கன்னியர் கொண்டாடிய முறையைக் குறிப்பன என்று கூறலாம். திருவெம்பாவையில் சக்தி வழிபாடே கூறப்பட்டுள்ளது என்பது 'முன்னிக் கடலை' என்ற பாடலில் [திருவெம்பாவை : 16] சக்தியை உவமை கூறுதலால் தெரியவருகின்றது. இன்னும்,

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத்திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்''[10]

என்ற அடிகளாலும் இவ்வுண்மையை அறியலாம். நவசக்திகள் ஒருவரையொருவர் எழுப்புவதாகவும் சிறுபெண்கள் ஒருத்தியை ஒருத்தி அழைத்துக்கொண்டு சிவபெருமான் பேர் பாடிக்கொண்டு பாவை நோன்பு நோற்கச் செல்லுவதாகவும் திருவெம்பாவைப் பாடல்கள் அமைந்துள்ளன என்று சிலர் கூறுவதை மறுத்துரைக்கின்றார் கே. கே. பிள்ளை.[11] திருவெம்பாவையில் கிடைக்கும் அகச்சான்றுகளைக் கொண்டு ஆராயும்பொழுது, கோயில் பணிப்பெண்கள் [அதாவது கோயிற் பணிக்கு என்று விடப்பட்ட பதியிலார்ப் பெண்கள்] ஒருத்தியை ஒருத்தி வைகறையில் எழுப்பிக்கொண்டு சிற்றம்பலவன் சீர்பாடி நீர்த்துறையில் நீராடிப் பாவை நோன்பு நோற்றனர் என்று கொள்ளுவதே சாலப் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது என்று நவில்கின்றார் அவர்.

அனைத்துப் பாவைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ள துயிலெழுப்புதல் மக்களிடையே ஒற்றுமையையும், அன்பையும் வளர்க்க உதவுகிறது. கன்னியர் திரள் திரளாகச் செல்வதை ஒரு கூட்டுறவு ஞானச் சமுதாயம் என

டாக்டர் தெ. வெ. மீனாட்சிசுந்தரனார் கூறியுள்ளமையும் கருதத்தக்கது.[12] மேலும் மணி, சர்வ பூத தமனி, பலப் பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டையாமை, என்ற ஒன்பது சக்திகளைப் முன்னின்றவர் பின்னுள்ளவரிகளை எழுப்புவதாகக் கூறப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது.[13] இச்சக்திகளையே மணிவாசகர் திருவெம்பாவைப் பாடல்களில் நவகன்னியராகக் காட்டுகிறார் என்பர். மணிவாசகர் அருளிய திருவெம்பாவையில் உள்ள 9 : 1 : 6; 19 : 1 : 4; ஆகிய பாடல் பகுதிகள் நல்ல கணவரை வேண்டி இந்நோன்பு நோற்கப்படுவதைக் காட்டும். ஆயர்குலக் கன்னியரும் கண்ணனை மணவாளனாக அடையவேண்டிச் சக்தியை நோன்பு நோற்றது பற்றிச் செவ்வைச் சூடுவார் பாகவதம் கூறுகின்றது[14] ஆயர் மகளிர் காரீதியாயினி, தேவியை நோன்பு நோற்றுக் கண்ணனை அடைந்ததாகப் பாகவதம் கூறுவது இவண் ஒப்பு நோக்கத்தக்கது.[15]

கண்ணனைக் கணவனாக அடைய வேண்டி சக்தியைப் பரவுதலே திருப்பாவையின் குறிப்பு என்பது கருதற்பாலது. பாவை நோன்பில் கன்னியர் சக்தியை நோக்கி மழை பொழிய வேண்டுவர். இது பற்றி திருவெம்பாவை: 16, திருப்பாவை : 4 ஆகியவை குறிப்பிடுகின்றன. எனவே மேற்கூறியவற்றுள் மழை பொழிவதற்கும் இனிய இல்வாழ்வு அமைவதற்கும் சக்தியின் அருள் இன்றியமையாததென்பது புலப்படுகின்றது. மழை பொழியும் நிகழ்ச்சிக்குச் சக்தியைத் திருவெம்பாவை 16-வது பாடலில் மாணிக்கவாசகர் உவமிக்கிறார். சக்தியின் நிறம், இடை திருவடிச் சிலம்பொலி, திருப்புருவம் ஆகியவற்றைக் கருமுகிலிற்கும், மின்னலிற்கும், முழக்கத்திற்கும், வானவில்லிற்கும் உவமிக்கிறார். இங்கு இயற்கையில் இறைவியாகிய சக்தியின் வடிவத்தை உவமை வாயிலாகக் காட்டும் நிலையும் அவ்வியற்கையில் இயக்கத்திற்கு அடிப்படையாய் அமையும் அவளின் அருள் திறமும் மாணிவாசகரால் எடுத்துக் காட்டப்படுகின்றன.

சங்க காலத்தொட்டு ஒன்பதாம் நூற்றாண்டு வரை சக்தியின் பாவை நோன்பு பற்றிய பாடல் குறிப்புக்கள் காணப்படுகின்றன. பரிபாடல், அகநானூறு, திருப் பாவை, திருவெம்பாவை ஆகியவற்றின் கண் கூறப்பட்டுள்ள பாடலடிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. சிற்றிலக்கியமாகிய பரணி, சக்தியை மையமாக வைத்து இயங்குவது போன்று பாவைப் பாடல்களும் சக்தியை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. இன்றும் இப் பாவைப் பாடல்கள் சைவ வைணவக் கோயில்தோறும் முழங்குகின்றன. சக்தி சிவனின் மனைவி; திருமாலின் தங்கை என்ற உறவு முறைக்கேற்பச் சைவ வைணவ சமயங்களிரண்டிலுமே அவள் பாவை நோன்பின் மூலம் வெளிப்படுகிறாள்.

சேரநாட்டுப் பெண்கள் கொண்டாடும் திருவாதிரை விழாவும், வடநாட்டினர் கொண்டாடும் கார்த்தியாயினி விரதமும் பாவை நோன்புடன் நெருங்கிய தொடர் புடையன.[16] தெற்கு மலபார் பகுதிகளில் திருவாதிரை என்று பகவதியம்மன் என்ற தேவியை வழிபடுகின்றனர். கன்னியர் நற்கணவரை அடைதல் பொருட்டும், மண மாண பெண்டிர் இல்வாழ்க்கை சிறப்புற வேண்டும் என்றும் இத்திருவாதிரை விழாவினை எடுக்கின்றமையால் பாவை நோன்பின் ஒரு வளர்ந்த திரிந்த நிலையே இன்றையத் திருவாதிரை விழா என எண்ணவும் இட முண்டு. கார்த்தியாயினி விரதமும், நோக்கம், சடங்கு ஆகியவற்றில் பாவை நோன்போடு தொடர்புடையதாக அமைந்துள்ளது. பாகவதத்தில் மார்கழி மாதத்தில் கோகுலத்துப் பெண்டிர் கார்த்தியாயினி பூசையைச் சிறப்பித்தது கூறப்படுகிறது. இங்கு கூறப்படும் பாவை, தேவியின் பாவை எனக் கூறல் பொருந்தும்.[17] கண்ணனைத் தனக்கு நாயகனாக அருளவேண்டுமென்றும், மழைபொழிய வேண்டுமென்றும் வேண்டுவர். இவர்கள் திருப்பாவை, திருவெம்பாவைக் கன்னியரைப் போன்று

அதே வயன் கருதி நோன்பு நோற்றலால் கார்த்தியாயினி விரதமும் பாவை நோன்புடன் தொடர்புடையதாக அமைகின்றது.

'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளையாம்' சக்தியின் பாதத்திறம் பாடுகின்ற பாவைப் பாடல்களைப் பாடுவதற்காக முற்காலத்தில் அரசர்கள் நிலங்கள் விடுதித செய்தியும் மார்கழி விழாக் கொண்டாடியதும் கல் வெட்டுக்களால் அறியலாம்.[18] பாவை நோன்பினைச் சிறப்பித்துக் கூறும் பாவைப் பாடல்கள் சயாம் நாட்டில் ஒலிக்கின்றன என்று சயாம் நாட்டில் நடைபெறும் அரண்மனைச் சடங்குகள் குறித்து சுவாரிட்ச்வேல்ஸ் என்ற அறிஞர் தம் நூலில் எழுதியுள்ளார்.[19] சக்திக்குகந்த பாவை நோன்பினைச் சிறப்பிக்கின்ற பாவைப் பாடல்களைத் தாய்லாந்தில் கேட்டு மகிழ்ந்ததாகத் தனி நாயக அடிகளும் குறிப்பிடுகின்றார்.[20] பாவை நோன்பு அரிய பெரிய தவமாகத் தமிழ் மக்களால் கருதப்படுகிறது என்பதனைத் 'தவத்தை நீராடுதல்' என்ற பரிபாடல் பகுதியும் (11 : 91), "தையில் நீராடிய தவம்" என்ற கலித்தொகை பகுதியும் (59 : 13) காட்டுப எனவே சக்தி பற்றிய இப் பாவை நோன்பு சைவ வைணவ சமயங்களின் இணைப்புப் பாலமாக - இல்லறம் நாட்டு வளம் ஆகியவற்றின் மூல காரணமாக அமைகின்றது என அறுதியிட்டுக் கூறலாம்.

சான்று விளக்கம்

1. பாவைப்பாடல்கள் — ரு. கஸ்தூரி எம். ஏ. [பக்கம் : 19]

2. பக்தி இலக்கியம் — டாக்டர் ப. அருளைசலம் [பக்கம் : 174]

3. தமிழிலக்கியத்தில் தாய்தெய்வவழிபாடு — பி. எல். சுவாமி [பக்கம் : 221]
ஆராய்ச்சி மலர் — 4 இதழ். 2 (அக்டோபர் 1972)

4. "நெற்றி விழியா நிறை திலக மிட்டாளே
கொற்றவைக்கோ லங் கொண்டோர் பெண்"
— [பரிபாடல் 11 ; 99 - 100]

5. மாயிரும் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கும்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
வெம்பா தாகவியனில் வரைப் பெண
அம்பா வாடலின ஆய்தொடிக் கன்னியர்
— பரிபாடல் 11 : 77 - 81.

6. ஞாலம் நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆலமுற்றங் கவின் பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழில் மணமகளிர்
கைசெய் பாவைத் துறைக்க ணிறுக்கும்
[அகம் : 181—15 - 19]

7. தமிழிலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு
— பி. எல். சுவாமி [ப. 221]
ஆராய்ச்சி மலர் — 4 இதழ். 2 (அக்டோபர் 1972)

8. பரிபாடல் 11 : 91.

9. வரைவு மலிந்த தோழி கன்னிப் பருவத்துத் தைந் நீராடத் தவம் தலைப்பட்டேமென வையை நேக்கித் தலைமகள் கேட்பச் சொல்லியது.

10. மலரும் மணமும் — ஆ. கந்தையா எம். ஏ. [ஜூன் 1962]
திருவெம்பாவை (பக்கம் : 36)

11. தமிழக வரலாறும் மக்கள் — பண்பாடும் கே. கே. பிள்ளை
பக்கம் : 220 - (1972)

12. 'திருவெம்பாவையில் வரும் நீராடல்'
தருமை கனகாபிஷேக விழா மலர் (1961)

13. பாவைப் பாடல்கள் —ரு. கஸ்தூரி, (பக்கம் : 92)

14. செவ்வைச் சூடுவார் பாகவதப்பாடல் : 10 : 9 : 6

15. பாகவதம். தசமஸ்கந்தம் 24.

16. பாவைப் பாடல்கள் — ரு. கஸ்தூரி (1971)
பாவை நோன்புடன் தொடர்புடைய விழாக்கள் பக்கம் 114

17. பாகவதம்—தசமஸ்கந்தம் 22ம் அத்தியாயம்

18. Madras Epigraphy Annual Report for 1927 : 7 para 26
Madras Epigraphy Annual Report 128 of 1921
Epi. Rep. 68 of 4914.

19. "Siamese Court Ceremonies" by Quaritch wates.

20. 'தமிழ்த்தூது' தனி நாயக அடிகள், பக்கம் (118 - 119)

5

சாக்த சமயம்

தோற்றம்:

மிகப் பழங்காலத்தில் தோன்றிய தாய்வழிபாட்டின் வளர்ச்சியே சாக்தமாகும்.[1] சாக்தம் என்பது சைவத்தின் உட்பிரிவுகளாகிய பாசுபதம், மாவிரதம், கபாலம், வாமம், பைரவம், சைவம் என்ற அறுவகைச் சித்தாந்தப் பிரிவுகளில் ஒன்று.[2] சக்தியை முழுமுதற் கடவுளாக வழி படுபவர்கள் சார்ந்துள்ள சமயமே சாக்தம் எனலாம். இம் மதம் காசுமீரத்தில் சிவாத்துவைதம் என்றும் சாக்தாத் துவைதம் என்றும் வழங்கப்பட்டு வருகின்றது.[3] தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தில்தான் சாக்த சமயக் கொள்கை முதன் முதலாக இடம் பெறுகின்றது [12 : (9) : 3].[4]

பிரிவுகள்:

சாக்த மதத்தில் வாம மார்க்கம், தட்சிண மார்க்கம் என இரு மார்க்கங்கள் உண்டு. ஆனால் புராணங்களில் வாம மார்க்கம் இடம் பெறாது மறைந்துள்ளது.[5] வினை மறுபிறப்பு, சூக்ம தேகம், தூல தேகம் ஆகியவை பற்றிய நம்பிக்கைகளைச் சாக்த மதம் ஏற்றுக்கொள்கின்றது.[6]

சாக்த ஆகமங்கள்:

ஞானம், யோகம், கிரியை, சாரியை என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள ஆகமங்கள், கடவுளால் கூறப்பட்டன என்ற கூற்று நம்பப்பட்டு வருகின்றன.[7] 'வேதச்சடங்குகள் அகற்றப்பட்டு உலகன்னாபாக சக்தியை வணங்கும் நிலை ஏற்பட்ட பொழுது சாக்த ஆகமங்கள் தோன்றின' என டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் கருது கின்றார்.[8] சைவத்திற்கு 28 ஆகமங்களும் வைணவத் திற்கு 108 ஆகமங்களும் கூறப்படுவதைப் போன்று சாக் தத்திற்கு 77 ஆகமங்கள் கூறப்படுகின்றன.[9]

சாக்த ஆகமங்கள் எழுபத்தேழில் வசிட்டம், சனகம், சுகம், சனுதனம், சனத்குமாரம் என்பன ஐந்து சுப ஆக மங்களாகும். இவை ஞானத்திற்கும் வீடுபேற்றிற்கும் உரிய வழிகளைக் கூறுவதுடன் வலது ஏக மார்க்கமெனவும் சமயாசாரம் எனவும் கொள்ளப்படுகின்றன. 64 ஆகமங் கள் கௌல ஆகமங்கள் எனப்படும். இவை மந்திர வித் தைகளையும் இடக்கரான வழிபாடுகளையும் கூறுகின்றன. ஏனைய எட்டு ஆகமங்கள் மிசிரகாகமங்கள் எனப்படும். இவை இரண்டையும் கூறுகின்ற நிலையில் அமைந்துள் ளன. கௌல ஆகமக் கொள்கைகள் இடது கை மார்க்க மெனவும் மிசிர ஆகம மார்க்கம் கலப்பு மார்க்கமெனவும் கருதப்படுகின்றன. சந்திரகலை, சோதீஸ்வரி, புவனேசுவரி துர்வாச மாதா, பர்கஸ்பதியா என்பன மிசிர ஆகமங் களில் குறிப்பிடத்தக்கவை.[10] மேற்கூறிய சாக்த ஆகமங் கள் சக்திக்கும் சிவனுக்கும் இடையே நடைபெறும் உரை யாடல் வடிவில் அமைந்துள்ளன. இவ்வாகமங்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது. ஜான் புட்ரூப் என்பவர் பெருமுயற்சி கொண்டு இப்பொழுது எஞ்சியுள்ள ஆகமங்களை அச்சிட் டுள்ளார்.[11]

சாக்த நூல்கள்:

சாக்த சமய நூல்களாக ருத்ரயாமளம், ஞானார் ணவம், தசதிர ராசம், சாரதா திலகம், பிரபஞ்சசாரம், திரிபுரா ரகசியம், யோகினி இருதயம், வாபகேச்வரதந் திரம், சதுமசதி, குலசூடாமணி, மகா நிர்வாண தந்திரம், தந்திராலோகம், ஸ்ரீ நேத்திர தந்திரம், ஸ்ரீ வித்யார் ணவம், காம கலா விலாசம் ஆகியவை காணப்படு கின்றன.[12] சக்தி சூத்திரங்கள் என்னும் நூல் சாக்த தத்துவ ஞானத்தை விரிவாகக் கூறுகின்றது. பாஸ்கராச் சாரியார் தமது இல்லித விஸ்வதார பாடியம் என்னும் நூலில் மேற்கூறிய சக்தி சூத்திரமென்னும் நூலிலிருந்து ஒன்பது சூத்திரங்களை எடுத்தாண்டுள்ளார்.[13]

சக்தி வழிபாட்டுக் கொள்கை:

சக்தி சிவத்தோடு சேராவிடில் சிவத்தால் ஒரு தொழிலும் புரியவே முடியாது என்பது சாக்த சமயக் கொள்கை.[14] உலகம் சக்திமயமானது என்றும் சாக்த நூலில் விதித்த முறைப்படி ஒழுகிச் சக்தியில் ஆழ்ந்திருப்பதே முக்தி என்றும் சக்தி வழிபாட்டின் கொள்கைகளாகக் கருதுகின்றனர் சாக்தர்கள்.[15]

வழிபாட்டு முறைகள்:

சக்தியை வழிபடுகின்றவர்கள், சக்தியை வழிபடுவதன் பொருட்டு, தனிப்பட்ட முறையில் சூத்திரங்களையும் உரைநடை நூல்களையும் வழிபாட்டிற்கு வேண்டிய மந்திரங்களுக்கும் புறச் சரணங்களுக்கும் வேண்டிய விதிகளையும் வகுத்துக் கொண்டனர். நூல்கள் கூறிய மந்திரங்களைத் தாமாகக் கற்றால் ஒரு விதப் பயனும் கிடைக்காது எனக் கருதி, குருவின் அறிவுரை வாயிலாகத் தீட்சை பெற்று அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்துகொண்டு சாக்தர்கள் சக்தியை வழிபடுகின்றனர். மேலும் தாங்கள் வழிபடும் சக்திக்குப் பண்புகளையும் பல வடிவங்களையும் கற்பித்துக்கொண்டு அர்ச்சா மார்க்கத்தையே பெரிதும் போற்றி வருகின்றனர். சாக்தேயர்கள் நாளடைவில் வேதத்திலே விதிக்கப்பெற்ற தத்தமக்குரிய தருமங்களையும் கருமங்களையும் மேற்கொள்வது மிகவும் கடினமெனக் கருதி அம்மார்க்கத்தினையும் புறக்கணித்துக் கௌலம் முதலிய 64 கலைகளையும் கொண்ட தந்திரங்களைப் பின்பற்றிச் சக்தியை வழிபடத் தொடங்கினர். இக் கலைகள் யாவும் ஸ்ரீ தேவியின் வாயிலாக வெளிவந்தவை என்பது இவர்களுடைய முடிவான கருத்து. இவைகளை வேதங்களுக்கு ஒப்பானவைகளென்றும் கூறுகின்றனர்.

இவர்கள் அர்ச்சனை மார்க்கத்தைத் தழுவுவதோடு தங்களுடைய கோரிக்கைகளை அடைவதற்குப் பலவித ஹோமம், ஜபம், தர்ப்பணம், பலி முதலிய கிரியை

கண்ணையும் கையாண்டு வருகின்றனர். மந்திரங்களை இரவும் பகலும் ஒருமுகப்படுத்திய மனத்துடன் இலட்சக் கணக்கில் கணித்து வருகின்றனர். மேலும் சக்தியைத் திருப்தி செய்வதன் பொருட்டு, மத்ஸ்யம், மத்யம், மாமிசம், முத்திரை, மைதுனம் என்ற மகாரத்தையுட் கொண்ட ஐந்து பொருள்களையும் புனிதமானவையெனக் கொண்டு இச்சக்தியை வழிபட்டும் வருகின்றனர். இதன் வாயிலாகவே இம்மானிட உலகில் உள்ள இன்பங்கள் யாவும் கிடைப்பதோடு வீடு பேறான முக்தியாம் பேரின்பமும் கிடைக்கின்றதென்பது சாக்தர்களின் கருத்து.

சாக்தரிகள் வாமசாரிகளென்றும் கௌலிக ளென்றும் பாகுபடுத்தப்பட்டு அழைக்கப்பெறுகின்றனர். கௌலிகள் வேதங்களிலே கூறப்பட்ட தேவர்கள், ரிஷிகள், பிதிர்கள் என்ற மூவர்களுடைய கடனைத் தீர்க்க வல்ல ஐந்து விதமான பெருவேள்விகளைச் செய்வதில்லை. மேலும் இவர்களுக்குப் பிறவிக் கடனைக் கடக்க வேண்டு மென்ற எண்ணமும் அதற்குரிய முயற்சியும் இல்லை. கௌலிகள் தட்சிணாசாரர்கள் என்றும் ஸ்ரீ வித்யோபாசர் களெனன்றும் வைதிகர்களென்றும் வழங்கப்பெறுவர்.

தொடக்கமில்லாத வேதங்களிலே விதிக்கப்பட்ட பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் என்ற வருண பாகுபாட்டிற்கு உட்பட்டு, அவர்களுக்குரிய வைதிகக் கருமங்களையும் அந்த வேதங்களைத் தழுவிய சுருதிகளால் விதிக்கப்பட்ட கருமங்களையும் கைக்கொள்வதில் நம் பிக்ஷை உடையவர்களாய் இருப்பதனால் ஸ்நானம், வந்தனம், ஜபம், ஹோமம், தேவாராதனை, அதிதி பூசை போன்ற ஆறு கருமங்களையும் ஒருமுகப்படுத்திய மனத் துடன் வழுவாது மேற்கொண்டுள்ளனர். மேலும் இவர்கள் வேதங்களில் விதிக்கப்பட்ட வெற்றிற்கு மாறு படாமல் தங்களுக்கு விருப்பமான தேவதையையும் வழி

படுவார்கள். சூரியன், அம்பிகை, விட்ணு, விநாயகர், மகேசுவரன் என்ற ஐந்து மூர்த்திகளையும் தோல், கண், செவி, நாக்கு, மூக்கு என்ற ஐந்து பொறிகளுக்கும் தேவதைகளாகக் கருதி வழிபடுகின்றனர். இவர்கள் காயத்திரி மந்திரத்தை உபதேசம் பெற்ற காரணத் தாலேயே, மற்ற மந்திர தீட்சைகளால் உண்டாக்கக் கூடிய பலன் கிடைக்குமென்று எண்ணுகின்றனர். இவரி களில் சிலர் மந்திர தீட்சையும் அவசியமெனக் கருதித் தகுந்த குருவை அடைந்து, அவரிடமிருந்து தீட்சை பெற்றுக்கொண்டு, சாத்விக குணத்தை முதலாகக் கொண்ட ஸ்ரீ வித்தியை முதலிய பத்துவித மகாவிதியை என்ற மந்திரங்களில் தமக்கு விருப்பமான மந்திரத்தைப் பெற்றுக் குருவின் அறிவுரைக்கேற்ப அதற்குரிய வழி பாட்டு முறையுடன் பூசை செய்து, பராசக்தியை தோன்றச் செய்து அவளுடைய திருவருளைப் பெற்று ஆனந்தக் கடலில் திளைக்கின்றனர். மேற்கூறிய வேத விதிப்படி அதற்கு மாறுபாடு இல்லாமல் வழிபட்டு, இவ் வுலகிலுள்ள இன்பங்கள் யாவும் நிலையற்றவை எனக் கண்டு, இவர்கள் தருமங்களையும் கருமங்களையும் ஒரு சிறிதும் வழுவாது நிறைவேற்றிய காரணத்தால் சித்த சுத்தி, மனத்தெளிவுபெற்று, தேவ—ரிஷி—பிதிர் என்ற மூக்கடனையும் தீர்த்து, அதனின்றும் விடுதலை அடை வதால் மேருவிரைவில் பிறவித் துன்பத்தை அழித்துப் பிறவாப் பேரின்பப் பெருங்கடலில் மூழ்குகின்றனர் எனலாம்.

வேத வகைக்குட்பட்ட ஆறு கருமங்களையும் வழுவாது செய்து, காயத்திரி மந்திரத்தை உபதேசம் பெற்று, கல்விப் பயிற்சி செய்து, ஐதிகப் பலன்களை எளி தாக நினைத்து விடுவேறு ஒன்றையே அழியாத பேரின்ப மாகக் கருதி தட்சிணாசாரர்கள் வழிபடுகின்றனர். மேற் கூறியவற்றின் வாயிலாக சாக்த மதத்தைச் சார்ந்த சாக் தர்கள் சக்தியை வழிபட்டு வருகின்றனர் என்பதை

சான்று விளக்கம்

1. சைவ சமயம் — மா. இராசமாணிக்கனார், பக்கம் 91
2. ibid.
3. கலைக் களஞ்சியம்
4. 'Two fold manifestation of God'
   — S. Sathyamoorthy P. 37
   Journal Vol, IV March, 1973
5. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையா பிள்ளை, பக்கம் 26
6. Indian Philosophy — Dr. S. Radhakrishnan, Page 735
7. சைவ சமய வரலாறு — ந. சி, கந்தையா பிள்ளை, பக்கம் 27
8. Indian Philosophy — Dr. S. Radhakrishnan, Page 732
9. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையா பிள்ளை, பக்கம் 26
10. ibid. பக்கம் 91—93
11. Indian Philosophy — S. Radhakrishnan, Page 732
12. 'சாக்தம்' — கலைக் களஞ்சியம்
13. சைவ சமய வரலாறு — ந. சி. கந்தையா பிள்ளை, பக்கம் 91
14. ibid.
15. சைவ சமயம் — மா. இராசமாணிக்கனார், பக்கம் 92
16. 'சாக்தம்' — கலைக் களஞ்சியம்

6
தத்துவ நோக்கில் சக்தி

உலகத்தில் உள்ள பொருள்கள் தாம் காரணமா யிருந்து பல காரியங்கள் செய்வதற்கு அவற்றிடையே ஆக்கும் சக்தியொன்று இருப்பது போலவே, கடவுள் தாம் காரணமாக அமைந்து உலகத்திலுள்ள பொருட் களை உண்டாக்குவதற்கு ஆக்கும் சக்தியொன்றினைப் பெற்றுள்ளார். இத்தகைய சக்தியொன்று கடவுளரிடம் உண்டு என்று கூறுவதோடு அமையாது, அதைத் தெய்வ மாக வழிபடுவோரும் உளர். இச்சக்தியின்றிக் கடவுள் எதுவும் செய்ய முடியாததாகையால் இச்சக்தியை உடைய கடவுள் முக்கியமாகக் கருதப்பட்டது.[1]

தெய்வ தத்துவமாகிய சக்தியை வழிபடுகின்ற ஆரம்ப நிலை ரிக் வேதத்தில் காணப்படுகின்றது. ஆற்ற லின் வடிவாக அவள் வருணிக்கப்படுகின்றாள். வானுல கவாசியாகவும் கருதப்படும் அவள் நிலவுலகைக் காப்பாற்று கின்றாள். அண்டங்களைத் தாங்குகின்ற பேராற்றலாகச் சக்தி வருணிக்கப்படுகின்றாள். காலப் போக்கில் பொன் னிறம் உள்ள உமையுடன் சக்தி ஒன்றுக்கப்பட்டாள். மகாபாரததத்தில் கண்ணனின் தங்கையாக்கப்பட்டு வைண வத்துடன் தொடர்பு படுத்தப்பட்டாள். சைவர்கள் அவளைச் சிவனின் மனைவியாக்கினர். இத்தகை நிலையில் சக்தி அமைகின்றாள்.[2]

சிவன் சக்தியுடன் இணையும் பொழுதான் படைப் புத் தொடங்குகின்றது. இணையாத நிலையில் சிவம் அசை வற்றிருக்கும் என ஆதி சங்கராச்சாரியார் கூறுகின்றார்.[3]

கோணலான மனத்தைக் கருவியாகக் கொண்டு சிவனைக்காணுதலே திரிபுபட்ட தோற்றத்திற்குக் காரண மாகும். இந்நிலையில் இருக்கும் நாம் ஒழுங்குபடுதற்கு

சக்தி தத்துவமும் சக்தி வழிபாடும் பெரிதும் பயன்படுகின்றன. சிவம் என்பது மெய்ப்பொருள். பிரியாத இனிடத்து நிலைத்துள்ள விபூதி அல்லது சம்பத்துக்குச் சக்தி என்று பெயர் கூறலாம். அண்டங்கள் அனைத்தும் சிவ சக்தி மயமாய் இருக்கின்றன. சிவம் என்பது அறிவுப் பொருள் (சைதனம்). சக்தி என்பது ஜடப்பொருள். இவையிரண்டும் இணைபிரியாது உலகம் முழுவதும் இயங்குகின்றன.[1]

முதன் முதலாகச் சக்தியை (உமாஹைமவதியை) பரம் பொருளாகக் கூறுவது கேனோபநிஷதம். பிறகு பிருகதாரணியாக உபநிஷதம் உலகத்தைப் படைக்க விருப்பம் கொண்ட பரப்பிரம்மம், ஒன்றுக இருக்கும் தான் பலவாய் ஆவதற்கு ஈட்சணமே அதனுடைய ஆக்கும் சக்தியாகின்றது எனறு கூறுகின்றது.

சுவேதாச்வதர உபநிஷதம், உலகப் படைப்பிற்குக் காரணம் காலம், நியதி, இயற்கை முதலியன அல்ல என்றும் பிரமமானது தன்னுடைய பரநத பலவிதமான மறைவான அறிவு, பலம், செயல் என்று கூறப்படும் சக்தியின் மூலமே படைக்கிறது என்றும் கூறுகின்றது. இந்தச் சக்தியை மாயை என்றும் அதை உடையவரான மகேசுவரரை மாயி என்றும் அழைக்கிறது.

உபநிஷத காலத்திற்குப் பின்னர் வந்த மதங்கள் எல்லாம் மேற்கண்ட உபநிஷதங்களில் கண்ட சக்தி தத்துவத்தையே தத்தமக்கு ஏற்றவாறு விரிவுரை செய்கின்றன அத்வைதிகள் பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்யும் மாயையே பராசக்தி என்று கூறுகின்றனர். காசுமீர சைவர்கள் சிவன் ஒருவரே உண்மையானவர் எனறும் அவருடன் கூடி நிற்பதும் அவருடைய உள்ளம் போன்றதுமான சக்தி ஒன்று உண்டு என்றும் கூறுகின்றனர். சிவன் ஞான உருவான பிரகாச தத்துவமாகவும், சக்தி ஆராய்ச்சி உருவான விமரிசத் தத்துவமாகவும்

விளங்குகின்றனர். விமரிசச் சக்தி, பிரகாச உருவான சிவனிடத்திலிருந்து வேறு பட்டதன்று எனக் கருதலாம்.

வீர சைவம் என்ற இலிங்காயதமும் சக்தியை விமரிச தத்துவமாகவே கூறுகின்றது. சக்தி என்பது ஞானம், கிரியை ஆகிய இரண்டின் சமரச நிலையே என்று கூறுவதால் சிவனுக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தமானது ஒற்றுமை - வேற்றுமையென விளக்கவொண்ணாத சூக்குமம் என ஆகின்றது. இதனால் இலிங்காயதம், சக்தி விசிஷ்டாத்வைதம் எனவும் பெயர் பெறுகின்றது. சக்தி கடவுளுடைய சத்து, சித்து, ஆனந்த இலக்கணங்களை உடையதாயினும் கடவுளுக்குக் கீழ்ப்பட்டதே என்று வீர சைவத்தினர் கருதுகின்றனர்.

சிவாத்வைதமானது, சக்தி சிவனுடைய எல்லாச் சிறப்புக்கும் காரணமானவள் என்றும், உலகனைத்தையும் உருவாகக் கொண்டவள் என்றும் பக்தருக்காகக் கடவுளிடத்துப் பரிந்து பேசி அருள்பெற உதவுகின்றவள் என்றும் கூறுகின்றது.

விசிஷ்டாத்வைதிகளுடைய கொள்கையும் இதுவேயாகும். இவர்களுள் வடகலையார், காச்மீர சைவர் கூறுவது போல் இலக்குமியாகிய சக்தி, கடவுளுடனே இரட்டையாய் நிற்கும் தத்துவம் என்றும், தென்கலையார், இலக்குமி சிவகோடிகளைச் சேர்ந்தவள் என்றும் கூறுவர். ஆனால் கடவுளின் அருளுருவாய் இருந்து அடியாரைக் காக்க உதவி புரிபவள் என்பதில் அவர்களிடையே கருத்து வேற்றுமை இல்லை. இவ்வாறு அடியார்க்கு உதவும் பொழுது சக்தியைப் புருஷகாரம் என்று கூறுவர்.

சித்தாந்த சைவமானது ஞானம், கிரியை, இச்சை என்ற மூன்று பிரிவைக் கொண்ட கடவுளுடைய சித்து அம்சமே சக்தி என்று கூறுகிறது. அவள் சூரியனும் சூரிய கிரணமும் போல் ஒன்றாகவும் வேறாகவும் இருப்பவள் என்றும், ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல்,

அருளல் என்ற ஐந்து தொழில்களையும் செய்பவள் என்றும் கூறுகின்றது.[5]

இவன் அறிவாகக் கருதப்பட்டால், சக்தி அறிவினை ஆக்குகின்ற ஆற்றலாகக் கொள்ளப்படுகிறாள். சக்தியின் ஆணைக்குட்பட்டே நான்முகன் படைக்கின்றான்; மால் காக்கின்றான்; உருத்திரன் அழிக்கின்றான். எனவே சக்தி மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவளாகக் கருதப் படுகின்றாள் என்று டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் கருதுகிறார்.[6]

உலகை ஆட்டிப்படைக்கின்ற ஆற்றல்களாகிய இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்ற மூன்றும் சக்தியின் கூறுகளாகக் கருதப்படுகின்றன. இம் மூன்று சக்திகளைச் சிவபெருமானின் முக்கண்களாக தீக்ஷாவதி, காரணாகமம் என்னும் சைவ நூற்கள் கூறுவது இவண் கருதத்தக்கது. அன்புக்கும் அதன் கிளைகளாக வரும் உணர்ச்சிகள் அனைத்திற்கும் பிறப்பிடம் இச்சா சக்தியென்பதும், கேடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கும் அஞ்ஞான அந்தகாரத்தை அகற்றவல்லது ஞான சக்தி யென்பதும், நல்வினை ஊக்கத்தைப் பெற்று இயல்பாக அமையப் பெற்றுள்ளது கிரியா சக்தி என்பதும் உணரத்தக்கன.[7]

சக்தியைப் பற்றிய ஞானம் வீடுபேற்றிற்கு அடிப் படையாக அமைகின்றது. பக்தி ஒன்றே சக்தியை அடை வதற்கு துணை செய்கின்றது. சப்தவடிவமாகவும் சக்தி இருக்கின்றாள். அதனால் சக்தி மந்திரங்கள் புனிதமாகக் கருதப்படுகின்றன. அடியவன் குண்டலினி சக்தியை மேல் நோக்கி எழுப்பி ஆறு ஆதாரங்களுக்குக் கொண்டு செல்கின்றான் என்று திந்திய தத்துவம் என்னும் நூல் கூறுகின்றது.[8]

தனக்கு நிலைக்களமான இறைவனின் வெளித் தோற்றமாக அமைகின்ற சக்தியானது சதாசிவ குணத்தை அடைந்தால் காப்பாற்றும் சக்தியென்றும்,

இராச குணத்தை அடைந்தால் சிவராசிகளைப் படைக்கும் சக்தியென்றும் தாமத குணத்தை அடைந்தால் அழிக்கும் சக்தியெனவும் அழைக்கப்பெறுகின்றது. மேலும் பிராமி, நாராயணி, ரௌத்திரி முதலான சக்திகளும் முன்னர் கூறிய பரப்பிரமத்தின் ஒருவகைத் தோற்றமாகிய சக்தியின் வெளிப்படையான தனித்தனித் தோற்றங்களாகும்.

அறிகின்றான், விரும்புகின்றான், முயல்கின்றான் என்ற வழக்குகளின் பிரமாணத்தினால் ஞானம், இச்சை, கிரியை என்ற வடிவமாய் இருப்பதோடு மகத்தத்துவம், அகங்காரம், பஞ்ச பூதங்கள், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல், பேசுதல், எடுத்தல், போதல், விடுதல் முதலிய பலவித செய்கைகளும் இச் சக்தியின் வடிவங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு சக்தி, மனத்தால் நினைக்க முடியாததாகவும் கண்ணால் காண இயலாததாகவும், தொடக்கம், நடுநிலைமை, முடிவு என்ற மூன்றும் அற்றதாகவும் தெய்வத் தத்துவமாகக் காட்சியளிக்கின்றாள்.[9]

நெருப்பினில் அமைந்துள்ள வெப்பம் போன்று என்றும் பிரியாது, எப்பொழுதும் அழியாது நிலைத்து நிற்கும் பரம்பொருளைச் சார்ந்திருக்கும் ஆற்றலினைச் சக்தி அல்லது மாயை எனக்கருதலாம் என்கிறார் சுவாமி சித்பவானந்தர்.[10] உலகத்தைப் பற்றிய உண்மையை விளக்குவதே மாயை. சக்தியின் திருவிளையாட்டை அணுமுதல் அண்டம்வரை எங்கும் காணலாம். இப் பூமியைப்போன்று எண்ணிறந்த கிரகங்கள் ஒன்றை யொன்று அதிவேகமாக சுற்றிக்கொண்டு செல்கின்றன. இவ்வாறு கிரகங்களைச் சுழல வைப்பதற்கு ஆகர்ஷண சக்தியென்று பெயர். இச்சக்தியின் வன்மையால் பந்துகள் போன்று அனைவரும் ஆட்டப்படுகின்றனர்.

ஆனால்நிலைகுலையாது ஒழுங்காக அலைகள் சுழல்வதனின்று ஆட்டுவிக்கும் சக்தி அறிவு மயமானது என்பது விளங்குகின்றது. சக்தியின் இத்தகைய விளையாட்டு மனதிற்கு எட்டாத வண்ணம் பரந்து விரிந்து ஓடுகின்றமையை உணரலாம் அணுப்புள்ளி போன்ற பூமியில் நடைபெறுகின்ற மாயா சக்தியின் லீலா விசித்திரம் மனிதனை மயங்கிவிடச் செய்து விடுகின்றது.

மலைகள் வானளாவிக் கொண்டு நிற்பதும், அவைகளினின்று அருவிகள் ஒலித்தும் விரைந்தும் வீழ்வதும், மேகம் மின்னி ஒளி வீசி இடிப்பதும், மழை தாரை தாரையாகப் பெய்வதும் இயற்கை சக்தியின் பேராற்றலைப் பற்றி நினைவுறுத்துகின்றன. நீராவியும், மின்சாரமும் யந்திரங்களின் மூலம் செய்யும் பல பணிகள், சக்தியின் வலிமையை விளக்குகின்றன. மேலும் உயிர்ப்பிராணிகள் வாழ்வு முறையை ஆராயுமிடத்தும் சக்தியின் திருவிளையாடல் வெளியாகின்றது. உயிர் வாழும் பிராணிகள் ததீதம் இனம் சேர்ந்திருப்பதும் இனம் காப்பதும் இனம் பெருக்குவதும் எதிரியோடு சண்டையிடுவதும் சக்தியின் உயிர்த் தத்துவத்தை உணர்த்துகின்றன. மக்களினத்தில் இதே இயக்கம் அதிக ஆற்றலுடனும் அறிவுடனும் கூடியதாக அமைகின்றது. ஒரே மின்சார சக்தி பலவேறு வடிவுடைய பல்வேறு யந்திரங்களைப் பல்வேறு முறைகளில் இயக்கி வருவது போன்று உயிர் வாழ்வன அனைத்தையும் ஒரே பிராண சக்தி ஆட்டி வைக்கின்றது.

ஜடப்பொருளில் இயங்குகின்ற சக்தி, ஒன்றுக்கொன்று உடன்பாடாக இருக்கும் பொழுது. அதற்குக் கவர்ச்சியென்றும் (Attraction) எதிர்மறையாய் இருக்கும் பொழுது விலக்கு (Repulsion) என்றும் பெயர் பெறுகின்றது. உயிர்த் தத்துவத்தில் இதே சக்தி விருப்பு வெறுப்பு என்ற பெயர்களில் அமைகின்றது. பராசக்தி அன்பில் நிறைநிலையினை எய்துகின்றாள். எல்லாம் வல்ல பரம்

பொருளின் இயங்கும் தன்மையினைச் சக்தியென்றும் இயங்காத தன்மையினைச் சிவமென்றும் கூறலாம்.

சக்தி அசைவுள்ள வடிவினளாகி, சிவன் என்னும் ஆதாரத்தின் மீது ஆடினள் என்ற தத்துவத்தை, முயலகன் என்னும் அரக்கனைக் கொன்ற நிகழ்ச்சியின் வாயிலாக உணரலாம். மேற் கூறப்பட்ட அரக்கனைக் காலால் மிதித்து மாய்ப்பதன் மூலம் சிவ தாண்டவம் நடைபெற்று முடிந்தவள். சிவன் மீது பாதம் நாட்டி தாண்டவம் புரிகின்றாள். இதற்குக் காரணம் ஒரே தத்துவம், பராசக்தியென்றும் மூலப் பிரகிருதி என்றும் மாயை என்றும் கூறப்படுவதேயாகும். ஏனெனில் சிவன் வேறு, சக்தி வேறு என்றமையால் ஒரே தத்துவத்தில் இரண்டு வடிவங்கள் இருக்கின்றன. அசைவற்றிருக்கும் அறிவு வடிவத்தைச் சிவம் என்றும் அசைவுள்ள ஆற்றல் வடிவத்தைச் சக்தியென்றும் கூறலாம். [11]

உலகங்களை ஈன்றிருக்கும் அன்னை எப்பொழுதும் அவைகளினின்றும் அகலாது, அவளே உலகம் அனைத்து மாய் இருக்கின்றாள். இவள் நுகர்ச்சியினையும் வீடு பேற்றினையும் அளிக்கின்றாள். இன்ப நுகர்வு வேண்டுமென்கின்ற விருப்பம் இருக்கும் வரை அதற்கேற்ற பிறவிகளையும் கொடுக்கின்றாள். பல பிறவிகளை எடுத்து, ஓய்ந்த பின்பு, வீடுபேறு வேண்டுபவர்களுக்கும் வழிகாட்டுபவளாக விளங்குகின்றாள். இவ்வாறு வேண்டியவர்களுக்குத் தேவைப்பட்டவைத் தேவையுற்றபொழுது வழங்கிக் கின்றமையால் அனைத்துலகங்களுக்கும் அவள் அன்னை யாகவே காட்சியளிக்கின்றாள். இயற்கையின் சக்திக்கு அழிவில்லை என்பதை நவீன பௌதிக நூலோர் 'Conservation of Energy' என்று கூறுகின்றனர். இதை நோக்குங்கால் எல்லா உலகங்களையும் ஈன்ற பிறகும் நிறை குறையாது எந்நாளும் தன் மயமாய் இருக்கின்றமையால் சக்தி ஒரே காலத்தில் அன்னையாகவும் கன்னியாகவும் மிளிர்கின் றாள். [12] மனிதனின் மனப்பான்மை சீர்பட்டு அல்லது

சிதைகெட்டு வந்தாலும் அதற்கேற்றவாறு உலகக் காட்சி யும் மாறுபடுவது போலத் தோன்றினாலும் தத்துவ, நோக்கில் அமைமயும் சக்தி மிகப் பழையவள் எனினும் புத்தம் புதியவளாகவே திகழ்கின்றாள்.

———

சான்று விளக்கம்

1. சக்தி என்ற தெய்வ தத்துவம்
— கலைக் களஞ்சியம்
2. Indian Philosophy — Dr. S. Radhakrishnan, Page 731
3. 'சௌந்தரிய லகரி' — ஆதி சங்கராசாரியார்
4. 'சிவ சக்தி' — சுவாமி சித்பவானந்தர், 'சக்தி தத்துவம்', பக்கம் 18
5. சக்தி என்ற தெய்வ தத்துவம்
—கலைக் களஞ்சியம்
6. Indian Philosophy —Dr. S. Radhakrishnan, Page 732
7. கடவுளின் வடிவங்கள்
— சுவாமி சித்பவானந்தர்
8. Indian Philosophy — Dr. S. Radhakrishnan, Page 734
9. 'சாக்தம்' — கலைக் களஞ்சியம்
10. சக்தி தத்துவம் — சுவாமி சித்பவானந்தர்
11. ibid.
12. 'ஏக காலத்தில் அன்னையும் கன்னியும்'
— சுவாமி சித்பவானந்தர்

———

7

சிற்ப நோக்கில் சக்தி

சக்தி போன்ற தெய்வ உருவங்களை அமைக்கத் தொன்று தொட்டே தமிழகத்தில் பல நூல்கள் இருந்தன. அவ்வாறு அமைந்துள்ள நூல்களின் ஒரு பிரிவாக இலங்கும் சிற்ப நூலில், ஒவ்வொரு சிற்பத்தையும் எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற விதிகள் செய்யுள் வடிவில் உள்ளன. இச்செய்யுட்களைச் சிற்பிகள் மனதிற்கண் நிறுத்தி அதற்கேற்பச் சிற்பங்களைச் செதுக்குவர். மயன் என்ற தச்சன் இயற்றிய மயமதம், அகத்தியர் இயற்றிய சகளாதிகாரம், காச்யபம், சாரஸ்வதம், பிராம்மீயம், விச்வகர்மீயம் முதலிய நூல்கள் நம் நாட்டில் இப்பொழுது நிலவுகின்றன. எனவே சக்தி சிலைகளைச் சிற்பிகள், சிற்ப நூல்களில் குறிக்கப்பட்டுள்ள அளவு முதலிய அம்சங்களைத் துணையாகக் கொண்டே அமைத்திருக்கலாம். இத்தகைய சக்தி சிலைகளைச் சிற்ப நோக்கில் இக்கட்டுரையின்கண் ஆய்குவம்.

மரத்தடியில் நிற்கும் பெண் தெய்வங்களின் சிற்பங்களைக் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே காணலாம். பாரஹுத், சாஞ்சி ஸ்தூபங்களிலும் குப்தர்களின் கலையிலும் மரத்தடியில் நிற்கும் இந்தப் பெண் தெய்வங்களின் சிற்பங்கள் மலர் நிறைந்த மரக் கிளைகளிடையே காணப்படுகின்றன. யக்ஷி தேவதை (சக்தியின் கூறுகிய இசக்கி அம்மன்) என்று அழைக்கப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களின் சிற்பங்கள் பழங்காலத்தில் தோன்றிய தாய்த் தெய்வத்தின் சிற்பத்தைத் அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவை என்று சிறந்த சிற்பக் கலைஞராகிய 'ஹென்ரிச் சிம்மர்' கூறுகிறார். [1]

குண்டூர் மாவட்டத்தில் மாச்சார்லா என்ற பகுதியில் அமைந்துள்ள மதுகுளா என்ற கிராமத்தில் உள்ள சிவன் கோவிலில் கி. பி. ஆறும் நூற்றாண்டைச் சார்ந்த சிலை யொன்று காணப்படுகின்றது. சிவன் பார்வதியின் இடப் புறத்தைத் தழுவியது போன்று அமைந்துள்ளது அச்சிலை. பார்வதி தனது இடுப்பில், அவளுடைய குமாரனாகிய முருகனை வைத்திருப்பது போன்றும் அச்சிலையில் காணப் படுகின்றது.[2] இச்சிலையினைக் காணும் பொழுது, கி. பி. ஆறும் நூற்றாண்டில் முருகனிற்குச் செல்வாக்கு அமைந் திருக்கலாமெனவும் எண்ணத் தோன்றுகிறது.

மதுரை நகரில் நிம்மக்கல்லின் தெற்கு வடக்கு நோக்கியுள்ள செல்லத்தம்மன் கோயிலில் சக்தியின் கூறுகக் கருதப்படுகின்ற கண்ணகி சிலை உள்ளதாக 'கண்ணகிக் கோட்டம்' என்ற கட்டுரையில் கரந்தை திரு. கோவிந்தராசனார் குறிப்பிட்டுள்ளார்.[3]

''கருவறைக்கு முன்னர் உள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கியதாகப் பாண்டிய மன்னன் ஒருவனால் அமைக்கப் பட்ட கண்ணகி சிலை ஒன்று உள்ளது. இச்சிலையே முன்னர் கோயிலிற்கு உரிய மூல தெய்வமாக செல்லத் தம்மன் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை முதியவர்கள் கூறக் கேட்டறிந்தேன். பிற் காலப் பாண்டியர் வளர்த்த சிற்பக் கலை நுட்பங்களுடன் விளங்கும் இக்கண்ணகி சிலை மானிட வடிவில் இரண்டு கைகளோடு இருக்கிறது. கருணை பொழியும் முகம், வாரி இடப்புறம் கொண்டையிட்ட கூந்தல், தோளளவு தொங்கும் அணிகள் இல்லாத தொள்ளைக் காது, மங்கல அணியுடன் (தாலி) விளங்கும் மார்பு, வலதுகை ஒரு மலையை ஏந்தி நிற்க, இடது கையில் இலாவகமாகச் சிலம் பொன்று உள்ளது. வலது காலைக் குத்திட்டு, இடது காலை மடக்கி மனையில் அமைத்தமர்ந்த தோற்றம்'' என்ற வாறுகக் கூறியுள்ளார்.

ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதுபோல் மண்டபத்தில் உள்ள இக்கண்ணாகி சிலை, பாண்டிய மன்னனால் அமைக்கப்பட்டது என்பதற்குச் சான்று ஒன்றும் காணப்படவில்லை என்று புலவர் செ. இராசு கூறுவது எண்ணத்தக்கது.[4]

அடுத்துப் பல்லவர் காலச் சக்தி சிற்பங்களை ஆராய்வோம்.

உலகப் புகழ் வாய்ந்த பாய்களைப் பாலையாக விளங்கும் கொற்றவையின் ஒப்பற்ற சிற்பம், மாமல்லபுரத்தில் கலங்கரை விளக்கத்திற்குப் போகும் வழியில் அமைந்துள்ள மகிடாசுரமர்த்தினிக் குகைக் கோயிலில் காணப்படுகின்றது.

கையிலே கதையேந்தியுள்ள மகிடாசுரனும் அவன் சுற்றமும் தோற்று ஓடுகின்றனர். வில்லேந்தி வீரச் சமரிபுரியும் அன்னையின் உருவமும் கணங்களின் உருவமும் வனப்பு வாய்ந்தவை. போரின் சீற்றத்தையே கண்முன் கொணர்ந்து நிறுத்தும் ஆற்றல் கொண்டுள்ளது இச் சிற்பம். தேவிபாகவதம் என்ற வடமொழிக் காப்பியத்தில் கொற்றவை மகிடாசுரனை அழித்த கதை விளக்கப்பட்டுள்ளது. மாமல்லையில் உள்ள தலையாய சிற்பமாக இது கருதப்படுகின்றது. வஜ்ரம்போன்ற உடல், பளுவான கதை, எருமையின் முகம் எவரும் தன்னை அழிக்க இயலாது என்ற இறுமாப்பு ஆகியவற்றைப் பெற்ற அரக்கனுகிய மகிடன் கையில் சிக்கி இவ்வுலக மக்கள் கதற, தேவர்களும் அஞ்சி ஓடினர். மூவுலகின் அன்னை தன் மக்கள் படும் துன்பத்தினைக் கண்டு வெகுண்டு எழுந்து சிங்கத்தின் மீது அமர்ந்து சீறிப்பாய்ந்தனள். தாயுள்ளம் படைத்த தெய்வமும், வில்லும் அம்பும் கொண்டு அரக்கனுடன் போர்தொடுத்தாள். அன்னையின் உருவே, அரக்கன் மனத்திலே அச்சத்தை ஊட்டியது. அரக்கர் கோன் அடி பட்டுவீழ, உலகம் அன்னையைப் போற்றியது. இத்தலைய காட்சியை மேற்கூறிய சிற்பம் அழகுறச் சித்தரிக்கின்றது.[5]

மாமல்லபுரத்தின் வடக்கே இருக்கும் மும்மூர்த்தி குகையின் தென்புறத்தே பாறையின் வெளிப் பக்கத்திலேயே கொற்றவை (துர்க்கை) எருமைத் தலை மேல் நின்ற தேவியாக, நான்கு கைகளுடன் ஆழியும் சங்கமும் அபயம் அளிக்கும் கையும், துடை மீதமர்த்திய கையுமாகக் காட்சியளிக்கின்றாள்.[6]

மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தவத்திலிருந்து கணேச இரதத்திற்குச் செல்லும் வழியில் வராக மண்டபம் அமைந்துள்ளது, அம் மண்டபத்தில் அமைந்துள்ள கொற்றவையின் சிற்பம் எழிலில் மிக்கது. இச் சிற்பத்தின் மேலே சிங்கமும் கலைமானும் காண்பிக்கப்பட்டுள்ளன. தேவி கானகத்தெருமைத் தலைமேல் நிற்கின்றாள். அவளின் இரு மருங்கிலும் மறவர் வீற்றிருக்கின்றனர்.

ஒருவர் வாளைக் கையில் ஏந்தி நிற்க, மற்றவர் தன் தலையை வாளால் அரித்து தேவியின் காலடியில் அவிப் பலியாக இடும் நிலையும் காணப்படுகின்றது. பழங் காலத்தில், மந்தேரிடமிருந்து தன் நாட்டைக் காக்க நெடுமொழி (வஞ்சினம்) கூறிய மறவர்கள் வெற்றி கிட்டியதும் கொற்றவைக்குத் தன் தலையை அரித்து அவிப்பலி இடுதல் மரபு. அச்செயல் மன்னன் சிறப்போடு வாழவேண்டும் என்று போற்றுவதையே குறிக்கின்றது.

'சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர்கெட அருளுநின் இணையடி தொழுதேம்
அடல்கெழு எயினர்நின் அடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறல்தரு விலையே'
[சிலம்பு. வேட்டுவ வரி : 18]

'அடுபுலி யனையவர் குமரிநின் அடிதொடு
படுகடன் இதுவுகு பலிமுக மடையே'
[சிலம்பு. வேட்டுவ வரி : 20]

என்ற பாடலடிகளின் நோக்கில் இங்குள்ள கொற்றவையின் சிற்பம் சிறப்பினை எய்துகின்றது.[7]

சிறிய குடிசை வடிவில் செதுக்கப்பட்டுள்ள திரௌபதி இரதம் என்னும் கோயில் கருவறையின் உள்ளே பின் புறச் சுவரில் நெடுந்தூரம் சிற்பம் அமைந்துள்ளது. அங்கே தாமரை மலர்மேல் நின்றுளாக, நான்கு கைகளுடன் விளங்குகின்றாள். மேலிரு கைகளில் சங்கமும் சக்கரமும் ஏந்தியுள்ளாள். கீழிரு கைகளில் ஒன்று அபயம் அளிக்கின்றது. மற்றது தொடை மீது அமர்ந்துள்ளது தேவியின் மேலிரு மருங்கிலும் கணங்கள், வாள் முதலியன கொண்டு விளங்குகின்றாள். காலடியில் அடியார் இருவர் அமர்ந்து, ஒருவர் தொற்றவையை மலரால் அர்ச்சிக்க, மற்றொருவர் வாளால் தன் தலையை அரிந்துகொள்ளும் காட்சியும் சிற்பமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.[8]

வராக மண்டபத்தில் சக்தியின் கூறுகிய திருமகளின் சிற்பமும் அமைந்துள்ளது. மனிதன் தோன்றிய நாள் முதல் உணவும் உடையும் அளித்துவரும் திருமகள் அமர்ந்திருக்க, பணிப்பெண்கள் சுற்றிலும் நிற்கின்றனர். அலை வீசும் கடலிலிருந்து அள்ளி உண்ட நீரைத் தன்னுள் அடக்கி, விண்ணகத்தை மறைத்துவரும் கார் காலத்து மேகம்போல் இரு மதம் பிடித்த யானைகள் துதிக்கையில் கொண்டுள்ள குடங்களிலிருந்து நீரை அலைமகளின் மீது மழையெனக் கொட்டுகின்றன. செல்வத்திருமகள் தெய்வீக ஒளியோடு அமர்ந்திருக்கும் இக்காட்சியை சித்தரிக்கிறது இச்சிற்பம். வரலாற்று அடிப்படையில் திருமகள் வழிபாட்டில், பல வளர்ச்சிகள் தோன்றியுள்ளன. அவற்றில் தானியங்களைக் கொடுக்கும் நிலமகளைப் பண்டைய மக்கள் தெய்வமாகப் போற்றினர். வசுக்களைத் தன்னுள்ளே அடக்கிய திருமகள், தானியங்களின் இருப்பிடமாக அமைகின்றாள். இவள் இரத்தினங்களைத் தன்னிடத்தில் கொண்டவள். எனவே செல்வத்தின் கிழத்தி என்ற வசுந்தரா அல்லது திருமகள் என இவளை மக்கள் வழிபட்டனர். நில மகளின் செழுமைக்குக் காரணமாக மழையும், மழைக்குக் காரணமான மேகங்களும் அமை

கின்றனர். மேகங்களே மதயானைகளுக்கு உவமிப்பர். மேகங்கள் நீர் பொழிய, நிலமகள் செல்வத்தைக் கொடுக்கும் திருமகளாக மாறுகிறாள். இதை உருவகப்படுத்தி, அதன் அடிப்படையில் தோன்றியதே இங்குள்ள திருமகளின் சிற்பம் எனக் கூறுவர். இதே நிலையில் பண்டைய பௌத்தச் சிற்பங்களிலும் ஸ்ரீமா தெய்வம் சித்தரிக்கப்பட்டுள்ளாள் என்பது கருதத்தக்கது.[9]

கடப்பை மாவட்டம் புதிய முடியம் என்ற ஊரில் துர்க்கா - பார்வதியாகிய மகிடாசுரவர்த்தினி, மகிடனென்னும் அசுரனுடன் போர்புரிவது போன்ற சிற்பம் அமைந்துள்ளதென கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.[10]

அண்மையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் பெரிய வெண்மணி என்ற கிராமத்தில் பல்லவர் காலத்திய சிற்பம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அச்சிற்பம் புடைப்புச் சிற்ப வகையைச் சார்ந்தது. அச்சிற்பம் துர்க்கையின் பல தோற்றங்களுள் ஒன்றை எடுத்துக்காட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பெண்கள் ஒலி கூடி ஓர் இளம் பெண்ணிற்குத் துர்க்கையின் வேடம் புனைந்து வேட்டுவ வரிப் பாடல்களைப் பாடி வழிபட்டனரென நவில்கின்றார். அப்பொழுது துர்க்கையின் கோலத்தை விளக்கும்பொழுது அவள் முறுக்குண்ட கொம்புகளை உடைய கலைமான் ஊர்தியின் மேல் அமர்ந்திருந்தாள்; அவள் கையில் வந்தையும் கழங்கையும் கிளியையும் வைத்திருந்தாள்; கையில் சூலமேந்தியிருந்தாள்; அவளுடைய சிறடிகளில் சிலம்பும் கழலும் புலம்ப, அவள் இரண்டு பேருருவில் திரண்ட தோளினை உடைய மகிடாசுரன் தலைமேல் நின்ற வதையலாள் எனக் குறிப்பிடுகின்றார். இளங்கோவடிகள் கூறுகின்ற இலக்கணங்கள் அனைத்தையும் இப்பெரிய வெண்மணிச் சிற்பம் பெற்று இலங்குகின்றது. இச் சிற்பம் இலக்கியத்திற்குச் சான்றாக அமைந்திருப்பது எண்ணத்தக்கது.[11]

கேரள மாநிலத்தில் இடுக்கி மாவட்டத்தைச் சார்ந்த தேவிக்குளம் தாலுகாவில் அமைந்துள்ள மரயூர் என்ற கிராமத்தில், ஏழாயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்ததாகக் கருதப்படுகின்ற துர்க்கையின் சிலை, பூனு பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர் திரு. பத்மநாபன் தப்பி அவர்களரில் கண்டு பிடிக்கப்பட்டது. இச்சிலை கோட்டைவா அல்லது வன துர்க்கா என்று கருதப்படு கின்ற மலையம்மாளாக இருக்கலாம். இச்சிற்பம் பீங்கா னால் (Ceramic) செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படு கின்றது.[21]

சோழர் காலத்தைச் சார்ந்த (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு) காளி சிற்பம் ஒன்று திருவையாறு கோவி லிற்கு அருகில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. காவிரிக் கரையில் அமைந்துள்ள பனையூர் கிராமத்தில் இருந்த பத்தாரம்மன் கோவில் கருப்பக் கிரகத்தில் மூல விக்கிர மாக வைக்கப்பட்டிருந்த சிலையாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது. இக்காளி சிற்பம் ஏனைய காளி சிற்பங்களினின்று மாறுபட்டு அமைகின்றது. திரிசூலம் வாள், பாசம், குறுவாள் ஆகியவற்றை வலது கைகளி லும் கபாலம், கேடயம், மணி, உடுக்கை ஆகியவற்றை இடது கைகளிலும் கொண்டு இலங்குகின்றாள் காளி. இடப்புறம் அமைந்துள்ள கீழ்க்கை சுசிமித்திராவை உணர்த்துகின்றது. உயர்ந்த இமைப் புருவங்களும் வெளியே தள்ளி நிற்கின்ற அகன்ற கண்களும் காளியி னுடைய கொடூரத் தன்மையினை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளன.[13]

சான்று விளக்கம்

1. The art of Indian Asia - Henrich Zimmer - Bollingen Series
2. Early Eastern Chalukya Sculpture — Sivaramamoorthy P. 12-13
3. தமிழரசு ஜூலை - ஆகஸ்டு, 1972
4. கண்ணகி சிலையும் — கல்வெட்டுகளும் — புலவர் செ. இராசு
5. மாமல்லை — இரா. நாகசாமி, பக்கம் 88
6. ibid. பக்கம் 68
7. ibid. பக்கம் 79
8. ibid, பக்கம் 104
9. ibid. பக்கம் 76
10. Development of Religion in South India — K. A, Neelakanta Sastri, Page 58
11. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் — கே. கே. பிள்ளை, பக்கம் 317
12. 7000 - Yr - Old Art Gallery Discovered in Marayur. 'Hindu' 13th December, 1974
13. 9th Century Kali Statue Unearthed, 'Hindu'. 6th Nov. 1974

8

சாசனங்களில் சக்தி

1. சக்தி பற்றிய செய்தி:

வல்லவரி, பாண்டியர், கால இறுதி கி. பி. 800-920 சோழர் காலத் தொடக்கத்தில் காளி பற்றிய செய்திகள் சாசனங்களில் காணப்படுகின்றன.[1] கொங்கு நாட்டில் நடந்த குடியேற்ற முறைகளைப் பற்றிக் கூறும் பிற்காலச் செவி வழிச் செய்திகள் அடங்கிய சோழன் பூர்வ பட்டயம் என்ற நூல், கொங்கு நாட்டில் குடியேறிய மக்கள், அங்கு வாழ்ந்த ஆதிவாசிகளாகிய இருளர்களின் தேவதையான காளியின் பெயரால் பல ஊர்களை அமைத்த செய்தியைக் கூறுகின்றது.[2]

திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிலின் மண்டபத்தின் தூலத்திலும் தூண்களிலும் மகேந்திரவர்மனுடைய சிறப்புப் பெயர்களும், சாசனங்களும் எழுதப்பட்டுள்ளன. இச்சாசனங்களில் ஒன்று நான்கு வடமொழிச் செய்யுட்களாக அமைந்துள்ளது.[3]

சாசனம் கீழ் வரும் கருத்தைக் கூறுகின்றது. "வயல்களாகிய மாலையை அணிந்துள்ளதும், விரும்பத்தக்க நன்மையையும் இனிய நிலையும் உடையவளுமாகிய காவிரியைக் கண்டு, ஆறுகளைத் தமது முடியிலே சூடுகின்ற சிவபெருமான் எங்கே இவள் மேல் விருப்பம் கொண்டு விடுவானோ என்று அச்சங்கொண்ட மலைமகள், தன்னுடைய தந்தையின் இருப்பிடத்தை விட்டு வந்து, இந்த மலையிலேயே நிரந்தரமாகத் தங்கியிருந்து இந்தக் காவிரியானவள் வல்லவன் காதலி என்று கூறிக்கொண்டேயிருக்கிறாள்."[4]

இரண்டாம் நந்திவர்மனுகிய பல்லவ மன்னன் அளித்த காசாக்குடிச் செப்பேட்டில் சக்தியின் கூறுகிய திருமகளைக் குறிக்கும் ஒரு செய்யுள் காணப்படுகிறது.

'பத்மா பத்மாசீனு பத்மோத்ஜவல பாணி பத்மயுகலா வஹ
பிரீத்யா பச்யது கரிணீ கரத்குத கணைகட சுஸ்னுன'

தாமரை மலர்கள் அலங்கரிக்கும் கரங்களை உடையவளும் தாமரை மலரில் அமர்ந்திருப்பவளும், யானைகள் துதிக்கையில் தாங்கிய பொற்குடங்களிலிருந்து நீராட்டம் பெறுபவளுமான தாமரையாள் நம்மை அருளோடு பார்க்கட்டும் என்பது அதன் பொருளாகக் கூறப்படுகிறது.[5]

2. கோயில்:

பராந்தக பாண்டியனது ஆட்சியின் முற்பகுதியில் எல்லாப் பகுதிகளையும் மாசாமந்தனுக விளங்கிய சாத்தன் கணபதியின் மனைவி நக்கன் கொற்றி என்பாள் திருப்பரங்குன்றத்தில் தர்க்கைக்கும் சேட்டைக்கும் வெவ்வேறு கோயில் அமைத்தனள் என்பது திருப்பரங்குன்றத்தில் உள்ள பராந்தகனது ஆறும் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் பிற்பகுதியால் அறியப்படுகின்றது.[6]

விசயலாய சோழன் (கி. பி. 850—871) தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின் சின்னமாக நிசும்ப சூதினி என்ற காளி கோயிலை எழுப்பினன்.[7]

3. வழிபாடு:

வளஞ்சியர் என்ற வாணிகக் குழுவினரைப் பற்றி முதலாம் ஆராசேந்திர சோழன் காலத்திய காட்டூர்க் கல்வெட்டு ஒன்று விரிவான செய்திகளைக் கூறுகிறது. வீர வளஞ்சிய சமயத்தைப் பாதுகாப்பவர்கள் இவர்களை என்றும், இவர்கள் வாசுதேவன், கந்தழி, வீரபத்திரன் ஆகிய கட்புளரிடம் தோன்றியவர்கள் என்றும் பட்ட

ராகி (துர்க்கை)யை வழிபடுபவர்கள் இவர்கள் என்றும் அக்கல்வெட்டு கூறுகின்றது.[8]

பாண்டியருடைய குலதெய்வமாகிய கன்னி பகவதிக்கு ஆண்டுதோறும் தைப்பூச விழா நடத்துவதற்கும், அவ் விழாவிற்கு வரும் அடியார்களை உண்பித்து பொருளுதவி புரிதற்கும் திவந்தமாகப் புறத்தாய நாடு முழுவதையும் இவன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[9]

தமிழ் நாட்டிலே சக்தி வணக்கமும், ஓரளவு செல் வாக்குடன் விளங்கி வந்துள்ளது. விண்ணவ கோவரை யர் ஏற்றுக் குன்றளர் பிடாரிக்குப் பதினாறு கழஞ்சு பொன் வைத்தார். அருவாகூரார் இப்பணத்தைப் பெற்றுக் கொண்டு திங்களும் நாணுழி அரிசி கொடுக்க உடன்பட்டனர். இவ்வாறு செய்யத் தவறினால் கால் நாழி கூட்டி நாலேகால் நாழியாக விண்ணவகோவரையர் வீட்டாரிடம் கொடுக்கவேண்டும்.[10]

பிடாரிக்கு ஒருவர் தானஞ் செய்த நிலத்தை அவ் வூர் சபை காளிகோயில் நிர்வாகத்தார்களாகிய காரித் திகைக் கணத்தாரிடைப் பொருள் பெற்றுக்கொண்டு இறையிலியாகச் செய்ததை ஓரளவு சிதைந்துள்ள ஒரு சாசனத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.[11]

சப்த மாதரிகள் என்ற பெயரில் பிராமணி, நாரா யணி, மகேசுவரி, கௌமாரி, வாராகி, உருத்திராணி, இந் திராணி என்னும் ஏழு பெண் தெய்வங்களையும் சேர்த்து நடத்தும் வழிபாடும் கூறப்பட்டுள்ளது. சபை சப்த மாதரிகள் கோயில் விமானத்தை நல்ல நிலையில் வைத்தி ருப்பதற்கான செலவுகளுக்காகக் காற்செய் நிலம் திரு நந்தவனமாக வைத்துள்ளது. அந்நிலத்தின் ஓர் எல்லை பிடாரி கோவிலுக்குத் தெற்கு எனக் கூறப்பட்டுள்ளது.

இறைவனுடைய தேவிக்குச் சார்த்தும்படி, ஆடை யாகிய பரிவட்டம். அழகு முதலிய படி விஞ்சனத்துக்கு

வழியமைத்ததைக் கூறும் சாசனம் ஒன்றும் கிடைத்துள்ளது. காலகதியில் பெண் தெய்வ வழிபாடும் தமிழ்நாட்டிலே பெருகிக் கொண்டு வந்தது. சிவன் கோவிலிலே சக்திக்குப் பல இடங்களிலே தனிச் சன்னதிகள் அமைக்கப்பட்டன.

அவற்றுள்ளே காமக் கோட்டம் என்ற பெயர் வழங்கியது. திருமிகைச் சூர்ச் சிவபெருமானுடைய திருக்காமக் கோட்டம் உடைய சிவகாம சுந்தரி நாச்சியாருக்கு உடையார் காளங்கராயரும் கடைக் கூட்டுப் பிள்ளை ஆதித்த தேவரும் சபையாரும், நாட்டாரும் சேர்ந்து சார்த்துப்படி முதலியவற்றுக்காக நிலம் விட்டனர். விடப்பட்ட நிலங்களிலிருந்து கார்த்திகை மாதம் வரை கொடுக்கப்படாமலிருந்த வரிகளும், மார்கழி மாதத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டிய வரிகளாகிய செட்டிகள், தறியிறை, தட்டார் பாட்டம், குளவாடை, ஒழுக்கு நீர் மீன் பாட்டம், செக்காயம், வண்ணார் கற்காசு, சிவகாமசுந்தரி நாச்சியாருடைய சார்த்துப்படி முதலியனவற்றிற்காகச் சந்திர சூரியர் உள்ளவரை செலவிடப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.[12]

திருப்பூந்துருத்திச் சிவபெருமானையும், நாச்சிமார் இருவரையும் உய்யவந்தான் இசாசராச தேவர் கும்பிட்டு, அவர்களுடைய அமுதுபடி, படி விஞ்சனத்துக்காக நிலம் அரையே காணி கோவில் நிலத்தில் விலைக்குக் கொண்டு விட்டுள்ளார்.[13]

பலிக்கொடை:

வட ஆற்காடு மாவட்டம், செங்கம் இட பேசுவர் கோவிலில் கல்வெட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. பல குலத்தினர் ஒன்று கூடித் தமக்குள் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டனர். தாம் அனைவரும் குறிப்பிட்ட குறு நில மன்னன் ஒருவனுக்கே குடிகளாக வாழ்ந்து வர வேண்டியவர்கள் என்றும், அவனுடைய மகளை ஏனைய

தலைவர்களோ அரசுரிமை போராட்டுவராயின், அவர்களை யும் அவர்களுக்கு உடந்தையானவர்களையும் கொன்றுவிட வேண்டுமென்றும் அவர்களுடைய பெண்டிரைக் கற்பழிக்க வேண்டும் என்றும், அவர்களைச் சார்ந்தவர்களைக் குல நீக்கம் செய்ய வேண்டும் என்றும் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த ஒப்பந்தத்தை மீறியவர்கள் 'புலியும் பறிக்கிற பறையருக்குத் தம் பெண்ணைக் கொடுத்த இழிவை அடைந்தவர்களாவார்கள். தாயின் மணாளனே மாபாதகர்களாய்க் கருதப்படுவர். அது மட்டுமன்றி செவ்வாய்க் கிழமை தோறும் நாச்சியாரம் மன் முன்பு ஆடுகள் பலியாகும் இடத்தில் அவர்கள் நர பலியிட்டப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது, எனவே கி. பி. 1250-ல் அம்மன் கோவிலின் முன் நரபலியிடப்பட் டுள்ளதென்பதை உணரலாம்.[14]

அம்மன் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமானது பதினேந்தாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்ததாக மேலப் பனையூரிக் கல்வெட்டு கூறுகிறது.

கோனாட்டு நாச்சியார திருநாளுக்கு நம்முடைய ஊரில் இடையன் பொன்னன் கோன் எழும்பன் நம் முடைய திருநாளுக்கு வண்டியிலேயே கிடாய்க்குட்டி ஏற்றி வந்து சந்திகள் தோறும் கிடாய் வெட்டினது கொண்டு, இரண்டு ஊராகும் இருந்து இவனுக்குகி 'கலங் காத கண்டக் கோன்' என்ற பட்டமும் கொடுத்து கோயி லிலே ஒடுக்கும் கொடுத்து இந்தப் பட்டமும் இந்த ஒடுக்க மும் இவனே அனுபவித்துப் போதக் கடவனுகவும், மேலும் திருநாளுக்குக் கிடாய்க் குட்டியும் இடுவனுகவும் என்று கூறுகிறது.[15]

கர்நூல் மாவட்டத்தில் திரிபுராந்தகம் என்னும் இடத்தில் உள்ள திரிபுராம்பா என்னும் கோவிலில் உயிர் இழந்தவர்களின் நினைவுக்காகப் பல வீரக் கற்கள் காணப்

படுகின்றன. அவற்றில் ஒன்று 13-ம் நூற்றாண்டுக் கல் வெட்டாகும். அல்லட்ட வீரமல்லன் என்பவன் தான் வெற்றி பெறத் தேவியின் அருள் கிடைக்கும் என்ற நம் பிக்கையில் சோம சிவகுரு தேவன் என்பான் திரிபுர தேவிக்குத் தன் தலையைக் காணிக்கையாகக் கொடுத் தான் என்று தெரிகிறது.[16]

குறிப்பிட்ட சில கோயில்களிலே தான் தற்கொலைகள் நிகழ்ந்தன. எல்லாக் கோயில்களிலும் இவை அனுமதிக் கப்படவில்லை. பைரவர், வீரபத்திரர், காளி முதலிய தெய் வங்களுக்குத் தங்கள் தலைகளைப் பல காரணங்களுக்காகப் பலியிட்டனர். இவ்வகைக் கோயில்களைச் 'சம்புடுகள்ளு' என்று தெலுங்கு இலக்கியம் கூறுகிறது.[17]

கொங்கு நாட்டில் காளிக்கு நர பலியிடப்பட்டது என் றும் அவ்வாறு பலியிடப்பட்டோர் நினைவாகச் சாவாராக் கல் அல்லது சாவாரப் பலிக்கல் (வீரக்கல்) எழுப்பப்பட் டுக் கோயிலில் முதலில் அவைகன் பூசிக்கப்பட்டதென் றும் பின்பு நரபலி நிறுத்தப்பட்டு ஆடு, கோழி, பன்றி என்ற முப்பலி ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் சோழன் பூர்வ பட்டயம் என்ற நூலிலிருந்து அறியலாம்.[18]

சக்தி வணக்கத்தோடு உயிர்ப்பலி இடுதல் மிக நீண்ட காலத் தொடர்புடையது. வீரர்கள் வெற்றி குறித்தத் தம்மையே பலியிடுவதாக நேர்த்திக் கடன் செய்து, அதை நிறைவேற்றுவதுமுண்டு; தம்மை ஒன்பது கூறுகளாகவெட்டி நவகண்டம் என்ற வகைப்பலியிடுதல் ஒரு வகை. ஒக்கொண்ட நாயகன் ஒக்கதிதீதன் பட்டை பொத்தன் நவகண்டஞ் செய்து, தன்னுடைய தலையை அறுத்துக் காளியின் பலிபீடத்தில் வைத்தான். இந்த செயலை மெச்சிய திருவான்மூர் ஊரார் பட்டை பொத் தானுக்கு நிலக்கொடை செய்துள்ளார்கள்.[19]

சான்று விளக்கம்

1. சாசனமும் தமிழும் - கலாநிதி
ஆ. வேலுப்பிள்ளை (1971) பக்கம்: 38

2. சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு
ஊர்கள் [பெயராய்வும் - வரலாறும்]
- கி. நாச்சிமுத்து எம். ஏ. (1968) பக்கம்: 141

3. மகேந்திரவர்மன் - மயிலை சீனி. வேங்கடசாமி
குகைக் கோயில்கள் பக்கம்: 53

4. S. I. I. Volume I No. 33 Page 29 Nos. 777, 778
Top List Vol. III

5. மாமல்லை — இரா. நாகசாமி (1968) பக்கம்: 78

6. Indian Antiquary Vol XXII P. 67

7. S. I. I. III No. 205

8. Ep. Rap. 256/12

9. Travancore Archaeologicai Series Vol. I Page 19-25

10. S. I I. Volume XII P. 17

11. S. I. I. Volume XIII P. 161

12. S. I. I. Volume VIII P. 137

13. S. I. I. Volume V P. 179

14. S. I. I. Volume VII No. 118

15. I. P. S. No. 692

16. Annual Report of Epigraphy for 1909 Part II P. 73

17. History of Reddi Kingdoms P. 342
— Somasekhara Sarma

18. சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள்
[பெயராய்வும் - வரலாறும்]
— கி. நாச்சிமுத்து எம். ஏ. (1969) பக். 41

19. S. I. I. Volume, XII P. 50

9

கேரளத்தில் சக்தி வழிபாடு

கேரள மக்களிடையே காவில் அம்மாவை (சக்தியின் கூறுக காளியை) வணங்கி வாழ்க்கை நடத்தும் பழக்கம் தொன்று தொட்டு ஏற்பட்ட ஒன்று. ஆல்க்கல்லிருந்து முளயில் வைப்பது வரை* பாட்டாகவும், பாணயாகவும், பூரமாகவும் சக்தியை மகிழ்ச்சிப்படுத்தினாலும் திருப்தி அடையாதவர்கள் வள்ளுவநாட்டார் என்ற பழங்கால மக்களின் பேச்சு மேற்கூறியதற்குச் சான்றாகும். 'களரியில் குடிவைத்த காளியும்' 'மச்சில் அமர்ந்த அம்மை'யும் இன்று நாயன்மார்களுக்குப் பழங்கதையாக இருந்தாலும் முன்பு அவ்வாறில்லை. குருவாயூரப்பனும், வடக்குந்நாதனும், வைக்கத்தப்பனும் வந்தபிறகும் சக்தியின் கூறுக இலங்கும் காளியை முதல் தெய்வமாக வணங்கும் முறையினை சிறைக்கல் முதல் திருவனந்தபுரம் வரையுள்ள அரச பரம்பரையினர் கைவிடவில்லை.

'மாடாயில் பகவதி' சிறைக்கல் அரசர்களுக்கும், 'பூரீபோர்க்கிலீசுவரி' கோட்டயம் அரசர்களுக்கும், 'லோக நாரிகாவில்அம்மா' கடத்தநாட்டு அரசர்களுக்கும், 'திருமாந்தாம் குன்னிலம்ம' வள்ளுவநாட்டு அரசர்களுக்கும், 'பழயன்னூர் பகவதி' கொச்சி அரசர்களுக்கும், 'ஆற்றிங்கல் பகவதி' திருவிதாங்கூர், அரசர்களுக்கும் இன்றும் குலதெய்வமாய் விளங்குகிறாள். 'குறும்ப' என்னும் காளிக்குக் கோயில் எழுப்பி வழிபடாதார் செல்வந்தர்களே ஒரு காலத்

---

* புத்தனுலய்க்கல் காவு, முளயங்காவு என்பன இரண்டு காளி காவுகள், புத்தனுலய்க்கல் காவில் ஆண்டுதோறும் 'உச்சாரல் வேல' என்ற விழா நடைபெறும். முளயங்காவில் பூரம் விழா நடைபெறும்.

‡ குறு + அம்ம என்பது (குறுவம்ம) பேச்சு வழக்கில் மருவி குறும்ப என்றுவிட்டது.

தில் மக்கள் மதிக்கவில்லை. புகழ்பெற்ற மந்திரவாதியாக இருந்த கல்லூரி நம்பூதிரிபாடு, தன் குலதெய்வமாக வழிபட்டது 'செங்ஙணாம் குன்னத்துப் பகவதி'யையே ஆகும். அக்குடும்பத்தில் உள்ள நம்பூதிரிகள் வசதிபடைத்தவர்களாவதற்கு முன் திருமாந்தாம் குன்னம்மையை வழிபட்டு மகிழ்ச்சி அடையச் செய்யவேண்டும் என்ற முறையை இன்றும் அணு அளவுகூட குறையாது கையாண்டு வருகிறார்கள். இவ்வாறு ஏற்றத் தாழ்வு இன்றி நான்கு சாதியரும் வணங்கும் தேவியாக விளங்குகிறாள் காளி.

காளி வழிபாட்டின் முன்னைய நிலையை விளக்க முயல்வது முடியாத செயலாகும். 'பாம்பினையும்', 'அம்மதெய்'வத்" தினையும் திராவிடப் பண்பாட்டின் ஒரு கூறுகக் கருத வேண்டும் என்பது டாக்டர். ஆனந்தகுமாரசுவாமியின் கருத்து.‡‡ அவ்வாறெனில் திராவிடர்களின் 'அப்பிகை' 'அம்மை'யின் வாரிசாகத் திகழ்கிறது எனக் கருதவேண்டி உள்ளது. இப்பொழுது 'அம்மை'யும் 'அப்பிகை'யும் ஒன்று எனக் கருதுவதுபோல ஆரிய, திராவிடர்களும் அவரிகள் 'அம்மை'யை வழிபடும் முறைகளும் இணைந்து ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திப் பிரித்தறியாவண்ணம் திகழ்கிறது.

எந்தவொரு உருவமும், வடிவமும் இல்லாமல் மரத்தினடியில் தொடங்கிய வழிபாட்டு முறையில் ஆரம்பித்து, உருவமுடன் இன்று விளங்கும் காளி, சண்டி, துர்க்கை, மகாலெட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஆகியவர்களுக்காக நடத்தும் பூஜை வழிபாடு வரை 'சக்தி வழிபாடு' இன்று நமக்குக் கிடைத்து வருகிறது. இது மட்டுமன்றி 'சக்கர பூஜை'* 'பஞ்சமகாரசேவணம்'‡ முதலியனவகளும் காளியை வழிபடும் முறைகளாகும்.

---

‡‡ India and Indonesian Art, P. 5.

* ஆண்களும் பெண்களும் வட்டமாக அமர்ந்து வழிபடும் முறை E. A, Payne, Sakta P. 15.

‡ Ibid P. 16.

அரசர்களும், வீரர்களும் தங்களுக்கு வீரமும் சக்தியும் முழுமையாகக் கிடைப்பது காளியின் அருளினால்தான் என நம்பி வந்தனர். மாந்திரிகர்களும், இராசதந்திரிகளும் சமுதாயத்தில் தங்கள் பெருமையை நிலைநாட்ட வேண்டிக் காளியை வணங்கிவந்தனர். வேதாந்திகளும் ஞானிகளும் காளியை மகாமாயையாகவும் மகாசக்தியாகவும் வழிபட்டனர்.‡‡ இவ்வாறு காளியைப் பலதரப்பட்ட மக்கள், பல வடிவங்களிலும், பல முறைகளிலும் தங்கள் தகுதிக்கேற்ப வணங்கி வழிபட்டனர். காளி வழிபாட்டினைக் குறித்து மலையாளத்திலும், சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் வேறுபலமொழிகளிலும் நூற்கள் காணப்படுகின்றன.*

காளியும் கடவும்:

ஒவ்வொரு காவிலுள்ள தேவியையும் மாங்காட்டு காவிலம்ம, ஆரியங்காவிலம்ம, திருவளய நாட்டம்ம, திருமாந்தாம் குன்னிலம்ம என 'அம்ம' என்ற அடை மொழியோடு கூறினாலும் காளி, கரிங்காளி, கண்டோம் காளி என்ற பெயர்களும் நடைமுறையில் வழங்கப்பட்டு வருகின்றன. 'பத்ரோல் பத்தி' என்ற கிளிப்பாட்டில் காளியின் பெயரைப் பற்றிச் சிவன் கூறுமிடத்து 'காளி என்ற பெயர், காளையின் நிறத்தினின்றும் தோன்றியது எனவும், அக்காளையின் நிறம் சிவனது கண்டத்திலுள்ள காளகூடத்தினுடையது எனவும் கூறுவதாக அமைந்துள்ளதை உணரலாம்.**

காளிச் சிலைகள் பெரும்பாலும் கறுத்த நிறத்தில் இருப்பதாலும் காளிக்குச் சாத்தாட்டம் சில இடங்களில்

---

‡‡ சௌந்தரியலஹரி

* பரசுராம கல்பம், தேவிபாகவதம், தேவி மகாத்மியம், பிரதானிக ரகசியம்
Sakti and Sakta by Sir John Woodrofe. Satas by E. A. Payne

** பத்ரோல் பத்தி கிளிப்பாட்டு, கேரள அக்ஷரலாயம், 186 Page

காணப்படுவதாலும் காளியின் நிறத்தினின்றும் காளியை வேறுபடுத்த முடியாது.

அமரக்காரனுடைய கருத்துப்படி காளி நீலநிற முடையவள்.*** எனவே காளகூடவிடத்தின் நிறம் கறுப்பா? நீலமா? என்ற ஐயம் எழுகின்றது. காள கண்டன், நீலகண்டனைவது நடைமுறையில் சாதாரண மாகும். ஆனால் நிற அடிப்படையில் காளியின் நிறத் திற்கு நிலையான கருத்து இல்லை.

காளி என்ற பெயரைக் கேட்டவுடனேயே மனதில் ஒரு வித பயங்கரமும், பயமும் தோன்றுகிறது. 'காளன்' என்ற மலையாளச் சொல்லுக்கும் காளிக்கும் ஒரு விதத் தொடர்பு இருப்பதாகக் கொள்ளலாம். பயங்கரமான தும், கொடிய தன்மையினையும் உடைய ஒரு பொருளைப் பார்க்கும் பொழுதோ, அல்லது இத்தன்மைத்தாய கொடிய பேச்சினைக் கேட்கும்பொழுதோ 'காளல்' (பயம்) நம்மிடையே தோன்றுகிறது. இக்கருத்தினை நோக்குங் கால். காளலுக்குக் காரணமாகவும், அச்சுறுத்துவது மாகிய ஒரு உருவத்தினைக் காளி எனல் சாலச் சிறந்தது. மலையாளக் கரையில் உள்ள காவுகளில் காளியைத்தான் குடிவைத்துள்ளனர்.

காவு:

காவு என்ற சொல்லுக்கு மரக் கூட்டம், தோப்பு, சோலை என்ற பொருட்கள் உண்டு. கேரளத்தின் பழத் தேவதைகளான காளி, வேட்டைக்காரன், அந்திமகா காளன், கரிம்காளி, ஐய்யப்பன், பரம்பு ஆகியவர்களைக் குடியிருத்தி உள்ள இடங்களையே காவு என்பர். சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்கள் கோவிலிலும் அம்பலத் திலும் குடிகொண்டிருப்பர். ஆனால் காளி போன்றவரி களுக்கு மட்டுமே உரியதாக காவு அமைகின்றது.

*** அமரம் (பரமேஸ்வரீ வியாக்கியானம்), P. 29

முதன் முதலில் மனித சமுதாயம் வெயில், பனி, மழை முதலியவற்றிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டி மரங்களிடம் அடைக்கலம் புகுந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.* பின்பு படிப்படியாக வளர்ந்து இன்றைய நாகரிக நிலையை அடைந்தனர் என்பதும் அவர்களுடைய கருத்து. இப்பொழுதும் காட்டிலும் சிறு கிராமங்களிலும் வாழ்பவர்களை நோக்கும்போது அவர்களுடைய கருத்து தெளிவாகிறது.

மனிதனுக்கும் மரத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு மிகப் பழமையானது. எனவே தான் ஆலமரம், கூவளம் போன்ற மரங்களும், துளசி போன்ற செடி களுக்கும் மக்கள் தெய்வத்தன்மையை வழங்கினர்களோ என்று ஊகிக்க இத்தொடர்பு இடமளிக்கிறது. 'Fergusson' - னின் கருத்துப்படி மனிதன் முதலில் வணங்கிய தெய்வம் மரம் என நினைக்கத் தோன்றுகிறது. தான் மரத்தின் நிழலினை வேண்டிய காலத்தில் தன் தெய் வத்தையும் அதன்நிழலில் வைப்பதற்கு மனிதன் விரும்பி னான். அதன்படி தெய்வம் வாழும் இடத்திற்கு மரக் கூட்டங்கள் நிறைந்த 'காவு' என்ற பெயரும் வந்திருக்க லாம். நாகரிகம் தோன்றிய பின் மனிதன் தன் பழைய நினைவுகளை நிலைநிறுத்த வேண்டி, அதே சொல்லை (காவு) வழங் கோவில்களுக்குச் சூட்ட வேண்டுமென்ற அடிப் படையில் 'காவு' என்ற சொல்லைக் கைக்கொண்டான். அதற்குப் பிறகு ஏற்பட்ட தெய்வங்களின் இருப்பிடத் திற்கு வேறு பெயர்கள் தோன்றின. இவ்வாறு காளியைக் காவில் மட்டுமே காண முடியும் என்ற நிலை ஏற்பட்டது. பழந் தெய்வங்களாகிய அய்யப்பன், வேட்டக்காரன், பாம்பு இவர்களுடைய இடங்களுக்கும் காவு என்ற பெயர் பின்பு தோன்றியது.

---

* J. Fergusson, Tree and Serpent Worship, P. 1

காவின் பழைய வடிவமும், புதிய வடிவமும்:

காவு என்ற சொல்லிலிருந்து காளியை முதலாவதாக வழிபட்டு வந்தது மரச்சுவட்டிலிருந்தான் என்பது தெளிவு. கேரளத்தில் இதுபோன்ற காவுகள் ஏராளம் உண்டு. இவற்றில் ஒன்றுதான் தென்மலையாளத்தின் செரிப்புள்ள சேரியிலுள்ள புத்தனுலய்க்கல் காவு.

இதற்கு மேற்கூரையோ, சுற்றுப் பிரகாரமோ இல்லை. நடுவில் ஒரு ஆலமரமும் அதன் முன்பு ஒரு சிலையும் காணப்படுகிறது. அதைச் சுற்றி சிறிது உயரத்தில் கட்டிய ஒரு கல்மதில் உள்ளது. இக்கல் மதிலின் நான்கு பக்கமும் ஒரு முற்றமும் அதன் ஓரத்தில் வேறொரு மதிலும் உள்ளது. சாதாரணமாக காளிகாவுகளின் வாயில் (முகவாயில்) வடக்கு நோக்கியே அமைந்திருக்கும். ஆனால் இதன் வாயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்கும், கிழக்கும் நோக்கி அமைந்திருக்கும் வாயில்களையுடைய காளி கோவில்களைக் காண்பது எளிது அன்று. எனினும் பெரும்பாலும் வடக்கு நோக்கியே வாயில் அமைந்திருக்கும்.

இந்தக் காவிற்கு ஒரு நல்ல கட்டடம் அமைத்தற்குரிய பணம் அறநிலையக் குழுவினரிடத்தில் இருப்பினும் அவர்கள் அதனை உபயோகிக்காமல், இருப்பதற்கும் ஒரு காரணம் கூறுகின்றனர். அதாவது, முன்பு ஒருநாள் அங்குள்ள கோவில் நிர்வாகி ஒருவர் இக்காவினைப் புதுப்பிக்கும் வேலையில் ஈடுபட்டார். அதனைத் தொடங்குவதற்கு முன் காளியின் மனதை அறிய எண்ணினார். அப்போது தெய்வமுற்று ஆடும் வெளிச்சப்பாடின் மீது காளி வந்து தனக்குச் சரக்கல்லும், சவற்றிலையும்தான் விருப்பம் என்று கூறினாள். இவ்வாறு கூறியபின் அக்காவினைப் புதுப்பிக்கும் வேலையில் எவரும் ஈடுபடவில்லை.

சுற்றம்பலம் :

நாம் இன்று காண்பது சுற்றம்பலத்தோடு கூடிய காவாகும். இக்காவில் சிலை இருக்கும் இடத்திற்கு நேரே

மேலே சில துவாரங்கள் இருக்கும். சில வெயிலையும் மழையையும் ஏற்றுக்கொண்டிருத்தல் வேண்டும் என்ற கருத்தில்தான் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. கேரளத்தில் மக்கள் "நாலுபுர" அமைத்து குடியிருக்கத் தொடங்கிய காலத்தில்தான் சுற்றம்பலமோடு கூடிய காவும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

ஸ்ரீ கோவில் :

காவுகளின் வளர்ச்சியின் இறுதி நிலைமைதான் ஸ்ரீ கோவில். இது இரண்டு வகையில் உண்டு. இரண்டின் மேல்பாகம் கூர்மையாக இருக்கும். ஒரு சில கீழ்ப்பாகம் சதுரமாகவும் ஒரு சில வட்டமாகவும் காணப்படுகிறது. சதுரவடிவமான ஸ்ரீ கோவில்தான் காவுகளில் அதிகமாகக் காணப்படுகிறது. ஸ்ரீ கோவிலின் தோற்றம் பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேற்றுமை உண்டு. ஒரு கூம்பிய தொப்பியின் வடிவத்தில் காட்சியளிக்கும் ஸ்ரீ கோவிலின் பிறப்பு அயல்நாடுகளில்தான் அமைந்துள்ளது என்று சிலர் கூறுகின்றனர். இது கேரளத்தை மட்டுமன்றி பாரதத்தையும் பாதிக்கின்றது. அயல்நாட்டு விமானத்திலேடும் (ரதம்) ஸ்தூபத்திலேடும் ஒரு புடை ஒப்புமை உடையதாய் விளங்கும். ஸ்ரீ கோவில் உள்நாட்டிலே தோன்றியதா அல்லது அன்றி வெளிநாட்டில் தோன்றியதா எனத் தீர்மானித்தல் எளிதன்று. சிலர் இதனை ஈஜிப்து தேசத்து சவக்கூடாரங்களின் மேல் கட்டுகின்ற , பிரமிட்டினுடைய ஸ்தூபத்தின் மாதிரியாய் விளங்குகிறது என்று கூறுகின்றனர். சால்டியா என்ற நாட்டில் காணுகிற 'Zigarets' என்பதன் மாதிரியாகும் ஸ்தூபங்கள் என்றும் சிலர் கருதுகின்றனர். 'Longhurst' என்ற ஆங்கிலேய அறிஞர், இது பழங்கால இந்துக்களிடையே மோந்தாயாகிருதியிலுள்ள பிணக்கூடாரத்தின் புதுமையான் வடிவம் எனகிறார். அவரே புத்த விஹாரங்களின் ஒரு தனிச்சின்னமாக விளங்கும் ஸ்தூபம் புத்தர்களின் படைப்பே என்றும் வலியுறுத்துகின்றார்

என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய கருத்தினையே எடுத்து நோக்குவோம். புத்தரது காலத்திற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே ஸ்தூபம் உள்ளது. பூர்வபௌத்தமாக இருந்த இந்த ஸ்தாபனத்தை மக்கள் மிகவும் ஆதரித்துவந்தனர். அந்தக் காலத்தில் சாதாரண வடிவமாகத் திகழ்ந்த அது உருண்டு நான்கு பக்கமும் நீக்கிக் கட்டியிருந்ததுர், பின அடக்கக் கிடங்குகளின் பழைய உருவத்தைக் காட்டுவதற்கும் உரிய ஒரு சின்ன மாக விளங்கியது. பொதுமக்களின் மதிப்பைப் பெறுவதற்கும் தனது புதிய மதத்திற்குப் பிரச்சாரம் கிடைத்தற்கு வேண்டிய அதனைப் புத்தர் ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. புத்தரின் மரணத்திற்குப்பின் அவரது சீடர்கள் அதனைப் புதுமையாக்கிப் பிரசுரித்தனர் என்பதை உணரலாம்.*

பழங்குடிகளில் காரணவர்களுக்குப் பூசை செய்வதற்காக மண்டபங்கள் கட்டிக் கொடுப்பது உண்டு' அது சதுரமான சுவரின்மேல் கோண் வடிவத்தில் அமைத்த மேற்கூரையுடன் விளங்கும். கேரளப் பழங்குடிகள் என்று கருதப்படும் செருமன், பாணன், பறயன் என்பவர்கள் வசிக்கும் இடங்களும் சில வேளைகளில் அடிப்பாகம் சதுரமாகவும், மேற்பாகம் கூம்பியதுமாகக் காணப்படும். வட்டவடிவமான அஸ்திவாரத்துடன் சாளகளும் காணப்படும். இவ்வாறு ஸ்ரீகோவிலின் தோற்றப் பற்றி பல கருத்துக்கள் இருந்தாலும் இதனைநு கோயில்கட்டுமக்கலை முன்னேற்றமடைந்துள்ளது என்பதும் தெளிவு. சைவ வைணவ கோயில்களில் ஸ்ரீகோவில் சாதாரணமாக காட்சியளிப்பதால் காவுகளில் ஸ்ரீகோவில் வந்தவுடன் சைவமதத்தினருக்கும், வைணவமதத்தினருக்கும் கேரளத்தில் பிரச்சாரம் கிடைத்ததாக நம்பப்படுகிறது.

---

* Long hurst Anuual Report of the Archaeological Department, Southern Circle, 1915-16, P. 30, 31

வைஷ்ணவ மதத்தினரும் தங்களது பள்ளியினைச் ஸ்ரீகோவில் என்றே கூறினர் என்ற கருத்தும் ஒப்புநோக்கத்தக்கது.*

காவு வட்டம் அல்லது தட்டகம்:—

காவில் அம்மைக்கு 'பான' முதலிய விழாக்கள் எடுக்கும்போது இன்ன திசையில் இன்ன காவில் எடுக்கவேண்டும் என்ற ஒரு பழக்கம் உண்டு. வேறொரு காவிலும் விழா நடத்த வேண்டுமெனில் அந்தந்த இடத்திலுள்ள காவின் முன்னும் பின்னும் வழிபாடு நடத்துலாம் என்ற வழக்கமும் உண்டு. அதாவது வேறொரு காவில் நடத்தும் விழா நாளின் முன்னைய நாளும், அதன் மறுநாளும் அந்த இடத்தில் உள்ள காளிக்கு வழிபாடு நடத்தவேண்டும். இதனால் ஒவ்வொரு இடத்திலுமுள்ள காவுகளுக்கு அந்தந்த திசையில் வாழும் மக்கள் நடத்தும் விழாக்களை அங்கீகரிப்பதற்கு மூன்று விதிமுறைகள் உள்ளன. என்பதை அறியலாம். இத்தகைய ஒரு 'காவிலம்ம'யின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியினைத்தட்டகம்** [தட்டின்ற அகம்] என்பர். காவில் ஆண்டுதோறும் நடைபெறும் பூரம், வேல முதலிய விழாக்களுக்கு, அந்தந்தத் தட்டகத்திலுள்ளவர்கள் வரிசை முறைப்படி நெல் முதலியன கொடுத்தல் வேண்டும் என்ற நிபந்தனை உண்டு. சில இடங்களில் பூரத்தின் முதல் நாள் அம்மைக்கு ஆராட்டு (ஆறில் நீராட்டுதல்) உண்டு. இது தட்டகத்தினுள்பட்ட ஒரு குளத்திலோ அல்லது ஆற்றிலோ நடைபெறும். அம்மன் சிலையினை யானையின் மீது வைத்து சாந்திக்காரன் காவில் பரிவாரங்களோடு ஆராற்றிற்குரிய இடத்திற்குக்

---

*சிந்தாமணி [பாட்டு-139, 154; P. 47, 48. 52]
சிலப்பதிகாரம் [அத்தியாயம் 10; P. 552]

**இதை அடிப்படையாகக் கொண்டு காளியை அதிர்த்தி தேவதையாகச் சிலா தவருக கருதியுள்ளனர் :-
L. A. Anantakrishna Iyer, Lectures on Ethnegrapny. (calcutta University Publication) P - 260.

குக் கொண்டு செல்வர். அங்கு சில பூசைகள் நடத்திய பின் அச்சிலையுடன் சாந்திக்காரன் (பூசாரி) நீரில் மூழ்குவார். அவருடன் கூட ஆராட்டுப் பார்த்து வழிபட வந்தவர்களும் மூழ்குவார்கள். அதன்பின் சில வழிபாடுகள் நடத்தியபின் காளிற்குக் கொண்டுவருவார்கள். கொண்டு வரும் வழியில் ஒவ்வொரு வீட்டாரும் ஒரு பறை நெல் அல்லது அரிசி கொடுப்பார்கள். ஆராட்டு கழிந்து அம்மன் புறப்படுவதைப் பார்த்ததும் ஒவ்வொரு வீட்டுவாசலிலும் ஆட்கள் நிற்பார்கள். வாசலின் முன்னால் சிறிது இடத்தினை மெழுகி, சுத்தமாக்கி, மாக்கோலம் இட்டு அதன் நடுவில் ஒரு பறை நெல்லும் விளக்கும் வைப்பார்கள். பறையின் மேல் ஒரு பூக்குலையைச் [தென்னம் பூ] செருகுவதும் வழக்கமாகும். பறையில் நெல்லோ அரிசியோ கொடுப்பவர்கள அவர்களின் தகுதியைப் பொறுத்து நிறைத்திருப்பார்கள். சில வேளைகளில் ஒரு சிலர் பொறி நிறைத்த பறையையும் வைப்பதுண்டு.

இத்தகைய பறைகொடுப்பது ஒரு இடத்தின் முக்கியமான தரவாட்டுக்காரர்களின் (குடியினரின்) கடமையாகும். மற்றவர்கள் வழிபாடாகக் கொடுப்பதும் உண்டு. அம்மன் புறப்பட்டு வீட்டு முன்னாலாக வந்ததும் மெழுகப்பட்ட இடத்தை மூன்று முறை வலம் வருவார்கள். இதனால் அம்மன் பறையினை ஏற்றுக்கொண்டதாகக் கொள்வதும், கூட வருபவர்கள் பறையிலுள்ள நெல் முதலியவைகளைத் தாங்கள் எடுத்துச்செல்லும் பழக்கமும்உண்டு.* கேரளத்திலுள்ள பெருவாரியான காவிலும் இதுபோன்ற முறை உண்டு. சோற்றூளிக்கரை அம்மன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் தங்கி களைசிறான் காவுக்குத் திரும்புவார்கள். 'வேல'யின் பத்து நாட்களில்தான் நாட்டு மக்களின் துயரங்களைக் கேட்டு அதற்குப் பரிகாரம் செய்வாள்.

---

* ஆராட்டு விழாவினை கேரளத்தில் காண்டு என்றும் இத்தகைய 'கொடுக்கல்' ஆ.

இதுபோன்றுதான் பூரநாளன்று மக்களின் பிரதிநிதியாக பல இடங்களிலிருந்தும் வேலகள்* வரவேண்டும் என்ற சட்டமும் உண்டு. தட்டகத்தில் பல இடங்களிலும் 'பான' முதலிய சடங்குகளை நடத்தி மாலையில் யானை மேனம் முதலியவற்றோடு காவில் வந்து சேருவார்கள். அங்கு எல்லா 'வேல'களும் ஒன்றுசேர்ந்து மேளம்கொட்டி விழா முடிவுறும்.

இவ்வகையான பழக்கவழக்கங்களிலிருந்து ஒரு சில செய்திகளை ஊகித்தறியலாம். காவுகளைக் காவு வட்டத்தில் வகித்த மக்கள் பொது சொத்தாகக் கருதியிருந்தனர் என்பதும், காவிலம்மனை அந்த இடங்களிலுள்ள பொதுவான குலதெய்வமாகக் கருதி வந்தனர் என்பதும், காவினைப் பாதுகாப்பதற்கும் அதன் தினசரி செலவிற்கும் வேண்டிய பணத்தின் எல்லா மக்களிடமிருந்தும் வசூலித்தனர் என்பதும் இதனால் அறியப்படுகிறது. பிற கோவில்களில் (சைவ, வைணவ) இதுபோன்ற ஒரு முறை இல்லாமையால், காவுகளில் காணப்படும் கலாசாராதிற்கும் இடையே மாறுபாடு உள்ளதாகக் கொள்ளலாம். மற்ற கோவில்களில் ஒரு சில பிரபுக்களின் ஆதிக்கத்தின் கீழிருந்தனை. காலப்போக்கில் மக்களிடையே செல்வாக்கு பெற்ற வர்கள் ஆட்சி நிர்வாகங்களைக் கைப்பற்றியது போன்று கோவில் நிர்வாகத்தினையும் கைப்பற்றியிருக்கலாம் இருப்பினும் தட்டகத்துப் பரதெய்வம் என்ற சொல்லுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. இவ்வாறு கோவில் நிர்வாகத்தினைப் பார்த்து வந்தவர்களின் சந்ததிகள் தாங்களை அதிகாரங்களை ஏற்படுத்திக்கொண்டு அதிக வருமானமுள்ள காவுகளைச் சொந்தமாக்க முயன்றிருக்கலாம். இத்தகைய மாற்றங்களின் காரணமாகத்தான் பலரின் சொத்தாக விளங்கிய 'காவும் அம்மையும்' ஒரு சிலருக்கு மட்டும் உரிமையானது என எண்ணலும் தகும். அவர்கள்

* வாத்திய குழுவுடன் யான் முதலியவைகளுடன் நாட்டு மக்கள் அம்மனை வழிபட வரும் ஒரு பழைய முறை.

ஒரு சமுதாயமாகவோ, சங்கமாகவோ சேர்ந்து காவினை ஆட்சி செய்ய முற்பட்டனர். அவர்களை 'ஊராளன்மார்' என்ற முறையில் உரிமைபெற்றனர். ஊராளன் என்ற சொல் ஊரை ஆள்பவன், ஊரில் பெருமையுள்ளவன் என்ற பொருளில்தான் முதலில் பிரச்சாரத்தில் வந்தது.

கேரளத்திலுள்ள தரக் கூட்டங்களும், தரவாடிகளும்* பழைய ஆட்சியின் முக்கிய உறுப்பினர்களாக இருந்தார்கள் எனச் சரித்திரம் கூறுகிறது. ஆட்சி முறையில் முன்னும் பின்னும் உள்ளவர்களின் உதவியின்றி ஒரு நாட்டில் எவ்வகை நிர்வாகமும் நடைபெறாது. மக்கள் சமுதாயம் அவர்களைச் சமுதாய, மத காரியங்களைப் பார்க்கும்படி கட்டாயப்படுத்துவதும் சாதாரணமாகும். அவ்வாறில்லையெனில் பல குழப்பங்களும் ஏற்படலாம். மக்களின் உதவியும் காவு காரியங்கள் நடத்துபவர்களுக்கு மிகவும் தேவையாகும். அதனால் காவு அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் ஒன்று சேராமல் ஒரு செயலும் நடைபெற வழியில்லை. இக்காரணங்களால்தான் 'ஊராளன்மார்' காவிலும் மற்ற கோவில்களிலும் நிர்வாகம் நடத்தத் தொடங்கினர் போலும். பொதுமக்களிடமிருந்து கோவில் நிர்வாகம் ஊராளன்மார் கைகளுக்கு எப்பொழுது கிடைத்தது என்பதனை அறுதியிட்டுக் கூற இயலாது. நமது சரித்திரத்தில் காலகட்டங்கள், சரியான சான்றுகள் கண்டுபிடிப்பது வரையிலும் இதைப் பொறுத்த வரையில் ஊகங்கள்தான் முன்னின்று வழி காட்டுகின்றன.

கோயில் நிர்வாகமும் ஊராட்சியும்:

ஒரு காலத்தில் ஊராளன்மார்கள் நாயன்மார்களாயிருந்தார்கள் என்பதை அவர்களுக்குக் காவில் இருந்த அதிகாரங்களும் உரிமையும் அறிவிக்கின்றன. அந்தணர்

* C. A. Menon, C. R. Reddy Commemoration Volume, P. 108 (1942)

களின் வருகையினால் இந்நிலை படிப்படியாக மாறியது. அரச பரம்பரையினரையும் நாயர் பிரபுக்களையும் நாடிப் பிழைத்த அந்தணர்கள், திருமண உறவு கொண்டும் சமுதாயத்தில் ஒரு உன்னத நிலையைக் கைப்பற்றினர். கோவில் பூசை ஊர் வகையாக்கப்பட்டு, அதன் விளைவாக ஊராண்மையின் நிலையும் மாறத் தொடங்கியது. 'பஜனம் முழுத்து ஊராய்ம' என்ற சொற்றொடரும் இங்கு நினைவு கூரத்தக்கது. கேரள அந்தணர்களுக்கு மத காரியங்களில் இப்பொழுது காணப்படும் உரிமை திருமண உறவின் உதவியினால் வந்திருக்கலாம். சைவ வைணவக் கோவில்களில் பூசை செய்வதற்கு அந்தணன் தான் வேண்டுமென்ற கொள்கையும் இருந்தது 'நம்பூதிரி', 'எம்பிரான்' அல்லது 'போற்றி' அய்யர் போன்றவர்களை அன்றி சில கோவில்களில் வேறு எந்த வகுப்பினரும் பூசை செய்ய தகுதியற்றவர்கள் என்ற கருத்தும் நிலவி வந்தது. அதுமட்டுமன்றி நாயன்மார் போன்றவர்கள் ஒரு குறிப்பிட்ட வழியாக மட்டும்தான் கோவிலினுள் செல்லலாம் என்றும் தடையிருந்தது. சில கோவில் நடவடிக்கைகளில் பூசை வேளையில் வணங்க வரும் அந்தணனைப் பூசாரி விருந்தாளியாகக் கருதி உபசரிக்கும் முறையும் ஒன்றாக இருந்தது. கோவில் அசுத்தமாகிவிட்டால் அந்தணன் புண்ணிய தீர்த்தம் தெளித்தாலன்றி, சுத்தமாகாது என்ற கருத்தும் நிலவியது. சில வேளைகளில் ஒரு அந்தணனுக்குப் பதிலாக ஐந்து பேர் தீர்த்தம் தெளித்தல் வேண்டும் என்ற நியதியும் உண்டு. இத்தகைய செயல்களால் அந்தணர்களின் ஆதிக்கம் கோவிலின் மேல்தான் நிலைபெற்றிருந்தது என்பதனை ஊகித்தறியலாம்.

காவுகளின் பழங்கால வரலாறு :

ஒரு சில காவுகளின் வரலாற்றினை ஆராய்வதன் மூலம் பல செய்திகளை நாம் அறியமுடிகிறது. இன்று

பெயர்பெற்று விளங்கும் சைவ வைஷ்ணவக் கோயில்கள் பல ஒரு காலத்தில் 'அம்மனின் அகம்'மாயிருந்தது என ஊகிக்க இடமுள்ளது. குருவாயூர் கோவிலினுள் காணப் படும் கருப்பக் கிரகத்தின் கீழ், முன்பு ஸ்ரீ சக்ரம் இருந்த தாக ஒரு கூற்று உண்டு ஒரு மலையன் தீ கொண்டு வந்த பின்பே திருவிழா தொடங்க வேண்டுமென்ற ஒரு வழக்கம் திருவனந்தபுரம் பத்மனாபசுவாமி கோவிலில் ஒரு காலத்தில் அரசர்கள் கொண்டுவரும் மலர்மாலைகளைவிட ஒரு சிறுமி கொண்டுவந்த தெற்றி மாலைக்கே முக்கி யத்துவம் இருந்ததாகக் கருதப்படுகிறது கொடுங்கல்லூர் பரணியின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு மீனவனின் வருகையை முதன்மையாகக் கருதியிருந்தார்கள். *

ஒரு விக்கிரகமுள்ள எந்தக் காவும் ஒரு சிறுமியோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஒரு சிறுமி புல் வெட்டும்போதோ அல்லது தனது அரிவாளைக் கூர்மைப் படுத்தும்போதோ அவ்வரிவாள் அக்கல்லின் மீது படும். அப்பொழுது அக்கல்லினின்றும் குருதி வழிவதை அவள் காணநேரிடும். உடனே அவள் அவ்விபரத்தை அருகில் இருப்பவர்களுக்குத் தெரிவிப்பாள். அவர்கள் அந்தக் கல்லையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் சுத்தப் படுத்தி அதற்கு ஒரு தெய்வத்தன்மையை உண்டாக்கி விடுபவர். பின் ஆராதனையும் தெய்வழிபாடும் நடத்து வார்கள். ஒரு அறுமுறை கழிந்ததும் அங்கு அம்மனின் குடியிருப்பு நிரந்தரமாகிவிடும். முன்பு குருதி கண்ட சிறுமி உயிருடன் இருக்கும்வரையில் அவ்விடத்தின் சடங்கு பொறுப்பினை ஏற்று நடத்துவாள். பின் நாட்டில் குறிப்பிட்டவரோ அல்லது அனைவருமோ ஏற்று நடத்து வார்கள். நாட்டுப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற் றங்களால் இப்புண்ணிய இடமும் பாதிக்கப்படும். இது

* C. Achute Menon, Cochin State Manual, P. 382

போன்ற கணதகன் சிறய்க்கல், சோற்றுனிக்கர,* சோதிதல என்ற இடங்களில் இவடயிடையே காணப்படும் காவு களின் பொதுச் சொத்தாக விளங்குகிறது. காவுகளில் சிலேகள் வைத்தபின்பு 'முன்பு அம்மன் இங்குதான் இருந்தது' எனக் கூறவேண்டி வேறொரு இடத்தினை ஏற் படுத்துவர். திருமாந்தாம் குன்னிலுள்ள சப்தமாதர்களை குடிவைத்துள்ள ஸ்ரீ கோவிலின் தென்மேற்கில் இத்தகைய இடமொன்று உளது. இதற்கு ஸ்ரீ மூலஸ்தானம் என்ற பெயர் வழங்கப்பெறுகிறது. அம்மனின் 'சக்தி' பெரும் பாலும் பிரகாசிப்பது இவ்விடத்தில்தான் என்பது சிலருடைய கருத்து. அங்கு விக்ரகம் கிடையாது; ஒரு குழிதான் காணப்படுகிறது. வாசல் கிழக்கும், மேற்கு மாக இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. அதன் பக்கத்திலுள்ள சிறிது இடத்தில் மரக்குடில் அமைக்கப் பட்டிருக்கும். அதனைச் சுற்றி யாவரும் உள்ளே நுழைய முடியாதவாறு மதில் கட்டப்பட்டிருக்கும். இவ்விடத்தை 'மாந்தாதாவு' தவம்செய்த இடம் ஒரு சிலரும்; அம்மன் இங்கிருந்துதான் ஸ்ரீ மூலஸ்தானத்தில் தோன்றுவாள் என ஒருசிலரும் கூறுகின்றனர். அக்காட்டினுள் சென்று பரிசோதனை செய்வதற்கும் ஒருவரும் முற்படுவதில்லை. மனதைரியம் இன்மையே இதற்குக் காரணம். ஸ்ரீ கோவிலில் உள்ளது போன்று ஸ்ரீ மூலஸ்தானத்திலும் தனசரி பூசை நடைபெறுகிறதுண்டு. இரண்டு பக்கமும் சென்று உட் பிரகாரத்தை நோக்கி வணங்க வேண்டும் என்ற சட்டமும் உண்டு. அக்குழியின் மேல் ஒரு மரச்சட்டத்தினைக் கட்டி அதன்மேல் சின்னவிளக்குகளை வைப்பர். அது எரிந்து கொண்டிருக்கும். இந்தச் சட்டத்தின் மீதுதான் மாலை களை இடுவர். சில வேளைகளில் அதன்மேல் 'பிரபா மண்டல'த்‡ தைச் சாய்த்து வைத்திருப்பதையும் காண லாம்.

---

* சோற்றுனிக்கர ஷேத்ரம், P. 56

‡ தங்கத்தாலோ, ஓட்டினாலோ அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட ஒரு பொருள்.

கொடுங்கல்லூர்காவில் வடக்கு நோக்கி இருக்கும் அம்மனின் வலது பாகத்தில் பட்டினால் மூடப்பட்டதும் அதன்மேல் தங்கச்சட்டம் வைக்கப்பட்டுள்ளதுமான ஒரு இடம் காணப்படுகிறது. அங்குதான் அம்மன் முதன்முதலில் குடியிருந்தாள். பின்னும் பகவியின் ஆவேசத்தினை தாங்கமுடியாத நாட்டுமக்கள் அவளிடம் சாந்த சொரூபியாக மாறவேண்டியமையால் ஏற்பட்டதே இப்பொழுது காணப்படும் உருவ வழிபாடு என அப்பகுதியில் வாழும் மக்கள் நம்பி வருகின்றனர்.

சோற்றூனிக்கரையிலும் இதுபோன்ற ஒரு அதிசயம் உண்டு. இப்பொழுதுள்ள கோவிலின் தென்பாகத்தில் சிறிது மேற்கு தள்ளி முல்லைத்தரையுடன் சேர்ந்த ஒரு மரம் நிற்கின்றது. அதன் அடிச்சுவட்டில் ஆறேழு பாகங்களாக மண்ணுலாகிய தடம் பகுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அம்மனின் ஆதி இருப்பிடம் இதுவாக இருந்தது. ஒவ்வொரு பாகத்திலும் அம்மன் மாறி மாறி அமர்ந்த பின் இறுதியில் நாட்டு மக்களின் கோரிக்கையின்படி இப்பொழுதுள்ள ஸ்ரீகோவிலில் குடியேறினாள் என்பதும் கர்ணபரம்பரை. பெரிய காவுகளைப் பற்றி வழங்கி வருகின்ற இக்கதைகளைப் போல சிறிய காவுகளைப் பற்றியும் பல கதைகள் வழங்கி வருகின்றன. 'சேரித்தலக்காவின் மதிலினுள்ளில் தென் பாகத்தில் ஒரு மரத்தின் எஞ்சிய பாகம் காணப்படுகிறது. இதனையும் ஸ்ரீமூலஸ்தானம் என்றே அழைப்பர். பகவதியை முதலில் பார்த்தது இங்குதான் என நம்பி வருகின்றனர்.

மேற்கூறிய கருத்துக்களால் மலையாளத்தில் அம்மனுக்கு மலையாளக்கரையோரம்தான் பழக்கம் உண்டு என்பதும், சமுதாயத்தினர் அம்மனை ஏற்றெடுத்தது முதலில் குடியிருந்த இடத்திலிருந்துதான் என்பதும், அம்மனின் தோற்ற காலத்தில் ஐந்தணர் சமுதாயம் 'பரசுராமரி' கோவிலில் இல்லை என்பதும் பூதேவன்மார்களுக்கு

முன்னுல் கேரளத்தில் சர்வாதிகாரம் நடத்தி வந்த நாயர் களின் பண்பாட்டின்படியும் விருப்பப்படியும் காவுகளின் சுயரூபமும், தன்மையும் மாற்றப்பட்டது என்பதும் அறிய முடிகிறது.

காவுகள் நாயன்மார்களின் ஆட்சிபீடம்;

காளிக்கும் நாயன்மார்களின் வண்பாட்டிற்கும் தொடர்புண்டு. காவுகள் தட்டகத்தாரின்கீழ் இருந்த போது எல்லா செயலுக்கும் அம்மன்தான் காரணம் என்ற நம்பிக்கைப் படிப்படியாக வளர்ந்தது. செவ்வாயும் வெள்ளியுமே அம்மனை வணங்க ஏற்றநாள் என்பதும் வழக்கத்தில் வந்தது. காவிற்கு செல்பவர்கள் முதலில் திருவமுதும் சில இடங்களில் கலசமும் [மண்பானையில் குருதி உண்டுபண்ணி தர்ப்பணம் செய்தல்] தன்னைத் தானே செய்வது வழக்கமாக இருந்தது. நாயன்மார்கள் பூசைசெய்யும் காவுகளில் இப்பொழுதும் இதுதான் சட்ட மாக உள்ளது.

நாட்டில் பேய்களாலும் தொத்துநோய்களாலும் துன்பம் ஏற்படாமல் காவில் ஒன்றுகூடி அம்மனின் அருள் வாரித்தைகளைக் கேட்டபின் அமைதியாகத் திரும்பிச் செல்வது வழக்கம். இது மட்டுமன்றி சமுதா யத்திலோ அரசியலிலோ ஏற்படும் குழப்பங்களைத் தீர்க்க வும் இவ்விடத்தையே தேர்ந்தெடுத்தனர். பெரும்பான் மையான காவுகளிலும் கூட்டத்தலைவர்களுக்கெனத் தனி யிடம் ஒதுக்கப்பட்டிருக்கும் இவர்கள்தான் ஊராளன் மார்கள். நிகழ்ச்சிகள் முடிந்த பின் 'வெளிச்சப்பாடு ஆணை'யிட வேண்டியதும் இவ்விடத்தில் வந்ததுதான் என்ற வழக்குமும் உண்டு. இப்பழக்கம் அம்மன் 'வேளாளின் குலதெய்வம்' என்ற பெயர் பெற்றதும் மேலும் பிரபல மடைந்ததும். குறிப்பாகக் கூறினால் காவு அம்மனின் திரு முற்றமும் ஆட்சி நிர்வாகங்களாக இருந்த நாயன்மார் களின் முக்கிய இடமாக இருந்தது.

அதுபோல் நாட்டார் எல்லோரும் கூடி அடுத்த ஒரு நாட்டில் குழப்பம் தீர்ப்பதற்கோ இரண்டு பேர்களுக் கிடையே உள்ள வாக்குவாதத்தினைத் தீர்ப்பதற்கோ செல்லும்போது அம்மனை வணங்கிச் செல்லும் முறை வழக்கமாகும். வள்ள நாட்டிலிருந்து மாமாங்கத்திற்குப் புறப்பட்ட சாவேர்ப்படை திருமாந்தாம் குன்னிலம்மனை வணங்கி அங்கிருந்து 'புதுமனை அம்மன்'யின் உருளை வாங்கிய பிறகுதான் திருநாவாய்க்குத் திரும்ப புறப்பட்டது. தச்சோளி உதயணனும் படைகளும் புறப்படும்போது உலோகனார் காவிலம்மனை வணங்காமல், புறப்படுவது கிடையாது. இதுபோன்றவை நாயர் அந்தணர்களின் பக்திக்கு உதாரணமாக இருந்தாலும் அம்மனுக்குக் கேரளத்திலுள்ள சமுதாயங்களிலும் சரித்திரத்திலும் இருந்த அனைத்து நிர்வாகத்திற்குதீ தெளிவாக அமை கின்றது.

பூரங்களும் அதனையொட்டி நடக்கும் நடவடிக்கைகளும்:

உயிர்பலி:

பழங்கால மனிதன் மிருகங்களிலிருந்து அதிகம் மாறு பட்டவனாக இருக்கவில்லை. அந்தக்காலங்களில் மிருகங் களைக் கொன்று தின்றுதான் அவன் வாழ்ந்துவந்தான்,* அந்த நிலையிலிருந்த மாற்றங்கள் வந்தபிறகும் அவனது முன் உணர்வு மாறவில்லை. வாழ்க்கை நடத்துவதற்காக மிருகங்களை வேட்டையாடுவது சிறிது காலங்கூட நின்று நின்று போந்தது. அடுத்தநிலையாக மனிதன் காடுகளை விட்டு நாட்டில் விவசாயம் செய்ய முற்பட்டான். உண வுக்குக் காய்கறிகளை பயிரிட்டு வாழ்க்கையை முன் னுக்கு கொண்டுவந்தான். அப்பொழுதும் புலால் உண் ணும் வழக்கம் மனிதனை விட்டுப் போகவில்லை. புலால் இன்றியமையாததாக இல்லாவிடினும் அதை விடுவதற்கு மனிதனுள் இயலவில்லை. வேட்டையாடும்பொழுது எப்

* J. Howard Moore, Savage Survivals, P. 1.

பொழுதும் கொடிய மிருகங்கள் கிடைக்காததால் மான் போன்ற சாது மிருகங்களைப் பிடித்துத் தின்றுவந்தான். அம்மாதிரி சாது மிருகங்கள் அவர்களிடமிருந்து விடுபட இயலாமல் இருக்கவில்லை. அப்படியிருக்கும்போது, இது இயற்கையான நிகழ்ச்சி என நினைப்பதற்கு வழியுள்ளது. உணவுக்கான தேவையை முன்னிட்டு அவை கிடைக்காததால் சில வேளைகளில் மனிதனே ஒரு சிந்தனையாளனுக்கி இருக்கலாம். அந்த ஒரு நிலையில் மனிதன் தெய்வநம்பிக்கைக்கும் பாத்திரமாகி இருக்கலாம். கடவுள் அருள் இருந்தால்தான் வாழ்க்கை நடத்த முடியுமென்று மனிதனுக்குப் படிப்படியாக நம்பிக்கை வந்திருக்கவேண்டும். தான் உண்ணும் பொருள் விரும்பிய தெய்வத்திற்குப் படைக்க வேண்டுமென்ற உணர்வும் தொடங்கியது.

முதலாவதாக புலால் உணவு உட்கொண்ட மனிதன் கடவுளுக்கும் அதைப் படைக்க முன் வந்தான். இதனால் மிருகங்களைப் பலி கொடுத்தவுடன் கடவுளுக்குப் படைப்பது முக்கியம் என்ற எண்ணம் எழுந்தது. ஏனெனில், மாமிசம் பழுதினால் கெட்டுவிடும் என்பதனாலேயே. பலியிடப்படும் மிருகங்கள் அவனவனது ருசி, உணவு விருப்பத்தைப் பொறுத்ததாகும் என்ற நிலையும் வந்தது. மனிதன் முன்னேறிய பின்னும் இந்தப் பழைய செயல்களை மேற்கொள்வதற்குக் காரணம் பழைய வழிமுறைகளை விடுவதற்கு மனமில்லாமையே என்று தான் கருதுவதற்கு இடமுண்டு. பிறகு தெய்வ வழிபாட்டிற்குப் பலகாலமாகத் தொடர்ந்து படைத்து வந்த பொருள் நமக்கு சுவைக்காமல் வந்தாலும் தெய்வ கோபத்திற்குப் பயந்து அவைகளை தொடருவதும் உண்டு. ஆதி தெய்வம் அம்மனைகையால், அதிக உரிமையை அம்மை அனுபவிக்கவும் இடமுண்டு. இது இந்தியாவில் திராவிடருடைய ஒரு வழிமுறை மட்டுமன்று. ஆரியர்களுக்கிடையில் நடைமுறையில் வந்துள்ள 'யாகங்'களில் 'மேதத்'திற்குள்ள முக்கியத்

துவம் இன்றும் நீங்கவில்லை.‡ அசுவமேதம், வாஜபேயம் முதலிய யாகங்களுக்கு அதிகாரிகளாகஉள்ளவர்கள் அதாவது யஜமானர்கள் போன்றோர் யஞ்ச மிருகத்தின் மாமிசம் உண்ண வேண்டுமென்ற ஒரு விதியும் வழிமுறையும் உண்டு‡‡ 'புருஷமேதவும்' அவர்கள் கைக்கொண்டனர் என்பதை மீமாம்ச கிருதங்களில் நின்றும் ஊகித்தறியலாம்.‡‡‡

உயிர்ப்பலிக்குச் சிறிது மாற்றம் ஏற்பட்டது. 'அஹிம்சா பரமோ தர்மம்' என்ற தத்துவவாடம் கொண்டு உலகைத் தட்டி எழுப்பிய புத்தபகவானின் உபதேசங்களுக்குப் பிறகுதான் என்று ஊகிப்பதில் தவறில்லை.

ஆபாச வசனம் :

கொடுங்கல்லூர் பரணிக்குப் புறப்படுகிறவர்கள் வழிநெடுக 'ஆபாசமும் தெறியும்' (வசையும்) கூறிக் கொண்டு போகவில்லையாகில் அவர்களின் வழிபாடுகளுக்கு நினைத்த பலனுண்டாகாது என்ற நம்பிக்கைக்கு இன்றும் மாற்றம் வரவில்லை. அதுபோல் சேர்த்தலைத் 'தெறிப்பாட்டுகளும்' பிரசித்தி பெற்றதாகும். இவை மலையாளிகளுக்கு மட்டுமுள்ளதா? என்று ஆராய்வது முறையாகும். மைசூரில் தலக்காட்டுக்கருகில் முடுக்கதுறையிலுள்ள ஒரு சிவன் கோவிலில் திருவிழா தினமன்று வந்துசேரும். பெண்கள் ரவிக்கைகளை ஒரு பக்கத்தில் ஒரு பக்கத்தில் கழற்றிவைத்துவிட வேண்டுமென்ற ஒரு வழக்கம் உண்டு. அவ்வாறே ஆண்கள் வந்து எடுக்கும் பொழுது, ஒரு ஆடவன் எந்த ரவிக்கையை எடுக்கின்றானே, அந்த ரவிக்கைக்கு உரியவளை அவ்வாடவன்

---

‡ Dr. L. D. Barnett Indian Antiquities - P. 166, 171.

‡‡ ஆபஸ்தம்ப சிரௌத சூத்திரம், படலம்-7, காண்டிகை-29.

‡‡‡ Dr. L. D. Barnett, Indian Antiquities P. 171.

அன்று உரிமை கொள்ளலாம் என்பதற்கு அங்குள்ள சமுதாயம் அனுமதிக்கின்றது. அதுபோன்று, திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள 'சங்கரநயினார் கோவிலிலும்' விழாவன்று வந்துசேரும் ஆண்கள் பெண்கள் தெய்வத்தின் முன்வந்து ஆவேசம்கொண்டு ஆபாசம் புலம்ப வேண்டுமென்பது அங்குள்ள சடங்குகளில் ஒன்று. வட ஆர்க்காட்டில் திருப்பதியில் 'கங்காம்மா' என்று ஒரு பகவதி உண்டு. அங்கு விழா நாட்களிலும் அம்மனின் முன் சென்று ஆபாசம் கூற வேண்டுமென்று ஒரு வழக்கம் உண்டு. * இதுபோன்று செய்வதால் அம்மை மகிழ்ச்சி அடைவதாக மக்கள் கருதுகின்றனர். முன்னிருந்து இப்பொழுது அவ்வளமாக வெளிப்படையாகக் கூறுவது இல்லை. சமூதாயத்திலும் படிப்பிலும் பின்தங்கியவர்களாகக் கருதப்படுகின்றவர்கள்தாம் இப்பொழுதும் மேற்கூறிய ஆபாசவசனங்களைக் கூறி வருகின்றனர்.

இதுமட்டுமின்றி 'புலப்பேடி' என்றும் 'பறப்பேடி' என்றும் வேறுசில நடவடிக்கைகளும் உண்டு. வருடத்திற்கு ஒருமுறை கீழ்சாதியினர்க்கு அரசர்களின் அனுமதியுடன் காவுகளில் விழாக்கள் நடைபெறும் காலத்தில் ஒரு மாதிரி சுதந்திரம் அனுமதிக்கப்பட்டது. அவர்களுக்கு மேல்சாதியினர் உபயோகிக்கும் குளம் முதலியவைகளில் குளிக்கவும் காவுகளில் உள்சென்று அர்ச்சனைகள் செய்வதற்கும் அனுமதிஅளிக்கப்பட்டது. அன்று அவர்களுக்கு வழியில் காணும் உயர்ந்த சாதிப் பெண்களைத் தொடவும் செய்யலாம். அப்படி அவர்கள் தொட்ட பெண்கள் அவர்களுடன் போய்விடவேண்டும் என்றும் பின்னல் திரும்ப வீட்டிற்கு வரக்கூடாது என்பதும் சமுதாய விதியாகும். இதுபோல் முழு சுதந்திரமாக உலவும் நாளை முன்கூட்டியே அரசர்கள் பறைகொட்டி அறிவிப்பதும் உண்டு. இந்த சுதந்திரத்தில் ஊட்டுடுவதற்கு விருப்ப

---

* Fawcett, Nayars of Malabar, P. 267, 268.

மில்லாதவரிகள் வீட்டில் இருக்கவேண்டுமென்றும் செய்தி அறிவிப்பர். இம்முறையை 'புலப்பேடி' என்றும் 'பறப்பேடி' என்றும் சொல்லியதிருக்கிறார்கள்.

மனிதனின் தேவைகளும் ஆசைகளும் கடவுளுக்கும் தோன்றும் என்றும் அடிப்படையில் மனிதனும் தேவையுள்ளவைகளை கடவுளுக்கும் அளித்துப் பின் தானும் அனுபவிக்கின்றான். இந்த அடிப்படையில் உணவு வகைகளும் அவர்களது ஆசைகளைத் தீர்ப்பதற்கு ஆண் பெண் உறவுகொள்வதையும் தெய்வத்தின் பேரில் நடத்தி வந்தனர். இதனடிப்படையில் விழாக்கள் நடைபெறுகின்ற நிலையினைக் காணலாம்.

'உச்சாரல் வேல' தைமாத அறுவடைக் கழிந்த பிறகுள்ள ஒரு விழாவாகும். அதைத் தொடர்ந்து பல விழாக்களும் நடைபெறும். கொடுங்கல்லூர் 'பரணி'யும் சோற்றுதல 'பூரவு'ம் பங்குனி மாதத்தில் நடைபெறும். திருமாந்தாம் குன்னம் 'பூரம்' மாசி மாதமாகும். அதன் பின் துலா மாதம் (ஐப்பசி) முதல் தேதிக்கும் அமாவாசைக்கும் அந்த 'ஆட்டங் கயேறு' என்று ஒரு விழாவும் உண்டு. ஆட்கள் கூடி ஆட்டங்காய் அங்கும் இங்கும் எறிவதாகும் இதன் பொருள். தலபுராணத்தில் மாந்தாதாவு சிவலிங்கத்திற்காக உமையுமாக ஒரு போராட்டம் நடத்தியதாகச் சொல்வதுண்டு.* அதன் நினைவாகத்தான் இந்தஎறி ஆட்டம் நடப்பது. கன்னி மாதத்திலும் (புரட்டாசி) மகர மாதத்திலும் (தை) அறுவடைக்குப் பின்னுள்ள தானிய மிகுதியினால் ஏற்படும் மன மகிழ்ச்சியே இதற்குக் காரணம் என்று அறியலாம்.

அம்மனை வழிபடும் முறைகள்: 'பான':-

காவுகளும் பிறவும் இல்லாத காலத்தில் 'பான' என்ற இம்முறையில் வழிபட்டனர். இதற்கு 'பால' மரம்

* பத்தோன்பத்தி P. 139

இன்றியமையாததாக விளங்கியது. 'பானைய்க்கு அலுசிய மானவை பெரும்பாலும் பாலிகையிலிருந்து கேண்டும் என்பதுதான் முன்புள்ள நம்பிக்கை. பந்தற் கால்களும் பால மரத்தில்தான் செய்வார்கள். பானைப்பிடுத்ததிற்கு வேண்டிய தண்டும் பால கொண்டுதான் அமைப்பார்கள். இது மட்டுமன்றி ஒவ்வொரு பொருளினடியில் சேர்த்து வைக்கும் அடிப்பலகைகளும் இம்மரத்திலால் செய்யப் பட்டவைகளாக இருக்கும். "அடிக்கிட்டொரடிப்பலகைகள் பொட்டிப்பானும்' என்ற 'பானத் தோற்றத்'திலுள்ள வரிகளைப் பாடும்போது அப்பலகைகளைத் தண்டு கொண்டு குத்தி உடைக்கவும் வேண்டும். பால மரத்தின் பெருமையை நோக்குவதும் முக்கியமான ஒன்றாகும். பாலுள்ள மரங்களெல்லாம் பழைய தெய்வங்களின் தனிப்பட்ட மரங்களாகும்- சாத்தன், பரக்குட்டி, கரிம்குட்டி போன்ற சிறு தெய்வங்களையெல்லாம் அமைபபது அலரி, கள்ளி போன்ற மரங்களின் அடியிலாகும். இவைகளுக்கெல்லாம் பாலும் உண்டு. ஆனால் பால (பாலுள்ளது) என்ற பெயருடையதாகத் திகழ்வது ஒரு மரம் மட்டுமே. அலரியின் பூவும் பானப் பூசைக்கு அவசியமானதாகும். ஆனால் பாலமரம் பல பொருட்கள் செய்தற்குப் பயன் படுவதாலும்தான் பாலையைப் பந்தலில் நடுவதற்கு உபயோகப்படுத்துகின்றனர் போலும். பானக்காரன் 'பாலக்கல் மறுவீடும் பரதெய்வத்தை' எப்பொழுதும் நினைப்பதுண்டு. வைதீக கர்மத்திற்கு வேண்டிய சில பாத்திரங்களும், ஓமத்திற்குரிய சாமக்கிரிகளும் பால கொண்டுதான் செய்வார்கள்.

குருதி:

பானயிலுள்ள இரண்டு சடங்குகளில் ஒன்று குருதி. காவுகளில் பூரம் காலத்தில் அரவு (கோழி, ஆடு) இவைகளைக் கொன்று வழிபடுவதால் ஏற்படும் குருதி வெள்ளம் அம்மனின் நடைவரை ஓழுகிச் செல்லவேண்டும் என்பது சில இடங்களில் நிலவி வந்த நம்பிக்கை.

'குளம் பூசை'யிலும் குருதிக்கு இடமுண்டு. அதோடு சிவப்பு நிறமும் அம்மனுக்கு முக்கியமாகும். பானைப்பந்தலின் நடுவில் உள்ள மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள பீடத்தின் மேல் ஒரு சிவந்த சேலையினை மடக்கியிடுவர். அதற்குமேல் அம்மனை நினைந்து வாளும் மற்றும் கருவி! களும் வைப்பார்கள். இதற்கு 'முரிச்சோப்பு' என்று பெயர். 'குளம்பாட்டிலும்' இந்தச் சடங்கு உண்டு.

பள்ளிவ்வாளையின் இறுதிச் சடங்காகிய 'கனவில் சாட்டு'வும் இன்றியமையாததாகும். வெளிச்சப்பாடும் பானபிடுத்தக்காரர்களும் கனன்ற தீயில் பாயும்பொழுது கால்கள் வெந்துபோகாமலிருப்பது அம்மனின் கருணை கொண்டாகும் என்பது நம்பிக்கை. அம்மனின் பெருமையை சாதாரண மக்களிடையே நிலை நாட்ட வேண்டி வழிபடுபவர்கள் ஏற்படுத்தியவைகளே இவைகள் எனலாம்.‡

களம்பாட்டு:

காளி சேவையின் மற்றொரு முறை 'களம்பாட்டு' இக்களம் பாட்டு 'காவு'களிலோ அல்லது அம்மனைக குடிவைத்ததாகக் கருதப்படும் இல்லங்களிலோ வைத்து மட்டுமே நடத்தலாம் என்ற விதியுண்டு காவுகள் ஏற்படுத்திய பின் அதில் 'விக்கிரகப் பிரதிஷ்டை' நடந்த பின்தான் களம்பாட்டு நிகழ்த்தலாம் என்பதனை இதனின்றும் உணர்க்க வேண்டியுள்ளது. காளியின் உருவத்தைப் பல நிறத்திலுள்ள பொடிகொண்டு நிலத்தில் வரைந்து அதனைப் பூசித்துப் பாட்டுப் பாடி வழிபடுதலையே 'களம் பாட்டு' என்பர். நீளமும் வீதியும் கணக்கிட்டு வரைந்த உருவத்தினைத்தான் களமென்பர். களம்பாட்டு நடைபெறுவது இரவிலாகும். இரவில் நடைபெறும் களம்

---

‡ மாரியம்மனை வழிபடும் முறையிலும் கெருப்பிற்கும் இடமுண்டு. Whitehead, Village Gods of S. India. P, 13.)

பாட்டிற்கு 'ஒரு உச்சப்பாட்டும்' வேண்டுமென நிச்சயித்தனர். உச்சப்பாட்டு என்பது குறுப்பு களமெழுத வேண்டிய இடத்தில் சென்று 'நந்துணி' (வீணை போன்ற ஒரு வாத்தியக் கருவி. இதனுல் கருதி மீட்டுவர்) எடுத்துப் பாடுவதாகும். பின் மாலையில் பல வர்ணப்பொடிகளால் அம்மனின் உருவத்தை எழுதியபின் 'குருப்பு' கைகழுவுவதற்காக வெளியே செல்வார். அப்போது ஒரு நம்பூதிரி வந்து களம்பூசை நடத்துவார். 'குருப்பு' திரும்பி வரும் போது பூசை நடந்து முடிந்துவிட்டது என ஒருவர் கூறுவார். இது கழிந்த பின் 'குருப்பு' பாடத் தொடங்குவார். அப்பொழுது பாடுவதுதான் 'தாருகவதம் பாட்டு' களம் எழுதாமல் இந்தப்பாட்டை மாதிரம் பாடி வழிபடுவதும் உண்டு. இது பகலில் நடைபெறும்.

களமெழுத்து:

களமெழுவது 'கல்லாற்றுக் குருப்பு' என்ற ஒரு இனத்தினரின் தொழிலாகும். இவர்களே களம்பாட்டு பாடுபவர்கள். ஐந்து நிறம் கொண்டு பல வர்ணங்கள் உண்டாக்கி தன் கைவண்ணத்தைக் காட்டுவர். கேரளத்திலுள்ள கோவில்களிலும் அரண்மனைகளிலும் உள்ள சுவர்களின் மேல் காணப்படும் ஓவியங்களின் வாயிலாக, குருப்பின் கலை ஆர்வம் பிரகாசிப்பதை உணரலாம்.

காளிக்கு மட்டுமன்றி அய்யப்பன், வேட்டைக்காரன், பாம்பு போன்ற சிறு தெய்வங்களுக்கும் குருப்பு களமெழுதுவதுண்டு.

களமெழுத அரிசிப்பொடி (வெள்ளைப்பொடி), மஞ்சள் பொடி, கறுப்புப் பொடி, சில இலைகளைச் சேர்த்துப்பொடி செய்த பச்சைப்பொடி, சிவப்புப் பொடி போன்ற பல வர்ணப் பொடிகளைத் தயார் செய்வர். விளக்கு வைத்த நேரம் களம் எழுதத் தொடங்குவர். மேற்கூறிய பொடிகளைப் பல முறையில் சேர்த்து ஏழு நிறத்திலுள்ள

பொடிகளைக் குருப்பு தயார் செய்வார். மூக்கு, கண் மார்பு போன்ற உந்தி நிற்கும் பாகத்திற்கு இவ்வளவு அரிசியும் பொடியும் போட வேண்டும் என்ற விதியும் உண்டு. ஏறக்குறைய மூன்று மணி நேரம் கழிந்ததும் களம் எழுதி முடிப்பர். காளியின் மிகப் பயங்கரமான உருவத்தையே எழுதுவர். நான்கு கைகளை உடையவளாகவும், எட்டு கைகளை உடையவளாகவும், பதினாறு கைகளை உடையவளாகவும் காளியை வரைவதுண்டு.

'முடியேற்று'

களம்பாட்டினை அடுத்த பரிணாமம் ஆகும் 'முடியேற்று நடத்துவது. இதற்கும் குருப்புதான் முக்கியமானவர். இதற்கும் களம் வரைதல் உண்டு. குருப்புகள் காவின் முன்னால் ஒரு இடத்தில் காளியின் பயங்கர உருவத்தை வரைவார்கள். மாலையில் காவுகளில் பூசை நடக்கும்போது அவர்கள் இசையினால் மக்களை மகிழ்விப்பர். பூசை முடிந்ததும் தேவியை எடுத்து எல்லோரும் காணும்படியான ஒரு இடத்தில் வைப்பார்கள். இந்த நாடகத்தின் முதல் கட்டம் 'சிவ-நாரதர சம்வாதம்' ஆகும். தாருகன் என்ற அரக்கனின் கொடுமையைப் பற்றி நாரதர் சிவனிடம் எடுத்துரைப்பார். உடனே சிவன் காளியின் மூலம் அவனை வதம் செய்வதாகக் கூறுவார். அப்போது காளி, தாருகன் வேடமிட்டு ஆட்கள் தயாராக நிற்பார்கள். தாருகன் வேடமிட்டுள்ளவன் முதலில் வேகமாகக் குதித்து வெளியே வந்து காளி வேடத்தில் உள்ளவனைத் தக்க தருணத்தில் போருக்காக அழைப்பான். போர்க்குரலைக் கேட்டு காளி வேடத்தில் உள்ளவளும் வெளியே வருவாள். பின் போர் நடைபெறும். காவைச் சுற்றி ஓடி இருவரும் போர் செய்வர். இறுதியில் காளி வேடத்தில் உள்ளவள் தாருக வேடத்தில் உள்ளவனைக் கொல்வாள். அப்போது நேரம் புலர்ந்து வரும். அங்கட்டத்தில்தான் வதம் நடைபெறுவது.

நிலத்தில் விழ்ந்துகிடக்கும் தாருகவேடத்தில் உள்ள வனின் குடல்மாலையை மற்றும் காளிவேடத்தில் உள்ளவன் இழுத்து எடுத்து காண்பிப்பது பயமுறுத்து கின்ற நிலையில் அமைகின்றது*.

முடியேற்று :

முடி—கிரீடம், ஏற்று—ஏற்றல் : சுவீகரித்தல் : முடியினைச் சுவீகரித்தில் என்பதே முடியேற்றல் என்பதன் பொருள். முடியேற்று இப்பொழுது அதிகம் நடை முறையிலிருப்பது கொச்சியிலாகும்.

தாலப்பொலி :

இச்சடங்கினைப் 'பாட்டும் தாலப்பொலியும்' என்றும் கூறுவார்கள். விழாக்காலத்திலோ மற்ற காலங் களிலோ 41 களப்பாட்டுகள் கழிந்த இறுதிநாள் ஒரு தாலப்பொலியுடன் இச்சடங்கு முடிவுபெறுவதே வழக்கம். அரிசியும், கொளுத்திய திரியும் வைக்கப் பட்டுள்ள பித்தளைத் தட்டுக்களை வரிசையாக வைப்பது இதில் முக்கியமான சடங்கு. காவிற்ற வெளியில் அதில் தூரமில்லாத இடத்தில் நிற்கும் பாலயின் கீழோ அல்லது ஆலின் கீழோ இத்தட்டுக்களை வைப்பார்கள். இச்சடங்கு பெண்களுக்கே உரியது. அந்தணர்களுக்குச் சொந்த மான காவெண்ணுல் அங்கு கோவில் பெண்கள் இச்சடங் கினைச் செய்வர். அல்லாத காவுகளில் நாயர் பெண்கள் செய்வர். தட்டுக்களை வரிசையாக வைக்கும் சடங்கு மாலை நேரத்தில் நடைபெறும். வரிசையாக வைத்துச் சிறிது நேரம் கழிந்ததும் பெண்கள் தட்டுக்களைக் கையிலேந்தி முன்னே நடக்க, வாத்திய மேளங்கள் அவர்கள் பின்னே செல்ல, காவினுள் வரிசையாகச் செல் வார்கள். காவினையும் அதன் நிர்வாகத்தினரையும்

* K. Rama Pisharodi, 'கேரளத்திலே காடுகவேதி'. Annamalai University Journal, Vol. No. 1. P. 98, 99.

பொறுத்து இச்சடங்கின் ஆடம்பரம் அமைகின்றது. தாலப்பொலி சிறப்படைய பட்டமணிந்த யானைகளும், மேளமும், வெடிகளும் இன்றியமையாதன. காவை அடைந்ததும் அதை ஒரு தடவைச் சுற்றி வருவதோடு இச்சடங்கு முடிவுபெறும். பின் காவில் 'தாயம்பக', 'குழப்பற்று', 'மத்தளப்பற்று', 'கொம்பு' போன்ற இசைப் போட்டிகள் நடைபெறும். இறுதியில் சிவலியோடு தாலப்பொலி முடியும். அதன்பின் வெளிச்சப்பாடின் அருளப்பாடு காணப்படும்.

'சிற்றுவிளக்கு'

இது தாலப்பொலி போன்றுள்ள ஒரு சடங்காகும். ஆனால் தட்டு வைப்பதில்லை. காவைச் சுற்றியும், உள்ளேயும், விசேஷமிருந்தால் அதன் முன்னேயும் விளக்குகளைக் கொளுத்தி வைப்பது இதன் முக்கிய கூறாக அமைகின்றது. இது பெரும்பாலும் ஒவ்வொருவருடைய வேண்டுதலையாகவும் கொண்டாடப்படும்.

சிலவேளைகளில் தாலப்பொலியும், சிற்று விளக்கும் சேர்ந்து ஒன்றாகவே நடைபெறும். முடிவில் வெளிச்சப் பாடு கூறும்போது இச்சடங்கினை 'இராவுரி' என்று கூறுவர். 'இருதாஉரி' அல்லது 'இருநாழிஉரி' என்பதே இதன் பொருள். 'பான', 'களம்பாட்டு' போன்ற சடங்குகளை நோக்குமிடத்து 'இராவுரி' போன்றவை சிறிய சடங்குகளாக அமைகின்றன.

கீழ்ச்சாதியினர் இடையில் உள்ள வழக்கங்கள்:

மேற்கூறிய சடங்குகளெல்லாம் நம்பூதிரி, நாயன்மார்களுக்கிடையே காணப்படும் வழக்கங்கள். இனி தியன், மண்ணான், பானன் போன்றவர்களுக்கிடையேயும் சில வழக்கங்கள் காணப்படுகின்றன. இதில் முக்கியமான 'கர்மி' மண்ணானாகும். கேரள சமுதாயத்தில் பலவகையிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள ஒரு மனிதனாக

இவன் கருதப்படுகின்றான். உயர்ந்த சாதியினர் இவனைத் தீண்டல் வர்க்கத்தினன் என்பர். மண்ணான் என்பது வெண்ணான் என்பதன் திரிபே என்றும் சிலர் கூறுவர்.

மண்ணான் வழிபடும் காளி 'கரிங்காளி' ஆகும். கரிங்காளி, கொடுங்காளி, கண்டோம் காளி எனக் காளிக்கு அல்லது பத்திரகாளிக்குப் பல பெயர்கள் இருந்தாலும் இத்தகைய பயங்கரமான தெய்வங்களுக்கு உரிமையாளன் மண்ணானாகும். 'மண்ணார்தோற்றம்' என்ற ஒரு பாட்டும் அவர்களுக்கு உண்டு.

வெள்ளாட்டும் திர :

மண்ணான் நடத்தும் சடங்குகளில் முக்கியமானது 'வெள்ளாட்டும் திர' என்னும் சடங்காகும். கொதிக்கும் சாந்தை மேலே விடுவதுதான் இதில் முக்கியச் சடங்கு. அதற்கு முன்பாகப் பூசை நடைபெறும். அப்போது மண்ணான் ஆவேசம் மேலிட, சாந்தினைத் தன் மீது ஊற்றிக் கொள்வான். கூடு உடம்பில்படும்போது பயங்கரமாக அவன் அட்டகாசம் செய்வான், அதனுடன் பயங்கரமாகச் சிரிப்பான். அதைக் கேட்டதும் அந்த சாதியைச் சேர்ந்த எல்லோருக்கும் ஆவேசம் வரும் என்பது நம்பிக்கை. இந்நம்பிக்கையிலிருந்துதான் 'ஆட்டு கேட்ட மண்ணான்' 'ஊட்டு கேட்ட பட்டரு' போன்ற பழமொழிகள் பிறந்தன என எண்ணலும் தகும்.

'திர' கட்டி ஆடுவதும் இதன் ஒரு சடங்காகும். எனவேதான் 'வெள்ளாட்டும் திர' என்ற பெயர் பெற்றது. 'திர' என்பது அரை வட்ட வடிவத்தில் நல்ல மரப்பலகை கொண்டு செய்து தலையில் வைக்கும் ஒரு பொருளாகும். இதனைத் தலையில் வைத்து மண்ணான் ஆடுவான். காவில் 'பூரவுய' 'தாலப்பொலியும்' உள்ள நாட்களில் மண்ணான் திர கட்டி, முதலில் சுரவினை வணங்கிவிட்டுப் பின் வீடு தோறும் சென்று குளித்துச் செல்வது வழக்கம். நாயர்

வீடுகளில் இவன் திர கட்டி வரும்போது 'விளக்கும்' பறை 'நிரச்சுவைப்பும் வைத்து வரவேற்பார்கள். அவன் குளித்துவிட்டுப் போகும்பொழுது அரிசியை எறிந்து விட்டுப் போவான். அச்சமயம் அவன் சன்னே அம்மனின் பிரதிநிதியாக நினைத்த நிலையில்தான் திர கெட்டுவது, ஆடுவது போன்ற செயல்களைச் செய்கின்றன எனலாம்.

மன்னன் பூதன் என்ற மற்றொரு வேடமும் பூணுதல் வழக்கம். பூதநாதன் சிவனுக் கருதப்படுகிறன். சிவனது மகளாகிய 'காளி' 'தாருக யுத்தம்' செய்யப் புறப்படும் போது பூதங்களையும் அவைகளின் தலைவனுகிய நந்தியை யும் அவளுக்குத் துணையாக சிவன் அனுப்பிவைத்ததாக பாடல்களில் காணப்படுகிறது. சிவனின் சக்தியாகச் காளி கருதப்பட்ட இங்கு சிவன் மகளாகக் காளியைக் கூறுவது எண்ணத்தக்கது.

இக்கதையினை அடிப்படையாக வைத்துத்தான் 'பூதன்' கட்டுதல் தோன்றியிருக்கவேண்டும். ஒரு மர மூகரின்மேல் அரைவட்ட வடிவத்தில் மயிற்பீலிகளை மடக்கிக் கோர்த்த ஒரு உருவமாக பூதன் அமைக்கின்றன் நாக்கினைக் கடித்த வண்ணம் வயந்து நிற்கும் சாயல், முகத்தில் படிந்திருக்கும். உடல் முழுவதையும் பல நிறத் துணிகள் கொண்டு மூடியிருப்பார்கள். இடது கையில் ஒரு சாட்டையும் வலது கையில் ஒரு மரக்கம்பும் பூதன் வைத்திருப்பான். 'திர'யுடன் 'பூதனும்' வேண்டும் என்பது வழக்கம். 'திர'க்கும் பூதனுக்கும் காலில் சிலம்பு உண்டு. இருவருடையவும் இடுப்பிற்குக் கீழே காணப் படும் ஆடை அவர்கள் ஆடுவதற்கு ஏற்றவாறு அமைந் திருக்கும்.

பூதனுடைய வருகையைக் குறித்தே பூரக்காலத்தைக் கணிப்பார்கள். 'திர' இறுதி நாளில்தான் கொண்டாடப் படும். பூரக்காலம் வந்ததும், நாட்டு மக்கள் இவர்களின் வரவினையும் விளையாட்டினையும் ஒரு பெரிய அதிசயமாகக்

கருதுவார்கள். பூதன் விளையாட்டிற்குரிய இசைக்கருவி துடி. 'திர'க்கு 'பற' (கொட்டு) முக்கியக் கலியாக அமைவது கருததீதக்கது.

'பாணன் பூதம்' என்ற வேடம் இதன் வேறொரு வகை. இவ்வகைப் பூதத்தின் முகம் மறைக்கப்படுவதில்லை. இப்பூதத்துடன் ஒரு 'தெக்கதீதி' உண்டு. அவன் நன்முக நடனமாடுபவள். இவள் 'பாங்கலி' என்ற விளையாட்டினில் பங்கு பெறுபவள். இவளுடன் சில வேளைகளில் ஒரு 'தெக்கனையும்' காணலாம். இவர்களுடைய ஆட்டமும், தோற்றமும், நடிப்பும் சிருங்கார மயமானதாகக் காணப்படுகின்றன.

'தெய்யாட்டம்':

வட கேரளத்தில் 'சாமுண்டி தெய்யாட்டு' என்ற ஒரு சடங்கு உண்டு. அதுவும் காளியின் தொடர்புடையதாகும். தென் கேரளத்துதி 'திர'யைப் போன்ற ஒரு பெரிய வேடமாகும் 'சாமுண்டி'. இவ்வேடம் தரிப்பவன் 'தியர்' என்பவனுகும். இவர்களுக்கு 'நெய்யம்பாடி' என்ற வேறு பெயரும் உண்டு. பல நிலைகளாய் கட்டிய கனமுடைய ஒரு கூடம் அணிந்து, சாமுண்டி மிக பயங்கரமாக ஆடுவது, காண்பவரை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

பாணத்தோற்றம் அல்லது காளி நாடகம்:

"துணை வாழ்த்து"

1. கணபதி பகவானே, நன்ம ஞானெந்திரப்பன்.
துணபெடுக சிவபுத்திராயெ, தூய பால்சோறு தந்தேன்
பணமுடையரதன்மேல் பள்ளிகொள்ளுங்க மாயவனெ!
இணயடி தொழுதிரந்தேன் இன்பமாய் நல்கெனிக்கு
கலமதி சூடுமரன் மாமலப்பெண்ணுமாயி
இணைபிரியாதெ சேந்தார்ந்த கானலில் போயி
... ... பிறந்துண்டாய

கணபதி யென்னும் பின்னை நிர ... ...
... ...
... ... நானயாய் வேசம் பூண்டு
அரசனுடன் உமையாள் தானும் அங்நிரம பிடியுமாயி
ஆதாரல் வனம் புகழ்ந்து கிரீடிச்சுண்டாய்
அழகேறும் விநாயகன் தான்
... ...
அந்தர மெங்நீப்பந்தல் தன்னிலகம் பு-ழ்ந்த
சிந்தையில் மலமசாஸ்திரம் பந்தியிலுரசெ... ... ...
... ... ங்குலவாகேணம் அந்தரியாதெ!
ஆதியுமந்தவும் தோந்நி ... ... வந்த மாலோகர் மும்பின்
நிந்தங்குத்பவிச்சுள்ள தேவி! நால்வேதப்—
பொருளே, தாயே, நாவினமருந்து தனில்
நாழிக ... ... சரஸ்வதி துணைக்கெனிக்கு.

2. ஆதியே அகிலநாதே, அரிபொருளாய தேவி,
வேதியே, விமலை, வித்யே விண்ணவர் தோற்றும் பெண்ணே
சோதி தானுதிச்சபோலெ! சுந்தரத்தோடும் கூடி
நீதியில் கதயுரப்பன் நீ தெளிஞ்ளுருள்க வாளி!

வாழ்த்து

3. அலகடல் நடுவில் ஆன்மாரனந்தனும் பள்ளிதல்பே
பரிசொடு மருவிடுந்த ஆனந்தரூபன் தன்றே
வயருடெ நடுவே நேரெ முளச்செழும் கமலப்பூச்சில்
பரிசொடு குடிகொண்டீடுய சிருஷ்டி கர்த்தாவு தன்றெ
பிரியதமயதாய தேவி சங்கீத சாகித்தியங்கள்க் —
கதிபதியாய மாயெ, அகிலமாதாவெ, போற்றி!
உதகியிங்நொரிக்கல் என்றெ தளர்ந்தெழும் நாவுதன்மேல்
தளிரடி மெல்லவச்சு கூத்தாடுக சரஸ்வதி நீய்.

4. காலியும்தட்வி மேச்சு குழலூதி வனங்கள் தோறும்
நீனவே களிச்சுமேவும் நீலககார் வர்ணு போற்றி,
கால்மே எழுந்தள்ளேணம் மலசாத்திர த்திணிப்போள்
மாலோகர் மும்பிலென்னேத் தாங்கேணம் தம்புரானே,
கண்ணனெ, காலக்கண்ணு, கரிமுகில் நிறமொத்தோனே,
மண்ணினெ யளந்த மாயா, மாயகள் வெல்லுவோனெ,

புண்ணீயா, புஷ்கரத்தில் புருஷனெப் பெற்ற மூர்த்தி,
நண்ணிய கதகள் சொல்வான் நமுக்குடன் துணைக்கிரிக்கு
கிருஷ்ணரூயவதரிச்சு கிருபயுள்ள ஜனத்தையெல்லாம்
விருஷ்ணீ வம்சாதி தீர்ந்து ரட்சை செய்திடும் வீரா!
ஜிஷ்ணு சாரதியாயிட்டு கௌரவர் குலம் முடிக்கும்
விஷ்ணு கைவல்ய மூர்த்தி ஸ்ரீ கிருஷ்ணன் துணைக்கெனிக்கு)
உலகில் மகிமபொங்கும் மாங்கோட்டுகாவு தன்னில்
பரிசொடு மருவீடும் தேவி ஸ்ரீ பத்திரகாளி!
கலுஷத களவாரூயிட்டலிவெழும் பந்தல் தன்னில்
பத தளிர் கும்பிடுந்தே னம்பிகே தம்புராட்டி!
அவனியிலுரபொங்கும் திவ்ய மந்தாத்ர சைலே
மருவிய மம காதே தேவி ஸ்ரீ பத்திரகாளி
பததளிர் கமலம் ஞான் கைதொழுந்நேனிதேற்றம்
திரமெழுகிய பானக்கேகு நீ தம்புராட்டி
(காலாந்தகன் கலிமலாபஹனிந்து சூடன்
காருண்யவாரி நிதியுக்ரகனுமா பதீசன்
காமத்விஷம் திரணயனம் திரஷெளஹவந்தியம்
வந்தே ஸமஸ்த புவனேஸ்வர பிரமேயம்).
கல்லரூனயாயி நலம்பு மா பிடியுமாயி
மெல்லவெ வனத்தில் புக்கு வேகத்தில் களிச்சகாலம்
சொல்லடனூன போலெ சொக்கனச் சுண்டும் கொம்பும்
கன்னிககள் புகழும் வண்ணம் கணபதி பிறந்தானந்தே,
காளி நாடகம் கதயுரப்பான் கண்டர்மகன் கணபதியும்
துணைக்கெனிக்கு
ஹரியெங்ஙொரெழுத்து வாழ்க, என் குருநாதன் வாழ்க,
கணபதி வாணிமாதும் அறுமுகன் தானும் வாழ்க,
பால்கடல்மங்க வாழ்க, பார்வதீ தேவி வாழ்க,
பானக்கிங்கடியனிட்ட நன்மணிப் பந்தல் வாழ்க,
பந்தல்கயிறு பாவி பலதரம் பட்டுக்கொண்டு
சந்தமராய் விதானிச்சேற்றம் ஓலயும் நிரக்கெதூக்கி
பூக்கலமால நல்ல பூமலர் செம்பழுக்க
கதளியும், கரிம்பு, தேங்க, மாந்தளிர், மாதளங்கா
எங்ஙிவ பலதும் கொண்டு ஹேளமாயலங்கரிச்ச
பந்தலில் நாட்டிதெரு கல்பக விருட்சம் வாழ்க;
அடிகேறும் மணிவிளக்கும் ஸ்ரீமகாதேவன் வாழ்க,

பாஷாச்சரியும் நெல்லும் விஷ்ணுவும் விதியும் வாழ்க.
அழகினோர் ரங்குதன்மேல் அமரவேதியரும் வாழ்க,
கிழக்கு பாகத்து வெச்ச பொன்மணி பீடம் வாழ்க,
பொன்மணி பீடத்தின்மேல் இருந்தெளுந்த தேவி
மன்மத வைரிதன்றெ நன்மகளாய காளி
நான்கு வேதத்தின் நடுவேபோயொரு நாராய கூம்பில்
களிச்சருளும் (வாக்கும்) களிச்சாத்தனும் வாழ்க,

பானத்தோற்றம் :-

யந்தல் அலங்காரம்:

ஆதரவோடு லோகாலங்காரிச்சீடும் - பந்தக் காலறுபத்திநலில்
கருதி நாலகமெ கொண்டு - கோணிலேடெழுக கொட்டு
கோர்த்துடன் கயறுபாகி - சூரியனுதிக்கும் முமபெ
நல்ல நாரிமாரடிச்சு நீக்கி - நலமெழும் அவனிதன்னில்
சாணகநீர் தெளிசசு - சமாயி மெழுகிப் பின்னே
தாரிரத்திட்டு வந்திச்சிவிடெ - நின் திருவடிகீழ் ஸ்துதிச்
சிடுந்தென்
எந்தொண்ட சிற்றூர்க்காவண்ட கண்டேங் காளி -
ஸ்ரீ பாதம் வாழ்க தெய்வமே -
இந்திர மல மேலுண்டொரு - பாலகில்க்குங்ங தென்னூன்
ஆதி ஸ்ரீ மகாகணபதி - அப்பால வெட்டிக்கெண்டு போந்து
சிலபொடு சிறுப்பம் குத்தி - சிதறின நடு முற்றத்து
கொடியும கயறும் நீக்கி - வரங்கயறும் நீககி
ஓங்கெந்தும் குழிகுழிச்சு - புத்திரம் போக எந்து
நெல்லேடரியுமிட்டு — ஜலகங்க புஷ்பதூப —
தீபங்கள் கொண்டலங்கரிச்சு — நாட்டினூர் பாலதன்னை
ஆகாசாதிமலயர் தானுமெ தெய்வமே —
பாகின விதானத்திங்கல் — பணிகளும் தீர்ந்து மேன்மேல்
சேருமாருற்ற கொம்பு — செந்தளிரப்பட்டும் மற்றும்
சேலகள் பளுங்குசோப — எழுதின பலவும் கொண்டு
விதானவுமொருக்கி — நல்தூண் பொதிஞ்சு
கல்படியும் வெச்சு — நேர்துலாம் கழிகள் சோப
அருளின விதானத்திங்கல் — குருத்தோல நிரக்கெத்தூக்கி
குலுமங்கள் பலதும் நன்னாய் — வெளுத்த வெற்றிலையும்
பழுக்கா

மாந்தளிரரையால் தூக்கி — தளுர்த்த பூக்குலையும் மால
தாமரப்பூவுமேன்மேல் — நிறத்தொடு பவிழத்தூம்மேல்
நேர்முத்து மாலதூக்கி — கருத்த நெஞ்சமரி வெஞ்சமரி
கண்ணுடிக்குப்பி நிரப்பிஞெடலங்கரிச்சிட்டி தமானபந்தல்தன்
கிள கழிப்பான் பாராதெ எழுந்தள்ளம்ம!
கால்சிலம்பொலியிளக்கி — சுரகண்டர் மகளெ! போற்றி!
அருளின விதானத்திங்தல் — வெளுத்தொரு விளக்கு தேச்சு
வெளிச்செண்ணை நிரெய வீழ்த்தி — அலக்கிய சேல கீறி
அழகிய திரியுமிட்டு — ஆயிரம் கதிர்கள் போலெ
எத்தறயுமானந்த நல் — விளக்கும் விளக்குபோல்
விளங்குமாறு விநாயாகனு — அழுது செய்யுவான்
பரிப்பிஞேட்டனமப்பம் — பதவியில் இளநீர் தேனும்
வறுத்தரி பயறும் எள்ளும் — மாம்பழம் எந்திவயெல்லாம்
மதுரத்தால் பூமலரருந்தி — ஹிருதயத்தோடு இச்சிச்ச
தெல்லாம்.

கணேசன் தானும் வசிக்கு — இப்பந்தல்கீழ் வரவருளீடுமாரெ
ஆதிகுறமகனெ - ஆனந்தத் தேன் கடலெ,
சோதி மணிவிளக்கே - சோமக்கால் முதலியம்மெ
வேதாந்த புராணமே! - புராணமா எந்நூம் மலர்ப்பெண்ணெ!
உதகிரியெந்நும் - கொண்டருவிஞுக்டையையும் பூக்குலையும்
பொன்மணியும் பூங்காவும் - செஞ்சரவும் சரக்கோலும்
கண்ணுடியும் சுருளும் பிடித்த - கண்ணுய வேந்தனுடெ
செஞ்சோலக்குயில் கணக்கெ - சிலம்பொலி புலம்ப பாடி
பூஞ்சாலக் குறத்தி தெய்வம் - புனந்தூடான் விளித்தாரத்தெ
மஞ்சப் பூவரியும் - சாந்தும் மணியும் திரியும்
புதுமுறவும் முந்ந மெந்திய - திருவாளும் மூலம்தங்நெ
மறவாத மஞ்ஞன தட்டி - முகமெழுகி
மாரத்து ரண்டு முலயுமேத்தி - குந்நியூர்க் குமரன்; சாந்தன்
சூரும்பனயூர் பள்ளிக் கண்டன் - மற்றும மூவர் மலயர் வந்து
அணிவிழல் பந்தலிட்டு - பந்தலில் பாவிரிச்சு
கெல்லனெப் பரநிரத்தி- கிழக்கனெ தாளம் தாழ்த்தி
அல்லல் கெடரும் பிணியெத் - தீர்ப்பானும், வேர்ப்பானும்
வேர்த்தோதி தெளியிபபானும் - மந்திர குலசலமோது
வானும்

புகழ்ந்து ஒரு ஆதிநாத மகாபாரத மலங் குறத்தி தெய்வமே.
வரிக நீலமாஞ்சேரி - அமரபுரத்தெட்டு குடி
வெள்ளாளர் வாழ்க தெய்வமே! - என் மந்த்ரசால வாழ்க
முக்தி பிறந்தான் - மூவஞ்செரி தான் பிறந்தான்
மாவண்டிக்காமகிள்ளி - குந்தத்திர வீசிங்கன் வெட்டன்
கோதள் நாலில்லத்து பள்ளிமலயரும் வம்பும் தேரும்
தேர்தானவும் வாழ்க தெய்வமே!
வெள்ளித்தேர் பிடிச்ச பொன்னும் தேரோடணக்ச
சவரி யோடு சவரிபூட்டி - வீரகாளமூதி
எங்கிப் பிரகாரமாயிரிக்குந்தோரு பூமிதேவியுடெ
ஆதியந்தத்தெச் சொல்லி குற்றம் தீர்த்து குணத்தை
நெஞ்சை பத்திரம் சரக்கோலாலெ பானயும்
கடத்திவெச்சு குத்திரம் கண்டெடுத்து குற்றமற்றிருந்த காலம்
மருதகாயிலேயும் வில்லி சில்லியோடரசர் மும்பில்
அனலொடு புனலுமாடி - வெள்ள நெல்லொலிகள் சார்த்தி
தேவாரம் நியதம் வெண்ணீரருப்பில் பரிகாரம் செய்து
எழுவர் சேகவர் ஒரும்படத் திரிகொழுத்தி
குருதியும் உருளச்சோரும் - சோபயில் துள்ளத் துள்ளத்
திக தல தெக்குகாட்டி - தெக்கு தேவதாய்க்கு வேண்டும்
திரமொடு வெலிகொடுப்பான் - பாடின மலயரெல்லாம்
முரசொடு துடியரந்து - மூவேந்திக் காலமாயி
கலங்கவி வீரர் வந்து - வணங்கிக்கொண்டு காதத்தால்
நீதிவட்டம் அடிநிர வெளுக்கச்சென்தித் தாழயும்
நெழுகும் தளிர், மணியரயால் கொம்பு
மணிச்சுண்ட காஞ்ஞிரத் தோவெங்கில
சுழலெக்குத்தி இந்திரன் நூல் வளர்த்து
கொன்னப்பூ மாலதூக்கி - குருத்தோல கவுங்கின் பூவு
கெங்கன கனகப்பால - செப்பொடு மணிவிளக்கு
பய்யாட பரநிரப்பு - குத்துவாள் கூவாக்கோழி
ஒரு கவுங்கின் பூக்குலயும் - பொன்மணியும் பூங்காவும்
செஞ்சரவும் சாக்கோலுப் - கண்ணுடிச் சுருளும்
கண்ணுய வேந்தருட செஞ்சோலக்குயில் கணக்கெ
சிலம்பொலி புலம்பெ பாடி பூஞ்சோலக் குறத்தி தெய்வம்
புனந்தூடன் விளித்தாசத்தை,

தாருகன் தோற்றம் :

நிறங்கள் :

செம்பொன்னும் புரவடிவிரலோ கைதொழுந்தேன்,
சேவடித்தளிரோ கைதா செப்புதொழுந்தேன்,
தும்பிக்கை ஒத்த திருத்துட தொழுந்தேன்,
துகில் பட்டினிடையில் பொன்னுடத்தாந்து தொழுந்தேன்,
அரயாலிங்கிலயொத்து ஒருதரம் கைதொழுந்தேன்,
அலர்சரனெழியுந்தர சுழிவோ கைதொழுந்தேன்,
மேருக்குன்னினை வெண்ணு திருமல தொழுந்தேன்,
மேளம் தாலிகள் மாரில் மணிமாலா தொழுந்தேன்,
திருக்கையியிளகுந்த வனேஞ்ஞு வாள் தொழுந்தேன,
தெளிவில் வட்டக சூலம் தலயோ கைதொழுந்தேன்,
குரலாரும் இளம்பாம்பு களகண்டம் தொழுந்தேன்,
குழ காதிலணியும் குண்டலம் கம்பி தொழுந்தேன்,
வட்டத்திங்கனை வென்ன திருமுகம் தொழுந்தேன்,
வனேஞ்ஞன்ளோரெகிரோ பல்லொடு நாவு தொழுந்தேன்,
வட்டக்கண்ணெடு நெற்றி கனல்கண்ணு தொழுந்தேன்
மழக்கரிங்கிருளொத்த திருமுடி தொழுந்தேன்
அடியிந்து முடியோளம் உடல்கண்டு தொருந்தேன்
அழகோடெ திருமாந்தாம் குன்னிலம்மே! தொழுந்தேன்.
காரின் நிறமொத்த திருவடி தொழுந்தேன்,
கனல் கண்ணும் திருநெற்றி திலகம் கைதொழுந்தேன்,
விலசுந்த மிழியோ நாளிக கவிள் தொழுந்தேன்,
தேன்சொரியதரம் பல்லொடு நாவு தொழுந்தேன்,
வாரண குழ, இவரண்டும் தொழுந்தேன்,
மானிச்சு குரலாரமரவத்தெ தொழுந்தேன்,
தாருகன் தலவெட்டி பிடிச்ச கை தொழுந்தேன,
தங்கும் நின் கரவாள் வட்டக சூலம தொழுந்தேன்,
மாரிடம் வளர் தாலி மணிமால தொழுந்தேன்,
மஹா மேருவின வெந்த திருமுல தொழுந்தேன்,
நேரெ ஆலில யொத்தோருதர கைதொழுந்தேன்,
நெரிஞ்ஞ பூந்துகில் பட்டுடயாட தெரழுந்தேன்,
வாரணக்கரம் வெந்த திருத்துட தொழுந்தேன்,
ஸ்ரீ சப்பேடிடஞ்ஞீடும் முழங்கால் கை தொழுந்தேன்

கேதகி மலரொத்த கணங்கால் கை தொழுந்தேன்,
கேவலம் புரவடி வுரல்நகம் தொழுந்தேன்,
திருமுடி முதலாவிட்டடியோளம் தொழுந்தேன்,
நிறமொட திருமாந்தாம் குன்னிலம்மே! தெழுந்தேன்.

சாய்ப்பு — தானம்:

காரியார்முகில் உருவோ முடியவள்,
கனலெரி கண்ணு உருட்டி மிழிப்பவள்,
வலியே தானவன் பலத்தை குறைப்பவள்,
வரிக யெங்கல்லோ வளரெ விளிப்பவள்,
தரணி மேவுந்த பொருதோ ரசுரன்றெ
தலையறுத்துப் போயி கைலாசம் புக்கவள்,
சரஸமாயி நாடொக்கங் கிரசமாயி புக்கவள்,
திருமாந்தாம் குன்னிலோ வாழுந்தம்பிகே.

களத்தில் பாடும் பாட்டுகள்:

1. அமரர்கள் பலரும் அசுரருமிணங்கி அமிர்த கடஞ்ஞுகாலம்
அல கடல் தன்னில் அந்று பிறந்த ஹரன் மகளாயதோ! நீ!

2. உரகங்ஙளணியும் ஹரனுடெ திருமெய் உடலொரு பாதிகூர்
உடமயில் பகுத்தங்ஙிடம கொண்டழகா உதகமாயி
[கொண்டதோ நீ

3. இருபதும் அஞ்சும் ஒரு பதினூறு ஹிதமொட பத்துமெல்லாம்
இடகலருந்த லிபிமய ரூபமுடயோரு சக்தியோ! நீ!

4. புதுமலர் இளதளிர்நாதி கலயரபம் பூரிகுழல் தடவன் தாயெ
புகழெ தொழுந்தேன் திருமாந்தாம் குன்னிலமர்ந்ஙின
மூலதாயே!

5. அந்தக வைரி பண்டலர் பாணனெ கண்ணிலாக்கி நீக்கி,
அரனுடெயங்கி திங்கள் கனல் கண்ணிலழ கொண்டாய
[பாயே!

6. சந்தமேறும் கரத்திலுரத்த வாளொடெ சூலமேந்தி.
சண்டிகா மண்டலதிலமர்ந்த சோர பயங்கரியெ,

7. பங்ஙியோடெ பெரும்பட கூளிபேயோட பூதமெல்லாம்,
பாபிகளெ குலத்தோடெ வேரறுப்பவளெ! தொழுந்தேன்.

8. மந்திரவாசா கேள்பொருளாய திருமாந்தாம் குன்னில்வாழும்
நூலமொடுரத்த பைரவி நின் கமல்கிதா கைதொழுந்தேன்.

திரும்:

1 இஷ்டமாயி காட்டான கூதிலிருக்கவள் - இளகின திருமத்ய
பெத்துபோயி வேதாள மேரவள்.

2, கஷ்டிச்ச தாருகன்றெ தல பெய்தவன் - கடுங்கிணம்
கொண்டங்குடனே கூளிகள் ஊணுய் பகுப்பவள்,

3. மாற்றலரவெட்டி துண்டமிடுங்கவன் - மறுதலயோடங்குலர்தல
பொய்தேன் வாள் பிடிபெட்டவள்

4. இஷ்டமாயி வாமென்றெ திருமாந்தாம் குன்னிலோ-பலகுணங்
களோடிணங்கி வாழுங்க பைரவி! கூப்புந்தேன்

மட்டுமாரி.

5. அரநெரிக் கண்ணில் வந்து பிறந்து தோன்றின சாண்டிகே!
நீ!
அகில சரங்களுண்டு போய்வான் அரஞ்ரு சக்தியோ? நீ!

6. வளர்ந்திட மெல்லெ தள்ளி வருங்க மங்கல்ய - கங்கயோ நீ!
மதிலுள்ளியில் மண்டலெந்தடவினு மாமவமங்கயோ நீ!

7. ஒருவள் நியல்லே சும்பனெ கொங்க நீலகராளியோ? நீ!
மலர்மகளோ! பொன்மாலயணிஞ்ரு நீலவட்டாரியோ? நீ!

8. அரமகள் வந்து குடிகொள்ளுவோரு திருமாந்தாம் குன்னில்
வாழும் - கழலினை சேர்த்து காத்தருளேணம் அம்பிகே!
மூலதாயே!

பந்துவராளி:

வரிக தாருக! பொருவதிஞயி
வளரெ வாபேசி யருளியம்மதான்.
'வரபலம் கொண்டு மதிச்ச நின்னுடெ
வம்ச மொக்கவெ முடிப்ப நின்று ஞான்.
குரள பேசாதெ குறுகை நில்லெடா
கூளறுப்பேன் ஞான் குரச்சு தாரும.
கயர்த்த தாருகன் சிரசறுத்தம்ம
திருமாந்தாம் குன்னிலோ வாழுமெண்ணம்பிகே
ஆதியும் அந்தவும் வேதவுமாமிவள்
ஆதியாயி வேதத்தின் காதலொழிப்பவள்.

சூதன பண்டு யெங்தோரு கண்ணில் பிறந்தவள்
சூலய கபாலங்கள் கையில் தரிப்பவள்,
மாதேர்கும் மன்மதவீரனும் நல்லோர்க்கும்
மானிக்கும் வல்லபன் சாத்தானும் சேர்வாடம்
ஆதியாயி நில்க்குங்ந திருமாந்தாம் ' குன்னிலோ
ஆடும் கனல்கண்ணி! காத்து கொள்ளேணமே!

அஸ்தி க்கொத்தணயும் நிருமேனிமேல்
ஆறும் அம்பிளி சூடின சங்கார!
நிறுத்தமாடிய நேரம் கனல் கண்ணில்
நிர்மலமாயி ஜனிச்சுள்ள காளி!
பத்து திக்கிலும் ஒத்திள கொண்டவன்
மாரு திக்கு பயங்கரி சேர்வாடம்,
அத்தல் தீர்த்து அசுரன் தலகொண்டவள்

திருமாந்தாம் குன்னிலோ வாழுமென்னம்பிகே!
காதிலான சிம்ஹமிட்ட காளிதன்னெ
அடிதொழுவான் போகுங்நப்போள்
தாருகனெ கொல்லுவாஞயி செங்வாறு
தாருகவதமெங்ந சொல்லி — பாரிவிங்ஙினெ பாடமல்லயோ!
குங்நோடொத்தொரு கொங்க மாரெல்லாம்
சுந்தர ஸ்ரீ கைலாசமே !!

வெளிச்சப்பாடின் வலம் வரும்போதுள்ள பாடல் ;

அளவில்லாதெழும் அரன் திருநன்மகள்
அறுபேர்க்குமினெ அரியொரு பைரவி!
குளிர வானவர் ஸ்துதி செய்தொரத்புதம
குமர கூளிமார் படக்கு மிதம சொல்லாம்
இளகியோடிப் போயேதிர்த்தோ ரசுரனே
இதமோடெ வெட்டி சிரயெயறுப்பவன்.
வளர வான் பீடம் கொடுக்குமெங்நம்மதான்

திருமாந்தாம் குன்னிலோ வாழுமென்னம்பிகே!
புரிசட தன்னில் அம்பிளிசூடும் அந்தக வைரிதன்றெ
ளரிபொரி அங்கிகுத்தின கண்ணிலம்பிஞெடு உத்பவிச்சு
தெளு தெளே மின்னும் வாள்முனதுள்ளி வைரவு
மிட்டணஞ்ஞா
சுரிபுவாய தாருகனெ பிடிச்சு கழுத்தறுத்து
குடர் நின்ற மால மாரிலணிஞ்ஞு பூத கணங்ஙளோடும்,
துடு துடெ நல்ல செங்குறுதி புனர் குடிச்சாடுமம்ம
களி களி லாண்ட காவு புகழ்ந்த திருமாந்தம் குன்னில்வாழும்
கழலினை சேர்த்து காத்தருளேணம் அம்பிகே! மூலதாயே!

பயன்பட்ட நூற்கள்

[*ENGLISH*]

/Ananda Coomaraswami — 'Introduction to India and Indonesian Art. P. 2, 74.

Anandakrishna Iyer.L.K.— 'Lectures on Ethnography P.21.

Achyuta menon, C — Cochin State Manual, P. 29

Barnett (Dr.) L. D. — Hindu Gods and Heroes, P.93.

Do — Indian Antiquities, P. 37.

Calverton, Y. F. — Sex expression Literature, P. 51.

Crooke — Folklore of N. India, P. 73.

Dikshitar. K. R. R. — Silappadikaram Lalita Cult, P. 105.

Elmore — Dravidian Gods in Modern *Hinduism, P. 75.*

Frazer, G. — Golden Bough, Vol I. PL IV. P. 43.

Fawcett — Nayars of Malabar, P. 16, 40.

Fergusson, J. — *Tree and Serpent worship P. 7,8.*

Gilbert Murray — Four stages of Greek religion, P. 93.

Gundert (Dr.) — Malayalam English Dictinary, P. 116.

Howard Moore, J. — Savage Survivals, P. 47, 48.

Long hurst — Annual Report of the Archeologial Dept.

— Southern circle, 1915-16, P-19.

Marshall, Sir John — Introduction to Mohenjo-Daro or Indus civilisation, P. 85.

Menon, C. A. — Ancient Kerala P. 55.
Do. — C. R. Reddy Commemoration Volume, P. 24.
Padmanabha Menon, K. P. — History of Kerala. P. 105.
Payne, E. A. — Saktas, P. 2, 3, 6, 92, 107.
Sister Nivedita — Kali, the Mother, P. 75.
Thomas (Dr) P. J. — Raman Trade centres on the Malabar coast, P. 105.
Thompson & Spencer — Introduction to Bengali Religious Lyrics, Sakta, P. 73,93.
Vendryes — Language, Introduction, P. 99.
Vivekananda — Lectures Vol. VI., P. 48.
Whitehead — Village Gods of S. India, P. 57, 75, 86.
Woodroff, John — Sakti & Sakta, P. 3, 96.

மலையாளம் — தமிழ்

அச்சுதமேனோன், சி. — வடக்கன் பாட்டுகள், P. 34.
அச்சுதமேனோன் சி. — கேரளத்தில் காளி வழிபாடு.
இளங்கோவடிகள் — சிலப்பதிகாரம், P. 20.
எழுத்தச்சன் — மகாபாரதம், P. 55.
அத்யாத்மராமாயணம், P. 117.
கல்லூர் நம்பூதிரிப்பாடு — பத்ரோல்பத்தி, P. 5, 100, 101.
குஞ்சன் நம்பியார் — பூரம் கதைகள், P. 6.
குஞ்ஞிராம மேனோன் சி. — இதிகாச கதைகள், P. 27.
கோவிந்தப்பிள்ளை சி. பி. — மலையாளத்தில் பழைய பாட்டுகள் P. 63, 104, 105.

சட்டம்பி சுவாமிகள் — பிராசீன கேரளம் P. 27.

செறுச்சேரி — கிருஷ்ணன் கதை, P. 7.

திருத்தக்கத் தேவர் — சிந்தாமணி, P. 20.

நாராயணன் நாயர், பி. — சிலப்பதிகாரம், P. 106.

பரமேஸ்வரன் மூஸ்ஸது — பரமேஸ்வரி, P. 5.

மீனாட்சி அம்ம, டி. ஐ. — சௌந்தர்ய லஹரி வியாக்யானம், P. 94, 95.

ராமபிஷாரோடி, கெ. — கேரளத்தில் நாடகவேதி, P. 61.

ராமன் மேனோன், கெ. — தேவி புராணம், P. 97.

சங்கராச்சாரியார் — சௌந்தர்யலஹரி, P. 3.

சங்குண்ணி,
கொட்டாரத்தில் — ஐதிஹ்யமால, பாகம் VIII, P. 28. 90

சாமு மேனோன், சி. வி. — தேவி பாகவதம், P. 23, 107.

கண்ணகி பாட்டு.

கேரளோல் பத்தி.

சோற்றுணிக்கர க்ஷேத்திரம்.

தாருகன் தோற்றம்.

தாருக வதம்.

தேவி மகாத்மியம்.

பரசுராம கல்பம்.

பிராதானிக ரஹஸ்யம்.

வேதாள சரிதம்.

பகுதி இரண்டு

10

சங்க இலக்கியத்தில் சக்தி

நிலப் பாகுபாட்டின் வழிக் கொற்றவை:

தொல்காப்பியர் ஐவகை நிலங்களாக் கூறும்பொழுது ஐவகை நிலத்தில் ஒன்றுன பாலையென்பதையும் சுட்டிக் காட்டிச் செல்கின்றார் என்பதை,

> " நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
> படுதிரை வையம் பாத்தியுள் பண்பே "[1]

என்ற நூற்பா வாயிலாக உணரலாம். அவர் பாலை நிலத்தின் பெரும் பொழுது, சிறு பொழுது ஆகியவற்றையும் கூற விழைந்து,

> " நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
> முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே "[2]

என்றும்

> ' பின்பனி தானும் உரித்தென மொழிப "[3]

என்றும் கூறுகின்றார். இதன் வாயிலாகத் தொல்காப்பியர் காலத்திலேயே பாலை நிலமென்பது ஐவகை நிலங்களில் ஒன்றுகக் கருதப்பட்டதென்பதை உணரலாம். ஆயின் அவரே முதற் பொருளிலொன்றுகிய நிலத்திணைப் பற்றிக் கூறும்பொழுது பாலை யென்ற நிலத்திணைத் தனியாகக் கூறிச் செல்லாததை,

> " மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
> சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே "[4]

என்பதனால் அறியலாம். சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த இளங்கோவடிகள்,

"முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"[6]

என்று கூறுகின்ருர். தொல்காப்பியரால் நிலப் பாகுபாடு செய்யும் பொழுது பாலையென்ற நிலம் கூறப்படாத காரணத்தினுலும், பாலை நிலத்திற்குத் தனியாக தெய்வம் கூறப்படாத காரணத்தாலும் இளங்கோவடிகள் மேற்கண்டவாறு கூறியிருக்கலாம்.[6]

சங்க காலத்தில் கொற்றவை மலை, காடு என்ற இரு நிலத் தெய்வமாகக் கருதப்பட்டாளென்பதை,

'விடர் முகை யடுக்கத்து விறல் கெழு சூலி'[7]
'கடவுளயிரையின் நிலை இ'[8]
'கடவுட் பெயரிய கானம்'[9]
'உருகெழு மரபின் அயிரை'[10]
'கானமர் செல்வி'[11]
'பெருங் காட்டுக் கொற்றி'[12]

முதலிய சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு உணரலாம். அழகிய முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் அடுத்த பரற் கற்களோடு கூடிய மேட்டு நிலமாகவுள்ள சில இடங்களில் கொற்றவை வழிபடப்பட்டாள் என்பதை,

'கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன உளபரல் முரம்பு"[13]

எனப் பெரிய புராணம் கூறுகின்றது. முல்லையும் குறிஞ்சியும் தம்முள் விரவிய நிலங்களில் கால வேறுபட்டால், தமது தன்மை திரிந்த நிலையில் பாலை தோன்றும் என்று சி.கே. சுப்பிரமணிய முதலியாரும் தம் உரையில் குறிப்பிடுகின்ருர்.[14] எனவே பாலை நிலத் தெய்வமாகிய கொற்றவையைக் குறிஞ்சி, முல்லை என்ற இரு நிலங்களின் தெய்வமாகவும் கருத இடமுண்டு.

நடுகல்-கொற்றவை தொடர்பு:

பாலை நிலத்தில் தோன்றிய நடுகல் வழிபாடே மெல்ல மெல்ல வெற்றித் தெய்வமாகிய கொற்றவை வழி பாடாக உருவெடுத்திருக்கலாம் என்று சில பேரறிஞர்கள் கருதுகின்றனர்.[15]

கொற்றவையின் பெயர்கள்:

சக்தியின் கூருகிய கொற்றவை, சங்க இலக்கியங் களில் கொற்றி, கொற்றவை, சூலி போன்ற பல பெயர் களால் அழைக்கப்படுகிறாள் என்பதை,

'பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் கொடித்தாங்கு'[16]
'கொற்றவை கோலங் கொண்டோர் பெண்'[17]
'மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே'[18]
'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ'[19]
'இழையணி சிறப்பிற் பழையோள் இறைவி'[20]
'விடர் முகை யடுக்கத்து விறல் கெழு சூலி'[21]
'துணங்கையஞ் செல்விக் கணங்கு கொடித் தாங்கு'[22]
'கானமர் செல்வி யருளலின் வெண்காற்'[23]
'தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்'[24]
'மந்தி சீக்கும் அணங்குடை முன்றிலின்'[25]
'கடவுளாயிரையின் கிலேஇ'[26]
'கடவுட் பெயரிய காணமொடு கல்லுயர்ந்து'[27]

என்ற பாடலடிகளால் உணரலாம். நச்சிணர்க்கினியர் காலத்தில் கொற்றவையின் பெயராகிய காடுகிழாள் என் பது 'காடுகாள்' என மருவிற்று என்பது உணரத்தக்கது. காட்டுக்கு உரிமையுடைய கடவுள் என்பதே 'காடு கிழாள்' என்பதன் பொருள். 'கையார் வளைக்கை காடுகாள்' என்று தேவாரத்தில் காடுகாள் அழைக்கப்படுவதன் வாயிலாக, காடுகாளிற்குத் தேவார காலத்தில் கோயில் இருந்ததென் பதை அறியலாம். கானமர் செல்வி, துணங்கையஞ் செல்வி என்ற பெயர்களில் செல்வி என்ற சொல் கன்னித் தெய்வத்தைக் குறிப்பதாகக் கருத வேண்டும்.

"வலிவலம் தன்னை யென்னிழல் மருங்கின்
காடுறை கடவுட் கழிப்பிற்ப பின்றை"[28]

என்ற வாருகப் பொருநராற்றுப் படையில் வனதுர்க்கை, 'காடுறை கடவுள்' என்று கூறப்பட்டுள்ளது கருதத்தக்கது. கொற்றவை மிகப் பழமையான குடிகளிலிருந்து மிகப் பழங் காலத்தில் தமிழர் பெற்ற தெய்வமாதலால் 'பழையோள்' என்று அழைக்கப்பட்டாள் எனலாம்.

கொற்றவை கோயில்:

புறநானூற்றில் கொற்றவை கோவில் சுடுகாட்டின் நடுவே இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பாலை நிலத்தைக் குறிக்கின்ற காடு என்ற சொல் சுடுகாட்டைக் குறிக்கவும் பயன்படுகின்றது என்பதை,

"அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடு இறந்தோரே"[29]
"காடு நனி கனிய வென்ப
நீடி யிவண் வருநர் சென்ற வாறே"[30]
'அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்'[31]
'பெருங் காட்டுப் பண்ணிய கருங்கோட்டுமம்'[32]
"சுர விளக்கிற் பேயு மகளிரொடு
அஞ்சு வந்தின்றிம் மஞ்சிபடு முதுகாடு"[33]
"சுர விளக்கின் வெருவரப் பேருங்
காடு முன்னினரே நாடு கொண்டோரும்"[34]

என்ற சங்க இலக்கியச் சான்றுகளின் துணை கொண்டு உணரலாம். இவ்வாற்றுன் கூறப்பட்டுள்ள காட்டின் நடுவே அமைந்த கொற்றவைக் கோயிலையே புறநானூறு குறிப்பிடுகின்றது.[35] இத்தகைய சுடுகாட்டில் கொற்றவை அவளுடைய கணவனுகிய சிவனுடன் மரக்கால் நடனமாடியதை,

'மண்டமர் பலகடந்து மதுகையா னீறிந்து
பண்டரங்க மாடுங் காற்பலி யெழிலினை மென்றோள்
வண்டறை நறுங் கூந்தலாள் வளர்துதைத் தருவாளோ'

எனக் கூறித்தெய்வத்தை குறிப்பிடுகின்றது.[36]

சோழ நாட்டின் தலைநகரின்கண் அமைந்துள்ள கொற்றவை கோவிலிலைப் பூதங்கள் வாசலிலே காத்து நின்றமையாக நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிடு கின்றார்.[37] பாண்டிய நாட்டில் கொற்றவை கோவில் சுடுகாட்டில் அமைந்திருந்ததையும் உணரலாம்.[38]

உறைவிடம்:

காட்டில் உறைகின்றதாகக் கருதப்படும் கொற்றவை வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்துள்ளாள் என்பதை,

'தெய்வஞ் சேர்ந்த பாசை வேம்பிற்'[39]

என்ற பாடலடியால் உணரலாம். வேப்ப மரத்தின் இலை களின் துணையுடன் கொற்றவையின் கோபத்தால் ஏற்படு கின்ற அம்மை நோயினைத் தீர்க்கலாம் என்பதை இவண் நினைவு கூரலாம். வேம்பின் இலையாகிய வேப்பிலை பேய் களினின்று காப்பாற்றுவதற்காகவும், புண்ணையாற்றுவதற் காகவும் பயன்பட்டதென்பதைப் புறநானூறு 281, 296 பாடல்கள் உணர்த்துகின்றன. இதே வேப்பிலை பிள்ளைக் குக் காவலாகக் கொள்ளப்பட்டதென்பதை,

" மகவுடை மகடூஉப் பகடுபுறந் தரப்பக்
கோட்டினார் வேம்பின் ஏட்டிலைமிடைந்த "[40]

என்ற பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கூறுவதன் வாயிலாக உணரலாம்.

" கடவுள் வாகைத் துய்வீயேய்ப்ப "[41]

என்ற பாடலடிக்குப் பழைய உரையாசிரியர் உரை கூறும் பொழுது,

'தூக்கை வாழ்தலையுடைய வாகை மரம்'

எனக் குறிப்பிடுகின்றார். இதன் வாயிலாக வெற்றி மடந்தை யாகிய கொற்றவை வாகை மரத்தில் வாழ்கின்றாள் என்பதையும் உணரலாம்.[42]

ஆயுதங்கள்:

கொற்றவை சூலாயுதத்தைக் கொண்டு இலங்குகின் றாள் என்பதை,

' விடா முகை யடுக்கத்து விறல்கெழு சூலி '[43]

என்ற பாடலடி உணர்த்துகின்றது. நச்சினார்க்கினியர்,

" அழல் திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேற்
சுழல் தொடித் தடக்கைக் காரியும் நிழல் திகழ் "[44]
" உரவுச் சினங் கனலு மொளி திகழ் நெடுவேல்
அரவக் கடற்றானை அதிகனும் கரவாது "[45]

என்ற சிறுபாணாற்றுப்படைப் பாடலடிகளுக்கு உரை கூறும் பொழுது முறையே,

" தன்னிடத்துறையும் கொற்றவையுடைய
கோபத்தின் மிகுதியினுலேதான் விளங்கும் அச்சந்
தோன்றும் நெடிய வேலென்றும் "
" தன்னிடத் துறையும் கொற்றவையது வலியினை
உடைய சினம் நின்றெறியும் ஒளிவிளங்கும்
நெடிய வேலினையும் "

என்றவாருக எடுத்துரைக்கின்றார். ஆயுதங்களில் கொற்றவை இருப்பாள் என்பதை,

" வருங் கொற்றமார்க்கு மணங்கினுடனே
மருங்கிற் றிருவுடை வாள் வாய்ப்ப "[46]
" வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவுபாதமுன்
சென்று மீளுமாறு போல்வ "[47]
" போர் விசையமான்.....வாளிடையும்.....
தழைத்தோங்க "[48]

என்ற இலக்கியச் சான்றுகள் வாயிலாக உணரலாம்.

பலிக்கொடை:

பகைவருடைய பசுவினத்தைப் பற்றிக் கொண்ட அஞ்சாமையுடைய வெற்றி வீரர் பசுவினைத் தடிந்து உதிரத்தைத் தூவிப் பலியிட்ட செய்தியினையும் அதன் புலாலைப் புழுக்கி உண்ட செய்தியினையும்,

" வயவாள் எறிந்து வில்லின் நீக்கிப்
பயநிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேட் படுத்து வன்புலத் துய்ந்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பரூஉர ஏம்பிற்
கொழுப்பா எறிந்து குருகி தூஉய்ப்
பலவு புழுக்குண்ட வான்க ணகலறை "[49]

என்ற அகநானூற்று அடிகளால் உணரலாம்.

உயிர்நிலையினின்றும் உண்டான இரத்தம் பலியாக அளிக்கப்படும் பொருளா அச்சம் வருகின்ற முறைமையை யுடைய கொற்றவை ஏற்றுக்கொள்ள மாட்டாளென்பதை,

> " நிறம்படு குருதி புறம்படி னல்லது
> மடையெதிர் கொள்ளா அஞ்சுவரு மரபிற்
> கடவுளயிரையின் நிலவி "

என்ற பதிற்றுப்பத்து அடிகளால் உணரலாம்.[50]

விந்தையும் விந்தைக் காடும்:

பதிற்றுப்பத்தில் 'கடவுட்' பெயரிய கானம் என்ற அடிக்கு கடவுளாகிய கொற்றவை உறையும் விந்திய மலையில் உறைகின்ற துர்க்கையெனப் பொருள் கூறப்பட்டுள்ளது.[51] பழைய உரையாசிரியர் விந்தையென்னும் கடவுளால் பெயர் பெற்ற காடு என்று குறிப்பிட்டதுடன் "கடவுள்" என்றது துர்க்கையை எனக் குறிப்பிடுகின்றார். இந்த கானம் விந்தாடவி என்பதாகும். "மஞ்சு சூழ் நெடுவரை விஞ்சத் தடவி" எனப் பெருங்கதை விந்தாடவியைக் கூறுவது இவண் கருதத்தக்கது.[52] திவாகர நிகண்டில் இங்கு வாழ்ந்த துர்க்கை விந்தை என்றே அழைக்கப்பட்டுள்ளாள். விந்திய மலையில் இருந்த விந்தா கடிகையென்பவள் யாரேனும் அம்மலை மேல் போனால் அவர்களை இழுத்து தன் வயிற்றிலிடுவாள் என்று மணிமேகலையும் கூறுகின்றது. இந்த விந்திய மலைத்தாய் தெய்வம் மிகவும் பழமையானது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.[53] வடமொழி ஹரி வம்சத்தில் இவள் விந்தியவாசினி என்று கூறப்படுவதுடன் மலைகளின் உச்சியிலும் குகைகளிலும் ஆறுகளிலும் காடுகளிலும் காற்றிலும் வாழ்பவளாகவும் சேவல், ஆடு, சிங்கம், புலி சூழ்ந்து காணப்படுபவளாகவும் வருணிக்கப்படுகின்றாள். காட்டு வாசிகளான சவரர், பர்பரம், புளிந்தர் ஆகியவர் காளியை மணியடித்துத் தொழுவதாகக் கூறப்பட்டுள்ளது. மயிற்பீலியைச் சின்னமாகக் கொண்டவள் என்று காளி கூறப்பட்டுள்ளாள். இந்த விந்திய மலையில் வாழும் தேவிக்கு மதுவும் இறைச்சியும் பலியாகக் கொடுக்கப்பட்டதை விஷ்ணு புராணம் கூறு

கின்றது. வட மொழியில் உள்ள மச்ச புராணமும் விந்தியா வாசினியைக் குறிப்பிட்டுள்ளது.

எப்பொழுதும் நிலைத்து விந்திய மலையில் வாழும் தாய்த் தெய்வமென மகாபாரதம் துர்க்கா ஸ்தோத்திரமும் கூறுகின்றது. பெரிய காடுகளிலும் கடக்க முடியாத இடங் களிலும் வாழ்வதாக இவள் கூறப்படுகிறாள். மகாபாரதம் இவளையே காளி, காராளி, மாகாளி, கபாலி, விஜயா, ஜயா, ரணப்பிரியா என்றெல்லாம் அழைக்கின்றது. பாணர் (Bana) எழுதிய ஹர்ஷ சரித்திரத்திலும் காதம்பரியிலும் விந்தியா வாசினிக்குச் சவரர்களால் அளிக்கப்பட்ட நரபலி குறிப்பிடப்பட்டுள்ளது. சோம தேவர் எழுதிய கதாசரித சாகரத்திலும் சவரர்களும் புளிந்தர்களும் அளித்த நரபலி கூறப்பட்டுள்ளது. இவ்வளவு புகழுடன் இருந்த விந்தியத் தாய்த் தெய்வம் ஆரியருடையதல்லவென்றும், பின்னர் ஆரியர் இந்த தெய்வத்தை ஏற்றுக் கொண்டு தொழுத னர் என்றும் பிற அறிஞர்கள் கருதுகின்றனர்.[54] மகாபார தத்திலேயே இந்த ஆரியல்லாதாரின் காடுவாழ் தெய்வம் பயங்கரமான கரிய தெய்வமாகவும் மாலுக்கு இளையவளாக வும் மகிஷனைக் கொன்றவளாகவும் விந்தியாவாசினியாக வும் வருணிக்கப்படுவதால் ஆரியர்கள் இந்தப் பழந்தெய் வத்தைத் தங்களுடைய தெய்வங்களின் கூட்டத்தில் சேர்த்தமை தெரிகின்றது. இலை உடை அணிந்த சவரப் பெண்ணையே தாய்த் தெய்வமாக புத்தர்கள் வணங்க, இந்துக்களும் நக்னசபரி என்ற பெயரில் இந்த தெய்வத் தைத் தொழுதனர்.* 'நக்ன சபரி' என்பதற்கு 'ஆடை யற்ற பெண் தெய்வம்' என்பதே இதன் பொருள்; இந்த விந்தியமலைத் தாய்த் தெய்வத்தைச் சவரர், புளிந்தர் என்பவர்கள் தொழுதனர் என்று கூறப்படுவதால் திரா விடர்க்கு முற்பட்ட ஆஸ்டிரிக் இனத்தவரின் காடுறை

---

* ஹீனயான புத்த மதத்தில் அபர்ணா, நக்ன சபரி என்ற பெயர்களில் இவள் தொழப்பட்டாள். ஆடையற்ற சபரித் தெய்வம் நாகரிகம் வளராத சபரர்கள் கற்பனை செய்து கொண்ட தெய்வமாக இருக்க வேண்டும். இந்தக் கற்பனைத் தெய்வம சிதம்பர பௌத்தர் களுக்குப் பொருத்தமாக இருந்தது. இலையுடையணிந்த சபரித் தெய்வம் மகாயான பௌத்தர்களுக்குப் பொருத்தமாயிருந்தது.

தெய்வம் என்பது தெரிகின்றது. இந்த இனத்தாரை 'நீஷாதர்' என்று வடமொழியாளர் குறிப்பிடுவர். இந்த இனத்தாரை நிவாகரம் புளிஞர் என்றும் எயினர், சவரர், வனசரர், கானவர் என்றும் குறிப்பிட்டுள்ளதைக் காண லாம். வடமொழியில் புளீந்தர் என்றவாருகக் கூறப்பட்ட வரே தமிழில் புளிஞர் எனப்பட்டனர்.

இவர்கள் பாழ்நிலங்களில் வாழ்ந்தனர் என்று கூறப்படு வார். புளிஞும் என்ருல் மணற்குன்று என்று பொருள். இன்றும் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களாகிய சவரர் வழி பட்ட தாய்த் தெய்வத்தின் கோவில் பெருங்கதையில்,

> " அரண் நுதியன்ன பரன் முரம்படுக்கத்துச்
> சுரமுதலடைந்த சூழகன் புரிசைப்
> பாழ்நிலே வாழ்நர் பரவினர் தூஉம்
> செந்தடிக் குருதிப் பைங்கிணக் கொழுங்குடர்
> எண்டிசை மருங்கினுங் கொண்டவரெடுத்த
> வேர் முதலுாசல் வேம்பின் சிகை தொறும்
> கண்பாடவிந்த கருமணிப் பிறங்கலொ
> டுழைக் கோடணிந்த பீலி நாற்றிக்
> கழைக் கோற்றெடுத்த கதலிகை நுடங்க "[55]

என்று கூறப்பட்டுள்ளது. பெருங் கதையில் பாழ்நிலத்தில் வாழ்ந்த சவரர், தூர்க்கைக் கோயிலில் தங்கள் உயிரை மாய்த்துத் தங்கள் குடலையும் கண்மணிகளையும் தொங்க விட்டிருந்தது கூறப்பட்டுள்ளதைக் காணலாம். மான் கொம்புகளாலும் மயிற்பீலிகளாலும் அலங்கரிக்கப்பட் டிருந்ததை உணரலாம். பாழ்நிலத்தில் வாழ்ந்த சவரர், புளிஞர் இதனைத் தொழுததாகக் கூறியுள்ளமையும் இவண் கருதத்தக்கது. விந்திய வாசினியின் முக்கிய அடையாளமாக மயிற்பீலியை மகாபாரதமும் ஹரிவம்ச மும் கூறுகின்றன. மயூர பிச்ச துவஜம் அணிந்தவள் என்று வடமொழியில் கூறியுள்ளதைப் போலவே "பீலி நாற்றி" என்று பெருங்கதை கூறுகின்றது. எனவே துர்க்கையும் விந்தியாவாசினியும் ஒருவரே என்பது தெற் றென விளங்கும்.

கொற்றவையின் கொடைத்திறம்:

> "..... .....ஓங்கு புகழ்க்
> கானமர் செல்வி அருளலின் வெண்காற்
> பல்படைப் புரவி எய்திய தொல்லிசை
> நுணங்கு நுண் பனுவற் புலவன் பாடிய
> இனமழை தவழும் ஏழிற் குன்றத்து"[56]

என்ற அகநானூற்றுப் பாடலடிகளில் கானமர்செல்வி என்ற தாய்த் தெய்வம் அருளினதால் வெண்காலையுடைய குதிரைகளை நன்னன் பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது என பி. எல். சுவாமி கருதுகிறார். அவரே மற்றொரு கட்டுரையில்[57] நன்னனுக்குக் காற்றின் வழியாக ஓங்கு புகழ் கானமர் செல்வியின் அருளால் பல்படை வெள்ளப் புரவிகள் வந்தன என்று அகநானூறு 345-ம் பாட்டு கூறுகின்றது என இதே பாடலுக்கு விளக்கம் கூறியுள்ளார். அவர் மேலும் இந்தக் குதிரைகள் கப்பலில் நன்னனுக்கு வெளி நாட்டிலிருந்து இறக்குமதியானவை என்று கருதலாம் எனவும் தன் கருத்தைத் தெரிவிக்கின்றார். காலின் வந்த நிமிர்ப்பரிப்புரவி என்று பட்டினப்பாலை கூறுவதையும் சுட்டிக்காட்டியும் வெண்காற் குதிரைகள் (White Stockinged horses) இன்றும் மேல்நாட்டில் சிறந்த இனமாகக் கருதப்படுகின்றதென்பதையும் தனக்கு ஆதரவாகக் கொண்டு நன்னன் வெண்காலையுடைய குதிரைகளைப் பெற்றான் என்றும் கூறுகிறார். இக்கருத்து பாடலடிகளை ஊன்றி நோக்குங்கால் ஒவ்வாது அமைகின்றது. பாடுகின்ற புலவருக்குப் புரவலர் பரிசளித்தல் மரபு. அம்மரபிற் கேற்ப புரவலனுகிய கொற்றவை, வெள்ளிய காலினையும் பல படையினையும் உடைய குதிரைகளை ஏழிற் குன்றத்தைப் பாடிய புலவனெருவனுக்கு அருள்கூர்ந்து அளித்த செய்தியினை இப்பாடலடிகள் விளக்குகின்றன.

கொற்றவையும் சக்தியும்: பழந்தமிழரது தெய்வமாகிய கொற்றவை சக்தியாக மிளிர்ந்ததைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக உணரலாம். அழகுத் தெய்வமாகிய முருகனை மலைமகள் மகனென்றும் கொற்றவை சிறுவனென்

றும் திருமுருகாற்றுப் படை வருணித்துள்ளது; பார்வதி அல்லது மலைமகள் கொற்றவைக்குச் சமமானவள் என் பதை உணர்த்துகின்றது என நவில்கின்றார் கே. கே. பிள்ளை.[58]

அம்மையப்பன்: பெண் தெய்வமாகிய சக்தியை ஒரு பாகமாகக் கொண்டு சிவபெருமான் அர்த்த நாரீசுவர வடிவத்துடன் காணப்படுவது சங்க காலத்தில் மிகச் சாதாரணமாக அமைந்துள்ளது. கொற்றவை, நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானின் ஒரு பாதியாக விளங்கு வதை,

'பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் காக்கினுங் காக்கும்'[59]
'மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதல்
முக்கண் ணுரன் உருவேபோல் முரண்மிகு குராலும்'[60]
'உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்'[61]

என்ற இலக்கியச் சான்றுகளால் உணரலாம். சிவபெருமா னுக்கு நெற்றிக்கண் அமைந்துள்ளதை,

''கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்
பிறை நுதல் விளங்கு மொருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற'[62] என்றமையாலும்
''நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்''[63]

என்றமையாலும் உணரலாம்.

அன்னை தெய்வமும் அழகு தெய்வமும்:

அழகு தெய்வமாகிய முருகனை ஈன்றமைக்காகக் கொற்றவை சங்க இலக்கியத்தில் புகழப்படுகிறாள் என் பதை,

''காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்''[64]
''கடம்மமர் செல்வன் கடிநகர் பேண
மறுமிடற் றண்ணற்கு மாசிலோள் தந்த''[65]
''ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றேர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ''[66]

"வெண்திரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேவற் பயக்குமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்கு கொடித்தாங்கு"[67]

என்ற சான்றுகளால் அறியலாம். வெள்ளிய திரையினை உடைய கடலிலே சென்று கடிய சூரனைக் கொன்ற பசிய பூணினையுடைய முருகனைப் பெற்ற பெருமை உடைய வயிறு கொற்றவையினுடையதென்பதைக் கூறும்பொழுது முருகனைப் பற்றிய புராணச் செய்தியினையும் பெரும்பாணற்றுப் படை ஆசிரியர் எடுத்தாண்டுள்ள நயம் இவண் உணரத்தக்கது.

வழிபட்டோர்:

1. மன்னர்:-

கொற்றவையை வழிபட்டோராகச் சங்க இலக்கியத்தில் அரசர் முதல் விலங்குவரை கூறப்பட்டுள்ளனர். சேர பரம்பரையினரின் குல தெய்வமாகிய அயிரை மலைவாழ் கொற்றவையைப் பற்றிப் பதிற்றுப்பத்து கூறுகின்றது. சேர மன்னர்கள் கொற்றவையினை வழிபட்டமையும் பலிக் கொடை கொடுத்தமையையும்,

"வெல்போர் வேந்தர் முரசுகண் போழ்ந்தவர்
அரசுவா அழைப்பக் கோடறுத் தியற்றிய
அணங்குடை மரபிற் கட்டின் மேலிருந்து
தும்பை சான்ற மெய் தயங்கு யக்கத்து
நிறம்படு குருதி புறம்படி னல்லது
மடையெதிர் கொள்ளா அஞ்சுவரு மரபிற்
கடவுளயிரையின் நிலவி"[68]

என்ற அடிகள் கூறுகின்றன.

பகைவரது இரத்தத்தைத் தெளித்துக் கலந்த திரட்சியை உடைய சோற்றின் பிண்டங்களால் அச்சம் பொருந்திய இயல்பினை உடைய அயிரை மலையிலுள்ள துர்க்கையைச் சேரர் வழிபட்டதை உணர்த்துகின்றது பதிற்றுப்பத்து.[69] அதே சேரர்களால் துர்க்கை வழிபடப் பட்டமையைப் பதிற்றுப்பத்து மூன்றும் பதிகம் : 8; 79 : 17-8; 90 : 19 ஆகியவையும் குறிப்பிடுகின்றன.

2) அரசி:-

தனிமையோடு கிடக்கும் அன்பு மிகுகின்ற அரசிக்குத் தீமையாக இருக்கின்ற ஆற்றுதற்குரிய நினைவு தீர வேண்டும். அதற்கு வேந்தன் பாசறையிடத்திலிருந்து பொருகின்ற போர்த் தொழிலில் வெற்றி பெற வேண்டும். தன்னுடைய பிரிவாற்றுமையை அரசி கொற்றவையை நோக்கிப் பரவுகின்ற நிகழ்ச்சியினை நெடுநல் வாடை ஆசிரியர்,

"புலம்பொடு வதியும் நலங்கிள ரரிவைக்கு
இன்னு அரும்படர் தீர விறல் தந்து
இன்னே முடிகதில் லம்ம[70]" என்று கூறுகின்றார்.

மேற்கூறிய அடிகளுக்கு உரைகூறுகின்ற நச்சினார்க்கினியர்,

"அரசி வருந்த மிகுதி தீரவேண்டிக் கொற்றவையை நோக்கிப் பரவுகின்றவள் கூற்றுயிற்று" எனவும்,

'அம்ம' என்பது கொற்றவையை நோக்கி எனவும் இயம்புகின்றார். எனவே பிரிந்து சென்ற அரசன் போரிலே வெற்றி பெற்று வரவேண்டுமென்பதற்காகக் கொற்றவையை அரசி வழிபட்டதை உணரலாம்.

3) போர் வீரர்கள்:-

பாலை நிலத்தைச் சார்ந்த மறவர்களும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களும் வீரத்தில் சிறந்திருந்தனர். அவர்களுடைய வீரத்திறமையினை வியந்து தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் போர்க்காலங்களில் தங்களின் படைகளில் போர் வீரர்களாக்கிக் கொண்டனர். எனவே மறவர்களுக்கும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்கும் தெய்வமாக இருந்த கொற்றவை போர் வீரர்களின் தெய்வமாக மாறினாள்.[71] தொல்காப்பியரும் போருக்குச் செல்லும் வீரர்கள் கொற்றவையை வணங்கிச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளமை இவண் உணரத்தக்கது.

4) பெண்டிர்:-

"விடர்முகை யடுக்கத்து விறல் கெழு சூலிக்கு" என்று தொடங்கும் குறுந்தொகை 218-ம் பாடலில் உரை எழுதும்பொழுது,

பிரிந்த தலைவர் மீண்டும் வந்து சேர்ந்து, பின் பிரியாது உறைய வேண்டுமென்று கொற்றவையை வழி படுதலைத் தலைவி குறித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்.[72] எனவே அரசி போன்றோர் மட்டுமல்லாது சங்ககாலத்துத் தலைவியும் கொற்றவையை வழிபட்டதை உணரலாம்.

தை நீராடலின் பொழுது ஒரு பெண் மற்றொரு பெண்ணிற்குக் கொற்றவை கோலம் அளிக்கக் கருதி அவளது நெற்றியில் சிவப்புத் திலகமொன்று இட்டாள். அத்திலகம் செம்மையாய் இருந்ததால், அத்திலகம் கொற்றவையின் நெற்றிக்கண் போல் அமைந்திருந்தது என்று குறிப்பிடுகின்றார்.[73] தை நீராடலின்பொழுது பெண்கள் (கன்னியரும் மணமானவரும்) சக்தியை வழிபட்ட செய்தியையும் அறியலாம். (பார்க்க : சக்தியும் பாவை நோன்பும்.)

போர் குறித்துச் சென்ற கணவர் திரும்பி வந்து தங்களுடன் இணைய வேண்டுமென்பதற்காகப் பெண்டிர், பொன்னால் செய்த தொடி கிடந்த தழும்பிருந்த மயிர் ஒழுங்குபட்டுக் கிடந்த முன்கையில் வலம்புரியை அறுத்துச் செய்யப்பட்ட வளையை இட்டுக்காப்பு நாணைக் கட்டிக் கொற்றவையை வழிபட்டமையை,

> 'பொலந்தொடி திண்ற மயிர்வார் முன்கை
> வலம்புரி வளையொடு கடிகை நூல் யாத்து'[74]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

5) வழிப்பறி செய்வோர்:—

கொற்றவையை வழிப்பறி செய்யும் கள்வர்கள் வழி பட்டதையும் அவர்களுக்குக் கொற்றவை வெற்றியைத் தருகின்றமையையு,

" கன்று காணுது புன்கண்ணை செவி சாய்த்து
மன்று நிறை பைதல் கூரப்பலவுடன்
கறவை தந்த கடுங்கான் மறவர்
கல்லென் சீறூர் எல்லியினசைஇ
முதுவாய்ப் பெண்டின் செது காற்குரம்பை
மடமயிலென்ன வென்னடை மெலிபேத்தை
தோட்டுணை யாகத துயிற்றத் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கட்
சேக்தோளறையும் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே " [75]

என்ற அகநானூற்றுப் பாடலடிகளால் உணரலாம். மேலும் தூதுசெல்கின்ற பார்ப்பான் வெள்ளிய ஓலைச்சுருளுடன் வருகின்ற இயல்பினை நோக்கியவுடன் அவன் கையில் உள்ளது பொன்னுகத்தான் இருக்குமென்று கருதி ஒருவிதப் பயனுமின்றி அப்பொழுதே கொன்று வீழ்த்திய கையிற் படையை உடைய - கொடுமையையுடைய மறவர்க்கும் கொற்றவை வெற்றி தருகின்றாள் என்பதையும் அறிய லாம்.[76] சங்க இலக்கியம் எயினர்களை ஆறலைக் கள்வர் என்றும், பாலை நிலத்தில் வாழ்வோர் என்றும் கூறுகின்றது. சங்ககால வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் கொற்றவையை வழிபட்டது போன்று பிற்காலத்திலும் கொள்ளைக்காரர்கள் காளியைத் தங்கள் குலதெய்வமாகத் தொழுது வந்தனர். கைத்துணியால் கொன்று வழிப்பறி செய்கின்ற தக்கர்கள் (Thugs) என்ற கொள்ளைக்காரர்கள் காளியைக் குலதெய்வ மாகக்கொண்டு இன்றும் வழிபடுவது எண்ணத்தக்கது.[77] சங்க இலக்கியத்தில் கொற்றவை, துர்க்கை ஆறலைக் கள்வர்களுக்குக் கொள்ளைதரும் தெய்வமாகக் காணப் படுகிறாள். ஆனால் வடமொழி இலக்கியத்தில் துர்க்கையை ஆறலைக் கள்வரிடமிருந்தும், நீரில் மூழ்கி இறப்பதி லிருந்தும், மற்றும் பல ஆபத்திலிருந்தும் காப்பவளாகக் கொள்கின்றனரென்பதும் துர்க்கை என்ற பெயருக்கு ஆபத்துக்களை நீக்குபவள் என்று வேர்ச்சொல் பொருள் கூறுவரென்பதும் உணரற்பாற்று.

6) பேய்கள்;—

கொற்றவையை வழிபடுகின்ற பேய்கள் கொற்றவைக்கு நொடி கூறிய செய்தியினை,

'துணங்கையஞ் செல்விக் கணங்கு நொடித்தாங்கு'[78]

'பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'[79]

என்ற அடிகளால் உணரலாம். பேய்மகள் கொற்றவைக்கு விடுகதைகள் கூறியதாகச் சங்க இலக்கியத்தில் இரண்டு இடங்களில் மட்டுமே கூறப்பட்டுள்ளமை இவண் கருதத் தக்கது. கொற்றவையை வழிபடுகின்ற பேய்கள் கொற்றவையை மகிழ்விப்பதன் பொருட்டு துணங்கைக் கூத்தினை ஆடினமையையும் உணரலாம்.[80]

7) விலங்குகள்:—

விலங்குகள் கொற்றவை கோவிலின்முன் சில வியக்கத்தக்க செயல்கள் செய்தமையையும் கொற்றவையினை வழிபட்டமையையும் புறநானூற்றுப் பாடல் சுட்டுகின்றது. ஒரு யானை உலர்ந்த மரத்து விறகினைக் கொண்டுவர, வேடர்கள் அம்மரங்களைக் கடைந்து கொற்றவை கோவில் முன் எரியாகிய விளக்கினை உண்டாக்கினர். தீ விளக்கிற்கருகில் மான் கூட்டங்கள் உறங்க, அவற்றினை எழுப்பி பெண் குரங்குகள் (மந்தி) கொற்றவை கோவில் அமைந்திருந்த தரையைக் கூட்டித் தூய்மை செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.[81] இந்நிகழ்ச்சியின் வாயிலாக, விலங்குகளும் கொற்றவைக்கு வழிபாடு செய்கின்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டதை அறியலாம்.

முடிவுரை :

பாலை நிலத் தெய்வமாகிய கொற்றவையைப் போர்த் தெய்வமாகக் கூறும் தொல்காப்பியத்தில் பாலை என்ற நிலப் பாகுபாடு செய்யப்படாததையும் சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த சிலப்பதிகாரம் பாலை என்ற நிலப் பாகுபாட்டினைக் கூறுவதனையும் மேற்கூறிய கட்டுரையின் முன்னுரை விளக்கி நிற்கின்றது. சங்க இலக்கியத்தில் சக்தியின் கூருகிய கொற்றவை முல்லை,

குறிஞ்சி என்ற இரு நிலங்களின் தெய்வமாக வழிபடப் பட்டாள் என்பதனையும் நடுகல் வழிபாடே நாளடைவில் கொற்றவை வழிபாடாக மாறியிருக்கலாம் என்ற கருத் தினையும் இயம்புகின்றது இக்கட்டுரை. சக்திக்குப் பெருங் காட்டுக்கொற்றி, கொற்றவை, மகிஷமகள், பழையோள் குழவி, துணங்கையஞ் செல்வி, தெய்வஞ் சேர்ந்த பராரை; காடுறை கடவுள் போன்ற பதினொரு பெயர்கள் சங்க இலக்கியத்தில் எடுத்தாளப்பட்டுள்ளமையையும் சக்தியின் கூருகிய கொற்றவைக்குக் கோவில் அமைக்கப்பட்டிருந்த இடத்தினையும் அக்கோவிலினைப் பூதங்கள் காத்துநின்ற செயலினையும் இக்கட்டுரை நவில்கின்றது. கொற்றவையின் படை, கொற்றவைக்குப் பலிக்கொடை அளிக்கும் செய்தி ஆகியவற்றையும் கூறுகின்றது. விந்தியமலைத் தாய்த் தெய்வத்தினைப் பற்றி விஷ்ணு புராணம், மகாபாரதம், ஹர்ஷ சரித்திரம், கதாசரித சாகரம் ஆகிய நூல்கள் கூறு வதைத் தொகுத்து அளிப்பதுடன், துர்க்கையும் விந்தியா வாசினியும் ஒருவரே என்ற கருத்தினையும் இக்கட்டுரை வலியுறுத்த முனைகின்றது. அகநானூற்றுப் பாடலின் துணை கொண்டு கொற்றவையைப் புரவலனுக்குக் காட்சிப்படுத்த இக்கட்டுரை முயல்கின்றது. பழந்தமிழராகிய திராவிடரின் தெய்வமாகிய கொற்றவை, சக்தியாக மிளிர்ந்ததையும் சங்க காலத்தில் சக்தியும் சிவனும் இணைந்து அம்மையப்ப னுகத் தோன்றுகின்ற காட்சியினையும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். அன்னை தெய்வமாகிய சக்தியினை அழகுத் தெய்வமாகிய முருகனுடன் தொடர்புபடுத்தியும் இக்கட்டுரை கூறுகின்றது. மாநிலம் ஆளும் மன்னர் முதல் வழிப்பறி செய்யும் கள்வர்கள் ஈருகக் கொற்றவையினை வழிபட்டமையையும், ஐந்தறிவு உள்ள விலங்குகள் வியக்கத் தக்க வகையில் சக்தியின் கூருகிய கொற்றவை வழிபாட் டிற்குத் துணைபுரிந்தமையையும் இக்கட்டுரையின் வாயி லாக அறியலாம். தொல்காப்பிய காலத்திற்கும் சங்க காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் சக்தியின் கூருகிய கொற்றவை வழிபாடு வளர்ச்சியுற்றுச் சங்ககாலத்தில் போற்றப்பட்ட நிலையினை இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது என எண்ணலும் தகும்.

சான்று விளக்கம்

1. தொல்காப்பியம், அகத்திணையியல் : 2
2. Ibid : 9
3. Ibid : 10
4. Ibid : 5
5. சிலப்பதிகாரம் 11 : 64 — 66
6. The Goddess of Palai region — S. Sathyamoorthy Ph. D. Unpublished thesis. University of Kerala.
7. குறுந்தொகை 218 : 1
8. பதிற்றுப்பத்து 79 : 18
9. Ibid : 88 : 2
10. பதிற்றுப்பத்து 69 : 4
11. அகநானூறு 345 : 4
12. கலித்தொகை 89 : 8
13. பெரிய புராணம், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் : 15
14. திருத்தொண்டர் புராணம்
— சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை (இரண்டாம் பகுதி)
15. நடுகல் வழிபாடு பற்றிப் புற நானூறு 306, 335-வது பாடல்களில் கூறப்பட்டுள்ளது.
Nature in Ancient Tamil Poetry
— Thani Nayagam, Xavier, S , page 75—76
Tamil Literature Society, Tuticorin - 1953
16. கலித்தொகை 89 : 8
17. பரிபாடல் 11 : 100

18. திருமுருகாற்றுப்படை : 257
19. Ibid : 258
20. Ibid : 259
21. குறுந்தொகை 218 : 1
22. பெரும்பாணாற்றுப்படை : 459
23. அகநானூறு 345 : 4
24. Ibid : 309 : 4
25. புறநானூறு 247 : 4
26. பதிற்றுப்பத்து 79 : 18
27. Ibid : 88 : 2
28. பொருநராற்றுப்படை : 41 — 42
29. குறுந்தொகை 216 : 1—2
30. ஐங்குறுநூறு 335 : 4—5
31. கலித்தொகை 20 : 20
32. புறநானூறு 246 : 11
33. Ibid : 356 : 3 — 4
34. Ibid : 359 : 7 — 8
35. புறநானூறு : 247
36. கலித்தொகை 1 : 8—10
37. பட்டினப்பாலை : 57, நச்சினார்க்கினியர் உரை
38. 'மந்தி சிக்கும் அணங்குடை முன்னில்' [புறம் 247 : 4]
39. அகநானூறு : 309 : 4
40. பெரும்பாணாற்றுப்படை (58—59) —நச்சினார்க்கினியர் உரை
41. பதிற்றுப்பத்து 66 : 15

11

சிலம்பில் சக்தி

முன்னுரை:

'முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'

என்று சிலப்பதிகாரம் (காடுகாண்காதை : 64-66) பாலை நிலத்திற்கு இலக்கணம் வரையறுக்கின்றது. பாலைக்குத் தெய்வம் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஏனைய பிறரே பகவதியையும் கதிரவனையும் பாலை நிலத் தெய்வமாகக் கருதினர் என்று 'இறையனர் அகப்பொருள் முதற் நூற்பா உரை' கூறுகின்றது. போர்த் தெய்வமாகிய கொற்றவை யினைப் பற்றி,

'மறங்கடைக் கூட்டிய குடிமிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே'

[தொல். புறத்திணையியல் : 4]

'வெற்றி வெல்போர்க் கொற்றவை'

[திருமுருகாற்றுப் படை : 258]

'மூற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி'

[பெருங்கதை : இலாவண காண்டம். 2 : 31]

என்று இலக்கண இலக்கியங்கள் கூறுகின்றன. இளங்கோ வடிகளால் இயற்றப்பெற்ற பெருங்காப்பியமாம் சிலப்பதி காரத்தில் சக்தியின் கூருக இலங்கும் பாலை நிலத் தெய்வ மாம் கொற்றவை பற்றிக் கூறப்பட்டுள்ள செய்தியினை இவண் ஆராய்வோம்.

சொல்லாராய்ச்சி:

'கொல்' என்ற வேர்ச் சொல்லை அடியொற்றிய 'கொற்றவை' என்னும் சொல்லினின்று பிறந்த 'கொற்றம்' என்னும் சொல். (கொல் > கொற்றம் > கொற் றம் + அவ்வை — கொற்றவை) கொற்றம் + அவ்வை எனப்

பாகுபடுத்தப்பட்டு 'கொற்றம்' வெற்றியெனவும் 'அவ்வை' தாயெனவும் பொருளினைப் பெற்று, வெற்றியையுடைய தாயெனவும் வெற்றி தரும் தாயெனவும் பொருள்கொள்ளத் தக்க வகையான் அமைந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டே இளங்கோவடிகள்,

'ஊலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை'

[12 : 1 : 64]

என்றவாருக அமைத்துள்ளார் போலும்.

கொற்றவையின் பெயர்கள்:

அந்தரி (12 : 21 : 3) என்பதற்கு அடியார்க்கு நல்லார் அந்தரி எனப் பொருள் கொள்கின்ருர். அந்தரி (13 : 104) என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் கொற் றவை எனவும் அடியார்க்கு நல்லார் துர்க்கை எனவும் பொருள் கூறுகின்றனர். அந்தரி என்பதற்குப் பார்வதி, துர்க்கை எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. *[Tamil Lexicon-Volume 1. part 1. p. 82]*

'மந்திரக் கோடி உடுத்தி மணமாலே
அந்தரி சூட்டக் கனக் கண்டேன் தோழி!'

[நாலாயிரத் திவ்விய பிரபந்தம்]

என்ற அடிகளில் ஆண்டாளால் ஆளப்படுகின்ற அந்தரி என்ற சொல் கொற்றவையைக் குறிக்கின்றது. மணமக னின் தங்கையாம் மாலவற்கிளங்கிஜாயாம் அந்தரி, மணமக ளாம் ஆண்டாளிற்கு அணி செய்த வழக்கத்தினையும் இது அறிவுறுத்துகின்றது.

வழக்குரைகாதை, கொற்றவையையும் (36) கொற்ற வையின் கூருகிய பல்வேறு ஆற்றல் தெய்வங்களையும் (37—40) குறிப்பிடுகிறது. 'அறுவர்க்கிஜாய நங்கை' (37) என்ற தொடர் இஜாயவள் உட்பட ஏழு மாதர்களைச் (சப்த மாதாக்கள்) சுட்டுகிறது.

பிள்ளைத் தமிழ் நூல்கள் மகேசுவரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வராகி ஆகி யோரை ஏழு மாதர்கள் என்று குறிப்பிடுகின்றன. அறுவர்க்

கிழாயவராகிய நங்கை "பிடாரி" என்கிறார் அரும்பதவுரை காரர். நங்கை (பிடாரி), அணங்கு (பத்திரகாளி), காளி என்ற மூப்பெயர்களும் காளியையே குறிக்கின்றன எனக் கூறுகின்றார் அரும்பதவுரைகாரர். பிடாரி, பத்திரகாளி, காளி மூன்றையும் தனித்தனி தெய்வங்களாகக் கொள் கிறார் அறிஞர். ந. மு. வேங்கடசாமி நாட்டார். தாருகன் நெஞ்சைக் கிழித்த பெண்தெய்வம் "துர்க்கை" என்கிறார் ந. மு. வேங்கடசாமி நாட்டார். பாரதி, உமையவள் [6 : 39, 45] என்ற சொற்கள் இறைவனின் பாதியாகிய அம்மையையே குறிக்கின்றன. கொற்றவையை, 'கண் ணுதல் பாகமாளுடையாள்' என 'வேட்டுவ வரி' பாடு கின்றது [12 : (2) : 3].

அமரி (12 : 1 : 67)-அலங்கரித்தல் இல்லாதோள் என்கின்றார் அடியார்க்கு நல்லார். அணங்கு [20 : 38]-பத்திரகாளி என அரும்பத உரையாசிரியர் கூறுகின்றார். காளி [20 : 39]-கருப்பு நிறமுடையவள் என்றவாறு பொருள் கூறப்பட்டுள்ளது [*Tamil Lexicon. Vol. I, Part I P. 806*]. உமையவள் [6 : 42 ; 28 : 74] கொற்றவை யின் பெயராகக் கூறப்பட்டுள்ளது.

அயிரை (28 : 145) ஓர் யாறு என அரும்பத உரை யாசிரியர் கூற, சேரநாட்டுள்ளதோர் மலை எனக் கூறி ஈண்டு அதன்கண் உள்ள தெய்வத்தையே அயிரை என்பது உணர்த்துகின்றது என்பர் ந. மு. வேங்கடசாமி நாட்டார். பதிற்றுப்பத்தில் (79 : 16—18) கடவுள் அயிரை என்று கூறப்பட்டுள்ளது. இது ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் கூற்றினை மெய்ப்பிக்கின்றது.

கவுரி (12 : 1 : 67) கௌர நிறத்தையுடையவள் என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். 'கவுரம்' என் பதற்கு பொன்னிறம் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது [*Tamil Lexicon, Vol. I, Part I. P. 1206*].

நாமகள் [22 : வெண்பா : 1]-ககுமகள் என ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுகின்றார். ஆய்ககுப் பாவை

[12 : 1 : 71]-ஆயும் கலையையுடையவள் என்பர் அடியார்க்கு நல்லார். கலைக்கியானப்பெண் என்பர் அரும்பத உரையாசிரியர்.

அருங்கலப் பாவை [12 : 1 : 71] - இரத்தினப் பாவை என அரும்பத உரையாசிரியர் கூறுகின்ருர்.

குமரி [12 : 1 : 21 ; 1 : 72 ; 1 : 74]-குமரி என அடியார்க்கு நல்லார் கூறுகின்ருர். குமரி [12 : 1 : 67]-அழியாதோள் என்பர் அடியார்க்கு நல்லார். முதிராச் செல்வி [25 : 133]-இளஞ் செல்வியாகிய உமை என ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுகின்ருர். மேற்கூறிய 'முதிராச் செல்வி' என்ற சொல் வாயிலாகவே குமரியின் இலக்கணத்தை இளங்கோவடிகள் நமக்கு அறிவுறுத்து கின்ருர்.

கொற்றவை [12 : 1 : 64, 5 : 1, 14 : 4, 20:86, 23 : 111, 181]-துர்க்கை என்று பொருள்படக் கூறப்பட்டுள்ளது.

சமரி [12 : 1 : 67] — சமரை வல்லாள் என்பர் அடியார்க்கு நல்லார். சூலி [12 : 1 : 87] — சூலத்தை உடையவள் என அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் கூறுகின்றனர். கோமகள் [22:வெண்பா:2]-கொற்றவை என்பர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

பாய்கலைப்பாவை [12 : 1 : 70, 7 : 1] — பாயும் கலையை உடைய பாவை எனக் கூறுகின்ருர் அடியார்க்கு நல்லார். கலையமர் செல்வி [12 : 1 : 16, 23 : 125]— கலையாகிய ஊர்தியைப் பொருந்திய செல்வி என்பர் அடியார்க்கு நல்லார்.

மாலவற்கிளங்கிளை [12 : 1 : 67]—மாலின் தங்கை என் ப ர் அரும்பதவுரைகாரர். திருவமாற்கிளையாள் [12 : 4 : 4] — மாலின் தங்கை என அடியார்க்கு நல்லார் கூறுகின்ருர்.

கண்ணுதல் பாகமாளுடையாள் 12 : 2 : 3]- கண் ணுதல் பாகத்தை ஆளுதலுடையாள் என அடியார்க்கு நல்லார் கூறுகின்ருர். கண்ணுதலோன் பாகத்து மங்கை [12 : 10 : 3] — இறைவனுடைய இடப்பக்கத்திற்குரிய இறைவி எனக் கூறுகின்ருர்.

பாரதி [6 : 89] — பைரவி என்பர் அரும்பத உரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும். பாரதி [6 : 45] — பாரதி வடிவாய இறைவன் என்று அரும்பத உரையாசிரியர் கூறுகின்ருர்.

விழிநுதற்குமரி [11 : 214] — நெற்றிக் கண்ணை உடைய குமரி எனவும் வானநாடி [11 : 215] — சுவர்க்க நாட்டினை உடையவள் எனவும் அடியார்க்கு நல்லார் கூறு கின்ருர்.

செய்யவன் [12 : 1 : 62], செய்யோள் [6 : 61], மாமகள் [22 : வெண்பா : 1], திரு [20 : 23, 25 : 79, 26 : 144, 28 : 157, 30 : 36, 6 : 127, 1 : 26] திரு மகள் [5 : 213], உறுதுணை [5 : 216] என்று எடுத் தாளப்பட்டுள்ளவைகட்குத் திருமகள் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

மாயவள் [6 : 59] — துர்க்கை என அரும்பதவுரை யாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறுவது இவண் உணரற்பாலது.

வடிவம்:

கொற்றவை மலர் போன்ற அடிகளைப்பெற்று [12 : 19 : 2], விரிந்த கதிர்களையுடைய விளக்காகி நிற் கின்ற வடிவத்துடன் [12 : 9 : 4] காட்சியளிக்கின்ருள். பாரதி வடிவாகிய இறைவனுகவும் [6 : 45] இறைவனு டைய இடப்பக்கத்திற்குரிய இறைவியாகவும் [12 : 10 : 3] வடிவத்தைப் பெற்றுள்ளாள். கண்ணுதலுடைய பாகத்தை ஆளுடையாளாகவும் [12 : 2 : 3] அமைந்துள்ளாள். கங்கையைச் சடை முடியின் மீதணிந்த இறைவனது இடப்

பக்கத்திற்கு உரிய இறைவியின் உருக்கொண்டு விளங்குகின்றாள் [12 : 10 : 3, 4]; கொன்றைமலர், துளப மலர் ஆகியவற்றைக் கலந்து தொடுத்த மலர் செறிந்த மாலையை அணிந்த தோளினை உடையவள் [12 : 11 : 2, 3]; தாமரை போன்ற கையினை உடையவள் [12 : 10 : 1]; நெற்றிக் கண்ணை உடையவள் [11 : 214]; நுதலைத் திறந்து விழித்த இமையாத நாட்டத்தினை உடையவள் [12 : 1 : 55]; பிறை நீங்காது வாழும் சடைமுடியினை உடையவள் [12 : 3 : 4]; சடையாகிய முடி மீது பாம்பைப் பிறையோடு முடித்தவள் [12 : 21 : 3]; மதியாகிய வெள்ளிய இதழைச் சூடும் சென்னியை உடையவளாகவும் கொற்றவை இலங்குகின்றாள். [12 : 1 : 54]

நிறம் :

தேவி நீலமணி போன்ற நிறமும் [12 : 19 : 2] காயா மலர் போலும் மேனியினையும் [12 : 12 : 4] உடையவள்; கௌர (பொன்) நிறத்தையும் [12 : 1 : 67] சிவந்த நிறத்தையும் [12 : 1 : 69 ; 6 : 61] கொண்டவள்; மாமை நிறமுடையவள் [12 : 15 : 1]; சிவந்த நிறமுள்ள வாயினையும் [12 : 1 : 56] வெள்ளிய நிறமுடைய நகையினையும் [12 : 1 : 56] உடையவள்; கழுத்து கரிய நிறமாகக் கூறப்படுகின்றது [12 : 1 : 57].

திருமால் நீல நிறம், கருமை நிறம், பச்சை நிறம், என்று மூன்று நிறங்களும் உள்ளவனுகப் பாடப்படுகின்றான். அதன் பொருட்டு நீலமணி, கருமுகில், பச்சைமரப் பரப்புக் கூட்டம் ஆகியவற்றை அவனுக்கு உவமையாகக் கூறுவதுண்டு.

'திருமணி திரைபாட டவிந்த முந்நீர்
வருமழை யிருஞ்சூன் மூன்றும் புரையு மாமெய்'
[பரிபாடல் 4 : 6 - 7]

'பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே'
[குமர குருபர அடிகள்]

'பார்க்கும் மரங்க ளெல்லாம்
நந்த லாலா! — நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே
நந்த லாலா!

(பாரதியார்)

என்ற பாடல் அடிகள் திருமாலிற்குப் பச்சை நிறம் உண்டு என்பதை அறிவுறுத்துகின்றன. அதேபோன்று திருமாலின் தங்கையாகிய ['திருமாலிற்கினியாள்' சிலம்பு. 12 : 4 : 4] சக்திக்கும் பச்சை நிறம் கூறப்படுகின்றது.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில்

'திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்' [4 : 5]

என்ற அடிக்கு உரை கூறும்பொழுது,

"பசந்தென்றார், மாலைக்காலத்துப் பரந்த பச்சை வெயிலை."
"செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றியன்ன" [411] என்றார் மதுரைக் காஞ்சியிலும்.
"இக் காலத்து இதனைக் காடுகிழாள் வெயிலென்ப"

இதன் வாயிலாகப் பச்சை நிறமுள்ளவளாகக் கொற்றவையைக் காணும் பாங்கு புலனாகின்றது.

ஆடை:

சிங்கத்தின் தோலை உரித்து மேகலையாகவும் [12 : 1 : 62] புலியின் தோலை உடுத்தியும் [12 : 8 : 2] யானைத் தோலினை உரித்துப் போர்த்தியும் [12:1:61;8:1] கொற்றவை காட்சியளிக்கிறாள்.

அணிகலன்கள்:

கொற்றவை இடக் காலில் சிலம்பும் வலக் காலில் வீரக் கழலும் [12 : 1 : 64] அணிந்தவள்; அழகிய பொன்னுற் செய்த அரி பொருந்திய சிலம்பும் சூடகமும் மேகலையும் [12 : 12 : 1] அணிகலன்களாகக் கொண்டவள்; நஞ்சு ஊறும் துளையெயிற்றினை உடைய பாம்பாகிய கச்சணிந்தவள் [12 : 1 : 59]; வளையணிந்தவள்

[12 : 1 : 60, 9 : 1]; அழகிய தொடியினை உடையவள் [12 : 1 : 70]; பிறையினைச் சடை முடியில் அணிந்தவள் [12 : 3 : 4]; பாம்பைப் பிறையோடு முடித்தவள் [12 : 21 : 3]; மதியாகிய வெள்ளிய இதழைச் சென்னியில் அணிந்தவள் [12 : 1 : 54].

மலர்கள்:

கொன்றை மலரையும் (சிவனுக்குரியது) துளப மலரையும் (திருமாலிற்குரியது) கலந்து தொடுக்கப்பெற்ற மலர் செறிந்த மாலையையே கொற்றவையின் மார்பின்கண் அணியும் மாலையாகக் கூறப்பட்டுள்ளது [12 : 11 : 2, 3].

படை:

வெற்றி வேலும் [20 : 36] வெய்ய மழுவாளும் [12 : 1 : 70] வாளும் [12 : 1 : 64] சூலமும் [12 : 1 : 68, 1 : 60] வெள்ளிய வாளும் [12 : 13 : 2, 13 : 3] படையாகக் கொள்ளப்படுகின்றது. வாசுகிப் பாம்பை நாணுக ஏற்றிய மேருமலையை விற்படையாகக் கொண்டும் [12 : 1 : 57, 58] சங்கும் சக்கரமும் [12 : 10 : 1] படையாகக் கொண்டும் இலங்குகின்றாள் கொற்றவை.

கொடி:

ஆளிக் கொடியைக் கொற்றவை தன் கொடியாகக் கொண்டுள்ளாள் [12 : 14 : 4].

பீடம்:

வெட்டப்பட்ட எருமையின் பசுந்தலையும் [12:8:2] கடாவின் (மயிடன்) தலையும் [20 : 35] கொற்றவையின் பீடமாகக் கருதப்படுகின்றது.

ஊர்தி:

பாயும் கலையை ஊர்தியாகவும் [12 : 1 : 70; 12 : 1 : 45; 12 : 1 : 16; 23 : 125] சிவந்த கண்களை உடைய சிங்கமாகிய சினம் பொருந்திய விடையினையும் [12 : 10 : 2] முறுக்குண்ட கொம்பை உடைய கலையையும் [12 : 9 : 2] ஊர்தியாகப் பெற்றுள்ளாள் கொற்றவை.

குணம்:

நலத்தைச் செய்பவளாகவும் [12 : 21 : 3] சமரில் வல்லாளாகவும்[12:1:67]அழியாதோளாகவும்[12:1:67] இளஞ் செல்வியாகவும் [25 : 133] வருத்தும் பெண் தெய்வமாகவும் [20 : 38] கொற்றவை காணப்படுகின் ருள். ஆளிக்கொடியெடுத்துச் சென்று மறவனுக்குப் போரில் உதவுபவளாகவும் [12 : 14 : 4] தேவர்கள் அமுதத்தை உண்டும் சாக, ஒருவரும் உண்ணுத நஞ்சை யுண்டும் சாவாதிருக்கின்றவளாகவும் [12 : 22 : 3, 4] கொற்றவை தான் கொடுத்த வெற்றியின் விலையாகிய உயிர்ப்பலியை உண்ணுது வெற்றி கொடுக்காதவளாகவும் [12 : 16, 17] குணம் கொண்டவளாய் விளங்குகின்ருள். ஞாயிற்றுடனே சுழன்று திரிதலைச் செய்யும் முனிவர்களும் தேவர்களும் ஆகியவர்களுடைய துன்பம் ஒழியும் வண்ணம் அருள் செய்கின்ற குணத்தினைக் கொண்டவளாகவும் [12 : 18; 1, 2] வெற்றியைக் கொடுத்து அதற்குரிய விலை யாகிய அவிப்பலியைத் தான் பெறுவதற்கு வழி பார்த்திருக் கும் குணத்தினைப் பெற்றவளாகவும்]11 : 212, 213] கொற்றவையின் குணம் இங்கு கூறப்படுகின்றது. அறம் பிறழ்ந்து ஆட்சி நடந்தால் கொற்றவை சினப்பாள்; அதற்குக் கழுவாய் செய்யின் மனம் மகிழ்வாள் [29 : 55-131]. நான்மறைக்கும் மறைப் பொருளாய்த் தன்னை வழிபடுவோர் ஞானத்தின்கண் எழும் கொழுந் தாய்ச் சலிப்பின்றி நிற்கும் குணத்தினை உடையவளாகவும் [12 : 8 : 3, 4] கொற்றவை வீற்றிருக்கின்ருள்.

தெய்வக் கூறு:

உலகைக் காக்கும் வேந்தனை, காதல் தொழிலைக் கொண்ட திருமாலாகப் பாடுகின்ற ஓர் மரபு உண்டு. இது தொல்காப்பியப் புறத்திணையியலில் [நூற்பா எண் : 5] பூவை நிலை எனக் குறிப்பிடப்படுகின்றது. சிலம்பில் [17 : (29) (30) (31)] என்ற எண்ணுள்ள மூன்று பாடல்கள் இவ் வகையினைச் சாரும்.

'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே'

[நாலாயிரத் திவ்விய பிரபந்தம் : 3047]

எனப் பாடியருளினூர் நம்மாழ்வார். வேந்தனைத் திருமாலாகப் பாடவே, வேந்தன் மார்பினையும் திருமாலின் வாழ்க்கைத் துணைவியாம் திருமகள் விரும்பும் ஒன்றாகப் பாட வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

'திருவீழ் மார்பின் தென்னவர் கோமான்' [25 : 79]

'திருவெழுமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே'

[25 : 157]

என்று கூறுங்கால் வேந்தனின் செல்வ வளமும் புலனாகின்றது.

கலைமகளாகவும் (22 : வெண்பா : 1) ஆய்கலைப் பாவையாகவும் (12:1:71) மாமகள் (22 : வெண்பா : 1) திருமகள் [(5 : 213); (6 : 127)] பாய்கலைப் பாவை (12 : 7 : 1) அருங்கலைப் பாவையாகவும் (12 : 1 : 71) அறுவர்க்கினைய நங்கையாகவும் (20 : 37) மடக் கொடியாகவும் (20 : 36) செய்யவளாகவும் (12:1:69) கொற்றவை தெய்வக் கூறு கொண்டு காணப்படுகின்றாள்.

கொற்றவையின் வடிவில் மதுரைக் காவல் பெண் தெய்வமாம் மதுராபதித் தெய்வத்தை இளங்கோவடிகள் காண்கின்றார். (23 : 1 : 10).

உறவு முறை:

மாலின் தங்கையெனவும் (12 : 1 : 67) திருமாலிற் கினியாள் எனவும் (12 : 4 : 4) கூறுவதன் வாயிலாகக் கொற்றவை திருமாலின் தங்கையாக எண்ணத்தக்கவளாக அமைகின்றாள். கண்ணுதலோனின் இடப்பாகத்திற்குரியவளாகவும் (12 : 10 : 3) நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானது இடப்பாகத்தை ஆளுபவளாகவும் (12:2:4) கூறப்படுவதால் சிவபெருமானின் இல்லக் கிழத்தியாகக் காட்சியளிக்கின்றாள்.

தேவர்கள் அழுதுண்டு சாக, சிவன் நஞ்சுண்டு சாகாதிருந்தான். இதைக் கொற்றவையின் செயலாக,

'விண்ணோரழுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணுத நஞ்சுண்டிருந்த ருள் செய்குவாய்''

[12 : 22 : 3-4]

எனக் கூறுகின்ருர் இளங்கோவடிகள்.

மருதின்மீதே நடந்து, அதனைச் சாய்த்து உருளுதலை யுடைய சகடத்தையும் உதைத்துக் கஞ்சன் செய்த வஞ் சத்தைத் திருமால் வென்ற செயலும் கொற்றவையின் செயலாகப் பாடப்படுகின்றது [12 : 23 : 3-4]. எனவே கொற்றவை சிவபெருமானின் கூருக இருப்பதால் சிவபெரு மானின் இயல்புகளையும் திருமாலின் தங்கையாக இருப்ப தால் திருமாலின் இயல்புகளையும் பெற்றுத்திகழ்கின்ருள்.

புராண வரலாறு :

உடலுக்குத் தலைவேருன வடிவினையும் திரண்ட தோளினையுமுடைய விக்கிரமாசூரனின் தலையைத் துணித்து அதன்மீது கொற்றவை நின்ருள். இதன மாமயி டற் செற்றது எனச் சிலப்பதிகாரம் [12:1:65, 66, 9:1, 20:35, 22-வெண்பா-1) கூறுகின்றது.

தாருகனுடைய அகன்ற மார்பினைத் துர்க்கை பிளந் தாள் [20 : 39]. பத்திரகாளி வடிவில் இருந்தபொழுது இறைவனை நட்ட மாடச் செய்தாள் [20 : 37].

இமய அரசன் தன் மகளாகிய உமையைச் சிவனுக்கு மணம் முடித்துக் கொடுத்ததும் கூறப்பட்டுள்ளது

[25 : 128 - 134].

தேவர் புரமெரியச் செய்ய வேண்டுதலால் வடவைத் தீயைத் தலையிலே உடைய, பெரிய அம்பு சுட்ட அளவிலே அப்புரத்தில் அவுணர் வெந்து விழுந்த வெண்பலிக்குவை யாகிய பாரதி அரங்கத்திலே உமையவள் ஒரு பக்கமாக நின்று பாணி, தூக்கு, சீரென்னும் தாளங்களைச் செலுத்த, தேவர் யாரினும் உயர்ந்த இறைவன் கொடுகொட்டி என்

னும் ஆடல் ஆடினன் [6 : 44-45, 28 : 67-75, புகார்க் காண்டம் கட்டுரை (11)].

காயும் சினத்தை உடைய அவுணர் வஞ்சத்தாற் செய்யும் கொடுந்தொழிலைப் பொருதவளாய், அவுணரை உண்மைப் போரால் வெல்லுதலாற்றாது வஞ்சத்தால் வெல்லக் கருதிப் பாம்பு, தேள் முதலியவாய்ப் புகுதலையுணர்ந்து துர்க்கை அவற்றை உழக்கிக் கடிதற்கு மரக்கால் கொண்டு ஆடினள் [6 : 58-61].

அவுணர் வெவ்விய போர் செய்தற்குச் சமைந்த போர்க் கோலத்தோடு மோகித்து வீழும்படி கொல்லிப் பாவை வடிவாய்ச் செய்யோளாகிய திருமகள் பாவையென்னும் ஆடல் ஆடினள் (6 : 60-61).

கொற்றவை கோவில் :

வேட்டுவ வரி ஐயைக் கோட்டமாம் கொற்றவை கோவிலின் பலி கொள்ளும் முன்றிலில் எல்லாவிடத்தும் மணம் நாறும் சுர புன்னையும் நாரத்தையும் நிரல்பட உள்ளன. ஆச்சாவும் சந்தமும் உயர்ந்தும் சேமரமும் மாமரமும் செறிந்தும் நிற்கின்றன [12 (2)]. வேங்கை மரங்கள் சிவந்த பொன் போன்ற பூக்களையும் புன்க மரங்கள் பழம் பூக்களாகிய வெள்ளிய பொறியையும் சிந்த, நல்ல இலவ மரங்கள் தம் கொம்புகளிலுள்ள செவ்விதழைப் பூத்துச் சொரிந்து குவித்தன [12(3)]. மணங் கமழும் வெண்கடம்பும் பாதிரியும் புன்னையும் குராவும் கோங்கமுமாகிய இவை மலர்ந்து நிற்க அவற்றின் கொம்புகளின் மீதே வண்டினம் தேனினத்தோடே யாழினது அரவம் போலப் பாடி நிற்கின்றன. [12 (4)].

அரசியல் பிழைத்தபொழுது கொற்றவை சினக்க, அவள் வீற்றிருக்கும் கோவில் கதவு தானே அடைக்க, தவறிய அறத்திற்குக் கழுவாய் செய்த பொழுது அடைத்த கதவு திறக்கவும் செய்தது [23 : 55-131].

மதுரை மேற்றிசை வாயிலின்கண் இருந்த கொற்றவை கோவில் வாயிலிலே கண்ணகி தன் வகையைத் தகர்த்ததாகக் கட்டுரை காதை : 181 கூறுகின்றது.

வழிபாடு :

'வழிபாடு' என்ற சொல் வழிபடுதல் என்ற பொருளினைப் பெற்றுச் சிலப்பதிகாரத்தில் கனத்திறமுரைத்த காதையில் நாற்பதாவது அடியில் மட்டுமே அமைந்துள்ளது.

'விடர்முகை யடுக்கத்து விறல் கெழுசூலி'

[குறுந்தொகை : 218]

'நெற்றி விழியா னிறை திலகமிட்டாளே
கொற்றவை கோலங் கொண்டோர் பெண்'

[பரிபாடல் 11:99–100]

'முருகனை ஈன்ற துணங்கைச் செல்வி'

[பெரும்பாணாற்றுப்படை : 457]

என்றவாருக இலக்கியங்களால் சிறப்பித்துக் கூறப்படும் கொற்றவையினை வழிபடும் முறையினையும் பலிக்கொடை கொடுத்தல் பற்றியும் படைப்புப் பொருள் பற்றியும் இவண் ஆராய்வோம்.

மதனப்பாவை, கிளி, காட்டுக் கோழி, மயில், பந்து, கழங்கு ஆகியவற்றைக் கொடுத்து வழிபட்டனர் [12:93-95]. வண்ணக் குழம்பும் பொற்பொடியும் குளிர்ந்த மணமுள்ள சந்தனமும் புழுக்கலும் எள்ளுருண்டையும் நிணத்தோடு கூடிய சோறும் மலர்களும் புகையும் விரும்பிய மணப்பொருள்களையும் ஏந்தி, வழி பறிக்குங்கால் கொட்டும் பறையும் சூறை கொள்ளுங்கால் ஊதும் சின்னமும் கொம்பும் புல்லாங்குழலும் மணியும் ஆகிய இவை ஒலிக்கக் கொற்றவையினை வழிபட்டனர் [12 : 96-42]. இவ்வழிபாட்டு முறையினை எண்ணுங்கால் நாகரிகத் தொடக்கநிலையில் மக்களின் வழிபாட்டுமுறை இவ்வாற்றுக அக்காலத்தில் அமைந்திருந்ததென்பதை உணரலாம்.

எயினர் பெறும் வெற்றிக்கு விலையாகக் கொற்றவையின் அடியைத் தொட்டுச் சூளுற்ற கடனுகிய பிடற்றி

னின்றும் சிந்தும் குருதியினைக் குருதிப் பலியாகக் கொடுத்தனர் [12 : (18) 3-4, (20) 3-4]. எயினர் பகைவரை அடுதற்குக் காரணமாகிய விலையாக இடும் கடனுகிய நினைத்தோடு சிந்தும் உதிரமாகிய குருதிப் பலியையும் கொடுத்தனர் [12 : (19) 3-4].

கேட்டார் துண்ணென நடுங்கும் வண்ணம் ஒலி செய்யும் துடியுடனே பகைவர் உறங்கும் காலத்து ஊர்க் கொலை செய்யும் கண்ணோட்டம் இல்லாத மறவரும் [12 : (22) 1-2] வழிப் போவார் பொருளைப்பறித்துக் கொண்டு அவரிடத்துக் கருணை சிறிதும் இல்லாத எயினரும் கொள்ளும் பொருளாகிய வளம், வழிதொறும் உண்டாவதற்கு விலையாகவும் [12 : (21) 1-2] பலிக் கடன் கொடுத்தனர்.

மறவர் எடுக்கும் முருக விழாவில் வள்ளிக் கோலமிட்டுக் குறவர் மகள் கூத்தாடுவது போல, [நொல் புறந்நிணை இயல், நூற்பா எண் : 5, அடி : 6; சிலம்பு 12 : (7)] வேட்டுவர் செய்யும் கொற்றவை வழிபாட்டில் வேட்டுவக் கன்னி கொற்றவைப் புனைவு இட்டுக் கூத்தாடுகின்றாள். எனவே கொற்றவைக் கூத்து ஒப்புமை நோக்கி வள்ளிக் கூத்து எனப்பட்டது. தம் குலக் கன்னியைக் கொற்றவை வேடமிட்டு வேடர் வழிபட்டது வேட்டுவ வரியில் (22-32) கூறப்பட்டுள்ளது. எயினர் தமது குடிப்பிறந்த குமரியின் குறுகிய நெளிந்த கூந்தலைச் சிறிய வெள்ளிய பாம்பின் குட்டியாகச் செய்த பொன் நாணால் நீண்ட சடையாகச் சுற்றிக் கட்டினர். பயிரை மேய்ந்த பன்றியின் வனைந்த வெள்ளிய கொம்பினைப் பிடுங்கி அதனை இனைய வெள்ளிய பிறையென்னும்படி சாத்தினர். வலிய புலியின் வாயைக் கிழித்து உதிர்ந்த பல்லொழுங்கை வெள்ளிய நிரைத் தாலியாகக் கட்டினர். கோடுகளும் புள்ளியும் கலந்த தோலினை மேகலையாக உடுத்தி, வில்லை வனைந்து அவள் கையில் கொடுத்து, முறுக்குண்ட கொம்பினை உடைய களையின் மீது இருத்தினர் [12 : 11, 22-32].

கொற்றவைக் கூத்தைக் கண்ட வேடர், அக்கன்னி கொற்றவை வேடம் தாங்கத் தவம் செய்ததை வியந்தும் அவள் தம் குலத்தில் பிறந்ததற்காகப் பெருமைப்பட்டும் கூறுகின்றனர் [12 : (5) (6) (7)].

அசுரர் வாட, அமரர் போரின்கண் ஆடிய கூத்தே வென்றிக் கூத்தாகும். அசுரர் பாம்புகளையும் தேள்களையும் மாயத்தினால் ஊரும்படி ஏவக் கொற்றவை காலிலே மரத்தைக் கட்டிச் சிலம்பும் சூடகமும் மேகலையும் ஒலிக்க, வாளினை ஏந்தியவண்ணம் ஆடிய கூத்தாகும். இவ்வாற்றுக ஆடுங்கால் அவளது காயாம்பூ மலர் மேனியை வாழ்த்தி விண்ணவர் கற்பக மலர் மாரி பெய்தனர் [12 : (12); 6 : 58-59].

வேடர்கள் கொற்றவையின் முன்னின்று பின் வரும் பாடல்களைப் பாடி வழிபட்டனர்,

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமே னின்றுயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின் றி யேநிற்பாய்

[12 : (8)]

வரிவஃக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமே னின்றுயால்
அரியரன்பூ மேலோ னகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

[12 : (9)]

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமே னின்றுயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்.

[12 : (10)]

கோவலனும் பாணரும் யாழ்கொண்டு கொற்றவையின் பாடலாகிய பண்ணைப் பாடினர் என்பதைப் புறஞ்சேரியிறுத்த காதையின் கண் உள்ள 'பாய்கலைப் பாடற்பாணி' (13 : 111) வாயிலாக அறியலாம்.

வழிபடுவோர் ;

அரி, அரன், அயன் என்ற மூவரும் தங்களின் இதய கமலத்திலே கொற்றவையை வைத்துள்ளனர் என்ற குறிப் பின் [12 : (9) 3-4] வாயிலாக மும்மூர்த்திகட்கும் மேம் பட்டவள் கொற்றவை என்பதை அறியலாம். கொற்ற வையை முழு முதல் தெய்வமாக வழிபடும் சாக்த சமயத் தின் செல்வாக்கினை இங்கு காணமுடிகின்றது. தேவர்களும் [12 : (8) : 1] விண்ணோரும் [11 : 214] மறைகளும் [12 : (10) : 4] எயினரும் எயிற்றியரும் [12 : 15, 39] மறவரும் [12 : (14)] வழிபட்டனர். தெய்வ இருடிகளும் தேவர்களும் [12 : (18) 1-2] அமரர்தம் அரசனெடும் வந்து பணிந்து வழிபட்டனர் [12 : (19) 1-2].

வழிபட்ட பயன் :

கொற்றவையை வழிபட்டால் வெற்றி வந்தடையும் [12 : 1 : 16-17]. பாண்டிய நாட்டு வேட்டுவரே இக் கொற்றவைக்கு விழா எடுக்கின்றனர். ஆகையால் பகை வருடைய முனையிடமும் அவர் நிறை மீட்கும் தொழிலும் பாழ்படும் வண்ணம் வெற்றியை விரும்புவோனுகிய பாண்டியன் வெட்சிமாலை சூடி வெற்றிபெற அருளுவாயாக என்று கொற்றவை வழிபாட்டின் இறுதியில் வேண்டுகின்ற னர். தம் வழிபாட்டின் பயனைத் தம் அரசனின் வெற்றி யையே வேண்டி நிற்கின்றனர் [12 : (24)].

போர்த் தெய்வம் கொற்றவை:

மறவர் போருக்குச் செல்லும் பொழுது கொற்ற வையை வணங்கிப் போதல் மரபு [தொல். புறத்திணையியல்: 4] கரந்தையாரிடமிருந்து ஆனிரையைக் கவர்வதன் பொருட்டு வெட்சி வீரன் கொற்றவையை வணங்கி வெட்சி மலர் சூடுவான். கொற்றவை அந்நிலையில் அவனுக்கு அருள் புரிவதால் கரந்தையாரது காட்டில் காரி என்னும் பறவை குரலெழுப்பி அவருக்கு வெட்சி மறவரால் வரும் கேடு பற்றி முன் அறிவிப்பு செய்யும் [12:(13)]. வெட்சி மறவன் பழைய கடன் கொடுக்கவேண்டியிருப்பதால் புதி

தாகக் கடனுகக் கள் கொடுக்க கள் விற்பவள் மறுக்க, அதைப் பொருத அவன் வில்லினைக் கையிலேந்தியவண்ணம் பறவைச் சகுனம் பார்த்து கரந்தையாரது ஆனிரையினைக் கவரச் செல்கின்ருன். அவ்வானிரைகளைக் கொண்டு வந்து பழைய கடனைக் கொடுத்துப் புதிதாகக் கள் உண்ணவே இவ்வாறு செய்கிருன். அப்பொழுது போர்த் தெய்வமாம் கொற்றவை தன் சிங்கக்கொடியை (ஆளிக்கொடி) எடுத்துக்கொண்டு அவன் ஏந்திய வில்லின் முன் அவனுக்கு உறுதுணையாகச் செல்வாள் [12: (14)].

போர் முடிந்து வெட்சி வீரர் திரும்பி வந்து கொடை கொடுத்தலைக் கண்டோர் புகழ்ந்து, அம்மறவரின் தங்கைகளுக்குக் கூறுகின்றனர். அவ்வீரர் கவர்ந்து வந்த ஆனிரைகள், படைகளைச் செய்த கொல்லன், துடிகொட்டும் புலையன், யாழ் மீட்டும் பாணர்கள் ஆகியவர்களின் வீட்டு முற்றத்தின்கண் நிறைந்து நிற்கின்றன [12 : (15)]. கள் விற்பவள், வேவுகாரன், பறவைச் சகுனம் கூறியவன் ஆகியவர்களின் இல்லத்தின் முற்றத்தின்கண் நிறைந்து நிற்கின்றன [12 : (17)]; முதிய எயினர் எயிற்றியரின் இல்லங்களின் முற்றத்திலும் நிறைந்து நிற்கின்றன [12 : (17)].

காப்பியத் தலைவி கண்ணகியும் பாலைத் தெய்வம் கொற்றவையும்:

கண்ணகியைக் கொற்றவையின் கூருகப் படைக்க முனைகின்ருர் இளங்கோவடிகள். வேட்டுவ வரியில் சாலினி கண்ணகியைத் தெய்வமாகவே கூறுவதால் [12 : 1 : 47-50] 'இவள் (கண்ணகி) துர்க்கையாகவே பிறந்தாள்' என்று அரும்பதவுரையாசிரியர் கூறுகின்ருர்.

பொன் செய்கொல்லன் தன்சொல் கேட்டுக் கோவலனைக் கொன்ற தன் தவற்றினை உணர்ந்து உயிர் விடுகின்ருன் பாண்டியன் நெடுஞ்செழியன். மதுரையில் இருந்த நெடுஞ்செழியன் உயிர் துறந்ததும் கொற்கையில் இருந்த வெற்றிவேற்செழியன் ஆயிரம் பொற்கொல்லரைக்

கண்ணகிக்கு ஒரு பகலில் உயிர்ப்பலி கொடுத்தான் [27 : 127-138]. பாண்டிய நாட்டில் மழையில்லாமல் வறுமையும் நோயும் இடம் பெறும் இச்சூழ்நிலையிலேயே வெற்றிவேற்செழியன் இவ்வாறு உயிர்ப்பலி கொடுக்க, மழை பெய்து நோயும் வறுமையும் நீங்கியது என 'உரைபெறு கட்டுரை' கூறுகின்றது. கொற்றவைக்கு எயினர் குருதிப் பலி கொடுத்தது போலவே [12 : (18) (19) (20)], கொற்றவையின் கூருகக் கருதப்பட்ட கண்ணகிக்கும் பொற்கொல்லன் ஆயிரவரைப் பலி கொடுக்கின்றான் வெற்றிவேற்செழியன்.

மயிடன் தலையாகிய பீடத்தின்கண் ஏறிநின்று வென்றிதரும் வேலினைப் பெரிய கையில் தாங்கி நின்ற கொற்றவை அல்லள்; கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும் இறைவனை நட்டமாடச் செய்த பத்திரகாளியும் காட்டை இடமாக விரும்பிய காளியும் தாருகனுடைய மார்பினைப் பிளந்த துர்க்கையும் ஆகிய அவர்கள் அல்லள் [20 : 35-40] எனக் கண்ணகியைக் கொற்றவையின் தெய்வக் கூறுகளுடன் தொடர்புபடுத்துவதிலிருந்தும் கொற்றவைக்கும் கண்ணகிக்கும் உள்ள ஒருபுடை ஒப்புமை புலனாகின்றது.

இமயமலையிலிருந்து கல் எடுத்துக் கண்ணகிக்குப் படிமம் செய்கின்றான் சேரன் செங்குட்டுவன். எனவே அவளும் உருவக நிலையில் இமய அரசன் மகளாகிய உமையோடு சமமாகக் கருதப்படுகிறாள். 'இமயமலையில் பிறந்து' என்று தேவந்தி கூறுவது இதைக் காட்டும் [29. (2) : 2]. இன்னும் 'மலை அரையன் பெற்ற மடப் பாவை' [29 (14) : 1] என்று உமை போன்று கண்ணகி பாடப்படுகின்றாள் [25 : 126-134] என்பது இவண் ஒப்பு நோக்கற்பாலது. திருமகளும் கலைமகளும் கொற்றவையும் (சக்தியின் கூறுகள்) ஆகிய மூவரும் படைத்த வெற்றியினை ஒருங்கே உடையவளாகக் கண்ணகி 'அழற்படுகாதை இறுதி வெண்பாவில்' சிறப்பித்துக் கூறப்படுகின்றாள்.

முடிவுரை:

சங்ககாலத்திற்கும் பக்திக் காலத்திற்கும் இடையே ஏற்பட்ட கொற்றவை வழிபாட்டின் வளர்ச்சியின் தொடர்ச்சியினைப் பாலம் போன்று நின்று சிலப்பதிகாரம் காட்டுகின்றது. சங்க இலக்கியத்தை விட, சிலப்பதிகாரம் சக்தியின் கூருகிய கொற்றவை பற்றிய அரிய செய்திகளை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளக்குகின்றது. தொல்காப்பியப் புறத்திணையியலின்கண் கூறப்பட்டுள்ள கொற்றவை நிலைக்கு இலக்கியம் போன்று போற்றத்தக்க வகையில் அமைந்திருக்கும் வேட்டுவ வரியில் கொற்றவை விழாவினைக் கண்ணாரக் கண்டு களிக்கச் செய்து, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகர் செல்லும் வழியில் 'பாய்கலைப் பாவை பாடற்பாணி' பாட வைத்து, கொற்றவை கோவில் வாயிலில் பொற்றொடி தகர்க்கின்ற ஈருகச் சிலப்பதிகாரப் பாத்திரங்கள் கொற்றவை வழிபாட்டுடன் கலந்து காணப்படுகின்றன. நாயன்மார்களிடமும் ஆழ்வார்களிடமும் பக்திப் பாடல்கள் தோன்றுவதற்குச் சக்தியின் கூருகிய கொற்றவையினைப் பற்றியே கூறும் 'வேட்டுவ வரி' ஊன்றுகோலாக நின்று உறுதுணை புரிந்தது எனக் கூறுதல் மிகையாகாது.



பயன்பட்ட நூற்கள்

1. Descriptive Grammar With Index,
(CILAPATIKARAM)
— *Dr. S. V. Subramanianar, M. A. Ph. D.,*

2. 'Two fold Manifestations of God'
Journal of the Dept. of Tamil, University of Kerala,
Volume, IV- March 1973.
— *S. Sathiamoorthy M. A.*

3. Tamil Lexicon, University of Madras.
— *S. Vaiyapuri Pillai.*

4. சிலப்பதிகாரம்
அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும்
— டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்,
எட்டாம் பதிப்பு — 1968

5. சிலப்பதிகாரம்
— நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை

6. இறையனார் அகப்பொருள் உரை

7. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — இளம்பூரணம்

8. திருமுருகாற்றுப்படை

9. பெருங்கதை — இலாவண காண்டம்

10. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

11. பிள்ளைத் தமிழ் நூல்கள்

12. பதிற்றுப்பத்து

13. பரிபாடல்

14. குறுந்தொகை

15. பெரும்பாணாற்றுப்படை

16. பாரதியார் பாடல்கள்

17. மதுரைக் காஞ்சி

18. சிலப்பதிகாரச் சிந்தனைகள்
— டாக்டர் பி அருளாசலம், எம். ஏ, பி. எச். டி.,

12

பிற காப்பியங்களில் சக்தி

மணிமேகலையில் சக்தி

முன்னுரை:

சிலப்பதிகாரத்தினைத் தவிர ஏனைய பெருங் காப்பியங் களில் அமைந்துள்ள சக்தி பற்றிய செய்திகளை இக்கட்டுரை கூறுகிறது. மறைந்து போன வளையாபதி, குண்டலகேசி என்ற காப்பியங்களில் எஞ்சியுள்ள பாடல்களில் சக்தி பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை. எனவே இக்கட் டுரையில் மணிமேகலை, சிந்தாமணி என்ற இரு பெரும் காப்பியங்களில் கூறப்பட்டுள்ள சக்தியினைப் பற்றிய செய்தி களை மட்டும் ஆராய்வோம்.

கலிமகன்:

மறையவர்கள் வாழ்கின்ற ஊர்களில் எல்லாம் பசு வைக் கவர்ந்த திருடன் என்று ஆபுத்திரனது பிச்சைப் பாத்திரத்தில் கற்களை இட, அவன் பெருஞ் செல்வத்தால் விளக்கமுற்றோர் வாழ்கின்ற தெற்கின்கண் சென்றடைந்து கலிமகன் கோயிலில் தங்கினன். அக்கோயிலை,

'சிந்தா விளக்கின் செழுங்கலி நியமத்து
அந்தில் முன்றில் அம்பலப் பீடிகை'

[13 : 106-107]

என்று சீத்தலைச் சாத்தனார் வருணிக்கிறார். இங்கு பலி பீடத்தோடு கூடிய அம்பலம் கூறப்படுகிறது. சக்தியின் கூறுகிய கலிமகள் உறையுங் கோயிலாகலின் அது கலி நியமம் எனக் கூறப்பட்டிருக்கலாம்.

'சிந்தாதேவி செழுங்கலி நியமித்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்

வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
ஏனோர் உற்ற இடர்களை வாயெனத்
தான் தொழுதேத்தித் தலைவியை வணங்கி '

[14 : 17–21]

என்றவாருக ஆபுத்திரன் தேவியை வணங்கிய நிலையைக் குறிப்பிட்டுள்ளார் மணிமேகலை ஆசிரியரான சாத்தனார். இதனை ஆராயும் பொழுது சக்தியை வழிபடுங்கால் ஆபுத்திரனின் அன்பின் ஆராமை வெளிப்படுவதை அறியலாம்.

காளி:

" நாற்பெருவாயிலும் பாற்பட்டோங்கிய
காப்புடையிஞ்சிக் கழுது வழங்காரிடை
யுலையா வுள்ளமோடு யிர்க்கட னிறுத்தோர்
தலை தூங்கு நெடுமரந் தாழ்ந்து புறஞ்சுற்றிய
பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும் "

[6 : 48–53]

சக்தியின் கூருகிய காளிக்குச் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த கோவில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நரபலி இடும் பீடிகையும், பலிக் கடனுக அறுத்த தலைகள் தொங்கும் நெடுமரமும் மணிமேகலையில் வருணிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பீடிகையும் உயர்ந்த மதில்களும் நான்கு பெருவாயிலும் ஆரிடையும் உடைய தேவி கோவில்கள் இன்றும் மலபாரில் காணப்படுகின்றது. ஆயின் இன்று நரபலி கொடுக்கும் வழக்கம் அங்கு மேற் கொள்ளப்படவில்லை என்பது எண்ணத்தக்கது. நாடியம்மன் என்ற தெய்வம் இன்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் வழிபடப்படுகின்றது என்ற செய்தியும் இவண் கருதத் தக்கது.

சுடுகாட்டுக் கோட்டம் எனப்பட்ட காடமர் செல்வி கழி பெருங்கோட்டம் [6 : 30–53; 190–205], சக்கரவாளக் கோட்டமாக மாற்றப்பட்டதையும் மணிமேகலையி

லிருந்து உணரலாம். இதைப் பேராசிரியர் கே. கே. பிள்ளை யும் குறிப்பிட்டுச் செல்கிறார் [*K. K. Pillai, 1968 : p.528*]. சில புத்த கோவில்களைச் சமணர் தம் கோவில்களாக மாற்றினர். சமணக் கோவில்கள் பின்பு பகவதி கோவில் களாக மாற்றப்பட்டன [*K. K. Pillai. 1968 : p. 527*]. பழையறை வடதளிச் சிவன் கோவிலைத் தம் கோவிலாக் மாற்றினர் சமணர்கள். மகேந்திரவர்மன் பாடலிபுத்திரத்தி லுள்ள சமணப் பள்ளியை இடித்து, சிவன் கோவில் கட்டினான். இவ்வாறுகச் செல்வாக்கு பெறும் சமயங் களுக்கு ஏற்ப கோயில்கள் அங்கும் இங்கும் மாற்றப் பட்டன. ஆனாலும் புகுந்த சமயங்கள் தமிழகத்தில் நுழை வதற்கு முன்பே இருந்த பழங்கோவில்களே முதன் முதலில் இம்மாற்றத்திற்கு ஆளாகி இருக்க வேண்டும். அவ்வகை யில் தொன்மையான காளி கோவில்கள் பிற சமயப் பெண் தேவதைக் கோவில்களாக மாற்றப்பட்டிருக்க வேண்டு மென அறுதியிட்டுக் கூறலாம்.

கொற்றவையின் சீற்றம்:

உத்யகுமரன் வாளால் எறிந்த காதையில், வானிலே செல்வார் தூக்கை எழுந்தருளியுள்ள பெரிய விந்தமலையின் மேலே செல்லார் என்றும், அங்ஙனம் போவார் உளரா யின் அவள் மூண்டெழுந் சீற்றமுடையவளாய்த் தன் சாயையினால் இழுத்துத் தன் வயிற்றில் அடக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது [*116-119*]. இதன் வாயிலாகக் கொற்றவையின் சீற்றம் விளக்கப்பட்டுள்ளதை உணர லாம்.

வழிபட்ட பயன்:

ஆபுத்திரன் கலிமகனைத் தொழுது வணங்கி வழி படும் தன்மையினைப் பெற்றிருந்தமையால், அகங்கையில் இருந்த பிச்சைப் பாத்திரத்தை ஆபுத்திரனிடம் கலிமகள் அளித்தாள் எனப் பதிகம்: 80 கூறுகின்றது.

புராண வரலாறு:

சக்தியின் கூருகிய திருமகள் ஆடுவதற்குக் கொண்ட பாவையுருவைப் போலக் கொல்லிப் பாவை

உருக்கொண்டு ஆடினமையின் அக்கூத்தும் பாவையெனப் படும். அது போர் செய்தற்குச் சமைந்த கோலத்துடன் அவுணர் மோகித்து விழும்படி திருமகள் ஆடியது எனவும் அறியலாம். திருமகளின் உருவைக் கண்டவுடன் இளங்கோனுக்குக் காம உபாதை உண்டாயிற்று என்பது உணரத்தக்கது.

'திருவின் செய்யோள் ஆடிய பாவை'

[மணிமேகலை. 5 : 4.]

எனக் கூறப்பட்டுள்ளது போல சிலப்பதிகாரம் [3:109-110; 6 : 90-91] கூறுவனவும் இவண் ஒப்பு நோக்கத் தக்கன.

சம்பாதி வனமும் கவேர வனமும் மிக்க முதுமை உடையனவாகிய தீண்டி வருத்தும் பெண் தெய்வங்களை உடையனவாதலின் அறிவுடையோர் அவற்றை உறுதி யுடையவாகக் கருதி அவற்றின்கண் செல்லார் எனக் கூறப்பட்டுள்ளது [3 : 53-58].

சிறப்புக் கூறுகள்:

செய்யோள் [16 : 34] எனக் கூறப்படும் திருமக ளும் விரும்பும் காவிரிப்பூம்பட்டினம் எனக் காவிரிப்பூம் பட்டினத்தைச் சிறப்புறக் கூறுகின்றது மணிமேகலை [3 : 36]. மேலும் திருமகளும் விழைகின்ற தொன்னகர் வாழ்க என்று கூறப்பட்டுள்ளதும் உணரத்தக்கது [1:32]. 'திருமகளும் விழையும்' என்று கூறினுல் அதற்குத் தனிச் சிறப்பு அமையப்பெறும் என்று கருதியே சிலப்பதிகாரமும்

'திருவீழ் மார்பின் தென்னவர் கோவே'

[20 : 23, 25 : 79]

எனக் கூறுவது இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

மணிமேகலையும் கொற்றவையும்:

உதயகுமரன் மனம் மாறுதலடைந்து, விரைந்த செலவினையுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற பெரிய தேரின்மீது ஏறிச்சென்று அழுதசுரபி ஏந்திய மணிமேகலை யைக் கண்ட நிலையை உதயகுமரன் அம்பலம் புக்க காதை

யில் கூறுகின்றபொழுது ஆசிரியர் மணிமேகலையையும் கொற்றவையையும் ஒப்பிட்டுக் கூறுவதை,

" கரடமர் செல்வி கடிப்பசி கூர்ய
ஒடுகைக் கொண்டு நின்றாட்டுகள் போலத்
தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோ றீத்துப்
பாத்திரம் ஏந்திய பாவையைக் கண்டலும் "

[18 : 115-118]

என்ற அடிகளால் உணரலாம். கொற்றவையினை மணிமேகலைக்கு ஒப்பிட்டுக் கூறுவதன் வாயிலாக மணிமேகலைக்குத் தெய்வத்தன்மை அளிக்கக் கருதியே ஆசிரியர் சாத்தனார் இவ்வாறு அமைத்தாரோ என எண்ணத் தோன்றுகிறது. கொடிய பசியை உடைய மாக்களுக்குச் செழுஞ் சோறளித்துக் கடிஞை [பாத்திரம்] ஏந்தி நின்ற மணிமேகலையின் அன்புள்ளத்தினை உணரலாம். இவ்வுலக மக்களுக்குப் படியளக்கும் பொருட்டுச் சிவபெருமானிடம் இரு நாழி நெல்பெற்று உலகினை உய்விக்க முனைந்த உமை அம்மையின் நிலையையே திருக்குறிப்புத் தொண்டர் புராணம் [பாடல் எண்கள்: 70, 71] விளக்குவதை மேற்கூறப் பட்டதுடன் ஒப்பு நோக்கலாம்.

ஆதிரையும் சக்தியின் கூறுகிய திருமகளும்:

சாதுவன் இறந்தது கேட்ட ஆதிரை நல்லாள் கணவன் வினைப்பயன் செலுத்தச் சென்றவிடத்து யானும் புகுவேன் என்று அத்தீயிடைப் புக, அதன் உள்ளகப் படுத்தி ஒரு சேர வைத்துப் படுக்கையிடமும் உடுத்திய ஆடையும் ஒள்ளிய அழல் பற்றுமல் பூசிய சாந்தமும் அசைகின்ற குழலிற்சூடிய மாலையும் பழைய நிறம் வழுவாமல் மணம் பொருந்திய தாமரை மலரில் ஒப்பின்றி வீற்றிருக்கும் திருமகள் போல இனிதே இருந்தாள் என மணிமேகலையில் [16 : 3-34] கூறப்பட்டுள்ளது. செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகனை ஆதிரைக்கு உவமானமாகக் கூறியுள்ளதனை ஆயுங்கால் ஆதிரைக்கு உயர்வு நல்க விரும்பியே இவ்வாறு அமைத்திருக்கிறார் என்பது தெளிவு

சீவக சிந்தாமணியில் சக்தி

திருமகள்;

சக்தியின் கூருகிய திருமகள் பற்றிச் சிவக சிந்தாமணி யில் பதின்மூன்று இடங்களில் கூறப்பட்டுள்ளது. சிலம் பார்க்கும் மென் சீறடியாரைச் செய்பாவையை (திருவினை) ஒத்தவர் எனக் கூறுவது உணரத்தக்கது [2338 : 1]. பின்னர் மள்ளர் கடிகையோடு கூடிய கைவிளக்கை ஏந்திய புரிசை சூழ்ந்த கோயிலையும் பொன்னறையையும் பிற இடங்களையும் கடுகிச் சோதித்துக் காவலிட்ட பின்பு, செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் கைகூப்ப அவ் விடத்தே சென்று புக்கான் சீவகன் எனத் திருத்தக்க தேவர் நயம்பட நவில்கின்றார் [2350]. திருமகளினைத் தாமரைத் தாதுறைத் தேவி எனவும் வருணிக்கிறார் [342 : 1]. காந்தருவத்தையைத் தாயர் பற்பல்கால் தழுவிக் கொள்ள அம்மடந்தை போகையினூலே கலுழ வேகனுடைய அரண்மனை, திருமகளைப் போகவிட்ட தாமரை போன்று புலம்பொடு மடிந்தது என அழகுறச் சித்திரித்துக் காட்டுகின்றார் கவிஞர் [560 : 3-4]. அறிவர்தம் சிறப்பினைக் கூறும் பொழுது அவர்கள் திருமகள் விழையும் துகிலை அணிந்திருந்தனர் எனக் கூறு கின்றார் [2737 : 4]. விசையை வயிற்றில் அடித்துக் கொண்டமையால் திருமகற்கு அவலஞ் செய்தாள் என நவில்கின்றார் [267 : 4]. இங்கு அழகுத் தெய்வமாகத் திருமகளைக் கூறுவது குறிப்பிடத்தக்கது. திருமகள் வடி வாகச்செய்யப்பட்டதோர் ஆபரணமாகிய தெய்வவுத்தியை விசையை அணிந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது[217:2]. திருமுருகாற்றுப்படை : 23. இவண் கருதத்தக்கது. தத்தை யினைப் பற்றிக் கூறும் பொழுது,

" தெளிகயம் மலர் மேலுறை தேவியின்
ஒளியும் சாயலும் ஒப்புமையில்லாதவள் "

[1001 : 1-2]

என நவில்கின்றார். தத்தை, திருமகளைவிடச் சிறப்புடைய

வள் எனக் கவிஞர் கூறுவதிலிருந்து திருமகள் ஓர் அழகு வரம்பாகக் கருதப்பட்டதை அறியலாம்.

திருமகளும் காந்தருவதத்தையும்:

போகத்தின் வழியைக் காட்டும் திரு வந்து கூடிய தன்மையை ஒப்பவள் காந்தருவதத்தை எனக் கவிஞர் பாடுகிறார் [798 : 4]. சீவகன் உற்ற சிறையைத் திருமகள் நீக்குமென்று கூறியதனால் பழி இல்லையாய் முடியுமாயின் அவளென்றும் யானென்றும் வேறுபாடில்லை எனக் காந்தருவதத்தை உரைப்பது போன்று அமைக்கின்றார் கவிஞர். மேலும் தத்தைக்கெல்லை வெள்ளிமலை என்றும் திருமகளைப் பொது மகள் என்றும் கூறக்காரணம் திருமகள் எல்லோரிடமும் சேர்தலும், காந்தருவதத்தை அவ்வாறு அமையாததுமே எனலாம் [1150].

திருமகளும் விதையத்தரசன் மகள் விசயையும்:

விதையத்தரசன் மகளாகிய விசயை இவ்வுலகிற் பெண்ணால் வணங்குதற்குரிய தேவரும் போற்றி வணங்கும் நீர்மையுடையளாயினள் எனச் சிறப்பித்துக் கூறுகின்றார் [162 : 3].

'விதையக்கோன் செய்தான் விருந்து'

நளவெண்பா [3 : 79]

எனக் கூறுவது நினைவு கூரத்தக்கது. மேலும் இமவானில் மரகதப் பாறையிற் பதுமையென்னும் கயத்தில் தோன்றிய பொற்றுமரைத் திருவென்ன விசயை என விசயையைத் திருமகளுடன் ஒப்புமைப்படுத்தி அமைக்கிறார் ஆசிரியர் [183 : 1-3]. இமவான், மகா இமவான், நிஷதம், நீலி, ருக்மி போன்ற மலைகள் ஆறு அமைந்துள்ளன என்றும் அவற்றில் முறையே பத்மை, மகாபத்மை, திங்கச்சை, கேசரி, புண்டரீகை, மகா புண்டரீகை என ஆறு பொய்கைகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது. அப் பொய்கைகளில் முறையே ஸ்ரீ ஹ்ரீ, க்ருதி, கீர்த்தி, புத்தி, லட்சுமி என ஆறு மங்கையர் தோன்றினரெனவும் மைன நூல் வழக்கு நவில்கின்றது.

'தெய்வத் தாமரைத் திருமகள்'

பெருங்கதை [1 : 34 : 149]

எனக் கொங்குவேளிர் கூறியுள்ளமை இங்கு கருதத்தக்கது.

நாமகள்:

சக்தியின் கூறுகிய நாமகளைச் செல்வி என்கிறார் கவிஞர் பெருமான் [369 : 4]. கல்விச் செல்வத்தைக் கொடுப்பவளாதலின் நாமகளைச் செல்வி என்றுரைனலாம். சீவகன் ஒரு சேரக் கல்வி நலத்தை விரும்பிக் கற்ற தன்மையினை,

'நாமகள் நலத்தை யெல்லா நயந்துடன் பருகி'

[370 : 1]

எனப் பாடுகின்றார். திருத்தக்கத் தேவர் 'நாமகள் நலம்' எனக் கூறியுள்ளமை கல்வி நலத்தையே என்பது பொருந்தும்.

காந்தருவதத்தையும் மலைமகளும்:

மலைக்கு வேந்தன் மகளெனக் கொண்டமையால் மலைமகளெனக் காந்தருவதத்தை கூறப்படுகிறாள் [1696: 1; 1745 : 4; 1751 : 3]. மலைமகள் என்று கூறும் பொழுது உடன் நினைவுகூரத் தக்கதாகச் சக்தியே அமைகின்றாள்.

நிலமகள்:

சக்தியின் கூறும் மண்மகளாகிய நிலமகள் தன் நற் குணத்தாலே இங்ஙனம் கடிய மறங்களை என் கண்ணுற் காணமாட்டேன் என்று கருதிப் பெரிய நிலமெல்லாம் பரந்த உதிரமென்கின்ற செய்யதொரு படாத்தாலே மறைத்தாள் எனத் தன் கருத்தினை ஏற்றித் தற்குறிப்பேற்றணியாக அழகுபடக் கூறுகின்றார் மணநூலின் ஆசிரியராகிய திருத்தக்கதேவர் [2233]. பூமிதேவி, குணத்தினுல் கடியனவற்றைக் கண்ணினுற் காண்க்லேனெனுக் கம்பல மொன்றினுல் தன்னை மறைத்திட்டாள் எனக் களவழி [32] கூறுவது இவண் ஒப்புநோக்கற்பாலது. கோவிந்தையின்

தந்தை சிவகனை மணம் பொருந்தி மணமகன் ஆவாயாக என்று நவில்கின்ற ஞான்று, அவர் இடையர் குலத்தைச் சார்ந்தவர் என நினைக்கவேண்டாமெனத் தெளிவுபடுத்துவ துடன், மணமுள்ள கடப்ப மாலையை அணிந்த முருகக் கடவுள் வள்ளியின் நலனை நுகர்ந்ததையும், நிலமகட்குக் கேள்வனுகிய திருமால் நப்பின்னையை மணந்தமையையும் எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. கண்ணபிரான் தேவிமார்களுள் நப்பின்னையும் ஒருத்தி.

'ஆயர்பாவை நப்பின்னை தனக்குரை'

[பெரிய திருமொழி 2 : 3 : 5]

எனக் கூறுவது நினைவு கூரத்தக்கது.

சக்தியின் கூருகிய இருநிலமடந்தை என்ற திரு விசும்பு, தத்தைக்குச் சிறந்த யாழ் செய்வதற்குப் பயன் பட்டது என்ற குறிப்பும் காணப்படுகின்றது [720 : 1].

துர்க்கைக்குக் களவேள்வி:

சக்கர வியூகமாக வகுத்த படையாகிய வினை நிலத்தே அம்பையும் தண்டாயுதத்தையும் விதையாக விதைத்துப் பிணமாகிய நெல்லை விளைவித்த பிறகு குருதி யாகிய நெய்யுடனே இறைச்சியாகிய ஊழ்படு சோற்றைப் பல பேய்கட்கு ஊட்டி வென்றி விரும்பும்படி களம் வேட்டு நின்றவர்கள் காந்தருவதத்தையைப் பெறுகின்றார்கள் என்ற பொருள்படக் கவி உரைக்கின்றார் [757]. 'வென்றி' என்பது வெற்றியைத் தரும் துர்க்கையையே குறிக்கின்றது என நச்சினார்க்கினியர் நவில்கின்றார். எனவே துர்க்கைக்கு ஏவல் செய்யும் பேய்கட்குக் குருதியும் இறைச்சியும் ஊட்டப்பட்டமையைத் தெள்ளிதின் உணரலாம்.

வன தேவதை:

நுசுப்பினையுடைய கொல்லிப் பாவையை ஒத்த நல்லார் நோந்து கலத்தே அமிர்தத்தை ஏந்தவும் நோக் காத விசையை, காந்தட்டுடுப்பு போன்ற தன் கை தானே அடகையருள அதனை நுகர்ந்து இல்லுறை தெய்வமன்றி வனத்தே உறைவதொரு செய்ய தெய்வமாளுள் எனக்

கூறப்பட்டுள்ளது [354]. இங்கு கூறப்பட்டுள்ள வன தேவதை சக்தியின் காவல் தேவதையாகக் கருதப்படுகின்றது.

காளி:

காளியென்னும் சொல் சிந்தாமணியில் துர்க்கையைக் குறிக்கவில்லை. காளியென்னும் பல் பற்றிய குறிப்பே காணப்படுகின்றது.

' அழுந்தி ஆழ்ந்த மூன்றெயிறு '

[1288 : 2]

என்ற சீவக சிந்தாமணி பாடலடிக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும் பொழுது மூன்று எயிறுகளாக காளி, காளாத்திரி, யமன் என்பனவற்றைக் குறிப்பிடுகின்றமை எண்ணத்தக்கது.

" கடுவமரும் கரலெயிற்றுக்கும் பெயர் சொல்வேன்
காளி காளாத்திரி யமன் யமதூதனும் "

எனச் 'சிந்தாமணிச் சிந்து' என்ற விஷை வைத்திய நூல் வழங்குகின்றது.

கொல்லிப்பாவை:

ஐம்பொறிக்கும் இனிய நுகர்ச்சிகளைக் கணவனுக்குக் கொடுத்துப் புணர்தற்கு அமைந்த விசையையும் அவனுக்குக் கொல்லிப் பாவைபோல் தங்கும் என்றவாறுகக் கவிஞர் நவில்கின்றார் [197]. 'ஒப்பரும் பாவை' என்பதற்கு உரை கூறும் பொழுது கொல்லிப்பாவை எனக் கூறுகின்றார் நச்சினார்க்கினியர் [197 : 4].

கொல்லிப்பாவையும் தத்தையும்:

வில்லின் தொழிலையுடைய காந்தருவதத்தை தெய்வத்தாற் செய்த கொல்லிப்பாவை போல் இருந்து யாழை வாசித்து அதற்கேற்பப் பாட, பொழில் உருகி வளைந்தும் தூண் தளிரை ஈன்றும் கின்னர மிதுனங்கள் மெய் மறந்து வீழ்ந்தும் காட்சியளித்ததாகக் கூறப்பட்டுள்ளது [857]. இங்கு காந்தருவதத்தை இருந்து யாழ் வாசித்த நிலையைக் கொல்லிப்பாவையின் நிலைக்கு ஒப்பிடுவது உணரற்பாலது.

'பூதம் புணர்ந்த புதியல் பாவை'

[நற்றிணை : 192]

எனக் கூறுவது கருதத்தக்கது. தத்தையின் நிலையைக் கொல்லிப்பாவைக்கு ஒப்பிட்ட திருத்தக்கதேவர் விசையையும் கொல்லிப்பாவைக்கு ஒப்பிட்டு அமைத்துள்ளமை வியத்தற்குரியது [354 : 1].

இயக்கி:

'இயக்கி' என்பது யக்ஷி தேவதையைக் குறிக்கிறது. இருபத்து நான்கு தீர்த்தங்கார்களுள் ஒவ்வொருவர்க்கும் பணி செய்வதற்கு உரியவர்களாக யக்ஷனென்றும், யக்ஷி யென்றும் உள்ளாரெனச் சைனநூல் கூறுகின்றது. இப் பெயர் கன்னியாகுமரிப் பக்க ஊர்களில் இசக்கியென வழங் கப்படுகின்றது [(நிலப்பதிகாரம். 15 : 115-119) உ. வே. சா. அடிக்குறிப்பு. பக்கம் : 405]. சக்தியை அம்மன் என்பது போல இயக்கியை இசக்கி அம்மன் எனக் கூறும் வழக்கைக் காண்க. 'இயக்கன்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஆட்பெயராக, மக்கள் பெயராக இடம் பெறுவது இங்கு குறிக்கத்தக்கது. [புறம் 71 ; 14]. 'இயக்கி' என்பது 'இசக்கி' எனத் தென்னாட்டில் வழங்கும் என நச்சினார்க்கினியரும் [சீவகசிந்தாமணி 596 : 3] உரை கூறுவதும் உணரத்தக்கது.

இயக்கியின் இயல்பு:

ஆடையுடன் பிறத்தலும் மயிர் பிறந்த காலத்தி லிருந்தபடியே இருத்தலும் இயக்கர்க்கு இயல்பு எனக் கூறப்பட்டுள்ளது [1015:1].

இயக்கியும் சித்திரமும் :

மின்போல் தோன்றப்பட்ட மண்டபத்தில் ஆண் யானை, பெண்யானை, கலைமான், மயக்கமுறு பாவையோடு ஆதி தெய்வமாக இயக்கியது நிலையும் எழுதப்பட்ட குறிப்பு காணப்படுகின்றது [596:3].

இயக்கியை வழிபட்ட பயன்:

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களைக் கெடுக்கின்ற சிந்தையாலே இருளினை அகற்றும் பருதி போல்வாரடியை இறைஞ்சின அளவிலே இயக்கி தோன்றி எதிர்கொண்டு அமிர்தத்தைத் தந்து பேணி விருந்தூட்டுகிறது [1178]. இயக்கி, காப்பியத் தலைவனுகிய சீவகனுக்கு விருந்து செய்த குறிப்பு காணப்படுகின்றது [1248 : 3]. மகளிரை வசீகரப்படுத்தும் மந்திரத்தை ஓதி ஒரு வில்லினது அம்பு சென்ற அளவையொத்த எல்லையைப் போலும் அவ்விடத்தே பவதத்தனின் மனைவியை இயக்கி கொண்டுவந்து தரும் எனச் சீவகன் கூறுகிறான் [1600:1-2].

இயக்கியின் செயல் :

விசயை இருந்த மயிற்பொறியைக் கூனியது உருவாகிய இயக்கி மறைத்துக் கட்டியங்காரனும் கோவிந்தனும் தேவியைத் தேடாமற் காத்ததாகக் கூறுகின்றார் திருத்தக்கதேவர் [301]. மேலும் விசயை காட்டில் வருந்தி இருந்த பொழுது இயக்கி இவளிடத்து நின்றும் நீங்காத சண்பக மாலையென்னும் கூனியது வடிவைக் கொண்டு அமர்ந்து குறுகியதையும் காணலாம் [314]. மேற்கூறிய இரண்டு செயல்களை இயக்கியின் செயலாகக் கவிவலவர் கூறுவது இங்கு கருதத்தக்கது.

இயக்கியும் கனகமாலையும்:

குழையும் தோடும் பிறழக் கழுத்தை இடத்தே சாய்த்துச் சிறிதும் இமையாளாய்ச் சீவகனிடத்துப் புணர்ச்சியை நினைத்திருந்த கனகமாலை இயக்கியிருந்த அழகை ஒத்து அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறாள் [1658]. இதன் வாயிலாக இயக்கியும் தனக்கு மேலாய

இறைவனைத் தியானித்து இமையாதிருப்பாளென்பதை உணரலாம்.

சிவபெருமான் உமைக்குத் திருமேனியிற் பாதி கொடுத்தமை:

மலையரையன் மனைவியாகிய மேனை பெற்ற கோதையைப் பாகத்தே வைத்தவன் அரன் என்ற குறிப்பு காப்பியத்தில் காணப்படுகிறது. [208 : 1-2]. கங்காதேவியை மணந்தது அறிந்து ஊடிய உமா தேவியை மகிழ்வித்தற் பொருட்டு சிவபெருமான் தமது திருமேனியிற் பாதியைக் கொடுத்தருளினர் என்று நர்ம பரீகஷை தெரிவிக்கின்றது.

மகளிர்-உமை ஒப்புமை:

சீவகனுக்குக் கொடுத்தற்குச் சமைத்தெடுத்த கோதைகள் தம்மிற் பிணங்க ஓடிச் சென்று சிறையழிந்த தேன் செம்பொனுந்தியிலே பொழிந்தொழுக, அக்கோதையை ஏந்திச் செம்பாதி அணியாத நாணத்தாலே ஒரு பாகம் மறைய நின்றவர்கள், சிவபெருமான் ஒரு பக்கத்திலே கொள்ளப்பட்ட உமையையொத்தார் [2587 : 2-4].

குன்றனனும் அமிர்தனளும் சிவனுக்கும் உமைக்கும் ஒப்புமை:

குன்றனனும் கொடியாகிய அமிர்தனளும் முன்பு இலக்கமாய் நின்று, பின்பு அவர், சிவபெருமானும் உமையம்மையும் சேர்ந்ததொத்து நீங்காத வண்ணம் ஒருடம் பாயினரெனக் கவித்துவத்துடன் அமைக்கின்றார் திருத்தக்கதேவர் [188].

சக்தி — சிவன்:

'போகம் ஈன்ற புண்ணியன்' [362 : 3]

எனச் சிவபெருமானைத் திருத்தக்க தேவர் பாடியுள்ளமைக்கு நச்சினார்க்கினியர் உரை நவில்கின்ற பொழுது சக்தியும் சிவனுமாய் உலகத்துக்கெல்லாம் இன்பத்தை உண்டாக்கியவன் என நவில்கின்ற பாங்கு வியத்தற்குரிய தாய் அமைகின்றது.

சீவகனும் குணமாலையும் இருந்த நிலையை உருத்திரனும் உமையும் இருந்த நிலைக்கு ஒப்புமை கூறல்:

உருத்திரனும் உமையும் போல, சீவகனும் குண மாலையும் ஒன்றுயிருந்ததைக் குறிப்பிடுகின்றார் திருத்தக்க தேவர் [1083 : 1-3]. சீவகனும் குணமாலையும் ஒன்று யிருந்த நிலையினைச் சிவபெருமானும் உமா தேவியாரும் இருந்த நிலைக்கு ஒப்புமை கூறல் நோக்கத்தக்கது.

முடிவுரை:

தமிழ் நாட்டில் உள்ள தொன்மையான கொற்றவை கோவில் பகுதிகள் மற்றைச் சமயச் சக்கரவாளக் கோட் டங்களாக மாற்றம் பெற்ற நிலையினையே மணிமேகலையில் காண முடிகின்றது. விந்த மலையை வான் வழியாகக் கடந்து செல்லாத நிலை, கொற்றவைக்கு நல்கும் பெரு மதிப்பை எடுத்துக் காட்டுகின்றது. கொற்றவை தன் சுற்றமாகிய பேய்க்கு உணவூட்டிய செய்தியும் இடம் பெறு கின்றது. இவற்றின் வாயிலாகக் கொற்றவை கோவில் புறச்சமயச் சூழலால் ஏற்பட்ட மாற்றம், விந்தமலைப் பகுதி யில் கொற்றவை வணக்கத்திற்குக்கொடுக்கப்பட்ட மதிப்பு, கொற்றவை கூளிச் சுற்றத்திற்கு உணவூட்டுவது ஆகிய புதிய புதிய செய்திகளை மணிமேகலை கூறிச் செல்கின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி கொற்றவையோடு ஒப்பிடப் படுவதுபோல அமுத சுரபி ஏந்தி மக்களின் பசி தீர்க்கும் மணிமேகலை, பேய்களின் பசி தீர்க்கும் காளியுடன் ஒப்பிடப்படுகிறாள்.

சக்தியின் கூறுகிய திருமகள் மகளிர்க்குச் சீவக சிந்தாமணியில் உவமிக்கப்படுகின்றாள். கல்வியையும் செல்வத்தையையும் நிலத்தையும் முறையே நாமகள், பூமகள், மண்மகள் என்று உருவகித்துத் தனித்தனி இலம் பகம் வகுத்து, சீவகன் அவர்களைத் திருமணம் செய்வது போல் காட்டப்பட்டுள்ளது. இம்மூன்று நிலையும் சக்தியின் மூன்று கூறுகளாகும். கல்வியாற்றல், செல்வ ஆற்றல் முதலிய ஆற்றல்கள் தான் காலப் போக்கில் பெண்களாக

உருவகிக்கப்பட்டுச் சக்திகளாக வணங்கப்பட்டனவோ? என்ற எண்ணத்தைச் சீவகசிந்தாமணி எழச் செய்கின்றது. இயக்கி என்ற சமணப் பெண் தேவதை சக்தி வழிபாட்டிற்கு வந்த வரலாற்றைச் சிந்தாமணி வாயிலாக ஒருவாறு அறியலாம். பல சமயங்களிலும் உள்ள பெண் தேவதைகள் பழம்பெரும் சக்தி வழிபாட்டில் படிப்படியாகப் புகுந்து ஒன்றுகக் கலந்த நிலையை இது காட்டுகின்றதெனலாம். சக்தி சிவனின் பாகமாய் அமைந்த மங்கை பங்கன் வடிவத்தை அடிக்கடி உவமையாக எடுத்துக் கூறுகின்றார் திருத்தக்க தேவர். இவ்வாறு வைதீக சமயங்களில் தேவதைகளை உவமைகளாகத் திருத்தக்க தேவர் பயன்படுத்தினாலும் தம் சைன சமய இயக்கித் தேவதையையும் சக்தி போலப் பாடிச் செல்கின்றார் திருத்தக்க தேவர்.



பயன்பட்ட நூற்கள்

1. மணிமேகலை
   — கழக வெளியீடு
2. சீவக சிந்தாமணி
   — நச்சினார்க்கினியர் உரை
3. சிலப்பதிகாரம்
   அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும்
   — டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்
4. வளையாபதி
   — கழக வெளியீடு
5. குண்டலகேசி
   — கழக வெளியீடு
6. திருமுருகாற்றுப்படை
   — கழக வெளியீடு
7. தர்ம பரிக்ஷை
8. சித்தராருடச் சிந்து
9. நற்றிணை
   — கழக வெளியீடு
10. புற நானூறு
    — கழக வெளியீடு
11. பெருங்கதை
    — கழக வெளியீடு
12. கள்வழி நாற்பது
13. நள வெண்பா
14. பெரிய திருமொழி
15. தமிழிலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு
    — பி. எல். சாமி,
    ஆராய்ச்சி, மலர் 3, இதழ் 2. அக்டோபர், 1972.
16. பெரிய புராணம்
    — சேக்கிழார் சுவாமிகள்
17. A Social History of the Tamil
    — *K. K. Pillai.*

13

பரணி இலக்கியங்களில் சக்தி

பரணியின் இலக்கணம்;

செவி வழிச் செய்தியாக இருந்த வரலாற்றுச் செய்திகள் இலக்கிய உருப்பெற, அவ்வக் காலத்தில் வாழ்ந்த அரசர், படைத் தலைவர் ஆகியோரின் வரலாறுகள் காரணமாக அமைந்தன. இவ்வரலாற்றைப் படைக்கும் இலக்கியங்களுள் ஒன்று பரணி. இது தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'

[குறள்: 108]

என்ற பொய்யில் புலவனின் வாக்கிற்கிணங்க, இந் நன்றியறிதலின் விளைவாகவே, உதவி செய்த தலைவனைப் புகழ்ந்து பாடும் வகையில் அமைவதன்றித் தலைவர்களுடைய வீரத்தைச் சிறப்புறப் பாராட்டிக் கூறும் வகையிலும் வீரத்தைப் பல்லாற்றுகச் சிறப்பித்துப் புறப்பொருளமைதி தோன்றப் பாட, ஏற்பட்டனவற்றுள் சிறந்தது பரணியென்றும் பிரபந்தம் என அறுதியிட்டுக் கூறலாம்.

'யானை சாய்த்த அடுதளத்தல்லது
யாவரும் பெருஅர் பரணிப் பாட்டே'

[பன்னிரு பாட்டியல் : 242]

'மூண்ட அமர்க்களத்து மூரிக் களிறட்ட
ஆண்டகையைப் பரவி ஆய்ந்துரைக்க'

[வெண்பாப் பாட்டியல்]

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி'

[இலக்கண விளக்கப் பாட்டியல்]

என்பதனால் பரணியின் இலக்கணம் தெளிவுறுதின் விளங்கும்.

போர்க்களத்தில் எதிரியின் யானைகளைக் கொன்று அழிப்பது வெற்றியா? எதிரியை வென்று அவன் யானைகளைக்கொண்டு வந்து தம் படைக்குப் பயன்படுத்துவது வெற்றியா? என்பது ஆய்வுக்குரியது. இலக்கிய மேற்கோள்களைக் கொண்டு ஆராய முற்படுங்கால் இரண்டையுமே வெற்றிச் சிறப்பாகக் கருதப்பட்டதை உணரலாம்.

'ஒளிரு வாருளருஞ்சமம் முருக்கி
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

[புறநானூறு 312 : 5-6]

என்ற அடிகளின் வாயிலாக யானையைக் களத்தில் கொல்வது வீரமாகக் கருதப்பட்டது என்பதை அறியலாம். ஆனால் சிலப்பதிகாரத்தில்,

'போரிற் கொண்ட பொருகரி முழக்கம்'

[புறஞ்சேரியிறுத்த காதை : 145]

என்ற அடியின் வாயிலாக, மாற்றரசன் யானைகளைப் போரில் வென்று உயிர்க்கு ஊறு ஏற்படாவண்ணம் கொணர்தலே வெற்றியாகக் கருதப்பட்டமையை அறியலாம். காலத்தால் முற்பட்ட பன்னிரு பாட்டியலும் வெண்பாப் பாட்டியலும் யானைகளைக் களத்தில் கொல்வதே வெற்றியென்று கூறுகின்றமை, மேற்கூறிய புறநானூற்றின் கருத்திற்கு ஒவ்வுகின்ற வகையில் அமைந்துள்ளது. இலக்கண விளக்கப் பாட்டியல், ஆயிரம் யானைகளைக் கொன்று சிறைப்பிடித்த வீரனுக்குப் பாடுவது பரணி எனக் கூறுகின்றது. இக்கருத்து மேற்கூறப்பட்டுள்ள சிலப்பதிகாரக் கருத்தோடு ஒத்து அமைந்துள்ளது. யானைகள் போரிடவும் புலவர்கட்குப் பரிசில் அளிக்கவும் சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டமையால், அவை பெருமதிப்பு வாய்ந்த உயர்தரப் பொருளாகக் கருதப்பட்டமை தெரிகிறது. எனவே அவற்றை வீணுகக் கொன்று குவிக்காது, அடக்கிக் கவர்ந்து கொண்டு வந்து தன் நன்மைக்காகப் பயன்படுத்தும் அரச மரபே சிறப்புடைய செயலாகக் கொள்ளப்படுகின்றது. அவ்வகையில் இலக்கண விளக்கப் பாட்டியல் பரணிக்குக் கூறும் இலக்கணம் சிறப்புடைத்தாக இலங்குகின்றது.

மேலும் கலிங்கத்துப் பரணியைப் பற்றி ஒட்டக் கூத்தர் பெருமான்,

" விருப்பரணில் வெங்களத்தி லேட்டுக் கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமான் "

[குலோத்துங்கன் சோழன் உலா]

என்று கூறுகின்றமையாலும், நூற்றுவர் கௌரவரைப் பாண்டவர் ஐவர் வென்றனர் என்பதை,

'பதாதியோடமரில் ஐவரும்பட மலைந்திடப் பரணி பாடவே'

[வில்லிபாரதம் : திருட்டிணன் தூதுச் சருக்கம் : 134]

என்று வில்லிபுத்தூரார் கூறுவதன் வாயிலாகவும் பரணியின் இலக்கணம் தெள்ளிதின் விளங்கும். 'பரணி' நூல் காப்பியச் செய்யுளியலில் தொடர்நிலைச் செய்யுட்களின் இலக்கணமாகக் கூறப்படுகின்ற அம்மை முதலிய வனப்புக்கள் எட்டினுள் விருந்து என்பதன் பாற்படும்.

பரணியென்னும் பெயர்க்காரணம்:

பரணியென்னும் பெயர்க்காரணம் பலவாருகக் கூறப்படினும் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்ற பரணியென்னும் நாண்மீனுல் வந்த பெயரென்பதே பொருத்தம் உடையதாகத் தோன்றுகின்றது. இது,

" காடு கிழவோள் பூதமடுப்பே
தாழி பெருஞ்சோறு தருமனுள் போதுமெனப்
பாகுபட்டது பரணி நாட்பெயரே "

[திவாகரம்]

என்பதால் விளங்கும். பரணி மீனின் அடுப்பு போன்ற அமைப்பிற்கும் பரணி நாளன்று அடுப்பேற்றிக் கூழ் சமைப்பதற்கும் உள்ள தொடர்பு ஆராயத்தக்கது.

' கனப் பரணிக் கூழ் '

' பண்டு மிகுமோர் பரணிக்கூழ் பாரதத்தில் அறியாமோ '

' மணலூறிற் கீழ் நாளட்ட பரணிக்கூழ் '

[கலிங்கத்துப்பரணி]

என்ற அடிகளால் பெயர்க்காரணத்தை உணரலாம்.

போர்க்களத்தில் ஒரு தலைவன் வெற்றி கொள்ள அப் போரில் வீழ்ந்தோர் உடலுறுப்புக்களாலும் பிறவற்றாலும் பேய்கள் கூழ் சமைத்துப் பரணி நாளில் காளிக்குப் பலி யிட்டு வென்றோனை வாழ்த்தும் வழக்கினைச் சிறப்பித் தலின் இப்பெயர் வந்ததென்பதை,

"காடுகெழு செல்விக்குப் பரணிநாளிற் கூழும்
துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்கு"

[தொல் : செய் : நூற்பா : 149. உரை]

என்ற பேராசிரியர் உரையால் அறியலாம். பரணி இலக்கி யம் கொற்றவையைப் பாடும் தேவபாணி ஆகக் கருதப் பட்டமையும் அவ்வுரைப் பகுதியால் அறியலாம்.

'பரணி பிறந்தவன் தரணியாள்வான்'

என்னும் பழமொழியும்,

'பரணியான் பாரவன்'

[நன்னூல் நூற்பா : 150–மயிலை]

என்னும் மேற்கோளும்,

'பரணி நாட் பிறந்தான்'

[சிவகசிந்தாமணி : 1813]

என்பதற்குப்

'பரணி யானே பிறந்த நாளாதலின் அதுபோலப் பகைவரை இவன் மடியான்'

என்று நச்சினார்க்கினியர் எழுதிய உரையும் பரணி நாள் வெற்றியின் தொடர்பு உடையதென்பதை அறிவுறுத்து கின்றன.

பரணியில் வரும் புறத்துறைகள்:

களவேள்வியிற் கூழுண்ட கூளிகள் மன மகிழ்ச்சி யால் குரவையாடுதல் மரபு; அச்செயல் பின்தேர்க்குரவை என்னும் துறையுள் அடங்கும்.

'ஒன்றிய மரபிற் பின்றேர்க் குரவையும்'

[புறத்திணை : நூற்பா : 21]

என்ற தொல்காப்பிய நூற்பாப் பகுதிக்கு,

'தேரோனை வென்ற கோமாற்கே பொருந்திய
இலக்கணத்தானே
த்தின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச்சுற்றம்
ஆடுங்குரவை'

என நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் இது நன்கு புலப்படும்.

இவ்வாற்றுகக் குரவையாடும் திறத்தினை முன்றேர்க் குரவையென்பர் புறப்பொருள் வெண்பா மாலையுடையார் [வாகைப்படலம்: எ. முன்தேர்க்குரவை].

குரவையாடும் கூளிகள் வெற்றி பெற்ற தலைவனைப் புகழும் செயலை மாணூர்ச் சுட்டிய வாண் மங்கலம் என்னும் துறையில் அடக்கலாம்.

'பகைவரைக் குறித்த வாள் வென்றியாற் பசிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்தும் வாண் மங்கலம்' ... ... இது பரணியிற் பயின்று வரும் என்ற நச்சினார்க்கினியர் உரை இங்கு நினைவூட்டத்தக்கது.

பரணி நூற்களின் பெயர்கள் :

கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி, இரணியன் வதைப் பரணி, திருச்செந்தூர்ப் பரணி, சீனத்துப் பரணி என்பன இன்று நமக்குக்கிடைக்கும் பரணி நூல்களாகும்.

மறைந்து போன பரணி நூல்களாக, தமிழ்ப் பரணி கொப்பத்துப் பரணி, கூடல் சங்கமத்துப் பரணி, கலிங்கப் பரணி, கலைசைச் சிதம்பரேசுவரர் பரணி, கஞ்சவதைப் பரணி ஆகியவை கருதப்படுகின்றன.

பரணியின் உறுப்புக்கள் :

பரணி என்னும் இலக்கிய மாளிகை கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, பேய் முறைப்பாடு,

காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, கூழடுதல் என்னும் உறுப்புக்களாகிய பகுதிகளைக் கொண்டு இலங்குகின்றது. மேற் கூறப்பட்ட பத்து உறுப்புக்களும் எல்லாப் பரணி இலக்கியங்கட்கும் உரியவை. பரணியின் உறுப்புக்கள், கடவுள் வாழ்த்து முதலாகக் கூழடுதல் ஈறுக உள்ள ஒரே அமைப்புடன் அனைத்துப் பரணி நூல்களிலும் அமைக்கப்படவில்லை. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது என்ற மூன்று உறுப்புக்கள் அனைத்துப் பரணி நூல்களிலும் முதல் மூன்று உறுப்புக்களாக அமைய, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது என்ற மூன்று உறுப்புக்களும் வரிசைமாறிப் பரணி நூல்களில் அமைந்துள்ளன.

கலிங்கத்துப் பரணி :

நமக்கு இன்று கிடைக்கும் பரணி நூல்களுள், காலத்தால் முற்பட்ட பெருமையும். வரலாற்றுப் புகழ்மிக்க சீர்மையும் கொண்டிலங்கும் காப்பியமாகவும், வீரமென்னும் இழை கொண்டு நெய்யப் பெற்ற வெற்றிப் பனுவலாகவும் 'தென் தமிழ்த் தெய்வப் பரணி' என ஒட்டக்கூத்தரால் பாராட்டப் பெற்ற இலக்கியப் பனுவலாகவும் விளங்கும் கலிங்கத்துப் பரணியின் மனத்தினைக் கவரும் தன்மையினை உணர்ந்து,

'எனக்கு மிகவும் விருப்பமான இலக்கியம் ஒன்று
உண்டென்றால் அது கலிங்கத்துப் பரணிதான்'

எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது. முதற் குலோத்துங்க சோழன் கி.பி. 1112-ல் கலிங்க மன்னனோடு போர் செய்து பெற்ற வெற்றியினைப் புகழ்ந்து சயங்கொண்டார் இயற்றிய வீரக் காவியமாகிய கலிங்கத்துப் பரணியில் சக்தியின் கூருகிய கொற்றவை உறைகின்ற இடமாம் பாலையைச் சார்ந்த காட்டினைக் குறித்தும் அவர் வசிக்கும் கோயில், அவளுடைய உறுப்புக்களின் அமைப்பு, அவளின் செயல் பற்றியும் நோக்குவோம்.

பாலை நில வருணனை:

காளி உறையும் இடமாகிய பாலை நிலத்தைச் சார்ந்த நாட்டின் இயல்பினைக் 'காடு பாடியது' என்ற பிரிவின்கண் அமைத்துப் பாடுகின்றார் சயங்கொண்டார்.
'காடு பாடியது' என்பது,

'மலர்தலை உலகத்து மரபு நன்கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து'

எனத் தொல்காப்பியத்தில் புறத்திணையியல் : 24-இல் விளக்கப்பட்டுள்ளது.

கதிரவன் தெறுதலால் பொரி பொரியாய்ப் போன காரை, கரிந்த சூரை முதலான செடிகள், கொடிகள், மரங்கள் அக்காட்டில் எங்கும் காட்சி அளிக்கின்றன (76). பருந்துகளும் புறுக்களும் சிந்தை கூர, செந்நாயின் வாயின் நீரினை நக்கி விக்கும் மான்களும் அக்காட்டில் சில இடங்களில் காணப்படுகின்றன [88]. மெலிந்த பேய்கள் வாயிலுள்ள ஈரம் புலர்ந்து தங்களின் வறண்ட நாக்குகளை நீட்டுவன போல, முதிர்ந்த நீள் மரங்களின் பொந்துகளிலிருந்து பெரிய பாம்புகள் தலை நீட்டி நிற்கின்ற காட்சியினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் சயங்கொண்டார் [89]. பாலையின் கொடுமையினைச் சித்தரித்துக் காட்ட விழைந்த சயங்கொண்டார்,

'செங்கெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பங்கெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புரு வதனி டைப்புரு'

[82]

என்றும்

'அணிகொண்ட குரங்கினங்கள்
அலைகடலுக்கு அப்பாலை
மணலொன்று காணுமல்
வரையெடுத்து மயங்கினவே'

[96]

என்றும் பாடுகின்ற திறம் வியத்தற்குரியது.

கோயிலின் இயல்பு:

சிலப்பதிகாரம் காடுகாண் காதையிலும் வேட்டுவ வரியிலும் முறையே பாலைநிலமும் கொற்றவை கோயிலும் ஒன்றன்பின் ஒன்றுக வருணிக்கப்படுகின்றன. இது போலவே கலிங்கத்துப்பரணியிலும் காடு பாடியது, கோயில் பாடியது என்ற இரு பகுதிகளும் அடுத்தடுத்து பாலை நிலத்தையும் கொற்றவை கோயிலையும் வருணிக்கின்றமையை உணரலாம். இவ்வொப்புமை காணப்படுவது தலத்தையும் அத்தலத்தில் இருக்கும் கோவிலைப் பற்றியும் கூறும் ஓர் இயல்பான போக்கேயாயினும் இது இளங்கோவடிகளைப் பின்பற்றிச் சயங்கொண்டார் செய்த இலக்கிய அமைப்பாகவே கருதத்தகும்.

காளி உறைகின்ற காட்டிலைத் தென்னிதின் விளக்கிக் கூறிய சயங்கொண்டார், அவளது கோயிலின் இயல்பினைக் 'கோயில் பாடியது' என்ற பிரிவின்கண் கூறுகின்றார்.

குலோத்துங்கன் வாளின் வாயினுல் பட்ட மன்னர்களின் பட்டத்து தேவியருடைய நகைகளிற் பதித்த இரத்தினங்களைக் கருவாகக்கொண்டு (அடித்தளம்) [98], சேரநாட்டு வீரர்களின் கொழுப்பாகிய சேற்றோடு அவர்களின் உடலிலிருந்து பெருகும் இரத்தமாகிய செந்நீரைக் குழைத்து அவ்வீரர்களின் பெரிய தலைகளைக் கற்களாக அடுக்கியது போல கோயிலின் சுவர் அமைந்துள்ளது [99]. பகைவர் நாடுகளிலுள்ள காவற்காடுகளை அழித்து அவற்றில் உள்ள மரங்களால் அக்கோயிலுக்குத் தூண்களும் உத்திரமும் அமைக்கப்பட்டது [100]. மிதிலை நகரப் போரில் இறந்துபட்ட யானைகளின் கொம்புகளைத் துலாமாகவும் அவைகளின் விலா எலும்புகளைப் பாவாகவும் அமைத்து அக்கோயில் கட்டப்பட்டது [101]. விசயதரன் தன் பகைவேந்தரை வென்று அவர்கள் யாளி, யானை முதலிய துகிற்கொடிகளால் அக்கோயிலின் மேல் முகட்டை அமைத்ததாகக் கூறப்படுகின்றது [102]; துலாம், பா, நாசிகை என்பன உத்திரத்தின் மேல் அமைக்கப்படும் ஒரு வகை உறுப்புக்கள் என்பது உணரற்பாலது.

போரில் கவர்ந்த யானைகளின் முகப் போர்வையால் அக் கோயிலின் முகடு மூடப்பட்டது [103]. கோயிலின் கோபுரமும் மதில் சுவர்களும் எலும்பினால் கட்டப்பட்டன என்பதைக் கூற விழைந்து,

'கொள்ளிவாய்ப் பேய்காக்குங்
கோபுரமு நெடுமதிலும்
வெள்ளியாற் சமைத்ததென
வெள்ளெலும்பி னற்சமைத்தே'

[104]

என்றவாருக நயம்படப் பாடுகின்ருர் கவிஞர்.

'சுழலு மழல்விழிக் கொள்ளிலாய்ப் பேய்'

[திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகம்-7] என்று காரைக் காலம்மையார் கூறுவது ஒப்புநோக்கற்பாலது.

'காரிரும்பின் மகரதோ
ரணமாகக் கரும் பேய்கள்
ஓரிரண்டு காணுட்டி
ஓரிரும்பே மிசைவளைத்தே'

[105]

எனப் பாடுவதன் வாயிலாக, பேய்கள் அக்கோயிலின் வாசலுக்கு எதிரில் இரும்புத் தூண்களை நட்டு அவைகளின் மேல் ஓர் இரும்பை மகர தோரணமாக வளைத்து வைத் ததை உணரலாம்.

மகர தோரணம் என்பதற்கு 'மகரவடிவமைந்த ஓர் அலங்காரத் தொங்கல்' எனப் பொருள் கூறப்பட்டுள்ளது [*Tamil Lexicon. Vol. V. p. 2980*].

இவ்வாற்றுகப் பேய்கள் நடமாடும் காளி கோவிலின் சூழ்நிலையை அச்சம் தரும் வண்ணம் படம் பிடித்துக் காட்டுகின்ருர் கவிஞர். கலிங்கத்துப் பரணி காட்டும் கோயில், வீரத்தின் கண்காட்சிச் சாலையாகவே திகழ்கின் றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வழிபாட்டியல்பு:

தேவியை வழிபடுவோர் அக்கோயிலைப் பெருக்கி இரத்தமாகிய நீரைத் தெளித்துக் கொழுப்பாகிய மலரைத் தூவி ஈமமாகிய விளக்கை ஏற்றி வைத்தனர் [108]. 'ஈம விளக்கு எம்மருங்கும் ஏற்றியது' என்று பாட்டின்கண் கூறப்பட்டுள்ளதை ஆராயுமிடத்து, தேவியின் கோயில் சுடலையின் நடுவில் உள்ளதென்பதும் தெற்றென விளங்கும்.

காளி தேவியின் கோயிலில் வீரர்கள் திரண்டு நின்று, தேவியே! நாங்கள் விரும்பும் வரத்தைத் தருவாயாக; அவ்வாறு தந்தால் எங்கள் உடலில் உள்ள உறுப்புக்களை அரிந்து பலியாக உனக்குத் தருகிறோம் என்று முழக்கம் செய்வதை,

> " சலியாத தனியாண்மைத் தறுகண்வீரர்
> தருகவரம் வரத்தினுக்குத் தக்கதாகப்
> பலியாக வுறுப்பரிந்து தருதுமென்று
> பரவுமொலி கடலொலிபோற் பரக்கு மாலோ "
>
> [109]

என்ற பாடலால் அறியலாம்.

தேவியை வழிபடுவோர் தமது எலும்புகளை விறகாக இட்டும் இரத்தத்தை நெய்யாகச் சொரிந்தும் வேள்வி புரிவர் [110].

தேவியை வழிபடுவோர் தமது தலைகளை அறுத்துத் தேவியின் கையில் கொடுக்க, அத்தலைகள் தேவியைப் போற்றி நிற்க, தலை குறைந்த உடல்களோ தேவியைக் கும்பிட்டு நிற்கின்றன என்பதை,

> 'அடிக் கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
> அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
> கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
> குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ'
>
> [111].

என்று வீரம் ததும்பும் வண்ணம் பாடுவதன் வாயிலாக உணரலாம்.

'அச்சம் அது அறத்தமது உயிர்க்கொடை
அளித்தவர் அறுத்த தலை'

[அரிச்—விலாச—121] எனவும்

'தலையரிந்து விடுவர் உயிர்விடார்'

[தக்கயா—91] எனவும்

கூறுவது இவண் ஒப்பு நோக்கற்பாலது.

பேய்களில் ஒருவகையினராகிய தேவியின் மெய்க் காப்பாளர்களாம் சாதகரென்பார் பறை, பம்பை, முழவு போன்ற தோற் கருவிகளின் ஒலியைக் கேட்டு தேவியை வணங்க வருவர் [115]. தேவியின் பரிவாரங்களாகிய யோகினி மாதர்கள் எழுவரெனவும் ஒன்பதின்மரெனவும் பன்னிருவரெனவும் கூறப்படுகின்றனர். இவர்கள் வாளா யுதத்தை வலக்கையிலும் வீரர்களின் பசிய தலைகளை இடக்கையிலும் கொண்டு தேவியிடம் வருவர் [116].

காளி தேவியின் வடிவம் :

'தெளந்தர்ய லகரி' என்ற நூலின்கண் கிரீடம் முதல் பாதாரவிந்தம் வரை' தேவி வருணிக்கப்பட்டுள்ளமை யால் காளி தேவியின் வடிவம் அவ்வாறே எழுதப்பட் டுள்ளது.

தேவி சந்திரனைப் போன்ற நெற்றியில் சூரியனைப் போன்ற சிந்தூரப்பொட்டை அணிந்தவள் [128]; எட்டுக் குலமலைகளையே காதணிகளாகவும் மாலையாகவு மணிபவள் [132]. மாலியவான், கந்தமாதனம், நிசதம், ஏமகூடம், இமம், நீலம், சுவேதம், சிருங்கம் என்பன எட்டு மலைகளாகும் என்பது கருதத்தக்கது. திரள் உருக, திரை புகையத் திசை சுடும்பொழுது இருளும் மிடற்று இறைவற்கு அமுதக்கனி அதரத்தினள் [130]; கடைக் கண் பார்வை பட்டு, தலைமாலை அணிந்த சிவபெருமானிற் குக் காமநோய் அற்று ஒழிய, குரவை, குதலை முறுவல் தரளத் திருவதனத்தினள் [131]; கயிலைக் களிறுகிய சிவபெருமான் விருப்புறும் முலைத்தரள வடத்திடையில் பவளமொடு ஒத்து, எரிய தழல் உமிழ்கின்ற பாம்பினை

மேலாடையாக அணிந்தவள் [128]; வீரர்களின் உதிரத்தை அள்ளிக் குடித்துச் சிவந்த தன் கைகளைத் திசையானைகளின் மத நீரிற் கழுவ, அதன் பொருட்டுக் கருமை நிறமடைந்த கைகளாகிய தாமரை மலர்களை உடையவள் [129]; மலைகளை அம்மானையாகவும் கந்துகமாகவும் கழங்குமாகவும் விளையாடும் தன்மை பெற்ற கரங்களை உடையவள் [133]; சிவபெருமான் நுகர்தற்கு நினைத்து, பொடி இட்டு இலச்சினை இட்டு, அமுதம் இருத்திய செப்புக் கிண்ணத்தை ஒத்த தனத்தை உடையவள் [125]; கல்வியால் மேன்மை அடைந்த பிரமனையும் கருமுகில் வண்ணனும் திருமாலையும் யானை முகனையும் முருகனையும் பெற்ற அழகிய வயிற்றை உடையவள் [127]. முருகனையும் தமையனையும் மக்கள் இருவரையும் ஈன்ற தாயாகச் சக்தி கூறப்படுகின்றாள். மாமி, தங்கை, தாய்மை அனைத்துமாக இருப்பது பெண்மைச் சக்தி என்பதை இது காட்டுகிறது. 'சத்நியிற்ற சதாசிவம்' எனத் திருமந்திரம் கணவனை மகனைக் கூறுவது இவண் பாற்பட்டது. தேவி யானைத் தோலைப் புனைந்து, அதன் குடலோடு பாம்பைச் சேர்த்து முறுக்கிக் கச்சாக அணிந்த இடுப்பை உடையவள் [126]; மந்தர மலையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி உலகைத் தாங்க முற்பட்டபொழுது ஏற்பட்ட ஆதிசேடனுகிய பாம்பின் பருமணி முத்து நிரைத்துத் தைத்த இரண்டு சிலம்பினைக் கொண்டு விளங்கும் இணையடியினைக் கொண்டு விளங்குபவள் [122].

கொலு இருக்கை:

தேவிக்கு எலும்புக் குவியலின் மேல் குடல்களாகிய கச்சிலால் கட்டப்பட்ட தீபக்கால் கட்டில் அமைக்கப்பட்டுள்ளது [153]. கட்டிலின் மேல் அணை உள்ளதை,

'பிணமெத்தை யஞ்சடுக்கிப் பேயணையை
முறித்திட்டுத் தூய வெள்ளை
நிணமெத்தை விரித்துயர்ந்த நிலாத்திகழும்
பஞ்சசய னத்தின் மேலே'

[154]

எனப் பாடுகின்றார் கவிச் சக்கரவர்த்தி சயங்கொண்டார்.

'பஞ்ச சயனம்' என்பது இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண் பஞ்சு, மயிர், அன்னத் தூவி என்பவற்றுல் அமைக்கப் படும் ஐவகைப் படுக்கையாகும். 'மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி' [திவ்விய-திருப்பாவை-19] என் பதற்கு, பஞ்சவிதமான படுக்கையின் மேலேறி, அதாவது அழகு, குளிர்ச்சி, மார்த்தவம், பரிமளம், தாவள்யம் ஆகிய இவை.....அஞ்சு உருவிட்டுச் செய்த படுக்கையெனினு மாம்' என ஆன்ருேர் விளக்கம் கூறுதல் இங்குக் கவனிக் கத்தக்கது.

பிண்டி, மழு ஆகிய எறி படைகளேத் தேவியான வள் தன் கையில் பிடித்துக்கொண்டு, தனது இரு புறங் களிலும் இடாகினிகள் ஈச்சோப்பி என்னும் கருவியால் வீசிக்கொண்டிருக்கும் வண்ணம் அமர்ந்திருந்தாள்.[155]. 'ஈச்சோப்பி' என்பது ஈக்களேத் துரத்தும் கருவி அல்ல என்பதும் கவரி, ஆலவட்டம் போன்ற ஒரு வகைக் கரு வியே என்பதும் உணரற்பாலது. தேவி கோவிலில் குடர், கொழுப்பு, குருதி முதலியன நிறைந்திருப்பினும்,

'அரும் பெறற் பிண்டம் கருங்கட்பேய் மகள்
கைபுடையூஉ நடுங்க,
நெய்த்தேர் தூஉய் நிறை மகிழ்கும்பலி
எறும்பு மூசா'

[பதிற்றுப்பத்து 3-30]

என்ற அடிகளின் வாயிலாகத் தேவியின் ஆணேயால் அங்கு ஈ, எறும்பு, பேய் முதலியன அவற்றை உண்ண அணுகாதவண்ணம் இருந்ததை அறியலாம்.

காளியின் பரிவாரப் பேய்களுக்குப் பெயரிட்டு அழைக்கும் வழக்கம் இருந்ததை,

'உண்ணுடைய பழவடியாரடியாள் தெய்வ
உருத்திர போகினி யென்பாள்'

[177 : 1-2]

என்ற அடிகளால் உணரலாம்

காளி வழிபாட்டில் துணங்கைக் கூத்தாடுதல் மரபு.

'துணங்கையஞ் செல்வீ'

[பெரும்பாண் : 459]

என்பதற்கு,

''பேய்களாடும் துணங்கைக் கூத்தினை
உடையவள் கொற்றவை''

என்று நச்சினர்க்கினியர் பொருள் கூறுகின்றார். சங்க காலத்தில் பெண்களும் துணங்கைக் கூத்தாடுதலை வழக்க மாகக் கொண்டிருந்தனர் என்பதை,

'மள்ளர் குழீஇய விழவினானும்
மகளிர் தழீஇய துணங்கையானும்'

[குறுந் 31 : 1-2]

'இலங்குவளை மடமங்கையர்
துடங்கை யஞ்சீர்த் தழூஉ'

[மதுரைக் காஞ்சி : 159-160]

என்ற அடிகளால் அறியலாம்.

காளியும் கலிங்கப் போரும் :

காளியைச் சூழ்ந்திருந்த பேய்களெல்லாம் தம் பசிக் கொடுமையினைக் காளிக்குக் கூற, அது கேட்ட காளி,

'உங்களுக்கு ஏற்பட்ட குறியும் கலிங்கத்து ஏற்பட்ட குறியும் உங்களுத்கு நன்மை விளை வதையே அறிவிக்கின்றன. நம் கணிதப் பேய் நனவிலும் கனவிலும் கண்டு கூறியபடி குலோத்துங்கன் யானைகள் போருக்குத் தயா ராக உள்ளன; எனவே ஒரு பரணிப் போர் உண்டு'

என்று கூறினாள். குலோத்துங்க சோழனின் பெருமையினை அவள் பேய்களுக்குக் கூறிக் கொண்டிருந்தபொழுது கலிங்கத்துப் போர் மூண்டெழுந்ததாகவும், அதனைக் கண்டதொரு பேய் அங்கிருந்து ஓடி வந்து காளியை அடைந்து கூறியது. உடன் காளி, பேய்களின் ஆடல் பாடல்களை நிறுத்துமாறு கூறிக் கலிங்கப் பேயை நோக்கி

அங்கு நிகழும் போரின் இயல்பினைக் கூறுமாறு பணித்தனள். கலிங்கப் பேய் போரையும் போருக்கான காரணத்தையும் கூறி நின்றது. அப்பேய், தேவாசுர, இராமாயண மகா பாரதப் போர்க்களத்தோடு ஒப்ப எண்ணத் தகும் கலிங்கப் போரின் களத்தைக் காணுமாறு காளியை அழைத்துச் செல்ல, பேய்கள் சூழச் சென்ற காளியும் போர்க்களக் காட்சி ஒவ்வொன்றையும் பேய்கட்குக் காட்டி, குருதி நீரில் ஆடிக் கூழ் அடுமாறு பேய்கட்குக் கட்டளை இட்டனள்.

போர்க்களத்தில் கணவன் தலைபெற்ற மனைவியின் செயலை,

'பொரு தடக்கை வாளெங்கே மணிமார் பெங்கே
போர்முகத்தி லெவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
பயிரவியைக் கேட்பாளைக் காண்மின் காண்மின்' [483]

என்றும், பெண்ணெருத்தி தன் கணவனைத் தழுவிய வண்ணம் அவனுடனே தன்னுயிரையும் இழந்தாள் என்பதை,

'தரைமகடன் கொழுநன்ற னுடலந் தன்னைத்
தாங்காமற் றன்னுடலாற் றுங்கி விண்ணுட்
டரமகளி ரவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின்' [482]

என்றும் காளி பேய்கட்குக் கூறுவதாக அமைக்கின்றார் கவிஞர்.

" நாடினர் நாடியே நனைவருங் கொம்பனர்
வாடினர் கணவர்தம் மார்புறத் தழுவியே
வீடினர் ... ...

[கம்ப இராமாயணம் — அட்ச குமாரன் வதைப்படலம்:48]

என்ற பாடலடிகள் ஒப்பு நோக்கற்பாலது.

கூழ் வார்க்கப்பட்ட பேய்கள் யாவும் உண்டு, வாய் கழுவி, வெற்றிலை பாக்கு மென்று, குதித்துக் கூத்தாட, அங்கு கொலு வீற்றிருக்கும் கொற்றவையின் வெற்றிப்

புகழினை விளங்கும் வண்ணம் கூறுகின்ற கலிங்கத்துப்பரணி குலோத்துங்கனை வாழ்த்தி நிறைவெய்துகின்றது.

தக்கயாகப் பரணி :

அரசர்களின் வீர வெற்றியைப் புகழ்ந்து பாடும் பரணி இலக்கிய அமைப்பிற்கு மாறுக இறைவனின் வெற்றியை விரித்துரைக்கும் வண்ணம் அமைந்து, பரணி இலக்கிய அமைப்பிற்கு ஒரு புதிய திருப்பத்தினை ஏற்படுத்திய பெருமை உடையது தக்கயாகப் பரணி. தக்கன் சிவ பெருமானை அவமதித்துச் செய்யப் புகுந்த யாகத்தை வீரபத்திரக் கடவுள் அழித்து அவனுக்கு உதவி புரிய வந்த தேவர்களையெல்லாம் வென்று அவனுடைய தலையையும் வெட்டிய வரலாற்றைப் பொருளாக அமைத்து, சக்தி வழி பாட்டில் நாட்டம் மிக்க கவிச் சக்கரவர்த்தியாம் ஒட்டக் கூத்தரால் இந்நூல் இயற்றப்பட்டது.

கொற்றவை, கலிமகனை நோக்கி ஆளுடைய பிள்ளை யார் கதையைச் சொல்லும்படி கட்டளையிட்டு அவ்வாறு கூறிய கலிமகனை மனமுவந்து தன் அருகில் வீற்றிருக்கும் வண்ணம் அருளிச் செய்ததாகக் கூறியிருப்பதும் தக்கயாக சங்காரத்தைக் கூறும் ஏனைய நூல்களில் வீரபத்திர தேவர் கலிமகனுடைய நாசியினை அரிந்ததாகக் காணப்படும் செய்தியைக் கூறுதொழிந்ததும், வாழ்த்தில்,

'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே'

என்று பாராட்டியிருப்பதாலும் இவருக்குச் சக்தியின் கூறுகிய கலிமகள்பாலுள்ள பேரன்பு உணரற்பாலது.

மற்ற பரணி நூல்களுக்கும் இதற்குமுள்ள சிறப்பான வேறுபாடு, சைவத்தின் சார்பு புலப்படும்படி திருஞான சம்பந்தர் மதுரையில் சமணரை வென்ற கதையைக் கொற்றவைக்குக் கலிமகள் கூறியதாக புதிய முறையில் அமைப்பதாகும். ஏனைய பரணி இலக்கியங்களில் களங் காட்டுதலிற் காளி பேய்கட்குக் களங்காட்டியதாகக் கூறியது போலன்றிக் கதைத் தொடர்பு புலப்படத் தேவிக்

குச் சிவபெருமான் களங்காட்டியதாகத் தக்கயாகப் பரணியில் கூறியிருத்தலும் சுட்டத்தக்கது.

காளியின் அடியவர்கள், அவர்தம் செயல், துர்க்கா பரமேசுவரி கோயில் வாயிலின் இரு புறத்தும் சங்கநிதி பதுமநிதி உண்மை, கொற்றவை முல்லை, மாதவி, கற்பகக் கொடிகளை வளர்த்தல், தேவி இறைவன் மார்பில் இருத்தல் போன்றவை பற்றியும் சிறப்புடன் அறியத்தக்கவண்ணம் தக்கயாகப் பரணியில் அமைந்துள்ளது. தக்கயாகப் பரணி, கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, கோயிலைப் பாடியது, பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, கூழடுதல் இடுதல், களங்காட்டல், வாழ்த்து என்ற பதினொன்று உறுப்புக்களாகிய பகுதிகளைக் கொண்டு அமைகின்றது.

காடு பாடியதில் தேவி கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பாலைவனத்தின் வெம்மை வாம மார்க்கத்தாருடைய செயல்கள், காளியின் கோயிலைச் சூழ்ந்த சோலைகளின் பெருமை, யோகினிகள் முதலியோருடைய பெருமை, பைரவர்களின் செயல்கள் முதலியன கூறப்பட்டுள்ளன.

பாலை நிலைப் பின்புலம் :

பாலை நிலத்தை வன்பாலை, மென்பாலை என இரு கூறுகளாகப் பிரித்து வன்பாலைக்குத் தெய்வம் கொற்றவை, மென்பாலைக்குத் தெய்வம் ஆதித்தன் என்று தக்கயாகப் பரணி உரையாசிரியர் நவில்கின்றார் [55]. பாலை நிலத்திற்குக் கொற்றவையே தெய்வம் என இருந்த நிலை மாறி, இரு தெய்வங்களை உரையாசிரியர் கூறியுள்ள திறம் போற்றற்குரியது.

பாலை நிலத்தின் வெம்மையினைப் படம் பிடித்துக் காட்ட விழைந்த ஒட்டக் கூத்தர் பெருமான்

''சுடுபடுமிறை மகள் பொருமைகொ
லிது பொருமைகொ லிறைவர்தங்
காடுபடுசடை யூடுமுருவு
கரந்துவருவது கங்கையே' [61]

என்றும்

'படப்படப்பொடி யாகவெங்குள பாதவாதிசு ளாதவஞ்
சுடச்சுடப் பொடி யாயெழச்சுழல் சூறைபுகுவன பாறையே'
[64]

என்றும் திறம்பட எடுத்துரைக்கின்றார்.

கோவிலைச் சூழ்ந்த சோலை:

சோலையினைச் சிறப்பிக்குமுகத்தான்,

'புறச்சோலை பூதங்களும் பேயும் யாவும் புகுஞ்சோலையே
அறச்சோலை தானும் பிரானும் பயின்றருடும் அச்சோலையே'

எனக் கவிஞர் பாடுகிறார்.

கற்பகம், பாரிசாதம், மந்தாரம், அரிசந்தனம் போன்ற பூக்களும் மாம்பூ, அசோகப்பூ, தாமரைப்பூ, முல்லைப்பூ, செவ்விப்பூ என்ற ஐந்து பூக்களும் சோலையில் அமைந்து சோலையின் அழகுச் சிறப்பை மிகுவிக்கின்றன.

திருக்கோயிலின் வருணனை:

விட்டுணு சத்தியான கொற்றவையின் திருக்கோயில் திருவாசற்புரத்தில் இருக்கும் சங்கநிதி அரிய ரத்தின வத்துக்கள் அநேகவித நூறு கோடிகள் கொடுப்பனவாகவும் [73] பத்மநிதி சதகோடி கனகராசிகள் அளிப்பனவாகவும் உள்ளன [74]. கொற்றவையின் வாகனத்தைக் கூற விழைந்த கவிஞர், நுனியிற் கொம்பு கூரிதாயிருக்கும் மென்மானுகிய கலைமானினைக் கூறி [75], பின்னர் வன்மானுகிய சிங்கத்தையும் கூறுகின்றார் [76]. கொற்றவைக்கு மான், சிங்கம் என்ற இரண்டினையும் வாகனமாகக் கூறியுள்ளமை சிலப்பதிகாரக் குறிப்பை இங்கு நினைவு கூரச் செய்கின்றது.*

* 'சிலம்பில் கொற்றவை'. — இரா. சீனிவாசன் [பக்கம்—81] இளவேனில்—3, 1971. இளங்கோ மன்ற வெளியீடு.

பிரமாவுக்குத் தாயாகக் கூறப்படும் தேவியின் [77] கோயிலைச் சூழ ஆதித்தர் பன்னிருவரும் ஒரோவொருவர் தம்முடைய ஆயிரங்கதிர்களைக் ககவிளக்காகப் பிடித்துக் கொண்டு பன்னீராயிரம் விளக்குடன் சூழ வருவர் [78]. சுடுகாட்டில் உறையும் இகாற்றலையின் திருக்கோயில் திருமுற்றத்தில் வானுலகப் பெண்டிராகிய அரம்பை, ஊர்வசி போன்றோர் அழகுபெற நெருங்கி நின்று வணங்குகின்றனர் [80].

'தரவ ரும்புடவி குறையவுளர் சாகினிகளே
பரவ ருந்தகைய நாயகிப தாகினிகளே' [89]

என நாயகியின் கொடிப்படைகளைக் கூறுகின்றார். யோகினிகள், சர்பினிகள், சாகினிகள் முதலிய பெண்கள் சக்தியின் கூருகிய கொற்றலையின் கோயில் திருமுற்றத்திலிருந்து சிரித்து விளையாடும் சிரிப்பொலி பதினான்கு உலகங்களிலும் கேட்கின்றது [90].

வழிபாட்டு நிலை :

பலி கொடுக்கும் வீரர் நிலையைச் சித்தரித்துக் காட்டும் கவிஞர்,

'தலைய ரிந்துவிடு வாருயிர் விடார்தலைவிழுன்
னிலைய ருந்தமது மெய்யெரியி னின்றெறிவரே' [91]

என்று கூறுவதால் தலையை அறுத்துவிட்டு உடலோடே நின்று தங்கள் யோகாங்கத்தால் உயிரைப் போகாமல் தடுத்து, அக்கினி மண்டலத்தை எழுப்பி, இருதய கமலத்திற் தீபம் கொளுத்தி, அதுவே நெருப்பாக நின்று யோகாக்கினி அமைக்கும் வீரரின் வழிபாட்டு முறையினை அறியலாம் [91].

மந்திர சாதகர்கள் அகமும் முகமும் மலரத் தலைகளை அரிவர். குறையுடல் கைகளைக் குவித்து வணங்கிக் கோயிலை வலம் வரும் [92].

இந்திரன், அக்கினி, வருணன், வாயு முதலிய தேவர் குழாமும் ஏழ்லோ உலகங்களிலுமுள்ள பிராமாக்களும், எங்கு

முள்ள சந்திராதித்ய நட்சத்திர உணங்களெல்லாம் கொற்றவையின் கோயிலிலிருந்து மந்திர சாதகம் செய்வார்கள் [94]. சதாசிவ, சுசுவர, உருத்திர, விட்டுணு, பிரமா ஆகிய பஞ்ச மகாபூதங்களின் தெய்வங்களும் வழிபடுகின்றன. திருமுருகு: 254, நச்சினார்க்கினியர் உரை ஒப்பு நோக்கத்தக்கது.

திருமகள் முதலான சிறப்புடைய மகளிரெல்லாம் தேவியின் திருக்கோயிலில் பணிசெய்யும் யோகினிகளாக அமைந்துள்ளனர் [95].

புலிகளுடைய சிறுதோலை உரித்து அத்தோலை வாங்கி உதிரப் பசுமை கெடாமல் உடுத்தும் [97] மதமத்தைப் பூவினைத் தலையில் சூடி, கையில் சூலத்தைப் பெற்றும் [98] நஞ்சினைக் கக்கித் திரியும் எட்டு பாம்புகளைக் கச்சாகக் கட்டி, மனிதர் தலைகளை அவையிற்றின் மேல் மணி வடமாகக் கட்டியும் யோகினிகள் காணப்படுகின்றனர் [99] என்று கவிஞர் கூறுவதிலிருந்து கொற்றவைக்கும் பணி புரியும் பெண்டிரும் கொற்றவையின் வடிவம் பெற்றிருந்தனர் என்பதை அறியலாம். மேலும் அவர்கள் அழகிய கைகளில் சங்கு மணி வளைகள் நூறும் [100] வலமும் இடமுமான இரண்டு பக்கத்திலும் வச்சிராயுதமும் வட்டணைக் கிடுகும் கொண்டிருந்தனர் [101] என்று குறிப்பிடுகின்றார் கவிஞர். சக்கர பூசை செய்கின்ற குறிப்பும் காணப்படுகின்றது [102].

தேவியைத் துதிப்பனவாக பிரம யாமளம், விட்ணு யாமளம், ருத்திர யாமளம், சக்தி யாமளம் முதலாக பல யாமள நூல்கள் அமைந்திருக்கின்றன [113].

நேவியின் வடிவம்:

தேவி கருமை நிறமுடையவள் [104 : 1]; அரக்காம்பல் போன்றிருக்கும் நறுமணம் கமழும் திருவாயினை உடையவள் [110 : 2-3]; தேவியின் காதுகள் தோளிலிட்ட தொடிகளைத் தொடுமளவிற்குத் தாழ்ந்து தொங்குகின்றன [106 : 3-4]. தேவியின் நெற்றியில் திலமாக இடு

வது கத்தூரியாகும் [118 : 2]. பிறை நிலாவினை வீசு கின்ற சடை முடியினை உடையவள் [107:2]; நாகராசாக் களின் மாணிக்கச் சூடிகா கோடிகளைப் பணிவிக்கும் மதாணியான பேரணிகலப் பதக்கம் உடைய மார்பினள் [105]; தேவி அணிந்துள்ள முத்துமாலை ஆறு போல் மார்பில் விழுந்து கிடக்கின்றது [106 : 1]. திருமுடிச் சுற்று மாலையாக உள்ள முல்லைக் கொடிமலர், கொற்றவை யின் தலைசிறந்த பண்பாகிய கற்பிற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது [119 : 2].

'முல்லை சான்ற கற்பின் மெல்லியல்' [சிறுபாண் : 30]
'முல்லை சான்ற மெல்லியற் குறுமகள்' [அகம் : 274]
'வானுதலரிவை முல்லைமலைய இனிதிருந்தனனே'
[ஐங் : 408]

ஆகிய பாடலின் அடிகள் கற்பின் முல்லைக்கு ஒப்புமை கூறி நிற்றல் உணரத்தக்கது.

தேவி சிலம்புகள் அணியப்பெற்ற திருவடிகளை உடையவள் [119 : 1].

தேவியின் தன்மை:

தேவி தேவர்கள் வாழ, அசுரர்கள் மாள, மோகினி வடிவு கொண்டருளி அமிர்த பானம் ஊட்டி அருளியவள் [107 : 3-4]. தேவி தமக்கின்றி ஒழிந்த ஒவ்வொரு பக்கத்தே நின்றவராகத் தமக்குவமையாகத் தம்மை யுடைய சுவாமியாகிய ஒரு பாதி உருகுங் காதல் மிக்க தன்மையுடையவள் [109 : 2-4]; கருட பகவானை ஏறி ஊர்ந்து திரிகின்ற தன்மையினைப் பெற்றவள் [110 : 4].

ஆடை:

உபாசக பாரசவனுல் அணிவிக்கப்படும் கௌசிகப் பட்டாடைகளையும் பழைய பொன்னுடைகளையும் ஆடையாகக் கொண்டவள் தேவி [117 : 1-2].

கோயிலைப் பாடியதில் காளிக்குரியனவாகிய கோயில் ஆலமரம், ஆதிசேடன், பஞ்சாயுதங்கள் முதலியவற்றின் பெருமைகள் முதலிற் கூறப்படுகின்றன. பிறகு காளி நாம

கனை அழைத்து முருகக் கடவுள் ஆளுடைய பிள்ளையாராகி வந்து சமணரை வாதில் வென்ற கதையைக் கூறும்படி கட்டளையிட, அவ்வாறே கலிமகள் கூறுவதாக ஆளுடைய பிள்ளையாருடைய வரலாற்றுப் பகுதியும் கூறப்படுகிறது.

கோயில் அமைப்பு :

கீழேழுலகமென்று கூறப்பட்ட சத்த பாதாளங்கள் கீழ் நிலையாகவும் மேல் ஏழு உலகமும் நாயகி கோயிலின் மேல் நிலையாகவும் அமைந்துள்ளன. உதயகிரியும் அத்தமன கிரியுமான இரண்டு மலைகளும் திருவாசலாகக் கருதப்படு கின்றன. கோயிலின் மதிலாகச் சக்கரவாளம் அமைந்துள் ளது. கோயிற் கட்டிடத்திற்குக் காப்பாக அமைவது தேவியின் திருக்கையிலிருக்கும் ஒரு சூலமாகும் [137]. கோயிற் பலி பீடங்கள் அநேக கோடி வடதிசை மகா மேருக்களெனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன [138 : 2].

ஆலமரத்தின் வர்ணனை :

தேவி அமர்ந்திருக்கும் ஆலமரம் திருமால் பள்ளி கொள்ளும் இலையை உடையது. சிவபெருமான் அமர்ந்து அறம் உரைக்கும் திறம் உடையது. திங்களுக்கு நிழல் அளிக்கின்றது [146]. ஆலமரத்தின் விழுதுகளில் திசைக் காவல் யானைகள் கட்டப்பட்டுள்ளன; எண் பெரும் பாம்பு களும் அம் மரத்தின் கீழ் உறைகின்றன [152].

அமளி :

ஆயிரம் பாற்கடலில் ஆயிரம் ஆதித்தர் உதித்தாற் போலவாயிருக்கும் ஆயிரம் படத்தையும் ஆயிரம் இரத் தினத்தையும் உடைய பாம்பு தேவியின் அமளியாகும் [154].

வீற்றிருக்கை :

பிரிந்து திரளப்பட்ட பதினாறு கலைகளும் தம்மிற் கூடிச் சந்திர மண்டலம் வந்து வெண்குடையாகக் கவிழ்த்து நிழல் செய்ய, முறைமையாலே வாடையும் தென்றலும் இரண்டருகும் வந்து வெண்சாமரை வீச எழுந்

தருளியிருக்கும் மாகாளிக்கு இரு புறமும் சோதிவிடும் சந்திர சூரியர் இருவரும் விளக்காகத் திரிய எழுந்தருளியுள்ளாள் தேவி [157]. தேவி திருக்கோயிலில் முருகரின் ஊர்தியாகவும் கொடியாகவும் உள்ள தோகை மயில்களும்; பிரமாவினுடைய வாகனமாகிய அன்னங்களும் தேவியால் வளர்க்கப்பட்ட பூவைகளும் தேவலோகத்தில் உள்ள கின்னர மிதுனங்களான புட்பங்களும் கூத்தாட தேவி அமர்ந்துள்ளாள் [114].

ஆயுதங்கள்:

தேவியின் ஐம்படைகளாக தண்டாயுதம், வாள், வில், சங்கு, ஆழி ஆகியவை கொள்ளப்படுகின்றன. [161 : 4 ; 162 : 2 ; 163 : 2 ; 164 : 2 ; 165 : 2].

பேய் முறைப்பாடு என்னும் பிரிவில், நாமகளுக்கு அருள் கூர்ந்து உவகையுடன் காளி இருத்தலைக் கண்ட பேய்கள் தம்முடைய குறைகளைக் கூறி முறையிட எண்ணிப் புகுந்து நின்று,

> "அம்மே! உணவளிக்க வாய்த்த நேரங்களிலெல்லாம் உன்னுடைய கணவர் எங்களை ஏமாற்றி விட்டார். நீ வேண்டிய பொருள்களை உன் பிள்ளைகளுக்கு மட்டும் தடையின்றி அவ்வப்பொழுது அருளுகின்றாய். பண்டைக் காலத்தில் நடந்த 'பெரும் போரில் நாங்கள் பசி தீர :உண்டு வாழ்ந்தோம்; பின்னர் பசியால் வருந்திப் புலர்ந்தோம்"

என்று முறையிட்டுத் தாம் கண்ட கனவுகளைக் கூறிக் கொண்டிருக்கும் பொழுது, தக்கன் யாகத்தை அழிக்கும் பொருட்டுச் சென்ற பேயொன்று ஓடி வந்து,

> "பசி மிக்க பேய்கள் என் பின் விரைந்து வருக"

என்று உரைத்து விட்டு மீண்டும் உணவின் விருப்பத்தால் யாக சாலைக்கு மிக விரைந்தோடக் காளி அதனைப் பிடித்து வரச் செய்து, தேவர்கள் தக்கன் யாகத்தில் அழிந்த வை

லாற்றைக் கூறும்படி கட்டளையிட அவ்வாறே அது கூறத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

காளிக்குக் கூளி கூறியதில் தக்கன் சிவபெருமானை மதியாமல் வேத விதிக்கு மாறுக யாகஞ் செய்யத் தொடங்கியதும் அதற்கு வந்த தட்சாயணி, தக்கன் முதலியோரால் அவமதிக்கப் பெற்றதும், தேவி சினந்து சென்றதும் அது அறிந்த சிவபெருமான் வீரபத்திரக் கடவுளை விடுத்து அவ்வேள்வியை அழிக்குப்படி ஏவியதும் அவர் அவ்வாறே பூத கணங்களுடன் சென்று தக்கனுக்கு உதவி செய்வதற்கு வந்த தேவர்களுடன் போர் செய்து கொன்று யாகத்தைச் சிதைத்தலும், இறந்த தேவர்கள் பேய்களானதும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கூழடுதலும் இடுதலும் என்ற பகுதியில் கதையைக் கேட்ட காளி, யாக சாலைக்குச் சென்று கூழடும்படி கட்டளை இடுதலும் அவ்வாறே பேய்கள் அக்களத்திலே இறந்தவர்களுடைய தசை முதலியவற்றைக் கொண்டு கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்துப் பிற பேய்களுக்கு இட்டுத் தாமும் உண்ணுதலும் பின்பு களித்து இரண்டாம் இராசராசனுடைய முன்னோர்களையும் அவனையும் வாழ்த்துதலும் கூறப்பட்டுள்ளன.

களங்காட்டலில் சிவபெருமான் தேவியோடு எழுந்தருளிப் போர்க் களத்திலிருந்த பேய்களைச் சுட்டிக்காட்ட இவற்றுள் இறந்த தேவர் இன்ன பேயாக ஆயினரென்று புலப்படுத்தத் தேவி அவர்கள்பால் தான் கொண்டிருந்த கோபம் தணித்தருள வேண்டுமென்று சிவபெருமானை வேண்டுதலும் அவர் இரங்கித் தம்மை இகழ்ந்த தக்கனுக்கு ஆட்டுக் கிடாய்த் தலையையும் உயிரையும் ஏனைய வானவர்கட்கு உயிரையும் உரிய பதவிகளையும் அளித்தருளுதலும் அவர்கள் அவற்றைப் பெற்று வலம் வந்து வணங்கி வீரபத்திர தேவரை வாழ்த்தித் தத்தம் இடம் செல்லுதலும் கூறப்பட்டுள்ளன.

பாசவதைப் பரணி :

வீரசைவம் தமிழுக்கு அளித்த விளங்கு புகழ்ப் பனுவலாகவும் முக்தி நெறி காட்டும் பக்தி விளக்காகவும் உவமை, உருவகம் முதலிய அணிமலர்கள் செறிந்த ஒய்யாரப் பூங்கா ஆகவும் இலங்கும் பாசவதைப்பரணி என்பது சிவஞான பாலைய தேசிகர் சார்ந்தார் பாசத்தைப் போக்கிச் சிவஞானம் அருளிய செயலை உருவக வகையில் அமைத்துப் பாச மன்னனெடு பொருது வென்றதாக வைத்தியநாத தேசிகரால் பாடப்பெற்றது. மேற் கூறிய கருத்து,

'தேசம் பரித்த சிவஞான தேசிகன்பார் வந்தெமது
பாசம் பறித்த திறம்பாடப் பைம்பொற் கூபாடங் திறமிலே'

[தாழிசை: 57]

என்ற அடிகளில் கூறப்பட்டுள்ளது. வீரத்தைப் பாராட்டும் பரணிப் பிரபந்தங்கள் ஞானத்தின் வெற்றியையும் பாராட்டுதல் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது.

787 தாழிசைகளைக் கொண்டு இலங்கும் இப்பரணி, கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, பேய் களைப் பாடியது, கோயிலைப்பாடியது, தேவியைப் பாடியது, கூளி கூறியது, களங் காட்டல், கூழ் போன்ற பத்து பகுதி களைக் கொண்டு அமைகின்றது.

'காடு பாடியது' என்ற பகுதியில் அஞ்ஞானிகள் வாழும் இடமே சுடுகாடாகவும் அவர்களே விலங்குகளாகவும் கோபம் முதலிய முள் முதலியனவாகவும் கூறப்பட்டுள்ளன.

'கோயிலைப் பாடியது' என்ற பகுதியில் தேவியின் கோயிலில் உள்ள சோலை, திருக்கோயில் முதலியவற்றின் பெருமையை விளக்கும் வண்ணம் ஆலமரத்தின் சிறப்பினை வியப்புடன் பாடுகின்றார் பாசவதைப் பரணியின் ஆசிரியர்.

'அலகில் அண்டமும் அதிலெடு சிறுவிதை
அளவு கண்டிட அரியது எனின் அதன்
அளிதரும் தனி அளவையை உலகினில்
அறிய நின்றவர் எவரதை விடலதின்

உலகில் தண்சினை பொறிவிரிபணகண
உரகர் தம்பதி எழுமையும் உலவுவது
உலகமெங்கணும் உருவினது அதன் விழுது
உரையிறந்தது உணர்வினில் உணர்வதே'

என்றவாருக ஆலமரத்தின் பெருமையினைச் சொல்லால் விளக்க இயலாததாகையால் உணர்விஞல் உணர வேண்டும் என்று வழியும் கூறுகின்ருர்.

தேவியைப் பாடியதில் தேவியின் பெருமையும் அவள் சுற்றத்தின் இயல்பும் காணப்படுகின்றன. ஞான நிலே உடையவர்களே இடாகினி முதலிய பரிசனங்களாக அமைக்கப்படுகின்றனர். இப்பகுதியால் ஞானியர்களுடைய நிலேயை அறியலாம்.

தேவியின் அருட்கோலத்தைக் கண்ட பின்னர், அவளுக்கு உருவமில்லே என்று கூறுதல் ஒவ்வாது எனப் பாசவனேப் பரணி ஆசிரியர்,

'ஒழியாமல் நிறைந்த அவட்கு உருவமில்லையே யென்கோ
அழியாமல் ஆளவந்த அருட்கோலம் கண்டுயே'

என்று அறிவுறுத்துகின்ருர்.

வாக்கினுலும் மனத்தினுலும் சென்று பற்ற முடியாத பெருமை கொண்டவள் தேவி என்பதை,

'வாக்கினெடு மனத்தினுக்கு மறவாத பொருளதனைத்
தூக்கினெடு பொருள்படுத்திக் சொல்லுமாறெவ்வாறே'

என்ற அடிகளால் உணர்த்துகின்ருர்.

இலக்கியக் கவிஞர்கள், பாட்டு என்னும் மாலேயைச் சூட்ட, தேவியும் இவர்களின் பாமாலேயில் உள்ளம் பறி கொடுக்கின்ருள் என்பதை,

'பொன்மாலே பூமாலே புறக்கணித்துத் தன்னடியார்
சொன்மாலே எப்போதும் சூடுவது திருவுள்ளம்'

என்ற பாசவனேப் பரணிப் பாடலின் அடிகளால் உணரலாம்.

பாசவனைப் பரணியில் சில கற்றுச் சென்ற பேய்கள், ஏழை மாந்தரை ஏமாற்றும் பேய்கள் முதலிய வற்றையும் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

'பலகற்று யாவினையும் விலகுற்ற ஞானநீ
பயில்வுற்ற பேரவையில் ஓடியே
சில கற்று யாவரொடும் அலகற்ற நூலறிவு
செவிமுட்ட ஓதுவன கோடியே'

எனவும்

'வெள்ளை கொண்ட மனத்தினரை மருட்டி செல்ல
வீட்டுலகும் காட்டுநர்போல் விரதால் செம்பொன்
கொள்ளை கொண்ட தம் பசியை நீங்க வாங்கிக்
குருக்கொடுக்கும் பேயனந்த கோடி கோடி'

எனவும் சிறப்புறக் கூறி நிற்கின்றார் பாசவனைப்பரணி ஆசிரியர்.

கூளி கூறியதற்குப் பின்பு உள்ள களங்காட்டல் என்னும் பகுதியில், தேவி மோகினிகளுடன் களஞ் சென்று அஞ்ஞானிகள் ஞானம் பெற்ற வரலாற்றைக் கூறி அவர் களைக் காட்டுதல் கூறப்பட்டுள்ளது.

நிலையற்ற பொருள்களை நிலையான பொருள்கள் என எண்ணி, மக்கள் அவற்றின் மீது பற்றுக் கொள்கின்றார்கள். அத்தகையவர்கள் இப்பொழுது அமைமயக்கம் நீங்கிப் 'பேராத ஆனந்த மய பூரணத்தோடு' பிரியாது ஒன்றி வாழ்கின்ற நிகழ்ச்சியினை,

'வாராத டெருவாழ்வு பெற்றுமெனச் சொல்லி
மாய்கின்ற பொருள்மீது மால் விட்டுளார்
பேராத ஆனந்தமய பூரணத்தோடு
பிரியாமை காண்மின் காண்மின்களே'

என்று காளி தேவி காட்டுகின்றாள்.

கூழடுதல் பற்றி நவில்கின்ற பொழுது பாசவனைப் பரணியின் ஆசிரியர், இரு வினைகளாகிய விறகுகளை வைத்துப் பேய்கள் எரித்தன என்பதை,

'இருவினை விறகெரித்தங்கு
என்பெலாம் உருக்கு அன்பாம்
திருவினையுள்ள வண்ணம்
சீர்பெறக் குழைக்கச் சொல்வீர்!'

என்ற பாடலின் வாயிலாக அறிவுறுத்துகின்றார். பல சமயத்தினர் கொள்கைகளும் கூழென்னும் மேற் கூறிய பகுதியின் வாயிலாக உணரலாம்.

அஞ்ஞவதைப் பரணி:

வேதாந்தக் கருத்துக்கள் பொதிந்த கருவூலமாகவும் பாசவதைப் பரணிக்கு வழி காட்டிய கலங்கரை விளக்கமாகவும், தத்துவக் கருத்துக்களை அமைத்து வீர இலக்கியத்தில் விளக்கும் வெற்றிக் காப்பியமாகவும் அமையும் அஞ்ஞவதைப் பரணி, தத்துவராய சுவாமிகளால் இயற்றப் பட்டது. அஞ்ஞானத்தினை ஓர் அரசனுக்கி, அகங்காரம் முதலியவற்றைச் சேனைகளாக்கி இவற்றை ஞானமாகிய பகைவன் அளித்ததாக உருவக அமைப்பில் பாடப் பெற்றதே இப்பரணியாகும்.

பாலஞ்ஞானத்தின் கொடுமையினை எடுத்துக் காட்ட விழைந்த தத்துவராயர் கயவர்களின் செயல்களைப் பாலை நிலத்திற்கு ஒப்பிடுவதை,

'கல்லும் கயவோர் மனமே அவர்தம்
கண்ணே மரமும் அவர் தண்மையறச்
சொல்லும் உரையே சுடுதீ இடர்சேர்
சூழ்வினி மற்றவர்தம் தொழிலே'

என்ற பாடலால் உணரலாம்.

'மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்து கண்ணோடாதவர்'

[குறள்: 573]

என்ற வள்ளுவனின் திருவாக்கு மேற்கூறிய பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

பிணத்தினை இடும் காட்டினையே சுடுகாடு என்று கூறுபவர்கள் அறியாதவர்கள்; உண்மையான சுடுகாடு எதுவெனக் கருத முனைந்தால், தம் நெஞ்சம் அறிந்ததை மறைத்து உண்டு உடுத்து வாழும் உயிர்ப் பிணங்கள் உலவுவதே சுடுகாடு; அவர்களே இறந்தவர்கள் என்பதை,

'செத்த பிணம் இடுகாடு சுடுகாடு என்று
செப்புவார்கள் அறியாதார் சிலர் தன் நெஞ்சத்து
ஒத்ததுதாம் உணராது உண்டு உடுத்து வாழும்
உயிரோடும் பிணம் பயில்கா டு ஒழியவிட்டே'

என நவில்கின்றார். தெய்வப் புலவரும் ஒத்தது அறியாது உயிர் வாழ்வாரைச் செத்தார் என்று சித்தரிப்பதை,

'ஒத்ததறிவான் உயிர் வாழ்வான் மற்றை யான்
செத்தாருள் வைக்கப்படும்'

[குறள்: 214]

என்ற பொய்யா மொழியின் வாயிலாக உணரலாம். தேவி அமர்ந்திருக்கும் இருக்கையைக் கூற விழைந்த தத்துவ ராயர்,

'மாசுணமோ மறைத்தலையோ மயானமோ வாக்கிறந்த
தேசுணர்ந்த மெய்யடியார் சிந்தையோ திருந்தமளி'

என்று அமளியின் தன்மையினைக் கூறுகின்றார். தேவிக்கு உருவமில்லை என்பதை மறுத்து தத்துவராயர்,

'மருவுறுது அதற்குரைக்கும் வடிவமில்லை என்னையோ
கருவுறுமல் ஆளவந்த கருணைமேனி கண்டுமே'

எனக்கூறுகின்றார்.

தேவி கவிஞனின் பாமாலையில் உள்ளம் பறி கொடுக்கும் தன்மையினை,

'சாத்தும் பூமாலையினும் தமையுணர்ந்த மெய்யடியார்
ஏத்தும் பாமாலையிலே எப்பொழுதும் திருவுளமே'

என்ற பாடலடிகளால் உணரலாம். தேவி கவிஞனின் பா மாலையில் உள்ளம் பறிகொடுக்கும் தன்மையினைப் பாசவதைப் பரணி போன்ற நூல்களும் பாடுவது உணரத் தக்கது.

மோகவதைப் பரணி:

அரிய தத்துவக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு இலங்கும் மோகவதைப் பரணியைப் பாடிய பெருமை தத்துவராயரையே சாரும். குணங்களைப் பாத்திரங்களாகப் படைத்தமையால் குணங்களின் இயல்புகள் இப்பரணியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

உலகங்களையெல்லாம் தன்னகத்தே அடக்கும் அம்மைக்கு எது கோயில் என்ற வினாவினை எழுப்பி, அன்பர்களின் உள்ளத்தைத் தவிர வேறு கோயில் உலகத்தில் இல்லை என்று கூறுகின்றார் என்பதை,

'அண்டமெலாம் தன்னுடைய அகத்தடக்கும் திருமேனி
அம்மைக் கேற்க
உண்டெனலாவது கோயில் அன்பருளம் அல்லது
வேறு உலகத்துண்டோ'

என்ற பாடலால் அறியலாம். இக்கருத்தினையே,

'உள்ளம் பெருங்கோவில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே'

[திருமந்திரம் : 1823]

என்ற பாடலும் செப்புகின்றது.

மகவிரின் எழில் நலத்தை ஏத்தும் இயல்புடையார் அழிந்து கிடப்பதை,

'தவளத்தின் நித்திலமோ தண்புறவின் முல்லை நகை
தானே செய்ய
பவளத்தின் பொதிந்ததெனும் பல்லென்பார் முடிந்தபடி
பார்மின் பார்மின்'

எனக் காளி தேவி காட்டுகின்ற நிகழ்ச்சியின் வாயிலாக உணர்த்துகின்றார் கவிஞர்.

இரணியன் வதைப் பரணி:

நடையழகும் தொடையழகும் மிக்க நந்தமிழ்க் காப்பியமாகவும், பயில்தொறும் இன்பம் பயக்கும்

பான்மையுடைய பனுவலாகவும் கேட்டற்கு அரிய மறைப் பொருளைக் கிளர் பொற்றூணில் ஒரு சிறுவன் காட்டத் துணிந்த கதையைக் கூறும் கவிதை நூலாகவும் வைணவம் தந்த வண்டமிழ்ச் செல்வமாகவும் இலங்கும் இரணியன் வதைப்பரணி நூலினை இயற்றிய ஆசிரியர் யாரெனப் புலப் பட்டாவினும் திருக்குகைப் பெருமாள் கவிராயரே இப்பரணி பாடியிருக்க வேண்டுமென்று சில அறிஞர்கள் கருதுகின்ற னர். இப்பரணி திருமால், நரசிங்க அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்களைப் பாடியது, இந்திர சாலம், பேய் முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் காட்டல், கூழடுதலும் இடுதலும், வாழ்த்து என்னும் பதின்மூன்று உறுப்புக்களைப் பெற்று 693 தாழிசைகளில் அமைந்துள்ளது.

ஞாயிறும் திங்களும் பவனி வருகின்ற வானம் ஏன் இருண்டு கருப்பாயிற்று என்பதற்கு இரணியன் வதைப் பரணியின் ஆசிரியர்,

'பகல்வாழும் கதிரவனும் பனிமதியும் பலகாலும் பவனி போதும்
அகல்வானம் நிறமிருண்டது அந்த வனத்து எழுந்த அனல் புகையால் அன்றே'

என்ற பாடலின் வாயிலாக விடையிறுக்கும் நயம் போற்றத் தக்கது.

'கோயில் பாடியது' என்ற பகுதியில், வீரர்கள் சிலர், தம் தலைகளை அறுத்துக் காணிக்கை செலுத்துகின் றார்கள். தலைகள் அற்ற உடல்களோ கோயிலை வலம் வருகின்றன. அறுபட்ட தலைகள், உடல்கள் வலம் வருதலை ஒன்று, இரண்டு என எண்ணுகின்றன என்பதை,

'அடைருந்திறல் நினைவுடன் சிலர் அரிபகுந்தலை பலி கொடுத்து
உடல்வலம் செய வரமிருந்தலை ஒன்றிரண்டென எண்ணுமே'

என்ற அடிகள் நவில்கின்றன.

'தேவியைப் பாடியது' என்ற பகுதியில், அருளே திருமேனியாக உடைய தேவி, வேதங்கள் கூறும் பொருள் களையே தொழிலாக உடையவள். ஆகையால் அவளின் புகழினை எவ்வாறு இயம்புவது என்பதை,

'அருளே தன் திருமேனி ஆரணங்கள் ஒரு நான்கின்
பொருளேதன் திருத்தொழில்கள் புகழ் ஏதென்றியம்புவதே'

என்ற அடிகளால் உணர்த்துகின்றார்.

'பேய் முறைப்பாடு' என்ற பகுதியில், உலகில் உயிர் கட்குப் பசியைப் படைத்த பாழாய்ப் போன கடவுள், எங் களைப் பசியாலே படைத்து விட்டானே! நல்லவர்கட்கும் தீயவர்கட்கும் உலகத்திலே பிறந்து இறக்கும் எல்லா உயிர்கட்கும் யமனே கூற்றுவன்; எங்களுக்குப் பசியே கூற்றமாகி விட்டது என்று இரணியன் வதைப் பரணியில் பேய்கள் தேவியிடம் முறையிடுவதை

'ஏழாளி சூழுலகில் இருபொழுதும் பசி படைத்த
பாழாவான் எம்மை வெறும் பசியாலே படைத்தனனே
கல்லார்க்கும் தீயார்க்கும் நானிலத்தில் பிறந்திறப்பாம்
எல்லார்க்கும் நமன்கூற்றம் எங்களுக்குப் பசிக்கூற்றம்'

என்ற பாடலால் அறியலாம்.

'களங் காட்டல்' என்னும் பகுதியில், போர்க்களத்தில் இரத்த வெள்ளத்தில் யானைகளின் கொம்புகள் ஒடிந்து கிடக்கின்றன. அவற்றின் மேல் அரசர்களின் குடைகள் வீழ்ந்து கிடக்கின்றன. இதனைக் காணுங்கால், அந்தி வானத்தில் பிறைச் சந்திரனும் நிறை மதியும் ஒரு சேரக் காட்சி தருதல் போலத் தோன்றுவதாகக் கூற விழைந்து,

'அந்தமிலா மலைமருப்பும் மருப்பின் மேல் வீழ்
அரசர் கெடுங்கொடை வணபமும் அந்தி வானில்
வந்த பிறை மதியும் நிறைமதியும் சேர
எலுதுத வீசுபொத்திருந்த வண்ணம் பாரீர்'

என இயம்புகின்றார் இரணியன் வதைப் பாணியாசிரியர்.

முடிவுரை :

இறைவன், அரக்கன், ஞானம் ஆகியவற்றின் வெற்றிகளை முன் வைத்து அவ்வெற்றிகட்குக் காரணமாய் அமைந்த கொற்றவையின் கோவில், வடிவம், வழிபாட்டு முறை, அடியார்களின் தன்மை ஆகியவைகளைப் பற்றி இதுகாறும் காட்டிய பரணி நூல்கள் விரிவாக விளக்கி நிற்கின்றன. கலிங்கத்துப் பரணிக் காலந் தொட்டு இரணியன் வதைப் பரணிக்காலம் வரை சக்தி வழிபாடு பற்றி ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி ஆகியவைகளைப் பற்றி இப்பரணி நூல்கள் சுட்டுவனவாக அமைந்துள்ளன. சக்தியின் கணவனுகிய சிவபெருமான், தமையனை திருமால், மைந்தர்களான முருகன், ஞானசம்பந்தன் முதலியோரும் பாடப்படுகின்றனர். இங்கு சக்தியின் குடும்பமே இடம் பெறுகின்றது. கலிங்கத்துப் பரணி முதலாய பரணி நூல்கள் கடவுள் வாழ்த்தில் விஞயகரைக் குறிப்பிட்டாலும் கோவில் பாடியது போன்ற பகுதிகளில் விஞயகரைக் குறிப்பிட்டுச் செல்லாமை இங்கு சுட்டத் தக்கது. சக்தியின் ஒரு கூருகிய கலமகளை வழிபடு தெய்வமாகக் கொண்ட ஒட்டக்கூத்தர் ஏனையோரைக் காட்டிலும் சக்தி பற்றிய அதிகமான செய்திகளைத் தருவதில் வியப்பில்லை. சைவ சமயத்தார் பாடிய சைவ சமயப் பரணிகள் மட்டுமன்றி இரணியன் வதைப் பரணி போன்ற வைணவப் பரணிகளும் சக்தியை மையமாக வைத்தே பாடப்பட்டுள்ளன. சிவனின் மனைவியாகவும் திருமாலின் தங்கையாவும் இருக்கும் சக்தியைச் சைவ, வைணவப் பரணி இலக்கியங்களிரண்டுமே பாடுவதில் வியப்பில்லை. எச் சமயத்தைச் சார்ந்த பரணி, எவரால் பாடப்பட்டாலும் அது சக்தி வழிபாட்டை விட்டு விலகிச் செல்ல இயலாத வண்ணம் தமிழ் இலக்கிய மரபு அமைந்துள்ளது. இப்பரணி நூல்களுக்குக் கால்கோள் செய்த பகுதியாகச் சிலப்பதிகார வேட்டுவ வரியினைக் கூறலாம். இப்பரணி நூல்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கொற்றவை வழிபாட்டினைத் தமிழ் நாட்டில் ஊக்குவித்திருக்க வேண்டும். கொற்றவைக்குத் தலை சிறந்த இட

மனிக்கும் பரணி நூல்கள், மற்றைய தெய்வ வழிபாட்டினை விடக் கொற்றவை வழிபாட்டினை உயர்வாகக் கருதுகின்ற தெனலாம். தமிழிலக்கியப் பரப்பில் பாலை நிலத்தை வருணிக்கும் குறைந்த அடி உள்ள தனிப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. ஆனால் கொற்றவையைப் பாடி நிற்கும் பரணி நூல்கள் பாலை நிலம் பற்றிய விரிவான வருணனைகளை நல்குகின்றன. பரணி நூல்கள் காட்டும் சக்தி வழிபாடு பாலைநில மறவர்களின் வழிபாடாக மட்டும் அமையாது, பிற மக்களும் வானுலகத் தெய்வங்களும் வழிபடும் வண்ணம் அமைந்துள்ளது. இது காளி வழிபாட்டைப் பற்றிய ஒரு பரந்த நோக்காக. உலக நாயகியாகக் காளியைக் கொள்கின்ற பாங்குடன் காணப்படுகின்றது. வழிபாட்டு முறைகளைப்பற்றி ஆராயுங்கால், அவைகளும் அவரவர்க்கேற்ப மாறுபட்டு அமைவதை உணரலாம். அறுசுவை அமுது படைப்பது ஒரு புறமும், தலையை அரிந்து குருதிப் பலி கொடுப்பது ஒரு புறமாக வழிபாட்டு முறை இடம் பெறுகின்றது. காளி பேய்களுக்குக் களம் காட்டுவதாக ஏனைய பரணி நூல்கள் கூற, தக்கயாகப் பரணி தேவிக்குச் சிவபெருமான் களங்காட்டுவதாகப் பாடுவது புதுமையுடன் இலங்குகின்றது. கலிங்கப் போரையும் தக்கனின் வேள்விக் களத்தில் நிகழ்ந்த போரையும் பேய், காளிக்குக் கூறுவதாகக் கலிங்கத்துப் பரணியும், தக்கயாகப் பரணியும் குறிப்பிடுகின்றன. ஆனால் நாமகள், காளிக்கு ஞானசம்பந்தர் மதுரையில் சமணரை வென்ற வரலாற்றினைக்கூறுவது ஒரு புதுமையாகத் தக்கயாகப் பரணியில் காட்சி அளிக்கின்றமையைக் காண்கிறோம். ஒட்டக்கூத்தர், திருஞான சம்பந்தரைத் தன் குருவாகக் கொண்டமையாலேயே இப்பகுதியைக் கூறியிருக்கலாம். திருஞான சம்பந்தருக்குக் கடவுள் வாழ்த்தில் இடம் அளிக்கப்பட்டதன் வாயிலாகவும் இதனை உணரலாம்.

பயன்பட்ட நூற்கள்

1. இலக்கண விளக்கப் பாட்டியல்
2. பன்னிரு பாட்டியல்
3. வெண்பாப் பாட்டியல்
4. திருக்குறள்
5. குலோத்துங்கன் சோழன் உலா
6. மறைந்து போன தமிழ் நூல்கள்
— மயிலை. சீனி. வேங்கடசாமி
7. வில்லி பாரதம்
8. திவாகரம்
9. அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவுகள்
10. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — பேராசிரியம் உரை
11. கன்னூல் — மயிலை காதர் உரை
12. சீவகசிந்தாமணி
13. புறப்பொருள் வெண்பா மாலை
14. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
15. பரணி இலக்கியங்கள் — ந. செயராமன்
16. சிலப்பதிகாரம்
17. குறுந்தொகை
18. பெரும்பாணாற்றுப்படை
19. மதுரைக் காஞ்சி
20. திருமந்திரம்
21. Tamil Lexicon-Volume V

22. கலிங்கத்துப்பரணி

23. தக்கயாகப் பரணி

24. பாசவனைப் பரணி

25. அஞ்ஞவனைப் பரணி

26. மோகவனைப் பரணி

27. இரணியன் வதைப் பரணி

28. திருமுருகாற்றுப்படை

29. சிறுபாணாற்றுப்படை

30 ஐங்குறு நூறு

31. அகநானூறு

32. திவ்விய திருப்பாவை

33. பதிற்றுப் பத்து

34. சிலம்பில் கொற்றவை — இரா. சீனிவாசன்
இளவேனில் — 3, இளங்கோமன்ற வெளியீடு (1974)

35. கம்ப இராமாயணம்

36. அரிச்சந்திர புராணம்

37. புறநானூறு

38. சௌந்தர்ய லஹரி — ஸ்ரீ சங்கர பகவத் பூஜ்ய பாதாள்.

14
அபிராமி அந்தாதியில் சக்தி

காலனைச் செற்ற அழுத கடேசப் பெருமானின் அருட் சக்தியாகத் திருக்கடவூரில் அருள் தருகின்ற அபிராமியம்மையைப் போற்றி அபிராமி பட்டர் அருளிய ''அபிராமி அந்தாதி'' என்னும் பக்தி பனுவல், தமிழறிந்த மெய்யடியார்களுக்கு அமுதம் போன்றமைகின்றது. இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் திருக்கடவூரில் அபிராமி சயத்தினராகிய அபிராமி பட்டர் வாழ்ந்து கொண்டிருந்த போது, தஞ்சை மன்னர் சரபோஜி திருக்கடவூருக்கு வருகை தந்தார். அபிராமி பட்டரது தன்மையினைக் கண்டு அவருடன் பேச விழைந்த மன்னர் ''இன்று என்ன திதி'' என்று வினவ, அம்பிகையின் ஞானச்சுடரில் மூழ்கியிருந்த அபிராமி பட்டரும் அன்று தை அமாவாசை என்பதை மறந்து'' ''இன்று பௌர்ணமி'' என்று கூறினர். மன்னரும் வியப்புற்றுச் சென்று விட்டார். இவ்வுலக உணர்வு பெற்றபொழுது அபிராமி பட்டர் தாம் மன்னரிடம் தவருகக்கூறியதைஎண்ணிவருந்தி. அம்பிகையைவேண்டி இவ்வந்தாதியை அருளிச் செய்தார். அன்று இரவு மன்னர் அபிராமியம்பிகை அருளால் முழுமதி வீசும் காட்சியையும் அபிராமிபட்டர் அதனை அருகிலிருந்து காட்டுவதையும் கண்ணுற்று மிக்க மகிழ்ச்சி அடைந்து அபிராமி பட்டரை வணங்கி, பல கிராமங்களில் அவரது சந்ததியினர் அனுபவிக்கும்படி உரிமை வழங்கினர். அபிராமி பட்டர் இவ்வந்தாதியில் அம்பிகையைப் பலபடப் போற்றித் தாம் தேவி உபாசகப் பரம்பரையினர் என்பதை உணர்த்துவதை அறியலாம். தன்னுடைய பெயரிலும் தேவியின் பெயராகிய அபிராமியை அமைத்திருப்பது கருதத் தக்கது.

சக்தியின் பெயர்கள் :

நாயகி நான்முகி நாராயணி கைகளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாய் அகி மாலினி வாராகி சூலினி மாதாங்கி என்று
ஆயகியாதியுடையாள் சரணம் — அரண் நமக்கே

[50]

என்ற பாடலில் சக்தியின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அகிலலோக ஏக நாயகி மலரவன் சத்தியாகிய பிராமியும். நாராயணனது சத்தியாகிய நாரணியும், கையில் தாமரை மலர் முதலிய ஐந்து கணைகளையுடையவளும் மகேசுவரனது சத்தியாகிய சாம்பவியும், சதாசிவனது சத்தியாகிய சங்கரியும் சியாமளா தேவியும் நஞ்சு பொருந்திய நல்ல பாம்பின் மாலையணியை உடையவளும் வாராகியும் சூலத்தை உடையவளும் மாதங்க முனிவரது புதல்வியாகிய மாதங்கி என்று சக்தி பல்வேறு அம்சங்களின் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறாள்.

வாராகி விஷ்ணு சக்தி வகையில் ஒன்று என 'வராகி மாலை' என்ற நூல் கூறுகின்றது. பாணர் குலப் பெண்ணுக மாதங்கி என்ற திருப்பெயருடன் மீனாட்சி தோன்றினாள் என்பது கருதத் தக்கது. [70 : 4]

"நாக பூஷணத்தி யண்டம் உண்ட நாரணி"
"மாதங்கி வேதஞ்சொல் பேதை நெடு நீலி"

என்று திருப்புகழ் பாடுகின்றது.

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி - என்றே
செயிர் அவி நான்மறை சேர் திரு நாமங்கள் செப்புவரே [77]

அச்சந்தருபவள் (பயிரவி) எங்கும் நிறைந்தவள் (பஞ்சமி) பாச அங்குசங்களை உடையவள், ஐங்கணைகளை உடையவள், வஞ்சகரது உயிரை உண்ணும் கனமிக்க சண்டி, ஒளி வீசும் கலைகளை இடைய வயிரவி, மண்டலத்தை உடைய

வள் (மண்டலினி) கரு நிறமுடையவள் (மாலினி) சூலத்தை உடையவள் (சூலி) வராகி என்றும் சக்தியின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

'பெரும் புகழ்ப் பஞ்சமி' [வராகி மாலை : 4]
'கருத்திற் பயிலும் வராகி மெய் பஞ்சமி [வராகி மாலை: 9]
'பாடகச் சீறடிப் பஞ்சமி' [வராகி மாலை : 19] என்றும்
'நீடு பஞ்சமி சூலினி மாலினி'
'கவுரி பஞ்சமி யாயீ மாயி என்று திருப்புகழும்
'கலை கழனிலையலருயிரவி பயிரவி'
'மெய்ம் மறையார் கலியானத்து மேலையா மருங்கசைத்த விமலியம்மா' என்று திருவிளையாடற் புராணமும் [4:34]

கூறுகின்றமை இவண் எண்ணத்தக்கது.

உறைவிடங்கள் :

சக்தியின் நாயகனுகிய சிவபெருமானது, இடப்பாக மும் வேதங்களின் முதல், முடிவு ஆகியவையும் அமுத கலை நிறைந்த சந்திரனும் வெண்தாமரைப் பூவும் துர்வாச முனிவர் சாபத்தால் இந்திரனது செல்வங்கள் வீழ்ந்து மறையப் பெற்ற பாற் கடலும் அடியார்களது நெஞ்சமும் சக்தியின் உறைவிடங்களாகக் கூறப்பட்டுள்ளன [20].

கடல் சூழ்ந்த நிலம் முதலிய ஏழுலகங்களுக்கும் எட்டு பெரிய மலைகட்கும் எட்டாத பகலும் இரவும் பொன் மலையை வலம் வரும் சூரிய சந்திரராகிய இரு சுடர்க்கும் இடையேயும் சக்தி உறைவதாகக் கூறப்பட்டுள்ளது. [47 : 2-4]

இருக்கை :

ஒளியொடு பொருந்தி நிலைக்கின்ற ஒன்பது முக் கோணங்களிலும் விரும்பி அமர்பவளாகச் சக்தி கூறப் படுகிறுள் [19 : 4].

"வீற்றிருப்பாள் நவ கோணத்திலே *" [வராகி மாலை : 31] என்ற பகுதி ஒப்பு நோக்கத் தக்கது.

---

* நவகோணங்கள் பற்றிய விளக்கம்:— முதலில் ஒரு திரிகோணமும் அதன் மேல் அட்டகோணமும் அதன் மேல் தச கோணமும், அதன் மேல் மற்றொரு தச கோணமும், அதன் மேல் சதுர்த்தச கோணமும் அதன் மேல் அட்ட தளமும் அதன் மேல் சோடச தளமும் அதன் மேல் விந்துத் திரவியமும் அதன் மேல் சதுரச் சித்தியமும் அமைகின்றன.

நான்முகன் நாவில் கலைமகளாகவும், திருமாலின் திருமார்பில் திருமகளாகவும் சிவபெருமானின் இடப்பாகத் தவளாயும் பொன் போலும் சிவந்த தேன் மிக்க தாமரை யிலும் அம்மலரை மலர்விக்கின்ற பரிதி வட்டத்திலும் சந்திர வட்டத்திலும் உறைபவள் [34:2-4].

'வேதியர்கள் அயனுவில் விஞ்ஞை மகளென்றும்
சீதரன்றன் மணி மார்பிற் செழுங்கமலை யென்றும்
நாதரிடத்தரிவையென்று நாட்டுவரெண்ணடங்கா
வாதிபரன் மூலபரையா மனையுள் மயக்கால்'

[சௌந்தரியலகரி]

என்ற பாடலடிகள் மேற்கூறிய கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

தாமரை மலரை இருக்கையாக உடையவள் என்றும் [36:4] பொற்றுமரைப் பூவில் விளங்குபவள் [80:4] என்றும் வண்டுகள் சுற்றுகின்ற தாமரை மலரில் விளங்கு பவள் [82:1] என்றும் சிறந்த செந்தாமரையில் விளங்கு பவள் என்றும் [89:1] அகவிதழழகு விளங்கும் செந் தாமரை மலராலயத்தை வீற்றிருக்கையாக உடையவள் என்றும் [96:1] கூறப்படுகிருள்.

தேவியின் வடிவ வருணனை:

தேவியை வருணிக்கின்ற திறத்தினைக் கூறியுள்ள 'சௌந்தர்ய லகரி' என்ற நூலின்கண் 'கிரீடம் முதல் பாதாரவிந்தம் வரை' தேவி வருணிக்கப்பட்டுள்ளமையால் இவண் அவ்வாறே அமைக்கப்பட்டுள்ளது.

திருமுடி:

குளிர்ந்த பிறையினை உடைய திருமுடியை உடைய வள் என்றும் [71:3] பிறை விளங்கும் செஞ்சடையினை உடையவள் என்றும் [84:1-2] வருணிக்கப்பட்டுள்ளது.

''இமயக் கிழவி, நனிக்கண் விளங்கும் நுதற்பிறை
மேலோர்
மிகைப் பிறை கதுப்பிற் சூடி''

[ஆசிரியமாலை]

என்ற பாடலடிகள் ஒப்பு நோக்கத் தக்கது.

"சடையும் பிறையும் தாழ்ந்த சென்னிக்
குவளையுண்கட் பவளவாண் முகத்தி

[சிலப்பதிகாரம் : 23 : 1-2]

"தாருணவாணிலா வீசு சடில மோலிமாசுளி"

என்று கூறுவனவும் கருதத்தக்கன. இறைவி பிறை சூடி விளங்குவதைத் திருநாகேசுரத்தில் அமைந்துள்ள "பிறை யணி வாணுதலாள்" கோயிலில் காணலாம்.

கூந்தல் :

மணங்கமழும் கடம்ப மலர் மாலையைப் புனைந்த கூந்தலையுடையவள் என்றும் [26 : 2-3] பிச்சிப்பூ மாலையைச் சூடிய கருங்கூந்தலை உடையவள் என்றும் [58 : 2-3] கரிய நிறங்கொண்ட மலரணிந்த கூந்தலையுடையவள் என்றும் [69 : 4] மணம் வீசும் மலர்க் கூந்தலை உடையவள் [75 : 4] என்றும் வருணிக்கிறார் அபிராமி பட்டர்.

நெற்றி :

ஒளிர்கின்ற நெற்றியினை உடையவள் [39 : 4].

கண் :

அடியார்கள் இறக்கும் பொழுது கூற்றுவனிடத்தினின்றும் மீட்சியுறுமாறு தன்மை படைத்த திருக்கடைக் கண்களை உடையவள் [39 : 2]; ஒளியை உடைய நெற்றிக் கண்ணை உடையவள் [40 : 1]; புதிய கருங் குவளைப் பூவையொக்கும் கண்களை உடையவள் [41 : 1-2]; மூன்று கண்களை உடையவள் [53 : 3]; மருண்ட மானேக்கமே திருக்கண்களாக உடையவள் [93 : 2; 100 : 4].

முகம் :

செம்பொட்டுப் பொருந்திய திருமுகத்தினையும் [7 : 4] தாமரை மலர்கள் எல்லாம் வணங்குகின்ற வெற்றியை உடைய திருமுகத்தினையும் [17 : 1-2] உடையவள்.

காது :

வயிரத்தோடு அணிந்த காதினையும் [78 : 3] கயிலாய நாதருக்கு இமவான் தந்த பருத்த குழையினையும் [99 : 4] காதில் உடையவளாய்க் காட்சியளிக்கின்றாள்.

வாய் :

பவளக்கொடி போன்ற இனிமை முற்றிய சிவந்த திருவாய் என்றும் [38 : 1] புன்முறுவலாகிய தண்ணில வினைப் பெற்ற பவளத் திருவாய் என்றும் [78 : 4] வெண் நகையினை உடைய அழகிய வாய் என்றும் [100:3] குளிர்ச்சி விளைவிக்கும் இன்சொல்லைக் கூறுகின்ற வாய் என்றும் [42:4] இனிய சொற்களைப் பேசுகின்ற வாயென் றும் [43:1] நாவிற்கினிய பாலினும் செவிக்கினிய சொற் களை அருளுகின்ற வாயென்றும் [60:1] பாலையும் தேனை யும் வெல்லப்பாகையும் போன்ற இனிய மொழியைக் கூறு கின்ற வாய் என்றும் [86:4] வருணிக்கிறார் கவிஞர்.

பல் :

மயிலிறகின் அடியைப் போலும் திருப்பற்கள் என் றும் [9:4] குளிர்ச்சியுற்ற புன்முறுவலோடு கூடிய வெண் பல் வரிசையென்றும் [38:2] வருணிக்கப்பட்டுள்ளது.

கை :

வெண்மையான சங்க வளையல்கள் நிறைந்த சிவந்த கை என்றும் [21:1-2; 49:2] கூடகமணிந்த திருக்கை யென்றும் [86:2] சாம, வேத முதலிய பண்களும் மகிழ் தற்கு அடியாகிய இன்னிசையுடைய வீணையைத் தாங்கிய திருக்கையென்றும் [70 : 1-2] ஐந்து மலர்க்கணைகளை உடைய கையென்றும் [76:4] கரும்பு வில்லும் மலரம்பு களும் கொண்டு விளங்கும் கையென்றும் [9:3, 59:2-3, 62:3-4] குளிர்ச்சி பொருந்திய மலர்க் கணைகளும் கரும்பு வில்லும் மெல்லிய பாசமும் அங்குசமும் (தோட்டியும்) பொருந்தப் பெற்ற கை என்றும் [2:1-2, 43:1; 85:1-2; 100:2-3, நூற்பயன் 3-4] தேவியின் கரம் வருணிக்கப் பட்டுள்ளது.

தோள் :

மூங்கிலை மாய்த்த இரு நெடிய திருத்தோள்களை உடையவள் [100 : 2]

நகில் :

மாணிக்க மணிச் செப்பை நிகர்த்த நெருங்கிய பரம், அபரம் என்ற ஞானங்களே இரு திரு நகில்கள் [5 : 1]; அழகிய மேரு மலையைப் போல் பெருத்தனவும் திருவருளாலே அழுத சீர்காழித் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு ஞானப்பால் கொடுத்தனவுமாகிய பேரருள் புரியும் அழகிய நகில் [9 : 1-2]; அசையும் முத்துமாலையை அணியப் பெற்ற நகில் [9 : 3]; சிவபெருமானது திருவுள்ளம் முழுவதையும் நெக்குருகச் செய்யும் களபச் சேறணிந்த நகில் [33 : 2-3]; முத்து மாலை அணியப் பெற்ற, தாமரையின் பேரரும்புகளை ஒத்த நகில் [37 : 1-2 ; 58 : 2] செந்தாமரை அரும்புகளாகிய நகில் [93 : 2]*; சிவபெருமானை அவரது யோக நிலை கெடுமாறு போரிட்ட உடுக்கை போன்ற இடையைத் துவள்விக்கும் நகில் [38:3]; பருத்து இணைந்து செறிந்து குழைந்து முத்துமாலையை மேற் கொண்ட மலை போன்ற நகில் [42 : 1-2]; முத்துமாலை அணியப் பெற்ற மிகப் பெரிய நகில் [59 : 2]; குரும்பை போன்ற நகில் [62 : 3]; மாணிக்கச் செப்பையும் தங்கக் கலசத்தையும் போன்ற நகில் [78 : 1]; கச்சணிந்த குங்குமக் கோலத்தை உடைய நகில் [85 : 4]; விரிசடையனான சிவபெருமான் தழுவும் மெல்லிய திரு நகில் [91 : 1-2] இளந்தளிருடன் விளங்கும் கொன்றை மாலையினது நறுமணம் வீசும் நகில் [100 : 1].

வயிறு :

மலைகளையும், கடல்களையும் பதினான்கு உலகங்களையும் பெற்ற திருவயிற்றை உடையவள் [75 : 2-3].

---

* செந்தாமரை அரும்பினையே நகிலாகக் கூறுவது நகைப்பிற்கிடமாக அமைகின்றது. "ஞாலமெல்லாம் பெற்ற வளுக்கு நகில் தாழாமல் தாமரை அரும்பாக இருத்தல் முரண்பாடு" என திரு. கி. வா. ஜகன்னாதன் கருதுகிறார்.

இடை :

மின்னற் கொடியென்றும் [1 : 3], கொடி போன்ற தென்றும் [5 : 2] கூறப்பட்டுள்ளது. பெரிய நீண்ட வானில் தோன்றும் மின்னலினும் சிறியது என்றும் [72 : 2-3], மின்னலைப் போன்ற மெல்லியதென்றும் [91 : 1] உடுக்கை போன்றதென்றும் [38 : 3] நுண்ணிய நூல் போலும் சிறியதென்றும் [84 : 3] சிவந்த பட்டாடை யணிந்த மிகச் சிறிய இடையென்றும் [53 : 1, 84 : 1], பல மணிகளிழைத்த மேகலையையும் பட்டாடையும் அணியப் பெற்றதென்றும் இடையினை நயம்பட வருணித்துச் செல்கின்றார் அபிராமி பட்டர்.

அல்குல் :

நல்ல பாம்பினது படத்தையொத்த அல்குல்[42:4].

திருவடி :

மானிடர்களும் தேவர்களும் தவத்தாலும் சித்தி களாலும் மரணம் ஒழிந்த முனிவர்களும் வந்து தலையைத் தாழ்த்தி வணங்கும் சிவந்த திருவடிகள் [4 : 1-2]: செந்தாமரை மலரினும் திருந்திய அழகுடைய திருவடிகள் [5 : 4]; இளம் பிறை பொருந்திய சடையை உடைய சிவ பெருமானும் திருமாலும் எக்காலத்தும் வணங்கித் தொழும் சிவந்த திருவடிகள் [7 : 2-3]; இளம் பிறையினது மணம் வீசும் திருவடிகள் [35 : 1].

"பிறை நாறுஞ் சீறடி" [மீனாட்சியம்மை குறம் : 45]

"பிள்ளைப் பிறை நாறுஞ் சீறடியெம் பேதாய்"

[சிவகாமியம்மை இரட்டை மணிமாலை : 19]

என்ற பகுதிகள் ஒப்பு நோக்கத் தக்கனவாக அமைந்துள் ளது. சிலம்பணிந்த சிறிய திருவடிகள் [43 : 1]; அரிய வேதங்கள் அடி நிலையாகித் தொழுதலால் கன்றிச் சிவந்த திருவடிகள் [71 : 1-2]: தாமரை மலர்கள் போன்ற திருவடிகள் [88 : 1].

உருவ அமைப்பு :

தேவி ஞான வெளி உருவாக அமைந்தவள் [5 : 4]; மகிடாசுரனது தலைமேல் நின்ற கோலத்தினை உடையவள் [8 : 2]; மண் முதல் விண் முடிவாக ஐம்பூதங்களையும் தனது வடிவமாக உடையவள் [11 : 2]; சக்தியால் கவர்ந்து கொள்ளப்பட்ட இடப்பாகத்தை உடைய சிவ பெருமானும் சக்தியும் உள்ளம் உவந்து விளங்கும் அர்த்த நாரீசுவர வடிவத்தை உடையவள் [18 : 1-2]; திருமணக் கோலமான கலியாண சுந்தர வடிவத்தை உடையவள் [18 : 2]; நரம்பைப் பொருந்திய ஏழிசை உருவாய் நிற்கின் றவள் [49 : 4]; ஒன்றுப் பராசக்தி வடிவமாயும் பலவாய் ஏனைச் சக்திகளாக விரிந்தும் இவ்வெல்லாவுலகங்களுமாய் நிறைந்தும் அவையனைத்தையும் நீங்கி நிற்கும் வடிவமும் கொண்டு அமைபவள் [56 : 1-2]

"யாவையுமாம் ஏகம் பராசக்தி"

[திருக்கோலையார் : 71]

ஒப்பு நோக்கற்பாலது.

சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூச்சுடராகிய திருக்கண்கள் மூன்றினையும் செங்கைகள் நான்கினையும் சிவந்த நிற ஒளியினையும், கடப்ப மலர் மாலையினையும் கரும்பு வில்லினையும் ஐந்து மலர்க் கணைகளையும் கொண்டு புதியதோர் உருவ அமைப்பு பெற்று இலங்குபவள் [73 : 1-3]; அடியார்கள் பார்க்கின்ற திசைகள் தோறும் அவர்களின் இடர் களைந்து வினை தீர்க்கும் திரிபுர சுந்தரி யான திருவுருவம் கொண்டு காட்சியளிப்பவள் [85:2-3]; வாக்கும் மனமும் கடந்த திருவுருவத்தினை உடையவள் [87 : 1]; முடிவில்லாத பொய்த்தீ தோற்றத்தை உடைய வள் [93 : 2-3].

மேனி :

தேவி மெல்லிய மணம் மிக்கக் குங்குமக் குழம்பு போலச் சிவந்த திருமேனியுடையவள் [1 : 3]; வியப் பூட்டும் அழகு மிக்க திருமேனியுடையவள் [17 : 1]; சிவந்த திருமேனியை உடையவள் [43 : 2]; ஆயிரம்

மின்னல்கள் திரண்டு பெண்ணியல்பு பொருந்திய திரு மேனியை உடையவள் [55 : 1-2]; மின்னற் கொடி போன்ற செவ்வொளி கொண்ட திருமேனியினை உடைய வள் [67 : 1]; எழுதவொண்ணுப் பசிய திருமேனியை உடையவள் [96 : 3].

நிறம் :

தேவி பாசத் தொடரைத் தாமே எழுந்தருளி வந்து தீர்க்கின்ற செந்நிறத்தை (அரிசிந்துர வண்ணம்) உடைய வள் [8 : 1-2]; பொன்னிறத்தையும் (பிங்கல நிறம்) நீல நிறத்தையும் செந்நிறத்தையும் வெண்ணிறத்தையும் பச்சை நிறத்தையும் உடையவள் [21 : 4]; மாணிக்க நிறமுடையவள் [24 : 1] மண்ணுலகிலுள்ளோர் உள்ளம் மகிழ்தற்குரிய சியாமள நிறத்தை உடையவள் [70 : 3]; மாதுளம்பூ நிறமுடையவள் [நூற்பயன் : 2].

பண்பு:

தேவி எல்லாக் கலைகளுக்கும் அதி தெய்வமாய் விளங்கும் மயில் போன்றவள் [21:2]; குணக்குன்றுயும் அருட்கடலாயும் அமைகின்றவள் [95:4]; உண்மையன்பு பொருந்திய உள்ளத்தில் அல்லாது வஞ்சகரது பொய்யுள் ளத்தில் ஒரு காலும் புகவறியாத இளம் பூங்குயில் போன்ற வள் [98:3-4].

காமத்தைக் கடிந்து யோகத்தைப் புரிந்து கொண் டிருந்த சிவபெருமானின் யோகத்தினை நீக்கிப் போகத்தில் ஆக்கிய ஆற்றலும் [17:3-4], நகில்களாகிய மலையைக் கொண்டு சிவபெருமானது வலிய நெஞ்சை ஆட்டங் கொண்ட உள்ளக் குறிக்கோளும் அதற்குரிய ஆற்றலும் [42:2-3] எவராலும் அழிக்க இயலாத சிவபெருமானது யோக விரதத்தை மாற்றி அனைத்து உலகில் வாழ்வோர் களும் பழிக்கும்படி சிவபெருமானின் இடபாகத்தை இடங் கொண்ட ஆற்றலும் [87:2-3] உடையவள் தேவி என நவில்கின்றார் கவிஞர்.

தேவி சிவபெருமான் உண்டருளிய நஞ்சைத் தமது திருக்கைகளாற் பற்றி அமுதாகச் செய்தருளியவள் [5;3]; தன்பால் அடைக்கலம் புகும் மெய்யடியார்களுக்கு வீடும் மேலுலக வாழ்வும் அருளுபவள் [34:1]; மெய்யடியார் களின் உயிர் கொடிய கூற்றுவனுல் கவர்வதற்கு ஆயுள் முடிவில் உள்ளங் கலங்க இறங்கும் வேளையில் அரம்பை முதலிய தேவ மகளிர் சூழ எழுந்தருளி வந்து அருள் செய்பவள் [49:1-3]; இறைவராகிய சிவபெருமான் அளந்து கொடுத்த இருநாழி நெல்லையும் கைக் கொண்டு அகில அண்ட சராசரங்களும் பிழைப்பதற்கு முப்பத்தி ரண்டு வகை அறங்களை இயற்றும் அருள் தன்மை உடை யவள் [57:1-2].

"தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லையிரு நாழி நெற்கொண்டோர் — மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொலி நீர்க் காஞ்சி யிடை"

[பழம் பாடல்]

"அபிராமி எக்குலங் குடிலோடு லகியாவையும்
இற்பதிந்திரு
நாழி நெலாறைம் எப்போதும் பகிர்வாள்"
"இரு நாழி படிகொ டறங்காத்த மாபரைச்சி"

[திருப்புகழ்]

என்ற இரண்டு மேற்கோள்களும் கருதத் தக்கன.

மெய்யடியார்களுக்குக் கல்வியையும், செல்வத்தை யும் தளர்வற்ற உள்ளத்தையும் தெய்வீகப் பேரழகையும் நெஞ்சில் வஞ்சமற்ற சுற்றத்தையும் மற்றும் எல்லா நலன் களையும் கொடுத்து அருளுபவள் [69:1-3]; நான்மறை கூறியவாறு வழிபடுகின்ற அடியவரை வழிபடுகின்ற அவ்வடியார்க்கடியவர்க்குப் பல இசைக் கருவிகள் ஒலிக்க வெள்ளாணையை ஊர்தியாகக் கொண்டு செலுத்தும் இந்திர பதவியை அருளுபவள் [91:3-4]; கடம்ப வனத்தில் குயிலாய் இருந்து அருள் புரிபவள்; பரந்த இமயமலையில் பச்சை நிற மயிலாய் விளங்கி அருள்புரி பவள், தாமரை மலரில் வெண்ணிற அன்னமாய் விளங்கி

அருள் செய்பவள் [99:1-3]; புவி அனைத்தையும் காத்து அருள் புரிபவள் [நூற்பயன்: 2-3].

தத்துவக் கருத்துக்கள் :

உயிருக்கு அடியாகப் பொருந்திய தூலம், சூக்குமம், காரணம் என்ற மூவகை உடம்புகளிலும் நிறைந்திருக்கும் தன்மை உடையவள் தேவி என்ற தத்துவக் கருத்து கூறப் பட்டுள்ளது [5 : 1-2].

பிங்கலை, இடைகலை, சுழுமுனை என்ற மூன்று நாடி களிலும் இருப்பவள், மனம், புத்தி, சித்தம் என்ற மூன்றி லும் உறைபவள்'' என்று நிரிபுராரிவனம் என்ற நூல் கூறும் கருத்து எண்ணத்தக்கது..

என்றும் கன்னியாகவே தேவி விளங்குகின்றாள் [8 : 3] என்ற தத்துவமும் கூறப்பட்டுள்ளது. இறைவி கன்னியென்பது, ''பவன் பிரமசாரி பால் மொழி கன்னி யாவாள்'' [சிவஞான சித்தியார்], ''அகிலாண்ட கோடி அன்னையே பின்னையும் கன்னியென மறை பேசும் ஆனந்த மயிலே [தாயுமானவர் பாடல்] என்ற பாடல் குறிப்புக் களால் அறிய முடிகின்றது.

எழுதாக் கிளவி எனப்படும் வேதங்களின் முடிவிற் பொருந்தும் அறிதற்குரிய பொருளாய் உள்ளவள் [10 : 3].

''மறையாய் மறை பொருளாய்ப் பொருள் முடிவு தானுய்.....எம்பிராட்டி [திருவிளையாடற் புராணம் :4, 42] ஒப்பு நோக்கத்தக்கது. எழுலகங்களையும் பெற்றவை யென்ற தத்துவம் கூறப்பட்டுள்ளது [12 : 4].

பதினான்கு உலகங்களையும் அளித்து அவைகளைக் காத்துப் பின்னர் அவற்றைக் காரண மாயை வடிவில் ஒடுக்குபவள் [13 : 1-2] என்ற தத்துவக் கருத்தினையும் அறியலாம்.

எப்பொழுதும் சுமங்கலியாக இருப்பவள் [21 : 1] என்று கவிஞர் கூறுவது வாழ்வரசியாகிய சக்தியின் அழியா நிலையைக் காட்டுகிறது, நான்முகன் முதலிய விண்ணவரைப் பெற்ற தன்மையினை உடையவள் [22:3]. மருகனைச் சக்தி ஈன்றதாகக் கூறப்படுவதன் வாயிலாக அனைத்துமாக இருப்பது பெண்மைச் சக்தி என்ற உண்மை உணரற்பாலது.

முத்தொழிலியற்றும் திரிமூர்த்திகளுக்கும் தாயாக விளங்குபவள் [25 : 2–3] என்ற வருணனை திருமூலரின் "சக்தியின்ற சதாசிவம்" என்ற திருமந்திர வாக்கை நினைவு கூரச் செய்கின்றது. "மும்முதற்கும் வித்தே" என்று மிஞட்சியம்மன் பிள்ளைத் தமிழ் கூறுகின்றது. அணிமா முதலிய எட்டுச் சித்திகளாகவும் அச்சித்திகளை அருளும் தெய்வங்களாகவும் விளங்குபவள் [29 : 5] என்பதன் வாயிலாகச் சித்தர்களின் தத்துவக் கோட்பாட்டினை உணரலாம். வேதங்களின் முதலாயும் அதன் நடுப்பரப்பு எங்குமாயும் அதன் முடிவாயும் விளங்குவாள் தேவி என்ற தத்துவம் அறியத் தக்கது [55 : 3], அறுவகைச் சமயமும் கூறும் தன்மை படைத்தவள் [63 : 3] எனக் கவிஞர் கூறுகின்றார்.

"காரணி யறத்திறியாறு சமயத்தி" [திருப்புகழ்]

ஒப்பு நோக்கத்தக்கது.

நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்று கூறப்படுகின்ற ஐந்து தன் மாத்திரைகளிலும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்பட்ட ஐந்து பூதங்களிலும் இரண்டறக் கலந்து நிற்கும் தன்மையுடையவள் தேவி எனத் தத்துவக் கருத்தினை அறிவுறுத்துகின்றார் அபிராமி பட்டர் [68:1–3]. உலகங்கள் எல்லாவற்றையும் பெருது பெற்றும் உலகன்னையாகவும் விளங்குபவள் தேவி என்று கூறுவதன் வாயிலாகவும் தத்துவக் கருத்தினை வலியுறுத்துகின்றார் என்பது வெள்ளிடை மலை [நூற்பயன்]. மறைகளாகிய சிலம்புகளை அணிந்துள்ளாள் தேவி [42 : 4] என்று கூறும்பொழுது

தேவியின் சக்தி தத்துவம் வெளிப்படுகின்றது. ''வேதங் களோடு நான்கு மெல்லடி மேல் வியன் சிலம்போ'' [பாசவதைப் பரணி : 192] என்ற பகுதி ஒப்பு நோக்கத் தக்கது.

யாமளைப் பைங்கிளி [15 : 4], யாமளைக் கோமளம் [33 : 3] யாமள தந்திரக் கொழுந்தாய் அமைபவள் [96 : 2] போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. 'யாமளம்' என்பது அம்பிகைக்குரிய ஆகமம் என்பதும், யாமளை என்ற பெயர், யாமள தந்திரத்தில் பேசப்பட்டுள் ளமையால் ஏற்பட்டதென்றும் அறியலாம். தத்துவத்தின் கோட்பாடாகிய தந்திரம் என்பது பற்றி இவண் பேசப்பட் டுள்ளது.

''பரவுவன யாமளமோ''
''யோக யாமளத்திலுள்'' [தங்க. 113, 136]

எனக் கூறுதல் எண்ணத் தக்கது.

திருநீலகண்டனுக்கு மூத்தவள் [13 : 3] என்றும் திருமாலுக்கு எக்காலத்தும் மூத்து இளையவளுமாயிருப் பவள் [13 : 4] என்றும் சாக்த மதத்தைச் சார்ந்த அபிராமி பட்டர் பாடுகின்றார். சக்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் மூத்தவள் எனக் கூறி யிருக்கலாமெனக் கருதவும் இடமுண்டு. சக்தி சிவபெருமா னது மங்கலமான இல்லறத் துணைவியாகும் தவமுடையவ ளாயினும் அத்தேவியே அச்சிவபெருமானுக்குப் படைப்பு முறைமையில் தாயும் ஆனமையால் இத்தேவியே எல்லா இறைவர்க்கும் மேலாகிய முதல்வியானவள் என்றும் கூறு கின்றார் கவிஞர் [44 : 1-3]. இக்குறிப்பும் சக்தி தத்துவத் தினின்று சதாசிவ தத்துவம் தோன்றுதலையே உணர்த்து கின்றது.

சாக்தம் பற்றிய கருத்து:

சக்தியை விரும்பி வழிபடும் மெய்யடியார்கள் கண் களிலே நீர் பெருகியும் மெய் புளகித்தும் நிறைந்து வழியும் இன்ப வெள்ள மயமாகியும் தன்னை மறந்து தேனுண்ட

வண்டுபோலும் மகிழ்ச்சி அதிகமாக அடைத்தும் சொற்கள் தழுதழுத்தும் முன் கூறிய எல்லாவற்றையும் தரும் பித்தரைப் போல அமைவதற்குச் சாக்த சமயம் ஒன்றே உலகில் சிறந்ததெனக் கூறுகின்றார் சக்தியின் அருள் பெற்றுத் திகழ்ந்த அபிராமி பட்டர்.

புராண வரலாறு:

பாற்கடலில் தோன்றிய அரிய அமுதத்தைத் திருக்கடவூரில் தேவர்களுக்குத் திருமால் வழங்கக் காரணமாக இருந்தவள் தேவி [90:3-4] என்ற புராண வரலாறு காணப்படுகிறது. திருக்கடவூரில் தேவாமுதம் பருக அபிராமி அருள் செய்தாள் எனத் தல புராணம் கூறுகின்றது. இரதிக்குக் கணவனுகிய மன்மதனது வெற்றி தோல்வியாகவும் முன்பு நெற்றிக் கண்ணுற் பார்த்தருளிய சிவபெருமான் தமது யோக ஞானம் போக புத்தியாகவும் இறங்க அவரது இடப் பாகத்தைத் தேவி கவர்ந்து கொண்ட புராணச் செய்தியும் அறியற்பாலது [19:2-4].

சக்தியின் ஊடல் தீரச் சக்தியின் திருவடியை இறைவன் சடையில் சூடிய புராணச் செய்தியையும் [(11) (35) (60) (72)] அறியலாம்.

தாட்சாயினி என்னும் பெயரை நீக்கிக்கொள்ள இமய மலையிற் குழந்தை உருவாக வளர்ந்தாள் என்ற புராணச் செய்தியும் கூறப்பட்டுள்ளது [10:4].

வழிபடுவோர்:

செந்தாமரை மேல் விளங்கும் திருமகளும் போற்றி வழிபடுகின்றனர் [1 : 4]; பிரமர்கள், திருமால்கள், தேவர்கள், தானவர்கள், சிவயோகிகள் மனம். மொழி, மெய்களால் வழிபடுகின்றனர் [14 : 1-3]; இவ்வாறு வழிபடுகின்ற சிவயோகிகள் கூறிய அனைத்தும் பலிக்கும் என்பது.

"சொன்னதே துணிந்து சாதிக்கலாம்"

[சரசுவதி அந்தாதி]

என்ற பாடலடியால் அறியப்படும். விண்ணோர் அனைவரும் வந்து எக்காலத்தும் வழிபட்டு வணங்குவர் [40 : 1-2]; பொன், வெள்ளி, இரும்புகளினாலாகிய மூன்று மதில்களைத் தம் உறுதிப் பொருளாகக் கொண்டு இரக்கம் சிறிதும் இல்லாமல் விளங்கிய தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்னும் அரக்கர் மூவரது வலிமையும் ஒருங்கு அழிய வெகுண்ட சிவபெருமானும் திருமாலும் வழிபடுகின்றனர். [51 : 1-3]; அடியார்களின் உடம்பும் உயிரும் தொடர்பற்று இறுதிக் காலத்தில், அறிவு மறக்கும் காலத்தில் துரியாதீத நிலையில் சிவானுபவத்தைப் பெற வேண்டி மெய்யடியார்கள் வழிபடுவர் [89 : 2-4]; மும் மூர்த்திகளும் தேவர்களும் மற்றைய ஏனையோரும் வழிபடு கின்றனர் [92 : 4].

"புந்தியின் முதமெய்தி இந்திரன் திருப்பெற்றிடு
ஞான்றினு மினிதுற்றுஞ்" [கந்தபுராணம் : யுத்த : மீட்சிப் படலம் : 11] என்ற பாடலடி ஒப்பு நோக்கத்தக்கது.

வழிபடுவோர் அம்மையைத் தொழுது வழிபடு வதற்கு ஏற்ற நேரம் பைரவர் காக்கும் நள்ளிரவு என நவில்கின்றார் சக்தி உபாசகர் அபிராமி பட்டர் [73 : 2]. சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவேந்திரன். தாமரையில்உறையும் நான்முகன்,முப்புரம்அழித்த சீகண்ட ருத்திரர். முரன் என்ற அசுரனை மாய்த்த திருமால், பொதிய மலைவாழ் அகத்தியன், போர் புரியும் வேற்படை கொண்ட முருகவேள், சிவகணத் தலைவராகிய விநாயகர், மன்மதன் முதலாக எண்ணற்றோரும் வழிபடுகின்றனர் [97].

வழிபடாதோர் எய்தும் நிலை:

சக்தியை வணங்கி வழிபட்டு பின்பு அவளை ஒரு நொடிப் பொழுதும் தம் உள்ளத்தில் வைத்து எண்ணுதவர் கொடையும் குடிப்பிறப்பும் கோத்திரமும், கல்வியும் நற் குணமும் குறையப் பெற்று வீடுதோறும் சென்று பாத்திர மேந்திப் பிச்சையேற்று எக்காலமும் உலகமெங்கும் உழன்று நிற்பர் [67 : 2-4].

வழிபட்டோர் பயன் :

சக்தியை வழிபடுவோர் இப்பிறப்பில் இவ்வுலகாளும் அரச போகத்தைப் பெறுவதோடு மறுமையில் தேவர் தம் விண்ணுலகாளும் பெரும் செல்வத்தையும் பெற்று அழியாத முத்தியின்பத்திலும் திளைப்பர் [15 : 2-4]. வழிபடும் மெய்யடியார்களுக்கு இடையில் அழியாத அரசாட்சி தடையின்றி நிகழும்; தவ ஒழுக்கமும் சிவயோகப் பதப்பேறும் சித்திக்கும் [28 : 3-4]. வழிபட்டு இன்புறுவோர் குடலும் நிணமும் இரத்தமும் பொருந்திய உடலுடன் மீண்டும் பிறக்கமாட்டார்கள் [48 : 3-4]. வழிபடுவோர் மீண்டும் ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் பிறவி நோய் இல்லாது ஒழிவர் [15 : 1-2]. வழிபடும் அடியார்களுக்குப் பிறப்பு நோய் நீங்கும் [84 : 4]. அம்பிகையை வழிபடுவோர் முதலில் சொர்க்க இன்பத்தையும் பிறகு வீட்டின்பத்தையும் பெறுவர் என்பதனை உணரலாம்.

வழிபடும் மெய்யடியார்கள் இந்நிலத்தில் பிறப்பு இறப்பு ஆகிய இரண்டினையும் அடையார் [51:3-4]. முற்பிறவிகளில் தேவியை வழிபட்டோருக்கு இம்மையும் தேரும் குதிரையும் மத களிறும் சிரிய முடியும் சிவிகையும் பொன்னும் விளைமிக்க அணிகலன்களும் வாய்த்திருக்கும் [52:1-2]. வழிபடுவோரின் வறுமை தீரும் [54 : 4]. வழிபடும் மெய்யடியார்கள் எல்லாச் செல்வங்களையும் அடைவர் [68:4]. வழிபடும் அடியவர்கள் சொர்க்க உலகில் கற்பகச் சோலையில் பொருந்தும் தங்கக் கட்டிலின் மீது அரம்பை முதலிய தேவ மகளிர் ஆடவும் பாடவும் தேவராகி இனிது வாழ்வர் [74:3-4]. பகலிலும் இரவிலும் இம்மையில் வணங்கும் அடியார்கள் மறுமையில் தேவர் தொழும் வானுலக இந்திர பதவியையும் ஐராவதத்தையும் வான் கங்கையினையும் வச்சிராயுதத்தையும் கற்பகச் சோலையையும் உறுதியாகப் பெறுவர் [83:1-3]. வழிபடும் அடியார்கள் ஏழுலகங்கட்கும் அதிபதிகளாவர் [96:4].

முடிவுரை :

சக்தியின் பெருமைகளை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ள அபிராமி அந்தாதி, அந்தாதி இலக்கியங்களுள் மிகச் சிறந்ததாக அமைவதோடு, அவ்விலக்கியங்களில் சக்தி பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றிற்குச் சான்று கூறுவது போன்று அமைகின்றது. 'அம்பிகையைச் சரணடைந்தால் நினைத்தது நடக்கும்' என்பதற்கொப்ப அபிராமி பட்டருக்குச் சக்தி அருள் புரிந்த நிகழ்ச்சி முன்னுரையில் சுட்டப்பட்டுள்ளது. தேவி உபாசக பரம்பரையினராகிய அபிராமி பட்டர், சக்திக்கு அமைத்துள்ள பெயர்களை அழகுறத் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளது. அபிராமி பட்டர் சுட்டிக்காட்டிச் செல்கின்ற பெயர்களையே வராகி மாலை, திருப்புகழ் போன்ற நூல்களும் சுட்டிச் செல்வதையும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். தேவியின் உறைவிடங்களைப் பற்றிக் கூறும்பொழுது அடியார்களின் நெஞ்சமும் தேவியின் உறைவிடமாக விளங்குகின்றது என்று கூறப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது. ஒன்பது முக்கோணங்களில் தேவி விரும்பி அமர்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளமை, சங்க இலக்கியங்கள் முதல் பரணி இலக்கியங்கள் ஈறுகக் கூறப்பட்ட தேவி இருக்கைகளுக்கு மாறுகக் காட்சியளிக்கின்றது. மேலும் சக்தியின் பிற்கால வளர்ச்சியையே இது எடுத்துரைக்கின்றது என எண்ணலும் தகும். பிற்கால நிலைக்கு ஒவ்வுகின்ற வகையில் தாமரை மலர் போன்றவற்றையும் இருக்கையாகக் கூறிச் செல்கின்ற பாங்கினையும் அபிராமி அந்தாதியின் வாயிலாக உணரலாம். தேவி, கடம்பமலர், பிச்சிமலர் ஆகிய மலர்களைக் கூந்தலிலே சூடப்பெற்றுள்ளதாகப் பாடல்களில் கூறப்பட்டுள்ளமையும் பிற இலக்கியங்களினின்று மாறுபட்டு காட்சியளிக்கின்றது. தாமரை மலர்கள் வணங்குகின்ற வெற்றியை உடைய திருமுகத்தைத் தேவி பெற்றிருப்பதாகக் கூறுவது வியத்தற்குரியதாக அமைகின்றது. ஏனெனில் சக்தியை வணங்குவதாக அபிராமி பட்டர் காட்சிப்படுத்தும் தாமரை மலர்களையே இருக்கையாகவும் கூறிச் செல்கின்றார். தற்காலப் பெண்டிர் போலவே சக்தியையும்,

நம்முன் காட்சிப்படுத்த விழைந்து, காதில் வயிரத் தோடு அணிந்து உலக மகா அன்னை வீற்றிருப்பதாகப் பாடலில் குறிப்பிட்டுள்ளமையையும் உணரலாம். புன்முறுவலினைத் தண்ணிலவிற்குத் ஒப்பிட்டு, அத்தகைய தண்ணிலவினைப் பெற்ற வாய் என்றும் நயம்பட அபிராமி பட்டர் கூறுகின்றார். பற்களுக்கு மயிலிறகின் அடியினை உவமையாகக்கூறும் பாங்கினையும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். சிவபெருமானை, அவரது யோக நிலை கெடுமாறு போரிட்ட உடுக்கை போன்ற இடையைத் துவள்விக்கும் நகில்களைப் பெற்று இலங்குகின்றாள் சக்தி என்று கூறும்பொழுது புராணக் கதையினை உட்புகுத்திக் காட்சிப்படுத்துகின்ற நிலையினையும் உணரலாம். 'சத்தியின்ற சதாசிவம்' என்று திருமந்திரமும் பிரமன், விட்ணு போன்ற தேவர்களையும் ஈன்றவள் சக்தி என்று பரணி இலக்கியங்களும் கூறி நிற்க, அகில உலகங்களையும் ஈன்றவள் சக்தி என்ற கருத்தை வலியுறுத்தும் வண்ணம் அபிராமிபட்டர், மலைகளையும் கடல்களையும் பெற்ற வயிற்றினை உடையவள் சக்தி என்று கூறிச் செல்கின்றமையையும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். இடையினைப் பற்றிக் கூறும் பொழுது ஏனைய இலக்கிய ஆசிரியர்களின் வழிநின்றே மின்னற் கொடியினை இடைக்கு உவமையாகக் கூறுவதனை அறியலாம். சைவர்களால் பரம் பொருள் என்றவாருகப் போற்றப்படுகின்ற சிவபெருமானும் தொழும் சிவந்த அடிகளைப் பெற்றவள் சக்தி என்று அபிராமியார் காட்சிப்படுத்துவதன் வாயிலாக, சக்தியைப் பரம் பொருளாகக் காட்டுவதில் அவர் வெற்றியும் பெற்றுள்ளார் என்பது அகங்கை நெல்லிக்கனி போன்று அமைகின்றது. தேவியின் உருவ அமைப்பினைக் கூறும் பொழுது, மகிடாசுரனது தலைமேல் நின்ற கோலத்தினை அவர் அறிவுறுத்துவதையும் உணரலாம். மகிடாசுரவர்த்தினியாகக் கருதப்படுகின்ற காளிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டே இவ்வாறு அமைத்துள்ளாரோ என எண்ணவும் செய்கின்றது. சங்க இலக்கியங்களில் அர்த்த நாரீசுவரர் கோலத்திற்குச் சில சான்றுகளே காணப்படுகின்றன. ஆயின் சக்தி

வழிபாட்டு நிலை வளர்ச்சியுற்ற காரணத்தினுல் அபிராமி அந்தாதி தோன்றிய காலத்தில் அர்த்த நாரீசுவர வடிவமும் கலியாண சுந்தர வடிவமும் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் இக்கட்டுரையின் வாயிலாக உணரலாம். சக்தியே பரம்பொருள் என்பதை உணர்த்த விழைந்து, முடிவில்லாத பொய்த்தீ தோற்றத்தை உடையவள் சக்தி என்று கூறுவதையும் உணரலாம். தேவிக்குப் பல்வேறு நிறங்களையும் கூறிச்செல்கின்றமையையும் அறியலாம். முப்புரம் எரித்த சிவபெருமானது வலிய நெஞ்சையும் ஆட்டங் கொண்ட ஆற்றல்களை உடையவள் தேவி என்று பட்டர் எடுத்துரைப்பதையும் உணரலாம். பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் புராணத்தில் 71, 72 எண் உள்ள பாடல்களில் கூறப்பட்ட கருத்தாகிய முப்பத்திரண்டு வகை அறங்களை இயற்றும் அருள் தன்மை உடையவள் சக்தியென்ற குறிப்பினை அபிராமி பட்டரும் கூறிச் செல்வதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம். சக்தியானவள் தெய்வ உருவமாக இருந்து அருள் புரிவதோடு, குயிலாகவும், மயிலாகவும், வெண்ணிற அன்னமாகவும் விளங்கி மக்களுக்கு அருள் புரிகின்ற தன்மையினையும் அறியலாம். உயிருக்கு அடியாகப் பொருந்திய தூலம், சூக்குமம், காரணம் என்ற மூவகை உடம்புகளினும் நிறைந்திருக்கும் தன்மை உடையவளாகத் தத்துவக் கருத்துடன் தேவியினை நம் மனக்கண் முன்னுல் படம் பிடித்துக் காட்டுகின்ருர். அறுவகைச் சமயமும் கூறுகின்ற தன்மை படைத்தவளாகவும் தேவியினைக் கூறுவதனை இக்கட்டுரையின்கண் காணலாம். அம்பிகைக்குரிய ஆகமமாகிய யாமளத்தினைப் பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. சக்தி தத்துவத்தினின்று சதாசிவ தத்துவம் தோன்றியிருக்கலாமென்ற கருத்தும் இக் கட்டுரையின்கண் வலியுறுத்தப்பட்டுள்ளது. சாக்த சமயத்தின் சிறப்பும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். சக்தியின் ஊடல் திருமுகத்தான் சக்தியின் திருவடியை இமையவர் முடியில் சூடிய புராணக் காட்சி

யினையும் நமக்கு வடித்து அளித்துள்ளார் அபிராமி பட்டர். அம்மையை வழிபடுவோர்க்கு ஏற்ற நேரமும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளதை உணரலாம். சக்தியை வழிபடாதோர் எய்தும் நிலை, வழி படுவதனால் ஏற்படும் பயன் ஆகியவற்றையும் தெள்ளிதின் விளக்கிச் செல்லும் அபிராமி பட்டர் சக்தியின் பெரும் புகழினையும் அருட் திறத்தினையும் ஆற்றலினையும் இவ்வுலகிற்கு அறிவுறுத்துமுகத்தான் இந்நூலைச் செய்திருக்கின்றாரோ என எண்ணத் தோன்றுகின்றது. எனவே சாக்த சமயம் வளர்ந்து கொண்டிருந்த அக்காலத்தில் அபிராமி பட்டரால் இயற்றப்பட்ட அபிராமி அந்தாதியும் சாக்த சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்து செயல்பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

பயன்பட்ட நூற்கள்

1. அபிராமி அந்தாதி
2. வராகி மாலை
3. திருப்புகழ்
4. திருவிளையாடற் புராணம்
5. சௌந்தரிய லகரி
6. ஆசிரிய மாலை
7. சிலப்பதிகாரம்
8. மீனாட்சியம்மை குறம்
9. மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை
10. திருக்கோவையார்
11. பழம் பாடல்
12. திரிபுராசுர்வனம்
13. சிவஞான சித்தியார்
14. தாயுமானவர் பாடல்
15. திருமந்திரம்
16. மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ்
17. பாசவதைப் பரணி
18. தக்கயாகப் பரணி
19. சாகுவதி அந்தாதி
20. கந்தபுராணம்: யுத்தகாண்டம்

15

பெரிய புராணத்தில் சக்தி

முன்னுரை:

மக்களின் சிந்தையிருளினைப் போக்கி, ஞான ஒளியினை நல்கி, இறைவன்பால் நல்லாற்றுப்படுத்தும் விழுப்பமும் தொன்மையும் உடைய சைவ சமயத்திற்கு அடிப்படையான நூல்களாகிய சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக எண்ணப்படுகின்ற பெரிய புராணம், செயற்கரிய செய்த மெய்யடியார்கள் வாழ்நாட் சரிதத்தை அறிவுறுத்துவதுடன், அடியார்கள் பேரின்ப முத்தி அடைந்ததைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட விளக்கி நிற்கின்றது. முப்பத்து மூன்று பாட்டுக்களை இடைச் செருகல்களாகப் பெற்று, நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு விருத்தச் செய்யுட்களால் திருத்தொண்டர் புராணம் என்ற பெயருடன் விளங்கும் பெரிய புராணம், அநபாயச் சோழனின் அமைச்சராகத் திகழ்ந்த அருண்மொழித் தேவர் என்கின்ற சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்டது. இத்தகைய சிறப்பினைத் தன்னகத்தே பெற்றுத் திகழும் பெரிய புராணத்தின்கண் காணப்படும் சக்தி பற்றிய செய்திகளை இக்கட்டுரையின்கண் ஆய்குவம்.

சக்தியின் பல்வேறு பெயர்கள்:

சக்திக்கு ஏறத்தாழ நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பெயர்கள், சேக்கிழார் பெருமான் அமைத்துள்ள நாயன்மார்களின் வரிசைக்கேற்ப இப்பிரிவில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

ஆளுடை நாயகி	(திருமூலச் சிறப்பு 23 : 1)
ஆளுடை மெய்த் தவக்கொடி	(,, 31 : 2)
மேதினிக் காதல் மங்கை	(,, 33 : 3)
சம்புவின் பங்கினள்	(திருநகரச் சிறப்பு 5 : 3)

கொத்தார் மலர்க் குழலாள்
(தடுத்தாட் கொண்டபுராணம் 74 : 1)
இடைமருங்கு தனி நாயகி ,, 95 : 1)
பனிமலைவல்லி (,, 135 : 3)
மாமலையாள் (,, 192 : 3)
உம்பர் நாயகி (இயற்பகை நாயனார் புராணம் 4 : 2)
இமயப் பாவை (விறன்மிண்ட நாயனார் புராணம் 23 : 1)
பாகங் கொண்ட பேதை
(அமர் நீதி நாயனார் புராணம் 46 : 4)
பொற்றொடியாள் (ஏனாதி நாயனார் புராணம் 41 : 1)
மலை வல்லி (மானக் கஞ்சாற நாயனார் புராணம் 31 : 2)
தவ வல்லி (ஆனாய நாயனார் புராணம் 38 : 2)
அம்பொற் கொம்பு (மூர்த்தி நாயனார் புராணம் 36 : 2)
அகிலம் ஈன்றளித்த அம்மை
(முருக நாயனார் புராணம் 1 : 1)
பொன்மலை வல்லி
(உருத்திர பசுபதி நாயனார் புராணம் 3 : 3)
கருணைத்தாய் (திருக்குறிப்புத் தொண்டர் 1 : 2)
நேரிழை (,, 5 : 2)
நீலி (,, 15 : 1)
அம்பிகை (,, 49 : 1)
உலகை ஆளுடையாள் (,, 50 : 4)
நங்கை (,, 52 : 1)
போகமார்த்த பூண் முலையினாள் (,, 52 : 4)
எம்பெருமாட்டி (,, 53 : 4)
மலை மடந்தை (,, 55 : 4)
பொன்மலை வல்லி (,, 56 : 4)
ஆளுடைய அம்மை (,, 57 : 2)
மலைமகள் (,, 57 : 4)

தொண்டையங்கனி வரயுமை நங்கை (திருக்குறிப்புத் தொண்டர் 58 : 4)
எம்பிராட்டி (,, 59:2; 60:4)
மகிலவல்லி (,, 61 : 3)
நங்கை (,, 62 : 1)
அங்கயற்கண்ணி (,, 63 : 1)
தன்னையே ஒப்பாள் (,, 63 ; 4)
மகிலக்குலக்கொடி (,, 64 : 1)
கம்பர் காதலி (,, 65 : 1)
எம்பிராட்டி (,, 65 : 3)
அகிலமீன்றளித்த மாது (,, 66 : 3)
கோதிலா அழுதனையவள் (,, 67 : 1)
மகிலமகள் (,, 68 : 3)
பிறப்பொழிப்பாள் (,, 69 : 4)
மகிலமகள் (,, 70 : 1)
எம்பிராட்டி (,, 71 : 1)
அறப்பெருஞ் செல்வி (,, 72 : 1)
அன்னை (,; 75 : 1)
கன்னி (,, 75 : 1)
சத்தி (,, 82 : 1)
அந்தமில் அறம் புரப்பவள் (,, 83 : 3)
ஆண்ட நாயகி (,, 84 : 4)
மகிலவல்லி (,, 86 : 4)
இமயக்கொடி (,, 87 : 1)
இமயப்பாவை (,, 93 : 2)
துணைவி (,, 126 : 3)
தேவி (சண்டேசுர நாயனார் 52 : 4)
மாமகிலியாள் (திருநாவுக்கரசு நாயனார் 73 : 9)

வெற்பரையன் பாவை (திருநாவுக்கரசு நாயனார் 178 : 2)
அம்மை (,, 183 : 1)
பெரிய பெருமாட்டி (,, 187 : 1)
குன்ற மகள் (,, 193 : 1)
பொருப்பரையன் மடப்பாவை (:: 230 : 4; 244 : 2)
செங்கனகக் குன்றவில்லி (,, 252 : 2)
மலையாள் (,, 271 : 2)
தையல் (,, 317 : 3)
மலைவல்லி (,, 322 : 3)
மலைமகள் (,, 364 : 1)
பொன்மலைக்கொடி (,, 374 : 1)
மலையான் மகள் (,, 384 : 1)
உமையாள் (பெருமிழலைக் குறும்ப நாயனார் 3 : 3)
கலையிளந் திங்கட்கண்ணி (காரைக்காலம்மையார்) 56 : 3)
இமயவல்லி (,, 56 : 4)
அம்பிகை (,, 57 : 1)
இதய மங்கை (திருநீல நக்க நாயனார் 28 : 3)
பெரிய நாச்சியார் (திருஞானசம்பந்தர் 20 : 1)
பெருமலை பயந்த கொடி (,, 42 : 1)
தருமறைவியார் (,, 42 : 3)
மங்கை (,, 53 : 1)
தேவி (,, 59 ; 2)
பொன்மலைவல்லி (,, 64 : 3)
அருமறையாள் (,, 65 : 4)
மலைக்கொடி (,, 66 : 3)
பாவை (,, 74 : 2)
உமை (,, 88 : 3)
ஏழிசை மொழியாள் (,, 91 : 4)

உமையாள்	(திருஞானசம்பந்தர்	92 : 4)
பைந்தொடியாள்	(,,	98 : 4)
புண்ணியத்தாயார்	(,,	100 : 3)
தாயார்	(,,	109 : 1)
நாரி	(,,	115 : 3)
அம்பிகை	(,,	117 : 1)
தையலாள்	(,,	129 : 4)
இமயமாமலைக் கொடி	(,,	150 : 1)
பொற்குன்ற மங்கை	(,,	154 : 2)
பொன்மாமலை வல்லி	(,,	180 : 1)
முற்றும் ஆனவள்	(,,	222 : 3)
வாரணங்கு முலை உமையாள்	(,,	258 : 3)
பந்தணை மெல்விரலாள்	(,,	268 : 1)
இமவான் மடந்தை	(,,	288 : 2)
பூங்குழாள்	(,,	387 : 3)
மருவாருங்குழல் மலையாள்	(,,	390 : 3)
திருமலையாள்	(,,	391 : 1)
செம்பொன்மலையாள்	(,,	398 : 3)
போகமார்த்த பூண்முலையாள்	(,,	456 : 4)
கோமளக் கொம்பு	(,,	464 : 1)
கொம்மை முலையினுள்	(;.	557 : 2)
பெருமாட்டி	(,,	559 : 1)
பண்ண மருமொழியுமையாள்	(,,	562 : 3)
வேயுறு தோளி	(,,	616 : 4)
தெய்வ மலைமகள்	(,,	851 : 4)
அங்கையற்கண்ணி	(,,	861 : 1)
துடியிடையாள்	(,,	875 : 1)
பெருமாட்டி	(,,	880 : 3)
வனமுலையாள்	(,,	955 : 2)

தையலாள்	(திருஞானசம்பந்தர்	959 : 3)
வாரின் மல்கிய கொங்கையாள்	(,,	969 : 2)
உமையாள்	(,,	976 : 1)
சொம்பொன்மலைக் கொடி.	(,,	994 : 1)
உமை	(,,	997 : 3)
பொருப்பரையன் மடப்பாவை	(,,	1012 : 2)
அம்பொன் மலைக்கொடி	(,,	1018 : 1)
பைம்பொன் மலைவல்லி	(,,	1023 : 3)
பொருப்பு வில்லியார்	(,,	1051 : 4)
பாவை	(,,	1078 : 2)
உமை	(,,	1129 : 2)
அணங்கு	(,,	1139 : 3)
பொன்னி மயப் பாவை	(,,	1150 : 2)
சுந்தர வாரணங்கு	(,,	1154 : 3)
உமை	(,,	24 : 3)
பாவை	(,,	32 : 4)
மங்கை	(,,	43 : 3)
பிறையணி நுதலாள்	(,,	66 : 1)
குரும்பை முலை உமையாள்	(,,	67 : 3)
உமை	(,,	101 : 2)
பொருப்பரையன் மடப்பாவை	(,,	119 : 3)
கருநெடுங்கண் மலையாள்	(,,	188 : 3)
பாவை	(,,	193 : 1)
உமை	(,,	202 : 1)
மலையான் மடந்தை	(,,	208 : 1)
மங்கை	(,,	232 : 1)
இமயக் கொம்பு	(,,	241 : 3)
எம்பிராட்டி	(,,	243 : 3)
அம்மை	(,,	284 : 3)

செங்கயற்கண் மகிலவல்லி (திருஞானசம்பந்தர் 287 : 2)
மாமகிலயாள் (,, 290 : 1)
அம்பிகா (,, 325 : 4)
உமையாள் (,, 339 : 3)
மங்கை (,, 367 : 2)
யாழின் மொழியாள் (சோமாசி மாற நாயனார் 2 : 1)
துணைவி (சாக்கிய நாயனார் 16 : 4)
மகிலபயந்த தையல் (சிறுத்தொண்ட நாயனார் 84 : 4)
பாகங்கொண்ட குலக்கொடி (,, 87 : 2)
காடுகாள் (கழறிற்றறிவார் 89 : 4)
உமை (,, 170 : 1)
ஆழி மாநிலத்தகிலம் ஈன்றளித்தவள்
(கணநாத நாயனார் 1 : 1)
உமையாள் (கூற்றுவ நாயனார் 7 : 4)
தேனும் குழலும் பிழைத்த திருமொழியாள்
(,, 9 : 1)
பந்தணையுமெல் விரலாள் (புகழ்த்துணை நாயனார் 7 : 1)
மருவாருங் குழலுமையாள் (திருவாரூர்ப் பிறந்தார் 1 : 3)
உமையாள் (முழு நீறு பூசிய முனிவர் 3 : 4)
முற்றுத முகிலயுமையாள்
(அப்பாலும் அடிச்சார்ந்தார் 2 : 3)
ஏலவார் குழலாள் (திருநீலகண்ட யாழ்ப்பாணர் 2 : 4)
அரிவை (,, 4 : 1)
உமை (,, 7 : 2)
யாழின் மொழியாள் உமை (,, 10 : 2)
மகிலவல்லி (வெள்ளானைச் சருக்கம் 31 : 1)
நாரி (,, 48 : 2)
மகிலத்தனிப் பெருமான் மகள் (,, 50 : 4)

மகிலவல்லி, உமையாள், பொன்மகிலவல்லி, மகிழ்மகள், எம்பெருமாட்டி, தையலாள். உமை போன்ற பெயர்

கள் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. கொற்றவை யைக் குறிக்கும் காடுகாள் என்ற பெயரும் கழறிற்றறிவார் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் கூறப்பட்டுள்ள கன்னி என்ற பெய ருக்குக் காளி என்ற பொருள் கொள்ளலாம். கன்னி என்ற பெயருக்கு உமையம்மை என்று பொருள் கொள்ளலாம் என சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரையில் கூறியுள் ளார். காஞ்சிபுரத்தின் பன்னிரு பெயர்களுள் ஒன்றுக கன்னிக்காப்பு என்ற பெயரும் வழங்குவது உணரத்தக்கது. நீலி என்ற பெயருக்கு நீல நிறமுடையவளாகிய வாட்படை ஏந்திய துர்க்கை என்றும் பொருள் கூறுகின்றார் சி. கே. சுப்பிரமணிய முதலியார். கம்பர் காதலி, இதய மங்கை, ஏழிசை மொழியாள், கோமளக் கொம்பு, யாழின் மொழியாள் போன்ற இனிய பெயர்களையும் சேக்கிழார் சக்திக்குக் கூறியுள்ளமை உணரத்தக்கது.

சக்தியாலான சிவன்:

பெரிய புராணத்தில் சிவபெருமானுக்கு அமைந்துள்ள பெயர்களைக் காணும் பொழுது சக்தியாலே அப்பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகின்றது.

மாதொர் பாகர் (திருக்கூட்டச் சிறப்பு 7 : 2)

மாதொரு பாகனுர்

(தடுத்தாட் கொண்டார் புராணம் 3 : 1)

பார்ப்பதி பாகன் (,, 125 : 2)

பொற்றொடியாள் பாகனுர் (ஏனாதி நாதர் 41 : 4)

அம்பொற் கொம்பின் பங்கன் (மூர்த்தி நாயனார் 36 : 3)

பொன்மலைவல்லி பங்கன் (உருத்திர பசுபதியார் 3 : 3)

உமை இடம் மகிழ்ந்தவர் (,, 7 : 4)

உமை பாகர் (திருக்குறிப்புத் தொண்டர் 88 : 1)

மைவாச நறும்குழல் மாமலையாள் மணவாளன்
(திருநாவுக்கரசு நாயனார் 73 : 3)
வாராரு முலை மங்கை உமை பங்கர் (,, 228 : 2)
பொருப்பரையன் மடப்பாவையிடப் பாகர்
(,, 230 : 4; 244 : 2)
தையல் தழுவக் குழைந்த பிரான்
(திருநாவுக்கரசு நாயனார் புராணம் 317 : 3)
பாகம் பெண்ணுருவான் (,, 328 : 2)
உமையாள் கேள்வன்
(பெருமிழலைக் குறும்ப நாயனார் 3 : 2)
நாரியோர் (திருஞானசம்பந்த நாயனார் 115 : 3)
தையலாள் பாகர் (,, 129 : 4)
பொன்மாமலை வல்லி பங்கர் (,, 180 : 1)
உமைபாகர் (,, 257 : 3)
இமவான் மடந்தை பங்கர் (,, 288 : 2)
மங்கைவாழ் பாகத்தார் (,, 454 : 2)
பொற்றொடிப் பங்கர் (,, 492 : 3)
அம்பிகாபதி (,, 565 : 4)
கொங்கையாள் பங்கர் (,, 969 : 2)
உமையாள் மணவாளர் (,, 976 : 1)
மங்கை பாகர் (,, 984 : 3)
மாதொர் பாகர் (,, 985 : 4)
மங்கை பங்கர் (,, 1077 : 3)
பாவை பாகன் (,, 1078 : 2)
உமை பாகர் (,, 1129 : 2)
பாவை பாகர் (எயர்கோன் கலிக்காம நாயனார் 32 : 4)
மங்கை பாகர் (,, 43 : 3)
பெண்ணேணர் பாகத்தண்ணலார் (,, 64 : 2)
உமையோர் பாகர் (,, 66 : 4)

மங்கை பாகர்(ஏயர்கோன் கலிக்காமர் 68 : 2; (111 : 1)
மாதிரு பாகத்தவர் (,, 118 : 2)
பொருப்பரையன் மடப்பாவை
இடப் பாகர் (,, 119 : 3)
மங்கை பாகர் (,, 183 : 1)
மாதொர் பாகனூர் (,, 276 : 2)
மங்கையோர் பாகம் வைத்த
வள்ளலார் (,, 367 : 2)
பந்தணையு மெல்விரலாள் பாகத்தார்
(புகழ்த்துணை நாயனார் 7 : 1)
மருவாருங் குழலுமையாள் மணவாளன்
(திருவாரூர்ப் பிறந்தார் 1 : 3)
முற்றுத முலையுமையாள் பாகன்
(அப்பாலும் அடி சார்ந்தார் 2 : 3)
ஏலவார் குழலாள் பாகர்
(திருநீலகண்ட யாழ்ப்பாணர் 2 : 4)
அரிவை பாகன் (,, 4 : 1)
உமையொரு பாகர் (,, 7 : 2)
மங்கை பாகர் (வெள்ளானைச் சருக்கம் 45 : 1)
நாரி பாகர் (,, 48 : 2)

ஏறக்குறைய ஐம்பது இடங்களில் சிவபெருமானுக்கு இத் தகைய பெயர்கள் அமைக்கப்பட்டடுள்ளதை ஆராயும் பொழுது, சிவபெருமான் சக்தியைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருந்ததகாகக்கருதப்படும் எண்ணம் பெரிய புராண காலத்தில் வளர்ச்சியுற்றுத் திகழ்ந்தமையை உணரலாம்.

புகழ்ச்சோழ நாயனார் புராணத்தில் (பாடல் எண்; 40)-இல் நெடுஞ்சடை முடியை உடைய சிவபெருமான் சிவபெருமான் சிலம்பலம்பு சேவடியைப் பெற்றிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 'சிலம்பலம்பு சேவடி,' அர்த்த நாரீசுவர வடிவத்தைக் காட்சிப்படுத்துவதுடன், சக்திக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்று அமைகின்றது.

சக்தி – சிவன் :

வீதிவிடங்கப் பெருமானுகிய சிவபெருமான், இளம் பிறையைச் சடையில் சூடியும் திருநுதலைப் பெற்றும் அமைந்து இடப்பக்கத்தில் உமையாளுடன் மழ விடையில் தோன்றி விறல் வேந்தனுகிய மனுநீதிச் சோழனுக்கு அருள் புரிந்ததாகக் கூறப்பட்டுள்ளது (திருநகரச் சிறப்பு: 46). அருட்தன்மை பெற்று இலங்கும் உமை எப்பொழுதும் சிவபெருமானின் அருகில் இருப்பதாலேயே அழித்தல் தொழிலைச் செய்கின்ற சிவபெருமானுல் இவ்வுலக உயிர்களுக்கு அருள் புரிய முடிகின்றது என எண்ணலும் தகும்.

இயற்பகை நாயனுர் இறைவனைக் கண்ட காட்சியை,

"பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற்
பொலிந்ததென்னத்
தன்றுணை யுடனே வானில் தலைவனை விடை மேற்
கண்டார்"

[31 : 2-3]

எனச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றுர். இறைவன் இயற்பகை நாயனருக்குக் காட்சி அளிக்கும் பொழுது தன் துணைவியாகிய உமையம்மையுடன் தோன்றியதாகக் கவி வலவர் கூறுவதை உணரலாம்.

அதுபோன்றே இறைவன் மெய்ப்பொருள் நாயனருக்குக் காட்சி அளிக்கும் செயலினை,

"தொண்டனர்க்கு இமயவரையை துணைவனுர் அவர்
முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி"

[29 : 1-2]

என விளக்கி நிற்கின்றுர் அருண்மொழித் தேவர். மெய்ப்பொருள் நாயனருக்குக் காட்சியளிக்கும் பொழுது சிவபெருமான் தானே தோன்றி காட்சியளித்தார் என்பதை அறிவுறுத்த விழைந்த சேக்கிழார் பெருமான், சக்தியாகிய இமயப்பாவைக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு

சிவபெருமானே இமயப்பாவை துணைவனுர் எனக் கூறியிருப் பாரோ என எண்ணவும் தோன்றுகின்றது.

அமர்நீதி நாயனுர். அவர்தம் துணைவியார். மைந்தர் ஆகியோருக்கு இறைவன் காட்சி கொடுக்கின்ற நிலையினை,

... ... "விசும்பினிற் பாகங் கொண்ட பேதையுந் தாமுமாய்க் காட்சி முன் கொடுத்தார்"
[46 ; 3-4]

என நவில்கின்ருர். இங்கு சிவபெருமானின் பாகங் கொண்ட பேதையாகிய சக்தியுடனே சிவபெருமான் காட்சி கொடுப்பதாகக் கூறியுள்ளமை உணரத்தக்கது.

மானக்கஞ்சாற நாயனுர் புராணத்தில் மலைவல்லி யுடன் மழவிடையின் மேலேறி சிவபெருமான் விண்ணில் வந்து மானக்கஞ்சாற நாயனுரின் மகளாகிய பூங் கொடிக்குப் புனைந்த மலர்க் குழல் அளித்ததாகக் கூறுகின் ருர் சேக்கிழார் பெருமான் [31].

ஆனைய நாயனுரின் இனிய குழலோசையைக் கேட்டு,

... ... "அருட்கருணை தானைய திருவுள்ளம் உடைய தவவல்லியுடன் காளுதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து வானுறு வந்தணைந்தார்" [38 : 1-4]

என்று சேக்கிழார் கூறுகின்ருர். ஆனைய நாயனுருக்கு அருள் செய்விக்க எண்ணியமையாலேயே, அருட் கருணை யைத் தன்னகத்துப் பெற்றுத் திகழும் நவ வல்லியாகிய சக்தியுடன் சிவபெருமான் தோன்றினுர் என்ற கருத்தை நமக்குத் சேக்கிழார் வலியுறுத்த எண்ணியே மேற்கூறிய வாறு அமைத்துள்ளார் எனக் கூறலாம்.

சக்தியின் அன்பு மிகுந்த காதலைக் கண்ணுற்று மன மகிழ்வெய்திய சிவபெருமான் காஞ்சி மாநகரத்தில் சக்தி

செய்த தவத்தின் பயனால் அவள் புன்முறுவலுடன் தோன்றி,

"அடுத்த தென்கொல்லின் பால்?"

என வினவ, போக மார்த்த பூண் முலையினுள் எனக் கூறப் படுகின்ற சக்தி விடையிறுக்கும் முறையில்,

... ... "மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உமை
அச்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஆசை"

என்று கூறினாள். [திருக்குறிப்புத்தொண்டர் : 52]

இறைவனும் அது கேட்டு மனமகிழ்வுற்று,

"மா அமர்ந்த நம் இருக்கையில் அமைந்து
மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வாய்"

[திருக்குறிப்புத் தொண்டர் 53 : 3]

என்று எம்பெருமாட்டியாகிய சக்தியை ஏவ, சக்தியும் அதற்கு இசைந்ததாகக் கூறுகின்றார் சேக்கிழார் பெருமான்.

சிவபெருமான் மொழிந்த ஆகம வழியில் நின்று செயல்படும் பொருட்டுக் காஞ்சி மாநகரினைச் சக்தி சென்றடைந்தாள். காஞ்சி மாநகரினைத் திருமகட்சிறப்பு 34-ஆம் பாடலிலும் சுட்டிச் செல்கின்ற சேக்கிழார்,

"எம்பி ராட்டியிவ் வேழுல கீன்றவள்
தம்பி ரானைத் தனித்தவத் தால் எய்திக்
கம்பை யாற்றில் வழிபடு காஞ்சி"

எனக் குறிப்பிடுவது இங்கு கருதத்தக்கது. மேலும் காஞ்சி மாநகரை,

"தையல் தழுவக் குழைந்த பிரான் தங்குக் தெய்வ
பதி என்று
வையம் முழுவதும் தொழுதேத்தும் மதில்சூழ் காஞ்சி"

[திருநாவுக்கரசு நாயனார் 317 : 3-4]

என்ற அடிகளில் சேக்கிழார் கூறிச் செல்வதையும் உணரலாம்.

சக்தி, ஈசனுகிய சிவபெருமானேக் காண்பதே தம் விருப்பமாகக் கொண்டு, ஏகம்ப நாதராகிய சிவபெருமானுக்கு அர்ச்சனே நாடோறும் செய்து வந்தாள். ஏகம்ப நாதரும் அவ்வர்ச்சனேயை விருப்புடன் ஏற்று, காதல்மிக்க ஒரு திருவிளையாடல் புரிந்து தேவிக்கு அருள் புரிய எண்ணினர். அதன் பொருட்டு ஏழு கடல்களும் ஒன்றுகி வானமும் உட்படப் பரந்து செல்கின்ற அளவில் கம்பையாற்றில் வெள்ளம் வரச் செய்தார். கம்பையாற்றில் விண்ணிளையும் உட்கொள்கின்ற அளவில் வரும் வெள்ளமானது அங்கயற்கண்ணி தம் பெருமானுகிய சிவபெருமானின் மீது பாய்ந்து விடுமோ என்று அச்சமுற்று அவ்வெள்ளம் பாயாமல் தடுக்கும் பொருட்டுச் சிவபெருமானேத் தழுவி நின்றுள். இத்தகைய காட்சியினே விளக்க முனேந்த சேக்கிழார் பெருமான்,

"மலேக்கு லக்கொடி பரிவுறு பயத்தால் மாவின
மேவிய தேவநா யகனை
முலேக்கு வட்டொடு வளேக்கையால் நெருக்கி
முறுகு காதலால் இறுகிடத தழுவச்
சிலேத்த னுத்திரு நுதல்திரு முலேக்கும் செந்த
ளிர்க்கரங் களுக்குமெத் தெனலே
கொலேக்க ளிற்றுரி புனேந்ததம் மேனி குழைந்து
காட்டினுர் விழைந்தகொள் ளுகையிளுர்.

[திருக்குறிப்புத் தொண்டர் : 64]

என்று நயம்பட நவில்கின்றுர்.

ஏகம்பரின் காதலியாகிய உமை ஏகம்பநாதரைத் தழுவி அவரது மெய் குழைந்து அமைய, யோகினிகள் எல்லாம் உயிரும் யாக்கையும் உருகி ஒன்றுகி நின்று

"எம்பி ராட்டிக்கு மெல்லிய ராஞர் என்றும் ஏகம்பர்"

என்று போற்றி நின்றதாகவும் காட்சிப்படுத்துகின்றுர். அந்நிகழ்ச்சியின் பொழுது புதிய மலர்கள் விண்ணுலகினின்று பொழிய, கம்பையாறும் வணங்கி நின்றதாகக் கூறுகின்றுர் கவிலலவர் [திருக்குறிப்புத் தொண்டர் : 65].

எல்லா உலகங்களையும் ஈன்று இவ்வுலகிற்கு அருள் செய்கின்ற சக்தி ஏகம்ப நாதரை இறுகிடத் தழுவின மையால் ஏகம்பநாதர் வளைத்தழும்புடனும் முகிழ்ச் சுவடுடனும் காட்சி அளித்தார் எனவும் உரைக்கின்றார் சேக்கிழார் பெருமான் [திருக்குறிப்புத் தொண்டர்: 66].

குற்றமில்லாத அழுதை ஒத்த சக்தியின் காதற் பெருக்கிற் குழைந்த சிவபெருமான்,

"வரங்கள் வேண்டுவ கொள்க"

என்று கூறினார் [திருக்குறிப்புத்தொண்டர் : 67 : 2].

உடன் சக்தி அஞ்சலி கூப்பி.

"கொண்ட இற்றை என் பூசனை இன்னும்
குறை நிரம்பிடக் கொள்க"

என்று வேண்டினர் [திருக்குறிப்புத் தொண்டர் 68 : 1]

அது கேட்டு சிவ பெருமான்,

"நின் பூசனை என்றும் முடிவதில்லை நம் பால்"

என மொழிந்தார். [திருக்குறிப்புத் தொண்டர் 68 : 4]

சக்தி உபாசகர்களின் பிறப்பினை ஒழிப்பவளாகிய சக்தி அதைக் கேட்டு வரங்கள் வேண்டுகின்ற தன்மையினை,

"மாறி லாத இப் பூசனை என்றும் மன்ன
எம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி
ஈறி லாத இப் பதியினுள எல்லா அறமும்
யான்செய அருள்செய வேண்டும்
வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல் ஒழிய
இங்குளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன் கொடுத்த தருளப்
பெறவும் வேண்டும்" என்றனள் பிறப்பொழிப்பாள்.

என்ற பாடலின் வாயிலாக விளக்குகின்றார் சேக்கிழார் பெருமான்.

சிவபெருமானிடம் வேண்டிய வரங்கள் பெற்று சிவபெருமானுல் உவந்து அளிக்கப்பட்ட இருநாழி நெல்லையும் கைக்கொண்டு, உலக உயிர்கள் யாவும் உய்வுற முப்பத்திரண்டு அறங்களைச் செய்தாள் என்றும் சேக்கிழார் கூறுகின்றார் [திருக்குறிப்புத் தொண்டர் 70, 71].

நீண்ட சடைமுடியினை உடைய சிவபெருமானும் தேவியும் விடையில் தோன்றி, பத்தி முதிர்ந்த பாலகனுகிய சண்டேசுரரை எடுத்து நோக்கி, நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய்; அடுத்த தாதை இனி உனக்கு நாம்'' என்று கூறுவதாகச் சேக்கிழார் பெருமான் சண்டேசுரநாயனுர் புராணத்தில் அமைத்துச் செல்வது உணரத் தக்கது [சண்டேசுரர். 51, 52, 53].

காரைக்காலம்மையார் காலால் நடப்பதைத் தவிர்த்துத் தலையால் நடந்து செல்வதை இயலவல்லியாகிய உமாதேவி கண்ணுற்று அதிசயித்து சிவபெருமானே நோக்கி,

... ... ''தலையினுல் நடந்திங்கே றும்
எம்பெருமானேர் எற்பின் யாக்கைய அன்பென்னே!''

என்று கூறினுள். சிவபெருமானும் காரைக்காலம்மையார் தன்னிடம் பேய்வடிவம் வேண்டிப் பெற்றவள் என்று கூறி அவளுக்கு அருள் செய்ததாக சேக்கிழார் பெருமான் காரைக்காலம்மையார் புராணத்தில் (பாடல் எண்; 56, 57, 58) கூறிச் செல்கின்ருர்.

திருஞான சம்பந்த நாயனுர் புராணத்தில் தேவி யாகிய உமையுடன் சிவபெருமான் இருந்த நிலையை அறி வுறுத்த விழைந்த கவி வலவர் சேக்கிழார் பெருமான்,

பெருத்தெழும் அன் பாற்பெரிய நாச்சியாருடன் புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் [20 : 1-2]

எனவும்

மங்கையோ டுடனுகி வளர்தோணி வீற்றிருந்த
திருகள்சேர் சடையார் [53 : 1-2]

எனவும்

தெள்ளுநீர்ப் புகமாட்டார் தேவியொடுந் திருத்தோணி
வள்ளலார் இருந்தார் [59 : 2-3]

எனவும் பாடிச் செல்கின்ற நிலை கருதத்தக்கது.

ஆளுடைய பிள்ளையாராகிய ஞானசம்பந்தர் திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே! அப்பா! என்று அழைத்து அழுது நிற்க, திருத்தொண்டு புரிபவர்க்கு அருள் புரிபவனுகிய சிவபெருமானும் பொன்மலை வல்லியாகிய உமையம்மையும் விடை மேல் தோன்றினர். அழுது நிற்கும் பிள்ளையாரைக் கண்டு சிவபெருமான், அருட் கருணை தன் உள்ளத்தில் கொண்டு, எல்லா உலகமும் தொழுகின்ற மலைக் கொடியைப் பார்த்து,

... . "துணை முலைகள்
பொழிகின்ற பாலு அடிசில் பொன்வள்ளத்தூட்டு"

[திருஞானசம்பத்தர் 66 : 3-4]

என்று கூறினர்.

அது கேட்டு உமையம்மையும் திருமுலைப் பாலினை வள்ளத்தில் கறந்து எண்ணுதற்கரிய சிவஞானமாகிய அமுதத்தைக் குழைத்து,

"உண்ணடிசில்" [திருஞானசம்பந்தர் 68 : 2]

என ஊட்டி நின்றார்.

இக்காரணங் குறித்தே ஆளுடைய பிள்ளையாராகவும் ஒப்பற்ற சிவஞானசம்பந்தராகவும் ஞானசம்பந்தர் ஆயினர் எனச் சேக்கிழார் கூறுவதும் எண்ணத்தக்கது.

[திருஞானசம்பந்தர் : 69.]

இந்நிகழ்ச்சி நடைபெற்று சிறிது நேரங்கழித்து அங்கு வந்த ஞானசம்பந்தரின் தந்தையாகிய சிவபாத விருதயர்,

"யாரளித்த பாலடிசில் உண்டபது நீ?"

என வெகுண்டு வினவி, ஒரு சிறிய கோலினைக் கையில் கொண்டு அடிக்க, ஞானசம்பந்தரும் பல்லாற்றுன அரு மறைகளும் பணிந்து ஏத்துகின்ற பாவையாகிய சக்தியையும் அவருடன் நின்ற சிவ பெருமானையும் திருக்கை

விரற்சுட்டி காண்பித்தார் என்று சேக்கிழார் பெருமான் அழகுற உரைக்கும் பாங்கு போற்றத்தக்கது.

[ஞானசம்பந்தர் 72, 73, 74].

செம்பொன் மலைக்கொடியாகிய உமை தழுவியமையால் குழைந்து அருள் நல்கிய சிவபெருமான் என்றும் உருகிய அன்பானது மனத்தில் கொண்டு இலங்க உமையம்மை தழுவக் குழைந்த சிவபெருமான் என்றும் திருஞான சம்பந்தர் சுவாமிகள் புராணத்தில் (994 : 1; 997 :3) கூறப்பட்டுள்ளமை சக்தியையும் சிவனையும் தொடர்புபடுத்திக் கூறும் திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணத்தை நினைவு கூரச் செய்கின்றது.

கொன்றை மாலை அணியப் பெற்ற சிவபெருமானும் அவர்தம் பாகம் கொண்ட நுலங்கொடியாகிய சக்தியும் வெற்றியை உடைய நெடுவேலினைப் பெற்று இலங்கும் சரவணத்துத் தனயரும் ஆகிய மூவரும் தோன்றி சிறுத் தொண்ட நாயனரின் செல்வனுகிய சீராளனுக்கு அருள் செய்த காட்சியையும் சேக்கிழார் சுட்டிச் செல்வது கருதத் தக்கது. [சிறுத்தொண்ட நாயனர் புராணம் :84]

சிவபெருமான் அடியார்களுக்கோ அவர்தம் குடும்பத்தினருக்கோ அருள் செய்யும்பொழுது அருட்சக்தியாகிய உமையையும் தன்னுடன் விடையில் கொண்டு அங்கு சென்று அருள் செய்வதனை உணரலாம்.

சக்தியின் அருள் ;

இவ்வுலக உயிர்கள் யாவற்றிற்கும் அருள் செய்கின்ற தன்மை படைத்த சக்தி, பதும மா நாகத்திற்கும் அருள் புரிந்ததைச் சேக்கிழார் பெருமான் திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணத்தில் சுட்டிச் செல்கின்றார். பதும மா நாகம் சக்தியாகிய உமையம்மையின் திருவடிகளைத் தன் மேல் வைத்து, "உலகனைத்தையும் ஈன்று அருள் புரிகின்ற தன்மை உடையவளே! நான் உறைகின்ற துளைகளை உடைய புற்றிடத்துக்கோயில் கொண்டு

எனக்கு அருள வேண்டும்'' என்று வேண்டி நிற்க, தன்னை வழிபடுவோர் வேண்டியதை வேண்டியாங்கு அளிக்கும் தன்மை படைத்த சக்தி பதும மா நாகத்திற்கும் அருள் புரிந்தாள் என்று கூறுகின்றார் கவிவலவர் [திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்: 55].

மலைமகளாகிய சக்தி, காஞ்சிமாநகரத்தில் எல்லா அறமும் தான் செய்ய அருளவேண்டும் என இறைவனிடம் வரம் வேண்டினாள். இறைவனும் இடையருது அறம் வளர்க்கும் வித்தாக இகபரத்து இருநாழி நெல் அளித்து காஞ்சிமா நகரில் வாழ்பவர் மெய்ந்நெறி அடைவதற்குவழி வகுத்தார். சக்தியும் நிலைத்து நிற்கும் உயிர்கள் யாவையும் நல் வாழ்க்கை வாழும் பொருட்டு, இரு நாழி நெல்லின் துணை கொண்டு முப்பத்திரண்டு அறங்களைச் செய்தாள் எனவும் பெரிய புராணத்தின் வாயிலாகச் சக்தியின் அருட் திறனை உணரலாம் [திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் 70, 71].

சக்தி கோயில்:

முதலில் சிவபெருமான் கோவில்களில் சக்திக் கென்று கருவறை அமைக்கப்பட்டிருந்தன. சோழர் காலத்தில் தான் சக்திக்குத் தனிக் கோவில்கள் தோன்றின. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில்,

'நீலவாட்படை நீலி கோட்டம்' (15 : 2)

என்று கூறப்பட்டுள்ளமை, நீல நிறமுடையவளாகிய வாட் படை ஏந்திய துர்க்கையின் கோயில்களைக் (சக்தியின் கூருகிய துர்க்கை) குறிக்கின்றது என சி. கே. சுப்பிரமணிய முதலியார் தம் உரையில் கூறுகின்றார். முல்லையும் குறிஞ்சியும் அடுத்து அமைந்துள்ள பாலை நிலத்தில் இத்தகைய கோவில்கள் அமைத்திருந்தமைக்குப் பெரிய புராணமும் சான்றாகத் திகழ்கின்றது.

காஞ்சி மாநகரில் அமைந்துள்ள காஞ்சி காமாட்சி கோவில் பற்றிய குறிப்பும் (திருக்காமக் கோட்டம்) பெரிய

புராணத்தில், திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில் வியக்கத்தக்க வகையில் கூறப்பட்டுள்ளமை உணரத்தக்கது.

மலைத் தனிப் பெருமான் மகள் கோவில் என்றவாருகச் சக்தி கோவில் வெள்ளானைச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளமை அறியத்தக்கது. [வெள்ளானைச் சருக்கம் 50 : 4].

அம்மையும் ஆளுடைய பிள்ளையாரும்:

ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரைச் சிறப்பிக்குமுகத்தான் பெரிய புராணத்தில் பல இடங்களில் அகில உலக அம்மையாகிய சக்தியுடன் தொடர்புபடுத்தி, அதன் வாயிலாகத் திருஞான சம்பந்தரை அறுபத்துமூன்று நாயன்மார்களுள் புகழ்பெற்றவராக வலியுறுத்த முனைகின்றார் சேக்கிழார் பெருமான்.

" தெள்ளு மறைகள் முதலான ஞானஞ்
செம்பொன வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை
முலைப்பா லுண்ட பிள்ளையார் "
[11 : 2-4]

என்று முருக நாயனார் புராணத்தில் கவி வலவர் கூறுகின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்திலும் நான்கு இடங்களில் சக்தியுடன் தொடர்புபடுத்திக் கூறுவதையும் அறியலாம். வெற்பரையன் பாவையாகிய சக்தியின் திருமுலைப்பாலுடன் சிவஞானத்தினையும் குழைத்து செய்யப்பட்ட அமுதினை உண்டவர் என்று திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் கூறப்பட்டுள்ளது [177 : 2-].

ஆளுடைய பிள்ளையார் அம்மையின் திருப்பாலமுதம் உண்ட நிகழ்ச்சியினைச் சேக்கிழார் பெருமான் சுட்டிக் செல்கின்றார் [திருநாவுக்கரசர் 178 : 1-2).

உமையம்மை செம்பொற் கிண்ணத்தில் அமுத ஞானம் கொடுக்க, அதனை உண்டு அழுகை தீர்ந்த சிவந்த

பவளம் போன்ற வாயினை உடைய குழந்தையாக திருஞான சம்பந்தரைத் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் காட்சிப்படுத்துகின்றார் (183 : 1-2).

மலைமகளாகிய சக்தியின் திருமுலையில் கறந்த பாலுடன் ஞானத்தினையும் குழைத்து அமுது செய்த புகலிக் கவுணியர் எனத் திருஞான சம்பந்தரை வருணிக் கின்றார் அருண்மொழித் தேவர்

[திருநாவுக்கரசு சுவாமிகள் : 271 : 2-3]

திருநீல நக்க நாயனார் புராணத்தில் இமய மங்கை யாகிய உமையம்மையின் திருமுலையின் அமுதினை உண்ட வர் திருஞானசம்பந்தர் என நவில்கின்றார் அருண்மொழி யார் [28 : 3].

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் திரு ஞானசம்பந்தரை எட்டு இடங்களில் சக்தியுடன் தொடர்பு படுத்திக் கூறுகின்றார் கவி வலவர்.

'அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய உண்ட
நம்பெருந் தகையார்'

[117 : 1-2]

எனத் திருஞானசம்பந்தரைப் புகழ்ந்துரைக்கின்றார்.

இமயமா மலைக்கொடியாகிய சக்தி, தன் கொங்கை யமுதத்தை சிவ ஞானத்துடன் குழைத்து திருஞானசம்பந் தருக்கு அமுது செய்வித்தார் என்றவாறுக நவில்கின்றார் [150 : 1-2].

பொங்குகின்ற கொங்கையில் தோன்றிய மெய்ஞ் ஞானமாகிய உணவினைத் தனது சிவந்த கைகளால் கைகளால் பொற்குன்ற மங்கையாகிய உமை ஊட்ட, திருஞானசம்பந்தர் உண்டதாகக் கூறுகின்றார் [154:1-2].

எல்லாவற்றையும் அறிந்தவளாகிய உமையின் முலை சுரந்து ஊட்டப் பெற்ற பாலருளாபன் எனத் திருஞான சம்பந்தரைச் சிறப்பிக்கின்றார் [222 : 3-4].

சிவந்த பொன் வள்ளத்தில் உமையம்மையால் குழைக் கப்பட்ட அமுதத்தினை உண்ட வள்ளலாராகத் திருஞான சம்பந்தரைக் கூறுகின்றார் (259 : 3).

உள்ளத்தில் மிகவும் பரிவினை மேற்கொண்டு செம் பொன்மலை வல்லியாராகிய சக்தி அளித்த அமுதினை உண்டவராக திருஞான சம்பந்தரைக் காட்சிப் படுத்து கின்றார் (393 : 3).

அழகிய பொன்மலைக் கொடியாகிய சக்தியின் முலைப் பாலினைக் குழைத்து அமைக்கப்பட்ட ஞான அமுதினை உண்ட பிள்ளையார் எனத் திருஞான சம்பந்தரைச் சிறப் பிக்கின்றார் (1018 : 1).

பசிய பொன்னிறத்தை ஒத்த மலைவல்லியாகிய சக்தி அன்பு, இரக்கம், பரிவு ஆகியவற்றைக் கலந்து சிவந்த பொன் வள்ளத்தில் அமுதினைக் கொண்டு திருஞான சம்பந்தருக்கு ஊட்ட, ஆளுடைய பிள்ளையாரும் உண்டு மகிழ்ந்தார் என்று நயமுற நவில்கின்றார் சேக்கிழார் பெருமான் (1023 : 3-4).

கடல் சூழ்ந்த எல்லா உலகங்களில் உள்ளவர்களை யும் ஈன்று அறம் புரப்பவளாகிய சக்தியின் முலையின் அமு தினை உண்ட திருஞான சம்பந்தர் எனக் கணநாத நாயனார் புராணத்திலும் கூறிச்செல்கின்றார் கவி வலவர் (1 : 1-2).

கடலால் சூழப்பெற்ற திருத்தோணியில் அமர்ந் துள்ள சிவபெருமானின் அருளால், யாழின் மொழியாள் உமை ஞானம் ஊட்ட உண்ட எம்பெருமான் எனத் திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனார் புராணத்தில் கூறுவதன் வாயிலாகச் சேக்கிழார், திருஞானசம்பந்தரின் குழவிப் பருவ நிகழ்ச்சியினை நினைவுகூரச் செய்கின்றார்.

சக்தியைச் சிறப்பிக்குமுகத்தான் திருஞான சம்பந் தர், 'போகமார்த்த பூண் முலையாள்' என்று தொடங்கும் பதிகம் பாடியமையையும் [திருஞான சம்பந்தர் 456 : 4]

... ... 'எனை அறியாப் பருவத்தே எடுத்தாண்ட
பெருந்தகை எம்பெருமாட்டி யுடனிருந்ததே'

என்று தொடங்கும் பதிகம் பாடியமையையும் [திருஞான சம்பந்தர் 880 : 2-3] 'உண்ணு முலையாள்' என்று தொடங்கும் பதிகம் பாடியமையையும் [திருஞான சம் பந்தர் 970 : 3] பெரிய புராணத்தின் வாயிலாக அறிய லாம்.

சக்தியும் சுந்தரரும்:

சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சக்தியுடன் தொடர்பு படுத்தி நான்கு இடங்களில் கூறுகின்றார் கவி வலவர் சேக் கிழார் பெருமான்.

ஆளுடைய பிள்ளையாராம், திருஞானசம்பந்தர் தோன்றிய பெரும் புகலியினை மிதிக்கக் கூடாது எனச் சுந்தரர் கருதி ஊரின் எல்லைப்புறத்திலேயே வணங்கி வல மாக வரும்பொழுது, சிவபெருமான் விடையின் மேல் சக்தி தன் இடப்புறத்தில் இருக்கச் சுந்தரருக்குக் காட்சி தந்த தாகச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றார் [தடுத்தாட் கொண்டார் புராணம் [112 : 3-4]. சுந்தரர் திருக்கலய நல்லூர் இறைவனை மனம், மெய், மொழி ஆகியவற்றால் மும்மை வணக்கம் செய்து, "குரும்பை முலை உமையாள்" என்னும் திருப்பதிகம் பாடிச் சிறப்பித்ததாகக் கவி வலவர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் சுட்டிச் செல்கின்றமையை உணரலாம் [67 : 3].

வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தின் இறுதியில் அமைந்துள்ள கூற்றுவ நாயனார் புராணத்தில் (சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி) சக்தியின் ஊடல் தீர்க்கச் சக்தி யின் திருவடியை இறைவன் சடையில் சூடிய செய்தியும் கூறியுள்ளமை இவண் கருதத்தக்கது.

கயிலை மலையில் மலைவல்லியாகிய சக்தியுடன் வீற்றிருந்த சிவபெருமான் தேவர்களை அழைத்து, நம்மூ ரனை (சுந்தரரை) வெள்ளானையின் மேல் உடன் ஏற்றி

இங்கு கொண்டு வாருங்கள் எனத் தேவர்களிடம் கூறிய தாக வெள்ளானைச் சருக்கத்தில் சேக்கிழார் பெருமான் கூறிச் செல்கின்றார் [வெள்ளானைச் சருக்கம் : 31]. கயிலைமலையில் சுந்தரர் இறைவனுக்கு நாண்மலர் கொய் திடச் சென்ற பொழுது, ஆளுடை நாயகியாகிய சக்தியின் குழலிற்கு மலர் கொய்திடச் சென்ற அனிந்திதை, கமலினி என்ற சேடியரைக் கண்டு மையலுற, அதை உணர்ந்த சிவ பெருமான், 'மாதர்மேல் மனம் வைத்த காரணத்தால் தென் புவி மீது தோன்றி அம்மெல்லியலாருடன் காதல் புரிந்து, இன்பத்தில் மூழ்கித் திளைத்து வா' என்று கூறித் தென் திசைக்கு அனுப்பினர். அவ்வாறு அங்கிருந்து தான் அனுப்புங்கால் அளித்த உறுதிக்கேற்ப, இறுதியில் ஆலால சுந்தரனைப் பூவுலக வாழ்வினின்று விடுவித்து விண்ணுலக வாழ்வு அளிக்கக் கருதித் தேவர்களை அனுப்பி வெள்ளானை யின் மேல் சுந்தரரை அழைத்துவரச் செய்தமை இங்கு அறியத்தக்கது.

சத்தி முற்றம்:

சத்தியின் பெயரால் அமைந்துள்ள திருச்சத்தி முற்றத் திற்குச் சென்று திருநாவுக்கரசு சுவாமிகள் "கோவாய் முடுகி" என்று தொடங்கும் பதிகம் பாடியதாகச் சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் கூறிச் செல்கின்றார் (132). இவ்வண்ணம் சிறப்பிக்கப்படும் திருச்சத்தி முற்றம் பழையாற்றில் அமைந்துள்ளமையையும் உணரலாம்.

திருஞானசம்பந்தரும் மருவாருங்குழல் மலையாளாகிய சக்தியினைத் திருச்சத்தி முற்றத்திற்குச் சென்று வழிபட்ட தாகத் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் கூறப் பட்டுள்ளதையும் அறியலாம் (390, 391).

சத்தி நாயனார்:

சத்தியினைத் தன் பெயராகக் கொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகச் சத்திநாயனார் விளங்

கினர். சிவபெருமானின் அடியவர்களே இவ்வுலகத்தில் இகழ்ந்து கூறுபவர்களின் நாவினை அரிந்து எறியும் சக்தியைப் பெற்றிருந்தமையால் சத்திநாயனர் என்ற பெயர் பெற்றுள்ளார் எனச் சேக்கிழார் கூறுவது கருதத் தக்கது [சத்தி நாயனர் : 3]

உவமை நோக்கில் சக்தி:

உவமை என்ற சொல்லிற்கு ஒப்பு[1], ஒப்புமை[2], உவமம்[3], உவமாலங்காரம்[4], இரண்டு பொருட்களுக்கு ஒப்புமை விளங்கக் கூறுதல்[5] என்றவாருகப் பொருட்களை அகராதிகள் நவில்கின்றன. கவிதைக்குரிய மொழியான உவமை பாத்திரப்பண்பு, மனநிலை இவற்றை விளக்க மிகவும் இன்றியமையாதது எனப் பேராசிரியர் டாக்டர். ச. வே. சுப்பிரமணியனர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளமையும் உணரத்தக்கது[6]. சிறந்த உவமையானது பொருளின் தன்மையை விளக்குவதன்றி, அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும் எனக் கூறுகின்றார் டாக்டர் ஜான்சன்[7]. கவிதைக்குரிய சிறப்புத் தன்மைகளாகிய கற்பனை, உணர்ச்சி ஆகியவற்றைக் குழைத்து, உவமையினைத் துணையாகக் கொண்டு தேவியாகிய உமையின் வடிவத்தினைக் காட்சிக்கினியதாக்கிக் கண்ணிற்கு விருந்தளிக்கும் வண்ணம் காட்சிப் படிமமாகவும் கருத்துப் படிமமாகவும்

---

1. செந்தமிழ் அகராதி
2. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி
3. கழகத் தமிழ் கையகராதி
4. தற்காலச் சொல்லகராதி
5. அபிதான சிந்தாமணி
6. இலக்கிய நினைவுகள் – டாக்டர் ச. வே. சுப்பிரமணியனர்
7. The lives of the English poets
— Dr. Samuel Johnson, Vol. XI. page 175
Griffin and Co-London, 1280

அமைத்துள்ளார் சேக்கிழார் பெருமான் என்றவாருகத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.*

சக்தியாகிய உமையம்மையின் கூந்தல் வண்டு நிமாய்க்கும் தன்மையைப் பெற்றுள்ளது என்ற கருத்தை அறிவுறுத்த விழைந்து,

"வண்டுலாம் குழன் மலைமகள் கமல வதனம் நோக்கி"
எனத் தாமரை மலருக்கு ஒப்பிடுகின்றார்.[1]

உமையம்மையின் வதனம் மிகவும் மென்மையானது என்ற கருத்தினைக் கூற விரும்பி, வதனத்திற்குக் கமலத்தை உவமானமாகக் கூறுகின்றார்.[2]

உமையம்மையின் நெற்றிக்குப் பிறை வடிவினை உவமானமாகக் கூறிச் செல்கின்ற பாங்கினையும் உணரலாம்.[3]

உமையம்மையின் கண்களுக்குக் கயல் மீனினை உவமானமாகக் கூறுகின்றார். சேக்கிழார் பெருமான்[4], உமையின் கண்கள் வாட்கயல் போன்று கூர்மையுடையது என்றும்[5] செங்கயல் போன்று பிறழ்ச்சி உறுகின்ற தன்மை உடையது என்றும்[6] கூறிச்செல்கின்றார்.

உமையின் வாயிற்குத் தொண்டையங்கனியினை உவமானமாகக் கூறுகின்றார்.[7]

---

* பெரிய புராணத்தில் உவமைகள்
— அ. சங்கரி, முதற்பதிப்பு (1975).

1. திருத்தொண்டர் புராணம் — சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை
   இரண்டாம் பகுதி பாடல் எண் 1145
2. ,, ,, 1146
3. ஆரும் பகுதி பாடல் எண் 3220
4. இரண்டாம் பகுதி பாடல் எண் 1140
5. ஆரும் பகுதி பாடல் எண் 3482
6. ,, ,, 3441
7. இரண்டாம் பகுதி பாடல் எண் 1135

உமையின் மொழியினைப் பற்றிக் கூற விழைந்த சேக்கிழார் பெருமான் 'இன்மொழியாள்' என வருணிக்கின்றார்.[8] மொழியை யாழிற்கும்[9] பாலின் இன்சுவைக்கும்[10] ஒப்பிட்டுக் கேள்வி, சுவை ஆகிய இரு சுவை மிக்க அவர்தம் இயல்பினைப் புலப்படுத்துகின்றார்.

உமையின் கரங்களைத் தளிருக்கும்[11] உவமிக்கும் திறன் போற்றத்தக்கது.

உமையின் இடைக்குத் துடியினை உவமானமாகக் கூறிச் செல்கின்றார் சேக்கிழார் பெருமான்.[12] ஒளியின் அடிப்படையில் துடியினை இடைக்கு உவமானமாகக் கூறியிருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது.

உமையைக் கொடியாகக் காட்சிப்படுத்த விழைந்து, கவி வலவர் அம்பொற்கொம்பு,[13] மரகதக் கொடி,[14] இமக் குலக்கொடி,[15] பூங்கொடி,[16] மலைக்குலக் கொடி[17] என்றவாருகக் கூறுகின்ற பாங்கு கருதத்தக்கது.

சக்தியாகிய உமை மின் போன்ற அழகுடையவள் எனச் சேக்கிழார் கூறுகின்றார்.[18] சக்தியின் அழகினை மின்னலிற்கு உவமித்துக் கூறும் திறன் பாராட்டத்தக்கது.

---

8. திருத்தொண்டர் புராணம்–மூன்றும் பகுதி பாடல் எண் 1481
9. ,, ஆறும் பகுதி பாடல் எண்: 3631
10. ,, நான்காம் பகுதி பாடல் எண்: 2116
11. ,, இரண்டாம் பகுதி பாடல் எண்: 1017
12. ,, ,, ,, 922
13. ,, ,, ,, 1008
14. ,, மூன்றும் பகுதி ,, 1644
15. ,, முதல் பகுதி ,, 450
16. ,, இரண்டாம் பகுதி ,, 1192
17. ,, ,, ,, 1141
18. ,, முதல் பகுதி ,, 281

பிற பெண்டிரின் பாதத்திற்கு எவ்விடத்தும் தாமரை மலரை உவமையாகக் கூறுது. உமையின் பாதத்தை மட்டும் தாமரை மலருக்கு உவமிக்கும் நிலையினை உணரலாம்.*

உமை — காவிரி ஒப்புமை :

'வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய காயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது'
(திருநாட்டுச் சிறப்பு : 6)

காவிரியின் பெருமையைச் சுட்டிக் காட்ட விழைந்த சேக்கிழார் பெருமான் காவிரியையும் உமையையும் தொடர்பு படுத்திக் கூறுகின்ற அளவில் இப்பாடலை அமைக்கின்றார். உயர்ந்த சையமலையினின்று காவிரி உற்பத்தியாகி சோழ வள நாட்டில் பாய்ந்து, அந்நாட்டினைச் செழிப்புறச் செய்கின்றது. இதைக் கருத்தில் கொண்டு, காவிரியானது சோழநாட்டு மக்களுக்குப் பலவகை அறங்களைச் செய்கின்ற ஈகைத்தன்மையைப் பெற்று விளங்குகின்றது எனக் கருதலாம். இத்தன்மை சிவபெருமானின் இடப்பாகத்தை ஆளுகின்ற தன்மை படைத்த உமையம்மையின் கருணையினை ஒத்து அமைந்துள்ளது எனக் கூறுகின்றார் சேக்கிழார் பெருமான். உலக மக்களைக் காத்து, இகபரத்து இருநாழிநெல் கொண்டு உலக மக்களுக்கு முப்பத்திரண்டு அறங்களைச் செய்கின்ற தன்மை படைத்த உமையம்மையின் கருணையின் ஒழுக்கத்தைக் காவிரிக்கு ஒப்புமை படுத்திக் கூறுவது நயம்பட அமைந்துள்ளது.

தத்துவ நோக்கில் உமை :

உமையின் திருமணியாகிய பிரமாண்டத்தில் ஒளிக்காக ஏற்றப்பெறும் மூச்சுடர்களாகச் சூரியன், சந்திரன், அக்கினி என்பவற்றைக் கூறுகின்றார் சேக்கிழார்பெருமான்.

---

*திருத்தொண்டர் புராணம்—ஆரும் பகுதி
பாடல் எண்: 3262, 3362.

இம்முச்சுடர்களுடனும் காஞ்சி நகரில் ஆண்டுக்கொரு முறைஒரே துணரில் மலரும் மும்மலர்களை ஒப்பிட்டுத் தத்துவக் கருத்தினை வலியுறுத்துவதை,

"அலகில் நீடவத் தறப் பெருஞ்செல்வி
அண்ட மாந்திரு மனைக்கிடுந் தீபம்
உலகில் வந்துரு பயனறிவிக்க ஓங்கும்
நாண்மலர் மூன்றுடன் ஒன்று"

[திருக்குறிப்புத் தொண்ட நாயனார் 72 : 1-2]

என்ற பாடலால் உணரலாம். இதன் வாயிலாக அகில உலக நாயகியாகிய அன்னையின் அருட்காட்சியினையும் முச்சுடர்களாகிய அம்மையின் வீட்டு விளக்கினையும் தத்துவ எண்ணம் தோன்றும் வகையில் அமைத்துச் செல்கின்றார் கவி வலவர் என எண்ணலாம்.

நிலமகள் :

சக்தியின் கூறுகிய நிலமகளைப் பற்றியும் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கூறுவதைக் காண்போம்.

அகத்தியன் கமண்டலத்தினின்று தோன்றியதாகக் கூறப்படும் காவிரியாறு, சக்தியின் கூறுகிய நிலமகளின் மார்பில் தாழ்ந்துள்ள முத்துமாலையாகக் காட்சியளிப்பதை,

"ஆதிமா தவமுனி அகத்தியன் தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்"

(திருநாட்டுச் சிறப்பு: 2)

என்ற பாடலின் வாயிலாக விளக்கிச் சொல்கின்றார்.

நிலமகளின் அழகிய நீண்ட நெற்றியாகச் சோழவள நாட்டையும் அவள் நெற்றியில் அணிந்துள்ள திலகமாகத் திருவாரூரினையும் குறிப்பிடுவதை,

'நிலமை கட்கழ காதிரு நீள்நுதல்
திலதுஞ் ஒப்பது செம்பியர் வாழ்பதி'

[திருநகரச் சிறப்பு 12 : 1-2]

என்ற பாடலடிகளால் உணரலாம்.

நில மகளின் மேகலையாக உலகைச் சூழ்கின்ற கடலினைக் கூற எண்ணிய கவி வலவர்,

'தென்திரை வேலை மேகலை சூழ் வையம்'

[திருக்குறிப்புத் தொண்ட நாயனார் 73 : 3]

என்றவாருகப் பாடுகின்ருர்.

பரந்து உயர்ந்து வானளாவ நிற்கின்ற மரங்களைத் தன்னகத்துப் பெற்று இலங்கும் அடர்ந்த சோலையினை நில மகளாகக் கூறுவதை,

'மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களின்அலையச்
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள் கையினைத்தாற் போலுயர்வ மலர்ச் சோலை'

[திருநாவுக்கரசு சுவாமிகள் : 9]

என்ற பாடலால் அறியலாம்.

மலர்களில் மொய்க்கும் வண்டுகளை நிலமகளின் நீல மணி பதிக்கப் பெற்ற வலையல்களாகவும் மலர் அரும்புகளை அவளுடைய நகங்களாகவும் சேக்கிழார் பெருமான் காட்சிப்படுத்துகின்ருர். இவ்வாருன இயற்கை எழிலில் ஒளி பெற்று விளங்கும் நிலமகள் தன் ஒளி மேனியினைக் கண்டு மகிழும் ஆடியினை ஒத்து அமைகின்ற வெண்மதி யினை நெஞ்சுடன் ஒருங்கே அணைத்து மகிழ்வுறுவதாகவும் மேற் கூறிய பாடலில் சேக்கிழார் நயம்படச் சுட்டிச் செல் வதனையும் உணரலாம்.

திருவாரூர் போன்று பொன்னி வள நாட்டினையும் நிலமகளின் திலமாகச் சேக்கிழார் காண்பதை,

'மேவும் பொன்னித் திருநாடே புவிக்குத் திலகம்'

[கழறிற்றறிவார் நாயனார் 149 : 2]

நில மகள் உலகைச் சூழ்ந்திருக்கும் கடலே ஆடையாக அணிந்துள்ளமையை,

'எழுந்திரைமா கடலாடை யிருநிலமா மகள் மார்பில்
அழுந்து படலெழுது மலைத்தொழிற் றெய்யிலணி யினவாம்'

[இடங்கழி நாயனார் 1 : 1-2]

என்ற பாடலடிகளின் வாயிலாக உணரலாம்.

மலர் மகள் :

சக்தியின் கூறுகிய மலர்மகள் (பூமகள்) பற்றித் திருநாட்டுச் சிறப்பில் கூறுகின்றார் கவி வலவர்.

''சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது''

[திருநாட்டுச் சிறப்பு : 3 : 1-2]

சக்தியின் கூறுகிய பூ மகளினைக் குழந்தையாக உருவகப் படுத்தி, சைய மலையினின்றும் பெருகி உயிர்களை உய்யும் படி நீரினை அளித்து ஊட்டுகின்ற காவிரியினைப் பூமகளின் செவிலியாகவும் நமக்குக் காட்சிப்படுத்துகின்றார். பூமகளாகிய குழந்தைக்குச் செவிலித் தாயாக அமைந்து புரப்பவளாகக் காவிரியினைக் காட்சிப்படுத்துவதன் வாயிலாகக் காவிரியின் பயன், இன்றியமையாமை ஆகியவற்றைச் சுட்டிச் செல்கின்றார் சேக்கிழார் என எண்ணவும் இடமுண்டு.

பொன்னி வள நாட்டில் அமைந்துள்ள திருவாரூரை மலர்மகள் வீற்றிருக்கும் தாமரைக்கு ஒப்பிடுவதை,

'மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்து
அலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமலால்''

[திருநகரச் சிறப்பு 12 : 3-4]

என்ற பாடலடிகளால் அறியலாம்.

மலர்மகள் வீற்றிருக்கும் தாமரை மலர் மென்மை, அழகு மணம், தூய்மை ஆகியவற்றைப் பெற்று இலங்குவது போன்று, இறைவன் வீற்றிருக்கின்ற காரணத்தால்

திருவாரூர் நகரும் அருள், தூய்மைபோன்ற நல்லியல்பு களைப் பெற்று விளங்குகின்றது என்ற கருத்தைச் சேக்கி ழார் பெருமான் வலியுறுத்த எண்ணியே மேற்கூறியவாறு பாடலடிகளை அமைத்திருப்பார் எனக்கருதவும் இடமுண்டு.

திருமகள் :

சக்தியின் கூறுகிய திருமகளினைப் பற்றியும் சேக்கி ழார் பெரிய புராணத்தில் கூறுகின்றார்.

அவர் பரவையாரைப் பூவின் மங்கையாகிய இலக்கு மியாகக் காண்பதை,

'வரமலர் மங்கை இங்கு வந்தனன்'

[தடுத்தாட் கொண்டார் 133 : 3]

என்ற அடியின் வாயிலாக அறியலாம்.

வரமலர் மங்கை எனக் கருதப்படுகின்ற இலக்குமி தான் இங்கு வந்தாளோ என ஐயமுற்று வியக்கும் வகை யில் சேக்கிழார் பரவையாரைக் காட்சிப்படுத்துகின்றார்.

மதுராபுரி நாட்டுப் பெண்கள் இலக்குமியை ஒப்பர் என்பதை,

'சூழ் மிதழ்ப்பங்கய மாகஅத் தோட்டின் மேலாள்
தாழ்வின்றி என்றுந் தனிவாழ்வதத் தையல் ஒப்பார்'

[மூர்த்தி நாயனார் 3 : 1-2]

என்றவாருக நவில்கின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் திலகவதி யார் பிறந்த தன்மையினை விளக்கும் பொழுது,

'நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவயினில்
திகழவரும் திருவனைய திலகவதி யார்பிறதார்'

[திருநாவுக்கரசர் 17:3-4]

என்று சேக்கிழார் கூறுகின்றார். அக்குழந்தை வளர்ச்சி யுறும் பொழுது திருமகளை ஒத்த அழகு, புகழ் ஆகியவற்று டன் விளங்கும் என்ற கருத்தை வலியுறுத்த விழைந்தமை

யாலேயே மேற்கூறியவாறு சேக்கிழார் பாடியிருக்கலாம். அம்மகவு வளர்ச்சியுற்று சைவ சமயத்திற்குத் தொண்டு செய்து குன்றாத புகழினைப் பெறப்போகும் தன்மையினை நமக்குச் சுட்டிக்காட்டக் கருதிய நிலையினை,

'செம்மலர்மேல் திருவினை திலகவதியார் கேட்டார்'

[திருநாவுக்கரசர் 31 : 4]

என்ற பாடலடியால் உணரலாம்.

பூம்பாவையினைக் குழவியாகக் காட்சிப் படுத்தி இலக்குமிக்கு ஒப்பிடுவதை,

... ... "வயிரெனுங் கமலத்
துரிய பூமகள் எனவொரு பெண்கொடி உதித்தாள்"

[திருஞான சம்பந்தர் 1040 : 3-4]

என்ற அடிகளால் உணரலாம்.

பூம்பாவையின் அன்னையின் வயிற்றினைக் கமலமாகவும் அவ்வயிறுகிய தாமரையில் உறையும் பூம்பாவையைத் திருமகளாகவும் வருணிக்கின்றமை நயம்பட அமைந்துள்ளது.

"பாலை நல்லுறுப் பணிகிளர் பண்பெலாம் நோக்கிப்
பூவி னுளென வருவலிற் பூம்பாவை என்றே
மேவும் நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க"

[திருஞான சம்பந்தர் 1044 ; 2-4]

என்று திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் அமைந்துள்ள அடிகளைக் காணும்பொழுது குழவியின் அழகு, பண்பு ஆகிய நல்லியல்புகள் திருமகளை ஒத்து அமைந்திருந்தமையாலேயே பூம்பாவை என்ற பெயரை அக்குழந்தைக்குச் சூட்டினர் என்பது வெளிப்படுகின்றது.

திருஞான சம்பந்தர் ஏழு வயதில் பாம்பு தீண்டி இறந்த பூம்பாவையினை உயிர்பெறச் செய்யும்பொழுது பன்னிரண்டு வயதுக் கன்னியாக உயிர் பெற்று எழுந்தமையை,

"நோற்றெடுத் செங்கை தோற்றிடக் குடம்உடைந்
தெழுவாள்
போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்றாள்"

[திருஞானசம்பந்தர் 1090 : 3-4]

என்ற அடிகளால் கவி வலவர் கூறுகின்றார். தாமரைப் போதவிழத் தோன்றும் இலக்குமியை ஒத்துக் குடத்தினின்று தோன்றிய பூம்பாவை எனச் சிறப்பிப்பதை அறியலாம்.

காரைக்காலம்மையாரின் தெய்வத் தன்மையினை உணர்ந்து அவரை சிவிகை மீது ஏற்றிச் சென்ற நிகழ்ச்சியினை,

> "மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில்அன் னாரைத்
> தாமரைத் தவிசில் வைகுந்தனித்திரு என்ன ஏற்றி"
>
> [காரைக்காலம்மையார் : 42 : 1-2]

என்றவாறாக நவில்கின்றார் கவி வலவர்.

தவிசின் மீது அமர்ந்துள்ள காரைக்காலம்மையாருக்குத் தெய்வத்தன்மை அளிக்கும் எண்ணத்துடன் சேக்கிழார் பெருமான் காரைக்காலம்மையாரைத் திருமகளிற்கு ஒப்பிடுகின்றாரோ என எண்ணவும் இடமுண்டு.

முடிவுரை:

அரிச்சந்திர புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற புராணங்களில் சக்தியைப் பற்றியும் சக்தியின் கூறுகளாகிய திருமகள், மலர்மகள், நிலமகள் ஆகியோரைப் பற்றியும் கூறப்பட்டிருப்பினும், பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது போன்று மிகவும் விளக்கமாகக் கூறப்படவில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம். சக்திக்கு நூற்றுக்கு மேற்பட்ட பெயர்கள் அமைந்துள்ளமையையும் சக்தியாலே சிவன் பெயர் பெற்றுன் என்ற கருத்தை வலியுறுத்துவது போன்று சிவபெருமானுக்குப் பெயர்கள் அமைந்துள்ளமையையும் இக்கட்டுரையில் காணலாம். சக்தி தவம் செய்து ,சிவபெருமான் அருளினைப் பெற்று இவ்வுலக உயிர்கட்கு முப்பத்திரண்டு அறங்கள் செய்தமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. சக்தியின் முலைப்பால் உண்ட காரணத்தால் சிவஞான சம்பந்தரான ஆளுடைய பிள்ளையாரையும் அறம் புரப்பவளாகிய சக்தி

யையும் பல இடங்களில் தொடர்புபடுத்திச் சேக்கிழார் கூறிச் செல்வதும் இக்கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளது. பொன்னி வள நாட்டு மக்களின் வாழ்விற்கு உறுதுணை புரியும் காவிரியையும் இவ்வுலக மக்கட்கு அருள் செய்கின்ற தன்மை படைத்த சக்தியையும் ஒப்புமைப்படுத்தி இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. பழையாறையில் உள்ள திருச்சத்திமுற்றம் (சத்தியால் பெயர் பெற்ற இடம்) பற்றிய குறிப்பும் இக்கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளது. சக்திக்குப் பல்வேறு உவமைகளைக் கூறிச் செல்கின்ற பாங்கினையும் தத்துவ நோக்கில் சக்தியைக் கூறுகின்ற தன்மையினையும் இக்கட்டுரையில் காணலாம். பெரிய புராணத்தில் சக்தியின் கூறுகளாகிய நிலமகள், மலர்மகள், திருமகள் ஆகியோரைப் பூம்பாவை, காரைக்காலம்மையார் போன்றோருக்கு ஒப்புமைப்படுத்திக் கூறுவதும் இக்கட்டுரையில் சுட்டப்பட்டுள்ளது. பெரிய புராண காலத்தில் சக்தி வழிபாட்டு நிலை தழைத் தோங்கி நின்றது எனக் கூறுதல் மிகையாகாது.



பயன்பட்ட நூற்கள்

1. பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம் — சேக்கிழார் சுவாமிகள்
2. செந்தமிழ் அகராதி
3. தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி
4. கழகத் தமிழ் அகராதி
5. தற்காலச் சொல்லகராதி
6. அபிதான சிந்தாமணி
7. இலக்கிய சினவுகள்
— டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார்
எம். ஏ., பி. எச். டி.
8. பெரிய புராணத்தில் உவமைகள்
— அ. சங்கரி
9. திருத்தொண்டர் புராணம்
— சி. கே. சுப்பிரமணிய முதலியார்
உரையுடன் — முதல் பகுதி (1—550-வது பாடல்)
— கோவைத் தமிழ்ச் சங்கம் 1960
10. திருத்தொண்டர் புராணம் — இரண்டாம் பகுதி
(551—1263-வது பாடல்)
— கோவைத் தமிழ்ச் சங்கம் 1968
11. திருத்தொண்டர் புராணம் — மூன்றும் பகுதி
(1266—1694-வது பாடல்)
— கோவைத் தமிழ்ச் சங்கம் 1965

12. திருத்தொண்டர் புராணம் — நான்காம் பகுதி
(1899—2530-வது பாடல்)
— கோவைத் தமிழ்ச் சங்கம் 1971

13. திருத்தொண்டர் புராணம் — ஆறும் பகுதி
(3155—3747-வது பாடல்)
— கோவைத் தமிழ்ச் சங்கம் 1953

14. The lives of the English poets
— Dr. Samuel Johnson



16
பாரதி பார்வையில் சக்தி

முன்னுரை:

'சக்தி சக்தி என்றுல் சக்தி—தாசன் என்றே பேராகும்' என்று சக்தியின் திருப்புகழ் பாடிய பாரதியார், எட்டயபுரம் மன்னர் வெங்கடேசுரெட்டப்ப பூபதிக்கு எழுதிய ஓலையில் தம்மை 'சக்திதாசன் எனப் புகழ் வளரும் சுப்பிரமணிய பாரதி' எனக் குறிப்பிட்டிருந்தது பாரதியார் சக்தியின் உண்மைப் பக்தர் என்பதைத் தெள்ளிதின் விளக்குகின்றது. பராசக்தி தெய்வம். 'ஆத்ம ஞானத்தைக் காட்டும் நூல்கள் அவளுடைய வேதம். லௌகிக சாஸ்திரமும் அவளுடைய வேதந்தான்' என்றும் கட்டுரை வாயிலாகவும் பாரதி கூறுவது மேற்கூறிய கருத்திற்குத் துணை செய்கின்றது. எனவே சக்தி தாசனுகிய பாரதி சக்தி பற்றி, உணர்ச்சிப் பெருக்கெடுத்த வண்ணம் நவில்கின்ற பாங்கினை இவண் ஆராய்வோம்.

பாரதியும் இயற்கைச் சக்தியும்:

இன்பத்தில் திளைத்திருக்கும் பொழுது பாரதியார் கண் முன்பு பராசக்தி திருவிளையாடல் தோன்றுகின்றது என்பதை

"மந்த மாருதத்தில்—வானில் மலையினுச்சி மீதில்
சிந்தையெங்கு செல்லும் -அங்கு உன் செம்மை
தோன்றுமன்றே"

என்பதன் வாயிலாக அறியலாம். பராசக்தியின் கூத்தைப் பாடும் பொழுது அவர் கவிதா நடையில் ஏறுநடை போன்றொரு வீரம் பிறக்க, வானில் முழங்கும் இடி, அவர் ஆடலிற்குத் தாளம் போடுகின்றது. பராசக்தியும் அதற்கேற்ற வாறு அபிநயம் பிடித்து மகிழ்வுற்று ஆடுகின்றமையை,

"வெடிபடு மண்டத்திடிபல தாளம் போட — வெறும்
வெளியி லிரத்தக் களியொடு பூதம்பாட — பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற் கூடக் — களித்
தாடுங் காளி; சாமுண்டீ; கங்காளி;
அன்னே! அன்னே! ஆடுங்கூத்தை
நாடச் செய்தாள் என்னே"

என்று தன்னை மறந்து பாடுகின்றமையால் உணரலாம்.

பராசக்தி உலகத்து நாயகி:

பாரத நாட்டினர் வணங்கும் பராசக்தியை 'உலகத்து நாயகி'யாகக் காண்கின்றார் பாரதியார். இவ்வுலகெங்கும் உள்ள மக்களை அவளே துன்பத்தினின்று காக்கின்றாள் என்று பாரதி கருதுகின்றார். ரஷ்ய நாட்டில் குடிமக்களுக்குப் பேச்சுரிமை கொடுக்கப்படாமலும், வரம்பு மீறிப் பேசினால் சிறை கொடுக்கப்பட்டும் இருந்த முடிமன்னன் ஜார்ஜ் நடாத்திய ஆட்சியினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் பாரதி. அம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் நீதி முறை கெட்டு, அநீதியே அறமாகக் கருதப்படும் அளவிற்குக் கொடுங்கோலாட்சி நிலவியமையும் விளக்குகின்றார். அந்நிலையில் 'உலகத்து நாயகி' ரஷ்ய மக்கள் படும்பாட்டைத் தீர்க்கத் திருவுள்ளம் கொண்ட நிலையினை,

'இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால்
வனவாசம், இவ்வாறங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்'

என்றவாறுகப் பாடுகின்றார். பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் பார்வையைச் செலுத்தியதும் பெரும் புரட்சி தோன்றி, கொடுங்கோலாட்சி வீழ்ந்து மக்களாட்சி மலர்ந்த நிலையினை,

"மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகா வென்றெழுந்ததுபார் வேகப்புரட்சி
கொடுங் கோலன் அலறி வீழ்ந்தான்."

என்று பாடுகின்ருர். புரட்சி எழுந்ததற்கும் புத்தாட்சி பிறந்ததற்கும் பராசக்தியின் திருவருளே காரணமென்று பாரதி கருதுகிருர்.

பாரதி — பாரத மாதா — சக்தி:

பாரத நாட்டைப் பாரதமாதாவாக உருவகிக்கின்ருர் பாரதியார். அவ்வாறு உருவகித்த பாரத மாதாவையும் பராசக்தி உருவாகவே காண்கின்ருர். மலையரசன் மகளாகத் தோன்றிய பராசக்தியைப் போலவே பாரத மாதாவையும்,

'வெண் பனிமுடியிமப்
பொருப்பினன் ஈந்த பெருத்தவப் பொருளே!"

என்று கூறுவதைப் "பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியிற்" காணலாம். பராசக்தி கையில் சூலத்தைத் தாங்கியிருப்பதுபோல் பாரத மாதவும் சூலத்தை ஏந்தி இருப்பதையே அத்திருப்பள்ளி எழுச்சியிற் கூறுகின்ருரென எண்ணலும் தகும். பராசக்திக்குச் சிங்கம் ஊர்தியாக இருப்பதுபோல பாரத மாதாவிற்கும் சிங்கத்தை ஊர்தியாக அமைப்பதையும் "பாரத தேவியின் திருத்த சாங்கத்தில்" காணலாம்.

பராசக்தி நீல நிறமும் முக்கண்ணும் உடையவள். அதைப்போன்று பாரத மாதாவையும்,

"நீலக் கடலொத்த கோலத்தி
னுள் மூன்று நேத்திரத்தாள்"

என்று பாரதமாதா நவரத்தின மாலையில் பாடுகின்ருர். அவர் தம் கருத்துப்படி., காளியே பாரத மாதாவாகவும் இருக்கின்ருள்.

"காளியும் நமது கனக நன்னூட்டுத்
தேவியும் ஒன்றெனத் தேர்ந்த நல் அன்பர்காள்!"

என்று 'குருகோவிந்தர்' பாட்டில் வரும் அடிகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

பாரதியும் பராசக்தி உருவகமும் :

'காலமாம் வனத்திலண்ட கோலமா மரத்தின்மீது
காளி சக்தி யென்ற வண்ணம் கொண்டு - ரீங்
காரமிட்டுலவு மொருவண்டு'

என்றும்

'மூலப்பழம் பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்
காலப் பெருங்களத்தின் மீதே - எங்கள்
காளி நட்புலகக் கூட்டம்'

என்றும் பாரதி பாடுகின்றார். இவண் பாரதி காலத்தை ஒரு வனம் என்றும் பெருங் களம் என்றும் உருவகித்து அங்கே உலவுகின்ற வண்டாகவும் நடமாடுகின்ற அன்னையாகவும் உருவகம் செய்து பாடுகின்றார்.

பராசக்தி நிலை — வழிபடு முறை — வழிபாட்டின் பயன்:—

"அகத்தினிலே துன்புற்றழுதேன் — யுகத்தினில் ஓர்
மாறுதலைக் காட்டி வலிமை நெறி காட்டி
ஆறுதலைத் தந்தாள் அவள்"

என்ற அடிகள் பராசக்தி யுக மாறுதலைச் செய்பவள் என் பதை உணர்த்துகின்றன. இத்தகைய சிறப்புக் கொண்ட பராசக்தியின் நிலையையும் வழிபடும் முறையையும் வழி பாட்டின் பயனையும் பாரதியே கூறுகின்றார்.

'பரமாத்மா வேறுகவும் பராசக்தி வேறுகவும் நினைப் பது பிழை. சர்வ லோகங்களையும் பரமாத்மா சக்தி ரூபமாக நின்று சலிக்கச் செய்வதால், சாக்த மதஸ் தர் நிர்குணமான பிரம்மத்தை ஸகுண நிலையில் ஆண் பாலாக்காமல், பெண் பாலாகக்கருதி 'லோக மாதா' என்று போற்றினர்'

"சக்தி நல்ல வல்லெழுத்துச் சேர்ந்த மொழி. விக்கிரமாதித்யனும், காளிதாசனும் வணங்கிய தெய்வம். உலகத்தார் இந்தப் பராசக்தியை நல்ல அருள் பொழியும், சரத் காலத்தின் முதல் ஒன்பது ரவும் வணங்கிப் பூஜைகள் செய்யவேண்டும் என்பது பூர்வீக ஏற்பாடு"

"இன்பமென்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரச வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம் தமிழா உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள்புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக ... பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக."

பாரதி சக்தியிடம் இரங்கும் நிலை:

வழிபட்டோருக்கு எல்லா நன்மைகளையும் புரியும் சக்தியிடம், உணர்ச்சியின் உச்ச நிலையில் நின்று,

"நெஞ்சங் குமுறுகிறேன் — கற்பு
நீங்கிடச் செய்யுங் தொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம் — துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்ச மில்லாதே — அவர்
சாகும் வழக்கத்தை இந்தக்கணத்தினில்
மிஞ்ச விடலாமோ? ஹோ!
வீர காளி, சாமுண்டி, காளி"

எனப் பாடுவதன் வாயிலாக, பராசக்தியிடம் இவ்வுலக மாந்தருக்காகப் பாரதி இரங்குகின்றமையை உணரலாம்.

உலகை நோக்கில் பாரதியின் சக்தி:—

"சொரியு நீரெனப் பல்லுயிர் போற்றுலை
சூழும் வெள்ளம் எனவுயில் மாற்றுணவு
விரியு நீள் கடலென நிறைந்தனை
வெல்க காளியெனத் தம்மை வெல்கவே"

என்ற பாடலடிகளில் சக்தியை — நீருக்கும் வெள்ளத்துக்

கும் கடலிற்கும் உவமிக்கின்றார் பாட்டுக்கோர் புலவன் பாரதி. நீர் போல இருந்து பல்லுயிரினைச் சக்தி காப்பாற்றுவதுடன், வெள்ளம் போல இருந்து உயிர்களினை மாற்றுகின்றாள். கடல்போல இருந்து சக்தி எங்கும் நிறைவாக்கவே தோன்றுகின்றாள் எனவும் கூறலாம்.

சமுதாயக் கண்ணோட்டத்தில் பாரதியின் சக்தி:

"காட்டு வெளியினிலே — அம்மா நின்றன்
காவலுள வேண்டும் — என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப் பாலித்திட
வேணும்'

என்றும்

"வல்லமை தாராயோ — இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே"

என்றும்

"சக்தி செய்யுந் தொழில்களை எண்ணு — நித்தம்
சக்தியுள்ள தொழில் பல பண்ணு
சக்திதனையே இழந்து விட்டால் — இங்கு
சாவினையும் நோவினையும் உண்ணு."

என்றும் பாரதி பராசக்தியைப் பாடுகின்ற பொழுது இவ்வுலகிற்குத் தேவையான தொழில்களையும் பயன்களையும் கருதியே பாடியுள்ளார்கள் என எண்ணத் தோன்றுகின்றது.

பாரதியும் இருண்மைக் காட்சியும்:-

ஒரு சக்திப்பாட்டின் கடைசிப் பத்தியில் பாரதி,

"சொல்லினுக் கெளிதாகவும் நின்றிடாள்
சொல்லே லேறிடஞ் செல்ல வழிவிடாள்
அல்லினுக்குப் பெருஞ்சூடர் காண்பவள்
அன்னை சக்தியின் மேனி கலங்கண்டார்

கல்லினுக்குள் அறிவொளி காணுங்கால்
காலை வெள்ளத்திலே நிலை காணுங்கால்
புல்லினில் வயிரப் படை காணுங்கால்
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே.''

எனப் பாடுகின்றார். இருள்மை என்று கூறப்படுகின்ற (obscurity) பொருள் புலப்பாடு எளிதில் விளங்காத ஒரு வெளியீட்டுத்திறன் அமைந்துள்ளதாக, 'பாரதியின் சக்திப் பாட்டு' என்ற கட்டுரையில் திரு. சி, கனகசபாபதி குறிப்பிட்டுள்ளார்.

'வேகம் கவர்ச்சி முதலிய பல்வினை
மேவிடும் சக்தியை மேவுகின்றோரும்
மாறுதலைக் காட்டி வலிமை நெறிகாட்டி
ஆறுதலைத் தந்தாள் அவள்
கல்லதும் தீயதும் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்'

என்று பாரதி பல இடங்களில் சக்தியைச் செயலாற்றலின் உருவகமாகவே பாடினாலும் பல இடங்களில் இருண்மைக் காட்சிக் கண்ணோட்டத்துடனே காண்கின்றார். பராசக்தி சொல்லுக்கு எளிதாக நிற்கமாட்டாள் என்றும் ஆனால் அதே சமயம் சொல்லை வேறிடம் செல்லவிடாமல் தன்னிடமே வரநிற்கிறாள் என்றும் பராசக்தியின் நிலையைத் தமது அனுபவத்தில் கண்டபடி பாரதி சொற்களில் வெளியிடுகின்றார். பொருள் புலப்பாடு எளிதில் விளங்காத ஒரு வெளியீட்டுத் திறனையே பாரதி இப்படி மறைமுகமாக அறிவிக்கின்றார் என்று உணரலாம். மேலும் இருட்டினுள் சுடரைக் காண்பதுபோல் அன்னை சக்தியின் அழகு என்றும் பாரதி பாடியிருப்பதில் அவர் இருள்மை தோன்றும்படி சக்தியின் காட்சிகளைக் காண்கிறார் என்பது உணரற்பாலது.

பாரதி சக்திப் பாட்டில் வலியுறுத்தும் ஏனைய கருத்துக்கள்:

ஈயைக்கருட நிலைக்கு உயர்த்த வேண்டும் என்பதைப் பாரதி சக்திப் பாட்டில்,

'தீயை அகத்திடை மூட்டுவோம் — என்று
செப்பும் மொழி வலியதாகுமோ?
ஈயைக் கருட நிலையேற்றுவீர் — எம்மை
என்றும் துயரமின்றி வாழ்த்துவீர்

என்றவாருகக் கூறுகின்ருர்.

இது போன்று மற்ருேர் இடத்தில் பாரதி, பள்ளத்தில் கிடப்போரை உயர்த்த வேண்டும் என்பதை,

'வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலிப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்'

எனப் பாடுகின்ருர்.

பாரதியின் சக்திப் பாட்டில் புனைவியல் கற்பனை:

பாரதியின் சக்திப் பாட்டில் புனைவியல் கற்பனை (Romantic Imagination) காணப்படுகின்றமையை,

'கல்லை வயிரமணியாக்கல் — செம்பைக்
கட்டித் தங்கமெனச் செய்தல் — வெறும்
புல்லை நெல்லெனப் புரிதல் — பன்றிப்
போத்தைச் சிங்க வேருக்கல் — மண்ணை
வெல்லத் தினிப்பு வரச் செய்தல் — என
விந்தை தோன்றிட இங்ஙாட்டை
மாற்றி அமைத்திட வேண்டும்,

என்றும் பாரதி கனவு காண்பதன் வாயிலாக அறியலாம். இப்பாடலடிகளில் புல்லை நெல்லெனப் புரிதல் போன்ற புனைவியலான படிமம் (Romantic Image) காணப்படுவது உணரற்பாலது.

பாரதியும் பராசக்திப் பிள்ளைத் தமிழும்:

பெண் தெய்வமாகிய பராசக்தியினைத் தன் வழிபடு தெய்வமாக்கக் கொண்டமையால்தான், பாரதியார் கண்ணனைப் பாடும் பொழுது 'கண்ணம்மா' எனப் பெண்மை வடிவமாகப் பாடுகின்ருர். கண்ணன் பாட்டிலும்

'கண்ணம்மா — என் குழந்தை' என்ற தலைப்பின் கீழ் 'பராசக்தியைக் குழந்தையாகக் கொண்டு சொல்லிய பாட்டு' என்ற விளக்கம் பாரதியாரால் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'கண்ணம்மா-என் குழந்தை' என்ற பகுதியைப் பாரதி யார் பாடிய 'பராசக்திப் பிள்ளைத் தமிழ்' என்று கூறலாமென "பாரதியார்?" என்ற கட்டுரை யில் திரு சி. சத்தியமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

புதுமைப் பெண்ணுகப் பாரதியின் சக்தி:

'அல்லும் பகலுமிங்கே — இவை
அத்தனைக் கோடிப் பொருளினுள்ளே நின்று
வில்லை அசைப்பவளே — இந்த
வேலையனைத்தையும் செய்யும் விளைச்சியை'

என்ற பாடலடிகளில் கூறப்பட்டுள்ளதை ஆராயும் பொழுது, எப்பொருளினும் அமைந்து, நற்செயலாற்றலை விளைவிப்பவள் சக்தி என்பதை உணரலாம். இத்தகைய சக்தியே, "புதுமைப்பெண்" என்ற பாடலில் புதுமைப் பெண்ணுகி பெண் விடுதலை பேசுகின்றாள் என்பதை,

ஆற்றல் கொண்ட பராசக்தியன்னை, நல்
அருளினாலொரு கன்னிகையாகியே
தேற்றி உண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினும் மேற்செல்வம் எய்தினேம்"

என்ற பாடலடிகள் உணர்த்துவதை அறியலாம்.

வாழ்கின்ற ஒரு மனிதரின் வரலாற்று ஏடாக அமை கின்ற நாட்குறிப்பு உணர்வு மிக்க கவிஞனிடம் அகப்படும் பொழுது புதிய மெருகுடன் இலங்கும். வறுமை, அரசியல் என்ற இரண்டும் ஒன்றன் பின் ஒன்றாய் வாட்டி வதைத்த நிலையிலும் நம்பியிருக்கும் தன்னைக் கைவிட வேண்டாம் என்று பராசக்தியைத்தான் பாரதியார் அச்சுறுத்துகின்றார்.

"சீச்சீ, பராசக்தி! உன்னை நம்புவதை
முற்றிலும் விட்டு நிச்சயமாக நாஸ்த்திகனாய்
விடுவேன், நீ என்னை அற்பத் தொல்லை கட்
கெல்லாம் உட்படுத்திக் கொண்டேயிருந்தால்"

என்பது அவர் நாட்குறிப்பில் அமைந்துள்ளது. பிறரிடம் கூற வெட்கப்படும் தனி வாழ்க்கையினை அவ்வாறே வெளியிடும் நாட்குறிப்பிலும் கவிஞர் தன் இடர் களையுமாறு பராசக்தியிடமே முறையிடுகின்றாரென்பது குறிப்பிடத் தக்கது.

பராசக்தியிடம் பாரதியின் நன்றிக் கடன்:

'வையகம் பயனுற வாழ்வதற்கு ஆற்றலையும்
தர மாட்டாயா? சொல்லடி சிவசக்தி'

என்று தமக்கு வந்த வலிமை அற்ற நிலையைச் சுட்டிக் காட்டி, வலிமை தர வல்லடியோடு வாதாட வேண்டிய வரம் கிடைக்கின்றது. வரம் கிடைத்தமையால் பாரதி சக்திக்கு நன்றி செலுத்தும் பொருட்டு,

"எடுத்த காரியம் யாவினும்வெற்றி
எங்கு நோக்கினு? வெற்றி, மற்றுங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டிவேண்டுக் கருளினள் காளி;
தடுத்து நிற்பது தெய்வத மேலும்
சாகுமானுட மாயினும் அஞ்சைப்
படுத்து மாய்ப்பன் அருட் பெருங்காளி
பாரில் வெற்றி எனக்குறுமாறே"

எனப் பாடுவதை உணரலாம். "செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப் படுங்காண் என்று கூறுவதன் வாயிலாகப் பாட்டுத்திறம் பராசக்தி பக்தியால் தமக்கு வந்ததை ஒப்புக் கொள்கின்றார். பாரதியென்பது அறிந்தத்தக்கது.

பராசக்தி பாரதியின் காதலியா? :

பாரதியார் தமக்கு ஏற்பட்ட மூன்று காதலைப் பற்றிப் பாடுகின்றார். வெண்தாமரையில் வீற்றிருக்கும் கலைமகளைக்

கண்டு இருபத்திரண்டாம் ஆண்டளவும் அவளைக் காதலிப்பதில் காலம் கழித்தார். அடுத்துச் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைக்கண்டு அவள் காதலிலும் ஈடுபட்டார். இறுதியாக இரவு நேரத்தில் பாரதி வீதியிலே உலாவச் சென்றார். அப்பொழுது அவர் முன்பு கருப்புப் பெண்ணொருத்தி வந்தாள், பாரதியாருக்கு அளவு மிகுந்த ஆசை தோன்றி அருகே நெருங்கினர். உடன் திகைத்து, உண்மையை உணர்ந்து, அஞ்சி நடுங்கினர். ஏனெனில் அன்னை வடிவத்தைக் கன்னி வடிவமென்று தன்னையறியாமல் எண்ணி விட்டார். இதை அவரே,

"பின்னோர் இரவினிலே - கரும்
பெண்மை யடிகொன்று வந்தது கண்முன்பு,
கன்னி வடிவமென்றே - களி
கண்டு சற்றே யருகிற் சென்று பார்க்கையிலே
அன்னை வடிவமடா! - இவள்
ஆதி பராசக்தி தேவியடா! - இவள்
இன்னருள் வேண்டுமடா! — பின்னர்
யாவு முலகில் வசப்பட்டுப்போமடா!"

கலைமகளையும் திருமகளையும் கண்டு காதலித்தேன் என்று துணிவுடன் கூறிய பாரதியார், பராசக்தியைக் காதலி என்று கூற நாக்கூசி அன்னை நிலையில் வைத்து வாழ்த்துகிறார்; வணங்குகின்றார். பராசக்தியின்பால் பாரதியாருக்கு இருந்த இறையன்பையே இப்பாடலில் காணமுடிகின்றது.

முடிவுரை:

நாட்டிலும் வீட்டிலும் பாரதியார் அடைந்த துன்பத்தினை ஆற்றி அவருக்கு அமைதியை ஏற்படுத்த உறுதுணையாயிருந்தது கவிதைக் கலையாகும். துன்பக் காட்டிலே நுழையச் சென்ற அவரைக் கவிதை சொல்லித் தடுத்தாண்டவள் பராசக்தியே.

"சோகாட விக்குளெனேப் புகவொட்டாமல்
துய்யசெழுந் தேன்போல் கவிதை சொல்வாள்"

என்பது பாரதியார் குரல். 'பாரதி அறுபத்தாறில்' உள்ள பராசக்தி துதியில் தம்மை ஒரு சீத்தராகப் பாரதியார் கூறுகின்ருர். கடிதத் தொடக்கத்தில் பாரதியார் எழுதிய சொல், "ஓம் சக்தி" என்றே அமைந்துள்ளது பாரதியார் சமயப் பொறை உடையவர், ஒன்று பரம்பொருள்; நாம் அதன் மக்கள்; உலகின்பக்கேணி" என்ற கொள்கையில் அவருக்கு எள்ளளவும் ஐயமில்லை.

"ஆத்திச்சூடி ... ... ஒன்றே"

பாரதியார் பாடிய புதிய ஆத்திச்சூடியில் வரும் இவ்வடிகள் அனைத்துச் சமயங்களும் கைகூப்பி வணங்கும் தெய்வம் ஒன்றெனப் பாரதியார் உணர்ந்திருந்தார் என்பதை உணர்த்துகின்றன. ஆனுல் அவர் பராசக்தியையே பரவி வழிபட்டார் இது:பாரதியாரிடத்து அமைந்திருந்த தனித்துவத்தை இழக்காத பொதுமை உணர்வைக் காட்டுகின்ற தென்பது வெள்ளிடைமலை.

பயன்பட்ட நூற்கள்

1. பாரதியார் கவிதைகள்

2. பாரதி பாட்டின் அடித்தளம் — சி. சத்தியமூர்த்தி எம்.ஏ. செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர் 1970.

3. பாரதியின் சக்திப் பாட்டு — சி. கணகசபாபதி



பழமொழி நோக்கில் சக்தி

முன்னுரை:-

அறிவுத் துறைகளில் முற்போக்கடைந்த எல்லா நாடு களிலும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கொண்டு அவைகளில் உண்டாகும் பயன்களைக் குறிப்பாகவும் வெளிப்படையாக வும் மக்கட்கு உணர்த்த எழுந்தனவே பழமொழிகள். இவை நகை, உவகை முதலிய மெய்ப்பாட்டுணர்ச்சிகளி னுல் பொது மக்கள் மனம் உந்தப்பட்டு வெளிவருவன வாகக் கருதப்படுகின்றன. சக்தி, சக்தியின் கூறுகள் ஆகியவற்றைத் தொடர்பு படுத்தி எழுந்துள்ள பழமொழி களை இக் கட்டுரையின்கண் காண்குவம்.

பிடாரி:-

சக்தியின் கூறுகளில் ஒன்றுகிய காளி, பிடாரி என்ற பெயருடனும் மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. தெய்வத்தைத் தொடர்பு படுத்திக் கூறும் பழமொழிகளில் பிடாரி பற்றியே அதிகமான பழமொழிகள் எழுந்துள்ளமை உணரத்தக்கது.

1. அடங்காப் பிடாரியைக் கொண்டவனுங் கெட் டான்

   அறுகங் காட்டை உழுதவனுங் கெட்டான்

2. அடங்காப் பிடாரியைப் பெண்டு வைத்துக் கொண்டது போல்

3. அண்டத்தைக் கையில் வைத்தாட்டும் பிடாரிக் குச் சுண்டைக்காய் எடுப்பது பாரமா?

4. அண்டாத பிடாரி ஆருக்கு அடங்குவாள்?

5. ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத் தினது போல்

6. ஒரு கூடை செங்கல்லும் பிடாரியாயிருக்கிறது
7. ஒரு வீடடங்கலும் பிடாரி
8. ஒன்ற வந்த பிடாரி ஊர்ப்பிடாரி ஆனது போல்
9. ஒன்றவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டினது போல்
10. கட்டுக் கடங்கா பிடாரி
11. குடித்தனம் மேலிட வேண்டிப் பிடாரியைப் பெண்டு வைத்துக் கொண்டான்
12. பிடாரியைப் பெண்டு பிடித்தாற் போல (வைத்துக் கொண்டது போல)
13. பிடாரி வரங்கொடுத்தாலும் ஓச்சன் வரங்கொடுக்கிறது அரிது (இல்லை)
14. மழைக்கு ஒதுங்கி வந்த பிடாரி மனைக்குச் சடுத்தம் (போட்டி) போட்டதாம்

என்றவாருகப் பிடாரியைக் குறித்து பழமொழிகள் வழங்கி வருகின்றன.

சீதேவி:-

செல்வத்தின் சக்தியாக சீதேவி கருதப்படுகின்றுள். சீதேவி, இலக்குமி போன்ற பெயர்கள் திருமகளுக்கு அமைந்துள்ளமை உணரத்தக்கது.

1. உன் வாயிலே சீதேவி
2. ஒட்டிய சீதேவி நெட்டியோடே போம்
3. தன்வாய்ச் சீதேவி, முன் வாயிலே
4. தானுக வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?
5. தைரிய லட்சுமி தனலட்சுமி

6. நாழிவரச் சீதேவி, மரக்கால் வரச்சீதேவி நாலோத் தெரியும் நாச்சியாத்தாள் மாரடி

7. மகாலட்சுமி பரதேசம் போனாற்போல

8. வலியவந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?

கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்
ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்
பொரு கடல் தண்சேர்ப்ப! பூந்தா மரைமேல்
திருவொடும் இன்னது சேர்

(பழமொழி நானூறு : 355)

'திருவொடும் இன்னது சேர்' என்று வழங்கப்படும் பழமொழி உலகியலைப் பெரிதும் ஒட்டிச் செல்வது பெரிதும் உணர்ந்து கொள்ளத்தக்கது. திருமகளே ஆயினும் நெடு நாள் உடனுறைதல் இன்னாமைக்கே காரணமாகும் என் பது பொருளாம். ஆதலால் எவ்வகை மேம்பட்டோராயி னும் உடனுறைதலால் கைப்பும் நீங்கி வாழ்தலால் இன்ப மும் தோன்றல் உலகியற்கையாம் என்பதை உணர்த்து கின்றது. இலக்குமியோடு சேர்ந்து வாழினும், இடம் பற்றி யும் கால நெடுமை பற்றியும் தம்முள் மனத்தாங்கல் ஏற் கட்டு அன்பிற்கு அழிவு உண்டாம். எனவே உடன் பிறந் தார் தம்முள் ஒருங்கே இருந்து உடன் வாழ்தல் அன்பு அழிதற்கேதுவாம். இடத்தாலும் காலத்தாலும் சேட்பட நிற்றல் அன்பு முதலியவற்றிறகு ஆக்கந் தருவதாம். அங்ஙனமின்றி நிற்றல் அழிவிற்கு ஏதுவாம் என்ற கருத் தினையும் மேற்கூறிய பழமொழி உணர்த்துவது அறியத் தக்கது.

மூதேவி:

சக்தியின் கூறும் திருமகளாகிய சீதேவியின் மூத்த சகோதரியாக (தமக்கை) மூதேவி மக்களால் கருதப்படு

கின்ருள். மூதேவியைக் குறித்தும் சில பழமொழிகள் வழங்கி வருகின்றன.

1. இந்திரைக்கு மூத்தவள் மூதேவி.
2. ஊரைத் தேவடியாள் கெடுப்பாள் சீரை மூதேவி கெடுப்பாள்.
3. முகத்திலே மூத்தவள் (மூதேவி) வாசம்
4. முப்பேன் பிடிப்பது மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
5. மூதேவி மூதேவி முகங் கழுவா மூதேவி
6. மூப்பு ஏன் பிடிப்பது. மூதேவி வாசத்துக்கு அடையாளம்.
7. மூர்க்கன் முகத்தில் மூதேவி குடியிருப்பாள்
8. வீட்டு மூதேவியும் காட்டு மூதேவியும் கூடி உலாவுகின்றன.

சீதேவி — மூதேவி:

சகோதரிகளாகக் கருதப்படும் சீதேவி — மூதேவி ஆகியோரைக் குறித்தும் பழமொழிகள் வழங்கப்படுகின்றன.

1. இருந்த கால் மூதேவி, நடந்தகால் சீதேவி.
2. சீதேவியுடன் ஒரு மூதேவி பிறந்தாற் போல
3. நடந்த காலிலே சீதேவி, இருந்த காலிலே மூதேவி.
4. பெற்ற தாய் மூதேவி, புகுந்த தாரம் சீதேவி.
5. முலை கொடுத்து (ஊட்டி) வளர்த்தவள் மூதேவி, முன்றானை போட்டவள் சீதேவி.
6. வறுமைக்கு மூதேவியும் செல்வத்துக்குச் சீதேவியும் வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே.

காளி:

காளியெனக் கருதப்படும் பிடாரிக்குப் பழமொழிகள் வழங்குவது போன்று காளியைக் குறித்தும் சில பழமொழி கள் வழங்கப்படுவதைக் காண்போம்.

1. ஐயனுர் கோவிலில் மண்ணை மிதித்தவர் அத்தனை பேரும் பத்திரகாளி
2. குரங்கின் தலையில் கரகம் வைத்துக் காளி கும்பிட் டது போல்

அம்மன்:

சக்தியின் கூறுகளாக அம்மம் எனப்படுகின்ற தெய் வங்கள் கருதப்படுகின்றன. அவை பற்றி மக்கள் மத்தியில் வழங்கப்படும் பழமொழிகளையும் இவண் காண்குவம்.

1. அங்காளம்மைத் தெய்வம் அகப்பைக் கூறு வழி யாய் வரும்.
2. அருக்காணி நாச்சியார் குரங்குப் பிள்ளை பெற்று ளாம்.
3. ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி. (இப்பழமொழி திரௌபதி அம்மனைக் குறிக் கின்றது)
4. துரை, நாச்சியார் கும்பிடப் போய் புறப்பட்ட ஸ்தன்னியம் உள்ளே போச்சுது.
5. துரோபதையைத் துகில் உரிந்தது போல.
6. நரைத்த மயிர் கருத்து தங்கை நாச்சியார் கொண்டை முடிப்பாளாம்.
7. நாச்சியாரைக் காணுத இடத்திலே முறுவலிப்பது போல.
8. பத்தினியைத் தொட்டதும் துரியோதனன்பட் டதும்.
9. மங்கமாரி வந்தார் தங்க மழை பெய்தது.

10. மாரியாத்தாளைப் பெண்டு பிடிக்கிறவனுக்குப் பூசாரி பெண்சாதி எம்மாத்திரம்?

11. மாரியாத்தாள் குழியில் மறைத்து வைக்க.

12. வருகிற வரும்படியெல்லாம் பூசாரிக்கு, சந்தடியெல்லாம் கங்காளம்மைக்கு.

மேற் கூறிய பழமொழிகளில் திரௌபதியம்மனைக் குறித்து மூன்று பழமொழிகளும் மாரியம்மனைக் குறித்து மூன்று பழமொழிகளும் கூறப்பட்டுள்ளன. இப்பழமொழிகள் தற்காலத்தில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன என்பது உணரத்தக்கது.

பெண் தெய்வங்கள் :

அள்ளிக் குடிக்கத் தண்ணீரில்லை, அவள்பேர் கங்காதேவி, எனக் கங்காதேவியைக் குறித்தும்,

'ஆகாசத்தில் இருந்து அறுந்து விட்டேன்,
பூமாதேவி ஏற்றுக் கொண்டாள்'
'கார்த்திகை மாதத்துப் பூமாதேவி போல'

என்றவாருகப் பூமாதேவியாகிய நிலமகளைக் குறித்தும்

'காட்டேரி உடைமை இராத்தங்காது'

எனச் சிறு தெய்வமாகிய காட்டேரியைக் குறித்தும் பழமொழிகள் வழங்கி வருகின்றமை அறியத் தக்கது.

உமை :-

சக்தியாகிய உமையைத் தொடர்பு படுத்தியும் பல பழமொழிகள் தற்காலத்தில் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன.

1. உம் என்றிருளாம் காமாட்சி
ஒட்டிக் கொண்டாளாம் மீனாட்சி

2. உன்னைப்பிடி என்னைப்பிடி உலகாத்தாள்
தலையைப் பிடி

3. கடன் வாங்கி உடன் வாங்கி அம்மை
கும்பிட நீ யார் கூத்தி விழுந்து கும்பிட?

4. கண்டால் காமாட்சி நாயக்கர், காணு
விட்டால் காமாட்டி நாயக்கர்

5, சாகோ நோகோ அம்மையார் வாக்கோ?

6. சும்மா இருந்த (கிடந்த) அம்மையாருக்கு
அரைப் பணத்துத் தாலி போதாதா?

போன்ற பழமொழிகள் தற்காலத்திலும் பாமர மக்கள் மத்தியிலே பேசப்பட்டு வருகின்றமையை உணரலாம்.

ஒட்டிய காதல் உமையாள் ஒரு பாலாகச்
கட்டங்கம் வெல்கொடி கொண்டாலும் கொண்டானே
விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி யுழி

[பழமொழி நானூறு :124]

என்ற பாடலில் உமையைச் சிவபெருமான் ஒரு கூருக ஏற்றுக் கொண்ட குறிப்பு காணப்படுகின்றது, நல்லோர் தம்மோடு நட்புச் செய்தாரைத் தாம் அடைந்தவிடத்து அவர்வேறு, தாம் வேறு என்னும் வேறுபாடின்றி ஒழுகுவர் என்ற கருத்தினை வலியுறுத்த விழைந்து மேற் கூறிய பழ மொழி பாடலினைக் கூறுகின்ருர் முன்னுரையரையனர். சிவன் ஒரு பாகத்தில் உமையைக் கொண்டான்; நட்டார் தம் மெய் முழுதுங் கொண்டார் என நல்லோரது நட்பின் திறம் உயர்த்திக் கூறப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது.

முடிவுரை :

பிடாரி, சீதேவி, காளி அம்மன் மூதேவி. கங்கா தேவி, பூமாதேவி, உமை, காட்டேரி ஆகியோரைத் தொடர்பு படுத்தித் தற்காலத்தில் வழங்கி வரும் பழமொழி கள் அகர வரிசைப் படுத்தி இக்கட்டுரையில் கூறப்பட் டுள்ளன. இவ்வாறு வழங்கப்படும் பழமொழிகளுக்கு மக்கள் அவரவர் இடம், எண்ணம், சூழ்நிலைகளுக்கேற்பப் பொருளினைக் கூறுவதால் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள பழமொழிகளைகளுக்கு இயல்பான பொருளினைக் கூற இய லாதது எண்ணத் தக்கது.

17

நாடோடிப் பாடல்களில் சக்தி

புலவர்களால் உருவாக்கப்பட்டுக் கற்றவர்களால் காப் பாற்றப் படுபவை இலக்கியங்கள். பாமர மக்களால் உரு வாக்கப்பட்டு அவர்களாலேயே காப்பாற்றப் படுபவை நாட்டுப் புறப்பாடல்கள். இலக்கிய வரலாறு என்னும் கடலில் சங்கமம் ஆகும் ஆறுகளில் நாட்டுப் பாடல் என் னும் ஆரும் ஒன்றுகும்.[1]

குழந்தையிடம் மரபு நிலைப் பண்புகளை எளிதாகக் காண்பது போல வாழ்க்கையின் பண்புகளை எளிதாகக் காண்பது போல, வாழ்க்கையின் பண்புகளை, வாழ்க்கை மரபுகளை இலக்கியத்தின் குழந்தைப் பருவம் எனத்தகும் நாட்டுப் பாடல் இலக்கியத்திலே தான் எளிதாகக் காண முடியும். ஒரு நாட்டின் வரலாற்றை அறிய மக்களின் மனப் பண்பைத் தெரிந்துகொள்ள, பழக்க வழக்கங்களைத் தொகுத்தறிய, நாகரீகச் சார்புகளை ஆய்ந்தறிய உள்ளத் துணர்ச்சிகளின் உருவத்தைப் படம் பிடிக்க நாட்டுப்பாடல் கள் மிகச்சிறந்த அளவில் துணைபுரிகின்றன[2].

இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களைக் கன்னியம்மை, அங்காளம்மன், எல்லையம்மன், பிடாரி, காளி, மாரியம்மன், பகவதி, கொட்டிடையம்மன், காட்டேரி, துரோபதையம் மன், வடிவுடையம்மன், துர்க்கை, பூவாடைக்காரி குத்தா லம்மன், நாகம்மை, உலகாயி அம்மன் போன்ற சிறு தெய்வங்களின் மீது மக்கள் பெரிதும் அஞ்சிபாடி வழிபடு வதை உணரலாம்[3].

முத்தாரம்மன், குமரி, செல்வி முதலிய தென் பாண்டி நாட்டுத் தேவியரையும் வங்கத்திலிருந்தும், கருநாடகத்தி லிருந்தும், பண்பாட்டுத் தொடர்பின் காரணமாகக் குடி

யேறிய காளி, மாரி, போன்ற தேவியரையும், கொத்து பல்லாரியிலிருந்து கொண்டுவரப்பட்ட ராஜகம்பள நாயக்கர் களது தெய்வமாகிய சக்கம்மாஜீயும் நாடோடிப் பாடல் கள் பாடி வழிபடுவதாக நா. வானமாமலை குறிப்பிடு கின்றார்.[4] இவ்வாறு அமைந்துள்ள நாடோடிப் பாடல்கள், நாடோடி மக்களின் சமயம் வழிபாடு ஆகியவற்றின் பகுதி யாகப் பாடப்படுகின்றன எனக் கருதலாம். கேரளத்தில் தோற்றம் பாடல்கள் போன்றவைப் பாடப்படுவதும் அறியத் தக்கது. [பார்க்க: 'கேரளத்தில் காளி வழிபாடு']

நாடோடிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் ஆகிய வற்றுல் பாடப்படும் பெண் தெய்வங்களில் மாரியம்மனும் முத்தாரம்மனும் முதலிடம் பெறுகின்றனர்.

மாரியம்மன் என்னும் தெய்வம் முதன்முதலில் மைசூர் தேசத்தில் கோயில் கொண்டிருந்ததென்றும், கன்னடி யப் படையெடுப்பின் போது இத்தெய்வ வணக்கம் தமிழ் நாட்டிலும் பரவியதென்றும் சில சமூகவியல் ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். இப்பொழுது இத்தெய்வம் சக்தியின் ஒரு கூறுகிய பத்ரகாளியாகக் கருதப்படுகின்றுள். ஊரில் வைசூரி பரவியதும், மாரியம்மனுக்குப் பலவிதமான நேர்த் திக்கடன்கள் செய்ய, மக்கள் நேர்ந்து கொள்வர். மா விளக்கு ஏற்றுவதாகவும், கரகம் எடுப்பதாகவும், கயிறு சுற்றுவதாகவும், பொங்கல் இடுவதாகவும், தீச்சட்டி எடுப் பதாகவும் சபதம் ஏற்றுக் கொள்வர்.[5] இத்தகைய தேவதை வணக்கங்கட்கு அடிப்படைக் காரணங்கள் அச் சமும் அன்புமாகும். விழாக்கள் எடுப்பதன் மூலம் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வதுடன், தங்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் உறவுகளுக்குத் தொடர்பை யும் அளித்து வருகிறார்கள். பூசனை செய்யும் பூசாரிகளை இணைப்புப் பாலங்களாக அமைத்துக் கொண்டு, அவர் களின் வாயிலாகப் "பூசாரிப் பாட்டு" போன்றவற்றைப் பாடச் செய்து தேவியை வழிபடுகின்றனர் என்பது கருதத் தக்கது.[6]

தென்பாண்டி நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊரிலும் கோயில் கொண்டிருப்பதுடன், தீயவர்களைக் கொடு நோயால் தண்டித்து, நல்லவர்களை வாழ்த்தி வரம் கொடுக்கும் முத்தாரம்மன் பிறப்பு வில்லுப் பாட்டில் சொல்லப் படுகின்றது. ஏழ்கடலுக்கும் அப்பாலுள்ள மணிநாகப் புற்றிலுள்ள நாகம் முன்று முட்டைகளிட்டது. பார்வதியின் அருளால் முட்டைகளிலிருந்து மூன்று பெண்கள் தோன்றினர்கள். அவர்கள் பிரம்மராக்குக் சக்தி, சின்ன மூத்தார், பெரிய மூத்தார் என்பவர்கள் அவர்கள் மூவரும் தவம் செய்து சக்தி முனியின் அருளால் குழந்தைகள் பெற்றார்கள். அனைவரையும் அழைத்துக்கொண்டு போய் கயிலையில் சிவபெருமானை வணங்கினர். நாட்டிலுள்ள கொடுமைகளை அழிப்பதற்கு மூவரும் கொடும் வியாதிகளை வரமாகக் கேட்டார்கள். பிரம்மராக்கு சக்திக்குக் குணமாகாத பல நோய்களையும், சின்னமுத்தாருக்கும், பெரிய முத்தாருக்கும் சின்னம்மை, பெரியம்மை என்ற வியாதிகளையும் கயிலையங் கடவுள் வரமாக அளித்தார். இவ்வாறு கொடிய நோய்களை உண்டாக்கும் சக்தி பெற்ற மூன்று சகோதரிகளும் தமிழ்நாட்டிலே வந்து குடியேறிக் கொடியவர்களைத் தண்டிக்கப் பரமசிவனுடைய வரங்களைப் பயன்படுத்தி வருகின்றார்கள் என அவ்வில்லுப் பாட்டுக் கூறுகின்றது.[7]

சிறு தெய்வப் பாடல்கள்

மாரியம்மன் பாட்டு :

மாரியம்மன், வடிவுடையம்மன், அங்காளம்மன் துரோபதையம்மன், முத்து மாரி, முத்தாரம்மன், காளி முதலிய தெய்வங்கள் மீது பாடப்பட்டுள்ள பாடல்கள் கிடைத்துள்ளன. இச்சிறு தெய்வ வரிசையில் 'மாரியம்மன் தெய்வம்' அதிகமான வழிபாட்டினைப் பெறும் தெய்வமாகும். பெரும் பாலும் வெப்பம் நிறைத்த மாதமான சித்திரை மாதத்தில் இவ்வழிபாடு நடைபெறும். அம்மை நோயை போக்கும் தெய்வமாக மாரியம்மனை மக்கள் கருதுவர். மாரியாத்தாள் என்று அழைக்கப்படும் மாரியம்மனிடம்

மக்களுக்குப் பக்தியும் பயமும் அதிகம் அம்மை வளர்த்த வர்களுக்கு இன்னும் மாரியம்மன் தாலாட்டுப்பாடி வருவதைக் காணலாம். ஆயிரக் கணக்காண வரிகளைக் கொண்ட அத்தாலாட்டினை சிறப்பிக்கும் பொழுது, எத் தேசத்திலும் இடைவிடாது சிந்தித்து வரும் மாரியம்மன் தாலாட்டு என்று கூறப்படுகின்றது.

உடம்பில் வந்திருக்கும் அம்மையை 'முத்து' என்று அழைப்பர். மாரியம்மன் தாலட்டில் உடம்பெங்கும் வார்த்திருக்கும் முத்தை இறங்கச் செய்யப் பின் கண்டவாறு வேண்டிப் பாடப்படுகிறது.

" சிரசினில் முத்தம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் ,, முன்னதா ,,
கழுதினில் ,, கட்டழகி ,,
தோளினில் ,, துரந்தரியே ,;
மார்பினில் ,, மாதாவே ,,
வயிற்றினில் ,, மகேஸ்வரியே ,,
துடையினில் ,, தேவியே ,,
முழங்காலில் ,, மீனுட்சியே ,,
கணுக்காலில் ,, காமாட்சி ,,
பாதத்தில் ,, பாரிலிறக்கிவிடும்,,
பூமியில் இறக்கிவிடு பெற்றவளே காருமம்மா
பெற்றவளே எந்தாயே பேரழகி காருமம்மா"

இந்நெடிய பாடலில், மாரியம்மனின் ஆற்றல், பாடுபவரின் இரக்க உணர்வு, முதலியன நன்கு அமைந்திருக்கின்றன. மக்களிடம் அதிகமாக வழங்கிவந்த மாரியம்மன் தாலாட்டினை ஒருவர் இவ்வண்ணம் வெண் செந்துறையில் செப்பனிட்டு எழுதியுள்ளார்.

பாடும் மக்கள் இத்தகைய தெய்வங்கட்கு இப்படிப் பட்ட ஆற்றல் இருப்பதாகக் கருதியிருக்கின்றார்கள். மக்களின் குறைகளை நீக்கச் செய்யும் ஆற்றலுடைய தெய்வமே

கள் இவை என்ற ஆழ்ந்த எண்ணம் மக்கள் மனதில் ஊறிப்போய் இருக்கின்றது. எனவே அநீதி, கொடுமை, நோய், குறைக்கேடு, இவை நடைபெற்ற பொழுது இத் தகைய தெய்வங்களிடம் மக்கள் அடைக்கலம் புகுந்து மன்னனிடம் முறையிடுவது போல முறையிடுகின்ருர்கள்.

மாரியம்மனிடம் வேண்டுவது போலக் கன்னித் தெய் வம் முத்தாலம்மாவிடமும், காளியிடமும் வேண்டும் பாடல்களைக் காணலாம்.

''முத்தாலம்மா பாதம்
முழுத்திட்ட காந்தாரி
பட்டாலம்மன் மாரியம்மா
பாதுகாக்க வேணுமம்மா
காளியம்மா மாரியம்மா
கண்ணனூர் துர்க்கையம்மா
துர்க்கைப் பிடாரியம்மா
துணையிருக்க வேணுமம்மா'' [8]

கரகப் பாட்டு:

மாரியம்மனுக்கு வழிபாடு நிகழ்த்திச் செல்லும்பொழுது கரகம் எடுச்துச் செல்வர். மாரியம்மன் திருவிழாவன்று கரகம் எடுப்பவர்கள் மஞ்சள் வேட்டி அணிந்து, மாலை யணிந்து, மாரியம்மன் இருக்குமிடம் நோக்கித் தலையில் தண்ணீர் நிரம்பிய குடத்துடனை வைத்துப் பின்னணி வாத்தியங்கள் முழங்க, ஆடிப்பாடிச் செல்வர். இப்படிக் கரகம் எடுச்துச் செல்லும் பொழுது மாரியம்மனை நினைத்துப் பாடிக்கொண்டே செல்வர்.

''ஒன்ருங் கரகமடி — கன்னீ
ஓகோ — என் தாயே
ஓடியாந்து பூசை வாங்கு இப்போ — தாயே
ரண்டாங் கரகமடி — கன்னீ
ஓகோ — என் தாயே
ரணகரம் பொன்னுலே இப்போ — தாயே
மூன்ருங் கரகமடி — கன்னீ

ஓகோ — என் தாயே
முத்தாலே பொன்கரகம் இப்போ — தாயே
நாலாங் கரகமடி — கன்னீ
ஓகோ — என் தாயே
நாடி வரும் பூங்கரகம் இப்போ — தாயே
அஞ்சாங் கரகமடி — கன்னீ
ஓகோ — என் தாயே

அசைந்தாடும் பொன் கரகம் இப்போ—தாயே''[9]

இப்படிப் பாட்டில் வரும் எண்ணிக்கைகள் பத்துவரை நீண்டு கொண்டே செல்வதுமுண்டு.

மாரியம்மவிடம் மக்களுக்குப் பயம் இருந்தது என்பதனை,

''ஆரு கடன் நின்ருலும் மாரிகடன் ஆகாது
மாரி கடன் தீர்த்தீவர்க்கு மனக்கவலை தீரும்
அம்மா''

என்ற அடிகள் காட்டுகின்றன. மாரியம்மனுக்குக் கரகமாடும் பக்தர்கள்

''ஒண்ணுங் கரகமடி எங்கமுத்து மாரி
ஒசந்த கரகமடி எங்க முந்துமாரி''

என்று பாடிப் பரவசம் கொள்வர்.[10]

பூசாரிப் பாட்டு:

மனிதர்கள் மீது தெய்வம் ஏறி வருவதுண்டு என்பது சங்க காலந் தொட்டே இருந்து வந்த நம்பிக்கையாகும். பெண்களைப் பெற்ற தாய்மார் ''வெறியாட்டு'' என்பதில் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தனர், என்பதனை இலக்கியங்கள் காட்டுகின்றன, தெய்வத்தை அழைத்துக் குறிசொல்லும் பூசாரிமீது மக்கள் மிகுந்த மரியாதை வைத்திருப்பர். அப்பூசாரியிடம் தெய்வமாகவே மதித்துத் தங்கள் குறைகளை வெளியிட அவன் சில சடங்குகளை நிகழ்த்தி, அவர்களின் குறைகள் நீங்க வழி சொல்வான். அவ்வழிகளை அவன் செல்லும் பொழுது பாட்டு வடிவிலும்

உரைநடை வடிவிலும் சொல்வதுமுண்டு. தன் மீது தெய்வம் ஏறுவதற்கு முன் தெய்வம் தன் மீதேற அவன் மீது வழக்கமாக ஏறிக் குறி சொல்லும் தெய்வத்தைப் பாட்டின் மூலம் உடுக்கை அடித்து அழைப்பான். பரம்பரையாக வழங்கி வரும் பாடல்களே அத்தெய்வத்தை அழைக்கும் பொழுது பாடுவான்.

கீழே தரப்பட்டுள்ள பூசாரிப் பாடலில் எல்லாத் தெய்வங்களும் அழைக்கப்படுகின்றன.

''ஓம் இண்ணு உச்சரிப்பேன்
ஆம் இண்ணு நிச்சயிப்பேன்
ஓதுவேன் மதன் கதையை — என்
மாதுரனே துர்க்க வீதி
ஓரி மயான ருத்ரி
வாரி காட்டேரி சூரி
ஓ காளி சாமுண்டி
ஜகசண்டி நில்கண்டி
ஒட்டிக் கறுப்பா காள பைரவா
குட்டிச் சாத்தான் தூமாதேவி
ஓடிவா இருசி பகவதி பைரவி
குடியாயி வீராயி மகமாயி
ஒசந்தா எல்லக்கா மல்லக்கா
இசைந்த பொம்மக்கா ஜம்மக்கா
உதிரக் காட்டேரி கூளி — எங்கள்
பீதி தேவப் பிடாரி
உத்தண்ட குறளி எச்சம்
பக்த காளி மாரி முத்து
உதவா மூதேவி இருளியதே
ஒளிதரும் சங்கா தேவி
எங்களைப் பலி கொள்ளும் காத்தவராயா
ஒண்டி முனி சண்டை வீரா
சண்டப் பிரசண்டா துண்டா
அண்டமெல்லாம் — மடங்குஞ் சண்டா

ஓப்புரவா இருசா கறுப்பா
அப்பா அனுமந்த வேதாள பைரவா
ஓடிவா நிங்களெல்லாம் — நாங்கள்
பாடிய பாடலுக்கு"[11]

மேலே கண்ட பாடலின் வாயிலாகப் பல சிற்றூர்த் தெய்வங்களின் பெயர்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

விளக்கு வேள்விப் பாடல்:

குறி செல்லக் கூடியவர்கள் விளக்கை ஏற்றி வைத்து ஒரு சடங்கு செய்து,

எல்லைக் குடையவளே — அம்மா அரகரா
எழுந்திரம்மா ஏகவல்லி — தாயே — ஓம் அரகரா"[12]

பகவதி:

"மலையாளப் பகவதியே
யந்திரங்கள் கற்றவளே
மந்திரங்கள் கற்றவளே
அந்திரம்மா வந்திரம்மா"[13]

மாரியம்மா :

"கையாலே பூவெடுத்தா — மாரிக்குக்
காம்பழுகிப் போகுமிண்ணு
விரலாலே பூவெடுத்தா — மாரிக்கு
வெம்பிடு மென்று சொல்லி
தங்கத் துரட்டி கொண்டு — மாரிச்சுத்
தாங்கி மலரெடுத்தார்" [14]

உலகம்மன் :

ஓட்டப் பிடாரத்திலே
உலகம்மன் கோயிலிலே
பூக்கட்டிப் பார்த்தேன்
பொருந்தலையே என்மனசு"[15]

கண்ணுத்தா :

"நாட்டரசன் கோட்டையிலே
நல்லதொரு கண்ணுத்தா
வயித்தவலி தீர்த்தியாரு
வந்திருவேன் சன்னிதிக்கே" [16]

சக்தி பற்றிய அம்மானைப் பாடல் :

"மண்பிறக்கு முன் பிறந்த வழக்காடும் நல்ல செல்வி
யுகம் பிறக்கு முன்பிறந்த உத்தரண்ட பத்தரகாளி
காய்ந்த மழுவேந்தும் கர்த்தனிட தேவியரே
எரிந்த கழுவேந்தும் ஈஸ்வரனுர் தேவியரே" [17]

என தேவியை வழிபடும் நிலையில் பாடலமைகிறது.

நாட்டுப் பாடல்களில் சக்தி

தோட்டம் துறந்தல்லோ — மாரிச்சு
தொண்ணூறு லட்சம் பூவெடுத்து.
வாடித் துறந்தல்லோ — ஆயிரம் கண்ணுளுக்கு
வாடா மலரெடுத்து
கையாலே பூவெடுத்தா — மாரிக்கு
காம்பழுகி போகுமின்னு
விரலாலே பூவெடுத்தா
வெம்பிடு மென்று சொல்லி
தங்கத் துரட்டிக் கொண்டு — மாரிக்குத்
தாங்கி மலரெடுத்தார்.
வெள்ளித் துரட்டி கொண்டு
வித மலர்கள் தானெடுத்தார்
எட்டாத பூமலரை மாரிக்கு
ஏணி வைத்துப் பூவெடுத்தார்
பத்தாத பூமலரைப்
பரண் வைத்துப் பூவெடுத்தார்
அழகு சுள கெடுங்க — மாரிக்கு
அழுது படி தானெடுங்க

வீசும் சூள கெடுங்க — மாரிக்கு
வித்து வகை தானெடுங்க
உப்பாம் புளி முளகா — ஆயிரம் கண்ணுளுக்கு
ஒருகரண்டி எண்ணெய் அமுது
கடலைச் சிறுபயறு
காராமணி மொச்சையம்மா
அவரை துவரை முதல் — ஆயிரங் கண்ணுளுக்கு
ஆமணக்கங் கொட்டை முதல்
காடைக்கண்ணி பருத்தி விதை — மாரிக்கு
பாங்கான வித்து வகை
இட்டுச் செய்வதற்கு
எமகாளி துணை செய்வாய்
மக்களைப் பெற்றவர்கள்
மாரிகதை தானறிவார்
அறிந்தோர் அறிவார்கள்
அம்மன் திருக்கதையை
ஒரு கண்ணுரெண்டு கண்ணு
உலகத்து மானிடர்க்கு
ஆயிரம் கண்ணுடையா
அழகில் சிறந்த கண்ணு
பதினாயிரம் கண்ணுடையா
பாதகத்தி நீயெவ
இருசி வயத்திலேயும்
எமகாளி பிறந்திடுவாள்
மலடி வயத்திலேயும்
மாகாளி பிறந்திடுவாள் மாரிக்கு
ஆறு வண்டி நூறு சட்டம்
அசையா மணித் தேருகளாம்
தேரை நடத்தியல்லோ — மாரி
சித்திரங்கள் பாடி வாரா — மாரிக்கு
பூட்டுன தேரிருக்கப்
புறப்பட்டாள் வீதியிலே
வீதி மறித்தாளம்மா — மாரி
வினைதீர்க்கும் சக்தியல்லோ

பிறந்தா மலையாளம் — அவ
போய் வளர்ந்தா — ஆள்பாடி
இருந்தாள் இருக்கங்குடி — மாரி
இனி இருந்தா லாடபுரம்
சமைந்தாள் சமயபுரம் — மாரி
சாதித்தாள் கண்ணுபுரம்
கண்ணுபுரத்தில் — மாரி
காக்கும் பிரதானி — மாரிக்கு
உடுக்குப் பிறந்ததம்மா!
உத்திராட்சப் பூமியிலே
பம்பைப் பிறந்ததம்மா — மாரிக்கு
விசய நகர்ப் பட்டணத்தில்
ஆடை பிறந்ததம்மா — மாரிக்கு
அயோத்தி நகர் தனிலே
சிலம்பு பிறந்ததம்மா — மாரிக்கு
சதுரகிரி பூமியிலே
சாட்டை சலசலங்க
சதுரமணி ஓசையிட
கச்சை கலகலங்க
கருங்கச்சை குஞ்சம்விட
பதினெட்டுத் தாளம் வர
பத்தினியா சிந்துடுக்கு
இருபத்தொரு தாளம்வர
எமகாளி சித்துடுக்கு
சித்துடுக்கைக் கைப்பிடித்து
சிவ பூசணிந்தவளாம்.

சின்ன முத்தாம் சிச்சிலுப்பை சீரான கொப்பளிப்பான்
வண்ண முத்தாம் வரகுருவி வாரிவிட்டா தோணியிலே
மாரியம்மா தாயே, நீ மனமிரங்கித் தந்த பிச்சை,
தற்காத்து நீ கொடும்மா உன்சன்னிதிக்கே நான் வருவேன்
வடக்கே யிருந்தல்லோ மாரியம்மா இரண்டு வடுகரோட வாதாடி
தனக்கிசைந்த எல்லை என்று மாரி தனித்து அடிந்தாள் கூடாரம்.

உச்சியிலே போட்ட முத்தை உடனே இறக்கிடுவாள்
முகத்திலே போட்ட முத்தை மாரி காணுமல் இறக்கிடுவாள்
பதக்கத்து முத்துக்களா மாரி மாருமல் இறக்கிடுவாள்
நெஞ்சில் போட்ட முத்தை மாரி உடனே இறக்கிடுவாள்
தோளிலே போட்ட முத்தை மாரி துணிவாக
இறக்கிடுவாள்
வயிற்றிலே போட்ட முத்தை மாரி வரிசையாய்
இறக்கிடுவாள்
முட்டுக்கால் முத்தை மாரி முடித்திருந்து இறக்கிடுவாள்
கரண்டக்கால் முத்தை மாரி காணுமல் இறக்கிடுவாள்
பாதத்து முத்தை மாரி பாராமல் இறக்கிடுவாள்
ஐந்துசடை கொஞ்சிவர, மாரி அழகுசடை மார்பிறள
கொஞ்சும் சடையிலேயே மாரிக்கு இரண்டு குயில் இருந்து
தாலாட்ட
உன்பம்பை பிறந்ததம்மா பளிங்கு மாம் மண்டபத்திலே
உன் உடுக்குப் பிறந்ததம்மா உத்திராட்ச மேடையிலே
கரகம் பிறந்ததம்மா கண்ண நல்லூர் மேடையிலே
சூலம் பிறந்ததம்மா துலுக்கமணி மண்டபத்தில்
நாகம் குடைபிடிக்க மாரியாத்தாளுக்கு நல்லபாம்பு
தாலாட்ட
முத்து மணிவிளக்காம் மாரியாத்தாளுக்கு முதல்
மண்டபமாம்
சக்தி உடையவளே! சாம்பிராணி வாசகியே!
நாழியிலே முத்தெடுத்து மாரி ஊரெங்கும் போட்டுவந்தாள்
எல்லைக் கடந்தாலோ இருப்பங்குடி மாரியம்மா
முக்கட்டுப் பாதைகளாம் மூணுத்துத் தண்ணிகளாம்
தங்கச் சரவிளக்காம் மாரிக்குத்தனித்திருக்கும் மண்டபமாம்
எண்ணெய்க் கிணறுகளாம் மாரிக்கு எதிர்க்கக்
கொடிமரமாம்
தண்ணீர்க் கிணறுகளாம் மாரிக்குத் தவசிருக்கும்
மண்டபமாம்
சப்பரத்து மேலிருந்து சக்தி உள்ளமாரிஅவ
சரசமாமாலை, மாக் கனக்குதுணு மயங்குவிட்டாள் மாரி
ஆத்துக்குள்ள அடைகிடக்கு அஞ்சுதலை நாகம்
அது ஆளைக்கண்டால் படமெடுக்கும் அம்மா சக்தி

வேப்ப மரத்திலே தூருங்கடி மாரிக்கு
வெத்திலைக் கட்டவே பறத்துங்கடி
வேர்த்து வார சந்தன மாரிக்கு
வெள்ளிக் குஞ்சம் போட்டு வீசுங்கடி
பாசிப் பயறு எடுத்து பத்தினியாள் கையெடுத்து
உழுந்தம் பயிறெடுத்து உத்தமியாள் கையெடுத்து.

சேலம் மாவட்டத்தில் வழங்கும் நாடோடிப் பாடல்:—

"நாலு காலுச் சட்டம்
நடு நிறுத்தி
நட்சத்திரம் போலே
ஒரு தேர் எழுப்பி
தேருக்கு ஓடையாளி
தேசமாளும் முத்தம்மா
தேரேறி வருவதைப் பாருங்கடி
ஓலைப் பொட்டி
தலை மேலே
ஒம்பது மக்களும்
கக்கத்திலே
மக்களைப் பெத்த மாரியம்மன்
மவுந்து வருவதைப் பாருங்கடி."

சேகரித்தவர் இடம்
வாழப்பாடி சந்திரன் வாழப்பாடி

முத்து முனிய சாமி
மூர்க்கமுள்ள தேவதையே
சத்தத்தை நீகொடய்யா
சரளி விட்டு நான் படிக்கு
நாட்டரசன் கோட்டையிலே
நல்ல தொரு பாப்பாத்தி
வயித்தவலி தீர்த்தயாளுல்
வந்திடுவேன் சன்னதிக்கு
ஓட்டப் பிடாரத்திலே

உலகம்மன் கோயிலிலே
பூக்கட்டிப் பார்த்தேன்
பொருந்தலையே என்மனசு
கண்ணுலே அடிச்சுத்தாரேன்
கண்ட சத்தியம் பண்ணித்தாரேன்
சிக்கந்தர் மலைக்கு வாங்க
சேலை போட்டுத் தாண்டித்தாரேன்
பூப் பூக்கும் புளியமரம்
பொன்னிலங்கும் ஐயனுரு
நாட்டி லங்கும் பெத்தனைச்சி
நல்ல வரம் தருவா
ஏழுமலை கடந்து
எடுத்து வந்தேன் சண்பகப்பூ
வாடாமல் சாத்திவரும்
வடமதுரைக் கந்தனுக்கு''[18]

காமாட்டா கொட்டுதல் என்றும் கொப்பிக் கொட்டுதல் என்றும் அழைக்கின்ற கும்மியாடலின் பொழுது,

''மாரியாயி கோயிலிலே
மாப்படைக்கிற அம்மாக்கண்ணு'[19]

என்ற பாடல் பாடப்படுகின்றது.

நாடோடிப் பாடல்கள்

திருவிளக்கு நாயகியே
தேவி கன்னனூராளே
மணி விளக்கின் மேலிருந்து
மாதாவே கொஞ்சுமம்மா !
விளக்கிற் குடியிருந்து
மெல்லியரே கொஞ்சுமம்மா!
திருவிளக்கின் மேலிருந்து
தேவியரே கொஞ்சுமம்மா!

திரு விளக்கின் தெய்வம் குடி இருந்து, நன்மை செய்து வருததாய்க் தமிழ் நாட்டு மக்கள் பரம்பரை பரம்பரையாக நம்பி வழிபட்டு வருகின்றனர். இத்தகைய நம்பிக்கையில் மலர்ந்ததே இப்பாடல்.

நல்ல குறி சொல்லும் குடு குடுப்பைக்காரன் தன் கையில் உள்ள சிறிய உடுக்கையை ஆட்டிக் கொண்டே விரைந்து பாடும் பாடல் சுவையானது.

காளி, கபாலி, மகாசூலி, மகேஸ்வரி
கருணை செய்ய ஓடிவா என்னம்மா!
ஆலில் துயின்றமாலின் சகோதரி
வாலை மனோன்மணி! மேல மலையாளம்
வாழும் பராபரி! பாலன்முன் ஓடிவா!
வா சக்கம்மா! ஓடிவா வா வா வா!''

மாரியம்மன் பற்றிய நாடோடிப் பாடல்கள் :-

மாரியம்மன் பாடல்களைப் பாடும் முன் நாமகளை வேண்டுகின்றனர்.

வாணி சரசுவதியே! - என்
வாக்கில் குடி இரம்மா!
நாவில் குடி இருந்து - எனக்கு
நல்லோசை தாருமம்மா
சுரலில் குடி இருந்து - நீ
கொஞ்சும் பெற்றவளே!
நாவு தவருமல் — எனக்கு
நல்லோசை தாருமம்மா!

என்று கையில் உள்ள துடுக்கையை மெல்லத் தட்டிக் கொடுத்துப் பாடத் தொடங்குவர்.

பாடும் பாட்டில் குற்றங் குறை இருந்தாலும் பொருத் தருள வேண்டுமென்று மாரியை வேண்டுகின்றார் பூசாரி ஒருவர்.

அறியா தான் பாடுகின்றேன்
அம்மை திருக் கதையை!
தெரியா தான் பாடுகின்றேன்
தேவி திருக் கதையை!
ஏடறியேன் எழுத்தறியேன்
ஏழையம்மா உன் அடிமை!

பாடவகை அறியேன்!
பாட்டின் பயன் அறியேன்!
பேரும் அறியேன்!
பெற்றவளே என் தாயே

என்று பணிவுடன் வேண்டிய பின்னர்,

வேப்பிலையாம் பொன்கரகம்
வீதி விளையாடி வர
